
கலைஞரின்
கடிதங்கள்



23

03.10.1992 - முதல்
12.08.1993 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 23

03.10.1992 - 12.08.1993



தலைவர் கலைஞர்



சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL


விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

42230
894.811
கலை

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அய்வகத் தூய் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன்
ஆய்வு நூலகம்
சென்னை-18

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
1957. ஏழை, நடுத்தர மக்களுக்காக ஏற்றுக போர்க் கொடி!	03-10-1992	23
1958. பழம் கிடைக்கிறதாபம்; பரிதாபம்! மிகப்பரிதாபம்!	04-10-1992	27
1959. மதவெறி மாய்மாலத்தில் மயங்குவதோ?	07-10-1992	32
1960. எச்சரிக்கை நடவடிக்கைக்காக ஏந்துகிறேன் கையை!	08-10-1992	36
1961. ஏட்டுச் சர்க்கரை என்றைக்கும் இனிக்காது!	09-10-1992	41
1962. உண்மைக் கதை ஒன்று சொல்லுகிறேன்!	11-10-1992	45
1963. மதகடி மனிதனும் மாண்புமிகு மந்திரியும்!	13-10-1992	49
1964. காதிலே பூ சுற்றுகிறது, கட் அவுட் ஆட்சி!	14-10-1992	54
1965. பா.ஜ.க; ஒரு முன்னாள் பிரதமரிடம் காட்டிய பண்பாடு!	15-10-1992	58
1966. தங்க அட்டிகையும், பஞ்சலோகச் சிலையும்!	16-10-1992	63
1967. மின்வாரியத்தில் மின்னல் வேக ஊழல்!	17-10-1992	67
1968. புலம்பிக் கொண்டல்ல, புன்னகை புரிந்து கொண்டு!	28-10-1992	71

1969. நாட்டு மக்களின் நலன் காத்திடவே நவம்பர் 10, நவம்பர் 24 அறப்போராட்டங்கள்!	07-11-1992	76
1970. சூழ்ச்சிதனை, வஞ்சகத்தைப் பொடிப் பொடியாக்கச் சூளுரைப்போம்! சுழன்று பணியாற்றுவோம்!	12-11-1992	82
1971. நேற்று பேசியது நினைவுக்கு வரவில்லையோ?	19-11-1992	87
1972. மனிதநேயப் பணியில் மாச்சர்யங்களுக்கு இடமில்லை!	20-11-1992	90
1973. ஏகலைவன் கதை; இன்னமும் நடப்பதோ?	21-11-1992	94
1974. கபாலிகர் கூட்டத்துடன் கைகுலுக்கல்!	26-11-1992	98
1975. கரசேவா கடைசியாக எங்கு போய் முடியும்?	27-11-1992	102
1976. வளைந்த வாலை நிமிர்த்த முடியுமா?	29-11-1992	107
1977. பெரியார், அண்ணா வாழ்ந்த பூமியில், அந்தோ! பெரும் அநியாயம்!	30-11-1992	111
1978. கண்டிக்கத்தக்க காங்கிரஸ் கலாச்சாரம்	01-12-1992	115
1979. புரட்டிப் பேசும் புரட்டுத்தான் புரட்சியா?	02-12-1992	118
1980. மண்ணடித்து மக்கிப்போன கருத்துகள்!	04-12-1992	122
1981. கழகம், தொடர்ந்து களத்திலே நிற்கும்!	06-12-1992	129
1982. இந்திய வரலாறு இழந்த பெருமையை மீண்டும் பெற்றிட ...	09-12-1992	133

1983. நாட்டு மக்களின் ஏகோபித்த கேள்வி!	10-12-1992	137
1984. உதிரத்துடன் ஊறிய உறவு!	11-12-1992	141
1985. நரசிம்மராவ் நடத்தும் நகாசு வேலைகள்!	12-12-1992	146
1986. அலகாபாத் தீர்ப்பு - அன்றும்; இன்றும்!	13-12-1992	152
1987. பா.ஜ.க.வினர் முரண்பாடுகளுக்கிடையிலேயும் பரிபூரணமான கொள்கை உடன்பாடு!	15-12-1992	157
1988. ஒற்றுமை வேண்டுகோள் பொதுக் கூட்டங்கள்!	16-12-1992	162
1989. அலாவுதீனின் அற்புத விளக்கு அந்த 356	17-12-1992	167
1990. அவர் நெஞ்சில் நாம்! நம் நெஞ்சில் அவர்!	19-12-1992	172
1991. அநாகரிக, அராஜக ஆட்சிக்கு ஓர் அறிவிப்பு!	22-12-1992	176
1992. அயோத்தியா? ஆரண்ய வாசமா?	23-12-1992	181
1993.வீழ்ந்த தமிழகம் வீறுகொண்டு எழுந்தே தீரும்!	26-12-1992	185
1994. மாநில அரசு கலைப்பா? மக்கள் சக்தி காட்டும் வெறுப்பா?	28-12-1992	189
1995. இராம பாணத்தை பிரயோகிக்கலாமா?	29-12-1992	196
1996. பழிபோடும் ஜெயலலிதாவுக்கு பத்திரிகைகளின் பதில் என்ன?	30-12-1992	201
1997. ஆளுநர் பதவி விலகியே தீர வேண்டும்!	01-01-1993	208

1998. சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்!	02-01-1993	213
1999. நல்லிணக்க நறுமணமலர்த் தோட்டம் காண்போம்!	04-01-1993	218
2000. அயோத் தீ யைத் தொடர்ந்து இந் தீ யா?	06-01-1993	222
2001. வெறிக்கும் பற்றுக்குமுள்ள வித்தியாசம்!	08-01-1993	225
2002. கரம் கோத்து நின்றிடுக! கரசேவை விளைத்த கறை போக்கி வென்றிடுக!	12-01-1993	228
2003. விதியே! விதியே! தமிழச் சாதியை என் செய நினைத்தாய்?	13-01-1993	232
2004. ஆப்பசைத்த குரங்கு போல அவர்களே அகப்பட்டுக் கொள்வர்!	14-01-1993	236
2005. ஆளுநர் எடுக்கப் போகும் முடிவு என்ன?	17-01-1993	241
2006. நெய்வேலிக்கு ஒரு பேச்சு! நேரு ஸ்டேடியத்துக்கு மற்றொரு பேச்சா?	05-02-1993	244
2007. உனக்கும் எனக்கும் புரியுது! ஊருக்குப் புரியணுமே!	06-02-1993	247
2008. ஏக்கம் புரிகிறதா? நோக்கம் தெரிகிறதா?	12-02-1993	251
2009. என் கண்ணீர் அருவியில் சில துளிகள்	08-03-1993	254
2010. கண்டு வந்தேன் - கண்டு உவந்தேன்!	17-03-1993	259
2011. மங்கையின் எழிற்கோலமும் மாவீரனின் போர்க்கோலமும் கண்டிட!	18-03-1993	262

2012. நாடு உள்ள நிலையில், நாள்தோறும் தோன்றிடும் நிலைகுலைவில்!	19-03-1993	265
2013. அலைமோதும் காற்றில் உருமாறும் மேகங்கள்!	23-03-1993	268
2014. புதிய புற நானூறு படைத்திடுவோம் வா!	24-03-1993	273
2015. கட்டுப்பாட்டைக் கண் எனக் காத்திடுவோம்!	25-03-1993	276
2016. கொள்ளுப்பாட்டிகளும், பாட்டன்களும் தூக்கிய கொடி!	01-04-1993	280
2017. புறப்படட்டும்! புறநானூற்று மகளிர் பட்டாளம்!	02-04-1993	288
2018. தொடரட்டும் அறப்போராட்டம்! தோள்கள் உயரட்டும் தமிழைக் காத்திட!	04-04-1993	292
2019. கைவிடப்பட்டது தீர்மானமா? ஜனநாயகமா?	21-04-1993	300
2020. துள்ளி வரும் வேலாக! ஆவேசத்தை அள்ளி வரும் வாளாக!	06-05-1993	306
2021. ஒரு மனைவியின் போராட்டம்!	12-05-1993	313
2022. போக்குவரத்துத் தொழிலாளர் போர்க்கொடி!	13-05-1993	318
2023. வகுப்புவாத விஷம் எங்கே ஊற்றெடுக்கிறது!	14-05-1993	322
2024. இவர்களில் யார் குற்றவாளி? மக்களுக்கு உண்மை தெரிய வேண்டும்!	25-05-1993	327
2025. நன்னிலத்தார் தீட்டிய மடலும்! நமதியக்க மலரும் நினைவுகளும்!	31-05-1993	331

2026. இரு கடிதங்கள்! அல்ல! அல்ல - இதயங்கள்!	16-06-1993	336
2027. ஆண்டவர் மடாலயத்தில் ஆறு கொலைகள்!	17-06-1993	342
2028. காட்டு தர்பாரைத் தடுத்திட - உழவர் கண்ணீரைத் துடைத்திட!	20-06-1993	347
2029. அ.தி.மு.க.வுக்கு இந்து ஏட்டின் அவசர எச்சரிக்கையா?	21-06-1993	352
2030. உன்னால் முடியும்! உன் அணி வகுப்பால் முடியும்!	05-07-1993	356
2031. என்றென்றும் எச்சரிக்கையாக இருப்போம்!	06-07-1993	360
2032. பாவம்! பாலில் விழும் ஈயாக மாறுகிறார்!	15-07-1993	363
2033. என்ன செய்யப் போகிறது மத்திய அரசு?	18-07-1993	367
2034. நடந்து முடிந்ததம்மா! நகைச்சுவை நாடகம்!	19-07-1993	370
2035. தவம் கலைந்தது! வீரம் கரைந்தது! ஓரங்க நாடகம்	23-07-1993	372
2036. மூத்த தலைவர்களின் காலடிகளுக்கு...	02-08-1993	379
2037. தேர்தல் ஆணையமும் - தேவைப்படும் தெளிவும்!	06-08-1993	382
2038. தூசு தெரிகிறது! தூண் தெரியவில்லையே!	07-08-1993	386
2039. உற்சாகம் தரவேண்டியது, உன் கையில்தான் இருக்கிறது!	11-08-1993	390
2040. தமிழகம் கண்ட தவப்பயன் இதுதானோ?	12-08-1993	395

1957. ஏழை, நடுத்தர மக்களுக்காக ஏற்றுக போர்க் கொடி!

உடன் பிறப்பே,

அக்டோபர் முதல் நாள் தலைமைக் கழகம் அறிவித்தவாறு மாநில முழுதும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களின் முன்பு, உரவிலை உயர்வை எதிர்த்து விவசாயப் பெருங்குடி மக்களுக்காக நீயும், உன் போன்ற உடன்பிறப்புகளும் நடத்திய அமைதியான ஆர்ப்பாட்டங்கள் பற்றிய செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன.

ஓரிரு திங்களுக்கு முன்புதான், மாநில அ.தி.மு.க. அரசு விவசாயிகளுக்காகத் தி.மு.கழக ஆட்சியில் நடைமுறைப் படுத்தப்பட்ட பம்ப் செட்டுகளுக்கான இலவச மின்சார திட்டத்தை ரத்து செய்ததைக் கண்டித்துக் கழகம் விவசாய அணியின் சார்பாக விவசாயிகளை ஒன்று திரட்டி, கழக முன்னணி உடன் பிறப்புகள் முன்னின்று வாகனப் போராட்டங்களும், பேரணியும் நடத்தி - பல்லாயிரக்கணக்கில் சிறை சென்ற நிகழ்ச்சி நடை பெற்று, இலவச மின்சாரம் தரமுடியாது எனக் கொப்பிலே ஏறி உட்கார்ந்து கொண்டிருந்த ஆட்சியாளர்கள் வேறு வழியின்றிக் கீழே குதித்து இலவச மின்சார ரத்து என்ற ஆணையைத் திரும்பப் பெற்றனர்.

தேசிய முன்னணி அரசு மத்தியிலும், தி.மு.க. அரசு மாநிலத்திலும் இருந்த கால கட்டத்திலே தான் விவசாயிகள், எளிய கைவினைஞர்களின் கடன்களைப் பத்தாயிர ரூபாய் வரையிலே உள்ளவைகளைத் தள்ளுபடி செய்து, அதன் காரணமாக, 18 லட்சம் பேர் பயனடையவும், அதற்காக 500 கோடி ரூபாய் அளவுக்கான பொறுப்பை மத்திய மாநில அரசுகள் ஏற்றிடவுமான மகத்தான நிவாரணம் வழங்கப்பட்டது.

ஆனால் இன்று? மத்தியிலே காங்கிரஸ் அரசு! மாநிலத்திலே அ.தி.மு.க. அரசு! இந்த இரு அரசுகளில் வீற்றிருப்போரும் தேர்தல் நேரத்திலே அளித்த வாக்குறுதி, நாங்கள் அங்கும்

இங்கும் ஆட்சிக்கு வந்தால் நூறு நாட்களில் விலைவாசிகள் அனைத்தையும் குறைத்தும், கட்டுப்படுத்தியும், பொதுமக்களின் பளுவைத் தடுத்தும் மாயாஜால வித்தைகளைச் செய்து காட்டுவோம் என்பதுதான்!

விலைவாசி குறைந்ததா? அல்லது நிலை தடுமாறி உயர்ந்ததா? விபத்தின் காரணமாக, வீண்பழி தூற்றல் காரணமாக, ஆட்சிக்கு வந்தோரைப் பார்த்து நாடு கேட்கிறது இன்று!

நீண்ட தூரப்பேருந்தில் குறைந்தபட்சக் கட்டணம் தி.மு.க. ஆட்சியில் மூன்று ரூபாய் என இருந்தது. அ.தி.மு.க. ஜெயலலிதா ஆட்சியில் அந்தக் குறைந்தபட்சக் கட்டணம் ஐந்து ரூபாய் என உயர்த்தப்பட்டு - மக்களின் எதிர்ப்பைக் கண்டவுடன், அந்தப் பேருந்துகளில் குறைந்த பட்சக் கட்டணம் நாலு ரூபாய் மட்டுமே என எழுதி வைத்துள்ளார்களே! இந்த மாய்மால வேலை ஒன்றே போதும் மக்களை எப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள் என்பதற்குச் சான்று!

நியாயவிலைக் கடை அரிசி விலை கழக ஆட்சியில் இரண்டரை ரூபாய் என்று இருந்ததை மூன்று ரூபாய் ஆக்கியுள்ளாரே ஜெயலலிதா! இது போதாதா இவர்கள் வாக்குறுதியைக் காப்பாற்றிய அழகு எப்படி என்பதற்கு?

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உதவிக் கரங்களாக இருந்த ஆட்சிகள் தொடர முடியாமல், மக்களை ஏமாற்றி மகுடம் புனைந்து கொண்டவர்கள் - கட்டம்கட்டமாக அந்த மக்களை எல்லா வகையிலும் வேதனைக்கு ஆளாக்கி வருகிறார்கள்.

1992 - 93 ஆம் ஆண்டுக்கான ஜெயலலிதா அரசின் நிதி நிலை அறிக்கையில், ஏக்கர் ஒன்றுக்கு ஏற்கெனவே உள்ள தல வரியை 45 காசிலிருந்து நூறு காசாகவும், தல மேல் வரியை ரூ. 2.50லிருந்து ரூபாய் பத்து ஆகவும் உயர்த்தி நில வரியை மிகவும் அதிகமாக்கியுள்ளனர்.

அதன்படி நெல்விளையும் நிலத்துக்கு ஏக்கர் ஒன்றுக்கு 1401வது பசலியில் ரூபாய் 65 வரி கட்டிய விவசாயி, அடுத்த 1402 வது பசலிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 202 வரி கட்ட வேண்டும்.

கரும்பு, வாழை, மஞ்சள் போன்ற வணிகப் பயிர்கள் விளையும் நிலத்துக்கும், நீண்ட காலப் பயிர் விளையும் நிலத்துக்கு ஏக்கர்

ஒன்றுக்கு ரூ. 85 வரி கட்டிய விவசாயி, அடுத்த பசலிக்கு ரூபாய் 262 வரி கட்ட வேண்டும்.

கடலை, எள் விளையும் நிலத்துக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 45 வரி கட்டிய விவசாயி, அடுத்த 1402வது பசலிக்கு ரூபாய் 142 வரி கட்ட வேண்டும்.

கால்நடை தீவனப் பயிர்கள் உள்ளிட்ட சிறு தானியம் முதலிய புன்செய்ப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 35 வரியாக 1401வது பசலியில் கட்டிய விவசாயி, அடுத்த பசலி முதல் ரூபாய் 112 வரியாகக் கட்ட வேண்டும்.

மொத்தத்தில் பார்த்தால் முன்பு இருந்த வரியை விட, மூன்று மடங்கு அதிகமான வரி விவசாயிகளின் தலையில் ஏற்றப்பட்டிருக்கிறது.

இதோ விவசாயிகள் தலையில் எப்படி மற்றொரு இடி விழுந்துள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டு! ஒரு மூட்டை விஜய் காம்ப்ளக்ஸ் உரம் 175 ரூபாய்க்குக் கிடைத்ததற்கு மாறாக, இப்போது 352 ரூபாய் என்றும், டி.ஏ.பி. 242 ரூபாய் என்றிருந்ததும் 455 என்றும், பொட்டாஷ் 88 ரூபாய் என்றிருந்தது 310 ரூபாய் என்றும், 20:20 பாக்டம்பாஸ் 175 ரூபாய் என்றிருந்ததை 340 ரூபாய் என்றும் ஆகி - விவசாயிகளை அழ வைத்துள்ளது! அலறவைத்துள்ளது!

இந்தக் கொடுமைக்குப் பரிகாரம் தேடுகிறோம் என்ற போர்வையில், மாநிலத்தில் உள்ள ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் கொடுமைக்கு மேல் கொடுமையாக வெந்த புண்ணில் வேலாக தமது மாமூல் கொள்ளையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதனை விளக்கிடவும் - கண்டித்துக் குரல் கொடுத்திடவும் அக்டோபர் முதல் நாள் நடத்தி முடித்துள்ள முதற்கட்ட ஆர்பாட்டத்தைத் தொடர்ந்து நகர்புறங்களிலும் நடுத்தர ஏழை மக்களுக்காக குரல் கொடுத்திட நமது கழக அமைப்புகள் கொடி உயர்த்தியுள்ளன.

பெட்ரோல், டீசல், கேஸ், வீட்டு வரி, குடிநீர் வரி, ஓட்டல் பண்டங்களின் விலை; இவையனைத்தும் தாறுமாறாக உயர்த்தப்பட்டுள்ளதைக் கண்டித்து சென்னை மாவட்ட தி.மு.கழகம் அக்டோபர் 3-ஆம் நாள் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களைத் தொடங்குவதுடன், அக்டோபர் 7-ஆம் நாள்

மத்திய மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் அமைதி ஆர்ப்பாட்டங்களையும் நடத்திட முடிவெடுத்துள்ளது. மாநிலத்தில் உள்ள எல்லா நகரங்களிலும், பல்வேறு வடிவங்களில் இந்தப் பிரச்சினைகளையொட்டி தெருமுனைப் பிரச்சாரங்களும் - அரசு அலுவலகங்களின் முன்னால் ஆர்ப்பாட்டங்களும் அக்டோபர் 3-ந் தேதி முதல் ஒருவார காலத்திற்கு வசதிக்கேற்ப எல்லா நகரங்களிலும் நடத்தப்பட இருக்கின்றன.

நகரங்களில் தொழில் வரி என்ற பெயரால் புதிய கிடுக்கிப்பிடி ஒன்று போடப்பட்டு, ஆட்டோ ரிக்ஷாக்களிலே இருந்து வணிகர்கள் உள்ளிட்ட மேலும் ஆயுர்வேத சித்த வைத்தியர்கள் வரையில் கெடுபிடிகளாலும் - லஞ்ச ஊழல்களாலும் கசக்கிப் பிழியப்படுகிற நிலையில் கன்னா பின்னா என்று ஒரு ஆணையை அ.தி.மு.க. அரசு பிறப்பித்துள்ளது.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்து
வகுத்தலும் வல்லது அரசு"

என்பார் வள்ளுவர்!

ஆனால் இந்த அரசின் இயற்றல், ஈட்டல் இரண்டும், ஒழுங்காகக் கருவூலத்திற்குப் போனாலே மக்களுக்கு இத்தனை வரித் தொல்லைகளும், விலைவாசி உயர்வுத் தொல்லைகளும் இல்லை! அரசுக் கருவூலத்திற்குப் போக வேண்டியவை நெல்லுக்கு இறைத்த நீர், வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் பொசியுமாம் என்பதற்கு நேர்மாறாக, நெல்லுக்கே போகாமல், முழுதும் புல்லுக்கே அல்லவா போய்க் கொண்டிருக்கிறது! அதுவும் உல்லாசத் தோட்டத்துப் புல்லுக்கு!

எனவேதான் இந்த முதற்கட்ட ஆர்ப்பாட்டங்கள்! தெருமுனைப் பிரச்சாரங்கள்! நடத்திக் காட்டிய அக்டோபர் முதல் நாள் அறப்போருக்குப் பாராட்டு! நடக்க இருப்பவை செம்மையாக நடைபெற கழக அமைப்புகளின் உடன்பிறப்புகள் கடமையாற்றிட வேண்டுகிறேன்.

அன்புடன்,

மு. க.

03-10-1992

1958. பழம் கிடைக்கிறதாபம்; பாரிதாபம்! மிகப்பாரிதாபம்!

உடன் பிறப்பே,

திராவிட இயக்கம் பல்வேறு சோதனைகளைக் கடந்து படிப்படியாக வளர்ந்து, இன்று மிக வலுவான நிலையை அடைந்துள்ளது. மூடப்பழக்க வழக்கங்கள் நிறைந்த பழைய உலகத்தை பெரியார் அழித்தார். சமூக நீதியும், சுயமரியாதையுமிக்க புதிய உலகத்தை அண்ணா உருவாக்கினார். காடு மேடாக இருந்த பகுதியை பெரியார் சீரமைத்து விளை நிலமாக்கினார். அந்த நிலத்தில் அண்ணா விதையூன்றி செடியாக வளர்த்தார். அந்த செடியை எம்.ஜி.ஆர். பாதுகாத்து மரமாக மாற்றினார். இப்போது அந்த மரத்தில் பழுக்கும் பயன் என்ற பழங்களைப் பறித்து ஜெயலலிதா நமக்குத் தருகிறார்.

இப்படி பேசியிருப்பவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள். ஒரு கண் காட்சி திறப்பு விழாவில்! அப்படியே தினத்தந்தியில் வந்துள்ள அவரது பேச்சின் முக்கியமான இந்தப் பகுதியை எழுத்து மாறாமல் தந்துள்ளேன். ஆளுங்கட்சிக்குச் சார்பான செய்திகளை ஆரவாரமாகவும் - பாதகமான செய்திகளை பட்டதும் படாமல் பத்திரிகையின் இருட்டு மூலையிலும் Blind Corner பிரசுரிக்கும் ஏடுகளில் தினத்தந்தி முதலிடத்தில் இருக்கும் ஏடு என்பதால் அதில் வெளியிடப்பட்டுள்ள நாவலரின் உரைப்பகுதி, வரிக்கு வரி சரியானதாகத்தானே இருக்க வேண்டும்.

பெரியார் விளைநிலம் உருவாக்கினார் - அண்ணா செடி வளர்த்தார் - எம்.ஜி.ஆர். மரமாக ஆக்கினார் - பயன் எனும் பழங்களைப் பறித்து ஜெயலலிதா நமக்குத் தருகிறார் - அடடா! நாவலர் அவர்கள், அப்பழத்தின் சுவையை ரசித்தவாறு, திராவிட இயக்கத்தின் வரலாற்றையே இரண்டு மூன்று வரிகளில் சொல்லி முடித்து விட்டார் பார்த்தாயா!

இதனை இந்து இதழ் எப்படி வெளியிட்டிருக்கிறது பார்! எம்.ஜி.ஆருக்குப் பிறகு திராவிட இயக்கத்தின் தீபச் சுடரை ஜெயலலிதா தான் தூக்கிப் பிடித்திருக்கிறார் என்று நாவலர் சொன்னதாக வெளியிட்டிருக்கிறது! இந்த வாக்கியத்தை தினத்தந்தி வெளியிடத் தவறியிருக்கலாம்.

எம்.ஜி.ஆர். அவர்களைப் புகழ்வதற்கும், ஜெயலலிதாவைப் புகழ்வதற்கும் நாவலர் மிகவும் கடமைப்பட்டவர் என்பதை யாரும் மறுக்க முடியாது! ஏனெனில் இருவரது தலைமையின் கீழும் அமைச்சராக இருந்தவர் - இருப்பவர்!

பெரியாரின் திராவிடர் கழகம் - அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழகம் இரு இயக்கங்களுக்கும் இடையில் அணுகுமுறைகளில், அரசியல் நிலைப்பாடுகளில், வேலைத் திட்டங்களில், பிரச்சாரப் பாணிகளில் வேறுபாடுகள் இருந்திருக்கலாம் - இருக்கலாம்! அதற்காக இந்த இயக்கங்களின் தலைமைகள், என்றைக்குமே அடிப்படைக் கொள்கைகளைக் குப்பைத் தொட்டியில் தூக்கிப் போட்டது கிடையாதே!

அ.தி.மு.க.வுக்கு வாய்த்த தலைமைகள் அப்படிப்பட்ட தலைமைகளா?

சுயமரியாதை வீரர் மதுரை முத்து அவர்களால், மதுரையில் விழா நடத்தி வழங்கப்பட்ட தங்கவாள் அங்கு சுற்றி இங்கு சுற்றி இறுதியாக மூகாம்பிகை கோயிலில் கொண்டு போய் எம்.ஜி.ஆர். அவர்களால் ஒப்படைக்கப்பட்டதும், ஆண்டுக்கு ஒருமுறை மூகாம்பிகை தரிசனத்துக்காக முதல்வராக இருந்தவர் சென்று வந்ததும், பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டுக்கு பொருளாதார உச்சவரம்பு கொண்டு வந்ததும் பழைய செய்திகள்! மறைந்தவரைப் பற்றி விமர்சிப்பது மரபல்ல! மாண்புமல்ல! அதனால்தான் இந்தச் செய்தியுடன் அதனை விடுக்கிறேன்.

அந்த எம்.ஜி.ஆர். கூட மகாமக விழாவுக்குச் சென்று, அந்த விழாவை ஒரு கட்சி மகாநாடாகவே ஆக்கிக் கொண்டு - தமது செயலால் நூற்றுக்கணக்கான ஆடவர், பெண்டிர், அரும்புக் குழந்தைகள் சேற்றில் அழுந்திச் செத்து நசுங்கிடக் காரணமாக இருந்ததில்லையே! அந்த அரும்பணியை ? ஆற்றியவர் திராவிட இயக்கத்தின் தீபச் சுடரை உயர்த்திப் பிடிக்கும் ஜெயலலிதா என்கிறாரே நாவலர்! ஆம்! அவர் பழம் பறித்துத் தருகிறாராம். இவர் ருசித்துப் பயன்பெறுகிறாராம்!

“வேதத்தைக் கேட்கிற சூத்திரனது காதுகளில் ஈயத்தையும், மெழுகையும் உருக்கிவிட வேண்டும். வேதத்தைச் சொல்கிற சூத்திரனது நாக்கை, அறுத்தெறிய வேண்டும். அதன் பொருளை உணர்ந்து வைத்திருக்கிறவனின் நெஞ்சைப் பிளக்கவேண்டும் என்பது வேதமும், வேதத்தின் தருமமும் ஆகும், என வெகுண்டெழுந்து நாவலர் நெடுஞ்செழியனார் எழுதியுள்ளார் திருக்குறள் தெளிவுரை எனும் அவர் உரையெழுதியுள்ள நூலில்! ஆதாரம்:- பக்கம் XV அந்த நூலை முதலமைச்சர் ஜெயலலிதா, சில மாதங்களுக்கு முன்புதான் வெளியிட்டுள்ளார் என்பதை மறந்திருக்க முடியாது!”

பிராமணனின் பொருளை அபகரித்த சூத்திரனைச் சித்திரவதை செய்து கொல்லுக. ஆனால், பிராமணன் சூத்திரனுடைய பொருளை, அவன் விருப்பப்படி கொள்ளையிடலாம் என்றும், பிராமணன், பெற்றதாய் ஒருத்தியைத் தவிர, மற்ற பெண்களைப் புணரலாம் என்றும், மனுதர்மம் மற்றும் வடமொழிச் சுருதிகளும், சுமிருதிகளும் கூறியுள்ள தர்மங்கள் அனைத்தும் வள்ளுவருக்கு உடன்பாடானவை அல்ல என்றும் தனது திருக்குறள் தெளிவுரை எனும் அந்தப் பெரிய நூலில் நாவலர் எழுதி, அதனை முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுமிருக்கிறார்.

நாவலர் அவர்கள், அவரது திருக்குறள் தெளிவுரை நூலில் சுட்டிக் காட்டியுள்ள வள்ளுவர் ஏற்றுக் கொள்ளாத அந்த வேதங்கள், மனு தர்மங்கள், சுருதிகள், சுமிருதிகள் ஆகியவற்றையெல்லாம் கற்றுத் தருவதற்குத்தானே ஜெயலலிதா தொடங்குகிற வேதாகமக் கல்லூரிகள் பயன்படப்போகின்றன!

ஒருவேளை வேதாகமக் கல்லூரிகளும், திராவிட இயக்கத்தின் தீபச் சுடரைத் தூக்கிப் பிடிப்பதற்காகத்தான் என்று நாவலர் வாதாடினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

ஆனால் ஒன்று! அவர் எழுதியுள்ள திருக்குறள் தெளிவுரை நூலில், இக் கடிதத்தில் நான் சுட்டிக் காட்டியுள்ளதைவிட, இன்னும் ஏராளமான அநியாய வேத தர்மங்களை அவர் சுட்டிக்காட்டித் தனது அடிப்படைக் கொள்கையில் உறுதியாக நிற்கிறார்!

எனினும் பறித்துக் கொடுக்கப்படும் பழத்தை ருசிப்பதின் காரணமாக, ஜெயலலிதா வேதக் கல்லூரி அமைத்தாலும் பரவாயில்லை - விநாயக சதுர்த்திக்கு வாழ்த்துச் செய்தி வெளியிட்டாலும் பரவாயில்லை - என ஒரு முடிவுக்கு வந்தவராகத் தான் திராவிட இயக்கத்தின் தீபச் சுடர் ஜெயலலிதாவின் கையில் என்று உறுதிபட உரைத்திருக்கிறார் நாவலர்!

இது மூன்றாம் தர அரசு என சட்டப்பேரவையில் டாக்டர் அண்டே குறிப்பிட்டபோது, தி.மு.க. உறுப்பினர்கள் கொதித்து எழுந்தனர். அவர்களைக் கையமர்த்தி உட்கார வைத்துவிட்டு, அண்டே அவர்கள் திருத்திக் கொள்ள வேண்டும். இது மூன்றாம் தர அரசு கூட அல்ல! நாலாம் தர அரசு! என நான் பதில் கூறியபோதுதான் அடக்க உணர்வுடன் நான் நாலாந்தரம் எனப்படும் சூத்திர வகுப்பைச் சார்ந்தவன் என்று குறிப்பிட்டேன்! ஆனால் இன்றைய முதலமைச்சர், மிகுந்த ஆணவத்துடன் அல்லவா தன்னை உயர்ந்த சாதி என சட்டப்பேரவையிலே கூறி, தன்னை யாரும் அசைக்க முடியாது என அறைகூவல் விடுத்தார் - இதுகூட திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி என்றும் இவர் ஒருவரே திராவிட இயக்கத் தீபச் சுடரை ஏந்தத் தகுதிபடைத்தவர் என்றும் நாவலர் பெருமான் நவிலக் கூடும். அப்போதுதானே அமைச்சர் பெருமானாக இருக்க முடியும்! என் செய்வது? பழம் பறித்துத் தருகிறார் அவர். ருசிக்கிறார் இவர்! அதற்காகவாவது பெரியாருக்கும், அண்ணாவுக்கும் எதிராக இவர், பரிகாரமே இல்லாத பயங்கரமான ஒரு துரோகத்தைச் செய்ய வேண்டாமா?

உடன்பிறப்பே, நாவலர் அவர்கள் ஜெயலலிதாவை பாராட்டுகிறாரா? அல்லது திராவிட இயக்க வரலாற்றிலேயே திரிபுவாதம் செய்து பெரியாரையும், அண்ணாவையும் கேவலப் படுத்துகிறாரா - புரியவில்லையே!

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப் போகிறேன் என்று பிரதமராக இருந்தபோது வி.பி. சிங் அவர்கள் அறிவித்தவுடன், அகமகிழ்ந்து துள்ளிக் குதித்து, அதனை ஆதரித்து அணி திரட்டியோர் பெரியார், அண்ணா வழிவந்த திராவிட இயக்கத்தின் தீபச் சுடரை உயர்த்திப் பிடித்தவர்களா? உடனடியாக மண்டல் கமிஷனுக்கு எதிரான பொருளாதார அடிப்படைக் கருத்தை அழுத்திக் கூறியதோடு, வி.பி. சிங்கும்

உடனடியாக பதவி விலக வேண்டுமென பேட்டி கொடுத்த ஜெயலலிதா, திராவிட இயக்கத்தின் தீபச் சுடரை உயர்த்திப் பிடித்தவரா?

பதவிகளுக்காக பல் காட்டுவோர், அதாவது பழத்தின் பயனை அனுபவிப்போர் இதற்கு வெளிப்படையாக பதில் கூறமுடியாது! எனினும் அவர்களின் மனச்சாட்சி சும்மாவிடாது. உறுத்திக் கொண்டே இருக்கும்.

உலகத்தின் முன்னே பங்குச் சந்தை ஊழலின் வாயிலாக மிக உயர்ந்து? நிற்கும் ரிசர்வ் வங்கி, தனக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தைப் போக்கிக் கொள்ள சென்னைக் கிளை அலுவலகத்திலேயே, ஓமகுண்டம் வளர்த்து யாகம் நடத்தப்போகிறது என்றால், அதை எதிர்த்துக் குரல் கொடுப்பவர்கள் பெரியார், அண்ணாவின் திராவிட இயக்கத்தின் சுடர் தூக்குபவர்களா? அதை மவுனமாகப் பார்த்துக் கொண்டிருப்பது மாத்திரமின்றி, மறைமுகமாக ஆதரவு கொடுப்பவர்கள் திராவிட இயக்கத்தின் சுடர் ஏந்திடுபவர்களா?

பகுத்தறிவு, சுயமரியாதை, சமூக நீதி, திராவிடர், திராவிடம் என்றெல்லாம் பேசுவதற்கு, பதவிக்காக யார் பாதமும் தாங்கத் தயாராயிருப்பவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது.

பெரியார், அண்ணா உருவாக்கி வளர்த்த கொள்கைகளுக்கு ஊனமும், அழிவும் விளைத்திட ஆதிக்கக்காரர்களும், அதிகாரம் ஏந்திகளும் முனைந்த போதெல்லாம் போர்க்கொடி உயர்த்தி தியாகத் தழும்புகளைப் பெற்ற திருக்கூட்டத்தினர் யார், எவர் எனத் தெரிந்திருந்தும் - பழம் கிடைக்கிறது என்பதற்காக, திராவிட இயக்க வரலாற்றைப் படைத்தவர்களைக் கேவலப்படுத்தவும் - திராவிட இயக்கப்படை நடத்துவோர் யார் என்று அடையாளம் தெரியாமல் விழிக்கவுமான நிலை, அந்தோ, நாவலருக்கு ஏற்பட்டுவிட்டதே!

வரலாற்றுடன் சேர்ந்து வளர்ந்தவருக்கு இப்படி ஒரு வாய்மை வறட்சி ஏற்படலாமா? கேட்டால் பதில் கூறுவார், பழம் கிடைக்கிறதே என்று! பரிதாபம்! மிகப் பரிதாபம்!

அன்புடன்,

மு. க.

04-10-1992

1959. மதவெறி மாய்மாலத்தில் மயங்குவதோ?

உடன்பிறப்பே,

நாற்பத்தி ஐந்து ஆண்டு காலமாக சுதந்திரம் கொழிப்பதாகச் சொல்லப்படும் இந்தியத் திருநாட்டில், பெரும்பாலான குடிமக்களுக்கு உடலில் இரத்தம் ஊறுவதற்கான வளமான திட்டங்கள் தீட்டப்படுகின்றனவோ இல்லையோ, அவர்கள் இரத்தம் சிந்துவதற்கான களம் அமைக்கும் காரியங்கள் பலவற்றுக்கு திட்டமிட்டு சூழ்ச்சிகள் வகுக்கப்படுகின்றன. சூது வலைகள் பின்னப்படுகின்றன.

மதக் கலவரங்கள் - மத உணர்வைத் தூண்டுகிற செயல்கள் - உத்தமர் காந்தியடிகளின் உள்ளத்தைக் குடைந்த காரணத்தால், அதனையொட்டி, அவர் எடுத்த அறவழி நடவடிக்கைகளுக்குப் பரிசாக மதவெறி அவருக்கு துப்பாக்கி குண்டுகளை வழங்கியதை என்றுமே மறக்க முடியாத நிகழ்ச்சியாகக் கருதுவதால்தான் - உண்மையான மதச் சார்பற்ற நிலைதான் இந்திய மக்களிடையே வலிமையுடையதாக ஆக்குமென்ற முடிவு, இருவேறு கருத்துகளுக்கு இடமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆனால் பாரதீய ஜனதா கட்சி, விசுவ இந்து பரீட்சத், இந்து முன்னணி போன்ற சுருக்கமாகச் சொன்னால் ஆர்.எஸ். எஸ். மதவெறி கொண்ட அமைப்புகள், நாட்டு மக்களிடையே பரவியுள்ள கடவுள் நம்பிக்கையைப் பயன்படுத்திக் கொண்டு, அந்தக் கடவுளின் பெயராலேயே மக்களை அணி திரட்டி - இந்திய நாட்டில் உள்ள சிறுபான்மை மக்களுக்கு விரோதமாக, குறிப்பாக இஸ்லாமியப் பெருமக்களுக்கு விரோதமாக, ஒரு வெறி உணர்வுக்கான விஷ விதையை நாடு முழுதும் தூவிக்கொண்டிருக்கின்றன. இந்த மாய்மாலம் காரணமாக வடக்கே சில மாநிலங்களில் இந்த இயக்கங்களின் அரசுகள்

அமைந்துள்ளதை வாய்ப்பாக ஆக்கிக் கொண்டு மதவெறி உணர்வை, பலமான அடித்தளமிட்டு உரமாக வளர்ப்பதற்கான ஆயத்தங்களில் இந்த இயக்கங்கள் ஈடுபட்டுள்ளன.

எத்தனையோ லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு அசுவமேத யாகத்தில் தசரதனுக்குப் பிறந்த இராமன், அயோத்தியிலே பிறந்ததாகச் சொல்லிக்கொண்டு - அதன் நினைவாக ஒரு கோயில் கட்டுகிறோம் என்பதோடு நிறுத்தாமல் - வரலாற்றுச் சிறப்புடைய பாபர் மசூதியை இடித்து, அங்கேதான் அந்தக் கோயிலைக் கட்ட வேண்டுமென்று ஆரம்பித்தவர்கள், இன்னமும் அயோத்திப் பிரச்சினையை விட்டபாடில்லை! மாநில அரசும் உத்திர பிரதேசத்தில் வாய்ப்பான அரசாக அமைந்து விட்ட காரணத்தால், மத வெறியைத் தூண்டிட அரசின் அதிகார துஷ்பிரயோகங்களும் ஏராளமாகப் பெருகிவிட்டன! ஏற்கெனவே மத்திய பிரதேசத்தில் மாநில முதல்வர் பா.ஜ.க. கட்சியைச் சேர்ந்தவர், தனது தகப்பனாரின் ஓராண்டு நினைவுத் திதியை அரசு விழாவாகவே மிக்க ஆடம்பரமாக நடத்தினார் என்பது எல்லா ஏடுகளிலும் புகைப்படங்களுடன் வெளிவந்த பரபரப்பான செய்தியாகும்.

ஓரிரு மாநில அரசுகள் கையிலிருப்பதால், கட்டாய நன்கொடைகள், நிதிகள் குவிக்கப்பட்டு - அயோத்தி ராமன் ரத யாத்திரையைத் தொடர்ந்து இப்போது, பாதுகைகளை வைத்து பரதன் ரத யாத்திரை நாடு முழுதும் நடத்தப்படுகிறது! இவைகள் எல்லாம் எப்படியும் மதவெறியைத் தூண்டி சிறுபான்மை மக்களை சீரழிக்கும் சிறுமதியுடன் செய்யப்படுபவைகளாகும் என்பதில் ஐயமில்லை!

இளம் உள்ளங்களிலேயே, இந்து மதப்பற்றையல்ல, இந்து மத வெறியையும் - இஸ்லாமிய மதத்திற்கு எதிரான பகை உணர்வையும் உலைக்களத்துத் தணல் போல வெப்பம் பொருந்தியதாக ஆக்கிட, இந்த இயக்கங்களுக்கு உத்திர பிரதேசம் போன்ற மாநில அரசுகளே துணை நிற்கின்றன - ஏன்? அந்த அரசுகளே முன்வந்து தூண்டுகின்றன என்கிற செய்திகளைக் கேட்கும்போது அதிர்ச்சியாக உள்ளது.

அயோத்தி போன்ற இடங்களில் இருந்த இந்துக் கோயில்களையெல்லாம் இடித்துத் தள்ளிவிட்டு அங்கே

மசூதிகளைக் கட்டுவதுதான் முஸ்லீம் மன்னன் பாபரின் மதக் கோட்பாடாக இருந்தது என்றும்,

அக்பர் சக்கரவர்த்தியை திறமையானவர் என்பதும், பெருந்தன்மை மிக்க நடுநிலையாளர் என்பதும் பொய்யான வரலாறு. அக்பர் மிக மூர்க்க குணம் கொண்ட கொடுங்கோலன் என்றும்,

திராவிடர்கள் இந்தியாவின் பூர்வீக குடிகள் என்பது தவறு, ஆரியர்கள்தான் இந்தியாவின் பூர்வீக குடிகள் என்றும்,

உத்திரபிரதேசத்து பள்ளிக் கூடங்களில், சரித்திர உண்மைகளையே தலைகீழாகப் புரட்டி - பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்தப் பாடங்களை மாணவர்க்குப் போதிக்கும் சில ஆசிரியர்கள், தங்கள் ஆற்றலுக்குத் தக்கவாறு மிகுந்த அக்கறையுடன் இளம் உள்ளங்களில் மத வெறியை போதை மருந்து போல ஏற்றி வருகின்றனர்.

கல்வி மேதைகளையோ, பேராசிரியப் பெருமக்களையோ கலந்து பேசாமல், அரசாங்கமே இந்த பாடல்களை அச்சியற்றி வழங்கியிருக்கிறது.

ஓரிரு பாடங்களில் மட்டுமல்லாமல் எல்லாப் பாடங்களிலுமே இந்த மதவெறி நஞ்சு தடவப்பட்டுத் தரப்படுகிறது.

உதாரணமாக, மாணவர்களுக்கான கணக்குக் கேள்வியில் இடம் பெற்றுள்ள ஒரு குறிப்பு, எத்துணை நச்சுத் தன்மை வாய்ந்தது என்பதை விளக்குகிறது.

அயோத்தியில் ஒரு கரசேவைத் தொண்டர் ஒரு நாளைக்கு எத்தனை மணிநேரம் வேலை செய்தால் பாபர் மசூதியை குறிப்பிட்ட ஒரு விரைவான தேதிக்குள் இடித்துத் தள்ள முடியும்?

இதுபோன்ற கேள்விகள் அமைந்த பாடங்களாலும், மதவெறியைத் தூண்டும் புத்தகங்களாலும் நாடு ஒரு பயங்கரமான வன்முறை மிகுந்த எதிர்காலத்தைச் சந்திக்க வேண்டியிருக்குமென்று கூறி, அந்த மாநிலத்தில் உள்ள ஆசிரியர் சங்கம் மகந்தாசிங் என்பவர் தலைமையில் எதிர்ப்புக் குரல் கொடுத்திருக்கிறது என்பது சற்று மனநிறைவு அளிக்கும் செய்தியாகும்.

இவ்வாறு மதவெறியைத் தூண்டுகிறவர்களுக்கு சில மாநில அரசுகள் சாய்காலாக இருந்து வருகின்றன. அவற்றில் ஒன்றாக இங்குள்ள அ.தி.மு.க. அரசும் இருப்பதால்தான், ஜெயலலிதா ஆட்சியின் மீது கை வைக்காதே என்று பாரதீய ஜனதாவின் மூத்த தலைவர்களும், விசுவ இந்து பரீட்சத்தின் தலைவரும் கடுமையான எச்சரிக்கை விடுகிறார்கள்.

மதபேத உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு பெரியார், அண்ணா, காயிதே மில்லத் போன்ற நமது மாபெரும் தலைவர்கள் தமிழகத்தில் கட்டிக் காத்து நிலைநிறுத்தியுள்ளதும், இன்று நம்மாலும் பேணிப் பாதுகாக்கப்படுவதுமான - சகோதர உணர்வு, சமுதாயங்களின் ஒற்றுமை - இவற்றுக்குச் சாவுமணி அடிக்க வடக்கு மாநிலங்களிலே இருந்து நமது தமிழ்மாநிலம் வாடைக்காற்றுக்கு இடம் தராமல் வானுயர அரண் அமைக்க வேண்டியது திராவிட இயக்கத்தின் கடமையும் பொறுப்பும் ஆகும்!

இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டால், உத்தமர் காந்தியடிகளின் உயிரையே பறித்த மதவெறி உணர்வுக்கு, எதிர்காலத்தை உருவாக்க வேண்டிய இளைய தலைமுறை பலியாகி விடும் என்பதை எச்சரிக்கையுடன் சிந்தித்துப் பார்த்துச் செயல்பட்டாக வேண்டும்.

அன்புடன்,

மு. க.

07-10-1992

1960. எச்சரிக்கை நடவடிக்கைக்காக ஏந்துகிறேன் கையை!

உடன்பிறப்பே,

அக்டோபர் திங்களில் ஏழு நாட்கள் வெளியூர் நிகழ்ச்சிகளில் உன்னைச் சந்திக்க வருகிறேன். செஞ்சி, ஆரூர், திருவண்ணாமலை பொதுக் கூட்ட நிகழ்ச்சிகள் நிதியளிப்பு விழா நிகழ்ச்சிகளாக நடைபெற இருக்கின்றன. ஐயாயிரம் ரூபாய் கழக நிதி தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்து ரசீது பெற்ற பிறகே, அதனைப் பார்த்துவிட்டு திருமணத்துக்கு வருவேன் என்று நான் விதித்துள்ள கட்டாய நிபந்தனையும் கழக வளர்ச்சிக்காகத்தானே என்ற பாச உணர்வுடன், உடன்பிறப்புகள் சிலர் அழைத்துள்ள மணவிழா நிகழ்ச்சிகள் ஐந்தில் இத்திங்களில் கலந்து கொள்கிறேன்.

மாநாடா? பேரணியா? பொதுக்கூட்டமா? அனைத்திலும் இசை நிகழ்ச்சி நடத்துகிறேன் அண்ணா! என் வீட்டு திருமண விழாவுக்குக் கூடவா தாங்கள் தலைமை வகிக்க நிதி கொடுக்க வேண்டுமென நமது விஜயா தாயன்பன் உரிமையுடன் கேட்டபோது, நீதான் கட்டாயம் கொடுக்க வேண்டுமென்று சிரித்துக் கொண்டே சொன்னேன் அந்தப் பணம் வந்து சேர்ந்தது தலைமைக் கழகத்துக்கு!

கணக்கு வரவு செலவுகளைப் பார்த்து செயற்குழு, பொதுக்குழுக்களுக்கு சமர்பிக்க உன்னைப் பொருளாளராகத் தேர்வு செய்யவில்லை. கழகத்துக்குப் பொருள் திரட்டத்தான் தேர்வு செய்திருக்கிறோம் என்று அண்ணா அவர்கள் கழகப் பொதுக் குழுவில் என்றைக்குச் சொன்னாரோ, அன்றுமுதல் இன்றுவரை கழகப் பொருளாளராக யார் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், பொருளாளர் பணி என்னை விட்டுப்போகவில்லை.

சென்னை அண்ணாசாலை தேனாம்பேட்டைக்கு அருகில் - கள்ளிக் காடுகளும், குப்பைமேடுகளும் நிறைந்த இடத்தில்

ஒரு ஓலைக் கொட்டகை போட்டுக் கொண்டு அதில் காலை முதல் மாலை வரையில் உட்கார்ந்து கொண்டு, ஒவ்வொரு அங்குலமாக அண்ணா அறிவாலயம் உயர்ந்து கொண்டிருந்ததை நானும், பொதுச் செயலாளர் பேராசிரியரும் காணும் போது எங்கள் கண்ணின் பாவைகள் களி நடனமல்லவா புரிந்தன!

இரண்டு மாதத்துக்கு ஒருமுறை சிறைச் சாலைகளை நிரப்பும் போராட்டங்களையும் நடத்திக்கொண்டு, நாள்தோறும் அடக்குமுறைகளுக்கு ஆளாகிக் கொண்டு, இனி இந்தக் கட்சியாவது ஆட்சிக்கு வருவதாவது என்ற எதிர்தரப்பினரின் அலட்சியப் பேச்சுகளுக்கு இலக்காகி - நொடித்துப் போயிருந்த அந்தச் சூழ்நிலையிலே தான் நான் இருக்க பயம் ஏன்? என்று உன்போன்ற உடன்பிறப்புகள் நிதி வழங்கினீர்கள்! நிதி திரட்டினீர்கள்! அதில் எழுந்து எழில் கொட்டுவதுதானே அண்ணா அறிவாலயம்!

எமர்ஜன்சி நேரத்தில் என்னைக் காணவேண்டுமென்ற துடிப்புடன் வெகு தொலைவிலிருந்து பேருந்துகளில் வந்த உன்னை, இடையிலே காவல்துறை தடுத்து சென்னை வழியே போகக் கூடாது என ஆணை பிறப்பித்தபோது என்ன செய்தாய்? திருப்பதிக்குப் போகிறேன், திருத்தணிக்குப் போகிறேன் என்று கூறிவிட்டல்லவா பேருந்துகளில் வந்து அதற்கு சாட்சியமாக சிலர் மொட்டையும் அடித்துக் கொண்டு, என் இல்லம் வந்து இந்தா நிதி என வழங்கிவிட்டுப் போனாய், குடும்பம் குடும்பமாக! குழந்தை குட்டிகளுடன்! அன்றைய அதிரடிச் சூழலில் கூட, ஆறுலட்ச ரூபாய் நிதியை கழகத்திற்கு வழங்கிய பெருமைக்குரிய உடன்பிறப்பல்லவா நீ!

1959-ல் திருவாரூரில் தஞ்சை மாவட்ட மாநாடு நடத்தினோம்! மாநாடு நடத்துவதற்கென ஒருமாதம் திருவாரூர் சென்று தங்கியிருந்தேன். மாநாட்டு நிறைவுப் பேருரையை அறிஞர் அண்ணா நிகழ்த்துவதற்கு முன்பு அந்த மாவட்ட மாநாட்டின் மூலம் மிச்சப்பட்ட தொகையை எனது நன்றியுரையில் அறிவித்தேன். நடிகர்கள் யாருமே கலந்துகொள்ளாத இந்த மாநாட்டில் இருபதாயிரம் ரூபாய் மிச்சத் தொகை என நான் சொன்னவுடன், மாநாட்டுப் பந்தல் கையொலியால் அதிர்ந்தது. அண்ணாவின் அகமகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஏனெனில் ஒரு மாவட்ட மாநாட்டில் முதன் முதலாக மிச்சத் தொகை இருபதாயிர

ரூபாய் என்பது அந்த மாநாட்டில்தான்! அந்த இருபதாயிர ரூபாய் மிச்சத்துக்கே அந்த மாநாடு நடத்திய எங்களைப்பற்றி அண்ணா நீண்ட நேரம் பாராட்டிப் பேசினார். அதிகம் பாராட்டிவிட்டதாகத் திடீரெனக் கருதினாரோ என்னவோ, பாராட்டுவதுபோலவே ஒன்றைச் சொன்னார்!

தம்பீ! உன் கரம் பட்டு கலையுலகில் இன்று லட்சம் லட்சமாகப் பலர் சம்பாதிக்கிறார்கள். அதனைப் பார்க்கும்போது உன் திறமைக்கு இந்த இருபதாயிரம் சிறுதொகை தான்! இப்படி அண்ணா சொன்னது மட்டுமல்ல, தம்பியின் புன்னகைப் பொருள் புரிகிறதா? என முரசொலி மலரிலும் ஓர் எழுத்தோவியம் தீட்டினார்!

அந்த இருபதாயிரத்தையும் எண்ணிக் கொள்கிறேன்! ஆரூர் தைக்கால் திடலில் நடைபெற்ற அந்த மாநாட்டையும் எண்ணிக் கொள்கிறேன்! ஒருமாதம் மாநாட்டு செலவுக்கான நிதிக் கூட்டங்கள்! ஐநூறு, அறுநூறு, ஆயிரம் ரூபாய் என்று நிதி வழங்கும் கூட்டங்கள்! அந்தக் கூட்டங்களை முடித்துவிட்டு இரவு இரண்டு மணி மூன்று மணி அளவில் திருவாரூர் திரும்பி, நான், மன்னை, இளங்கோ, தென்னன் - மாநாட்டுப் பந்தல் அமையும் மைதானத்தைச் செப்பனிடும் பணி, பந்தலில் தோரணம் கட்டும் பணி, கொடி ஒட்டும் பணி, வீதிகளில் வரவேற்பு நேரடியாகவே ஈடுபட்டு விடிய விடிய உழைத்த நினைவுகள் - இன்றைக்கும் நெஞ்சில் நிழலாடிக் கொண்டிருக்கின்றன!

நீயும் அப்படி உழைக்க வேண்டுமென்று விரும்புகிறேன் - உழைக்கும் வயது தாண்டி, வலிமையும் குன்றிக்கொண்டிருக்கும் இந்தக் காலத்திலும் உழைப்பே என் உயிர்மூச்சாக இருக்கிறது - நீயும் உழைக்கிறாய்! ஓய்வின்றி உழைக்கிறாய்! உணர்ச்சியுடன் உழைக்கிறாய்! அதனால்தானே, இதோ அறிவாலயம் நிர்மாணித்திருக்கிறோம்! அறிவகம் புதுப்பித்திருக்கிறோம்! நாற்பது லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட கழகத்தின் ஒன்பதாவது தேர்தலை நடத்தி முடித்தது மட்டுமல்லாமல் - அன்றாடம் அமைப்புகளுடன் தொடர்புகொண்டு, கழக நிர்வாகம் நடத்தி வருகிறோம்!

சைதாப்பேட்டை தொகுதி வேட்பாளர் திருவாளர் பதினோரு லட்சம் என்று அண்ணா அறிவித்தாரே! அந்த பதினோரு லட்சம் நிதி ஏது? உன் வியர்வையல்லவா? உன் உழைப்பு அல்லவா? நீ ஆங்காங்கு சேர்த்து வைத்தாய். அதற்கு

எவ்வளவோ சிரமப்பட்டாய்! நீ சேர்த்து வைத்ததை எடுத்துச் செல்லும் உண்டியலாக நான் வந்தேன்! அன்றைய திருச்செந்தூர் உண்டியல் அல்ல, தி.மு.க. கழக உண்டியல் - யாரும் கைவைக்க முடியாத உண்டியல்! கணக்குகளுக்குத் தணிக்கைக் குழு - கழகப் பொதுக் குழுவில் வரவு செலவு விபரம் - எனக் காலம் காலமாகக் கடைப்பிடிக்கப்படும் ஒழுங்குமுறைக்கு உட்பட்டு தலைமைக்கு வந்து சேரும் உண்டியல்!

இத்தனை பீடிகையும் எதற்கு என்று இன்னும் நீ தெரிந்துகொள்ளாமலா இருப்பாய்? குறும்புக்கார உடன்பிறப்பாயிற்றே! இதோபார் குமிழ் சிரிப்பை! எத்தனையோ கொடுமைகளை வென்று நிற்கும் - எதையும் தாங்கும் இதயம் எம்முடையது என எடுத்துக்காட்டும் குளிர்ந்த சிரிப்பாயிற்றே உன் குமிழ்சிரிப்பு!

சரி! வளர்த்துவானேன்? விஷயத்துக்கு வந்து விடுகிறேன்!

நாள்தோறும் வழக்குகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது - எத்தனை வழக்குகள்! இங்குள்ள நீதிமன்றங்களில் மட்டுமல்ல! உச்ச நீதிமன்றம் வரையில் என்பதை நன்கு அறிவாய்.

அடுத்தது, இப்போதே பொதுத் தேர்தல் நிதி திரட்டியாக வேண்டும். எப்போது தேர்தல் வரும் என்பதல்ல! எப்போது வந்தாலும் தயாராக இருக்க வேண்டுமல்லவா?

அதற்கு இப்போது இதுவரை சேர்ந்துள்ள இருபத்தி ஐந்து லட்ச ரூபாய் என்பது, கடலில் கரைக்கும் பெருங்காயம் போல!

திருவாரூர் மாநாட்டில் 33 ஆண்டுகளுக்கு முன்பு எனது 35-வது வயதில் இருபதாயிர ரூபாய் என்பது பெருந்தொகை!

இன்று இருபத்தி ஐந்து லட்சத்தை கடலில் கரைத்த பெருங்காயம் என்கிறேன்!

பெருங்காயம் என்றுதானே சொல்கிறேன். இதில் உன் அன்பும், உணர்வும், ஆர்வமும், கொள்கைப் பிடிப்பும் மறையாத மணமாக இருப்பதால்!

படித்திருப்பாயே! நண்பர் ராஜாராம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில்! 1991 தேர்தலுக்காக நண்பர்கள் மூலம் 4 கோடி ரூபாயும், ராஜீவ் காந்தி மூலம் 3 கோடி ரூபாயும் ஜெயலலிதாவுக்குக் கொடுத்திருக்கிறார்! மற்றவர்கள் வாயிலாக எத்தனை கோடியோ?

ஏழு கோடி - பத்து கோடி என்றெல்லாம் நம்மால் எட்டிப்பார்க்கவே முடியாது! தேவையுமில்லை! அதற்காகத் தேர்தலுக்கான முறையான செலவினங்களைத் தட்டிக் கழிக்க முடியுமா?

எதிர் வீட்டுப் பாப்பா பட்டு சொக்காயும், வைர நெக்லசும் போட்டுக்கொண்டு மினுக்கும் போது, நம் வீட்டுப் பிள்ளைக்கு உடலை மறைக்க ஒரு சாதாரண துணியிலாவது உடை இருக்க வேண்டுமல்லவா? கழுத்துக்கு நெக்லஸ் இல்லாவிடினும், ஒரு கருகமணி மாலையாவது போட வேண்டாமா?

பளபளப்பையும், பகட்டையும் பார்த்து இனி நாடு ஏமாறப் போவதில்லை!

ஏமாறுவதற்கு விடவும் கூடாது! அந்த எச்சரிக்கை நடவடிக்கைக்காகத்தான் நான் ஏந்துகிறேன் கையை! யாரிடமும் அல்ல, உன்னிடம்! உரிமையுடைய உன்னிடம்! ஊழிக்கால வெள்ளம் போலக் கழகத்துக்குச் சோதனை வந்தபோதெல்லாம் நெஞ்சார்ந்த அன்பைப் பொழிந்தாய்! உன் ஆற்றலைக் காட்டினாய்! அடக்குமுறை ஏற்றாய்! அத்தகைய உறுதி கொண்ட உன்னிடம் கையேந்திக் கழகம் காத்திடவும், கழகம் வென்றிடவும் நிதி கேட்பதும், நீ சேர்த்து அளிப்பதும், தவறும் அல்ல - நீ தர மறுக்கப் போவதுமில்லை!

அன்புடன்,

மு. க.

08-10-1992

1961. ஏட்டுச் சர்க்கரை என்றைக்கும் இனிக்காது!

உடன்பிறப்பே,

பொருளாதார நிலைமையைச் சீரமைப்போம் - இதுவே எமது புதிய பொருளாதாரக் கொள்கையின் வெற்றிகரமான விளைவாக இருக்குமென அறிவித்த மத்திய காங்கிரஸ் அரசு, பாசி பிடித்து வழுக்குகின்ற குளத்துப் படியில் கால் வைத்தவன் எல்லாப் படிகளிலும் வழுக்கிக்கொண்டே போய் குளத்துச் சேறில் சிக்குகின்ற கதையாக, இவர்களின் புதிய பொருளாதாரக் கொள்கையால் நாட்டைப் பல வழிகளிலும் நலிவடையச் செய்து கொண்டு வருகிறார்கள்.

45 ஆண்டுகால சுதந்திர இந்தியாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழே கிடந்து துடிக்கும் பஞ்சைப் பராரிகள் முப்பது கோடிக்கு மேற்பட்டோர்! இவர்களது பொருளாதாரக் கொள்கையினால் அந்த எண்ணிக்கை மேலும் பெருகிடும் என்பதைப் பொருளாதார நிபுணர்களின் புள்ளி விபரங்கள் அறிவிப்பதைவிட அனுபவ ரீதியாகவே நன்கு காணமுடிகிறது!

வெள்ளையனே வெளியேறு என்ற முழக்கத்திற்குப் பொன்விழா கொண்டாடிவிட்டு, வெளி நாட்டோரே! வாருங்கள் வியாபாரத்திற்கு! என அழைக்கும் பரிதாபகரமான, ஆபத்தான எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய நிலையை அல்லவா இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை ஏற்படுத்தியிருக்கிறது.

சரி! வெளிநாட்டு முதலாளித்துவ திமிங்கிலங்களுக்குக் கதவுத் தாழ்ப்பாளைத் திறந்து விடுகிறோம் - அதனால் இங்குள்ள அடிமட்டத்து மக்கள், நடுத்தர வர்க்கத்தினர், தொழிலாளர் சமூகத்தினர் குறைந்தபட்சம் தற்காலிக நலன்களையாவது பெற முடிந்ததா? முடிகிறதா? முடியுமா?

உலக வங்கியின் உருட்டல் மிரட்டல் நிபந்தனைகளுக்கு அடங்குவது என தீர்மானித்து விட்ட பிறகு, மூடப்படும் ஆலைகளைப் பற்றியோ, அதனால் முடக்கப்படும் பாட்டாளி வர்க்கத்தின் வாழ்வு பற்றியோ கவலைப்பட்டு என்ன பயன்?

உலகப் பாட்டாளி மக்களே, ஒன்றுபடுங்கள் உரிமை முழக்கமிட! என்று ஒலித்துக் கொண்டிருந்த தொழிலாளர் வர்க்கம், அரசின் பொறுப்பிலிருந்த தொழில்கள், தனியாரின் கொள்ளைச் சொத்துக்களாக ஆக்கப்பட்டுவிட்ட பிறகு, இனிமேல், இந்தியப் பாட்டாளி மக்களே! எழுவீர் உரிமை முழக்கமிட! என்று ஒலிக்க முடியாத தடையன்றோ இந்த புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக அதிரடியாக விழுந்திருக்கிறது.

இவற்றையெல்லாம் தொடக்கத்திலேயே சுட்டிக்காட்டி, தி.மு. கழகம் இடம் பெற்றுள்ள தேசிய முன்னணியும், இடதுசாரிக் கட்சிகளும் எச்சரித்துக் குரல் கொடுத்தது நியாயம்தான் என்பதை நிரூபிப்பது போல இன்றைக்கு நிலவரங்கள்!

நிதிநிலைப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துவோம். பணவீக்கத்தைக் குறைப்போம். அன்னியக் கடனைத் தீர்ப்பதுடன், வளர்ச்சிக் குன்றாமல் கவனத்துடன் செயல்படுவோம் என்று மத்திய அரசின் நிதி அமைச்சர் மன்மோகன் சூளுரைத்தாரே தவிர, நடந்தது என்ன?

பணவீக்கம் குறையாதது மட்டுமல்ல, உயர்ந்துள்ளது! அன்னியக்கடன் சுமை இறங்கிய பாடில்லை! ஏறிக்கொண்டுதானிருக்கிறது! நிதிநிலைப் பற்றாக்குறையையும் நிமிர்த்திடவில்லை! இந்த உண்மைகளுக்குத் திரைபோட்டுவிட்டு, மத்திய காங்கிரஸ் அரசினர், மேலும் மேலும் தொடர்ந்து சொல்லிக்கொண்டே வந்தனர் விலைவாசியைக் குறைத்துக் கட்டுப்படுத்துவோம் என்று! செய்தார்களா? இல்லை! விவசாயப் பொருள்களில் விலையைக்கூட குறைப்பதற்குத் திட்டம் தீட்டுகிறோம். புதிய பொருளாதாரக் கொள்கை இதற்கெல்லாம் அலாவுதீன் தீபம் போல பயன்படும் என்றனர்!

அலாவுதீன் அற்புத தீபம் அர்ஷத் மேத்தாக்களின் தேவைகளையும், அவரது பிரதானியரின் தேவைகளையும் அளவுக்கு மீறி நிறைவு செய்யத்தான் பயன்பட்டதே அல்லாமல், அன்றாடங் காய்ச்சிகளுக்கோ, அன்னக்காவடிகளுக்கோ அணுவளவும் பயன்படவில்லை!

விவசாயிகளின் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை குறைக்கப்படும் என அளிக்கப்பட்ட உறுதி, தலைகீழாக மாறி, மிக முக்கியமான உரங்களின் விலை இரு மடங்காக உயர்ந்து விட்டது. டீசல் விலையும், பெட்ரோல் விலையும், சமையல் கியாஸ் விலையும், தாறுமாறாக உயர்ந்து உயரப்பறந்து கொண்டிருக்கின்றன.

கடந்த ஆண்டு 17 சதவிகிதமிருந்த மொத்த விலைக்குறியீட்டு எண், இந்த ஆண்டு செப்டம்பர் திங்களில் 7.6 சதவிகிதமாகக் குறைந்து விட்டது என்பதாக மத்திய நிதியமைச்சர் சொன்னது, வெறும் ஏட்டில் எழுதப்பட்ட சர்க்கரையே தவிர - நிலைமை அதுவல்ல! ஆம்! மொத்த விலைக் குறியீட்டெண் 17 சதவிகிதத்திலிருந்து 7.6 சதவிகிதமாகக் குறைந்தது என்றால் - விலையேற்றம் 20 சதவிகிதமாக ஆவானேன் என்று பொருளாதார நிபுணர்கள் கொண்ட ஐ.சி.ஆர். ஐ.இ.ஆர் என்ற குழுவே வினாக்குறி எழுப்பியுள்ளதே - இதற்கு மத்திய அரசு விளக்கமளிக்காமலே, விலைவாசி ஏற்றத்தினால் அவதிப்படும் மக்களே, டெல்லியில் உள்ள காங்கிரஸ் அரசின் பசப்புமொழியைத் தெளிவாகப் புரிந்து கொள்வார்களே!

சில வகையான உரங்களுக்கு அளிக்கப்பட்ட மானியம் சுமார் மூவாயிரம் கோடி ரூபாய்க்கு மேற்பட்டது, திடீரென நிறுத்தப்பட்டது மட்டுமின்றி - டன் ஒன்றுக்கு 4600 ரூபாய் என விலையும் உயர்த்தப்பட்டது, பொட்டாஷியம் உரம் ஒரு டன் 1700 ரூபாயிலிருந்து 5000 ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்துவிட்டது.

இதில் ஏதோ ஒட்டகத்தின் மீது ஏற்றிய பாரத்தை இறக்கும் தந்திரம் போல் - கொஞ்சம் இறக்குவோம் என்று சொல்கிறார்கள்.

இந்தியா, பெரும்பகுதி வேளாண்மையை நம்பியிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களையும், விவசாயத் தொழிலாளர்களையும் கொண்ட நாடு!

அவர்கள் வாழ்வில் அதிர்ச்சியூட்டுவது, மண்டபத்தின் அடித்தளத்தையே பெயர்ப்பது போன்றது என்பதை மறந்து விடக்கூடாது -

விவசாயியின் வேதனையால், அவன் வீடு மட்டும் அஸ்தமிக்கப் போவதில்லை - நாடே அஸ்தமித்து அந்தகார இருளில் ஆழ்ந்து விடும்.

அதிக விலை கொடுத்து உரம் வாங்க முடியாமல் விவசாயி, பயிர்களைப் பட்டினி போட நேரிடும்! அந்தப் பட்டினி, நாட்டையே பிடித்து பல வகையிலும் உலுக்கும்! உற்பத்தி குறைந்தால், விலைவாசி உயரும்! மேலும் மேலும் உயரும்! பின்னர் பொருள்கள் கிடைப்பது அரிதாகும்! பதுக்கல் அதிகமாகும்!

பொருளாதார நுணுக்கங்கள் - புரியாத புள்ளி விபரங்கள் - இவற்றை வேத சாத்திரங்களைப் போலக் கேட்டுக்கொண்டிருக்க, வேதனை வடிவாக நிற்கும் பஞ்சைப் பராரிகள் தயாராக இல்லை! அவர்களுக்கு தெரிந்ததெல்லாம், தங்களை நெருக்கும் வாழ்க்கைப் பிரச்சினை - வளைக்கும் வறுமைக்கோடு - உலுக்கும் விலைவாசிக் கொடுமை, இவைகளேதான்!

இந்தப் பூதாகாரமான பெரும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வராமல், திசை திருப்பும் செய்திகளில் மக்களை நீண்ட நாட்களுக்கு ஏமாற்றிக் கொண்டிருக்கலாம் என நினைத்தால், நினைப்போர் ஏமாந்துபோக நேரிடும். ஏட்டுச் சர்க்கரை என்றைக்கும் இனிக்காது என்பதை மத்திய மாநில அரசுகளுக்கு உணர்த்துகின்ற உத்வேகத்தை மக்கள் பெற்றுக்கொண்டு வருகிறார்கள்! அந்த உணர்வை ஜனநாயக முறையில் அவர்கள் வெளிப்படுத்திட முன்வரவும் தயங்க மாட்டார்கள்!

அன்புடன்,

மு. க.

09-10-1992

1962. உண்மைக் கதை ஒன்று சொல்லுகிறேன்!

உடன்பிறப்பே,

ஒரே ஒரு ஊரில் இரண்டு பேர் கடை வைத்திருந்தார்கள். இரண்டு பேரும் கெட்டிக்காரர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவு தெரிந்தவர்கள். ஆனால், இருவருமே சரியானபடி கடையை நடத்துவது கிடையாது. காரணம், எவருமே அந்த ஊரில் சிறந்த பொருளை நியாய விலையில் விற்றுப் பணக்காரர் ஆக முடியாது என்ற எண்ணம். முதலில் ஒரு கடையில் மக்கள் வாங்கிக்கொண்டிருந்தார்கள். அவர் மிக மோசமாக நடந்துகொள்ளத் தொடங்கியதும், இரண்டாவது கடையை ஆதரிக்கத் தொடங்கினார்கள். வேறு கடை ஏதும் இல்லாததால், சீக்கிரம் அவரது நடத்தையும் கெடலாயிற்று. முதலாமவர்க்கு ஏக மகிழ்ச்சி. பட்டீர்களா? ஓடி வாருங்கள் என் கடைக்கு! வேறு வழியே கிடையாது உங்களுக்கு? என்று கொக்கரித்தார். மக்கள் பெருமூச்சு விட்டார்கள். வேறு வழியில்லாததால் வருகிறோம். நீதான் - துளியேனும் திருந்தக் கூடாதா? பொருளின் தரத்தைக் கொஞ்சமாவது உயர்த்த முயற்சி செய்யக் கூடாதா? என்று கையை பிசைந்தார்கள். பாவம், அவர்கள் வேறு என்னதான் செய்வார்கள்?

இப்படியொரு அரைப்பக்கக் கதை குமுதம் இதழில் தலையங்கமாகத் தீட்டப்பட்டுள்ளது. நடந்த கதையை - நடக்கும் கதையை, குமுதம் ஆசிரியர் தன் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றி எழுதியுள்ளார். வெறும் கற்பனைக் கதையென்றால், அவரவர்கள் இஷ்டத்துக்கு மாற்றி எழுதலாம். வரலாற்றுக் கதைகளில் கூட கற்பனையைக் கலக்கலாமே தவிர, அடிப்படையைத் தலைகீழாக மாற்றிவிடக்கூடாது! ஆனால், குமுதம் தலையங்கக்காரர் வரலாற்றையே மாற்றி ஒரு கதையாக வடித்திருக்கிறார்.

அடிப்படை மாறாமல் அந்தக் கதை எப்படி இருந்திருக்க வேண்டும் தெரியுமா?

ஒரு ஊரில் மூன்றெழுத்துப் பெயரிட்டு ஒரு மருந்துக்கடை! நோயாளிகளுக்கு மருந்து சீட்டு எழுதிக் கொடுக்கும் டாக்டர்கள் அந்தக் கடைக்குத்தான் எழுதிக் கொடுப்பார்கள். வேறு ஊர்களில், சில மருந்துக் கடைகளில், கலப்பட மருந்துகளை விற்று நோயாளிகளுக்கு மேலும் வேதனை ஏற்படுத்துவதுபோல் அல்லாமல், மூன்றெழுத்து மருந்துக்கடையில் தரமான மருந்துகளையே விற்று வந்தனர். வெளியூர்க்காரர்கள் கூட இந்த மூன்றெழுத்து மருந்துக் கடையை நாடி வந்துதான் மருந்துகளை வாங்கிச் செல்வது வழக்கம். மூன்றெழுத்து மருந்துக் கடைக்கு முன்பு இருந்த அந்த ஊர் மருந்துக் கடைக்காரர் மற்றொருவர், இந்தக் கடை வந்தபிறகு தன் கடையை மூடிவிட்டார். அதனால் அவருக்கு இந்த மூன்றெழுத்துக் கடையின்மீது ஒரே கோபம். இதை எப்படியாவது கெடுக்க வேண்டுமென்று எண்ணி மூன்றெழுத்துக் கடையில் வேலை பார்த்த ஒரு பணியாளரைத் தந்திரமாக ஏமாற்றி, நிறைய ஆதரவும் கொடுத்து ஒரு போட்டி மருந்துக்கடை வைக்கச் சொன்னார். அவரும் இணங்கி, மூன்றெழுத்துக் கடையை விட்டு வலிய வெளியே வந்து, நாலெழுத்துப் பெயரில் ஒரு மருந்துக் கடை தொடங்கினார். தந்திரமாக அவர் ஒரு வேலை செய்தார். தனது கடையில் உள்ள மருந்து பாட்டில்களின்மீது, மூன்றெழுத்து மருந்துக் கடையின் லேபிளை ஒட்டிக் கொண்டு வியாபாரம் செய்தார். லேபிள் மட்டும்தான், மூன்றெழுத்துக் கடையை போன்றது - ஆனால் உள்ளேயிருக்கும் மருந்து போலியானது என்பதை உணராத ஊர்மக்கள், புதுக்கடை யென்கிற மவுசில் அந்தக் கடைக்கு அதிகம் போக ஆரம்பித்தார்கள்.

ஏற்கெனவே மருந்துக் கடையை மூடிய பழைய முதலாளியும், புதுக்கடைக்காரரும் சேர்ந்து, மூன்றெழுத்து மருந்துக் கடையைப் பற்றி ஊரில் வதந்திகளைப் பரப்பினர். மூன்றெழுத்துக் கடையில் விற்பது, மருந்தே அல்ல - முற்றிலும் விஷம் என்று பொய்களை உலவவிட்டனர். அந்தப் பொய்ப் பிரச்சாரத்தையும் தாங்கிக் கொண்டு மூன்றெழுத்து மருந்துக்கடை தாக்குப் பிடித்தது.

புதிய மருந்துக்கடைக்காரர் காலமாகி விடவே, அவருக்கு நான்தான் வாரிசு என்று கூறிக் கொண்டு, ஏற்கெனவே மூடிய மருந்துக்கடை முதலாளியின் துணையுடன் அந்தக் கடையை ஒருவர் ஆக்ரமித்துக் கொண்டார். நாலெழுத்துக் கடைதான் இந்த நாட்டிலேயே உயர்ந்தது என்று பலத்த பிரச்சாரம் செய்ய பணம் கொடுத்து ஆட்கள் பிடிக்கப்பட்டார்கள்.

மூன்றெழுத்துக் கடையை அந்த ஆட்கள் ஒரு நாள் சூழ்ந்துகொண்டு தீ வைத்துக் கொளுத்தினர். ஆனால் அந்தக் கடையின் சிப்பந்திகள் விசுவாசமான பணியாளர்கள் என்பதால், தீயின் சேதம் அதிகமாகாமல் கடையையும், மருந்துகளையும் காப்பாற்றினர்.

ஒரு நாள் மூன்றெழுத்து மருந்துக் கடையிருக்கும் தெருவின் மூலையில் ஒருவர் நடந்து போனபோது மாரடைப்பால் சுருண்டு விழுந்து இறந்துவிட்டார்.

உடனே போட்டிக் கடைக்காரர், ஒரு விஷமப் பிரச்சாரம் செய்யத் தொடங்கிவிட்டார். மூன்றெழுத்து மருந்துக்கடையில் மருந்து சாப்பிட்டுத்தான் அந்த மனிதர் இறந்துவிட்டார் என்று! இந்தப் பிரச்சாரத்துக்கு, ஏற்கெனவே கடையை மூடிவிட்ட பழைய முதலாளியும் துணையாக தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தார்.

அதில் ஏமாந்து போய், போட்டி மருந்துக் கடைக்கு மக்கள் பெரும்பான்மையோர் போகத் தொடங்கினர். மூன்றெழுத்துக் கடை அப்போதும் முடங்கிப் போகாமல், நல்ல மருந்துகளை நாணயமாக மக்களுக்கு வழங்கியது. பெரும்பான்மையான மக்கள் இங்குதான் வருகிறார்கள். இன்னும் அவர்களைக் கவர எல்.எஸ்.டி. போன்ற போதை மருந்துகளும் விற்போம் என்று நான்கெழுத்துக் கடைக்காரர் திட்டமிட்டார். அப்படியே விற்கவும் ஆரம்பித்து விட்டார்.

மூன்றெழுத்துக் கடையிலிருந்து, பழைய பணியாளராவது லேபிளை எடுத்து போலி மருந்து பாட்டில்கள் மீது ஒட்டினார் - அவரது வாரிசு எனக்

கூறிக்கொண்ட கடைக்காரரோ, அந்த லேபிளை போதை மருந்துகள் மீதே ஒட்டி விற்க முன்வந்து விட்டார்.

மருந்துக்கடை, இப்போது விருந்துக் கடை ஆகிவிட்டது! போதை மருந்தே ஒரு விருந்துதானே! அதனால் கூத்து, கும்மாளம், கேளிக்கை! எனவே அது விருந்துக் கடை ஆகிவிட்டது!

இப்போது உண்மையாகவே மருந்து வேண்டும் மக்கள், மூன்றெழுத்துக் கடையின் தரத்தை உணர்ந்து, தங்கள் தவறையும் உணர்ந்து, இந்தக் கடைக்கே வந்து மருந்துகளை வாங்கி - தங்களின் நோய் போக்கிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் பெருமளவு வரத் தலைபட்டு விட்டார்கள்.

உடன்பிறப்பே! இதுதான் இப்போது நாட்டு நடப்பில் உள்ள கதை! உண்மைக் கதையும் கூட!

அன்புடன்,

மு. க.

11-10-1992

1963. மதகடி மனிதனும் மாண்புமிகு மந்திரியும்!

உடன்பிறப்பே,

மூன்று நான்கு சாலைகள் சந்திக்கும் இடம் ஒன்றில், வழிகாட்டும் கைகாட்டி மரம் ஒன்று வெள்ளத்திலும், புயலிலும் மோதுண்டு சாய்ந்து நின்றது. புயலுக்குப் பின் அமைதி ஏற்பட்ட சூழலிலும் அந்தக் கைகாட்டி மரத்தை ஒழுங்காக நிமிர்த்தி வைத்துப் பயணிகளுக்குப் பயன்படும் வண்ணம் செய்யும் பணி தொடங்கப்படாத நிலையில், சாலையின் ஓரத்தில் உள்ள மதகு ஒன்றில் தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு ஒருவன் கையில் ஒரு பையுடன் உட்கார்ந்திருந்தான். அந்தப் பைக்குள்ளே கைவிட்டு அதில் உள்ள கொட்டைப் பாக்குகளை அள்ளி அள்ளிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது ஒரு வழிப்போக்கன் நீண்டதூரம் நடந்த களைப்புடன் அங்கு வந்தான். அண்ணாந்து கைகாட்டி மரத்தை பார்த்தான். அது அறவே கீழே விழாவிட்டாலும், வளைந்து சாய்ந்து வழி காட்ட முடியாத அளவிலே இருந்தது. வழிப்போக்கனின் கண்ணில் மதகின் மீது அமர்ந்திருந்தவன் படவே, அவனிடம் சென்று அய்யா! பட்டுக்கோட்டைக்கு வழி எது? என்று கேட்டான்.

மதகின் மீது உட்கார்ந்திருந்தவன், சுற்று முற்றும் பார்த்துவிட்டு பரக்கப் பரக்க விழித்தவாறு என்ன? என்று சாவதானமாகக் கேட்டான்.

வழிப்போக்கன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு உரத்த குரலில், பட்டுக்கோட்டைக்கு வழி எது? என்று அலறினான்!

மதகடி ஆசாமி நிதானமாகத் தன் கையிலிருந்த பையில் கைவிட்டவாறு ஓ! கொட்டைப்பாக்கு விலை என்னான்னு கேக்குறியா? இது விக்கிறது இல்லை! என்று பதில் அளித்தான்.

வழிபோக்கன் தலையில் அடித்துக்கொண்டு, சரியான செவிடு என முணுமுணுத்துக்கொண்டே - உம்! சரி - நம்ப வேறு யாரையாவது விசாரிப்போம்! என்று எண்ணியவாறு அந்த இடத்தைவிட்டு அகன்றான்.

வழிப்போக்கன் போனபிறகு, மதகடி மனிதன் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

பாவம்! இந்தப் பாதசாரி என்னைச் செவிடு என்று நினைத்துக்கொண்டு போகிறான். எனக்கும் பட்டுக்கோட்டைக்கு வழி தெரியாமல்தான் இங்கு உட்கார்ந்திருக்கிறேன். வழிப்போக்கனுக்கு நான் ஒரு வழியை சொல்லப்போய் - அது தவறான வழியாக இருந்து, அவன் என்னைத் திட்டிக் கொண்டே சபிப்பதைவிட, செவிடாக நடித்துவிட்டதினால் அவனுக்கும் நம்மால் தொல்லையில்லை. நமக்கும் மனச்சங்கடமில்லை!

இப்படி மனதோடு பேசிக்கொண்டே, மதகடி மனிதன் கொட்டைப்பாக்குப் பையைத் தலையில் வைத்துக் கொண்டு படுக்க முயன்று, கொட்டைப் பாக்கு முழுதும் கீழே கொட்டி விடவே, அவற்றை ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்துப் பையில் போட்டுக் கொண்டிருந்தான்.

உடன்பிறப்பே, பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப் பாக்குக்கு விலை சொல்வது போல! என்ற பழமொழிக்கு இப்படி ஒரு கதையைக் கற்பனை செய்துள்ளேன் அவ்வளவுதான்!

ஏன் இந்தக் கதை இப்போது? என்று கேட்கத் தோன்றும்!

மதுரை மாநகரத்தில் தமிழக வருவாய்த் துறை அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களை பத்திரிகை நிருபர்கள் சந்தித்து சில வினாக்களை எழுப்பியுள்ளனர். அதற்கு அவர் அளித்துள்ள விடைகளைக் கண்டபோதுதான் பட்டுக்கோட்டைக்கு வழி என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. அவரும் பட்டுக்கோட்டைக்காரர் அல்லவா?

ஏற்கெனவே முதலமைச்சர் ஜெயலலிதா பங்குதாரராக உள்ள ஜெயா பப்ளிகேஷன்ஸ் என்ற நிறுவனம் அரசுக்கு சொந்தமான டான்சி நிலத்தை வாங்கியதானது, அமைச்சர்கள் அரசு நிலத்தை வாங்கக் கூடாது என்ற அமைச்சர்களுக்கான நெறிமுறை

விதி 2 B. பிரிவை அப்பட்டமாக மீறிய செயலாகும் என்று ஆளுநரிடம் தி.மு.க. அளித்த குற்றச் சாட்டுப் பட்டியலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல! ஜெயலலிதா முதல்வர் என்ற முறையில், இந்திய தண்டனைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் கீழ் குற்றம் செய்துள்ளார். அந்தச் சட்டம் என்னவென்றால், அரசு அலுவலரும், சட்டப்படி அரசு அலுவலராகப் பணி செய்யக் கடமைப்பட்டவரும் தனது பெயரிலோ. அல்லது அவர் மற்றவருடன் சேர்ந்தோ அல்லது பங்கு சேர்ந்தோ, குறிப்பிட்ட சில சொத்துக்களை வாங்கவோ, ஏலத்தில் எடுக்கவோ கூடாது. வாங்கினால் அல்லது ஏலம் எடுத்தால் அவர்களுக்கு இரண்டு ஆண்டு தண்டனையும், அபராதமும் விதிக்கலாம். அந்த சொத்தும் பறிமுதல் செய்யப்படும் என்பதுதான் அந்த சட்டமாகும்.

ஜெயலலிதா முதலமைச்சர் என்ற நிலையில் அரசு அலுவலராகப் பணி செய்யக் கடமைப்பட்டவர் என்பது சட்டம் - அவரே இந்தச் சட்டத்தை மீறி முறைகேடாக அரசு நிலத்தை வாங்கியுள்ளார் என்பதே குற்றச்சாட்டு!

ஜெயா பப்ளிகேஷனில் ஜெயலலிதா ஒரு பங்குதாரர் என்பதை ஏற்கெனவே வருவாய்த்துறை அமைச்சர் ஓர் அறிக்கை மூலம் தெரிவித்து, அது அவர்களது கட்சிப் பத்திரிகையிலும், ஏனைய பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளது. மதுரை அ.தி.மு.க. மாநாட்டில் ஜெயலலிதாவே ஜெயா பப்ளிகேஷனில், தான் பங்குதாரர் என்பதை ஒப்புக்கொண்டு உரை நிகழ்த்தி அதுவும் எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளது.

சுமார் 4 கோடி ரூபாய் அரசின் சொத்து, சுமார் 2 கோடிக்கு வாங்கப்பட்டது மட்டுமல்ல. அதற்காக முறையாக செலுத்த வேண்டிய முத்திரைத்தாள் கட்டணமும் செலுத்தப்படவில்லை. இவை இந்திய தண்டனைச் சட்டவிதிகள் 169, 409, 420, 120பி ஆகியவற்றின் கீழும், 1988ஆம் ஆண்டின் லஞ்ச தடுப்புச் சட்டம் 131 சி 2 ஆகிய விதிகளின் கீழும் குற்றங்களாகும் என்று ஆளுநருக்கு அளித்த குற்றச்சாட்டுப் பட்டியலில் தி.மு.க. சுட்டிக்காட்டியுள்ளது.

இப்போது எனாமல்டு ஒயர்ஸ் என்ற அரசு தொழிற்சாலையும் ஒன்றரை கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து 75 லட்ச ரூபாய்க்கு முறைகேடாக வாங்கப்பட்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளதே?

என்று மதுரை நிருபர்கள் மாண்புமிகு அமைச்சர் சோமசுந்தரத்தைக் கேட்டிருக்கிறார்கள்.

இது தி.மு.க. கொடுத்துள்ள குற்றச்சாட்டுப் பட்டியலில் இடம் பெறாததும், குற்றச் சாட்டுப் பட்டியல் கொடுத்தபிறகு இப்போது வெளிவந்துள்ள புதிய குற்றச்சாட்டும் ஆகும்.

இதற்கு அமைச்சர் என்ன பதில் சொல்லி இருக்கிறார்?

பட்டுக்கோட்டைக்கு வழி எனக்கே தெரியவில்லை! அதனால்தான் கொட்டைப் பாக்கு விலை பற்றிப் பதில் சொல்லி வழிப்போக்கனை அனுப்பினேன் என்று தனக்குத்தானே தன் மனதுக்கு சமாதானம் தேடிக்கொண்ட, மதகடி மனிதரைப் போல மாண்புமிகு அமைச்சரும்-

எத்தனையோ பத்திரப் பதிவுகள் நடக்கின்றன. எல்லாப் பத்திரப் பதிவும் என் கவனத்துக்கு வருவது கிடையாது

என்று பதில் கூறியுள்ளார். முதலமைச்சரையும் அவரது தோழியையும் தொடர்புபடுத்தி எனாமல்டு ஒயர்ஸ் என்ற அரசு தொழிற்சாலை வாங்கப்பட்டதில் பத்திரப்பதிவு என்றால் - அது பற்றிய செய்திகள் பரபரப்பாக ஏடுகளில் வெளி வருகிறது என்றால், சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர் அதுபற்றி விசாரித்து அறிந்திருக்க வேண்டாமா?

"முறைகேடுகள் எதுவும் நடக்கவில்லை" என்று திட்டவட்டமாகக் கூறுகிறார்.

"எல்லா பத்திரப்பதிவும் என் கவனத்துக்கு வருவதில்லை" என்று முதலில் கூறுகிறார்.

"கவனத்திற்கு வராதபோது இதில் முறைகேடு நடந்ததா இல்லையா என்பது எப்படித் தெரிந்தது?

பின்னர் எந்த நம்பிக்கையில் முறைகேடு நடக்கவில்லை என்கிறார்?

இறுதியாகச் சொல்லும் போது, தவறு நடக்காது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது! என்கிறார்.

இந்த நம்பிக்கையை அமைச்சர் எவ்வாறு பெற்றார்?

வருவாய்த் துறைக்கும் தொடர்புடையதுதானே, டான்சி நிலம் - ஜெயா பப்ளிகேஷன்ஸ் வாங்கியது!

அது முறைகேடு இல்லை என்கிறாரா? - அதனால் எதுவுமே அந்த வகையில் பார்த்தால் முறைகேடே அல்ல என்று சாதிக்கிறாரா? அல்லது அந்த மதகடி மனிதனைப் போல சமாளிக்கிறாரா?

உண்மையிலேயே செவிடு என்றால் சரி! செவிடு போல் நடிப்பது, மதகடி மனிதனுக்கு உகந்ததாக இருக்கலாம் - மாண்புமிகு மந்திரியாரின் மனச்சாட்சிக்கு உகந்ததாக இருக்க முடியுமா?

உடன்பிறப்பே, முழுத்தமிழகத்தையும் கொள்ளையடித்து, விழுங்கிவிட்டு, இதில் கூறுவதற்கு முன்பு தமிழக மக்களை விழிப்பு கொள்ளச் செய்வது ஒன்றுகூடி நீ நடத்தும் ஓயாப்பணியில்தான் இருக்கிறது! இல்லையேல் ஊழல்படுகுழியில் வீழ்ந்து எழ முடியாமல் இந்தத் தமிழ்நிலம் உருத்தெரியாமல் போய்விடும்! எச்சரிக்கை!

அன்புடன்,

மு. க.

13-10-1992

1964. காதிலே பூ சுற்றுகிறது, கட் அவுட் ஆட்சி!

உடன்பிறப்பே,

டான்சி நிலம், அரசுக்குச் சொந்தமானது. அதை முறைகேடாகவும், சட்டத்தை மீறியும் முதலமைச்சர் பங்குதாரராக இருக்கும் ஜெயா பப்ளிகேஷன்ஸ் வாங்கியது.

நாலு கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம் சுமார் இரண்டு கோடி ரூபாய்க்கும் குறைவாக வாங்கப்பட்டுள்ளது என்பது ஒரு குற்றச்சாட்டு.

அரசு நிலத்தை அமைச்சர்கள் வாங்கக்கூடாது என்ற சட்டத்தை மீறி வாங்கியிருப்பதாக மற்றொரு குற்றச்சாட்டு.

முத்திரைத்தாள் கட்டணத்திலும் மோசடி நடைபெற்றுள்ளது என்பது இன்னொரு குற்றச்சாட்டு.

எனவே அந்தப் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் நகல் பிரதியை பதிவாளர் அலுவலகத்தில் கேட்டோம்.

தர இயலாது என பதில் தரப்பட்டது.

“இந்த நாட்டின் எந்தவொரு குடிமகனுக்கும் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் நகல் பிரதியைப் பெற்று விபரங்களை அறிந்திட உரிமை உண்டு. அது மறுக்கப்படவே கூடாது. எனினும் மறுக்கப்பட்டது.”

வேறு வழியின்றி பத்திர நகலைக் கேட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தமிழக அரசு சார்பில் அதற்கு ஒரு பதில் மனு, நீதிமன்றத்தில் நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த பதிலில் இதோ ஒரு பகுதி :-

“டான்சி நில விற்பனையில் கட்டிட மதிப்பு, நில மதிப்பு, மற்றும் முத்திரை கட்டணம் ஆகியவை - குறைத்து மதிப்பிடப் பட்டுள்ளதா? என்பதைப் பரிசீலிக்குமாறு ஜூன் 2-ம் தேதி வேலூர் மண்டல பொதுப்பணித்துறை உதவி செயல் இயக்குநருக்கு மனு அனுப்பினோம். அந்த மனுவுக்கு அவரிடமிருந்து பதில் வரவில்லை. அதற்குள் பத்திரப் பதிவு நகலைத் தர இயலாது.”

இதுதான் அரசு சார்பில் பதிவுத் துறை ஐ.ஜி. அவர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பதிலாகும்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? பத்திரப் பதிவு முடிந்த பிறகுதான் டான்சி நிலத்தின் மதிப்பு, கட்டிடத்தின் மதிப்பு இவைகளைப் பற்றியெல்லாம் பரிசீலனையே செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்! ஏன் என்று புரிகிறதா?

ஊழல் அம்பலமாகி விட்ட பிறகு, நெருப்புக் கோழி தன் தலையை மட்டும் பொந்துக்குள் வைத்து மறைத்துக்கொள்ள நினைக்குமாமே, அதுபோல!

வழக்கறிஞர் ஆலந்தூர் பாரதி கேட்டது, வேலூர் மண்டல பொதுப்பணித்துறை உதவி செயல் இயக்குநருக்கு பரிசீலனை செய்யுமாறு கேட்டு அனுப்பவுள்ள மனுவின் நகல் பிரதியை அல்ல!

அவர் கேட்டிருப்பது 29.5.92 அதாவது இந்த ஆண்டு மே திங்கள் 29-ந் தேதி டான்சி நிலத்தை ஜெயலலிதாவின் ஜெயா பப்ளிகேஷன் வாங்கியதற்கு பதிவு செய்யப்பட்டுள்ள பத்திரத்தின் நகலைத்தான் கேட்டிருக்கிறார்.

அதைக் கொடுப்பதற்கும், நில மதிப்பு மற்றும் கட்டிட மதிப்புகளைப் பற்றி பரிசீலனை செய்வதற்கும் சம்பந்தம் என்ன?

29.5.92-ல் அந்தப் பத்திரம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதன் நகல் பத்திரத்தைத் தருவதற்கு எதற்காக தயக்கம்?

முத்திரைத்தாள் கட்டண விவகாரத்தைத் தனியாக கவனிப்போம்! அன்றைக்கு பத்திரப் பதிவின் போது அந்தப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட சொத்து எது? குறிப்பிடப்பட்ட விலை எவ்வளவு? யார், யாருக்கு விற்றார்கள்? இந்த விபரம் அந்தப் பத்திரத்தில் இருக்கிறதா, இல்லையா? அதை பதிவு

அலுவலகத்திலிருந்து பெறுவதற்கு ஒரு சாதாரண பிரஜைக்கும் உரிமை உண்டா? இல்லையா?

உடன்பிறப்பே, எப்படிக் காதிலே பூ சுற்றுகிறார்கள் பார்த்தாயா?

ஜூன் மாதம் 2ஆம் தேதி பரிசீலனைக்கு அனுப்பினார்கள்.

* ஜூன்
* ஜூலை
* ஆகஸ்டு
* செப்டம்பர்
* அக்டோபர்

இந்த ஐந்து மாதமாக அக்டோபரில் இரண்டு வாரம் கடந்தும்கூட, அதிகாரியிடமிருந்து பரிசீலனை குறித்து பதில் வரவில்லையாம்!

அந்த அதிகாரி யார்? ஜனாதிபதி மாளிகையில் இருக்கிறாரா? அப்படியே இருந்தாலும் இந்நேரம் பதில் வந்திருக்குமே!

வேலூர் மண்டல பொதுப்பணித்துறைச் செயல் பொறியாளரிடம்தான் கேட்கப்பட்டுள்ளது.

வேலூர் என்ன, சென்னையிலிருந்து இருபதாயிரம் கல் தொலைவிலா இருக்கிறது?

அப்படியே இருந்தாலும், இன்றுள்ள விமான சர்வீஸ் வேகத்தில் எப்போதே பதில் கிடைத்திருக்குமே!

அருகில் உள்ள வேலூரில் உள்ள ஓர் அதிகாரி, ஐந்து மாதமாக பதில் அனுப்பவில்லை!

முதலமைச்சர் பங்குதாரராக உள்ள ஒரு நிறுவனம் - அரசுத்துறையின் டான்சி நிறுவனம், இவைகளுக்குள் நடந்த இந்த விற்பனை விவகாரத்துக்கு அதிகாரி, ஐந்து மாதமாக பதில் அனுப்பாமல் இருக்கிறார் என்பது சாதாரண விஷயமா?

நமது கழக சட்டத்துறைச் செயலாளர் என்.வி.என். சோமுவின் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதுபோல, காலந்தாழ்த்தும்

தந்திரத்தின் மூலம் ஊழலை மறைக்க மற்றொரு ஊழல் என்ற நிலையெடுக்கும் ஜெயலலிதா சூழ்ச்சிக்கு இன்னமும் அதிகாரிகள் துணை போவார்களேயானால், கடுமையான சட்டங்களின் முன்னால் நிற்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலைக்கு ஆளாவார்கள்!

எனவே அதிகாரிகள் நேரான வழியில், நாணயமான பாதையில் - கண்டிப்புடன் கடமையை ஆற்றிடுவார்கள் என நம்புகிறேன்.

காதிலே பூ சுற்றப்பார்க்கும் கட்அவுட் ஆட்சியை நம்பி, நடுக்கடலில் புயலில் சிக்கிய ஓட்டைப்படகாக ஆகிவிடாமல் இருக்குமாறு தொடர்புடையவர்களை எச்சரிப்பது எனது கடமை!

அன்புடன்,

மு. க.

14-10-1992

1965. பா.ஜ.க; ஒரு முன்னாள் பிரதமரிடம் காட்டிய பண்பாடு!

உடன்பிறப்பே,

பாரதீய ஜனதா கட்சி, இந்தப் பாரதம் முழுவதையும் கட்டியாளத் துடிக்கிறது. வடக்கே இரண்டொரு மாநிலங்களில் அக்கட்சியின் ஆட்சி நடைபெறுகிறது. நாடாளுமன்றத்தில் ஓரளவு கணிசமான எண்ணிக்கை உறுப்பினர்கள் அந்தக் கட்சிக்கு இருக்கிறார்கள்.

நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து வடக்கேயுள்ள காங்கிரஸ் பெருந்தலைவர்கள், அமைச்சர்கள், ஏன் - சில ஜனாதிபதிகள் கூட, மதச்சார்பற்ற தன்மை என்ற கொள்கையை வலியுறுத்தி மேடைகளிலே முழங்கி விட்டு, முக்கியமான விழாச் செய்திகளிலே அறிவித்துவிட்டு - அதற்கேற்ப அவர்களே நடந்துகாட்ட முன்வராத காரணத்தால், அந்த பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு சிறுபான்மையினரான இஸ்லாமியர்களையும், கிறிஸ்தவர்களையும் எதிர்ப்பதின் மூலம், இந்து மதத்தைக் கட்டிக் காப்பதாக வேஷம் போட்டுக் கொண்டு பாரதீய ஜனதா கட்சி, அரசியல் ஆதாயம் தேடுகிற முயற்சிக்கு ஒரு பகுதி மக்கள் ஆதரவு காட்டியதின் விளைவே, இன்று அந்தக் கட்சிக்கு ஆட்சி மன்றத்தில் கிடைத்திருக்கும் வாய்ப்புகளும் இடங்களுமாகும்.

பாரதீய ஜனதாவும் அதன் ஆதரவு அமைப்புகளான விசுவ இந்து பரிட்சத், இந்து முன்னணி ஆகிய இயக்கங்களும், ஏதோ விளையாட்டுத்தனமாக அயோத்தி கோயில் என்றும் - அதற்காக ரதயாத்திரை என்றும், காஷ்மீரில் கொடி ஏற்றுகிறேன் என்றும், பாதுகை ரத பவனிகள் என்றும் கூறுவது, எத்துணை விஷமத்தனமானது - எத்தகைய விபரீதத்தில் போய் முடியக் கூடியது என்பன பற்றியெல்லாம் எண்ணிப் பார்க்காத மக்கள், மதவெறிக் கூச்சலால் ஈர்க்கப்பட்டு, மயங்கி, பெரும்பாலும்

வடக்குப் பகுதியில் அந்த இயக்கங்களுக்கு ஒரு செல்வாக்கு ஏற்படுத்திக் கொடுத்து விட்டனர்.

தென்னகத்தில் குறிப்பாகவும், சிறப்பாகவும் தமிழகத்தில் இதுவரையில் வேரூன்றி நிற்க முடியாமல், நிற்பதற்கு இடமில்லாமல் தவித்துக் கொண்டிருந்த அந்த மதவெறி நிறுவனங்கள், அமைப்புகள் - திராவிட இயக்கத்தால் பதப்படுத்தப்பட்டுள்ள இந்து மண்ணை மிதிப்பது என்பது தீயை மிதிப்பது போன்றது எனத் திகில் கொண்டிருந்த நிலையைச் சிறிது சிறிதாக மாற்றுவதற்கு இங்குள்ள ஜெயலலிதா ஆட்சியை மிகச் சாதுர்யமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கியுள்ளன. அதனால்தான் இந்தியாவிலேயே மிகச் சிறந்த முதலமைச்சராகத் திகழ்பவர் ஜெயலலிதாதான் என்றும், அவரது பதவிக்கு ஆபத்து என்றால், அதனைப் பாரதீய ஜனதா கட்சியும், விசுவ இந்து பரிட்சத்தும் வேடிக்கை பார்க்காது என்றும் அந்த அமைப்புகளின் முக்கிய தலைவர்கள் அறிக்கைகள் விடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஜெயலலிதாவுக்கு ஒரு நம்பிக்கை! எதிர்காலத்தில் மத்திய அரசு பாரதீய ஜனதாவின் கைக்கே வந்து விடும் - அப்படி வருவதற்கான மறைமுக ஆதரவை இப்போதே வழங்கி வருவதோடு, விசுவ இந்து பரிட்சத் உணர்வுகள் வருங்காலத் தமிழகத்தை ஆக்ரமிப்பதற்கும் வழியேற்படும் எனத் திட்டம் வகுத்துக் கொண்டு, அந்தப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்.

ஜெயலலிதா எதிர்பார்ப்பது போல பாரதீய ஜனதா ஆட்சி டெல்லியில் அமைந்து விட்டாலோ, இங்கு பெரியார், அண்ணா பெயரைச் சொல்லிக் கொண்டே அந்த டெல்லி ஆட்சியின் மேலாளராக, அந்தக் கட்சியின் உறுப்பினர் சீட்டு இல்லாத அங்கத்தினராக ஜெயலலிதா வெளிப்படையாக இயங்க முன்வந்து விட்டாலோ இங்கும் அயோத்திப் பிரச்சினைகளைப் போல பல விவகாரங்களை எழுப்பலாம், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை காலில் போட்டு மிதிக்கலாம் என மதவெறியர்கள் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள்.

டெல்லியில் இராவணன் உருவத்தை எரிக்கிறார்கள் என்பதை எதிர்த்து இங்கே இராமன் உருவத்தை எரிப்போம் என்று

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தளபதி வீரமணி அவர்கள் சொன்னால் அதைத் தடுக்குமாறு ஆட்சியாளருக்கு கூறுவதை விடுத்து அல்லது திராவிடர் கழகத்துக்கு எதிராக போராடுவதை விடுத்து, நாங்கள் குர்ஆன், பைபிள் ஆகிய நூல்களைக் கொளுத்துவோம் என்று இங்குள்ள விசுவ இந்து பரிட்சத் அறிக்கை விடுகிறதென்றால் என்ன பொருள்? தேவையில்லாமல் கிறிஸ்துவர்களிடமும், முஸ்லீம்களிடமும் மோதுவதற்குத்தானே இந்தத் திட்டம்?

எனவே திராவிட இயக்கத்தின் தாக்கம் மிகுந்த இந்த மண்ணில், மதவெறிக் கொள்கையாளர்கள் அவர்கள் எதிர்பார்க்கிற வெற்றியைப் பெறுவார்களா? என்று கேள்வி எழுப்புவதோடு நின்று விடக்கூடாது! அந்த வெறித்தன விஷமங்களுக்கு விதையூன்றப்படும் கால கட்டத்திலேயே, அதனைத் தடுத்து விரட்டிட வேண்டும்.

இப்போதே உத்திரபிரதேசத்தில் அவர்கள் ஆட்சியிலிருந்து கொண்டு ஆடுகிற ஆட்டம் சகிக்க முடியாததாக இருக்கிறது. மேலும் மேலும் வளர்ந்து பரவினால், இந்தியாவில் எத்தனை அயோத்திகளோ? எத்தனை அமளிகளோ? பல மதத்தினரும் சகோதர உணர்வுடன் வாழுகிற நிலை மாற்றி சச்சரவுக்களமாக நாட்டை ஆக்குவதால் நாட்டின் வளம் மட்டுமல்ல! பலமும் குறைந்துவிடும்!

மாநிலத்தில் ஆட்சி நடத்தும் பா.ஜ.க.வினர், மதவெறியர்களாக மட்டுமன்றி? மனித நேயமற்றவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுதான், உத்திரபிரதேசத்தில் விவசாயிகளுக்காகக் குரல் கொடுக்கச் சென்ற முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களை, அந்த மாநிலத்தின் பாரதீய ஜனதா அரசு நடத்தியுள்ள விதமாகும்.

விவசாயிகளின் போராட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற வி.பி. சிங் அவர்களைக் கைது செய்து, அவருக்குக் கழுத்துவலி அதிகமாக இருக்கிறது என்பது அறிவிக்கப்பட்ட பிறகும் - ரெயிலில் அவரை ஏற்றிச் செல்ல வேண்டுமென்ற கோரிக்கையும் மறுத்து - போலீசார் தமது காரிலேயே ஏற்றிக்கொண்டு இருபத்தி இரண்டு மணி நேரம் கார் பயணத்துக்குப் பிறகு, அவரை தேரியா என்னுமிடத்திலுள்ள சிறையில் அடைத்துள்ளனர்.

இக்கடிதம் நான் எழுதிக்கொண்டிருக்கும் போது ஒருவேளை அவர் விடுதலை பெற்றிருக்கக் கூடும்-

இருப்பினும் ஒரு முன்னாள் பிரதமரை, உ.பி.யின் பாரதீய ஜனதா அரசு கைது செய்ததுடன் மறுநாள் விடுவிக்காமல் - பல மணி நேரப் பயணத்துக்குப் பிறகு, சிறையிலும் அடைத்து - அவரைப் பழிவாங்கும் நோக்குடன் சிறையில் 'சி' வகுப்பில் வைத்துக் கொடுமைப்படுத்தியும் இருக்கிறது. கிரிமினல் கைதிகளுடன் இணைத்து அவர் அடைக்கப்பட்டிருக்கிறார் என்றும், அடைபட்டுள்ள இடத்தில் மின்சாரத் தாக்குதலுக்கு ஆளானார் என்றும் தகவல்கள் கூறுகின்றன!

அயோத்திப் பிரச்சினையில் வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது அவர் காட்டிய கண்டிப்புக்கும், மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முன்வந்தமைக்கும் - இதுதான் பழிவாங்கித் தண்டிக்கச் சரியான சந்தர்ப்பம் என்று பாரதீய ஜனதா கருதிவிட்டது போலும்!

அயோத்தி சென்றிடுவேன் என்று ரத யாத்திரை புறப்பட்ட அத்வானிக்கு எத்தனை வேண்டுகோள்கள் விடப்பட்டன! எதையும் அவர் காதில் போட்டுக்கொள்ளாத நிலையில் உச்ச கட்டத்தில் அவர் கைது செய்யப்பட்டபோது கூட, வசதியான விடுதி ஒன்றில் தங்க வைக்கப்பட்டு மிக மரியாதையாக நடத்தப்பட்டார். பீகார் ஜனதாதள ஆட்சியில்!

ஆனால் இன்று - மத வெறி கொண்டு மட்டுமல்ல! மனித நேயமும் அற்ற முறையில் உத்திர பிரதேச மாநிலத்தில் நடைபெறுகிற பா.ஜ.க. ஆட்சி, ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல், தன்னை அடையாளம் காட்டிக்கொண்டிருக்கிறது. முன்னாள் பிரதமர் ஒருவரின் உடல்நிலையைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல், மிக அலட்சியமாகவும், அநாகரீகமாகவும் அவரைச் சிறையில் நடத்தியுள்ளது.

ஜனநாயகத்திலும், மனித நேயத்திலும் பற்றுக் கொண்டுள்ள அனைவரும் கண்டிக்கத்தக்க செயலாகும் இது!

இத்தகைய மதவெறிக் கூட்டத்தினர் மக்களை ஏமாற்றி வளர ஆரம்பித்தால், நாட்டில் அமளி, துமளி, குழப்பங்கள் மட்டுமல்ல - மனித நேயம் என்ற தலைசிறந்த பண்பும் பட்டுப் போய்விடும்.

எனவே, உடன்பிறப்பே! தமிழகத்தில் காலம் காலமாகக் கட்டிக் காப்பாற்றி வரும், சாதி மதங்களைக் கடந்த சகோதர உணர்வுக்கு ஊறு தேட முனையும் தீயசக்திகளுக்கு இடம் தரா வண்ணம் நமதியக்கப் பணிகள் தொடரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்,

மு. க.

15-10-1992

1966. தங்க அட்டிகையும், பஞ்சலோகச் சிலையும்!

உடன்பிறப்பே,

ஒரு ஊர்ப்பஞ்சாயத்து கூடிற்று! கோயில் குருக்கள் மீது குற்றச்சாட்டு! பஞ்சாயத்தார் குருக்களை பார்த்துக் கேட்டனர், கோயிலில் அர்த்தஜாம பூஜைக்குச் சென்றீரா? என்று!

குருக்கள், ஆமாம் போனேன் என்றார். பூஜை முடிந்ததும் சுவாமியின் கழுத்தில் இருந்த தங்க அட்டிகையைத் திருடினீரா? இப்படிக் கேள்வி பதில்கள் தொடர்ந்தன.

நான் திருடவில்லை. எடுத்தது உண்மை!

எடுத்த அட்டிகையைக் கோயிலுக்குள் இருக்கும் இரும்புப் பெட்டிக்குள் வைத்தீரா?

இல்லை. வைக்கவில்லை.

பிறகு எங்கே வைத்தீர்?

என் வீட்டில் உள்ள பெட்டியில்!

கோயில் சொத்து உமது வீட்டுப் பெட்டிக்குப் போவானேன்?

கோயிலுக்கு குருக்களே நான்தானே!

குருக்கள் என்றால், தங்க அட்டிகை தங்கள் வீட்டுப் பெட்டியில்தான் இருக்க வேண்டுமோ?

பொய்! என் வீட்டுப் பெட்டியிலும் இல்லை.

அப்படியானால் அட்டிகையை உருக்கி விற்றுவிட்டீரா?

அடியேன் பக்தன்! பக்த சிரோன்மணி! அப்படியெல்லாம் முறைகேடாக நடக்க மாட்டேன்.

நடக்கமாட்டீர் என்றால், அட்டிகை எங்கே? அதைச் சொல்லும்!

தெரியாது!

தெரியாதா? தெய்வத்தின் நகையைத் திருடி விற்றுவிட்டு தெரியாது என்று மழுப்புகிறீரா? ஓய் குருக்களே! கோயில் சொத்து குலநாசம் என்று கேள்விப் பட்டதில்லையா?

கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், ஆண்டவனுக்கே வராத கோபம் உங்களுக்கேன் வருகிறது என்றுதான் ஆச்சரியப்படுகிறேன்.

உம்மை நம்பி கோயிலிலே குருக்களாக வைத்தால், நீர் கோயில் சொத்தையே கொள்ளையடிக்கிறீர்! உமக்கு இந்த பஞ்சாயத்திலே என்ன தண்டனை கொடுக்கப் போகிறோம் தெரியுமா?

பஞ்சாயத்தில் இப்படி உரத்த குரலில் கோபாக்கினியுடன் எல்லோரும் பேசியதுதான் தாமதம், குருக்கள் அங்கிருந்து ஓட்டம்பிடித்து ஆலயத்துக்குள் போய்க் கதவுகளைச் சாத்திக் கொண்டு, பகவானே! என்னைக் காப்பாற்று! என்று அலறியபடி கர்ப்பக்கிரகத்தின் இருள் சூழ்ந்த அறையில் உள்ள விக்கிரகத்தைப் போய்க் கட்டிப்பிடித்துக்கொள்பவர் போல ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தார்! ஆமாம்! அருமையாக நடித்தார்!

கதவை உடைத்துக்கொண்டு பஞ்சாயத்தார் கர்ப்பக கிரகத்துக்குள் குருக்களைத் தொடர்ந்து வந்தவர்கள், டார்ச் விளக்குகளை அடித்துப் பார்த்தார்கள். பக்தர்களான அந்தப் பஞ்சாயத்தார்கள் பதறிப் போனார்கள். பதற்றத்துக்குக் காரணம் என்ன?

கர்ப்பக் கிரகத்துக்குள் இருந்த விக்கிரகத்தையும் காணவில்லை.

அடப்பாவி! சுவாமி சிலையையே காணவில்லையே! அதையும் திருடி விற்றுவிட்டாயா?

பஞ்சாயத்தார் குருக்களைப் பிடித்துக் கொண்டு சினங்கொப்பளிக்கக் கூச்சல் போட்டனர்.

குருக்கள், தன்னை நிதானப்படுத்திக் கொண்டு, பரபரப்பு சிறிதுமில்லாமல் பதில் சொன்னார்.

பஞ்சாயத்தாரே! இப்போது புரிகிறதா கோயில் நகையைக் கொண்டுபோய் நான் எதற்காக என் வீட்டுப் பெட்டியில் வைத்தேன் என்று?

சொல்லித் தொலையும்! எங்களுக்குத் தலை சுற்றுகிறது!

கோயிலில் ஆண்டவனே இல்லாத போது, அட்டிகை எதற்காக என்றுதான் அதை எடுத்துப் போனேன் என் வீட்டுக்கு!

சரி அய்யா! ஆண்டவன் எங்கு போனார்?

அட்டிகையைத் தேடிக்கொண்டு போயிருப்பார்.

கிண்டலா செய்கிறீர்? பகவான் சிலை பஞ்சலோகச் சிலை - பழைய காலத்து சிலை - அதை விற்றால் பல ஆயிரம் கிடைக்கும். தங்க அட்டிகை! அதை விற்றாலும் உமக்குக் கொள்ளைதான்! எனவே நாங்கள் சொல்கிறோம்! நீர்தான் சிலையையும், நகையையும் திட்டம் போட்டுத் திருடியிருக்கிறீர்!

இது, ஆண்டவனுக்கும் எனக்குமுள்ள விவகாரம்! என் செயலில் எந்த முறைகேடும் இல்லை என்று பகவானே ஒத்துக்கொள்வார்!

உடன்பிறப்பே, கோயில்களில் குருக்கள்மார்களே திருடுகிறார்கள் என்பது வியப்பல்ல! அண்மையில் திருவட்டாறு ஆலயத்தில், ஆண்டவனின் மேலே போர்த்தப்பட்டிருந்த தங்கக் கவசத்தையே உரித்து எடுத்துவிட்ட கொள்ளைக்குத் துணை போனவர்களில் கோயில் குருக்களும் உண்டு என்ற செய்தி வரவில்லையா?

அதேபோலத்தான் இந்தக் கதையில் பஞ்சாயத்தாரிடம் சிக்கிக்கொண்ட குருக்களும் - கோயில் சொத்துக்களைக் கொஞ்ச கொஞ்சமாக திருடி, இறுதியாக கர்ப்பக் கிரகச் சிலையிலும் கை வைத்திருக்கிறார். ஆலயத்திலிருந்த ஆண்டவனே கொள்ளை போன விஷயம் கடைசியாகத்தான் பஞ்சாயத்தாருக்குத் தெரிகிறது.

தங்க அட்டிகை உருக்கி விற்கப்பட்ட செய்தியை வைத்துத்தான் குருக்களை விசாரிக்கப் பஞ்சாயத்து கூடியது.

அதன் இறுதிக் கட்டம்தான், அதற்குமுன்பே - கடவுளே களவு போய்விட்டார் என்று பஞ்சாயத்தார் தமது கண்ணால் கண்ட காட்சி!

ஆண்டவன் சிலையையும், அதன் நகைகளையும் நான் எடுத்துக்கொண்டது உண்மைதான்! ஆனால் இது திருட்டு அல்ல! தெய்வ சங்கல்பம்! இதில் எந்த முறைகேடும் இல்லை.

இப்படித் திருப்பித் திருப்பி, கீறல் விழுந்த இசைத் தட்டு போலக் கூறிக் கொண்டிருக்கிறார் அந்த குருக்கள்!

அடிக்கடி நாம் இந்த ஆலயத்தைக் கண்காணிக்காமல் விட்டதால் வந்த வினையல்லவா இது என முணுமுணுத்துக்கொண்டே, பஞ்சாயத்தார் குருக்களை இழுத்துக்கொண்டு கோயிலுக்கு வெளியே வருகிறார்கள். வெளியே பலஊர் மக்களும், மகாமகத்துக்குக் கூடுவது போல கூடி நிற்கிறார்கள்!

தெய்வ சங்கல்பம்! நடந்ததெல்லாம் உண்மை! ஆனால் இதில் எந்த முறைகேடும் இல்லை!

குருக்கள் அதையே கூறிக்கொண்டிருக்கிறார் - காட்சி முடியவில்லை, தொடருகிறது!

நடந்ததெல்லாம் உண்மை! ஆனால் இதில் எந்த முறைகேடும் இல்லை!

உடன்பிறப்பே, இந்த வாசகம், கோயில் வாசலில் கூட்டத்துக்கு மத்தியில் நிற்கும் குருக்களிடமிருந்து மட்டும் நம் காதுகளில் ஒலிக்கவில்லை -

எங்கோ கோட்டைக்குள்ளிருப்பவர்களின் வாய்ச் சாதுர்ய வாசகமாகவும் நம் செவிகளில் ஒலிக்கின்றது அல்லவா?

அன்புடன்,

மு. க.

16-10-1992

1967. மின்வாரியத்தில் மின்னல் வேக ஊழல்!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா மீதும் சில அமைச்சர்கள் மீதும், சில அய்.ஏ.எஸ். அதிகாரிகள் மீதும் 18 குற்றச்சாட்டுகளை ஆளுநரிடம் அளித்து அவற்றின் அடிப்படையில், அவர்கள்மீது வழக்குத் தொடருவதற்கு எங்களுக்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்டிருக்கிறோம். இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. அடுத்து என்ன செய்வது என்பது குறித்து தலைமைக் கழகம் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. முடிவு விரைவில் எடுக்கப்படும்.

சாட்டப் பெற்ற 18 குற்றச்சாட்டுகளில் மின்சார வாரியம் பற்றிய குற்றசாட்டுகளும் உண்டு. அந்தக் குற்றச்சாட்டு பற்றிய விவரமான தகவல் ஒன்று இப்போது கிடைத்துள்ளது.

வடசென்னையில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அனல் மின் நிலையம் தொடங்கப்பட்டதும், அடிக்கல் நாட்டுவிழா என் தலைமையில் குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் அவர்களைக் கொண்டு நடத்தப்பட்டதும் உனக்கும் தெரியும். ஊருக்கும் தெரியும்.

500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தத் திட்டத்திற்கான அனுமதி எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் கிடைத்திருந்த போதிலும் - அதற்கான நில ஊர்ஜிதம் செய்ய முடியாமல் நிலத்துக்கு சொந்தக்காரரான வி.ஜி.பி. சகோதரர்கள் அந்த இடத்தை மின்சார வாரியம் கையகப்படுத்தக் கூடாதென்று சுப்ரீம் கோர்ட்டில் இடைக்காலத் தடை பெற்றுவிட்டார்கள். எம்.ஜி.ஆர். அரசின் சார்பில் எந்த முயற்சியும் எடுக்காமல் - கவர்னர் ஆட்சியிலும் அந்த நிலத்தைக் கையகப்படுத்தாமல்; அனல்மின் நிலைய மதிப்பீடு 500 கோடியிலிருந்து 700 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது.

1989-ல் நமது ஆட்சி வந்தவுடன், நான் வி.ஜி.பி. சகோதரர்களை அழைத்துப் பேசி, அனல்மின் நிலையம்

கட்டுவதற்கு இடையூறாக சுப்ரீம் கோர்ட்டில் தொடர்ந்துள்ள வழக்கை உடனடியாகத் திரும்பப் பெறுமாறும், அனல் மின் நிலையத்தால் ஏற்பட இருக்கும் பயன்களை எடுத்துரைத்தும், அதற்குக் குறுக்கே நிற்பதை ஏற்றிட முடியாதென்றும் வலியுறுத்திக் கூறினேன்.

அவர்களும் என்னுடன் சில நாட்கள் வாதாடிப் பார்த்து பிறகு, சுப்ரீம் கோர்ட் வழக்கை திரும்பப் பெற்றுக்கொண்டனர்.

உடனடியாக, அனல் மின்சார நிலையத்தின் பணிகள் வெகு வேகமாக முடுக்கி விடப்பட்டன.

அந்த மின்சார நிலையத்திலும் இப்போது லஞ்ச ஊழல்!

அந்த நிலையத்துக்கு ஆஷ்காண்ட் லிங்க் சிஸ்டம் எனப்படும் எந்திரம் ஒன்று தேவையாக இருந்திருக்கிறது. அதாவது, அனல்மின் நிலையத்தில் எரிக்கப்படும் நிலக்கரிச் சாம்பலை வெளியேற்றுகிற வேலையை அந்த எந்திரம் செய்யும். அதை வாங்குவதற்கு மின்வாரியம் டெண்டர் கோரி அறிவித்தது.

ஜெயலலிதா ஆட்சியில் டெண்டர் கோருவது என்பது உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதா?

இந்த டெண்டரில் நடந்த ஊழல்களை அறிந்தால் இன்னமும்கூட ஆச்சரியப்படுவாய்!

டெண்டரில் சில நிறுவனங்கள் கலந்து கொண்டன. அவற்றில் லார்சன் அண்ட் டியூப்ரோ நிறுவனமும், புனேயைச் சேர்ந்த டிமெக் என்ற நிறுவனமும் முக்கியமானவை.

நேரு ஸ்டேடியத்தை டெண்டரே விடாமல் லார்சன் அண்ட் டியூப்ரோவிடம் சுமார் முப்பது கோடி ரூபாய்க்கான வேலையை கொடுத்ததற்குக் காரணம், அவர்களது வேலை தரமாக இருக்கும் என்பதால்தான் என்று சட்டப்பேரவையில் முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் சொன்னார்கள் அல்லவா? ஆனால் அந்த தரமான நிறுவனத்திடம், அனல் மின் நிலையத்துக்கு இயந்திரம் அமைக்கும் பொறுப்பை ஒப்படைக்காமல் - டிமெக் நிறுவனம்தான் 34 கோடி ரூபாய் அளவுக்கு டெண்டர் கேட்டுள்ளது என்பதற்காக, இப்போது லார்சன் அண்ட் டியூப்ரோ நிறுவனத்தை விட்டு விட்டு டிமெக்கிற்கு டெண்டர் மூலம் கொடுத்துவிட்டார்கள்.

நேரு விளையாட்டு அரங்கத்துக்கான 30 கோடி ரூபாய் வேலையை டெண்டர் கோராமலே - தரமான நிறுவனத்துக்குத்தான் தரமுடியுமென்று லார்சன் அண்ட் டியூப்ரோ நிறுவனத்துக்கு அளித்ததாக பேரவையில் சொன்னார்களே! இயந்திர விஷயத்தில் மட்டும் ஏன் யோசிக்கவில்லை?

சரி! டிமெக் என்ற நிறுவனத்துக்கு மின்சார வாரியம் 34 கோடி ரூபாய் டெண்டரை உறுதி செய்து விடுகிறது. அந்த உறுதி செய்த செய்தி டிமெக் நிறுவனத்துக்கும் அறிவிக்கப்படுகிறது.

செய்தி கிடைத்து டெண்டர் உறுதியாகி விட்டது எனத் தகவல் அறிந்தவுடன் டிமெக் நிறுவனம் என்ன செய்கிறது?

மின் வாரியத் தலைவரான அய்.ஏ.எஸ். அதிகாரியைத் தொடர்பு கொள்கிறது. பேரம் படிகிறது. என்ன பேரம்?

* 34 கோடிக்கு இயந்திரம் அமைக்க எடுத்த டெண்டர் கட்டுபடியாகாது - எனவே மேலும், 12 கோடி ரூபாய் அளவுக்கு அதிகப்படுத்தித் தர வேண்டும்.
* 12 கோடி ரூபாயும் முன் பணமாகத் தர வேண்டும்.
* செக்யூரிட்டி முன் பணத்தையும் டிமெக் நிறுவனம் செலுத்த முடியாது.

பேரத்தின் விளைவாக, டிமெக் நிறுவனம் இந்த நிபந்தனைகளை விதித்து டெண்டர் தொகையை விட 12 கோடி ரூபாய் அதிகம் வேண்டுமென்பதை வற்புறுத்தியது!

ஆம்! வற்புறுத்தச் சொன்னபடி வற்புறுத்தியது.

இந்தப் புதிய நிபந்தனைகள் குறித்தும், டெண்டர் தொகை 34 கோடி என்பதை 46 கோடியாக உயர்த்தித் தருவது குறித்தும் முடிவு எடுக்க பொதுக் கணக்குத் துறையிடம் கருத்து கேட்கப்பட்டது. அந்தத்துறை ஏற்க மறுத்துவிட்டது மட்டுமல்ல. எதிர் காலத்தில் இது ஒரு தவறான முன் மாதிரி ஆகி விடும் என்றும் எதிர்க் கருத்து கூறி விட்டது.

பிறகு மின்வாரியத் தலைவரான அய்.ஏ.எஸ். அதிகாரி தலைமையில், தொடர்புடைய அதிகாரிகள் கூட்டம் நடைபெற்றது. தொழில் நுட்ப உறுப்பினர் ஒருவர் அந்தக் கூட்டத்தை புறக்கணித்தார். எனினும் டிமெக் நிறுவனம் குறிப்பிட்டவாறு,

12 கோடி ரூபாயை டெண்டரில் மீண்டும் உயர்த்தித் தரவும், அந்தப் பணத்தைக் கூட வட்டியில்லாமல் முன் பணமாக தந்து விடவும், டிமெக் நிறுவனத்தின் வேறு சில நிபந்தனைகளை ஒப்புக் கொண்டும் முடிவு செய்யப்பட்ட போது, அந்த முடிவு பிடிக்காமல் முகத்தைச் சுளித்துக் கொண்டு நிதித்துறைச் செயலாளர் வெளியேறி விட்டார் என்றும் தகவல்!

கூடுதலாகக் கொடுக்கப்பட்ட, அதுவும் முன் பணமாகவே வட்டியின்றிக் கொடுக்கப்பட்ட அந்த 12 கோடி ரூபாய், என்னப்பா ஆயிற்று என்று கண்ணப்பரைத்தான் கேட்க வேண்டும்.

மூன்றில் இரண்டு பங்கு கப்பம் கட்டியது போக - எஞ்சிய ஒரு பங்கை மந்திரி பிரதானியும் பிரித்துக் கொள்ள, கொள்ளையோ! கொள்ளை!

என்ன செய்வது? இங்குள்ள பத்திரிகைகள் பங்காரப்பா மீது பாய்ந்து பிடுங்குகின்றன! இருநூறு மைலுக்கு அப்பால் உள்ள ஊழல் தெரிகிறது இங்குள்ள பத்திரிகைகளுக்கு! ஆனால் கண்ணுக்கருகேயுள்ள கடைந்தெடுத்த ஊழல் தெரியவில்லை! ஒருவேளை, கண்ணுக்கு அருகில் இருப்பதால் இந்த ஊழல்கள் பார்வையை மறைக்கின்றனவோ என்னவோ தெரியவில்லை!

உடன்பிறப்பே, வகுப்புவாத விஷ விதையை தண்ணீர் ஊற்றித் தமிழ்நாட்டு மக்கள் யார் வளர்க்கிறார்கள் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் இந்த பத்திரிகைகளைப் பார்த்து உணர்ந்து கொண்டுதான் வருகிறார்கள்!

வட மாநில ஏடுகளுக்கு இருக்கும் வாய்மை தமிழ்நாட்டு ஏடுகளுக்கு ஏனில்லை?

எதிர்காலத் தமிழகத்தின் சாபத்துக்கு வீணாக இவர்கள் ஆளாகப் போகிறார்களே; என்பதை நினைத்தால் வேதனையாகத்தான் இருக்கிறது!

அன்புடன்,

மு. க.

17-10-1992

1968. புலம்பிக் கொண்டல்ல, புன்னகை புரிந்து கொண்டு!

உடன்பிறப்பே,

“தன்னை எதிர்த்து ஜெயலலிதா போட்டிருக்கும் சிவசுப்பிரமணியம் விசாரணைக் கமிஷனில், நீதிபதி சரியில்லை என்று உயர்நீதிமன்றத்தில் கருணாநிதி வழக்குத் தொடர்ந்திருக்கிறார் அல்லவா? வழக்கின் செலவுகளுக்காக, ஒவ்வொரு மாவட்டச் செயலாளரும் ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாயும், ஒவ்வொரு நகரச் செயலாளரும் குறைந்த பட்சம் இருபத்தி ஐயாயிரம் ரூபாயும் நிதி வசூலித்துக் கொடுக்க வேண்டுமாம். புலம்பியபடியே நோட்டும் கையுமாக வசூல் வேட்டையில் தீவிரமாக இறங்கி விட்டனர் தி.மு.க. செயலாளர்கள்!”

இப்படி ஜூனியர் விகடன் ஒரு பெட்டிச் செய்தி வெளியிட்டிருக்கிறது. கொஞ்சகாலமாகவே தலைமைக்கும், தொண்டர்களுக்கும் ஊடே பெரும் இடைவெளியிருப்பது போல தி.மு.கழகத்தைச் சித்தரிப்பதிலே சில ஏடுகளுக்கு ஒரு திருப்தி! அந்த ஏடுகளின் பட்டியலிலே தன்னையும் இணைத்துக் கொண்டுள்ளது ஜூனியர் விகடன்!

ஜெயலலிதா ஆட்சியின் ஊழல்களையும், அக்கிரம அநியாயங்களையும் இவற்றின் காரணமாக அந்த ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள மளமள எனும் சரிவையும், மூடி மறைத்து மழுப்ப முடியாமல், மக்கள் பக்கம் நின்று தீரவேண்டிய தவிர்க்க முடியாத கட்டாயத்துக்குள்ளாகிவிட்ட ஏடுகள் சில இப்போது ஜெயலலிதா ஆட்சியின் முறைகேடுகளைச் சுட்டிக் காட்டுகிற அதே நேரத்தில், அதன் பயன் தி.மு.க.வுக்குக் கிட்டி விடுமோ என்ற எண்ணத்தில் தி.மு.க. பற்றியும் ஏதாவது சொல்லி வைப்போம் என்று ஆசிரியர் மேஜையில் கதைகளைப் புனைந்து வெளியிட்டு மகிழ்கின்றன.

அப்படிப்பட்ட கதைகளில் ஒன்றுதான் சிவசுப்பிரமணியம் கமிஷனை எதிர்த்து வழக்கு நடத்துவதற்காக, தி.மு.க. செயலாளர்கள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட தொகை நிதி வசூலிக்க வேண்டுமென்று தலைமைக் கழகம் கூறியிருப்பதாகவும், செயலாளர்கள் புலம்பிய வண்ணம் வசூல் வேட்டையில் இறங்கியுள்ளனர் என்பதாகவும் அந்த வார ஏடு பிரசுரித்துள்ள கதையுமாகும்!

உடன்பிறப்பே, ஜெயலலிதா, தி.மு.கழகத்தை முடக்க வேண்டுமென்ற கெடு நினைப்புடன் என் மீதும், என் குடும்பத்தினர் மீதும், கழகத்தினர் சிலர் மீதும் விசாரணைக் கமிஷன் நியமித்திருப்பதும், அந்த நீதிபதி சரியில்லை என்று நமது சார்பில் வழக்கு நடத்துவதும், இப்போது! அதாவது ஒரு மாதகாலத்திற்குள்ளாக!

ஆனால் நமது கழகச் சார்பில் வழக்கு நிதி என்றும், கழக வளர்ச்சி நிதி என்றும் கழக அமைப்புகள் திரட்டிட வேண்டுமெனவும், கழக உடன் பிறப்புகளும், ஆதரவாளர்களும் வழங்கிட வேண்டுமெனவும் அறிவித்து பல மாதங்களாகின்றன. அந்த அறிவிப்புக்கு இணங்க நிதி சேர்ந்து கொண்டுமிருக்கிறது. அவ்வப்போது நிதி வழங்கியோர் விபரமும், சேர்ந்துள்ள தொகையும் முரசொலியின் தலைமைக் கழகச் சார்பில் தொடர்ந்து வெளியிடப்பட்டுக் கொண்டுமிருக்கிறது.

அண்மையில் செஞ்சி பொதுக்கூட்டத்தில் எனது உதவியாளர் மேடையில் ஏறும் நெருக்கடியில் சுமார் எண்ணூறு ரூபாயையும், அந்த நிதி அளித்த உடன்பிறப்புகளின் பெயர்கள் கொண்ட பட்டியலையும் பிக்பாக்கெட் வீரர் ஒருவரிடம் பறி கொடுத்து விட்ட காரணத்தால் மட்டுமே, அந்தச் சுற்றுப் பயணத்தில் தஞ்சை, நெய்வேலி, திண்டிவனம் ஆகிய இடங்களில் நிதியளித்தோர் விபரம் வெளியிட இயலாமற் போய்விட்டது. அந்த எண்ணூறு ரூபாய்க்குரிய உடன்பிறப்புகள் மன்னிப்பார்களாக!

நாம் எத்தனை வழக்குகளை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை ஜி.வி. போன்ற ஏட்டாளர்கள் அறியாதவர்கள் அல்லர்! அறிந்திருந்தும், ஏதோ என் மீதுள்ள ஒரு விசாரணைக் கமிஷன்

வழக்கிற்காக மட்டும் அக்கறை செலுத்துவது போலவும் - கழகச் செயல்வீரர்கள் புலம்பிக் கொண்டே வசூல் செய்வது போலவும் இட்டுக்கட்டிக் கதை எழுதுவது திசை திருப்பும் செயலாகவும், தி.மு.க. செயல் வீரர்களைத் தலைமையிலிருந்து பிரிக்கப் பார்க்கும் முயற்சியாகவுமன்றோ இருக்கிறது!

இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டோர், கழகத்தின் கடந்த கால வரலாற்றில் அவர்களைப் பொறுத்தவரையில், தோல்விகளையே சந்தித்துள்ளனர் என்பதையும், அவர்களது முயற்சிகளால் கழகத்திற்குச் சிறுகீறல்கள், சிராய்ப்புகள் ஏற்பட்டிருக்கலாமே தவிர, கழகத்தின் வலிவையும், அடித்தள உறுதியையும் அசைத்துப் பார்க்கவும் அவர்களால் முடியவில்லை என்பதையும் கழகத்தின் கட்டுக் கோப்பும், கழகத்தினர் அண்ணா காலம் தொட்டு கடைப்பிடித்து வரும் குடும்ப பாச உணர்வும் நாட்டுக்கு உணர்த்திக் கொண்டுதானிருக்கின்றன.

எனினும் மாற்றார் தொடர்ந்து முயலுகிறார்கள். எலிப் பொறி கொண்டு புலி பிடிக்க எண்ணுகிறார்கள்!

புலம்பிக்கொண்டே வசூல் செய்கிறார்கள் தி.மு.க. செயலாளர்கள் என்று அந்த ஏடு எழுதியிருக்கிறதே! இந்தக் கழகத்தின் நாடி நரம்புகளாக விளங்கும் அந்த செயல் வீரர்களுக்குத் தெரியும் எத்தனை வழக்குகளை, எந்தெந்த நீதிமன்றங்களில் நடத்துகிறோம் என்பது!

திருமதி சுப்புலட்சுமி, அவரது கணவர் திரு. ஜெகதீசன், நெல்லை ரவிச்சந்திரன் ஆகியோர் மீது தொடரப்பட்டுள்ள தடா வழக்கை இங்கும் நடத்தினோம் - டெல்லி சுப்ரீம் கோர்ட்டிலும் நடத்தினோம் - இன்னமும் நடத்திக்கொண்டிருக்கிறோம்.

மகாமகக் குளத்தில் ஜெயலலிதாவின் அட்டகாச ஆடம்பரத்தினால் ஏற்பட்ட நூற்றுக்கு மேற்பட்டோரின் பயங்கரமான சாவுகளுக்கும் - குழப்பத்திற்கும் முறையான நீதி விசாரணை வேண்டுமென்று கோரி நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் தொடர்ந்துள்ள வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ராஜீவ்காந்தி படுகொலையைத் தொடர்ந்த வன்முறை வெறியாட்டத்தினால் பெரும் இழப்புக்கு ஆளானவர்களுக்கு

உதவி நிதி வழங்க வேண்டுமென அரசை வலியுறுத்திப் பொதுச்செயலாளர் பேராசிரியர் தொடர்ந்த வழக்கின் காரணமாக, இன்று பலருக்கும் இழப்பீட்டுத் தொகை கிடைத்துக்கொண்டிருக்கிறது. அந்த வழக்கும் இன்னமும் முடிந்தபாடில்லை.

அரசுக்குச் சொந்தமான பீர் தொழிற்சாலையை, தனியாருக்கு விற்றதை எதிர்த்து தி.மு.க. செய்தித் தொடர்பாளர் ஆலடி அருணா தொடர்ந்துள்ள வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர் மீதும் அரசு மற்றொரு வழக்கைத் தொடர்ந்துள்ளது.

கூட்டுறவுச் சங்கத் தேர்தல் முறைகேடுகளையும், மோசடிகளையும் விலக்கி விட்டுத் தேர்தல் நடத்த வேண்டுமென்று கழகச் சார்பில் கோ.சி. மணி, பொன். முத்துராமலிங்கம், வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோர் முன்னின்று உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கும் இன்னமும் முடிவுறவில்லை.

டான்சி நிலத்தை சட்டவிரோதமாகவும், முறைகேடாகவும், முத்திரைத்தாள் கட்டணத்தில் மோசடி செய்தும் ஜெயலலிதா பங்குதாரராக உள்ள நிறுவனம் வாங்கியது குறித்து, பதிவுத்துறை அலுவலகத்தில் பதிவான பத்திரத்தை அதிகாரிகள் தர மறுத்த காரணத்தால், அதைப் பெறுவதற்குரிய உரிமையை நிலைநாட்ட ஆலந்தூர் பாரதி தொடர்ந்துள்ள வழக்கும் யாரும் அறியாததல்ல!

கழகச் சொற்பொழிவாளர்கள் மீது இந்த அரசு அடுக்கடுக்காக தொடர்ந்து கொண்டேயிருக்கும் வழக்குகள். ஏறத்தாழ இருபதுக்கு மேல் இருக்கும். எனக்கும் கூட ஒரு சம்மன் காத்துக்கொண்டிருக்கிறது.

உயர்நீதிமன்றமென்றும், உச்சநீதிமன்றமென்றும் இப்படிப் பல வழக்குகள் இருப்பதையும், அவற்றுக்காகக் கழகம் பல மாதங்களாகவே நிதி சேர்த்து வருவதையும் - தெரிந்தும் தெரியாதவர்களைப் போல சிலர் கதைகளைத் திரிப்பதால் தெளிவில்லாதவர்களை திசை திருப்பலாம்.

தெளிவு மிக்க தி.மு.கழக உடன்பிறப்புகளை ஏமாற்ற இயலாது என்பது திண்ணம்.

புலம்பிக்கொண்டு வசூல் செய்கிறார்கள் கழகச் செயலாளர்கள்!

என்ன செய்தும் இவர்களை அழிக்க முடியவில்லையே என்று புலம்பிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டு, கழக உடன்பிறப்புகள் கடமை ஆற்றுகிறார்கள்!

கணிசமான நிதியை கழக வளர்ச்சிக்காகவும், தேர்தல் செலவுகளுக்காகவும், வழக்குகளை நடத்துவதற்காகவும், முரசொலி அறக் கட்டளைக்காகவும் தந்துகொண்டே இருக்கிறார்கள். இன்னமும் தருவார்கள்! அவர்களைத் திசை திருப்ப முனைவோர்தான் ஏமாற்றத்தைச் சந்திப்பார்கள்.

அன்புடன்,

மு. க.

28-10-1992

1969. நாட்டு மக்களின் நலன் காத்திடவே நவம்பர் 10, நவம்பர் 24 அறப்போராட்டங்கள்!

உடன்பிறப்பே,

கடந்த பத்து நாட்களாகவே மிகக் கடுமையான சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்! காரிலும் ரயிலிலுமாக நூற்றுக்கணக்கான மைல்கள் எனினும், உன்னைப் போன்ற பல்லாயிரக் கணக்கான உடன்பிறப்புகளையும், லட்சக்கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்களையும் கண்டு வந்ததில் களைப்பு மிகுதி எனினும்; அதனினும் மிகுதியான களிப்பன்றோ எனக்கு!

கழுத்து வலி வேறு! அதற்கும் நீயும், ஏனைய கழகக் கண்மணிகளும் ஏற்பாடு செய்த ஆர்வமும், எழுச்சியும் கொண்ட நிகழ்ச்சிகளே மருந்தாயிற்று!

குனிந்து கொண்டு எழுதுவதால்தான் கழுத்துப் பக்க நரம்புகளில் இந்தக் கோளாறு என டாக்டர்கள் கூறினர். எழுதுவதற்காக நான் குனிவது, என் தமிழர்கள் நிமிர்ந்து எழுவதற்காகத்தானே!

செஞ்சி என்றும், பருகூர் என்றும், அரூர் என்றும் திருவண்ணாமலை என்றும், மயிலாடுதுறை என்றும், கோவை என்றும் திருப்பூர் என்றும் நிதியளிப்பு விழா நிகழ்ச்சிகள், மண விழாக்கள் - இக்கடிதம் உன் கைக்குக் கிடைக்கும்போது சங்ககிரி திருமண நிகழ்ச்சிக்கும், நாமக்கல் நிதியளிப்புப் பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கும் பயணப்பட்டு கொண்டிருப்பேன். ஒன்றையொன்று மிஞ்சக் கூடிய அளவுக்கு நமது மாவட்டக் கழகங்கள் நிதியளிப்பு விழாக்களை மட்டுமல்ல! நிதி வழங்கும் நிகழ்ச்சிகளையும் நடத்திக் காட்டும்போது - கல்தூண் போன்ற கழகத்தின் வலிவும், கயவர்களின் நரித்தனத்திற்குக் கிஞ்சிற்றும் இடம் தராத கட்டுப்பாட்டு உணர்வும் என் நெஞ்சத்தைத் தேன் பெய்து குளிப்பாட்டுகின்றன.

வருகிற 14-ஆம் நாள் மதுரையில் ஒரு மணவிழாவுக்கும், அன்று மாலை தேனியில் நிதியளிப்பு விழாப் பொதுக்கூட்டத்துக்கும் ஏற்பாடுகள் நடக்கின்றன. மதுரை, என்றுமே என்னை மலைக்க வைத்திடத் தவறியதில்லை.

14-ஆம் நாள் நிகழ்ச்சிக்குத் திடீரெனத் தாண்டிவிட்டேனே! அதற்கிடையே இத்திங்களிலேயே 10-ஆம் நாள் தி.மு.கழகம், மார்க்சிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, ஜனதா தளம், அகில இந்திய பார்வார்டு பிளாக் ஆகிய கட்சிகள் நடத்த இருக்கின்ற ஆர்ப்பாட்டம் மாநில முழுதும் மத்திய அரசு, மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் எழுச்சியுடன் அமைய வேண்டுமல்லவா?

நவம்பர் 10 அன்று ஆர்ப்பாட்ட அறப்போரும், நவம்பர் 24 அன்று முழு அடைப்பும் என்று நமது தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் கூடி அக்டோபர் 21-ஆம் நாள் முடிவெடுத்து அறிவித்திருக்கிறோம்.

ஏன்? எதற்காக? என்பதும் அந்தக் கூட்டத்திலேயே அறிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் அவற்றை ஒருமுறை நினைவு படுத்துகிறேன்.

மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள காங்கிரஸ் அரசும், தமிழ்நாட்டில் ஆட்சியில் உள்ள ஜெயலலிதா அரசும் தேர்தல் நேரத்தில் அளித்துள்ள வாக்குறுதிகளுக்கு மாறாகக் கடைபிடிக்கும் கொள்கைகள், நடவடிக்கைகள், ஜனநாயகத்திற்கு எதிரான மக்கள் விரோதப் போக்குகள், திட்டமிட்டு வேண்டுமென்றே எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கும் செயல்கள், பத்திரிகை உரிமைகளையும், பேச்சுரிமைகளையும் தடுத்து அவற்றுக்கு எதிராக நடத்தும் அராஜக நடவடிக்கைகள், 100 நாட்களுக்குள் விலைவாசியைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவதாகக் கூறி வாக்குகளைப் பெற்று விலைவாசியைக் கட்டுப்படுத்தாமல்; கட்டுமீறி உயர்த்துவதற்கு இடமளித்து பொறுப்பற்று நடத்தல், உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் நிபந்தனைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு நாட்டின் சுயமரியாதையையே அடகு வைத்துப் புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரால் தொழிலாளர்களின் வாழ்வுக்கும், உரிமைக்கும் உத்திரவாதமற்ற நிலையை உருவாக்கி,

பொதுத்துறைகளைப் பலவீனப்படுத்தித் தனி முதலாளிகளை மேலும் மேலும் கொழுக்க வைக்கும் நிலைமை, மதச் சார்பற்ற கொள்கைக்கு முரணாக வகுப்பு வாதத்தையும், மதப் பூசலையும் தூண்டி அரசியல் ஆதாயம் தேடும் தந்திரங்கள், நாளும் பெருகிக்கொண்டிருக்கும் ஊழல் கொள்ளைகள் மற்றும் சட்ட ஒழுங்கு அமைதிக்கு விளைந்துள்ள கேடுபாடுகள் ஆகியவற்றை வன்மையாகக் கண்டிக்கவும்,

குறிப்பாக, ஏழை எளிய நடுத்தர மக்களைப் பாதிக்கும் வகையில் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலை உயர்த்தப்பட்டிருப்பதை உடனடியாகக் குறைக்கவும்,

விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கக் கூடிய அளவுக்கு பொட்டாஷ், பாஸ்பேட், டி.ஏ.பி. கலப்பு உரங்கள் போன்றவைகளின் விலைகளை மூன்று மடங்கு உயர்த்திருப்பதை மலையளவுக்கு உயர்த்தி தினையளவு மட்டும் குறைத்து மக்களை ஏமாற்றாமல் உடனடியாக முன்னைய விலைக்கே குறைத்திட வலியுறுத்தியும்,

விவசாயிகளுக்கு விதிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ள நிலவரி, பயிர்வரிகள் முன்பு இருந்ததைவிடப் பலமடங்கு அதிகரித்திருப்பதைக் கண்டித்து, அவற்றைப் பழைய நிலைக்கே கொண்டு வர வேண்டுமென்று வற்புறுத்தியும்,

வியாபாரிகள் மற்றும் பல்வேறு சிறிய நடுத்தரத் தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கு தமிழக அரசு விதித்துள்ள தாறுமாறான தொழில்வரியை உடனே கைவிட வேண்டுமென்று வலியுறுத்தியும்,

நியாயவிலைக் கடைகளில் அரிசியின் அளவைக் குறைத்து, விலையை உயர்த்தி இருப்பதோடு, பொதுவிநியோகத்திலும் முறைகேடுகள் மலிந்திருப்பதைக் கண்டித்தும்,

மாநில முழுதும் கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஒரு சாராய சாம்ராஜ்யமே நடைபெறுவதைக் கண்டித்தும்,

ஆளுங் கட்சியினர், அரசு அலுவலகங்களில் புகுந்து அலுவலர்கள் மீது தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிற தாக்குதல்களைக் கண்டித்தும்,

திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அவைகளுக்காக ஒதுக்கப்படும் தொகை, திட்டங்களுக்குச் செலவிடப்படாமல் ஆளுங்கட்சியினரே அடி மட்டம் முதல் ஆட்சியின் உயர்மட்டம் வரையில் மோசடியாக அபகரித்துக் கொள்ளும் ஊழலைக் கண்டித்தும்,

என்றுமில்லாத அளவுக்கு திடீரெனக் கைத்தறியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வருமான வரி விதித்து, தாக்கீது பிறப்பித்திருப்பதை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டுமென வலியுறுத்தியும்,

நவம்பர் 10-ஆம் நாளும், 24-ஆம் நாளும் அனைத்துக் கட்சி அறப்போர் அறிவிக்கப்பட்டுள்ளது.

24-ஆம் நாள் முழு அடைப்புப் போராட்டத்துக்கு 10-ஆம் நாள் ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒரு முகவுரையாக அமைந்திடல் வேண்டும்.

இந்த இருநாள் போராட்டங்களும் எழுச்சியுடனும், வெற்றிகரமாகவும், அமைதியாகவும் நடைபெற வேண்டுமென்பதற்காக நவம்பர் 5-ந் தேதி நமது தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் கூடிப் பேசினோம்.

ஆம்! நவம்பர் 5-ந் தேதி - ஆளுங் கட்சிக்காரர்கள் நக்கீரன் போன்ற பத்திரிகைகளைக் கொளுத்துதல், அந்தப் பத்திரிகை அச்சியற்றியவரை அடக்குமுறைக்கு ஆளாக்குதல், பத்திரிகை அலுவலகத்தைச் சூறையாடல் போன்ற வன்முறைகளைக் கண்டித்துப் பேசினேன் என்பதற்காக, ஜெயலலிதாவின் மானம் போய்விட்டதாக மான நஷ்ட வழக்கு தொடர்ந்துள்ளார்கள் அல்லவா? அதற்காக நீதிமன்றம் சென்று நான் திரும்பியவுடன் நமது தோழமைக் கட்சியினரின் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளையும் ஏடுகளில் கண்டிருப்பாய்! நவம்பர் 10-ஆம் நாள் கழக உடன்பிறப்புகளும், தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களும் மாநில முழுதும் பரவலாக ஒவ்வொரு ஒன்றியத்திலுமுள்ள மத்திய அரசு, மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் அமைதியான ஆர்ப்பாட்டம் நடத்தும்போதே நவம்பர் 24-ந் தேதி முழு அடைப்புக்கான விளக்கங்களைப் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கத் தொடங்கிவிட வேண்டும். நவம்பர் 10 - அலுவலகங்களின் முன்னால் நடத்த இருப்பது மறியல் அல்ல.

ஆர்ப்பாட்டம் மட்டுமே! அந்த நிகழ்ச்சியிலேயே நவம்பர் போராட்டத்துக்கான காரணங்களை விபரமாகத் தெளிவுபடுத்த வேண்டும். நவம்பர் 12 முதல் 22 முடிய சிற்றூர், பேரூர், ஒன்றியங்கள், நகரங்களில் தெருமுனைப் பிரச்சாரத்தின் வாயிலாக நவம்பர் 24-ந் தேதி முழு அடைப்பு ஏன்? என்பதை விளக்குவதோடு, எல்லா தரப்பு மக்களின் ஆதரவும் தேவை என வேண்டுகோள் விடுத்திட வேண்டும்.

இந்தப் பத்து நாட்கள், தோழமைக் கட்சிகளின் முன்னோடிகள் மாவட்டங்களில் உள்ள தலைநகரம் மற்றும் பெரிய நகரங்களில் ஒரே மேடையில் பேசுவது குறித்து ஆங்காங்குள்ள கழக அமைப்புகளும், தோழமைக் கட்சிகளின் அமைப்புகளும் கலந்து பேசி முடிவுகளை எடுத்திட வேண்டும். முன்னணிப் பேச்சாளர்களும், தலைவர்களும் எங்கெங்கே கூட்டங்களில் கலந்து கொள்கிறார்கள் என்ற விபரத்தை நமது தலைமைக் கழகச் செயலாளர் நண்பர் ஆற்காடு வீராசாமி அவர்கள் அறிவித்திடுவார்.

நவம்பர் 24 அன்று தொழிற்சாலைகளில் காலை ஆறு மணி முதல் 25-ந் தேதி காலை ஆறு மணி வரையில் 24 மணி நேர வேலை நிறுத்தம் செய்வதென்றும்,

இரயில்கள், பஸ்கள் முதலிய போக்குவரத்துகள், கல்வி நிலையங்கள், கடைகள், திரையரங்குகள் உள்ளிட்ட வியாபார நிலையங்கள் அனைத்தும் 24 காலை ஆறு மணி முதல் அன்று மாலை ஆறு மணி வரையில் 12 மணி நேர வேலை நிறுத்தமும், முழு அடைப்பும் நடத்த வேண்டுமென்றும், தோழமைக் கட்சிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 10 ஆர்ப்பாட்ட அறப் போராட்டமும் - நவம்பர் 24 முழு அடைப்பும் வெற்றிகரமாக அமைந்திடவும், அமைதியாக நடைபெறவும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய கடமை உணர்வு ஒவ்வொரு உடன்பிறப்புக்கும் - தோழமைக் கட்சிகளின் செயல்திறன் மிக்க நண்பர்களுக்கும் இருக்கிறது என்பதை நான் சொல்லவும் வேண்டுமோ? நாடு இன்று நாடாக இல்லை! கொடும் விலங்குகள் வாழும் காடாக மாறிக் கொண்டு வருகிறது.

மக்கள் நலன் பற்றிக் கவலைப்படும் மனவளம், மகுடம் தரித்தோர்க்கு இல்லை, மமதைப் போக்கும், மக்கள் சக்தியைத் துச்சமென மதிக்கும் அசட்டுத்தனமும் அவர்களிடம் குடிகொண்டிருப்பதைக் காண முடிகிறது.

ஜனநாயக யுகத்தில் மக்களின் வலிமையைத் தவறாகக் குறைந்து மதிப்பிட்டு, தங்களைத் தாங்களே சர்வாதிகாரிகளாக்கிக் கொண்டு ஆட்டம் போடுகிறவர்களுக்கு ஜனநாயகத்தின் வலிமையை அறவழியில் எடுத்துக் காட்ட வேண்டிய பொறுப்பு எதிர்க் கட்சிகளுக்கும், பொது மக்களுக்கும் இருக்கிறது.

அந்தப் பொறுப்பினை உணர்ந்து கடமையைக் கண்ணியமுடனும், கட்டுப்பாட்டுடனும் ஆற்றிடவே உன்னையும், நமது தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களையும் அன்புடன் அழைக்கிறேன். தமிழ்ப் பெருமக்களின் ஆதரவையும் தோழமைக் கட்சிகளின் சார்பில் கோருகிறேன்.

அன்புடன்,

மு. க.

07-11-1992

1970. சூழ்ச்சிதனை, வஞ்சகத்தைப் பொடிப் பொடியாக்கச் சூளுரைப்போம்! சுழன்று பணியாற்றுவோம்!

உடன்பிறப்பே,

நவம்பர் 10-ஆம் நாள் மாநில முழுதும் நமது கழகமும், தோழமைக் கட்சிகளான மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, ஜனதா தளம், அகில இந்திய பார்வார்டு பிளாக் ஆகிய கட்சிகளும் அணிவகுத்து நடத்திய அறவழி அமைதி ஆர்ப்பாட்டப் போராட்டம் மிகப் பெருமிதமான எழுச்சியுடன் எங்கணும் நடைபெற்றுள்ளது என்ற செய்தி தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கிறது.

நாளை முதல் நவம்பர் 24-ஆம் நாளுக்கான முழு அடைப்பு அறப்போருக்கான காரணங்களை விளக்கி, நாடு முழுதும் பட்டி தொட்டிகள் கூட பாக்கியின்றி, பிர்ச்சாரக் கூட்டங்களை நீயும், நமது தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களும் நடத்த இருக்கின்றீர்கள்.

விவசாயிகளையும், வியாபாரிகளையும், ஏழை எளிய நடுத்தர மக்களையும், வியர்வை சிந்திடும் தொழிலாளர் வர்க்கத்தையும், அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு - வாழ்க்கையை நகர்த்த முடியாமல் பட்டிடும் அல்லல்களையும், அவதிகளையும், பார்ப்பதற்கு மனமின்றி கண்களை மூடிக் கொண்டும் - கேட்பதற்கு மனமின்றி காதுகளைப் பொத்திக் கொண்டும், மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி என்ற பெயரால் நடைபெறும் அலங்கோலங்களை ஆதாரபூர்வமான புள்ளி விபரங்களுடன் மக்கள் முன்னிலையில் எடுத்துரைத்து, மக்கள் விரோத அரசுகளின் மமதைப் போக்கை வன்மையாகக் கண்டிப்பதுதான் கூட்டங்களின் நோக்கமாகவும், கூட்டங்களில் பேசுகின்றவர்கள் கடைப்பிடிக்கும் இலக்கணமாகவும் இருந்திடல் வேண்டும் என்பதை எத்தனையோ முறை எடுத்தியம்பியுள்ளேன்!

அத்தகைய பேச்சுகளுக்காக, அதாவது மத்தியிலும் மாநிலத்திலும் நடைபெறும் ஊழல்களை ஆதாரங்களுடன்

எடுத்துச் சொன்னதற்காகவும் அல்லது சட்டம், ஒழுங்குக்கு விரோதமாகச் செயல்படும் அரசுத்துறைகளில் முறைகேடுகளை விளக்கியதற்காகவும் - எத்தனை வழக்குகள் வேண்டுமானாலும் போடட்டும்! கவலையில்லை!

ஆனால் அதே நேரத்தில், அருவெறுக்கத்தக்கதும், அசிங்கமானதும், ஆபாசமானதும், கேட்போர் முகஞ்சுளிப்பதுமான அளவுக்கு பேசப்படும் எந்த மேடைப் பேச்சுக்களையும் என்னால் அங்கீகரிக்க இயலாது. ஒருசில சுவைஞர்கள் கையொலி செய்திடுவர் என்பதற்காக நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆபாசத்தை அள்ளிப் பொழிவது நமது கழகம் ஏற்றுக் கொண்ட முறையல்ல!

அ.தி.மு.க.வினர் மேடைகளில் பெண் பேச்சாளர்களேகூட, மிகமிக மிகக் கேவலமாகவும், தரக் குறைவாகவும், தலைவரது குடும்பத்தையும், பிள்ளை குட்டிகளையும் பற்றி சொல்லுவதற்கே நாகூசும் சுடுசரங்களால் அர்ச்சிக்கிறார்களே, அதற்கு பதில் கூற வேண்டாமோ? என்று சில பேச்சாளர்கள் நினைப்பது எனக்குப் புரியாமல் இல்லை!

ஆபாசக் களஞ்சியங்களைத் திறந்துவிட்டு நமது கழகத்தைத் தாக்கியவர்களைப் பற்றி அப்போதே அண்ணா ஒரு பட்டம் கொடுத்துப் பாராட்டியிருக்கிறார்! ஆம்; அவர்கள் எல்லாம் 'சந்துமுனை சிந்து பாடிகள்' என்று!

அந்தச் சிந்து பாடிகளில் ஒருவர் நம்மைப் பற்றிப் பேசியதை, ஆமாம் - ஆளுங்கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. பெண்மணி ஒருவர் பேசியதை - சில தினங்களுக்கு முன்பு துக்ளக் இதழே கூட வெளியிட்டிருந்தது. அவற்றில் சில நாராச வார்த்தைகளை பிரசுரிக்கவே முடியவில்லை என்றும் புள்ளிகள் பதித்து அந்த இதழ் சுட்டிக் காட்டியிருந்தது.

எனவே நமது பிரச்சாரக் கூட்டங்களாயினும் - முழு அடைப்பு விளக்க கூட்டங்களாயினும் - நமது கொள்கைகளை, குறிக்கோளை, மக்களின் துன்பதுயரங்களை, மகுடம் அணிந்தோரின் மதோன்மத்தச் செயல்களை எடுத்து விளக்கிட மட்டுமே பயன்பட வேண்டும். அப்போதுதான் எதிர்பார்க்கும் முழுப்பயன் கிடைக்கும்.

பேச்சில் சுவையிருக்கக் கூடாது என்றோ - ஒரே வறட்டு வேதாந்த உபதேசமாக இருக்க வேண்டுமென்றோ

வாதிடுபவனல்லன் நான்! மருந்துடன் எந்த அளவு தேன் கலக்க வேண்டுமோ, அந்த அளவு கலந்திடுவதில் குறை காண மாட்டேன்!

ஒருமுறை அண்ணா அவர்கள், கழகத்தைப் பற்றி மிகக் கீழ்த்தரமாக எழுதியும், பேசியும் வந்த ஒருவரைப் பற்றி, அதுவும் அண்ணாவின் வாலிப வயதில் பதிலுக்கு இரு சொற்றொடர்களைப் பயன்படுத்தினார்.

* **நரகல்நடை அழகர்**

* **நடுங்கா நாக்கழகர்**

என்பதே அந்தச் சொற்றொடர்கள்! துடுக்கும், மிடுக்கும், துள்ளலும் நிறைந்த அந்த வாலிப வயதில்கூட, அண்ணா அவர்கள், சொற்களுக்கு ஒப்பனை செய்துதான் எதிரியைத் தாக்கினார்.

அண்ணாவே சொல்லியிருக்கிறாரே என்று கூறிவிட்டு - நரகல் நடையழகர் என்ற சொல்லுக்குப்பதிலாக, ஏ, பன்றியே! என்றும் - நடுங்கா நாக்கழகர் என்பதற்கு பதிலாக, ஏ, நாயே! என்றும் குறிப்பிடுவது நாகரிகமாகுமா?

பேசுவதற்கு, விளக்குவதற்கு, ஆதாரபூர்வமாக எடுத்துரைப்பதற்கு விஷயங்களா இல்லை?

இதோ இன்றைக்குக் கூட பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பறிக்க, ஏடுகளின் உரிமை என்ற குரல்வளையில் காலை வைத்து அழுத்தும் காரியத்தை, ஜெயலலிதா அரசு, தனது தலைமைச் செயலாளர் வெங்கட்ராமன் அய்.ஏ.எஸ். மூலம் செய்திருக்கிறதே!

ஒருவர் கூறியதை பத்திரிகை வெளியிட்டு அது திட்டமிட்டு கூறப்பட்ட அவதூறாக இருந்தால் கூறியவர் மீதும், பத்திரிகை மீதும் வழக்குத் தொடர உரிமை இருக்கும்போது - அரசைப் பற்றியோ, அமைச்சர்களைப் பற்றியோ எதிர்க்கட்சியினர் கூறுகின்ற எதையும் வெளியிடவே கூடாது என்று, முன்கூட்டியே தடை விதித்து அச்சுறுத்துவது என்பது மினி மிசா என்பதல்லாமல் வேறென்ன?

அவதூறு கூறியவர்மீது வழக்குத் தொடருவதற்குக்கூட, அந்தப் பத்திரிகையில் வந்த அவரது கூற்று சாட்சியமாகக் கொள்ளப்படுகிறதே தவிர, எல்லா ஏடுகளுமே ஒரு அரசின் மீது அவதூறு பரப்ப வேண்டுமென எண்ணி நடைபெறுகின்றவை அல்ல!

இதனை விளக்கி முழு அடைப்புப் பிரச்சாரக் கூட்டங்களில் பேசலாமே!

ஆலயங்களில் கொள்ளை - சிலை திருட்டு - அன்றாட நிகழ்ச்சிகளாகியுள்ளன! வணிக நிலையங்களில் சூறையாடல் என்ற செய்தி வந்த வண்ணமிருக்கின்றன. தாலி அறுத்தல் - சங்கிலி அறுத்தல் - சாலையில் நடப்போரிடம் கொள்ளை - காவல் நிலையங்களில் கற்பழிப்பு, கொலை, அதனை மூடி மறைக்க முயற்சி - ஒரு பெண் அய்.ஏ.எஸ். அதிகாரி மீதே திராவக வீச்சு - சாராய சாம்ராஜ்யம் பற்றி சட்டசபையில் பேசினால், பேசியவர் வீட்டிலேயே போலீஸ் சோதனை - மிரட்டல் - கெடுபிடி! தராசு அலுவலகத்தில் இரட்டைக் கொலை - அதற்கு ஒரு அதிகாரி மீது பழி போட்டார்கள். ஆனால் அதனைச் செய்தவர்கள் அமைச்சரின் கையாட்கள் என்பது ஊரறிந்த உண்மை! ஊழல்களைச் சுட்டிக் காட்டினால் நக்கீரன் மீது தாக்குதல் - ஊருக்கு ஊர் ஆளுங்கட்சியினர் அந்த ஏட்டுக்குத் தீயிட்டுத் திருவிழா - அதனைக் கண்டித்துப் பேசினேன் என்பதற்காக என்மீது மானநஷ்ட வழக்கு! ஊழல்களை விவாதித்த கழகச் சொற்பொழிவாளர்கள் மீதும், துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சிலார் மீதும் அரசு தொடர்ந்துள்ள வழக்குகள்! ஒன்றா? இரண்டா? முப்பது நாற்பது வழக்குகள்! இவைகளைப் பற்றிப் பேசலாமே!

வாச்சாத்தி எனும் ஊரில் பல மலைவாசிப் பெண்களை வேலியே பயிரை மேய்ந்தது போல, காவல் துறையினரே வனத்துறை அதிகாரிகளுடன் சேர்ந்து கற்பழித்த கொடுமை!

இதனை மக்களுக்கு விளக்கலாமல்லவா?

இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கையால் விளைந்துள்ள கேடுபாடுகளையும், அந்தக் கொள்கையை ஆதரித்து வரவேற்றுள்ள ஜெயலலிதா அரசின் கொள்கைக் குழப்பத்தையும், அதனால் அரசுடைமைகள் பல, தனியார் ஆதிக்கத்துக்கு தாரை வார்க்கப்பட்டுத் தமிழக அரசின் கருவூலம் இளைத்துப்போய் உள்ள நிலைமையையும், நான் முரசொலியில் தொடர்ந்து எழுதியுள்ள கடிதங்களைத் திரும்பவும் படித்து இவற்றை நமது விரிவுரையாளர்கள் மேடைகளில் விளக்கலாமே!

தொழில் வரியால் வணிகர்கள், ஏன் சிறிய வெற்றிலைபாக்குக் கடைக்காரர்கள் உட்பட வேதனைக்கு ஆளாகிறார்கள்.

உரவிலையோ, விவசாயிகளின் வாழ்வில் எலும்புருக்கி நோய் போலவும், கான்சர் நோய் போலவும் தாக்குதலைத் தொடங்கியிருக்கிறது!

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலைகள் நடுத்தர ஏழை மக்களை நசுக்கிப்பிழிகின்றன!

சாராய சாம்ராஜ்யத்தின் இறக்கப்பட்ட கொடி, மீண்டும் கோட்டை முகப்பிலேயுள்ள தேசியக் கொடியையே வென்று காட்டுகிற அளவுக்கு விண்முட்டிப் பறக்க விடப்பட்டுள்ளது!

இத்தனையும் மிக்க விரிவாக முழு அடைப்பு பிரச்சார மேடைகளில் முழங்கிடப்பட வேண்டும்!

வேகம் வேண்டும் - வீரம் வேண்டும் - அத்துடன் விவேகமிக்க ஆற்றலுடன் விஷயங்களை அள்ளித்தரும் நெஞ்சத்திறன் வேண்டும்! விரசம் துளியும், ஆம் - சிறுதுளியும் தலைகாட்டக் கூடாது!

முழு அடைப்பையொட்டி நடைபெறுகிற கூட்டங்களோ, தெருமுனைப் பிரச்சாரங்களோ, நாட்டின் படப்பிடிப்பாக இருக்க வேண்டுமே தவிர, நடுநிலையுடன் சிந்திப்போர் எள் முனையளவுகூட எரிச்சல் கொள்கிற அளவுக்கு இருத்தலாகாது!

தொடர்ந்து நாம் தொகுத்து வழங்கி வருகிற கருத்துகளின் தோரணங்களாக இந்த விளக்கக் கூட்டங்கள் திகழட்டும்!

வேண்டுகோள் விடுத்திடுவோம். தமிழ் நாட்டில் உள்ள அனைத்துப் பிரிவு மக்களுக்காகத்தான் நவம்பர் 24 நடைபெறுகிறது என்பதை அவர்கள் ஒவ்வொருவரையும் உணர வைத்திடவும், அவர்தம் ஒத்துழைப்பைப் பெற்றிடவும், உதவாதினி ஒரு தாமதம்; உடனே எழுக உடன் பிறப்பே! என அன்புடன் அழைக்கிறேன்.

தோழமைக் கட்சியினரின் தோளோடு தோள் இணைந்து, நவம்பர் 24 முழு அடைப்பின் வெற்றிக்குச் சுடர் முகம் தூக்கிடுக!

சூழ்ச்சிதனை, வஞ்சகத்தைப் பொடிப்பொடியாக்குவோம் எனச் சூளுரைத்து, இன்று முதல் சுழன்று பணியாற்றுவோம்! வா!

அன்புடன்,

மு. க.

12-11-1992

1971. நேற்று பேசியது நினைவுக்கு வரவில்லையோ?

உடன்பிறப்பே,

அ தமிழக ஆளுநர், ஒரு சாராருக்குத் தனிச்சலுகை காட்டி எப்படியெல்லாம் முறைகேடான காரியங்களில் ஈடுபட்டுள்ளார் என்பதை மக்கள் மன்றத்திற்கு எடுத்துக் காட்டுவது அவசியமாகிவிட்டது.

*

ஆ கவர்னர் அரசியல் சட்டத்திற்கும், ஜனநாயகத்திற்கும் விரோதமாக அரசியல் சார்புடன் நடந்து கொண்டிருக்கிறார். இதன்மூலம் அவர் தமது பதவிக்குரிய உயர்வைக் குறைத்துவிட்டார்.

*

நான் இந்தக் கடிதத் தொடக்கத்திலேயே குறிப்பிட்டுள்ள அ, ஆ என்ற இரு பகுதி விமர்சனங்களும் தமிழக ஆளுநரைப் பற்றியது. ஆமாம்! அரசின் நிலத்தை அமைச்சர்கள் வாங்கக்கூடாது என்ற மரபுக்கு முரணாகவும், அரசின் உடைமைகளை அரசின் பப்ளிக் சர்வென்ட் எனப்படும் அமைச்சரோ அல்லது அவர் பங்குதாராராக இருக்கும் நிறுவனமோ வாங்கக் கூடாது என்ற சட்டத்திற்கு மாறாகவும் ஜெயலலிதா செயல்பட்டதோடு, நாலு கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை 2 கோடிக்கும் குறைவாக வாங்கி அரசுக்கு நஷ்டம் வரக் காரணமாக இருந்துள்ளார் என்றும், முத்திரைத்தாள் கட்டணமும் முறையாகச் செலுத்தாமல் மோசடி முயற்சி நடந்துள்ளதென்றும் அளித்துள்ள குற்றச்சாட்டே ஆதாரமற்றது எனவும்,

ஸ்பிக் நிறுவனத்தில் தனி முதலாளி கையை ஓங்கச் செய்து, அரசின் கையை தாழ்த்திக் கொண்டதோடு, பங்குகளை விற்றதில் தனியாருக்குச் சலுகை காட்டி, அரசுத்துறைக்கு சுமார் முப்பது

கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்திட முனைந்தபோது டிட்கோவில் பொறுப்பில் இருந்த அய்.ஏ.எஸ். பெண் அதிகாரி சந்திரலேகா தடுத்தும் கேளாமல் ஜெயலலிதா செயல்பட்டார் எனவும், அதனால் அரசுக்கு முப்பது கோடி இழப்பு எனவும் சுட்டிக்காட்டிய குற்றச்சாட்டே ஆதாரமற்றது எனக் கூறியும்,

இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி நிலம் நூறு கோடி ரூபாய் மதிப்புள்ளது, அரசுக்குச் சொந்தமானதாக இருந்தும்கூட, உயர்நீதிமன்றத் தீர்ப்பை உடனடியாக - அவசர அவசரமாக அமைச்சரவையைக் கூட்டி, அமல்படுத்தி விட்டு, உச்சநீதிமன்றம் சென்று மேல்முறையீடு செய்யாமல் அரசின் நிலத்தையும், தி.மு.க. அரசு கையகப்படுத்திய மருத்துவக் கல்லூரியையும் தனியாருக்குத் தாரை வார்த்து விட்ட ஜெயலலிதாவின் ஊழலை வெளிப்படுத்தும் குற்றச்சாட்டையும் ஆதாரமற்றது எனப் புகன்றும்,

இவற்றைப் போலவே 18 குற்றச்சாட்டுகளிலும் பசை இல்லை என்று பதில் எழுதியுமுள்ள இன்றைய தமிழக கவர்னரைப் பற்றி நான் விமர்சித்துள்ள வாசகம்தான் மேலே - அ - ஆ - என்று குறியிட்டு, சுட்டிக் காட்டப்பட்டுள்ளவை என நீ எண்ணிடக் கூடும்.

இல்லை! இல்லவே இல்லை! அவை என் விமர்சனமல்ல! ஆனால், அந்த வாசகங்களுக்கு உரிமையாளர்கள் யார் தெரியுமா?

அ - என்றுள்ள பகுதியில் வரும் வாசகம், தமிழக நிதியமைச்சர் நாவலர் அவர்கள் உதிர்த்த முத்தாகும்.

ஆ - என்றுள்ள பகுதியில் வரும் வாசகம்; தமிழக முதலமைச்சர் அதாவது நாவலரின் இதயதெய்வம் ஜெயலலிதா உதிர்த்த வைரமாகும்.

திட்டவட்டமான ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுகளை கவர்னர் பீஷ்மநாராயணரிடம் கொடுத்துள்ளோம். ஆதாரமில்லை! அதனால் அனுமதி இல்லை! எனப் பதில் அனுப்புகிறார்.

அதை விமர்சிக்க எனக்கோ, தி.மு.கழகத்திற்கோ உரிமையில்லையாம்! கவர்னர் செயலுக்கு உள் நோக்கம் கற்பிக்கலாமா? என்று என் மீது காய்ந்து விழுந்து நாவலர் பெயரால் ஒரு அறிக்கை வந்திருக்கிறதல்லவா? அந்த நாவலர் தான் நண்பர் எம்.ஜி.ஆர். மறைந்த பிறகு ஏற்பட்ட பிரச்சினையின் போது,

அன்றைக்கு கவர்னராக இருந்த குரானா அவர்கள் முறைகேடான காரியங்களில் ஈடுபட்டுள்ளார். இதனை மக்கள் மன்றத்துக்கு எடுத்துக்காட்டுவது அவசியமாகிவிட்டது என்று ஏடுகளுக்கு பேட்டியும், அறிக்கையும் கொடுத்தார்.

நாவலருடைய தற்காலிகத் தலைவியோ கவர்னர் குரானா, அரசியல் சட்டத்துக்கும், ஜனநாயகத்துக்கும் விரோதி - கவர்னர் பதவிக்குரிய உயர்வையே குறைத்துவிட்டார் என்று கடுமையாக அறிக்கை விடுத்தார்.

இந்தப் பழைய விஷயங்கள் எல்லாம் தெரு நாய் போல ஓடி ஒளிந்துவிடும் - அல்லது உதிர்ந்த ரோமம் போல மக்கள் மனதிலிருந்து மறந்துபோய்விடும், என எண்ணிக்கொண்டு, நாவலர் அவர்கள், இன்றைய ஆளுநரின் பாரபட்ச போக்கு பற்றி நான் கண்டனம் செய்துள்ளதைக் கடுமையாக விமர்சிக்கிறார்.

எனவே நாவலரும், அவரது தலைவியும், நாவலரின் தற்போதைய கண்டனத்தை வெளியிட்டு மகிழும் ஏடுகளும் 1988-ல் கவர்னர் பதவியில் இருந்த மேதகு குரானாவைப்பற்றி ஜெயலலிதா குழுவினர் பேசியதை நினைவிற் கொண்டு; அதன் பிறகு இன்றைய கவர்னரைப் பற்றி நான் கூறியதை சரியா? அல்லவா? என்று சிந்தித்துப் பார்க்கலாம் அல்லவா? அவர்கள் சிந்திக்கவேண்டாம்!

நீ சிந்தித்து, மக்களைச் சிந்திக்க வைக்கவே இந்தக் கடிதம்!

அன்புடன்,

மு. க.

19-11-1992

1972. மனிதநேயப் பணியில் மாச்சர்யங்களுக்கு இடமில்லை!

உடன்பிறப்பே,

நீர்பெருகி ஆவேசங் கொண்டால் அது நெருப்பை விடக் கொடுமையானது என்பதைக் கடந்த ஒருவார காலமாகத் தமிழகத்திலும், அண்டை மாநிலங்களிலும் ஏற்பட்ட புயல் வெள்ளப் பாதிப்புகள் நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

நிலச்சரிவுகளின் காரணமாகப் புதைந்து போன வீடுகள் - அந்த வீடுகளுடன் சேர்ந்து நிரந்தரமாகவே அணைந்து போன குடும்ப விளக்குகள், குத்து விளக்குகளும்! அகல் விளக்குகளுமாக! அம்மவோ! அந்தச் செய்திகளைப் படிக்கும் போதும், கேட்கும் போதும் நம் விழிகளை முந்திக்கொண்டு இதயங்கள் அழுகின்றன.

மகனோடு சேர்ந்து தந்தை புதைந்து போக, தந்தையின் கையொன்று மட்டும் அசைவது தெரிந்து அவரை மீட்பதற்காக இடிபாடுகளைத் தோண்டி எடுக்கும் போதும், அந்தத் தந்தை கையில் மகனைப் பிடித்தபடி வெளியே வருகிறார். தந்தை பிழைத்தபடி! மகனோ பிணமாக! தாங்க முடியாத கொடுமையன்றோ இஃது!

மழை பொழிந்து கொண்டேயிருக்க, மேடுகளில் இருந்து வழிந்து கொண்டேயிருந்த வெள்ளம் வீட்டைச் சூழ்கிறது. சுவர்களை மூழ்க அடிக்கிறது. நீரில் மூழ்கி சாகப் போகிறோம் என்று நினைத்துவிட்ட தாயோ, தன் குழந்தையாவது பிழைத்துக் கொள்ளட்டுமென்று அந்த மழலையை வீட்டுப் பரணில் தூக்கிப் போட்டுவிட்டு நீருக்கு இரையாகினாள். ஆனால், பரண் மீதும் வெள்ளம் பாய்ந்து அந்த மெல்லிய முல்லைப்பூவை மூச்சிழக்கச் செய்த தன் முதுகில் ஏற்றிக் கொண்டுபோய், தனது முடிவை நிறைவேற்றி விடுகிறது!

நெல்லையிலும், குமரியிலும், மதுரையிலும், சிதம்பரத்திலும் ஆட்சியாளரின் முன் எச்சரிக்கை முறையாக இல்லாத காரணத்தாலும், அபாயம் வரப்போகிறது என அதிகாரிகளுக்குப் பொதுமக்கள் உணர்த்தி அபயம் கோரிய போதிலும், அலட்சியமே ஆட்சி அலுவலகங்களில் முனைப்பாக இருந்தபடியால் மாண்டோர் பலர்! மகளிர், மழலைகள், பெரியோர், இளைஞர் என நூற்றுக்கணக்கில்! இவை வெறும் கற்பனையல்ல! பல பகுதிகளில் முதலமைச்சர் ஜெயலலிதாவிடமே பாதிக்கப்பட்ட மக்கள் அதிகாரிகளின் அசட்டை குறித்தும், அலட்சியம் குறித்தும் முறையிட்டு அழுதனர் என்பதை ஆளுங்கட்சியின் ஆதரவு ஏடுகளே கூட, வேறு வழியின்றி வெளியிட்டிருக்கின்றன.

கழனிகள் எல்லாம் வெள்ளக்காடு - கழுகு, வாழை என பல்லாயிரக்கணக்கில் கவிழ்ந்து கிடக்கும் கவலை தரும் காட்சிகள் - கரும்புத் தோட்டங்கள் பாழ் - அறுத்த நெல்லை வீதிகளில் மூட்டைகளாக அடுக்கி வைத்துவிட்டு, பாதுகாக்க வழியின்றிக் காத்திருந்த விவசாயிகளோ அந்த நெல் மூட்டைகளின் கதிகண்டு கண்கலங்கி நிற்கின்றனர்.

இரண்டு ஆண்டுக் காலமாகக் கிராமப்புறத் திட்டங்கள், சாலைகள், பாலங்கள், ஏரி, குளங்கள் எல்லாம் அறிவிப்போடு நின்றதால் - இப்போதைய இயற்கையின் சீற்றத்தால் அனைத்தும் அடியோடு சீர்குலைந்த நிலைமை.

மத்திய அரசு, சேதங்களைப் பார்வையிட தனியாகப் பறக்க - மாநில அரசு தனியாகப் பறக்க, இவர்களின் அரசியல் ஊடல் விளக்கப்பட இதுதானா சமயம் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் துடிக்க - இப்படியொரு பரிதாபமான சூழல், தமிழகத்தில்!

* மத்திய அரசு அமைச்சர்கள் தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் அதிகாரிகளை அழைத்து அவர்களாகவே விவாதிக்கிறார்கள்.

* மாநில அரசு சார்பில் ஓர் அமைச்சர் கூட அதனைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

இந்த இரண்டுமே தவறு! இவர்களின் கூட்டணிச் சண்டைக்கு தமிழ் மக்களின் பாதிப்புகள் என்ன பகடைக்காய்களா?

இந்த விபரீத விளையாட்டுக்களினூடே ஜெயலலிதா தனது சுற்றுப்பயணத்தைப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முதலமைச்சர் என்ற முறையில் தொடங்கி, அரசாங்க அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், போலீஸ் அதிகாரிகள் புடை சூழ அ.தி.மு.க. கட்சிக்கு விளம்பரம் தேடிட, தனது கட்சி சார்பில் உதவிகள் அளிப்பதாக ஆங்காங்கு அறிவித்திருக்கிறார்.

மக்களுக்குப் போய்ச் சேரவேண்டிய துயர் துடைப்பு வசதிகள் ஒழுங்காகப் போய்ச் சேருகின்றனவா எனக் கவனிக்கவோ, கவலைப்படவோ இன்று தமிழகத்தின் ஆளுங்கட்சியினர் தயாராக இல்லை! இதிலும் அகப்பட்டதை சுருட்டடா ஆண்டியப்பா! என்ற தோரணையில்தான் துயர் தணிப்புக் காரியங்கள் நடைபெறுகின்றன என்று நாள்தோறும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

எனவேதான், நான், நமது கழக அமைப்புகளையும், நிர்வாகிகளையும், கழகத்தின் துணை அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பகலென்றும், இரவென்றும் பாராது நித்த நித்தம் நிவாரணப் பணிகளில் ஈடுபடுமாறு!

மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கு, முன்பே வேண்டுகோள் விடுத்துள்ளேன். பாதிப்பு விபரங்களை முழுமையாகக் குறிப்பிட்டுத் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்குமாறு!

நவம்பர் 24 முழு அடைப்பு அறப்போராட்டத்தையே ஒத்திவைத்தோமென்றால், அதற்கு ஒரே காரணம் - நமது கழகத்தினரும், தோழமைக் கட்சியினரும், புயல் வெள்ளச் சீரழிவுகளிலே இருந்து தமிழ் மக்களை மீட்டு, அவர்களுக்குப் புதுவாழ்வு அளித்திட உரியவர்களை அணுகி ஆவன செய்திட வேண்டுமென்பதற்காகத்தான்!

உடன்பிறப்பே, மீண்டும் மீண்டும் நான் விடுத்திடும் இந்த வேண்டுகோளினை ஏற்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு பக்கத் துணையாக இருந்து, அவர்கட்கு ஆறுதல் அளித்திடும் அரும்பணிகளை மேற்கொண்டிடுக!

மனித நேயங்கொண்டு புரிந்திடும் தொண்டில் கட்சிமாச்சரியங்களுக்கு இடமில்லை! அதற்கே முதலிடமென

யாராவது செயல்படின், அவர்களை அலட்சியப்படுத்தி விட்டு, என்றும் - எந்த நிலையிலும் மக்களுக்கு என நாம் ஏற்றுக்கொண்ட பணியினைத் தயக்கமின்றிச் செய்திடவும், ஓய்வின்றி உழைத்திடவும் உன்னை நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்,

மு. க.

20-11-1992

1973. ஏகலைவன் கதை; இன்னமும் நடப்பதோ?

உடன்பிறப்பே,

மண்டல் பரிந்துரையை தேசிய முன்னணி அரசு செயல்படுத்தத் தொடங்குவதாக அறிவித்தவுடனேயே, அயோத்திப் பிரச்சினையையும், மண்டல் எதிர்ப்பையும் ஒருமுனைப்படுத்தி வட மாநிலங்களில் மாணவர்களைத் தூண்டி விட்டுக் கிளர்ச்சிகளை நடத்தியது மட்டுமின்றி - ஆரம்பத்திலேயே மண்டல் பரிந்துரை அமலாக்கத்தை பாராளுமன்றத்தில் எதிர்த்த ராஜீவ் காந்தியுடனும், மண்டல் பரிந்துரை பொருளாதார அடிப்படையில்தான் இருக்க வேண்டுமென்று அறிக்கை விடுத்த ஜெயலலிதாவுடனும் சேர்ந்து கொண்டு, சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் ஆட்சியை ஆதிக்க சக்திகள் கவிழ்த்தன. சமூக நீதிக்காக ஆட்சியை இழந்த தேசிய முன்னணியின் தளகர்த்தர் வி.பி.சிங் அவர்களைத் தமிழகத்தில் ஆட்சியிலிருந்த கழகம் வரவேற்றுப் பாராட்டி, சென்னை முதல் குமரிமுனை வரையில் பவனி நடத்தியதைக் கண்டு எரிச்சலடைந்த அதே கூட்டம் ஈழத் தமிழ்ப் போராளிகளைக் காரணமாகக் காட்டி கழக ஆட்சியையும் கலைத்தது.

இப்போதுகூட, உச்ச நீதிமன்றத் தீர்ப்பினால் மண்டல் பரிந்துரைக்கு மூச்சுத்தான் வந்திருக்கிறது. இன்னும் அந்தப் பரிந்துரை எழுந்து நடமாடக்கூட இல்லை. ஆனால் அதற்குள், வடக்கில் உள்ள ஆதிக்க சக்திகள் டெல்லியிலும், அரியானாவிலும், சண்டிகரிலும், உத்திரபிரதேசத்திலும் சாலை மறியல், பேருந்து எரிப்பு, ரயில்களைக் கொளுத்துதல் போன்ற மண்டலுக்கு எதிர்ப்பான ஆர்ப்பாட்டங்களை உசுப்பி விட்டுள்ளன. அதனை இங்குள்ள ஆதிக்கபுரி ஏடுகள், விஷமத்தனமாக விளம்பரப்படுத்தி தென்னகத்திலும், குறிப்பாகத் தமிழகத்திலும் மண்டலுக்கு

எதிராகக் கொந்தளிப்பை ஏற்படுத்தலாமா என எண்ணிச் செயல்படுகின்றன.

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் கொடும் பாவி கொளுத்துகிற அளவுக்கு ஆர்ப்பாட்டங்கள் தூண்டி விடப்பட்டிருக்கின்றன என்றால், ஒரு துப்பாக்கி ரவையைப் பயன்படுத்தி நூறு புறாக்களை விரட்டுவதுபோல - பலகோடிப் பிற்படுத்தப்பட்ட மக்களை மிகச் சிறுபான்மை எண்ணிக்கையுள்ள ஆதிக்க வாதிகள் மிரட்டுகிறார்கள் என்பதுதானே உண்மை.

உடன்பிறப்பே, தி.மு.கழகத்தின் ஐம்பெரும் முழக்கம் 1970ஆம் ஆண்டு நடைபெற்ற திருச்சி மாநாட்டில் ஒலித்தது. ஆம்! இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

1. அண்ணா வழியில் அயராது உழைப்போம்

2. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்

3. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்

4. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்

5. மாநிலத்தில் சுயாட்சி - மத்தியிலே கூட்டாட்சி

இந்த முழக்கங்களில் இரண்டாவது முழக்கம்தான் ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைப்பதாகும்! அதற்குத் துணை நிற்கக் கூடிய கருவிகளில் ஒன்றே மண்டல் கமிஷன் பரிந்துரையை செயல்படுத்துவதாகும்.

மிகக் குறைவான சதவிகிதமுடையோர் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்வது, மிகப் பெரும் சதவிகித எண்ணிக்கையினர் - சுப்பனாய், குப்பனாய், வெறும் சோற்றுத்துருத்தியாய், மூட்டை தூக்கும் முத்தனாய்த்தான் வாழ்க்கையை நகர்த்த வேண்டுமென்று எவன் தலையில் எழுதினானோ, அப்படி எழுதியவன் கைகளில் விலங்கு பூட்டி வீதி வீதியாக இழுத்தடிக்க வேண்டுமெனினும், அதைக் கூடச் செய்யாமல் பொறுமையாக எமக்குள்ளதை எமக்கு நியாயமாகக் கொடு என்று கேட்டுப் பெறுவதே குற்றமா?

இது இன்று நேற்றல்ல! மகாபாரதக் காலத்திற்கு முன்பிருந்தே நடைபெறும் அநீதியான காரியமல்லவா?

உடன்பிறப்பே, முரசொலியில் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க நீ தினமணி வாங்குவதில்லை!

படிப்பதில்லை! ஆனால், நான் படிக்க வேண்டியிருக்கிறது - ஏன் என்ற காரணத்தை நீ புரிந்து கொள்வாய்!

இன்றைய சென்னை தினமணியில் ஒரு கட்டுரை - ஏகலைவனின் வலது கை கட்டை விரலை துரோணர் குருதட்சணையாகக் கேட்டு வாங்கிக் கொண்டதை நியாயப்படுத்துகிறது அந்தக் கட்டுரை! ஏகலைவன் வேடனாம் - அவன் அரச குமாரர்கள் கற்றுக் கொள்ளக் கூடிய வில் வித்தையைக் கற்றுக் கொண்டால், அவன் அந்த வித்தையைக் கொண்டு காட்டில் உள்ள மிருகங்களையெல்லாம் அழித்து விடுவானாம். அவனுக்கு சாதாரண வில்வித்தை தெரிந்தால் கொஞ்சம் மிருகங்களைத்தான் அழிப்பானாம்! அந்தக் காலத்திலும் சரி, இந்தக் காலத்திலும் சரி ஒருவருக்குள்ள கடமையை இன்னொருவர் செய்யக் கூடாதாம்! அதனால்தான், ஏகலைவன் கற்ற வித்தை அவனுக்குப் பயன்படாமற் போக அவனது கட்டை விரலைக் காணிக்கையாகப் பெறுகிறாராம் துரோணாச்சாரியார்! இதுதான் அந்தக் கட்டுரையின் சாரம்!

குரு கேட்டவுடன் கட்டை விரலை காணிக்கையாகக் கொடுத்தவன், குரு கட்டளையிட்டால் மிருகங்களை கொல்லாமல் இருந்திருக்கமாட்டானா?

இதிலிருந்து தெளிவாகும் உண்மை என்ன? பிற்படுத்தப்பட்ட மக்கள் ஏகலைவர்களாகவே இருக்க வேண்டும்! ஒருவருக்குள்ள கடமையை இன்னொருவர் செய்யக் கூடாது என்ற துரோணோபதேசம், தினமணி மூலம் செய்யப்படுகிறதல்லவா? அந்த உபதேசம் ஏகலைவர்களுக்கு மட்டும்தான்! உபதேசத்தை அருளியவர்களுக்கு கிடையாது! அவர்கள் உத்தியோகங்கள், கல்வி நிலையங்கள், ஏன்? எல்லாவித உயர்ந்த வேலை வாய்ப்புகளிலும் போய் அமர்ந்து கொள்ளலாம்! அப்போது ஒருவருக்குள்ள கடமையை இன்னொருவர் செய்யக் கூடாது என்ற அறிவுரையைத் தூக்கிக் குப்பைத் தொட்டியிலே போட்டுவிடுவார்கள்!

ஏகலைவன், எச்சிலை மிதித்துவிட்டால்கூட ஏ, நீசா! பாவீ! பரமபாதகா! என தூஷிப்பர்!

ஆனால் அவர்களோ, நரகல் மலையென ஊழலைக் குவித்து நடுவில் அமர்ந்திருந்தால்கூட, என்னே நறுமணச் சிம்மாசனம்! என பகுத்தறிவுவாதிகள் எனக் கூறிக்கொள்வோரும் பாராட்டுவர்!

அதனால்தான் மண்டல் பரிந்துரைக்கு உயிர் கொடுத்துள்ள உச்சநீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து தூண்டப்பட்டுள்ள கிளர்ச்சிகளுக்கு தூபம் போடுவதுபோல செய்தி வெளியிடும் தினமணி, துரோணரின் கருத்தை அலசி ஆராய்ந்து வேடன் மகன் வேடனாய்த்தானிருக்க வேண்டும் - வேந்தன் மகன் வேந்தனாய்த்தான் இருக்க வேண்டுமென மீண்டும் குலக் கல்வி திட்டம் என்ற கொள்ளிக் கட்டையைத் தூக்கிக் கொண்டு நிற்கிறது!

அந்தக் கொள்ளியை அணைத்திட, இப்போது தமிழகத்தில் பெருகிய இயற்கை வெள்ளம்போல் - திராவிட இயக்கப் பெருவெள்ளம் சீறிப் பாயும் என்பதை மட்டும் நினைவுபடுத்துவது என் கடமையாகும்.

அன்புடன்,

மு. க.

21-11-1992

1974. கபாலிகர் கூட்டத்துடன் கைகுலுக்கல்!

உடன்பிறப்பே,

தேசிய ஒருமைப்பாடு மன்றக் கூட்டத்தில் ஜெயலலிதா, திராவிட இயக்க உணர்வுகளுக்கு முற்றிலும் மாறாக ஒரு கருத்தை வலியுறுத்தித் தன்னை அடையாளம் காட்டிக்கொள்வதற்கு முன்பே, அவர் கடந்த சில நாட்களுக்கு முன் டெல்லியில் பிரதமரைச் சந்திக்காமல் பாரதீய ஜனதா தலைவர் அத்வானியைச் சந்தித்து விருந்தருந்தியதோடு, நீண்டநேரம் விவாதித்து விட்டுத் திரும்பினார். இப்பொழுது ஜெயலலிதா தேசிய ஒருமைப்பாடு மன்றக் கூட்டத்தில் பேசிய பிறகு அத்வானி அவர்கள், சபாஷ்! கரகோஷம்! செய்து அவரது கருத்துக்கு வரவேற்பு கூறியிருக்கிறார். டெல்லியில் ஜெயலலிதா தங்கியிருந்த தமிழக அரசு விடுதிக்கே பாரதீய ஜனதா தலைவர்கள் சென்று அவருக்குப் பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் உள்ள பாரதீய ஜனதாக்காரர்களும், இந்து முன்னணியினரும் தரைக்கும் ஆகாயத்துக்குமாகத் தாவிக் குதிக்கின்றனர்.

பேச்சென்றால் இதுவன்றோ பேச்சு! முத்து என்பதா? பவளம் என்பதா? மாணிக்கமென்பதா? மரகதமென்பதா? என வர்ணனைகளைக் கொட்டி, வாழ்த்துக் கூறிக் களிக்கின்றனர்! மதவெறியூட்டி மக்களை அமளிக்காட்டில் தள்ளிவிட்டு மகிழ்ச்சிக் கூத்தாட வேண்டுமெனத் துடித்துக் கொண்டிருப்பவர்கள்!

ஏன்? அவர்களுக்கு ஏன் அவ்வளவு குதூகலம்! அத்துணைக் கொக்கரிப்பு? ஜெயலலிதா என்ற பெரிய உலகத் தலைவர், தமக்கு ஆதரவு கொடுக்க வந்துவிட்டார் என்று எண்ணிக் கொண்டா இன்பப் பண்ணிசைக்கிறார்கள் அவர்கள்? இல்லை! இல்லவே இல்லை!

வேறு என்ன காரணம்? அந்த விஷம வேதாந்திகளின் சிரிப்புக்கு?

பெரியார், அண்ணா என்ற தலைவர்களால் பக்குவப்படுத்தப்பட்ட திராவிட மண், தமிழ்நாட்டு மண் என்று பெருமைப்பட்டுக் கொள்வீர்களே? இதோ அந்த மண்ணில் - திராவிட இயக்கத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டுள்ள ஒரு முதலமைச்சரையே எங்கள் சார்பாகப் பேச வைத்துவிட்டோம் பார்த்தீர்களா? என்ற வெற்றிச் சிரிப்புத்தான் அந்தச் சிரிப்பு!

உடன்பிறப்பே, பாரதீய ஜனதா, இந்து முன்னணி போன்ற அமைப்புகளில் உள்ளோர் இங்கேதான் தவறு செய்கிறார்கள்!

ஜெயலலிதாவை எங்கள் சார்பாக பேச வைத்து விட்டோம் என்று அவர்கள் கூறுவதுதான் தவறு என்கிறேன் நான்!

அவர்களுக்கு நான் தருகிற விளக்கம் இதுதான்! அய்யா! பெரியவர்களே! வேத வேதாந்திகளே! ஜெயலலிதா எப்போது திராவிட இயக்க உணர்வுகளுடன் இருந்தார்? இப்போது நீங்கள் அவரை மாற்றி, உங்கள் சார்பாகப் பேச வைத்து விட்டதாக உரைத்து மகிழ்கிறீர்கள்! திராவிட இயக்கப் போர்வையில் குளிர் காயும் ஜெயலலிதா, எப்போதும் உங்கள் அமைப்புகளின் மீது பற்றும், பாசமும் கொண்டவர் மட்டுமல்ல - உங்கள் அமைப்பின் அங்கமாகவே திகழ்பவர்தான்!

திராவிட இயக்கக் கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைக்க ஜெயலலிதாவுக்கு பெரியார் பெயர் தேவைப்பட்டது! அண்ணா பெயர் தேவைப்பட்டது! இரண்டையும் பயன்படுத்தி, தமிழ்நாட்டு மக்களைத் தங்கள் விரல்களாலேயே தங்கள் கண்களை குத்திக் கொள்ளுமாறு ஜெகஜால வித்தை செய்து காட்டிவிட்டார். போதாதற்கு எந்த எம்.ஜி.ஆர். அவர்களைப்பற்றி பொறாமைக்காரர், வஞ்சகர் - தன் வளர்ச்சிகண்டு அசூயை கொண்டுள்ளார் என்று குற்றம் சாட்டி ஜெயலலிதா தன் கையாலேயே கடிதம் எழுதினாரோ - அந்த எம்.ஜி.ஆர். பெயரையும் பயன்படுத்திக் கொண்டு - எம்.ஜி.ஆரின் தொண்டர்களையும் ஏமாற்றி அரியாசனத்தில் ஏறி அமர்ந்து கொண்டுவிட்டார்.

என் செய்வது? இவர் யார் என்று அடையாளம் காட்டியபோது, நம்ப மறுத்து விட்டனரே தமிழ் மக்கள்! இவருக்காக வக்காலத்து வாங்கவுமன்றோ சிலர் வலியக் கிளம்பினர்!

அந்த தைரியத்தில்தான் அன்றொருநாள் நீதிக்கட்சி காலத்தில், திராவிட இயக்கத் தோன்றல்கள் கொண்டுவந்த

அறநிலையப் பாதுகாப்புத் துறையை முடக்கிப் போட்டுவிட்டு ஆலய வாரியம் அமைக்கப்பட்டது ஜெயலலிதா ஆட்சியில்!

வேதக் கல்லூரி அமைப்பதாக அறிவிப்புகள்! திட்டங்கள்! வியாக்யானங்கள்!

குடந்தை மகாமகக் குளத்தில் முதன்முதலாக ஒரு முதலமைச்சர் நீராடிய ஆடம்பர நிகழ்ச்சி! நூற்றுக்கணக்கான மக்கள் பிணமான காட்சி!

எனவேதான் சொல்லுகிறேன்! மதச் சார்பின்மைக் கொள்கை நிலைத்திட வேண்டுமெனக் கருதும் பல கோடி மக்களுக்கிடையே பகை நெருப்பை மூட்டி, இந்திய நாட்டைத் தணல் காடாக்கத் திட்டமிடும் தயாபரர்களே! தசரதராஜ குமாரனின் பெயரால் இரத்தத் தடாகங்களை இந்திய மண் முழுதும் அமைத்திட வலை பின்னும் அயோத்திப் பிரியர்களே! நினைவிற் கொள்ளுங்கள்! உங்களில் ஒருவர்தான் உங்களுக்கு சார்பாகப் பேசியுள்ளாரே தவிர, அவர் வேறு முகாமைச் சேர்ந்தவர் அல்லர்! கரையான் புற்றெடுக்க அங்கு புகுந்து கொண்ட கருநாகம் போல் - கழகமெனும் பெயருக்குள் புகுந்து கொண்டவர், கழக உணர்வு கொண்டவராகிவிடுவாரா? அதனால்தான் இனம் இனத்தோடு சேருமென்று இந்து ராஜ்யம்! அமைத்திடும் முயற்சியில், இந்தியா எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என ஈட்டியும், சூலமும், கத்தியும், கட்டாயும் தூக்கிக் கொண்டு திரியும் கபாலிக கூட்டத்துடன் அந்தக் கூட்டத்தின் உடன்பிறப்பு கை குலுக்கிக் கொண்டிருக்கிறார். இதில் எங்கள் சார்பாகப் பேசினார் என்று புதிதாக மகிழ்வதற்கே பா.ஜ.க., இந்து முன்னணியினருக்கும் இடமே இல்லை! ஏனெனில் அவர் இருந்த இடம், இருக்குமிடம் எல்லாமே அவ்விடம்தான்!

உடன்பிறப்பே,

பிறகேன் அவர்கள் மகிழ்கிறார்கள் - மாலை போட்டுக்கொண்டு குதிக்கிறார்கள் என்கிறாயா? புரியவில்லையா உனக்கு!?

திராவிட இயக்கம் எனும் கோட்டையைச் சிதைத்துவிட்டதாக ஒரு அற்ப சந்தோஷம். அவ்வளவுதான்!

ஆனால் அவர்களுக்குத் தெரியாது! இந்தக் கோட்டையை யாரும், எந்தக் காலத்திலும் சிதைக்க முடியாதென்று!

பெரியாரின் படைக்கலன்களை நெஞ்சில் ஏந்தி, அண்ணாவின் போர்ப்படைச் சிப்பாய்களாக விளங்கும் நமது

கழகத்தை இருபது ஆண்டுகளுக்கு முன்பு பிளந்து அழிப்பதற்குத் திட்டம் தீட்டப்பட்டது எனினும் - அதில் அவர்களுக்கு வெற்றி கிடைத்தது எனினும் - இந்தக் கழகம் பூண்டற்றுப் போய்விடும் என்று நினைத்தோர் ஏமாந்துதான் போயினர்! தேர்தல் தோல்வியால் ஏக்கம் பிறக்கும், தேக்கம் ஏற்படுமென எதிர் பார்த்தனர்!

கொண்ட கொள்கைகளுக்குத் தோல்வியில்லை - குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் கழகம், சிலபல களங்களை இழந்திருக்கலாம் - ஆனால் யுத்தத்தை இழக்கவில்லை!

அந்த யுத்தம் நடந்துகொண்டேதான் இருக்கும்!

பெரியார், அண்ணா ஊட்டிய உணர்வுகள் பட்டுப்போக விடமாட்டோம்!

கரசேவாவுக்கு ஆதரவு தருபவர்களாயினும்,

அவர்களுக்குக் கால்சேவா செய்பவராயினும்,

அவர்களுக்கு அறைகூவல் விட்டுச் சொல்கிறேன்! கழக உடன்பிறப்புகளாம் நமது கடைசித் துளி இரத்தம் இந்த உடலில் இருக்கும் வரையில், இந்த மண்ணில் மதக் கலவரங்களைத் தூண்டிவிடும் துரோகச் செயலை அனுமதிக்கப் போவதில்லை!

சமத்துவ, சகோதரத்துவத்துக்கு சவக்குழி வெட்டுவோரை சகித்துக் கொள்ளப் போவதுமில்லை!

அன்புடன்,

மு. க.

26-11-1992

42230

894.8116

கலை.23

1975. கரசேவா கடைசியாக எங்கு போய் முடியும்?

உடன்பிறப்பே,

அயோத்தி பிரச்சினையில் திராவிட இயக்க நிலைக்கு மாறாகத் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா பேசியதைக் கண்டித்து, தி.மு.க. உள்ளிட்ட எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் விடுத்த அறிக்கைகளுக்குப் பதில் கூறுவதாகவும், விளக்கமளிப்பதாகவும் எண்ணிக்கொண்டு அமைச்சர் அரங்கநாயகத்தின் பெயரால் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தி.மு.கழகம் பொதுவாகக் கோயிலே கூடாது என்று சொல்லுகிற இயக்கம். எனவே அவர்கள் கூறுகிற திராவிட இயக்கக் கொள்கையும், ஆணுகுமுறையும் நமக்கு ஒத்து வராது என அமைச்சர் ஒரு வரியில் தனது பதிலை முடித்துவிட்டார்.

"கோயில் கூடாது என்பதல்ல; கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது"

என்ற வாசகத்தை இன்றைய அமைச்சர் அவர்களே, அன்றைய கழகப் பேச்சாளராக முழங்கிய போது, பல மேடைகளில் எடுத்துக் காட்டியிருப்பதை அவரே மறந்திருக்க மாட்டார்.

அதுமட்டுமல்ல, அயோத்திப் பிரச்சினையில் கூட தி.மு.கழகம் - அவர்கள் இராமர்கோயில் கட்டுவதை எதிர்க்கவில்லை. பாபர் மசூதியை அகற்றிவிட்டு, இராம ஜென்ம பூமி என பாரதீய ஜனதாவும், விசுவ இந்து பரிட்சத் போன்ற அமைப்புகளும் கோடு கிழித்துக் காட்டுகிற இடம் முழுவதையும் ஆக்ரமித்துக்கொண்டு இராமர் கோயில் கட்டுவோம் - அதற்கு ஒரு கட்டமாகக் கரசேவையை ஆரம்பிக்கிறோம் என்கிறார்களே! அதைத்தான் தி.மு.க. எதிர்க்கிறது. பிரச்சினையின் சிக்கலைப் புரிந்து கொண்டு தெளிவு பெற்றுள்ள எல்லாக் கட்சிகளுமே எதிர்க்கின்றன.

ஜெயலலிதா, பாபர் மசூதிக்கு சேதமின்றி கரசேவையை அனுமதிக்க வேண்டுமென்றுதான் சொல்கிறார். காங்கிரஸ்காரர்களும், ஏன்? திரு. சுலைமான் சேட்டும்கூட அப்படித்தான் சொல்கிறார் என்று அரங்கநாயகம் சுட்டிக் காட்டுகிறார்.

காங்கிரஸ்காரர்கள் கரசேவையை ஆதரிப்பதாகக் கூறுவதோ, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் கரசேவையை ஆதரிப்பதாகக் கூறுவதோ, எதிர்காலத்தில் பாபர் மசூதியை இராமர் கோயிலின் கர்ப்பக்கிரகமாக மாற்றுகிற திட்டத்தை ஏற்றுக்கொண்டு அல்ல!

கரசேவை என்ற சொல்லுக்கே யாரும் விரோதிகள் அல்ல! வலுவில் வந்து வழங்கும் தொண்டினை யார்தான் குறை கூற முடியும்? ஆனால் இந்த கரசேவை வலுவில் தொண்டு என்பதோடு முடியாமல், மத உணர்வுகளையல்லவா மையமாகக் கொண்டு, பெரும் ரத்தக்களரியையே வம்புக்கு இழுக்கிற செயலாகவன்றோ இருக்கிறது!

பாபர் மசூதியிருக்கும் இடத்தைவிட்டுவிட்டு, அதாவது உச்சநீதிமன்றம் உள்ளிட்ட மூன்று கோர்ட்டுகள் இடைக்காலத் தடை விதித்துள்ள இடத்தை விட்டுவிட்டு - வேறு இடத்தில் இராமர் கோயில் எழுப்பிட இவர்கள் கரசேவை புரிவதை எவரும் எதிர்க்கவில்லை. ஜெயலலிதாவேகூட, அயோத்திக்குச் சென்று அந்தக் கரசேவையில் ஈடுபடலாம். அதற்கான ஆயத்தங்களைச் செய்திட தமிழக அமைச்சர்கள் அனைவரும் நாவலர் உட்பட மற்றும் பெரிய போலீஸ் அதிகாரிகளும், போலீஸ் படையினரும் கும்பகோணம் மகாமகத்துக்குச் சென்றதுபோல முன்கூட்டியே அயோத்தியில் முகாம் போடலாம். யார் வேண்டாமென்கிறார்கள்? கரசேவையுடன் முடிந்துவிடுகிற விவகாரமல்ல இது!

கரசேவையைத் தொடர்ந்து பூதாகாரமாக உருவெடுக்கக் கூடிய விளைவுகளை, அமைச்சர் அரங்கநாயகம் அறிந்திருந்தும்கூட - திராவிட இயக்கத் தீபத்தைக் காப்பாற்றுவதற்காக, சமாளித்துப் பார்க்கிறார் அவ்வளவுதான்.

இதோ உத்திரப்பிரதேச முதல்வர் திரு. கல்யாண்சிங்கின் பேட்டி இந்த வாரம் சன்டே SUNDAY இதழில் வெளியாகியிருக்கிறது.

அவரை சன்டே இதழின் நிருபர் கேட்கிறார்.

What, in your opinion is the permanent solution to the Ayodhya issue?

அயோத்திப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு என்னவென்று கருதுகிறீர்கள்? இந்தக் கேள்விக்கு பா.ஜ.க. முதல்வர் கல்யாண்சிங்கின் பதில் என்ன தெரியுமா?

The permanent and lasting solution to the tangle lies only in handing over of the entire Rama janma Bhoomi Complex to Hindus and relocation of the disputed structure to raise a beautiful and majestic Mosque at a distance of 10-15 K.M. from the temple site Both Hindus and Muslims should join hands to perform Karaseva, both for building the temple as well as the new Mosque.

நிரந்தரமான தீர்வு, ராமஜன்ம பூமி வளாகம் முழுவதையும் இந்துக்களிடம் ஒப்படைப்பதும், சர்ச்சைக்குரிய பாபர் மசூதியை அந்த இடத்திலிருந்து 10 அல்லது 15 கிலோ மீட்டர் தொலைவில் அழகாகவும், கம்பீரமாகவும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதுமேயாகும். இராமர் கோயில் கட்டுவது புதிய மசூதியை உருவாக்குவது ஆகிய இரண்டுக்குமான கரசேவைகளிலுமே இந்துக்களும், முஸ்லீம்களும் கைகோத்துக் கொண்டு ஈடுபடலாம் என்பதேயாகும்.

உடன்பிறப்பே, உ.பி. முதல்வர் கல்யாண் சிங்கின் கருத்து என்பது பாரதீய ஜனதாவின் கருத்து - விசுவ இந்து பரிட்சத் போன்ற மதவெறி அமைப்புகளின் கருத்து!

இதைத் தவிர வேறு தீர்வே இல்லை - அதற்கு ஆரம்பம்தான் இந்தக் கரசேவை என்று திட்டம் போட்டுக்கொண்டு நீதிமன்ற உத்திரவுகளை ஏற்க மாட்டோம் என ஆட்டம் போடும் செயலைத்தான் ஜெயலலிதா அனுமதிக்க வேண்டும் என்று தேசிய ஒருமைப்பாட்டு மன்றத்தில் பேசுகிறார்.

அதை அரங்கநாயகம் பூசிமெழுகி மறைத்திட முனையும் போதே, ஜெயலலிதா தனது கருத்தை மீண்டும் வலியுறுத்தி பிரதமருக்கு கடிதம் எழுதுகிறார்! அதாவது அரங்கநாயகம் அறிக்கையின் முகத்தில் கரி பூசுகிறார்!

அண்மையில் டெல்லியில் விசுவ இந்து பரிட்சத்தின் தலைவர்களும், சாதுக்கள் எனப்படுவோரும் நடத்திய கூட்டத்தில், கரசேவையைத் தொடங்கியே தீருவதென்றும், பாபர் மசூதிக்குள்

இராமர் சிலைக்கான கர்ப்பக் கிரகத்தை அமைத்திடும் வரையில் ஓய்வதில்லை என்றும் முடிவு செய்யப்பட்டதை ஒருவேளை அரங்கநாயகம் படித்தாரோ என்னவோ தெரியாது. ஜெயலலிதா அதைப் படித்துள்ள காரணத்தால்தான், கரசேவையை அனுமதிக்க வேண்டுமென்கிற சூழ்ச்சித் திட்டத்துக்கு பகிரங்கமாகவே துணை போகிறார்.

பாபர் மசூதி உள்ள இடத்தில் ஏற்கெனவே இராமர் கோயில் இருந்ததா? அதை இடித்து விட்டு பாபர் மசூதி கட்டப்பட்டதா? என்பதை அறிந்து தெரிவிக்கும் முடிவை உச்சநீதிமன்றத்துக்கு விட்டு விடலாம். அதன் தீர்ப்பை இருசாராரும் ஏற்றுக்கொள்ளலாம் என்று பிரதமர் நரசிம்மராவ் கூறிய யோசனையை முஸ்லீம்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆனால் பா.ஜ.க. தலைவர் அத்வானி அவர்கள். சுப்ரீம் கோர்ட்டின் அந்த முடிவை அரசியல் சட்டம் 1382 பிரிவு என்ற அடிப்படையில் இல்லாமல், 143-வது பிரிவு என்ற அடிப்படையில் பரிசீலிக்க விடலாம் என்று கூறியுள்ளார்.

பிரதமர் குறிப்பிடும் 1382 பிரிவின்படி என்றால்; எந்த முடிவு என்றாலும் இருசாராரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அத்வானி குறிப்பிடும் 143 பிரிவு என்றால், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு யாரையும் கட்டுப்படுத்தாது.

அதாவது உச்சநீதிமன்றம் தீர்ப்பளிக்கட்டும் - அதற்கு கட்டுப்படமாட்டோம்! என்று முன்கூட்டியே பா.ஜ.க. தெரிவிப்பதிலிருந்தே - உண்மையில் யார் மதச்சார்பற்ற நிலையையும் - ஒற்றுமையையும் ஒழித்துக் கட்டிவிட்டுத்தான் மறு வேலை பார்ப்போம் என்று தீர்க்கமாக முடிவெடுத்துக் கொண்டு, கரசேவையைத் தொடங்குவோம் என்கிறார்கள். அதை ஆதரிக்க வேண்டுமெனப் பேசியது போதாதென்று கடிதமும் எழுதுகிறது திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி!

அய்யோ! திராவிட இயக்கப் போர்வையைப் போர்த்திக் கொண்டே திராவிட இயக்கத்தை ஒழித்துக் கட்டலாம் என எண்ணியிருந்தோமே! அதற்குள்ளாக ஜெயலலிதா அவசரப்பட்டு வேடத்தைக் கலைத்து விட்டாரே என்று தமிழகத்து ஏடுகள் சில தவியாய்த் தவிக்கின்றன! அந்தத் தவிப்பை அவற்றின் தலையங்கங்களில், செய்திகளில் விளங்கிக் கொள்ள முடிகிறது!

அரங்கநாயகமும் அந்த ஏடுகளின் உதவியோடு, நெருப்புக் கோழி தனது தலையை மட்டும் புதரில் மறைத்துக் கொண்டு உடல் முழுதும் மறைந்து விட்டது என எண்ணிக் கொள்ளும் என்பார்களே! அதுபோல தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்!

அதோ வாரும் பிள்ளாய்! அரங்கநாயகம் அவர்களே! அதுதான் பலிக்காது எனச் சொல்லி வைக்கிறான் உண்மையான திராவிட இயக்கத்தின் உடன்பிறப்பு என்பதை அவருக்கு உணர்த்துவாயாக!

அன்புடன்,

மு. க.

27-11-1992

1976. வளைந்த வாலை நிமிர்த்த முடியுமா?

உடன்பிறப்பே,

சென்னை சேப்பாக்கத்தில் நவம்பர் 26-ஆம் நாள் நடைபெற்ற கரசேவை கண்டனப் பொதுக்கூட்டம் பற்றிய செய்திகள், எனது பேச்சின் குறிப்புகள் அநேகமாக எல்லா ஏடுகளிலும், வெளிவந்திருக்கின்றன. எனது உரையின் இறுதிப் பகுதி முரசொலியில் மட்டுமல்லாமல், இன்று வெளிவந்துள்ள இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை முன்பக்கத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

Mr. Karunanidhi said is party wanted to strengthen the hands of Mr, Rao, when the activities of the fundamentalists posed a very real threat of communal carnage.

The DMK would out seek to exploit the issue politically, he added and recalled that during Cense aggressor and conflicts' with Pakistan, it had extended support to the Centre. However, he asserted, it was the Congress which was responsible for allowing the Ayodhya issue to get caressingly complicated wit every passing day and assume its present menacing proportions.

திரு. கருணாநிதி; மதவெறியர்களால் பெரிய அளவில் வகுப்புக் கலவரங்கள் ஏற்படக் கூடிய இந்த நெருக்கடி மிக்க நேரத்தில் தமது கட்சி, திரு. நரசிம்மராவின் கரங்களை பலப்படுத்த விரும்புகிறது என்று குறிப்பிட்டார்.

அதே சமயம் இந்தச் சூழ்நிலையை கட்சி அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்த மாட்டோம் என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார். சீன ஆக்ரமிப்பின் போதும், பாகிஸ்தானுடனான மோதுதலின்போதும் தி.மு.கழகம், மத்திய அரசுக்கு ஆதரவளித்ததை இதன் தொடர்பாக அவர் நினைவுப்படுத்தினார்.

எனினும், அயோத்திப் பிரச்சினை இவ்வளவு சிக்கலாக ஆனதற்கும், இன்று பயமுறுத்துமளவுக்கு நாளுக்கு நாள் மேலும் சிக்கலாகி வருவதற்கும் காங்கிரஸ்தான் காரணம் என்பதையும் அவர் உறுதிப்படுத்தினார்.

உடன்பிறப்பே, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடும், தினமணி ஏடும் ஒரே வளாகத்திற்குள்ளிருந்துதான் வெளிவருகின்ற நாளேடுகள் என்பதை அனைவரும் அறிவர்.

ஆனால், எதன் வாலையோ நிமிர்த்த முடியாது என்பார்களே! அது போல தினமணி ஏடு மட்டும் இன்றைய தனது தலையங்கத்தில் எனது சேப்பாக்கம் பேச்சுக்கு தனது குயுக்திமிக்க சூழ்ச்சித் திறனைக் காட்டி, மக்களை திசை திருப்பப் பார்த்துள்ளது.

கரசேவைக் கண்டனக் கூட்டத்தில் நான் பேசியபோது, வெளிநாட்டு ஆக்ரமிப்புகளின் போது தி.மு.கழகம், நேருவுக்கும், லால்பகதூர் சாஸ்திரிக்கும் ஆதரவு கொடுத்தது என்பதை மட்டும் குறிப்பிட்டுவிட்டு - இந்திரா காந்தி காலத்தில் பங்களா தேஷ் பிரச்சினையில் தி.மு.க. ஆதரவு கொடுத்ததைச் சுட்டிக் காட்டாமைக்குக் காரணம் உனக்குப் புரிந்திருக்குமென்று நம்புகிறேன். தினமணி போன்ற அறிவுக் கொழுந்துகளுக்கு மட்டும் புரியவில்லை போலும்!

நேரு பிரதமராக இருந்த போதும் - லால் பகதூர் பிரதமராக இருந்தபோதும் - தி.மு.கழகம் எதிர்க்கட்சி! இந்திரா பிரதமராக இருந்தபோது, அதாவது பங்களாதேஷ் பிரச்சினையின்போது தி.மு.க.வும், இந்திரா காங்கிரசும் தோழமைக் கட்சிகள்!

தோழமைக் கட்சியாக இருந்துகொண்டு பொதுப் பிரச்சினையில் ஆதரவு வழங்குவது ஆச்சரியமில்லை! எதிர்க்கருத்து, அதுவும் ஜெயலலிதாவைப் போல இடையூறான கருத்து சொல்வதுதான் ஆச்சரியம்!

அதனால்தான் தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தபோதே வெளிநாட்டுப்பகையை வீழ்த்த, பிரதமர்களாக இருந்த நேருவுக்கும், லால்பகதூருக்கும் ஆதரவுக் கரம் நீட்டியது என்று கூறிவிட்டு, அதன் தொடர்பாக இப்போது வெளிநாட்டு ஆபத்தைவிடக் கடுமையான அபாயம் விளைவிக்கக்கூடிய உள்நாட்டு மதவெறியர்களை அடக்குவதில் பிரதமர்

நரசிம்மராவுக்கு ஆதரவுக்கரம் நீட்டுவோம் என்று சொல்லியிருக்கிறேன்.

திரித்துக் கூறும் தினமணியார்கள் இருப்பதை மறந்துவிடாமல்,

இந்த ஒரு பிரச்சினையில் பிரதமரின் கரத்தை பலப்படுத்துவோம். நாளைக்கு பத்திரிகைக்காரர்கள் வேறு விதமாகச் செய்திகளைப் போட்டுவிடக் கூடாது.

என்றும் திட்டவட்டமாக அந்தக் கூட்டத்திலேயே பேசியிருக்கிறேன்.

1949 டிசம்பர் மாதம் 22-ந் தேதி இரவு, அயோத்தியில் பாபர் மசூதியில் பூட்டை உடைத்து ஐம்பதுக்கு மேற்பட்டோர் உள்ளே நுழைந்து இராமர் சிலையை வைத்ததை, இதோ அகற்றுகிறோம், அதோ அகற்றுகிறோம், என்று பிரதமர் நேருவும், வல்லபாய் படேலும், உ.பி. முதல்வராக இருந்த கோவிந்த வல்லப பந்தும் சொல்லிக்கொண்டே வந்து, பிரச்சினை 43 ஆண்டுகளாகப் பெரிய அளவில் வளர்க்கப்பட்டுவிட்டதையும், இதற்கு காங்கிரசின் வழவழா கொள்கையே காரணம் என்பதையும் சென்னைக் கூட்டத்தில் ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

ஆனால் தினமணி எல்லாவற்றையும் மறைத்துவிட்டு,

நரசிம்மராவுக்கு கருணாநிதி ஆதரவு தெரிவித்திருப்பது, காங்கிரசை அ.தி.மு.க. கைவிட்டாலும், தி.மு.க. பற்றிக்கொள்ளும் என்பதைக் காட்டுகிறது.

என விஷமத்தமான வியாக்கியானத்தில் ஈடுபட்டுள்ளது.

பாபர்மசூதியை ஆக்கிரமிக்க திட்டமிட்டு நடத்த இருக்கும் கரசேவையை, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஆதரிக்கிறார்கள் என்பது போன்ற ஒரு மாயையை தமிழக முதலமைச்சரின் பேச்சு உருவாக்கியிருக்குமானால், அந்த மாயையை நம்புவது தவறு. நாட்டின் ஒற்றுமையையும், சகோதர உணர்வையும் நிலைநாட்டுவதில், மதவெறியர்களுக்கு எதிராக மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரிப்போம் என்பதுதான் தி.மு.க. எடுத்துள்ள நிலை!

தி.மு.க. இடம் பெற்றுள்ள தேசிய முன்னணி இடதுசாரிக் கூட்டமைப்புக் கட்சிகளின் நிலையும் இதுதான் என்பதை விளக்கிட, வெகுதூரம் போக வேண்டியதில்லை!

ஒருமைப்பாடு மன்றக் கூட்டத்தில் இந்தக் கட்சிகளின் சார்பில், ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது ஒன்றே, நமது கருத்தை வலியுறுத்தப் போதுமானது.

அன்புடன்,

மு. க.

29-11-1992

1977. பெரியார், அண்ணா வாழ்ந்த பூமியில், அந்தோ! பெரும் அநியாயம்!

உடன்பிறப்பே,

கரசேவையை ஜெயலலிதா ஏன் ஆதரித்தார்? என்பதை விளக்கி மக்களின் முன்னால் உரை நிகழ்த்திட அ.தி.மு.க. அமைச்சர்களும், அக்கட்சியின் பேச்சாளர்களும் மாநில முழுதும் பல ஊர்களுக்குச் செல்கிறார்களாம்.

டெல்லியில் தேசிய ஒருமைப்பாடு கூட்டத்தில் பேசிய ஜெயலலிதா, உச்சநீதிமன்ற தீர்ப்பைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்றும், அயோத்தியில் பாபர் மசூதியை ஒட்டிய 2.77 ஏக்கர் நிலப்பகுதியில் விசுவ இந்து பரிட்சத்தைச் சேர்ந்தவர்கள் கரசேவை நடத்துவதையும் - கட்டிடம் போடுவதையும் அனுமதிக்க வேண்டுமென்றும் பேசியதைக் கண்டு காங்கிரஸ் கட்சி அதிர்ச்சி அடைந்தது. பாரதீய ஜனதா மகிழ்ச்சி அடைந்தது. மதச்சார்பின்மைக் கொள்கைக்கு மாறாக, நாட்டில் பெரும் வெள்ளம் இரத்த வெள்ளமாக உடைப்பெடுக்க நடத்தப்படும் காரியத்துக்கு அனுமதி கொடுக்கலாம் என தமிழ்நாட்டு முதலமைச்சர் சொன்னதைக் கண்டித்து, எல்லாக் கட்சித்தலைவர்களுமே கண்டன அறிக்கை வெளியிட்டார்கள்.

திராவிட இயக்க தீபம் என்றும், திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி என்றும் போட்டுக் கொண்டிருந்த வேஷம் கலைந்து; தன்னை யார் என்று தனது பேச்சு காட்டிக் கொடுத்து விட்டதே என்பதை ஜெயலலிதா உணர்ந்தாரோ இல்லையோ! அவரை திராவிட சக்தி என்று கூறி தங்களின் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ளவும், பணப்பேழைகளை புடைக்க வைத்துக் கொள்ளவும் திட்டம் தீட்டித் திறமையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் சில அமைச்சர்களும், அந்த உண்மையை உணர்ந்து சமாளிப்பு அறிக்கைகள் விட்டுப் பார்த்தனர். அவை எடுபடவில்லை.

இப்போது என்ன சொல்கிறார்கள்? அல்லது என்ன சொல்லப் போகிறார்கள்?

பாபர் மசூதியை இடிக்காமல் கரசேவையை அனுமதிப்பது தவறா?

இதைத்தான் எங்கள் திராவிடத்தாய் ? டெல்லியில் திருவாய் மலர்ந்தருளிக்கிறார்!

இந்த அடிப்படையில்தான் பேசப்போகிறார்கள்.

பாபர் மசூதியை இடிக்காமல் அயோத்தியில் வேறு ஒரு இடத்தில் இராமர் கோயில் கட்டுவதிலே, எந்தக் கட்சிக்கும் மறுப்பு இல்லை.

ஆனால் கரசேவை மூலம் 2.77 ஏக்கர் நிலத்தில் கட்டுமானம் கட்டுவது என்பது, முதலில் பாபர் மசூதியை முற்றுகையிடுவது என்பதற்கான சூதுத் திட்டமாகும்.

உடன்பிறப்பே, இந்தக் கடிதத்துடன் இணைத்துள்ள வரைபடத்தை கவனமாகப் பார்த்தால் நான் கூறும் உண்மை எல்லோருக்கும் விளங்கும்.

1 இராமர் கோயிலின் மாதிரி அமைப்பு - வரை படத்தில் கர்ப்பக் கிரகம் இருக்கிறது.

2 இரண்டாவது வரைபடத்தில், பாபர் மசூதியும் அதற்குள் திருட்டுத்தனமாக வைக்கப்பட்ட இராமர் சிலையும் காணப்படுகிறது.

3 மூன்றாவது வரை படத்தில் காட்டியுள்ளபடி பாபர் மசூதியைச் சுற்றியுள்ள 2.77 ஏக்கர் நிலப்பகுதியில் கரசேவை செய்து கட்டிடப் பணிகள் தொடர்ந்தால்; முதலாவது வரை படத்தில் உள்ள இராமர்கோயிலின் கர்ப்பக் கிரகம், இப்போது பாபர் மசூதியிருக்கிற இடத்துக்கு வரும், அதனால் பாபர் மசூதி இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

இப்போது புரிகிறதா? கரசேவையாளர்கள் கட்டுமானப் பணியில் ஈடுபட்டால் பாபர் மசூதியைக் காணாமல் ஆக்கி விடுவார்கள் என்ற உண்மை!

இந்த உண்மை நிலையை உள்ளத்தில் ஒளித்து வைத்துக் கொண்டுதான் பாரதீய ஜனதா, இந்து முன்னணி, விசுவ இந்து பரிட்சத் போன்ற அமைப்புகள், கரசேவைக்கு அனுமதி தேவை என வற்புறுத்தின! உச்சநீதிமன்றத் தீர்ப்பை உதாசீனப்படுத்தின! அந்த அமைப்புகளுக்கு ஒத்த கருத்தை ஜெயலலிதா உரைத்திட்டார்! அதற்குரிய சபாஷ்களை அந்த மதவெறி இயக்கங்களிடமிருந்தும் பெற்றுக் கொண்டுவிட்டார்.

இதோ! சென்னை போன்ற பல இடங்களில் விசுவ இந்து பரிட்சத் தமிழ்நாடு அமைப்பின் சார்பில், ஒட்டப்பட்டுள்ள வண்ணச் சுவரெட்டியின் படத்தைப் பார்!

ஜெய் ஸ்ரீராம்

விசுவ இந்து பரிட்சத் - தமிழ்நாடு

தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூட்டத்தில்

அயோத்தி கரசேவைக்கு ஆதரவாகப் பேசி

கோடிக்கணக்கான இந்துக்களின்

உணர்வுகளைப் பிரதிபலித்த

தமிழக முதல்வர்

மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு

நன்றி! நன்றி!! நன்றி!!!

-தேவிபாலா லித்தோ பிரஸ் மெட்ராஸ் 2.

இப்படியொரு வண்ணச் சுவரொட்டியில் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிக்கும் விசுவ இந்து பரிட்சத், ஒரு இராமர் கோயிலையும் - இன்னொருபுறம் இராமன் உருவத்தையும் - இடையே ஜெயலலிதா படத்தையும் அச்சிட்டு, தனது தாங்கொணாத மகிழ்ச்சியை தெரிவித்துள்ளது.

இத்தனைக்கும் பிறகு, ஜெயலலிதா பேசியதில் தவறே இல்லை என்று மனச்சாட்சியை விற்றுவிட்டு மந்திரிமார்கள் பேசப் போகிறார்களாம்!

கரசேவையும் வேண்டும்!

பாபர் மசூதியும் வேண்டும்!

என்பது ஊரை ஏமாற்றும் வேலை என்பதை மக்கள் உணர்ந்துவிட்டார்கள். கரசேவையாளர்கள் ஜெயலலிதாவின் யோசனைப்படி கட்டிடம் கட்ட முற்படுவார்களேயானால், பாபர் மசூதிக்குள் இராமர் சிலை வைக்கப்பட்ட இடம், இராமர் கோயிலின் கர்ப்பக்கிரகமாகிவிடும் என்ற உண்மையை, அ.தி.மு.க.வில் உள்ள திராவிடப் பழம் புலிகள் மறுக்கிறார்களா?

கழுத்தைத்தான் வெட்டுகிறோம் - தலைக்கு ஆபத்து இல்லை என்பது போலத்தான், கரசேவையைத்தான் அனுமதிக்கச் சொல்கிறோம் - பாபர் மசூதிக்கு இடையூறு இல்லை என்கிற வாதமும் இருக்கிறது.

பாபர் மசூதியை இங்கே இடித்து விடுகிறோம். அந்த மசூதியை 15 கி.மீ. தள்ளிக் கட்டிக் கொள்ளுங்கள்

என்று உத்திரபிரதேச முதலமைச்சரே திட்டவட்டமாக அறிவித்துள்ளாரே! அந்த பா.ஜ.க. முதலமைச்சருடன், தமிழக முதல்வரான திராவிட சக்தியும் தெரியாமலா இணைந்திருக்கிறது!

தெரிந்துதான் இணைந்திருக்கிறது - திராவிட இயக்கப் போர்வையில் ஒளிந்து கொண்டிருந்த மாயை, தனது சுய உருவை வெளிக்காட்டியிருக்கிறது!

அதற்கு பஜனை பாட,

பல்லைக்காட்டி நெளிய, வளைய - எப்படியும் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள சூழ்ந்திருப்போர், சுற்றுப்பயணம் புறப்படுகிறார்களாம்!

அந்தோ! பெரியார், அண்ணா வாழ்ந்த பூமியில், பெரும் அநியாயம்!

இன்னமும், இந்து மதவெறிக்கு ஆக்கமளிக்கும் ஜெயலலிதாவை துதிபாடுவோரை, தோத்தரித்து நிற்போரை, எதிர்காலம் துரோகிகள் என்ற பட்டியலில் சேர்த்தே தீரும் சந்தேகமே இல்லை!

அன்புடன்,

மு. க.

30-11-1992

1978. கண்டிக்கத்தக்க காங்கிரஸ் கலாச்சாரம்

உடன்பிறப்பே,

மத்திய அரசின் இணை அமைச்சர் மம்தா பானர்ஜி என்பவர், மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் ஆட்சியைக் கொண்டு வருவதாக சபதம் செய்து கொண்டு, அதற்கான அரசியல் ஸ்டண்டுகளை சில காலமாக நடத்தி வருகிறார். எனினும், அதிலோர் முக்கியக் கட்டமாக அவர் தன்னை மத்திய இணை அமைச்சர் பொறுப்பிலிருந்து விடுவித்துக்கொள்ளப் போவதாகவும், மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியை அமைப்பதுதான் தனது குறிக்கோள் என்றும் அறிவித்துப் பேரணி ஒன்றை நடத்தி ஆர்ப்பாட்டம் புரிந்திருக்கிறார்.

புதிய பொருளாதாரக் கொள்கையினால் இந்திய மக்களுக்கு ஏற்பட்டுள்ள சோதனை - இனியும் ஏற்பட இருக்கிற வேதனை - இவற்றைச் சுட்டிக் காட்டியும், இன்னமும் பாரதீய ஜனதா, விசுவ இந்து பரிட்சத் போன்ற மதவெறி இயக்கங்களுடன் காங்கிரஸ் கட்சி கடைப்பிடிக்கிற வழவழா நிலைமையைக் கண்டித்தும், உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் உச்ச கட்ட நிபந்தனைகளுக்கு உடன்பட்டு நாட்டையே அடகு வைக்கும் மத்திய அரசின் போக்கினை எதிர்த்தும், தேசிய முன்னணியும் இடது சாரிக் கட்சிகளும் ஓரணியில் நின்று குரல் கொடுப்பதை காங்கிரஸ்காரர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

நாட்டுக்கு வரும் ஆபத்தான விளைவுகளை நியாயமாகவும், நாணயமாகவும் எடுத்து விளக்கும், இடித்துக் கூறும் எதிர்க்கட்சிகளை நசுக்குவதும் - மத்திய அரசின் கைப்பாவைகளாகவோ அல்லது மறைமுக ஆதரவாளர்களாகவோ இருந்து கொண்டு நாட்டைக் காடாக்கும் நாசகால சக்திகளிடம் நத்திக் கிடப்பதும் காங்கிரசின் கலாச்சாரமாகிவிட்ட நிலையில், எதிர்க்கட்சிகளே இருக்கக்கூடாது என்ற பரந்த ஜனநாயக மனப்பான்மை ? காங்கிரஸ் கட்சியின் தலைமை பீடத்துக்கு இருப்பதைப் பல காலமாகவே அனுபவங்கள்

உணர்த்தியிருக்கின்றன. உதவி வேண்டுமென்றால், உதைக்கும் காலுக்குக் கூட முத்தமிட்டுக் கொண்டிருப்பார்கள். குறிக்கோளை எட்டிவிட்டால், ஏறிய ஏணியைத் தள்ளியும் விட்டு விடுவார்கள். தயவு தேவைப்படுகிற வரையில் ஊழல் மலிந்த ஆட்சிகூட உத்தமியின் ஆட்சியாக அவர்களால் கருதப்படும். தேவையில்லையென்றால், காந்தி வழி ஆட்சி நடைபெற்றால்கூட கலைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள்.

அப்படியொருக் கலாச்சாரத்தை அரசியலிலே கடைப்பிடிக்கும் காங்கிரஸ் கட்சி, இப்போது தனது நச்சுக் கரத்தை மேற்கு வங்கத்தில் நீட்டிப் பார்த்திட முற்பட்டிருக்கிறது.

இந்தச் சூதினை உணர்ந்துகொண்ட மேற்கு வங்க முதலமைச்சர் திரு. ஜோதிபாசு அவர்கள், காங்கிரஸ் கட்சியின் கீழறுப்பு வேலைக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், இடதுசாரி முன்னணியின் பேரணியொன்றை ஞாயிற்றுக்கிழமையன்று நடத்தியிருக்கிறார். அந்தப் பேரணியில் இடதுசாரி முன்னணித் தலைவர்களான சிட்டபாசு, புத்ததேவ் பட்டாச்சார்யா, பிமன்பாசு, சைலேன் தாஸ்குப்தா உள்ளிட்ட பல தலைவர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

> மேற்கு வங்க மாநிலத்தில் பதற்ற நிலையை உருவாக்க,
> மாநில காங்கிரஸ் கட்சி மேற்கொண்டுள்ள முயற்சி,
> கிளர்ச்சி என்கிற அளவுக்கு வடிவெடுக்குமானால்,
> அதற்குத் தகுந்த பதிலடி தரப்படும்

என முதல்வர் ஜோதி பாசு எச்சரித்துள்ளார்.

அதுமட்டுமின்றி பாரதீய ஜனதா போன்ற வகுப்புவாத அமைப்புகளை இடதுசாரிகளுடன் சேர்ந்து எதிர்த்து முறியடிக்க வேண்டிய கடமையை, காங்கிரஸ் கட்சி புறக்கணித்து விட்டுச் செயல்படுகிறது எனவும் ஜோதிபாசு குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்குவங்க அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளில் மாநில காங்கிரஸ் கட்சி ஈடுபடுவது பற்றி எமக்கு ஒன்றும் தெரியாது என மத்தியிலிருப்போர் மழுப்பிடவும் கூடும். ஆனால், மேற்குவங்க அரசுக்கு எதிரான கிளர்ச்சிக்கு தலைமையேற்றுப் பேரணிகளை நடத்திக் கொண்டிருப்பவர் மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிப்பவர் என்பதைக் கவனிக்கும்போது, உண்மையிலேயே இதற்கு மத்திய அரசின் ஆதரவு இருக்குமேயானால், மத்தியில்

உள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கு, பாரதீய ஜனதா மற்றும் விசுவ இந்து பரிட்சத் போன்ற அமைப்புகளின் மதவெறிக்கு எதிராக ஓர் அணி திரளவேண்டும், கட்சிகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் என்ற இருதய சுத்தம் இல்லை என்றே எண்ணிட வேண்டியுள்ளது.

மாநில காங்கிரசுக்கும், தனது ஆட்சிக்கும் ஏற்பட்டுள்ள மோதலின் காரணமாக, ஜோதிபாசு அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சரைப் போல, கரசேவை ஆதரவாளர் எனத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளக்கூடியவர் அல்ல! மதச்சார்பற்ற நிலை என்ற கொள்கை அடிப்படையில், மதவெறிச் சேட்டைகளை எந்த நிலையிலும் திடமாக எதிர்க்கக் கூடியவர்!

இத்தகைய நல்ல எண்ணத்துடன் செயல்படுகிறவர்களையும், அவர்களது ஆட்சியையும் கவிழ்க்கப் பார்ப்பதும், நச்சு மனத்துடன் மிரட்டிக்கொண்டிருப்பவர்களையும், அவர்களது ஆட்சியையும் தலைகவிழ்ந்து தெண்டனிட்டு ஆதரிப்பதும் - காங்கிரசின் கலாச்சாரமாகி விட்டது!

இந்தக் கலாச்சாரத்தை மக்கள் கண்டிக்கத் தொடங்கி விட்டார்கள்! ஏளனம் செய்யத் தொடங்கி விட்டார்கள்!

இந்த உண்மையை மத்திய காங்கிரஸ் அரசு, தனது திறமை வாய்ந்த உளவுத்துறையின் வாயிலாக அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு, நிறையவே இருக்கிறது!

இருந்தும்கூட மேற்கு வங்கத்தில் ஒரு புதிய வம்பை விலை கொடுத்து வாங்குகிறதென்றால்; அது அறிவுடைமையின் பாற்பட்ட அரசியல் வியூகம் ஆகாது என்பதே எல்லோருடைய கருத்துமாகும். இந்தப் போக்கினைத் தி.மு.கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

அன்புள்ள,

மு. கருணாநிதி

01-12-1992

1979. புரட்டிப் பேசும் புரட்டுத்தான் புரட்சியா?

உடன்பிறப்பே,

ஒன்றைச் சொல்வது - அது மக்களுக்கு விரோதமானது; திராவிட இயக்கக் கொள்கைக்கு எதிரானது என்று முறையே எதிர்க்கட்சிகளும், உண்மையான பெரியார், அண்ணா ஆகியோர் வழி நிற்போரும் கண்டனக் குரல் கொடுத்தவுடன் ஏதாவது பேத்துமாத்து செய்து, நான் அப்படிச் சொல்லவில்லை, இப்படித்தான் சொன்னேன் என்று ஊரை ஏமாற்றுவது, அதனை உடனே பஜனை பாடும் ஏடுகளும், பல் இளிக்கும் பக்தர்களும் ஆமாம் ஆமாம்! அம்மா இப்படித்தான் சொன்னார்கள் என்று ஜால்ரா தட்டுவது - இதுவே ஜெயலலிதாவின் அரசியல் ஆகி விட்டது!

லஞ்ச ஊழலின் சுரங்கமாகவும், பொய் புனைந்துரைகளின் கிடங்காகவும், அடக்குமுறை அராஜக அடாவடித்தனங்களின் களஞ்சியமாகவும் தன்னை ஆக்கிக்கொண்டு, தமிழ்நாட்டையே சூறையாடிக்கொண்டிருக்கும் இந்த அம்மையாருக்கு அரண் அமைத்துக் காப்பாற்றும் வேலையில் இந்துவும், எக்ஸ்பிரசும், தினமணியும் மட்டுமல்லாமல் ஒரு சில சூத்திரர்கள் நடத்துகிற ஏடுகளும் சுறுசுறுப்பாக ஈடுபட்டு தமிழகத்தைக் குட்டிச்சுவராக்கிட முனைந்து நிற்கின்றன. வருங்கால வரலாற்றில் அந்த விபீஷண ஏடுகளால் விளைந்த தமிழ்க்குலத் தாழ்வு எத்தகையது என்பதை, எதிர்காலத் தலைமுறையினர் உணர்ந்து எரிமலைகளாகக் கிளம்பத்தான் போகிறார்கள்.

எக்ஸ்பிரசைப் பாரேன்! அந்த இதழுக்குப் பேட்டி கொடுத்த ஜெயலலிதா பச்சை நிறப் புடவை உடுத்தியிருந்தார் என்பதையும் - அதற்கேற்ற மேட்ச்சாக மேலங்கி அணிந்திருந்தார் என்பதையும்கூட எவ்வளவு உன்னிப்பாகக் கவனித்து நாட்டுக்கு தெரிவிக்க வேண்டிய அக்கறையுடன் செயல்பட்டிருக்கிறது.

பாவம் எக்ஸ்பிரஸ் - அந்த வளாகத்துக்குள்ளே மிகப்பெரும் சிக்கல்! அதாவது தி.மு.க. ஆட்சியில் இந்து வளாகத்திற்குள்

ஏற்பட்ட சிக்கலைப் போன்றது! இன்னும்கூட சற்றுக் கடுமையானது! அதனால், எக்ஸ்பிரஸ் எஸ்டேட்டுக்கு ஜெயலலிதா தயவு தேவைப்படுகிறது. எனவே, என்ன கலர் சேலை, என்ன கலர் கோட்டு என்பதிலேகூட எக்ஸ்பிரஸ் சிரத்தை காட்டியுள்ளது. சும்மா ஆடுமா குடுமி? என்று கிராமத்தில் ஒரு பழமொழி உண்டல்லவா? அதுபோல!

தனக்கும் பிரதமருக்கும் தலைமுறை இடைவெளி உள்ளது! என்று தலைப்பிட்டு எக்ஸ்பிரஸ் இதழிலும், தினமணி இதழிலும் வெளிவந்துள்ள ஜெயலலிதாவின் பிரத்தியேக சிறப்புப் பேட்டியை எடுத்தவர் பிரபுசாவ்லா! அண்மையில்கூட ஜெயலலிதாவுடன் டெல்லிக்குச் சென்றவர். எக்ஸ்பிரஸ் வளாகத்து சிக்கலைத் தீர்ப்பதற்காகக் கண்ணும் கருத்துமாக தமிழக முதல்வரை அடிக்கடி தரிசிப்பவர். சமாதானத்தரகருங்கூட!

அவர் எடுத்துள்ள பிரத்தியேகப் பேட்டியில், பாரதிய ஜனதாவுடன் கூட்டணி உண்டா என்பதை அவர் மறுக்காமல் - காங்கிரஸ் கூட்டணியை சந்தேகத்துக்குரியதாக ஆக்கி - கூட்டணி என்பது தேர்தல் நேரத்தில் ஏற்படுவதுதான் என்று திட்டவட்டமாகக் கூறியதன் மூலம், இனியும் இழப்பதற்கு இ. காங்கிரசுக்கு என்ன இருக்கிறது எனச் சொல்லாமல் சொல்லிவிட்டார் ஜெயலலிதா!

கரசேவைக்கு ஆதரவு அளித்ததையும் மாற்றிக்கொள்ளாமல், இந்த விஷயத்தில் தனது கொள்கையும் ராஜீவ் காந்தியின் கொள்கையும் ஒன்றுதான் என்று கூறியதன் மூலம், அந்தப் பேட்டியில் காங்கிரசும் கட்டுமானம் கட்டும் கரசேவையை ஆதரிக்கிறது எனக்காட்டிக் கொடுத்து விட்டார் ஜெயலலிதா!

இன்றைய தினகரன் தலையங்கத்தில் ஒரு முக்கியமான பகுதி - அதை ஊன்றிப் படித்தால் ஜெயலலிதாவின் தில்லுமுல்லு வேலைகளும், திசை திருப்பும் காரியங்களும் தெளிவாக விளங்கும்.

> "23.11.92 அன்று சென்னையில் வழங்கப்பட்ட முதல்வர் ஜெயலலிதாவின் டெல்லி ஆங்கில உரையின் தமிழாக்கத்தில் 13, 14, 15 மற்றும் 25 ஆம் பத்திகளில் உ.பி. அரசினால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் என்னும் சொற்றொடரும், கட்டிடம் கட்டிக்கொள்ள என்னும் சொற்றொடரும், உயிர்நாடியானவை! ஆனால் 28.11.92 அன்று வழங்கப்பட்ட அ.தி.மு.க. பொதுச்

செயலாளர் ஜெயலலிதா அறிக்கையில் அந்த உயிர் போக்கப்பட்டிருக்கிறது!"

தினகரன் வெளியிட்டுள்ளவாறு; ஜெயலலிதா டெல்லியில் பேசும்போது, உ.பி. அரசு கையகப்படுத்தியுள்ள 2.77 ஏக்கர் நிலத்தில் கரசேவை செய்து, கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்றுதான் பேசினார். இது இந்தியா முழுமையுள்ள எல்லா மொழி ஏடுகளிலும் வந்துள்ளது.

ஜெயலலிதா கூற்றுப்படி கரசேவை நடந்து கட்டிடம் கட்டப்பட்டால், பாபர் மசூதியை இடிக்கவே தேவையில்லை - காரணம் அது தானாகவே இராமர் கோயிலாக மாற்றப்பட்டு விடும். பிறகு பாபர் மசூதியை இடிக்கக் கூடாது என்ற பேச்சுக்கே இடமில்லாமல், அந்த மசூதி இருந்த இடம் தெரியாமலே போய்விடும்! இதுதான் கரசேவை என்ற சூதுக்குள் அடங்கியிருக்கும் தீயதிட்டம்!

ஆனால் பாவம்! நாவலரும், மற்ற அமைச்சர்களும் ஜெயலலிதா டெல்லியில் கூறிய கருத்துக்கு பதவுரை, விளக்கவுரை, மொழிப்புரை, கருத்துரை கூறுவதற்காக கரசேவை ஆதரவு விளக்கக் கூட்டங்களில் பேசுகிறார்களாம்!

மேடையில் எதையாவது பேசி, என்னை நாலு திட்டு திட்டுவிட்டு - ஜெயலலிதாதான் அன்னை பராசக்தி என்று அர்ச்சனை புரிந்துவிட்டு, பாபர் மசூதிக்கு இடையூறு இன்றி இராமர்கோயில் கட்டலாம் என்பதே ஜெயலலிதாவின் கரசேவை ஆதரவுப் பேச்சு என்று உரையாற்றி விட்டு இறங்கி விடலாம். ஆனால் கூட்டம் முடிந்து தங்கும் விடுதிக்கு வந்த பிறகு, கொஞ்ச நஞ்சம் பகுத்தறிவுள்ள தொண்டனோ அல்லது பிரமுகரோ யாராவது நாவலரைப் பார்த்து, ஆமாம்! எல்லாம் சரி! பாபர் மசூதியில் இராமர் சிலையை இந்துமத வெறியர்கள் வைத்து 43 வருடங்களாகின்றனவே! அதை அகற்றவே சம்மதிக்காத பா.ஜ.க.வும் மற்ற மதவெறி அமைப்புகளும், பாபர் மசூதியை இடிக்காமல் இராமர்கோயில் கட்ட எப்படி சம்மதிப்பார்கள்? அப்படி ஒரு சூழ்ச்சித்திட்டத்துடன் நடைபெறும் கரசேவையையும், கட்டுமானப் பணிகளையும் அனுமதிக்க வேண்டும் என்று நம்ம அம்மா சொல்றது என்ன நியாயம்? இது அய்யா, அண்ணா வளர்த்த திராவிட இயக்கக் கொள்கைக்கே விரோதமில்லை? என்று கேட்டால் நாவலர் என்ன பதில் சொல்வார்!

ஆமாய்யா - எனக்கும் தெரியுதுய்யா! நீ சொல்லித்தான் நான் தெரிஞ்சுக்கணும்கிற அளவுக்கு நான் ஒண்ணும் முட்டாள் இல்லய்யா! அய்யாவும் அண்ணாவும் வளர்த்த கொள்கைதான்! நான் இப்ப இந்த அம்மா சொல்றது தப்புண்ணு சொன்னா மந்திரி பதவி போய்டும். அப்பறம் என்ன அய்யாவும், அண்ணாவும் வந்தா எனக்கு மந்திரி பதவி கொடுப்பாங்க! ஏதோ, விதியேன்னுட்டு போக வேண்டியதுதான்!

உடன்பிறப்பே, இப்படிப் பதில் சொல்கிறவர்களிடமிருந்து நீ இலட்சியம், கொள்கை, கோட்பாடு எதையாவது எதிர்பார்க்க முடியுமா?

புரட்டுப் பேசுவது - பேசியதைப் புரட்டிப் பேசுவது - அதற்குப் பெயர்தான் புரட்சி என்றால் - அந்தப் பொருள் இவர்களின் பேச்சுக்கு மிகவும் பொருந்தக் கூடியதுதானே!

அன்புள்ள,

மு. கருணாநிதி

02-12-1992

1980. மண்ணடித்து மக்கிப்போன கருத்துகள்!

உடன்பிறப்பே,

1. நமது நாட்டில் இந்துக்கள் பெரும்பான்மை யானவர்கள் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியது. அவர்கள் தங்கள் மத விருப்பங்களை அரசியல் சட்டத்துக்கு விரோதமாக இல்லாமல் நிறைவேற்றிக்கொள்ள விரும்பினால் அதைச் செய்ய அவர்களுக்கு அனுமதி தர வேண்டும்.

2. குறிப்பாக அயோத்திப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இந்துக்கள் விரும்புவது போல் உத்தரபிரதேச அரசினால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.

3. உ.பி. அரசுக்கு உச்சநீதிமன்றம் விதித்துள்ள உத்தரவும், உ.பி. அரசு கையகப் படுத்தியுள்ள நிலத்தில் கரசேவையோ வேறு எந்த நடவடிக்கையோ கூடாது என்று கோர்ட் தடையும் உளளது.

4. இப்படிச் சட்டசிக்கலைக் காரணமாக வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு முடிவு எடுப்பதை ஒத்திவைக்கக் கூடாது.

5. குறிப்பாக எனது கருத்து இதுதான். உ.பி. அரசு கையகப்படுத்திய நிலத்தில் கரசேவை தொடங்குவதற்கானச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

6. இந்த ஒருமைப்பாடு மன்றக் கூட்டத்தில் பாரதிய ஜனதா தனிமைப்படுத்தப்பட்டு இருக்கலாம். ஆனால் வெளியே மக்கள் மத்தியில், அயோத்தியில் இராமர் கோயில் கட்டப்பட வேண்டுமென்ற விருப்பம் கொண்டுள்ள பெரும்பான்மையான மக்களின் கருத்தை மறுத்து ஒதுக்கிவிட முடியாது. ஒதுக்கி விடக்கூடாது.

இந்த ஆறு வாசகங்களும் நவம்பர் 23-ஆம் நாளன்று, புதுடில்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு கூட்டத்தில் ஜெயலலிதா குறிப்பாக உணர்த்திய முக்கியமான கருத்துகள்!

பாபர் மசூதியை இடிக்காமல் இராமர் கோயில் கட்டவேண்டுமென்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறாரே என்று அ.தி.மு.க.வில் உள்ள சிலர் அசடு வழிவது ஊரை ஏமாற்றுவதற்காக!

ஒருமைப்பாடு கூட்டத்தில் ஜெயலலிதா கூறிய ஆறு கருத்துகளையும் ஏற்றுக் கொண்டால் அல்லது அந்த ஆறில் ஏதாவது ஒரு கருத்தை மட்டும் ஏற்றுக் கொண்டால் கூட, கரசேவை நடத்தும் சாக்கில் கட்டுமானப் பணியை நடத்தி - பாபர் மசூதியை உருமாற்றி, அதை இராமர் கோயிலின் மூலவிக்கிரகம் இருக்கக் கூடிய கர்ப்பக்கிரகமாக ஆக்கி விடுவார்கள்.

அந்தத் திட்டத்துடன்தான் ஏற்கெனவே 1949 ஆம் ஆண்டிலேயே இராமர் விக்கிரகத்தை இராவோடு இராவாக மசூதியின் பூட்டை உடைத்து, உள்ளே கொண்டுபோய் வைத்து விட்டார்கள்.

அந்த விக்கிரகத்தை அங்கிருந்து அகற்றுவதற்கு பிரதமர் நேரு, வல்லபாய் படேல், உ.பி. முதல்வராக இருந்து கோவிந்த வல்லப பந்த் அனைவரும் முயற்சிப்பதாகக் காட்டிக் கொண்டார்கள். ஆனால் இராமர் விக்கிரகம், பாபர் மசூதியிலிருந்து அகற்றப்படவில்லை. அன்று தொடங்கிய வழக்கு இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில், தியாகராய நகரில் ஒரு திடீர்ப்பிள்ளையார் தோன்றியது - ஆனால் அன்று எடுத்த தீவிர நடவடிக்கையால் உடனே அகற்றப்பட்டது.

உடன்பிறப்பே, அயோத்திப் பிரச்சினையில் மத்திய காங்கிரஸ் ஆட்சிகளின் வழவழா கொள்கைகளாலும், பாரதிய ஜனதா போன்ற அரசியல் கட்சியின் துணை அமைப்புகளான விசுவ இந்து பரிட்சத், இந்து முன்னணி போன்ற மத வெறி இயக்கங்களின் முரட்டுப் பிடிவாதத்தினாலும் - வரலாற்றுப் பின்னணி கொண்ட பாபர் மசூதியை இடிப்பதற்கான சூழ்ச்சித் திட்டமாகக் கரசேவை என்ற வார்த்தை, அமைதிப் புறாவைக் கொத்திட வட்டமிடும் கழுகாக வந்து முளைத்திருக்கிறது.

இந்தக் கரசேவைக்குத்தான் ஜெயலலிதா ஆதரவு கொடுத்து விட்டு, இப்போது தனது தொண்டரடிப் பொடியாழ்வார்களாம் அமைச்சர்களை விட்டு விளக்கம் அளிக்கச் சொல்லியிருக்கிறார்.

அந்த அமைச்சர்களிலே ஒருவர் நாவலர் அவர்கள்/ சென்னையில் ஆற்றிய உரையை இன்றைய ஏடொன்றில் கண்டேன்.

அயோத்தி பிரச்சினையால் நாடு பிளவுபடக் கூடாது. வன்முறை ஏற்படக் கூடாது. மசூதி காப்பாற்றப்பட வேண்டும். இராமர் கோயில் கட்டுவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். நீதிமன்றத்தின் தீர்ப்பு மதிக்கப்பட வேண்டும். இவ்வாறு புரட்சித் தலைவி பேசியது எவ்வாறு திராவிட பாரம்பர்யத்துக்கு மாறுபட்டதாகும்?

இது அந்தக் கூட்டத்தில் நாவலர் விடுத்துள்ள வினா! மகாமகக் குளத்தில் கால் பகுதியை அடைத்துக்கொண்டு, உயர்ந்த மேடையில் பாத்ரூம் கட்டி, அதற்கு வெளியே இருந்து 21 வெள்ளிக் குடங்களில் மாறி மாறித் தோழிகள் தீர்த்தாடனம் செய்து கொண்டதே, திராவிட பாரம்பர்யத்துக்கு மாறுபட்டதல்ல என்று சத்தியம் செய்து வாதிக்கக் கூடிய நாவலர் அவர்கள், இந்த அயோத்திப் பிரச்சினையில் இப்படி ஒரு வினா எழுப்பியிருப்பது வியப்புக்குரியதல்ல!

ஜெயலலிதாவின் டெல்லிப் பேச்சில் முக்கியமான பகுதிகளை கடிதத்தின் தொடக்கத்தில் நான் சுட்டிக் காட்டியிருக்கிறேனே! அவற்றுக்கும், நாவலர் சென்னை மண்ணடிக் கூட்டத்தில் சுட்டிக் காட்டியுள்ள ஜெயலலிதாவின் பேச்சுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?

"உ.பி. அரசு கையகப்படுத்திய நிலத்தில் கரசேவை என்ற பெயரால் கட்டுமானப் பணி நடத்தக்கூடாது என்பதுதான் உச்சநீதிமன்றம் விதித்துள்ள இடைக்கால தடை."

அப்படித் தடை விதிக்கப்பட்ட இடத்தில் கரசேவை தொடங்குவதற்கானச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பது ஜெயலலிதாவின் கருத்து!

அதுமட்டுமா அவர் பேசினார்? பா.ஜ.க. தலைவர்கள் இந்த ஒருமைப்பாட்டுக் கூட்டத்தில் இல்லாவிட்டாலும், இந்தக் கூட்டத்துக்கு வெளியே உள்ள பெரும்பாலான மக்கள் இராமர் கோயில் கட்டும் விருப்பத்துடன் இருக்கிறார்கள். அவர்களின் கருத்தை மறுத்து ஒதுக்க முடியாது என்றும் பேசினார்.

ஆனால் நாவலரோ, தனக்கு வசதியாக ஜெயலலிதாவின் அந்தப்பேச்சை மண்ணடி கூட்டத்தில் மண்ணுக்கடியில் மறைத்துவிட்டு மழுப்பல் வேலை செய்திருக்கிறார்.

அயோத்தியில் இராமர் கோயிலை வேறு எங்கு வேண்டுமானாலும் கட்டிக் கொள்ளட்டும் என்று வி.பி.சிங் பிரதமராக இருக்கும்போதே சொல்லப்பட்டதுதானே! ஆனால் பாரதிய ஜனதா என்ன சொல்கிறது? பாபர் மசூதியை இடித்து 15 கி.மீ. தொலைவில் வேறு மசூதி கட்டிக்கொள்ளுங்கள் - நாங்கள் மசூதியைத் தகர்த்து இராமர் கோயில் உருவாக்குகிறோம் என்றல்லவா சொல்லுகிறது?

இதற்கு நாவலரின் விளக்கமென்ன? தெளிவான பதில் என்ன?

இந்துக்கள் எனப்படுவோரும், முஸ்லீம்களும் சகோதரர்களாக ஒற்றுமையுடன் இருந்திட வேண்டுமென்று திராவிட இயக்கம் பல்லாண்டு காலமாகப் பாடுபட்டு வருகிறதே! அந்த முயற்சி அயோத்தியில் உடைக்கப்பட்டு, அதன் தொடர்பான அமளி தமிழகம் வரையில் பரவிட அனுமதிப்பதுதான் திராவிட இயக்கத்தின் நீண்டகால உழைப்புக்குப் பலனா?

"ஜெயலலிதாவின் பேச்சை திசை திருப்பிப் பிரச்சாரம் செய்து, அ.தி.மு.க. ஆட்சியை அகற்றி முதலமைச்சராக உட்காரலாம் என்று கருணாநிதி ஏங்கிக் கொண்டிருக்கிறார்"

இதுவும் நாவலர் அவர்களின் சென்னை மண்ணடிப் பேச்சில் ஒரு பகுதிதான்!

1967-ல் அண்ணா பாராளுமன்றத்திற்கு வெற்றி பெற்றவர், அதனால் அவர் அங்கே போவதே சிரேஷ்டமானது - நான் இங்கே முதலமைச்சராகிறேன், என்று அன்றைக்கு நாவலர் அவர்கள் போட்ட திட்டம் இன்னும் நிறைவேறாமல் - அண்ணா மறைந்தவுடன் ஆறு நாள் தற்காலிக முதலமைச்சராக இருந்ததற்கே, லெட்டர் பேடுகளில் எக்ஸ் சீப் மினிஸ்டர் என்று அச்சடித்துப் பயன்படுத்தி, ஆசை தீர்த்துக் கொண்ட நாவலர்தான், இன்னமும் அந்தப் பதவிக்காக ஏங்கிக்கொண்டிருக்கிறார் என்பது ஜெயலலிதாவே அறிந்த உண்மை!

அந்தப் பதவியென்ன! எந்தப் பதவியானாலும், யாருக்குக் கீழே ஆனாலும் - எத்தகைய ஆபாச அர்ச்சனைகளைப் பெற்றுக்கொண்டும் கலெக்டர் வந்து காரின் கதவைத் திறக்க வேண்டும் - பின்னால் இரண்டு டவாலி சேவகர் வரவேண்டும் - சர்க்கார் சின்னம் பதித்த காரில் போக வேண்டும் - மானமிகு தேவையில்லை - மாண்புமிகு இருந்தால் போதும்! அதுவே ஜென்ம சாபல்யம் எனக் கருதி அதனை அடைந்திட ஏங்கியவர், ஏங்கிக் கொண்டிருப்பவர், யார்? எவர்? என்று நாட்டுக்கும் தெரியும்! நாவலரின் மனச்சாட்சிக்குத் தெரியும்!

உடன்பிறப்பே, அப்படியே நாவலர் சொல்வதை வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும் - அதாவது நான் முதலமைச்சராவதற்காக ஜெயலலிதா பேச்சை திசை திருப்புகிறேன் என்று வைத்துக் கொண்டாலும் - எனக்குத்தான் முதலமைச்சர் பதவி மீது ஆசை! அதனால் கரசேவை குறித்து ஜெயலலிதா பேசியதைக் கண்டிக்கிறேன் - இதோ தேர்தலிலேயே நிற்க விரும்பாத கொள்கை கொண்ட திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தளபதி வீரமணி அ.தி.மு.க.வின் போக்கைக் கண்டித்துள்ளாரே! அதற்கு நாவலர் என்ன சொல்லுகிறார்?

> **"திராவிடப் பராம்பரியம் எனப் பேசிக் கொண்டு, அண்ணா வழி ஆட்சி என்று சொல்லிக் கொண்டு தமிழகத்தில் உள்ள அ.தி.மு.க. அரசு, கரசேவைக்கு ஆதரவு கொடுத்துப் பேசுவதும், அந்நிலைக்கு நியாயம் தேடுவதும் மிகவும் கேவலமானதாகும்"**

திராவிடர் கழகப் பொதுச்செயலாளரின் இந்தக் கருத்துகூட, அவர் முதலமைச்சராக வேண்டுமென்ற ஏக்கத்தால் திசை திருப்புவதற்காக வெளியிடப்பட்ட கருத்தா?

மண்ணடி கூட்டத்தில் நாவலர் கண்டிப்பாக ஒரு செய்தியைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

"பாரதிய ஜனதாவுக்கும், அ.தி.மு.க.வுக்கும் - கூட்டோ, தொடர்போ, ஒட்டோ, உறவோ கிடையாது."

இதுதான் நாவலரின் அந்தப் பிரகடனம். மாதத்தில் ஒரு நாளாவது முதலமைச்சரை தரிசிக்கிற பாக்கியம் கிடைத்தால்தானே, அவர் என்ன எண்ணுகிறார் என்பதை நாவலர் புரிந்து கொண்டு பேசியிருக்க முடியும்.

ஜெயலலிதாவை எக்ஸ்பிரஸ் நிருபர் கேட்கிறார். என்ன கேள்வி? என்ன பதில்?

நிருபர் :- பி.ஜே.பி.யுடன் கூட்டணி வைத்துக் கொள்வீர்களா? காங்கிரசுடன் கூட்டணி வைத்துக் கொள்வீர்களா?

ஜெயலலிதா :- இந்தக் கேள்வி இப்போது எழவில்லை. தேர்தலுக்கு இன்னும் நீண்டகாலம் இருக்கிறது.

நிருபர் :- அப்படியானால் பி.ஜே.பி. பா.ஜ.க.யுடன் கூட்டணி அமைக்கும் வாய்ப்பை நீங்கள் நிராகரிக்கவில்லை.

ஜெயலலிதா :- கூட்டணி பற்றி இப்போது பேச நான் விரும்பவில்லை. காரணம், அந்தக் கேள்வி எழவில்லை.

கட்சியின் தலைவியும் முதலமைச்சருமான ஜெயலலிதா எதிர்காலத்தில் காங்கிரசுடன்தான் கூட்டணி என்று தெளிவாகச் சொல்லவில்லை! பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று கறாராகவும் சொல்லவில்லை!

ஆனால், அமைச்சரவையில் இரண்டாவது இடம் என்ற பெயரால் கடைசி இடத்தில்கூட இருக்கிறோமா இல்லையா என்று தெரியாத நிலையில் உள்ள நாவலர் அவர்கள்,

பா.ஜ.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் கொள்கை வேறுபாடு உண்டு. எனவே அவர்களுடன் கூட்டோ, ஒட்டோ, உறவோ கிடையாது.

என்று திட்டவட்டமாகப் பேசியிருக்கிறார். இந்த அழகில் அவர் தி.மு.க.வில் உட்கட்சிப் பூசல் என்றும் மண்ணடியில் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

எந்தக் கடவுளையும் நம்பாமல் இருக்க என்னைப் போன்ற பகுத்தறிவாளர்களுக்கு உரிமை உண்டு. என்று நாவலர் மண்ணடியில் தன்னைப் பற்றிப் பேசிய ஒரு வாசகத்தைத் தவிர, மற்றவை அனைத்தும் மந்திரி பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பேசிய மண்ணடித்து மக்கிப்போன கருத்துகள்தான்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

04-12-1992

1981. கழகம், தொடர்ந்து களத்திலே நிற்கும்!

உடன்பிறப்பே,

இன்று டிசம்பர் 5- ஆம் நாள் இந்தக் கடிதம் எழுதுகிறேன்! டிசம்பர் 6- ஆம் நாள் அல்லது இதனையடுத்து சில நாட்களில் எத்தகைய விளைவுகளை இந்த நாடு எதிர்கொள்ளப் போகிறதோ என்ற வேதனையுடனும், அந்தத் துயரநிலை தவிர்க்கப்படுமா என்ற ஆதங்கத்துடனும் எழுதுகிறேன்.

நானே, எதிர்பாராத வகையில் டிசம்பர் 5 - ஆம் நாள் இந்து நாளேட்டில் வந்துள்ள தலையங்கத்தைப் படித்துவிட்டு எழுதுகிறேன்.

கரசேவையை அனுமதிப்பது என்ற பிரச்சினையை ஏதோ அரசியல் காரணங்களுக்காக தி.மு.க. கண்டிப்பது போல, இந்து ஏட்டில் இதே டிசம்பர் 5-ல் வேறொரு பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்தித் தொகுப்புக்கும், இந்து தலையங்கத்துக்குமிடையேதான் எத்துணை வேறுபாடு!

ஆம்! உடன்பிறப்பே, அயோத்தியில் நீதிமன்றத் தீர்ப்பை அலட்சியப்படுத்திக் கரசேவை நடத்துவதை இந்து ஏடு தனது தலையங்கத்தில் அவ்வளவு வேகமாகவும், தீவிரமாகவும் கண்டித்திருக்கிறது!

அயோத்தியில் உருவாகியிருப்பது இராமர் கோயிலா பாபர் மசூதியா? என்ற பிரச்சினையல்ல. இந்தியாவின் எதிர்கால விளைவுகள் எப்படியிருக்கும் என்பதைப் பற்றிய பெரிய பிரச்சினையாகும் - மத உணர்வுகள் என்பவை நீதிமன்ற தீர்ப்புகளையும் மீறிப்போகலாமா என்ற கேள்வியின் அடிப்படையில் எழுந்துள்ள பிரச்சினையாகும். டிசம்பர் 6-ஆம் தேதி கரசேவை என்ற பெயரால் பாபர் மசூதிக்கு சேதாரம் உருவாக்கக் கூடிய எந்தச் செயலையும் மதவெறியர்கள் மேற்கொள்ள

மத்திய அரசு அனுப்பியுள்ள துணை இராணுவத்தினர் அனுமதித்துவிட்டால், பின் விளைவுகளுக்கு அவர்கள்தான் பொறுப்பேற்கவேண்டியிருக்கும். பா.ஜ.க. தனது மத உணர்வு வெறிப்பிரிவினரைக் கைவிடத் தயாராகாமல், அவர்களுக்கு ஆதரவு வழங்குவதிலிருந்து விடுபடாமல் இருக்குமேயானால், இந்திய நாடு பயங்கரமான அழிவுப் பள்ளத்தில் விழுவதற்கு முழுப்பொறுப்பும் ஏற்க வேண்டியிருக்கும்.

கோடிட்டுள்ள பகுதியில் கண்டுள்ள கருத்துகளே இந்துவின் தலையங்கத்தில் பிரதான அம்சமாகும்.

இந்து - ஒரு புறம் பாரதிய ஜனதாவுக்குப் பரிவு காட்டிக்கொண்டும் - அந்தக்கட்சியுடன் கைகுலுக்கிடுவதற்காகவே கரசேவையை ஆதரிக்கிற ஜெயலலிதாவை மறுபுறம் முட்டுக் கொடுத்து, ஆதரித்துக் கொண்டுமிருக்கிற ஏடு என்பதையும் நாடறியும்!

அந்த இந்துவே அயோத்திக் கரசேவையினால் விளையக்கூடிய அபாயத்தைக் கோடிட்டுக் காட்டி, இந்துக்களும் இஸ்லாமியரும் மோதிடும் சூழ்நிலை வரக்கூடாதென மிகக் கடுமையாக எச்சரிக்கும்போது,

பச்சை அட்டைக் குடியரசுப் பத்திரிகையில் இராமாயண ஆராய்ச்சியை வெளியிட்டுப் பெரியார் அவர்கள் முழங்கிய காலந்தொட்டு, திருவாரூரில் 1937லேயே அந்தப் பத்திரிகையைப் படித்து, அந்தப் பத்திரிகையைப் பலரிடத்திலே பரப்பிய என்னைத் தலைவராகவும், சிதம்பரத்தில் அந்தப் பத்திரிகையின் விற்பனையாளராக இருந்து இயக்கம் வளர்த்த பெரியவர் கல்யாணசுந்தரனாரின் செல்வன் பேராசிரியர் அவர்களைப் பொதுச் செயலாளராகவும் கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் அயோத்திப் பிரச்சினையைப் பேசினால் மட்டும் அது அரசியலாகத் தெரிகிறது இந்துவுக்கு!

ஒருவேளை இந்துவுக்கு என்ன சங்கடமாக இருக்குமென்றால், உ.பி. அரசு கையகப்படுத்திய நிலத்தில் பாபர் மசூதியை வளைத்துக் கட்டுமானப் பணி செய்திடக் கரசேவையாளர்களை அனுமதிக்க வேண்டும் என்று ஜெயலலிதா பேசிவிட்டாரே! அதையும் சேர்த்து தி.மு.க. கண்டிக்கிறதே என்ற சங்கடமாக இருக்கும்!

அல்லது ஒருவேளை, உலகத்தில் நடக்கும் நல்லது கெட்டதுகள் அனைத்துக்கும் பரிகாரம் காண வேண்டிய பணி, தனக்கு மட்டுமே சொந்தம் என்று இந்து ஏடு, தன்னைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

மகாமகம்

வேதக்கல்லூரி

ஆலய வாரியம்

கரசேவை ஆதரவு

என்றெல்லாம் தன்னைத் திராவிட இயக்கத்துக்குத் தொடர்பற்றவர் எனக் காட்டிக் கொண்டிருக்கிற ஜெயலலிதாவையும் - அண்ணாவினால் உருவாக்கப்பட்டு, தந்தை பெரியார் அவர்களின் பாராட்டுரையையும், புகழுரையையும் அவர் இயற்கை எய்திய காலம் வரையில் பெற்ற தி.மு.கழகத்தையும் ஒரே துலாக்கோலில் எடைபோட்டு - ஆகா! இது அரசியல் சண்டை என்று இந்து ஏடு தொகுப்புக் கட்டுரை எழுதுகிறதே! அதன் தலையங்கத்துக்கும், அதே நாளில் இந்துவில் வெளிவந்த அந்தக் கட்டுரைக்கும் ஏதாவது பொருத்தமிருக்கிறதா?

> "தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மிக்க புத்திசாலித்தனமாகவும், கெட்டிக்காரத்தனமாகவும் நடந்து வருவதுடன், தி.மு.க. கொள்கை விஷயத்தில் பெரும் அளவிற்குக் காரியம் செய்திருக்கிறார். இதை அறியும் சக்தி நம் மக்களில் பலருக்கு இல்லாதது நமக்கு வெட்கப்படத்தக்க விஷயமாகும்."

இது தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தி.மு.க. ஆட்சியைப் பாதுகாக்க வேண்டும். ஏன்? என்ற புத்தகத்தில் இடம் பெற்றுள்ள கருத்து என்பதை இந்து கட்டுரையாளர் படித்திருக்கமாட்டார். அதனால்தான் நம்மை அ.தி.மு.க.வுடன் ஒப்பிட முயற்சி செய்து பார்க்கிறார்!

நாட்டின் வடக்கே பரவிடக்கூடிய மதக் கலவரச் சூழ்நிலை, பெரியார், அண்ணா போன்ற தலைவர்களின் பணியினால், இந்துக்கள் எனப்படுவோரும் இஸ்லாமியரும் சகோதரர்களாக இணைந்து வாழும் தமிழகத்திலும் பரவிடக்கூடாது.

இதைத்தான் என் கருத்தாகவும், நாஞ்சிலார் கருத்தாகவும் வெளியிட்டுள்ள இந்துவின் தொகுப்புக் கட்டுரையாளருக்கு, வேறொரு விபரீதமான ஆசையும்கூட! - தி.மு.க.-அ.தி.மு.க. இரண்டுமே திராவிட இயக்கமல்ல எனக் கூறி தி.மு.க. மீது புழுதி வாரி இறைத்து அரிப்பைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று!

பாவம்! கட்டுரையாளரின் அந்த ஆசை நிறைவேறாது!

பெரியாரின் எழுத்துகள், பேச்சுக்கள், எண்ணங்கள், இலட்சியங்கள் அனைத்தையும் எருவாகக் கொண்டது தி.மு.கழகம்!

அவையனைத்தையும் சாதனை மலர்களாக ஆக்கியதும், ஆக்கிக் கொண்டிருப்பதும் அண்ணா உருவாக்கிய தி.மு.கழகம்தான்!

எனவேதான் சொல்லுகிறேன்! சமத்துவம், சமதர்மம், சகோதரத்துவம் இவற்றுக்கு எதிராகவோ - மதச்சார்பின்மைக் கொள்கைக்கு முரணாகவோ - இந்த நாட்டை நாசமாக்க முனையும் எந்த சக்திகளையும் முறியடிக்கக் கழகம் தொடர்ந்து களத்திலே நின்று கொண்டேயிருக்கும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

06-12-1992

1982. இந்திய வரலாறு இழந்த பெருமையை மீண்டும் பெற்றிட . . . .

உடன்பிறப்பே,

கடந்த கால அனுபவங்களைக் கொண்டும், காட்டுமிராண்டித்தனமான முறையில் பாரதிய ஜனதா கட்சியினாலும் அதன் துணை அமைப்புகளான விசுவ இந்து பரிட்சத், ஆர்.எஸ்.எஸ். போன்றவைகளாலும் தூண்டிவிடப்படும் மதவெறியானது, நாட்டை எங்கே இழுத்துச் செல்லக்கூடும் என்ற நிலைப்பாட்டை மனத்திற் கொண்டும், தி.மு.கழகம் உள்ளிட்ட மதச் சார்பற்ற கொள்கையில் உறுதிகொண்ட கட்சிகள் அனைத்தும் கரசேவை என்ற பெயரால் கலக சேவையும், வரலாற்றுச் சின்னமான பாபர் மசூதியைத் தரைமட்டமாக்கி அங்கே இராமர் கோயில் கட்டும் காரியமும்தான் நடைபெறும் என எச்சரித்து எடுத்துவைத்த வாதங்களை பிரதமர் நரசிம்மராவ் அலட்சியப்படுத்தினார்.

இங்குள்ள தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதாவோ பாரதிய ஜனதா தலைவர்களை டெல்லிப்பட்டணத்தில் சந்தித்து, அவர்களிடத்தில் அருள் வாக்குப் பெற்று, அவர்கள் எழுதிக் கொடுத்ததையும் - ஏற்கெனவே தனது எண்ணமாக இருந்ததுமான கரசேவை ஆதரவு கருத்தை ஒருமைப்பாடு மன்றக் கூட்டத்திலே எடுத்துரைத்து, பிரதமரின் நிறைவுரையைக் கூட புறக்கணித்துவிட்டு வெளியேறினார்.

அவரது செயலை இந்தியா முழுவதுமுள்ள மதச் சார்பற்ற கொள்கையில் நம்பிக்கையுள்ள கட்சிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழகத்திலோ தி.மு.க., மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, ஜனதாதளம், அகில இந்திய பார்வார்டு பிளாக், முஸ்லீம் லீக், திராவிடர் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, ஜனதா, எம்.ஜி.ஆர் அ.தி.மு.க. ஆகிய கட்சிகள் மாத்திரமன்றி தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியும் கூட, ஜெயலலிதா பாரதிய ஜனதாவின் ஊது குழலாகிவிட்ட உண்மையை நாட்டுக்கு உணர்த்தித் தமது கண்டனங்களை வெளியிட்டன.

அப்போதுகூட தனது தவற்றை ஒப்புக் கொண்டு திருந்திக்கொள்ள ஜெயலலிதா தயாராக இல்லை.

பாபர் மசூதியை இடிக்காமல் கரசேவை செய்து இராமர்கோயில் கட்டலாம் என்றுதான் அம்மா சொன்னார்களாம் என்று அமைச்சர்களும், வாரியங்களும் ஊர் ஊராகச் சென்று அம்மா துதி பாடிவிட்டு - என்னையும் கழகத்தையும் அவர்களுக்கே உரிய அரசியல் நாகரிக?த்துடன் விமர்சித்துத் திரும்பினார்கள்.

ஆனால் அயோத்தியில் நடந்தது என்ன? எது நடக்கக்கூடாது என்று எச்சரித்தோமோ அதுதான் நடந்தது!

அயோத்தியில் இராமர்கோயில் கட்டுவதற்கும், கரசேவை நடக்குமிடத்தில் இராமர் கோயில்கட்டுவதற்கும் நிரம்ப வேறுபாடு உண்டு - அயோத்தியில் வேறு ஒரு இடத்தில் இராமர் கோயில் கட்டினால் பாபர் மசூதிக்குச் சேதமில்லை - கரசேவைக்கு அனுமதி தந்து அங்கே கட்டுவது என்பது பாபர் மசூதியை இடித்துவிட்டுக் கட்டுவது என்பதற்கானச் சூதுத் திட்டமே ஆகும் என நாம் எடுத்துச் சொன்னதை ஏகடியம் செய்தனர்! எங்க அம்மா இந்தியாவுக்கே வழி காட்டியுள்ளார். இதைப் போய் இந்தக் கருணாநிதி மறுக்கிறானே! என்று மேடையேறி ஆவேச நர்த்தனம் புரிந்தனர்.

ஆனால்..... உண்மையைத் தாமதமாகவே உணர்ந்துகொள்ளும் நிலையில் உள்ள நமது மக்கள் இப்போது இந்தியா முழுமையும் நடக்கும் அல்லோல கல்லோலம், நாட்டுக்கு வெளியே கூட நடைபெறும் வன்முறை வெறியாட்டங்கள், இவற்றைக் கண்டபிறகு - டெல்லியில் பிரதமராக இருப்பவரும், தமிழ்நாட்டில் முதல்வராக இருப்பவரும் யார் என்பதை உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

டெல்லியில் இருப்பவர், பாரதிய ஜனதாவுடன் ஒட்டி உறவாடி, எந்த நிலையிலும் பதவியில் இருந்தே தீரவேண்டுமெனத் திட்டம் போட்டுக் கொண்டிருப்பவர்.

இங்கு இருப்பவரோ பாரதிய ஜனதாவின் மறுபதிப்பேதான்!

இல்லாவிட்டால், இவர் டெல்லி ஒருமைப்பாடுக்கூட்டத்தில் கரசேவையை ஆதரித்துப் பேசியதற்கு பாரதிய ஜனதா, விசுவ இந்து பரிட்சத், இந்து முன்னணி தலைவர்களும், நாடு முழுதுமுள்ள அவற்றின் கிளை அமைப்புகளும் இந்த அளவு பாராட்டு மழை

பொழிந்திருக்க முடியுமா? உடன்பிறப்பே, இப்போதுகூட பாரேன்! தேசிய முன்னணி இடதுசாரி கட்சிகள் 7.12.92 திங்கள் காலை 10 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயத்தில் கூடிப் பேசி 10.12.92 வியாழக்கிழமை தமிழகத்தில் முழு அடைப்பு வேலை நிறுத்தம் என அறிவிக்கிறோம். அதற்கானத் தீர்மானங்களில் பாரதிய ஜனதா மற்றும் அதன் துணை அமைப்புகள் அயோத்தியில் நடத்தியுள்ள அக்கிரமங்களைச் சுட்டிக் காட்டிக் கண்டித்துள்ளோம்.

நமது அணியினர் முடிவெடுத்து அறிவித்த சில மணி நேரத்துக்குப் பிறகு, பிற்பகல் ஜெயலலிதா அறிவிக்கிறார் 10-ந் தேதி வேலைநிறுத்தம் முழு அடைப்பில் அ.தி.மு.க. ஈடுபடும் என்பதாக!

அதற்காக அவர் விடுத்துள்ள அறிக்கையில் 7-ந் தேதி சென்னைப் பொதுக்கூட்டத்தில் திரு. நல்லசிவன் எம்.பி. அவர்கள் சுட்டிக் காட்டியது போல, ஒரு இடத்திலாவது பாரதிய ஜனதாவையோ, விசுவ இந்து பரிட்சத் போன்ற மதவெறிக் கூட்டத்தையோ குறிப்பிட்டு கண்டிக்கவில்லை.

பாவம்! ஜெயலலிதா, தனது அறிக்கையில் அவர்களை எப்படிக் கண்டிக்க முடியும்? இவரேதான் கரசேவைக்கு தேவையான வசதிகளை அளிப்பதாகவும், ஆயிரம் அ.தி.மு.க. தொண்டர்களை அனுப்பியதாகவும் உ.பி. மாநில விசுவ இந்து பரிட்சத் செயலாளரே வடநாட்டில் உள்ள எல்லா பத்திரிகைகளுக்கும் பேட்டி கொடுத்திருக்கிறாரே!

அதனால் ஜெயலலிதாவைப் பொறுத்த வரையில், நாம் அறிவித்துள்ள 10-ந் தேதி முழு அடைப்பில் தனது கட்சியும் கலந்து கொள்ளும் என்ற அறிவிப்பை, அவரது ஆணைக்கிணங்க சில ஏடுகள், என்னவோ அவர்தான் முன்னதாக 10-ந் தேதி முழு அடைப்பை அறிவித்தது போல பாவலா காட்டிப் பிரசுரித்துள்ளன. வாழ்க அவற்றின் பத்திரிகா தர்மம்!

வேடம் கலைந்த ஜெயலலிதா மீண்டும் திராவிட இயக்கப் பரிணாம வளர்ச்சி வேடம் பூணுவதற்காக, 10-ந் தேதி முழு அடைப்பு என அறிவித்திருந்தாலும் - இன்னமும் அவரது சுய சொரூபத்தையும் , அவரைச் சுற்றியுள்ள பதவி தாங்கிகளின் சுயநலத்தையும் புரிந்துகொள்ளாமல் அ.தி.மு.க.வில் தொண்டர்களாக இருக்கின்ற உடன் பிறப்புகள் - நமது தோழமைக்

கட்சி அணி நடத்தும் 10-ந் தேதி முழு அடைப்பில் கலந்துகொள்கிற நிலை, எப்படியோ ஏற்பட்டிருக்கிறதே என்பதற்காக நான் ஆறுதல் அடைகிறேன்.

உடன்பிறப்பே, நாட்டின் பல பகுதிகளில் கொந்தளிப்பு! நூற்றுக்கணக்கில் பிணங்கள் சாய்கின்றன! வருபவை செய்திகளாக இல்லை! செந்தீயாக இருக்கிறது!

இந்தச் சூழலில்தான் 10-ந் தேதி நாம் நடத்துகிறோம், முழு அடைப்பும் வேலை நிறுத்தமும்!

அமைதிக்குச் சிறு துளியளவு பங்கமும் ஏற்படாமல், காலம் காலமாக நாம் காத்து வருகிற கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போற்றி 10-ந் தேதி வேலைநிறுத்தம் - முழு அடைப்பில் ஈடுபடுவோம்!

இந்தியாவின் வரலாற்றுச் சின்னமொன்று அழிக்கப்பட்டது என்பது மட்டுமல்ல; இந்திய வரலாற்றின் பெருமையே அழிக்கப்பட்டு விட்டிருக்கிறதல்லவா; அந்தப் பெருமையை மீண்டும் நாட்டுக்குச் சேர்த்திட; நமது 10-ந் தேதி அறப்போரும் பயன்பட்டாக வேண்டும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

09-12-1992

1983. நாட்டு மக்களின் ஏகோபித்த கேள்வி!

உடன்பிறப்பே,

அயோத்தியில் பாபர் மசூதி தரைமட்டமாக ஆக்கப்பட்ட இடத்தில் முகாமிட்டிருந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட கரசேவகர்கள் என்னும் மதவெறிக் கூட்டத்தினரை இராணுவத்தினர் அதிரடி நடவடிக்கை எடுத்து அனைவரையும் விரட்டி விட்டனர் என்று, இன்று ஏடுகள் கொட்டை எழுத்துச் செய்திகளை வெளியிட்டுள்ளன.

ஒரு லட்சம் கரசேவகர்களை ஒரு சில மணித்துளிகளுக்குள் அந்தப் பகுதியிலிருந்தே விரட்டி, அவரவர் ஊர்களுக்குப் போய்ச் சேருமாறு செய்த இந்த நடவடிக்கையை டிசம்பர் 6-ந் தேதிக்கு முன்பே எடுத்திருந்தால், பாபர் மசூதி எந்தச் சேதமுமின்றிப் பாதுகாக்கப்பட்டிருக்குமா அல்லவா?

நாடு முழுதும் நடைபெறும் கலவரத்துக்கான மதவெறிப் புயல் வீசாமல் இருந்திருக்குமல்லவா?

இதுவரையில், ஆம்! இந்தக் கடிதம் எழுதும் வரையில் ஐநூறுக்கு மேற்பட்ட உயிர்கள் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பலி கொள்ளப்பட்டுள்ளனவே! இந்தக் கொடுமை நிகழாமல் இருந்திருக்குமல்லவா?

அயோத்திக்கு எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவத்தை, டிசம்பர் 5-ந் தேதியே அயோத்திக்கு அனுப்பி பாபர் மசூதியைச் சுற்றி ஆயத்தமாக நிற்கச் சொல்லியிருந்தால், இன்று அனைத்து நாடுகளும் அதிர்ச்சியுறத்தக்க நிலையில் நடத்தப்பட்டுள்ள வரலாற்றுச் சின்ன அவமதிப்பு - மதப்பற்றுடையோரின் மனத்தைப் புண்ணாக்கிய செயல் - மதச்சார்பற்ற கொள்கையுடையோரும் வேதனைப்படக் கூடிய விவகாரம் - நிகழாமல் தடுக்கப்பட்டிருக்குமல்லவா?

இதைத்தானே நாம் சுட்டிக்காட்டி, இந்த அமளிக்கு நரசிம்மராவ் அவர்களின் தலைமையில் உள்ள மத்திய அரசு பொறுப்பேற்க வேண்டுமென்கிறோம்!

குதிரை களவு போன பிறகு லாயத்தைப் பூட்டி என்ன பயன்?

தும்பை விட்டுவிட்டு வாலைப்பிடிக்க ஓடுவது வேதனையான வேடிக்கை அல்லவா?

என்று கேட்டால் இங்குள்ள காங்கிரஸ் பிரமுகர்கள் சிலருக்கு கோபம் கொப்பளிக்கிறது! கண்கள் சிவக்கின்றன! கனல்தெறிக்க அறிக்கை எழுதி என்னைக் கண்டிக்கிறார்கள்!

பிரதமர் கூட்டிய ஒருமைப்பாடு மன்றக் கூட்டத்தில், பாரதிய ஜனதாவுக்கு ஆதரவாகவும், கரசேவையை அவர்கள் விரும்பும் இடத்திலேயே அனுமதிக்க வேண்டுமென்றும் ஜெயலலிதா பேசியது கண்டும், பிரதமரின் நிறைவுரையை அலட்சியப் படுத்திவிட்டு அவர் கூட்டத்தை விட்டு வெளியேறியது கண்டும், இந்தப் பிரமுகர்களுக்கு அவ்வளவு ஆத்திரம் வரவில்லை.

மாறாக என்மீது ஆவேசத்தாக்குதல், ஆத்திரப்பாய்ச்சல் நடத்துகின்றனர்.

நவம்பர் 26-ந் தேதி சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற்ற கரசேவைக் கண்டனக் கூட்டத்தில் நான் பேசினேனே? இந்த ஒரு பிரச்சினையில் நாங்கள் பிரதமரின் கரத்தை பலப்படுத்தத் தயார் என்று!

வெளிநாட்டு ஆக்ரமிப்புகளின் போது எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க. பண்டித நேருவின் கரத்தையும், லால் பகதூர் சாஸ்திரியின் கரத்தையும் வலுப்படுத்த ஆதரவு வழங்கியது போல இப்போதும், இந்த மதவெறி மாய்மாலத்திலிருந்து நாட்டைக் காத்திட இந்தப் பிரச்சினையில் நரசிம்மராவுக்கு ஆதரவு தரத் தயாராக இருக்கிறது என்று கூறினேனே!

பாவம்! அப்போதும் இந்தக் காங்கிரஸ் பிரமுகர்கள் தோட்டத்து வாசற்படியில் தொழுது நின்று தொடருவோம் கூட்டணியை என்று மன்றாடிக் கிடந்தார்களே தவிர, தி.மு.கழகமோ, தி.மு.க. உள்ளிட்ட தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளோ இந்தப் பிரச்சினையில் பிரதமருக்கு பக்க பலமாக இருப்பதைப்

பயன்படுத்திக்கொண்டு பாபர் மசூதியைக் காத்திட முன் வந்தார்களா? பிரதமருக்கு எடுத்துச் சொன்னார்களா?

இப்போது என்ன பேசுகிறார்கள்?

ஆகா! கருணாநிதி மாநில சுயாட்சி கேட்பவராயிற்றே! அவர் கொள்கைப்படி உ.பி. மாநில அரசைக் கலைக்க முடியுமா? ராணுவத்தை அந்த மாநிலத்தின் அனுமதியின்றி அனுப்பலாமா?

இப்படி ஒரு பிரகஸ்பதித்தனமான கேள்வியை அந்தப் பிரமுகர்கள் எழுப்பியுள்ளனர்.

அட! என் ராஜாவே! உனக்கு எப்படா கண்ணு இந்த புத்தி வந்தது? என்று சில பாட்டிகள்; தங்களின் விஷமக்காரப் பேரன்களைக் கொஞ்சுவதைப் பார்த்துள்ளோம் அல்லவா? அப்படித்தான் இவர்களைப் பார்த்தும் கேட்கத் தோன்றுகிறது!

1976ஆம் ஆண்டு ஜனவரி இறுதி நாளில் தி.மு.க. ஆட்சியை இந்திரா காந்தி கலைத்தபோது, இரண்டு நாட்களுக்கு முன்பே விமானங்கள் மூலமும், ரயில்கள் மூலமும் இராணுவம் தமிழ்நாட்டில் முக்கிய பகுதிகளில் முற்றுகையிட்டதே! மறந்து போய்விட்டதா இந்தப் பிரமுகர்களுக்கு?

அடடா! மாநில ஆட்சியைக் கலைக்கக் கூடாதாமே! புதிய ஞானோதயம் பிறந்திருக்கிறதே இந்தப் புனிதர்களுக்கு!

கவர்னர் அறிக்கை தர மறுத்த போதும், ராஜீவின் உத்தரவுக்கும் ஜெயலலிதாவின் ஆணைக்கும் கட்டுப்பட்டுச் சந்திரசேகரின் கட்டளைப்படி அறநெறிக்காவலர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் கையெழுத்திட்டு கழக ஆட்சியைக் கலைத்தது கூட இந்த கனவான்களின் நினைவில் இல்லை போலும்!

அப்படியே இருந்தாலும், இப்போது மட்டும் பாபர் மசூதியை இடித்து முடித்த பிறகு உ.பி. அரசை கலைத்ததற்கு என்ன காரணம்?

இதே கலைப்புக் காரியத்தை டிசம்பர் 5-ந் தேதிக்கு முன்பே செய்து, திரு. வி.பி.சிங் அவர்கள் ஆட்சியில் அத்வானியின் ரதயாத்திரை தடுக்கப்பட்டது போல, கரசேவகர்களின் பயணத்தை நடுவழியிலேயே தடுத்து நிறுத்தி, இராணுவத்தை பாபர் மசூதியைச் சூழ நிறுத்தியிருந்தால்,

இந்திய வரலாற்றில் இப்படி ஒரு களங்கம் படிந்திருக்குமா? கறை ஏற்பட்டிருக்குமா? காலா காலத்துக்கும் துடைக்க முடியாத பழி விழுந்திருக்குமா?

இந்த உண்மை நிலையைச் சிந்தித்துப் பார்க்காமல் என்மீது இந்த சீலர்கள் சீறி விழுகிறார்களே! ஏன்?

நரசிம்மராவையும் பா.ஜ.க. தலைவர்களையும் வரலாறு மன்னிக்காது!

என்று எக்ஸ்பிரஸ் ஏடல்லவா தலையங்கம் தீட்டியுள்ளது!

இந்தப் பிரச்சினையில் நரசிம்மராவ் கடைப்பிடித்த உபாயம், எதிர்காலத்தில் கட்சிக்கு உள்ளேயும், வெளியேயும் பெரும் சர்ச்சைக்குரியதாகவே இருக்கும்.

என இந்து ஏடல்லவா தலையங்கம் எழுதியுள்ளது!

இந்துவும், எக்ஸ்பிரசும் தி.மு.கழக ஏடுகள் அல்ல என்பது மட்டுமல்ல - தி.மு.க.வின் செய்திகளையும் கூட முடிந்த அளவு இருட்டடிப்பு செய்கிற திறன் பெற்ற ஆசிரியர்களையும், நிர்வாகிகளையும் கொண்ட ஏடுகள் அல்லவா?

அவைகள் ஏன் நரசிம்மராவுக்கு நாமாவளி பாடவில்லை? பாயிரம் தொடுக்கவில்லை?

நமைச்சல் கொண்டு நம்மீது கணை வீசும் காங்கிரஸ் கனதனவான்கள், நாடு நாசங்களைச் சந்திக்காமலிருக்க -

இப்போது வாலைப் பிடிப்பதற்கு பதில் முன்பே தும்பைப் பிடித்திருக்க வேண்டாமா?

இன்று லாயத்தைப் பூட்டுவதற்குக் கெட்டிப்பூட்டு தேடுகிறவர்கள் அன்றைக்கே குதிரையைப் பாதுகாத்திருக்கக் கூடாதா?

இதுதான் இன்று இந்த நாட்டு மக்களின் ஏகோபித்த கேள்வி!

அன்புள்ள,

மு. கருணாநிதி

10-12-1992

1984. உதிரத்துடன் ஊறிய உறவு!

உடன்பிறப்பே,

அண்மையில் நடந்த ஒன்று என விசுவ இந்து பரிட்சத் செயலாளரே ஒப்புக் கொண்டு நிருபர்களுக்கு அளித்த பேட்டியை இப்போது திரித்துப் பேசுகிற அ.தி.மு.க. நிலை கண்டு - இந்தக் கற்பனை உரையாடலைக் கடிதமாக உனக்கு எழுதியிருக்கிறேன்.

*

முதலமைச்சர் வீட்டுத் தொலைபேசி மணி அடிக்கிறது. செயலாளர் எடுக்கிறார்.

செயலாளர் :- அலோ! அலோ! ஆமாம் - சீப் மினிஸ்டர் வீடுதான்... ஓ! டிரங்காலா? எங்கேயிருந்து?...

தொலைபேசி நிலைய அலுவலர் :- லக்னோவிலிருந்து வருது ... பி.பி. கால்! ... சி.எம். இருக்காங்களா?

செயலாளர் :- பி.பி. காலா? ... சி.எம்.மும் இருக்காங்க! அவங்க காலும் இருக்கு! காலில் விழப் போறது யாரு? .... அதுவும் லக்னோங்கிறீங்க! அவ்வளவு தூரத்திலிருந்து விழப் போறாங்களா?....

தொலைபேசி நிலைய அலுவலர் :- சார்! உங்களோடு கதை பேச எனக்கு நேரமில்லை! சி.எம். இருந்தா பேசச் சொல்லுங்க! இல்லேன்னா நான் லக்னோவுக்கு சொல்லிடுறேன்...

செயலாளர் :- அவசரப்படாதிங்க சார்...ரெண்டு நிமிஷம் இருங்க...இதோ மேடத்துக்கு சொல்லி அனுப்பி பேசச் சொல்றேன்.

தொலைபேசி நிலைய அலுவலர் :- ஆல்ரைட்! சீக்கிரம் பேசச் சொல்லுங்க!...

செயலாளர் தொலைபேசி ரீசிவரைக் கையில் பிடித்தபடி, இன்னொரு குட்டிச் செயலாளரை மாடிக்கு அனுப்புகிறார். அரைமணி நேரம் மாடியிலிருந்து பதிலே வரவில்லை

பிறகு செயலாளர் தொலைபேசியில் அலோ! அலோ! என்று கத்திப் பார்க்கிறார் - தொடர்பு அறுந்து போயிருக்கிறது. செயலாளர் பெருமூச்சு விட்டபடி தலையில் கைவைத்துக் கொண்டு மேசையில் சாய்கிறார். மீண்டும் மணி அடிக்கிறது. ரீசிவரை எடுக்கிறார் பதற்றமுடன்

செயலாளர் :- அலோ மன்னிக்கனும் சார்.... மேடம் இரண்டு மூணு இன்ட்டஸ்ட்ரியை கிளியர் பண்ணிகிட்டு இருந்தாங்க... அதுக்குள்ள நீங்க...

குட்டிச் செயலாளர் :- குறுக்கே ஓடிவந்து மேடம், மேலே கனெக்ஷன் கொடுக்கச் சொல்றாங்க!

செயலாளர், குட்டிச் செயலாளர் சொன்ன வேலையை செய்துவிட்டு, மெல்லிய தொனியில் விசில் அடித்தவாறு நாற்காலியில் அமருகிறார், தொடர்பு அளிக்கப்பட்ட தொலைபேசியின் ரீசிவரை எடுத்து, முதல்வர் கரத்தில் கரசேவை பக்தியுடன் ஒருவர் கொடுக்கிறார்

முதல்வர் :- ஹலோ...எஸ்....நான்தான் பேசுறேன். நீங்க... லக்னோவிலிருந்து யாரு?.. ஓ! குலாப் சிங் பரிகார்! உங்களைத்தான் தேடிக்கிட்டு இருக்கேன். நீங்களே வந்து போன்ல மாட்டிகிட்டீங்க!...

குலாப்சிங் :- நீங்க வேற என்னை தேடுறீங்களா? இங்க போலீஸ் தேடிக் கிட்டிருக்கு...அத்வானி, ஜோஷி எல்லாம் அரஸ்ட் பண்ணினவுடனே நான் இதுவரையிலே போலீசிலே மாட்டாம இருக்கேன்...

முதல்வர் :- ஆமாம்... நீங்க உத்திரபிரதேச மாநிலத்து விசுவ இந்து பரிட்சத்தினுடைய மாநிலச் செயலாளர்தானே?

குலாப்சிங் :- ஆமாம்... அதிலே என்ன சந்தேகம். சாட்சாத் ஸ்ரீராமன் அறிய நான்தான் உ.பி. மாநில விசுவ இந்து பரிட்சத் செயலாளர்....

முதல்வர் :- ஒரு மாநில செகரட்டரி பொறுப்பிலே இருக்கீங்க. கொஞ்சம் கூட பொறுப்பு இல்லாம நடந்துகிட்டீங்களே!

குலாப்சிங் :- என்னங்க அப்படி நடந்து கிட்டேன்? ஓ! இங்கே பாபர் மசூதியை தரை மட்டமாக்கின இனிப்பான சேதியை உடனே உங்களுக்கு நான் தெரிவிக்க வில்லையென்கிற கோபமா? நீங்க சி.எம். ஆச்சே டெலிபோன்ல ஹாட் லைன் எல்லாம் இருக்குமே! இந்நேரம் சேதி கிடைச்சு சந்தோஷப்பட்டிருப்பீங்கன்னு நினைச்சேன்! எல்லாம் நம்ப மனம்போல முடிஞ்சு போச்சுங்க! நானூறு வருஷத்து மொகலாய மன்னன் பாபரின் நினைவு சின்னத்தைத் தூள் தூளாக நொறுக்கி, பூமியோட பூமியா ஆக்கிட்டோம்... டெல்லியிலே நீங்க பேசினது எங்களுக்கு ரொம்ப தெம்பா போச்சு...

முதல்வர் :- அட... அதை நான் கேக்கலே! அங்க வந்த கரசேவையாளர்கள்...??

குலாப்சிங் :- ஓ! அதைக் கேக்கிறீங்களா? நரசிம்மராவ் அனுப்பிச்ச ராணுவம் கூட ரொம்ப அடக்கமாகவும், பக்தி பூர்வமாகவும் நடந்துகிட்டுதுங்க! நீங்க இங்கிலீஷ் பத்திரிகை, தமிழ் பத்திரிகைகளிலே வந்த ஒரு போட்டோ படம் பாத்திருப்பீங்களே - தரைமட்டமான பாபர் மசூதி மண்ணிலே தற்காலிகமா ஒரு ராமர் கோயில் கட்டினோம் - அந்த ராமர் விக்ரகத்தை ஒரு ராணுவ வீரன் கும்பிட்டு வணங்குற மாதிரி வந்திருக்கே போட்டோ!

முதல்வர் :- அய்யோ... கொஞ்சம் என்னைப் பேச விடுங்க! நீங்க சொல்ற படமெல்லாம் நான் பாத்தேன் - இப்ப நான் கேக்கிறது அது இல்லை! அதாவது கரசேவைக்கு நான் ஆயிரம் பேரை அனுப்பினதை...

குலாப்சிங் :- மன்னிக்கணும் ... நான் அதுக்கு நன்றி சொல்லலேன்னு வருத்தப் படுறீங்களா? நான் மட்டுமா? எங்க விசுவ இந்து பரிட்சத், பாரதிய ஜனதா, பஜ்ரங்தள் முதலிய எல்லா அமைப்புகளும் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கோம். ஆயிரம் தொண்டர் அனுப்பினது கூட பெரிசு இல்லே... தமிழ்நாட்டிலே திராவிட இயக்கத்தை ஆயிரம் அடிக் குழிக்குள்ளே போட்டு புதைச்சுட்டிங்களே அதுக்கு லட்சம் நன்றி...

தொலைபேசியின் குறுக்கே ஒரு குரல் Cross Talk

குறுக்குக்குரல் :- லட்சமா சொல்லாதே - கோடியா சொல்லு! ஏன்ய்யா திராவிட இயக்கத்தை ஆயிரம் அடிக்குழியிலே புதைச்சுட்டீங்களா? அதுக்கு உங்க அப்பன், பாட்டன், கொள்ளுப்

பாட்டன், வந்தாலும் முடியாது! திராவிட இயக்கம்கிறது... பீனிக்ஸ் பறவையைப் பத்தி சொல்வாங்களே; அதுமாதிரி கொளுத்தி சாம்பலாக்கினாலும் மறுபடி எழுந்து சிறகடிச்சு பறக்குமாக்கும்...

முதல்வர் :- யாரது? ... குறுக்கே ... வைமேன் போனை!...

குறுக்குப் பேச்சு நிற்கிறது

முதல்வர் :- தொடர்ந்து மிஸ்டர் குலாப் சிங்!... நான் எவ்வளவு ரகசியமா தொண்டர்களைப் பிடிச்சு கரசேவைக்கு அனுப்பினேன். அதை ஏன் நீங்க இவ்வளவு அம்பலமாக்கினீங்க...?

குலாப்சிங் :- இல்லியே! நான் ஒன்னும் அம்பலமாக்குலியே!

முதல்வர்:- சரிதான் வாயை மூடுங்க!... நீங்க அதை அம்பலமாக்க போக, அதை இங்க எதிர்க்கட்சிகள் ஒரேஅடியா ஊரெல்லாம் சொல்லி, என்வேஷமே கலைஞ்சு போச்சு!... இதுக்காக என் அடிமைகளை விட்டு பதில் சொல்லச் சொன்னேன். எடுபடலே! அப்பறம் கோவிந்தாச்சாரியைப் புடிச்சு மறுப்பு அறிக்கை விடச் சொன்னேன். ஜனங்கள் நம்பத் தயாராக இல்லை. வேறு விதியில்லாம நானும் 10-ந் தேதி பந்த்திலே கலந்து கொள்ளும்படியா ஆயிடிச்சு!... ராமபிரான்தான் என்னை க்ஷமிக்கணும்!

குலாப்சிங் :- சாரி! மன்னிக்கணும் - நீங்க செஞ்ச உதவியையும், செய்யப்போற உதவியையும் லக்னோவில் நிருபர்கள் கூட்டத்திலே சொல்லி சந்தோஷப்பட்டேன். அது பப்ளிஷ் ஆயிட்டுதா? எந்த பேப்பர்லே? ஏதோ உங்க ஸ்டேட்டிலே முரசொலி, தினகரன், மாலைமுரசுன்னு இருக்கே! அந்த பேப்பர்லியா?

முதல்வர் :- நோ! நோ! அதிலே வந்தாதான் மறுத்திருக்கலாமே - டிசம்பர் 3-ந் தேதி போட்ட டைம்ஸ் ஆப் இந்தியா பேப்பர்லே விபரமா எல்லாம் வந்திருக்கு! அதை எடுத்து தீக்கதிர் பத்திரிகை வெளியிட்டிருக்கு! அப்துல்சமது நடத்துற மணிச்சுடர் பத்திரிகையிலே பாபர் மசூதியை இடிக்க நடத்தப்படும் கரசேவைக்கு அ.தி.மு.க. தொண்டர்கள் ஆயிரம்பேர் என்று தலைப்பிட்டு டிசம்பர் 4-ந் தேதி முதல் பக்கத்திலேயே டைம்ஸ் ஆப் இந்தியா பம்பாய் பத்திரிகை செய்தியை பிளாக் பண்ணியே போட்டிருக்கார்!... இதனால திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி, திராவிட இயக்க தீபம், திராவிட சக்தி அப்படிங்கிற பேராலே இனிமே இந்த தமிழ் ஜனங்களை என்னால் ஏமாத்த முடியுமாங்கிறது கேள்விக் குறியா ஆயிட்டுது!

குலாப்சிங் :- அடேடே... அந்தப் பாவிப் பத்திரிகை டைம்ஸ் ஆப் இந்தியாவிலே நான் சொன்னதை அப்படியே போட்டுட்டானா?...

மீண்டும் குறுக்கே ஒரு குரல் Cross Talk

குறுக்குக்குரல்:- ஆமாம் சார்! அப்படியே போட்டிருக்கான்! இதோ அந்த பத்திரிகை என் கையிலே இருக்கு - படிக்கிறேன் கேளுங்க....

Jayalalitha, the Tamil Nadu chief minister, who has sent a jatha of 1000 AIADMK workers for the kar seava. " She had promised to send fresh batched from time to time" , the state general assembly of the Vishwa Hindu Parished Gulab singh Parihar, told this correspondent tonight"

முதலமைச்சர் ஜெயலலிதா - கரசேவைக்காக - முதல் கட்டமாக அ.தி.மு.க. தொண்டர்கள் ஆயிரம் பேரை அனுப்பி இருக்கிறார். மேலும் தேவைப்படும் போதெல்லாம் அணி அணியாகத் தொண்டர்களை அனுப்புகிறேன் என்று அவர் வாக்களித்திருக்கிறார் என்பதாக உ.பி. மாநில விஸ்வ இந்து பரிட்சத் செயலாளர் குலாப்சிங் பரிகார் கூறினார்! இவ்வளவும் ஒரு மாநில செயலாளர், அதுவும் அயோத்தி பிரச்சினை இருக்கிற உ.பி. மாநில விசுவ இந்து பரிட்சத் செயலாளர் சொன்னா அதை பத்திரிகையிலே போட மாட்டாங்களா?...

முதல்வர்:- மிஸ்டர் குலாப்சிங்! எவனோ ஒருத்தன் விஷயம் புரிஞ்சவனாட்டம் இருக்கு - குறுக்கே குறுக்கே பேசி ரொம்ப டிஸ்ட்ரப் பண்றான்! - போனை கட் பண்ணுங்க! அப்புறம் பேசிக்கலாம்.

குலாப்சிங் :- நம்ப உறவை கட் பண்ணிடாதிங்க!

முதல்வர்:- கட் பண்ணுவேனா? அது உதிரத்தோட ஊறினதாச்சே!

ஜெயலலிதா ரீசிவர் பட்டென்று வைக்கப்படுகிறது

உடன்பிறப்பே! உலகத்தை ஏமாற்ற எண்ணுகிறவர்கள், கடைசியில் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டதை உணருவார்கள்! உணரத்தான் போகிறார்கள்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

11-12-1992

1985. நரசிம்மராவ் நடத்தும் நகாசு வேலைகள்!

உடன்பிறப்பே,

நவம்பர் 23-ஆம் நாள் டெல்லியில் தேசிய ஒருமைப்பாடு மன்றக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டம் கூட்டப்பட்டதற்கான முக்கியமான நோக்கமே, அயோத்தியில் டிசம்பர் 6-ஆம் நாள் பாபர் மசூதிக்கருகில் பிரச்சினைக்குரிய இடத்தில் கரசேவை நடத்துவதைத் தடுக்க வேண்டும் என்பதுதான். அந்த நோக்கத்தை முன்கூட்டியே புரிந்துகொண்ட பாரதிய ஜனதா அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் புறக்கணித்தது. ஆனால் அந்தக் கட்சியின் பிரதிநிதிபோலச் செயல்பட்டு வாழப்பாடி அவர்களின் மொழியில் சொல்வதானால் ஊது குழலாகச் செயல்பட்டு தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா அயோத்தியில் பிரச்சினைக்குரிய இடத்தில் கரசேவை நடத்த அனுமதிக்க வேண்டுமென்றும், கூட்டத்திற்கு பாரதிய ஜனதா வராவிட்டாலும், வெளியே பெரும்பாலான மக்கள் அவர்கள் கருத்தை ஆதரித்து இராமர்கோயில் கட்ட வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

ஆனால் காங்கிரஸ் உள்ளிட்ட எல்லாக் கட்சிகளும், அந்தக் கரசேவையைத் தடுத்தே தீரவேண்டும் என்று கருத்து தெரிவித்து, பாபர் மசூதியைப் பாதுகாக்கக் கரசேவையைத் தடுத்து நிறுத்தும் பிரச்சினையில் பிரதமருக்கு ஆதரவாக இருப்பதாக உறுதி அளித்தன.

உடன்பிறப்பே, உனக்கு நவம்பர் 26-ந் தேதி சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற்ற கரசேவைக் கண்டனக் கூட்டத்திலே பேசப் பட்டவைகளும், டிசம்பர் 7-ந் தேதி சூளை மாணிக்கம் செட்டி தெருவில் நடைபெற்ற பாபர் மசூதி இடிப்புக் கண்டன கூட்டத்தில் பேசப்பட்டவைகளும் நினைவிருக்கும். அவை ஏடுகளிலும் வெளிவந்திருக்கின்றன.

பாபர் மசூதியை இடிக்காமல் காத்திடவும், கரசேவையாளர்கள் என்ற பெயரில் நுழையும் காட்டுமிராண்டிகளைத் தடுத்திடவும் நரசிம்மராவ் அவர்களின் கரத்தை பலப்படுத்துவோம் - இந்த ஒரு பிரச்சினையில் மட்டுமே! என்று தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது தி.மு.கழகத்தின் சார்பாக மட்டுமல்ல, பா.ஜ.க., அ.தி.மு.க. தவிர, மற்ற எல்லாக் கட்சிகளின் சார்பாகவும் தெரிவிக்கப்பட்டது!

ஆனால் பிரதமர் நரசிம்மராவ் அவர்கள், தன் பின்னால் இந்திய நாட்டின் மதச் சார்பற்ற கொள்கையில் உறுதியுள்ள அணிகள் அனைத்தும் நிற்கின்றன என்ற உண்மையை உணர்ந்திருந்தும் கூட, பாபர் மசூதியை, மத வெறியர்கள் - மிகச் சுலபமாக, எந்தவித தங்குதடையுமின்றி இடித்துத் தரைமட்டமாக்குகிற வரையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்துவிட்டார்.

ராஜீவ்காந்தி சொன்னதைத்தான் நானும் சொன்னேன் என்று ஜெயலலிதா விளக்கமளித்ததை இப்போது நினைத்துப் பார்க்கும் போது, அயோத்திப் பிரச்சினையில் காங்கிரஸ், பா.ஜ.க., அ.தி.மு.க. ஆகிய மூன்று கட்சிகளும் ஒரே பார்வைதான் கொண்டிருந்திருக்கின்றன என்பது புரிகிறது!

பாபர் மசூதியைப் பாதுகாப்பார் - நாட்டில் பிணங்கள் ஆயிரக் கணக்கில் விழுவதைத் தடுத்திடுவார் - ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் ஊறு விளைவிப்பவர்களை முன்கூட்டியே நடவடிக்கை எடுத்து, மதச் சார்பற்றக் கொள்கையில் திடமான நிலையில் உள்ள கட்சிகளுக்கு வழங்கிய உறுதிமொழியைக் காத்திடுவார் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக, அவரும் சேர்ந்து ஏமாற்றி விட்டார் என்பதை உணர்ந்த போதுதான் இந்தக் கொடிய செயலுக்கும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கும் பிரதமர் நரசிம்மராவ் அவர்கள்தான் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்று சூளை பொதுக் கூட்டத்தில் தேசிய முன்னணி இடதுசாரிக் கட்சிகளின் சார்பில் பேசியது மட்டுமல்ல, இந்திய நாட்டளவில் எல்லா முற்போக்குக் கட்சிகளுமே பிரதமர்மீது கடுந்தாக்குதல் தொடுத்து அவர்தான் இந்த விளைவுகளுக்கு முழுப் பொறுப்பு என்றும் திட்டவட்டமாக அறிவித்துள்ளன.

எந்த பாபர் மசூதி - ஆம்! நானூறு ஆண்டு கால நினைவுச் சின்னம் இடிக்கப்படக் கூடாது என்று எதிர்பார்க்கப்பட்டதோ, அந்த வரலாற்றுச் சின்னம் மத்திய இராணுவமும், மாநில போலீசும் வேடிக்கை பார்த்திடும் நிலையில் இடித்து நொறுக்கப்பட்டது.

இப்போது அவர் கைது, இவர் கைது, அந்த இயக்கத்துக்குத் தடை, இந்த இயக்கத்துக்குத் தடை - என்றெல்லாம் பரபரப்பாகச் செய்யப்படுகிற காரியங்கள், வெறும் கண்துடைப்புகளே அன்னியில் வேறென்ன?

இவைகளால், இடிந்த பாபர் மசூதி மீண்டும் எழுந்து நிற்குமா?

அப்படியே எழுந்து நின்றாலும், அதன் நானூறு ஆண்டுக்கால தொன்மைச் சிறப்பு, மீண்டும் உயிர்ப்பிக்கப்பட முடியுமா?

கரசேவையை அனுமதிக்க வேண்டும் என்று ஜெயலலிதா டெல்லியில் பேசினார்!

நரசிம்மராவ் அவர்கள் ஜெயலலிதா கோரியவாறே அப்படியே அனுமதித்துவிட்டு, இப்போது அரசியல் சாகசங்களின் மூலம் அதனைச் சரிக்கட்ட முனைகிறார்!

அனுமதிக்க வேண்டும் கரசேவையை! என்று பேசிய ஜெயலலிதா, பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்காக நம் தோழமைக் கட்சிகள் அறிவித்த முழு அடைப்பில் தனது கட்சியையும் இணைத்துக் கொண்டு, மக்களை மேலும் மேலும் ஏமாற்ற முனைகிறார்!

பிரதமர் மனத் தூய்மையுடனும், மனத் திண்மையுடனும் எண்ணியிருந்தால் - பாபர் மசூதியைக் காப்பாற்றியிருக்க முடியும்.

இது இன்று நேற்று பிரச்சினையல்லவே! 1949-ல் பண்டித நேரு காலத்திலேயே எழுந்த பிரச்சினை ஆயிற்றே! அன்று முதல் இன்றுவரை மதச் சார்பற்ற கொள்கை என்ற நிலையில் உறுதியில்லாமல் மத்திய காங்கிரஸ் அரசுகள் கடைப்பிடித்த வழவழா நடைமுறைகள், மெல்லமெல்ல, ஆனால் திடமாக மதவெறியர்களின் கரங்களை வலுப்படுத்தக் காரணமாகி விட்டன!

இத்தனைக்குப் பிறகும் இப்போது பிரதமர் நரசிம்மராவ் நினைத்திருந்தால் - அயோத்தி அக்கிரமத்துக்கு அணை போட்டிருக்க முடியாதா?

திரு. வி.பி. சிங் பிரதமராகவும், உ.பி.யில் முலாயம் சிங் யாதவ் முதல்வராகவும், பீகாரில் லல்லு பிரசாத் யாதவ் முதல்வராகவும் இருந்த காலகட்டத்தில்தான் - அதாவது 1990-ல் இதே அயோத்தி பிரச்சினையை எழுப்பி, இராமர் கோயில் கட்ட அத்வானி இரதயாத்திரை புறப்பட்டார்!

இராமர் கோயிலை அயோத்தியில் வேறு இடத்தில் கட்டிக் கொள்ளலாம் - பாபர் மசூதியை அகற்றிவிட்டுக் கட்ட வேண்டாம். அதை அனுமதிக்க முடியாது என்பதுதான், அன்றைய பிரதமர் வி.பி. சிங் அவர்களின் திட்டவட்டமான முடிவு!

அந்த முடிவினை ஏற்றுக் கொண்டு செயல்பட்ட அரசுகள்தான் பீகாரிலும், உ.பி.யிலும் இருந்தன.

அதனால்தான் அத்வானியின் இரதயாத்திரை பீகாரிலேயே தடுத்து நிறுத்தப்பட்டு, அத்வானி கைது செய்யப்பட்டார்.

அத்வானியைக் கைது செய்தால் - கரசேவையைத் தடுத்தால், பாரதிய ஜனதா, மத்தியில் வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்க்கும் என்று அறைகூவல் விடப்பட்டது.

ஆட்சி முக்கியமல்ல! கொள்கைதான் முக்கியம்! என்பதில் வி.பி. சிங் அழுத்தமாக நின்றார்.

பாரதிய ஜனதாவுடன் காங்கிரசும், அ.தி.மு.க.வும் சேர்ந்துகொண்டு நாடாளுமன்றத்தில் நம்பிக்கைத் தீர்மான வாக்கெடுப்பில் வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்தன.

ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள இன்றைய பிரதமர், ஜெயலலிதா யோசனைப்படி கரசேவையை தாராளமாக அனுமதித்துவிட்டார் என்று யாராவது வாதிட்டால், அதைப் புரிந்து கொள்ளலாம்! ஆனால் அதற்கு மாறாக, அயோத்தியில் ரத்த வெள்ளம் பெருக்கெடுப்பதைத் தடுக்கவே நரசிம்மராவ் இப்படி மெதுவாகச் செயல்பட்டார் என்பது பொருத்தமான வாதமே அல்ல!

இதே நிலை - இதே போல கரசேவையாளர் அணிவகுப்பு, ஊர்வலங்கள் அயோத்தி நோக்கிக் கிளம்பியபோது மத்தியிலும், மாநிலத்திலும் இருந்த தேசிய முன்னணி அரசுகள் எவ்வாறு செயல்பட்டன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இன்றுள்ள மத்திய காங்கிரஸ் ஆட்சியிலும், மாநில பா.ஜ.க. ஆட்சியிலும் - திபுதிபுவென கரசேவகர்கள் லட்சக் கணக்கில் அயோத்தியில் திரண்டனர்!

ஆனால் அன்று உ.பி.யில் முலாயம்சிங் யாதவ் அவர்கள் ஆட்சியிலிருந்தபோது, பாபர் மசூதியை அகற்றிட கரசேவையாளர்கள் படை நடத்திய நேரத்தில் எப்படி - எவ்வாறு நடவடிக்கை எடுத்தார் என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

* முன்கூட்டியே மாவட்டங்களின் எல்லைகள் மூடப்பட்டு, கரசேவையாளர் போக்குவரத்து தடுக்கப்பட்டது.

* ஆயிரக்கணக்கான கரசேவகர்களை முன்கூட்டியே எச்சரிக்கை நடவடிக்கையாகக் கைது செய்தார்.

* இந்துக்கள் நிறைந்த அயோத்தியிலும், இஸ்லாமியர் நிறைந்த பைசாபாத்திலும், அண்டை மாவட்டங்களிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தார்.

* ரயில் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து இரண்டையுமே தடுத்து வைத்தார்.

* அயோத்தியில் உள்ள ஆலயங்கள், ஆஸ்ரமங்கள் அனைத்திலும் கரசேவகர்கள் வந்து பாசறை அமைக்காதபடி, துணை ராணுவத்தினரைக் கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தார்.

* பாபர் மசூதியை நோக்கிச் செல்லும் பிரதான சாலைகள் அனைத்திலும் - இரு மருங்கிலுமுள்ள தெருக்களில் தடைச்சுவர்கள் எழுப்பி, கரசேவகர்கள் நுழைய முடியாத வண்ணம் செய்தார்.

* பாபர் மசூதியை சுற்றிலும் தொலைக்காட்சிப் பெட்டிகளை அமைத்து, இரவும் பகலும் கண்காணிப்பு மேற்கொண்டார்.

* சரயூ நதியில் போய்க் கொண்டிருந்த படகுகளை அந்த நாட்களில் நிறுத்தி வைத்தார்.

ஏறத்தாழ இரண்டு மாத காலம் இத்துணை முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுத்தும்கூட, குறிப்பிட்ட நாளில் கரசேவகர்கள் சிலர் பாபர் மசூதி மண்டப உச்சியில் ஏறி, காவிக் கொடியை ஏற்றினார்கள் என்கிறபோது,

அதுபோல எந்த நடவடிக்கையும் எடுக்காத - எடுக்க விரும்பாத - சொல்லப்போனால் கரசேவைக்கு ஆதரவாக செயல்படுகிற பாரதிய ஜனதாவின் உ.பி. மாநில அரசை நம்பி, பிரதமர் நரசிம்மராவ் எப்படி கையைக்கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார் என்று கேட்பது எப்படித் தவறாகும்?

எனவே, உடன்பிறப்பே; பிரதமர் இப்போது சொல்கிறார் - பாரதிய ஜனதாத் தலைவர்களின் பேச்சை நம்பி ஏமாந்து விட்டேன் என்று!

ஆனால் நாட்டு மக்கள், பிரதமரின் பேச்சை நம்பி ஏமாந்துவிட்டார்கள் என்பதுதான் உண்மை!

நாட்டுக்கு ஏற்பட்ட இந்தக் களங்கத்தைச் சரிக்கட்ட என்னதான் நகாசு வேலைகளைச் செய்தாலும், நடுநிலையில் நின்று சிந்திப்போர் அங்குள்ள மத்திய காங்கிரஸ் அரசையும், இங்குள்ள மாநில ஜெயலலிதா அரசையும் நம்பத் தயாராக இல்லை.

அன்புள்ள,

மு. கருணாநிதி

12-12-1992

1986. அலகாபாத் தீர்ப்பு - அன்றும்; இன்றும்!

உடன்பிறப்பே,

"அயோத்தி பிரச்சினையைப் பொறுத்த வரையில், இந்துக்கள் விரும்புவது போல உத்திரபிரதேச பா.ஜ.க. அரசினால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதிக்க வேண்டும். உ.பி. அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு விதித்திருக்கும் தடை உத்தரவு மற்றும் வழக்குகள் காரணமாக ஹைகோர்ட் மூலம், அரசு கையகப்படுத்தியுள்ள நிலத்தில் கரசேவையும் மற்றும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாத சட்டசிக்கல் இருக்கிறது. அந்த இடத்தில் கட்டிடம் கட்ட தடை கூடாது என்பதை நாம் ஏற்றுக் கொண்டு, மத்திய அரசும், உ.பி. மாநில அரசும் அந்தச் சட்ட சிக்கல்களை உடனடியாகத் தீர்க்க வேண்டும். ஆனால் அதே சமயம், சட்ட சிக்கலைக் காரணமாக வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு முடிவு எடுப்பதை ஒத்தி வைக்கக் கூடாது. குறிப்பாக எனது கருத்து இதுதான், அதாவது உ.பி. அரசு கையகப்படுத்திய நிலத்தில் கரசேவை தொடங்குவதற்கானச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்."

டெல்லி ஒருமைப்பாடு மன்றக் கூட்டத்தில் கடந்த நவம்பர் மாதக் கடைசியில் ஜெயலலிதா, எந்தப் பிரச்சினைக்குரிய நிலத்தில் பா.ஜ.க.வும், விசுவ இந்து பரிட்சத், பஜ்ரங் தள், ஆர்.எஸ்.எஸ். ஆகிய அமைப்புகளும் கரசேவை நடத்தி கோயிலுக்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்கி, பாபர் மசூதியைத் தகர்க்க திட்டமிட்டிருந்தார்களோ - அந்த 2.77 ஏக்கர் நிலத்தில்தான் கரசேவை நடத்த அனுமதிக்க வேண்டும். அதற்கேற்ப மத்திய அரசும், உ.பி. மாநில அரசும் நீதிமன்றத் தடையை நீக்குகிற அளவுக்கு ஒருமித்த கருத்துடன் செயல்பட வேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறினாரோ! அந்த இடத்தை உ.பி. அரசு

கையகப்படுத்தியது செல்லாது என்று அலகாபாத் உயர்நீதிமன்றம் இப்போது தீர்ப்பே வழங்கிவிட்டது.

பாபர் மசூதி இடிக்கப்படும், அதற்காகத்தான் கரசேவை ஏற்பாடு - எனவே அதனைத் தகுந்த முறையில் தடுத்திட மத்திய அரசு முன்வர வேண்டுமென, எல்லாக் கட்சிகளும் வற்புறுத்திய சமயத்தில் - பாரதிய ஜனதாவின் ஊது குழலாகத் திகழ்ந்து, கரசேவைக்கு அனுமதி அளிக்க வேண்டுமென ஒருமைப்பாடு மன்றக் கூட்டத்தில் ஒற்றைக் குரலாக ஒலித்தது ஜெயலலிதாவின் குரல்!

அப்படிப் பேசியபோதும், பாபர் மசூதியை இடிக்க வேண்டாம் என்றுதானே ஜெயலலிதா சொன்னார், என்று அவரது கட்சியினரும் - அவரது ஊழலில் பங்கு பெற்றுக்கொண்டு இருப்பவர்களும் - பாபர் மசூதி இடிக்கப்பட்டு, தரைமட்டமாக்கப்பட்ட பிறகும் அதே பல்லவியைத்தான் பாடிக் கொண்டிருக்கின்றனர்.

கரசேவையை பிரச்சினைக்குரிய இடத்தில் அனுமதித்தாலே, பாபர் மசூதி இடிக்கப்பட்டே தீரும் என்று மூத்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள், விளக்கிச் சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை ஜெயலலிதா! கரசேவை கரசேவை என்றே கடுமையாக முழங்கினார்!

எம்மதத்தினராயினும் அவர்களுக்கிடையே மோதுதல் கூடாதெனக் கூறி, அதனைச் செயலில் காட்டிய சிறந்த பெருந்தலைவர்கள், திராவிட இயக்கத்தின் பேரால் இந்த மண்ணைப் பக்குவப்படுத்தியுள்ளனர். அந்த திராவிட இயக்க உணர்வுகளைக் காலில் போட்டு மிதிக்கும் ஜெயலலிதா, காங்கிரசுக்கும் தனக்குமுள்ள தகராறு காரணமாக - கொள்கையையே குழி தோண்டிப் புதைத்துவிட்டு, பாரதிய ஜனதாவுடன் மறைமுகக் கூட்டணி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட காரணத்தால், கரசேவைக்கு வாய்ச்சொல் அருளியது மட்டுமின்றி, நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் என்ற பாரதியின் வாக்கியத்தையும் இந்தப் பாழும் செயலுக்குப் பயன்படுத்தி, ஆள் அம்பு உதவிகளையும் செய்து தர முன்வந்து விட்டார்.

பாபர் மசூதி தகர்ப்பின் காரணமாக, நாட்டு மக்களிடையே ஏற்பட்ட கொந்தளிப்பு - கரசேவை ஆதரவாளர்கள் மீது உருவான காழ்ப்புணர்ச்சி - இவற்றைக் கண்டவுடன்,

முழு அடைப்பில் கலந்து கொள்ளல்

இந்து முஸ்லிம் சமபந்தி சாப்பாடு

பாபர் மசூதி புதிதாக கட்ட நிதி வசூல்

என்றெல்லாம் தானும், தனது ஏவல் ஆட்களும் ஒரேடியாக அலட்டிக் கொள்வதைக் கண்டு **உண்மை உணர்ந்த** மக்கள் நகைக்கிறார்கள்.

உடன்பிறப்பே, **உண்மை உணர்ந்த** என்ற இரு வார்த்தைகளையும் கோடிட்டுக் காட்டியுள்ளேன் ஏன் தெரியுமா?

உ.பி. மாநிலத்தில் பாபர் மசூதிக்கு நெருக்கமாக உ.பி. மாநில பா.ஜ.க. அரசு கையகப் படுத்தியதாகக் கூறப்படும் இடத்தில் கரசேவை நடத்த வேண்டுமென ஜெயலலிதா கூறிவிட்டு, இப்போது நாடகமாடுகிறாரே! அந்த நிலத்தை கையகப்படுத்தியது ஏன் செல்லாது என்ற உண்மையை இதோ அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பு சுட்டிக்காட்டுகிறது!

அயோத்தியைச் சுற்றுலாத்தலமாக அபிவிருத்தி செய்யவும், சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்து தருவதற்கும் என்ற பொது நோக்கத்தைக் காரணம் காட்டி இந்த 2.77 ஏக்கர் நிலத்தை உ.பி. அரசு கையகப்படுத்தியது.

இந்த நிலத்தை அது ராமர் கோயில் கட்டுவதற்காக விசுவ இந்து பரீட்சத்திடம் ஒப்படைத்தது. ஆரம்பத்திலிருந்தே - இந்த நிலம் கையகப்படுத்தப்பட்ட விஷயத்தில் - உ.பி. அரசின் நோக்கம் - ஒரு குழுவுக்கு ஆதரவு தருவதாகவும் - இன்னொரு குழுவுக்கு எதிராகச் செயல்படுவதும், ஒரு மதத்திற்கு ஆதரவு - இன்னொரு மதத்திற்கு எதிராகச் செயல்படுவது என்ற ரீதியில் - பொது நோக்கத்திற்கு எதிரானதாகவும் - பொது நோக்கத்தைச் சீர்குலைப்பதாகவும் அமைந்திருக்கிறது.

இது அரசியல் சட்டத்தின் 14-15வது பிரிவுகளுக்கு எதிரானதாகும்.

இதுபோன்ற தனிப்பட்டவர்களின் தாவாக்களில் - பிரச்சினைகளில் - அரசு நடுநிலையையே கடைபிடிக்க வேண்டும் என்று 14-வது பிரிவு வலியுறுத்துகிறது.

இந்த நிலம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் அரசு கடைபிடித்தவை அனைத்தும் நடுநிலைமைக்கு எதிரானதாகும். ஆகவே இது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது, செல்லாதது ஆகிறது.

இதுதான் இப்போது வெளிவந்துள்ள அலகாபாத் தீர்ப்பாகும். ஒருவேளை ஜெயலலிதா சொல்லக்கூடும். அலகாபாத் தீர்ப்புக்கு இந்திரா காந்தியே தலைவணங்கவில்லை - நானும் எப்படி ராஜீவ் வழியைப் பின்பற்றிக் கரசேவையை ஆதரித்தேனோ, அதேபோல, இந்திராகாந்தி வழியைப் பின்பற்றி அலகாபாத் தீர்ப்பையும் அலட்சியப்படுத்துவேன் என்று!

எப்படியோ, வீடுபற்றி எரிந்து விட்டது! இந்தியாவின் மதச்சார்பற்றத் தன்மைக்கு வெளிநாடுகளில் இருந்த மதிப்பும், மரியாதையும் மங்கிப் போய்விட்டது!

நான் நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்டது போல, இனிமேல் எத்தனை கோடி ரூபாய் செலவழித்து ஆக்ராவில் உள்ள தாஜ்மஹாலைப் போல அயோத்தியில் உள்ள பாபர் மசூதியை கட்டினாலுங்கூட, அதன் நானூறு ஆண்டு காலப் பழமை என்னும் வரலாற்றுப் பெருமையை என்ன விலை கொடுத்து, எங்கே போய், யார் வாங்க முடியும்?

பாரதிய ஜனதா மற்றும் அதன் மதவெறி அமைப்புகளின் கோரிக்கையை ஆதரித்து ஜெயலலிதாவும் கோஷம் போட்டுவிட்டார் - இப்போது வேஷம் போடுகிறார். இஸ்லாமிய மக்களிடம் இங்கிதமாக நடந்துகொள்வதைப் போல!

இதற்கு, இவர் தரும் விளம்பரக் கொழுக்கட்டைகளை வாயில் குதப்பிக்கொண்டு ஆதரவு தரவும் - ஏடுகள் இருக்கின்றன!

அயோத்தியில் இராமர் கோயில் - மசூதி இடிப்பு - இந்தக் காரியத்துக்காக கரசேவை! அதற்கு ஜெயலலிதா ஆதரவு - நரசிம்மராவ் அரசின் இராணுவம் வேடிக்கை பார்க்க, பாபர் மசூதியை மண்ணோடு மண்ணாக்கித் தீபாவளி கொண்டாடிவிட்டார்கள்!

ஜெயலலிதா கையிலே இல்லாவிட்டாலும், மனத்திலே மகிழ்ச்சி மத்தாப்பு!

பாரதிய ஜனதா பக்கம்தான் ஜெயலலிதா நிற்கிறார் என்பதற்கு மற்றொரு சான்று! மதவெறி, வன்முறை இயக்கங்கள் தடை

செய்யப்பட்டதுபற்றி, இதோ இந்தக் கடிதம் எழுதுகிற வரையில், இன்னும் அவர் வாய் திறக்கவே இல்லையே!

வானொலி, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளில் அதைப் பற்றி சத்தமே காணோமே!

வழக்கமாக அறிக்கை எழுதுகிற ஆள் வெளியூர் போய்விட்டாரா என்ன?

இவற்றையெல்லாம் நாடு சிந்திக்கட்டும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

13-12-1992

1987. பா.ஜ.க.வினர் முரண்பாடுகளுக்கிடையிலேயும் பரிபூரணமான கொள்கை உடன்பாடு!

உடன்பிறப்பே,

மதவெறி இயக்கங்கள் தடை செய்யப்பட்டதையொட்டி, குடியரசுத்தலைவர் ஆட்சி நடைபெறும் உத்திரபிரதேச மாநிலத்தில், இதுவரையில் ஐநூறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் அந்த இயக்கங்களின் முன்னோடிகள் பலர் சிக்கியிருப்பினும், பலர் தலைமறைவாகியுள்ளனர் எனச் செய்திகள் வந்துள்ளன.

பா.ஜ.க. ஆட்சி நடைபெறுகின்ற ராஜஸ்தான் மாநிலம், மத்தியபிரதேசம், இமாசலப்பிரதேசம் ஆகியவற்றில் இந்தத் தடையொட்டி, அந்த மதவெறி இயக்கங்கள் மீது நடவடிக்கைகள் தொடங்கியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

பாரதிய ஜனதாவின் ஊதுகுழல் எனப் பட்டம் பெற்ற, அதுவும் வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி என்று பட்டம் பெற்றதுபோல் வாழப்பாடியாரின் வாயால் பெற்ற தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, மத்திய அரசு எடுத்துள்ள இந்த முக்கியமான முடிவு குறித்து நான்கு நாட்களாக நாவே அசைத்திடவில்லை. இப்போதுதான் அதுவும் இன்றைக்குத்தான், தடை செய்யப்பட்ட அமைப்புகளை நோக்கி தமிழக அரசின் நடவடிக்கை நத்தை நகர ஆரம்பிக்கிறது என செய்திகள் வருகின்றன!

பரவாயில்லை! ஜெயலலிதா இந்தத் தடை குறித்து மௌனம் சாதிப்பதும் ஒரு கெட்டிக்காரத்தனம்தான்!

அதுவும் எப்படி? கடந்த நவம்பரில் டெல்லிக்குச் சென்று பிரதமர் முன்னிலையில் நடைபெற்ற சட்டம் ஒழுங்கு குறித்த

கூட்டத்திற்குத் தான் போகாமல் வேறொரு அமைச்சரை அனுப்பி வைத்து விட்டு, அன்று பிரதமரைச் சந்திக்கவே முயற்சி மேற்கொள்ளாதது மட்டுமல்ல! பா.ஜ.க. தலைவர் திரு. அத்வானியை சந்தித்து அவருடன் விருந்தருந்திவிட்டுச் சென்னை திரும்பிய ஜெயலலிதா, மீண்டும் நவ. 23-ல் டெல்லியில் நடந்த ஒருமைப்பாட்டுக் கூட்டத்துக்குச் சென்று அயோத்தியில் கரசேவைக்கு ஆதரவாக அத்வானி கூட்டத்தாரின் அறிவுரைப்படி பேசிவிட்டு, பாதிக்குமேல் நனைந்து விட்டேன் இனி நான் பா.ஜ.க.தான் என்று சொல்லாமற் சொல்லிக் கொண்டு, அத்வானி முதலிய பாரதியஜனதா தலைவர்கள் கைதானதற்கு வருத்தம் தெரிவிக்கும் மடலையும் அனுப்பி வைத்து விட்டு, இப்போது அந்த மதவெறி இயக்கங்கள் தடை செய்யப்பட்டு பல்வேறு நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் போது - தைரியமாக முன் வந்து தனது கண்டனத்தையும் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. அல்லது தடை விதித்தது சரிதான் என்று மத்திய அரசின் நடவடிக்கைக்கு நியாயமும் கற்பிக்கவில்லை. ஆம்! எதுவுமே சொல்லவில்லை!

கொடி மட்டுமே வைத்துக் கொண்டு, தலைவரும் நானே! தொண்டரும் நானே! என முழங்கிக் கொண்டிருக்கும் ஒரு சில கட்சிகள்கூட தடை குறித்த அறிக்கைகளை விடுத்திருக்கும்போது, கோடி உறுப்பினர்கள் என் கட்சிக்கு எனக் கொக்கரிக்கும் ஜெயலலிதாவிடமிருந்து இந்தத் தடையை எதிர்த்தோ, ஆதரித்தோ பேச்சு மூச்சே இல்லை பார்த்தாயா?

உடன்பிறப்பே, ஜெயலலிதாவின் பரிவுக்கும், பாசத்துக்கும் உரியதாகி, பரஸ்பர உதவிகளைக் கொண்டும் கொடுத்துக் கொண்டுமிருக்கின்ற பாரதிய ஜனதா கட்சி ஆளும் மாநிலங்களில் உள்ள முதலமைச்சர்களின் நிலையை பார்க்கும்போது - அவை முரண்பாடாக மட்டுமல்ல - அரசியலில் கடைப்பிடிக்க வேண்டிய நல்லிலக்கணத்துக்கும் அப்பாற்பட்டதாக இருக்கின்றன என்பதை உணரலாம்.

இராஜஸ்தான் மாநிலத்தின் முதலமைச்சர் பைரான்சிங் சேக்கவாட் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர், அவர் என்ன சொல்கிறார் தெரியுமா இப்போது?

நானோ, எனது அமைச்சர்களோ இப்போது தடை செய்யப்பட்டுள்ள இயக்கங்களுடன் எவ்விதமான தொடர்பும் இல்லாதவர்கள், எனவே என் ஆட்சிக்கும் எந்த ஆபத்தும் வராது.

தடை செய்யப்பட்ட மதவெறி இயக்கங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் எச்சரித்தவுடன், இராஜஸ்தான் முதல்வர் பாடும் இராகம் இது!

இதே நேரத்தில், இமாசலப்பிரதேசத்தின் பாரதிய ஜனதாவின் முதலமைச்சர் சாந்தகுமார் அறிவித்துள்ள கருத்து என்ன தெரியுமா?

நான், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்துடன் கொண்டுள்ள தொடர்புக்காகப் பெருமைப்படுகிறேன்! எனினும், அரசியல் சட்டப்படி மத்திய அரசின் தாக்கீதுகளை எனது மாநில அரசு ஏற்று நடவடிக்கை மேற்கொள்ளும்.

பா.ஜ.க.வின் ஒரு முதல்வர், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்துடன் தொடர்பே இல்லை என்கிறார். இன்னொரு முதல்வரோ, ஆர்.எஸ்.எஸ். இயக்கத்துடன் தனக்குள்ள தொடர்பு பற்றி பெருமைப்படுவதாகக் கூறிக்கொள்கிறார்.

மற்றொரு முதல்வர், ஆம் - உ.பி. மாநிலத்தில் ஒரு வாரத்துக்கு முன்பு கலைக்கப்பட்ட பாரதிய ஜனதா ஆட்சியின் முதல்வராக இருந்த கல்யாண் சிங் என்பவர் இமாசலப் பிரதேசத்து முதல்வரைப் போலத்தான் அரசியல் சட்டத்துக்கும், உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கும், பிரதமரிடம் கொடுத்துள்ள வாக்குறுதிக்கும் கட்டுப்படுவேன் என்று கூறி, அதற்குத் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் பரிந்துரையையும் பெற்று கரசேவை அனுமதிக்கப்பட்டவுடன், நாலே மணி நேரத்தில் நானூறு ஆண்டுக்கால தொன்மைப் பெருமை பெற்ற பாபர் மசூதியை இடித்துத் தகர்த்திட கரசேவகர்களுக்கு வசதி செய்து, வழி வகுத்தும் கொடுத்தார்.

அந்தக் கரசேவைக்கு அ.தி.மு.க.வின் உபயமாக ஆயிரம் தொண்டர்கள் வரப் பெற்றோம் என்ற உண்மையை உ.பி. மாநில விசுவ இந்து பரிட்சத் செயலாளரே போட்டு உடைத்து விட்டார்.

சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என பாரதிய ஜனதாவின் செயல்கள் மேலெழுந்தவாரியாக முரண்பாடாகத் தோன்றினாலும் அவர்களின் உள்ளுணர்வு ஒன்றே தான், ஜெயலலிதா உட்பட!

இதோ இன்று வந்துள்ள செய்தியின்படி, தலைநகர் டெல்லியிலேயே மதவெறி இயக்கங்களைத் தடை செய்த அரசு ஆணைகளை அந்தக் கட்சியின் தொண்டர்கள் கொளுத்தியிருக்கிறார்கள். அந்தத் தொண்டர்கள் மத்தியில் பா.ஜ.க. தலைவர்கள் எனப்படும் ஓ.பி. கோஹில், வி.கே. மல்கோத்ரா, கே. என். சகானி ஆகியோர் மிக ஆவேசகமாக உரைகள் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிட்சத் போன்ற மதவெறி நிறுவனங்கள் மீது கைவைத்தால் பாரதிய ஜனதாத் தலைவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாது.

உடன்பிறப்பே! நினைவிருக்கிறதா - 1977 - ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது பழைய காங்கிரஸ் கட்சி, ஜனசங்கம், லோக்தளம், அகாலிதளம், சோஷலிஸ்டு கட்சி, ஜனநாயக காங்கிரஸ் ஜெ ஆகிய கட்சிகள் இணைந்து ஜனதா கட்சி உருவாக்கப்பட்டது.

அந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தவுடன், ஜனதாவுடன் இரண்டறக் கலந்துவிட்ட ஜனசங்கத்தில் உள்ளவர்கள் ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளுடன் தொடர்பு வைப்பதை எதிர்த்து மதுலிமயி, ராஜ்நாராயண், பெர்னாண்டஸ், பகுகுணா போன்றவர்கள் போர்க்கொடி உயர்த்திடவே - அதை ஏற்க மறுத்து ஜனசங்கம் அடம்பிடித்த நிலையும், அன்றைய மொரார்ஜி தலைமையிலான ஜனதா ஆட்சி கவிழ்வதற்குக் காரணமாயிற்று!

திரு. வி.பி. சிங் ஆட்சிக்குக்கூட பாரதிய ஜனதா வெளியிலிருந்து ஆதரவு கொடுப்பதாகக் கூறியது! ஆனால் அயோத்திப் பிரச்சினையிலும், மண்டல் குழு பரிந்துரைப் பிரச்சினையிலும் தேசிய முன்னணி அரசு இந்த மதவெறிக் கும்பலுக்கு வளைந்து கொடுக்க மறுத்துவிட்டதால், அந்த ஆட்சியை அப்போது காங்கிரசுடனும், அ.தி.மு.க.வுடனும் சேர்ந்து கவிழ்த்தது பாரதிய ஜனதா கட்சிதான்!

ஆனால் இப்போது? ஆட்சிக் கலைப்புக்கு அஞ்சி பாரதிய ஜனதா முதல்வர்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு மாதிரிப் பேசுகிறார்கள்! அவர்களது தலைவர்கள் சிறையில்! அவர்களது

துணை அமைப்புகள் அனைத்துக்கும் தடை! அலுவலகங்களுக்கு சீல்!

இத்தனைக்கும் பிறகுகூட, பா.ஜ.க.வினர் ஜனதா ஆட்சியில் நடந்து கொண்டது போலவோ, தேசிய முன்னணி ஆட்சியில் நடந்து கொண்டது போலவோ இப்போது நடந்து கொள்ள தோள் தட்டாதது ஏன்?

ஒருவேளை நாம் நினைத்த காரியத்தைத்தான் நரசிம்மராவ் காலத்தில் முடித்து விட்டோமே என்ற ஆத்ம திருப்தி, அவர்களது இதயத்தின் ஆழத்தில் இன்ப அலைகளாக இசைபாடிக் கொண்டிருக்கிறதோ என்னவோ! யார் கண்டது?

அன்புள்ள,

மு. கருணாநிதி

15-12-1992

1988. ஒற்றுமை வேண்டுகோள் பொதுக் கூட்டங்கள்!

உடன்பிறப்பே,

வரும் 19-ஆம் நாள் முதல் ஒருவார காலம், நமது கழக அமைப்புகள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் தி.மு.க. நடத்தும் ஒற்றுமை வேண்டுகோள் பொதுக்கூட்டம் என்ற தலைப்பில் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டுமென்று தலைமைக் கழகத்தின் சார்பில் நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் விடுத்துள்ள அறிக்கையினைக் கண்டிருப்பாய்.

> "அண்மையில் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டு மக்களிடையே ஏற்பட்ட கசப்பும், வெறுப்பும் வன்முறைக் கொடுமைகளும் தணிந்து - பல மதச்சார்பினரிடையிலும் நல்லிணக்கம் உருவாகவும், சிறுபான்மை மக்கள் மன அமைதி பெறவும் ஏற்ற வழிகாட்ட மதச்சார்பற்ற கொள்கையினைக் கொண்டுள்ள தி.மு.க. கடமைப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட நோக்கத்தினை மக்களிடம் விளக்கிட வேண்டும் என்பதே அந்த ஒரு வார காலம் நடைபெறும் நமது கழகக் கூட்டங்களின் நோக்கமாக இருந்திடல் வேண்டும்."

இந்தியாவில் குறிப்பாக நமது தமிழ் நிலத்தில் இந்துக்கள் எனப்படும் பெரும்பான்மையோர் - இஸ்லாமியர், கிறிஸ்தவர், சமணர், பௌத்தர் போன்ற சிறுபான்மையோர் என்ற ஏற்றத்தாழ்வோ - மாறுபாடோ இல்லாமல் அவரவர்களுக்குரிய நலன்களும், உரிமைகளும் பாதுகாக்கப்பட சமத்துவ சகோதரத்துவ நிலைக்கு எள்முனையளவு ஊனமும் விளையாத

அளவுக்குப் பேணிக்காக்கும் பொறுப்பை, இன்று நேற்றல்ல - திராவிட இயக்க உணர்வுகள் தோன்றிய காலந்தொட்டு நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பது எவரும் மறைக்க முடியாததும், மறுக்க முடியாததுமான வரலாறு ஆகும்.

நபிகள் நாயகம் விழாக்களில் எந்தவொரு அரசியல் கட்சியும் கலந்துகொள்ளாத அந்தக் காலத்திலேயே, பெரியார் அவர்களோ, அண்ணா அவர்களோ அல்லது நமது இயக்கத்தின் முன்னோடிகளோ கலந்துகொள்ளாத நபிகள் நாயகம் விழாக்களே நடந்தது கிடையாது. அன்று முதல் இன்று வரையில் தொடர்ந்து வரும் தொடர்பு அது. அதனால்தான் இந்தியாவிலேயே முதன் முதலாக நபிகள் நாயகம் விழாவுக்கு அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டு அதனைச் செயல்படுத்தியது கழக ஆட்சி என்ற பெருமையை பெற்றுள்ளோம்.

உருது பேசும் முஸ்லிம்களையும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்திட வேண்டுமென்ற அவர்களது கோரிக்கையை எத்தனையோ தடைகளைத் தாண்டி நிறைவேற்றித் தந்ததும் கழக ஆட்சிதான்.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிவிக்கப்பட்டு, ஆனால் நிறைவேற்றப்படாமல் இருந்த நிலையில், இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்புகளுக்கிடையில் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் எனப் பெயர் சூட்டியதும் கழக ஆட்சிதான்.

இந்தியாவின் பொது மொழியாக ஒரு மொழி இருக்க வேண்டுமென்றால், தமிழுக்கே அந்தத் தகுதியுண்டு என அரசியல் நிர்ணய சபையில் முழங்கிய பெருமகனார் கண்ணியத்துக்குரிய காயிதேமில்லத் அவர்களின் பெயரால் சென்னை அண்ணா சாலையில் கல்லூரி கண்டதும், அவர் பெயரால் உருவான கல்லூரிகட்கு உதவிக்கரம் நீட்டியதும் கழக ஆட்சிதான்.

மதச்சார்பற்ற கொள்கையுடைய கழகம் சிறுபான்மை சமூகத்தினர் கொண்டுள்ள மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து அந்தந்த மதத்தினர் நடத்தும் பொது விழாக்கள், நிகழ்ச்சிகள் அமைதியாக நடைபெறவும் - அவர்கள் அழைத்த போது கலந்து கொண்டு அவர்களது கொள்கை, கோட்பாடுகளில் நமக்குப் பொருந்துமாறு

இருக்கின்ற கருத்துக்களைப் போற்றவும், அவர்களுடன் அண்ணன் தம்பிகளாக உடன்பிறப்பு உணர்வுடன் பழகி வருகிறோம்.

எத்தனையோ பகுதிகளில் நமது கழகத்திலிருப்பவர்களே இஸ்லாமியர் இஸ்லாமியரல்லாதவர், ஒருவரையொருவர், மாமன் மச்சான் என்று முறை வைத்துக் கூப்பிட்டு அளவளாவுகிற காட்சிகளையும் காணுகிறோம்.

தமிழ் மொழியை உயிராக நேசித்து, இலக்கியங்களை, காவியங்களை, கவிதைகளை இயற்றித் தமிழன்னைக்குக் காணிக்கையாக்கியவர்கள், இன்னமும் தமிழ் முத்தாரம் தொடுத்துக் கொண்டிருப்பவர்கள் இஸ்லாமிய சமுதாயத்தில் எண்ணற்றோர்! இதுபோலவே கிறிஸ்தவ, சமண, புத்த சமயங்களின் சார்பிலும் எத்தனையோ படைப்புக் கருவூலங்கள்!

அந்த அளவுக்கு தமிழ் மொழிக்கு அவர்கள் ஆற்றிய பணிகளுக்கு நமது பாராட்டுகளையும், புகழுரைகளையும், நன்றியுணர்வையும் நாம் தெரிவிக்கும்போது - எங்களுக்கு எதற்காக நன்றி தெரிவிக்க வேண்டும். நாமனைவரும் ஒன்றுதானே! நமக்குள் எதற்காக ஒருவருக்கொருவர் நன்றி? எனப்பாசம் பொங்கிடக் கேட்டவர்களும் உண்டு!

என்னையே எடுத்துக் கொள்ளேன். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வெவ்வேறு கொள்கையுடையவர்களாக இருந்து மோதிக் கொண்ட போதும், நான் நடத்திய முரசொலிக்கு அச்சகம் சென்று பிழை திருத்திக் கொடுத்துத் துணைபுரிவார் அண்ணன் கவி. கா. மு. ஷெரீப் அவர்கள்! அவர் அப்போது நடத்திய ஒளி என்ற இதழுக்கு அச்சகம் சென்று நான் பிழை திருத்திக் கொடுப்பேன்.

எம்மிடையே சகோதர எண்ணத்தில் எந்தப்பிழையும் இல்லாத காரணத்தால், இருவரும் போட்டி போட்டுக் கொண்டு ஒருவர் ஏட்டுக்கு ஒருவர் எழுத்துப் பிழை திருத்தினோம். அந்த உறவும், பாசமும் எங்களிடையே இன்றும் நின்று நிலவிக் கொண்டுதானிருக்கிறது.

அதனால்தான் சொல்லுகிறேன்! இஸ்லாமிய சமுதாயத்துக்கும் நமக்கும் ஏற்பட்ட உறவு, இன்று நேற்று திடீரெனத் தோன்றிய அரசியல் உறவல்ல!

கழகச் சார்பில் ஒற்றுமை நாள் நடத்தும்படி கேட்டு வேண்டுகோள் விடுத்துள்ள பொதுச்செயலாளர் பேராசிரியரையே நான் முதன் முதலாக சந்தித்தது எங்கே? எப்போது? தெரியுமா; உனக்கு!

1940 ஆம் ஆண்டு என்று எனக்கு நினைவு - ஓரிரு ஆண்டு ஏறத்தாழ இருக்கக்கூடும் - திருவாரூரை ஒட்டிய விஜயபுரம் எனுமிடத்தில் முஸ்லிம் பள்ளி வாசலை அடுத்துள்ள ஒரு கூடத்தில் சிக்கந்தர் விழா நடைபெற்றது.

இஸ்லாமிய சகோதரர்கள் நடத்திய அந்த விழாவில் கலந்து கொள்ள வந்த அண்ணா அவர்கள், அவருடன் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் ஒருவரை அழைத்து வந்து, அந்த விழா மேடையில் அறிமுகப்படுத்தி இந்த இளைஞர் பெயர் அன்பழகன், இவர் பேசுவார் இப்போது எனக் கூறினார்.

அன்று நானும், பேராசிரியரும் இளைஞர்கள். இப்போது ஜூன் வந்தால் எனக்கு எழுபது ஆரம்பமாகிறது! பேராசிரியருக்கு இந்த டிசம்பர் 19-ந் தேதியே எழுபது நிறைவுற்று எழுபத்தி ஒன்று தொடங்குகிறது!

மதவெறியர்களாலும், அவர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டியவர்களாலும் நாட்டில் விளைந்துள்ள நாசங்களை எண்ணி, 19-ந் தேதியன்று தனது பிறந்த நாளைக் கொண்டாட வேண்டாமென பேராசிரியர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

எனினும் சென்னையில் 19ந் தேதியன்று நான் பேசுவதென்று, தென்சென்னை, வடசென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஏற்பாடுகளைச் செய்து விட்டார்கள்.

அந்தக் கூட்டம் பேராசிரியர் அவர்களின் பிறந்த நாள் போற்றும் கூட்டமாகவும், பொதுச் செயலாளர் என்ற முறையில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளவாறு எல்லாப் பிரிவினரிடமும் நல்லிணக்கம் ஏற்பட வழி வகுத்து, ஒற்றுமையைக் கட்டிக் காத்திட விழையும் விளக்கக் கூட்டமாகவும் அமையும்.

தலைமைக் கழக வேண்டுகோளின்படி டிசம்பர் 19 முதல் ஒருவார காலம் தி.மு.க. நடத்தும் ஒற்றுமை வேண்டுகோள் நிகழ்ச்சிகள், வசதி வாய்ப்புக்கு ஏற்ப பொதுக் கூட்டங்களாகவும்,

தெருமுனைக் கூட்டங்களாகவும், ஏதோ ஒரு வகையில் நல்லிணக்கம் மேலும் வலுப்பெற உதவிடும் நிகழ்ச்சிகளாகவும் பேராசிரியர் 71-வது பிறந்த நாளைத் தொடர்ந்து சிறப்பாகவும், அமைதியாகவும் நடைபெற கழக அமைப்புகள் இப்பொழுதே பணிகள் தொடர வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

16-12-1992

குறிப்பு :- கழக கூட்டங்களுக்கு பல இடங்களில் காவல் துறையினர் வேண்டுமென்றே அனுமதி மறுப்பதாகத் தெரிகிறது. அவ்வாறு இருப்பின் உடன் தலைமைக் கழகத்துடன் தொடர்பு கொண்டிட வேண்டுகிறேன்.

1989. அலாவுதீனின் அற்புத விளக்கு
அந்த 356

உடன்பிறப்பே,

மத்தியில் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களின் தலைமையில் ஜனதா கட்சியின் ஆட்சி நடந்து கொண்டிருந்த போது, மாநிலங்களவையில் கழகக் குழுத்தலைவரான தம்பி. முரசொலிமாறன் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ளதும் - விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றாற்போல் ஒரு மத்திய அரசு, மாநில அரசுகளை நினைத்தவுடன் ஏதாவது ஒரு காரணம் சொல்லி கலைப்பதற்குப் படைக்கருவியாகத் திகழ்வதுமான - 356வது பிரிவை நீக்கி விட வேண்டுமென்று திருத்தத் தீர்மானமொன்றை முன்வைத்து வலியுறுத்திப் பேசினார். மாறன் கருத்தை ஆதரித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் மறைந்த பெரியவர் பி. இராமமூர்த்தி அவர்கள் உரையாற்றினார். ஜனதா, காங்கிரஸ், பா.ஜ.க. போன்ற கட்சிகளின் உறுப்பினர்கள் மட்டுமன்றி - அண்ணாவின் பெயரைத் தங்கள்கட்சிக்குச் சூட்டிக்கொண்ட அ.தி.மு.க.வினரும் சேர்ந்து கொண்டு மாறனின் திருத்தத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

இந்த 356 பிரிவை நீக்குவது மட்டுமல்ல, வெள்ளைக்காரன் காலத்து 1935 ஆம் ஆண்டு சட்டத்தைப் பெரும்பாலும் பின்பற்றி வகுக்கப் பெற்ற இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தி, மத்தியிலே உண்மையான கூட்டாட்சியும் - மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநில சுயாட்சியும் அமைத்திட வேண்டுமென்பதில் உறுதியாக இருப்பது தி.மு.கழகம் என்பதை அரசியல் உணர்ந்தோர் அனைவரும் தெளிவாக அறிவார்கள்.

இந்திய ஒருமைப்பாடு - வலிமை, பாதுகாப்பு இவற்றைக் கருத்திற்கொண்டு 1962 ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் காலத்திலேயே பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்ட

தி.மு.கழகம், மாநிலங்கள் சுயாட்சி தன்மையுடன் மலர்ந்து, மத்தியில் கூட்டாட்சிமுறை நடைமுறைக்கு வரவேண்டுமென்ற கருத்தை மக்கள்மன்றத்தில் எடுத்து வைத்த இயக்கமாகும்.

அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்த போது, 1968 ஆம் ஆண்டு, சிலம்புச்செல்வர் ம.பொ.சி. அவர்கள் முன்னின்று நடத்திய மாநில சுயாட்சி மாநாட்டில் கலந்து கொண்டு மாநில சுயாட்சி கேட்பது எந்தெந்த நியாயங்களின் அடிப்படையில் என்பதை விளக்கமாக எடுத்துரைத்திருக்கிறார். இந்த மாநாட்டில் கம்யூனிஸ்டு கட்சி தலைவர் மறைந்த எம். கல்யாணசுந்தரம் அவர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, மாநில சுயாட்சிக் கொள்கைக்கான ஆதார பூர்வமான நுணுக்கங்களையும், விபரங்களையும் திரட்டிடவும் - ஆய்ந்தறிந்து ஓர் அறிக்கையாகத் தந்திடவும் வேண்டி நீதிபதி ராஜமன்னார், நீதிபதி சந்திராரெட்டி, மேதை ஏ. லட்சுமணசாமி முதலியார் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, அந்தக் குழு தந்த அறிக்கையின் அடிப்படையில் 1974ஆம் ஆண்டு தமிழக சட்டப்பேரவையில் மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற தீர்மானத்தை ஆளுங்கட்சி சார்பில் நான் முன்மொழிந்து - நீண்டதோர் விரிவான விவாதம் நடைபெற்று, தீர்மானம் நிறைவேறுகிற நேரத்தில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் அதில் கலந்து கொள்ளாமல் வெளி நடப்பு செய்து, பின்னர் அந்தத் தீர்மானம் இந்தியாவிலேயே முதன் முறையாக ஒரு மாநில சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது என்ற சரித்திர முக்கியத்துவத்தைப் பெற்றது.

1970ஆம் ஆண்டு ராஜமன்னார் குழு அறிக்கை - 1974-ல் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம், இவற்றையொட்டி மாநில சுயாட்சிக் கருத்து - இதுவரையில் புகாத நெஞ்சங்களில் எல்லாம் புகுந்திடத் தொடங்கியது. கேட்க மறுத்தோரும் நமது வாதத்தில் வலு இருப்பதை மட்டுமல்ல, வாய்மை இருப்பதையும் உணர்ந்தனர்.

ஆனால் டெல்லியில் நீண்டகாலம் அரசோச்சி, அதிகாரக் குவியலில் அனந்த சயனம் கொண்டிருந்த காங்கிரசுக்கு இந்தக் கோரிக்கையை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

அதன் பின்னர் அமைந்த, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்படவேண்டுமென்ற கொள்கையுடைய தேசிய முன்னணி அரசும், அதனை நிறைவேற்றுகிற அளவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பலத்தைப் பெற்றதாக இல்லை! அந்த ஆட்சி நீண்டகாலம் நீடிக்கவுமில்லை! இன்றைய தினம் 356-வது பிரிவின் பயனை அனுபவித்து மூன்று நான்கு மாநில அரசுகளை இழந்து நிற்கும் பாரதிய ஜனதாவும்கூட, மாநில உரிமைகளுக்காக நாம் உயர்த்திய குரலை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. நமது ஆட்சி கலைக்கப்பட்ட போதும் கூட, கலைத்தவர்கள் பக்கமே ஆதரவாகச் செயல்பட்டது.

மத்திய அரசு, மாநில உரிமைகளை வழங்கி அதிகாரங்களைப் பரவலாக்காதது மட்டுமல்ல - எப்போதுமே 356-வது பிரிவு என்ற கூர்வாளை மாநில அரசுகளின் தலைக்கு மேலே தொங்கவிட்டுப் பயமுறுத்திக்கொண்டும், பழிவாங்கிக் கொண்டுமிருக்கிறது.

கவர்னர் அறிக்கை கொடுக்காவிட்டால்கூட, Otherwise அறிக்கை இல்லாத நிலையிலேயே, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அரசைக் கலைக்கின்ற அலாவுதீன் பூதம் என்ற வகையில் அல்லவா 356-வது பிரிவு ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது.

அந்த அலாவுதீனின் தீபத்தைத் தடவி, கலைப்பு பூதத்தை வரவழைப்பதற்காகவே, ஆங்காங்கு மாநிலங்களில் ஆளுநர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் டெல்லி எஜமானர்களுக்கு ஏஜண்டுகளாக இருக்கும் வரையில் பதவியில் இருப்பார்கள். நியாயம், நேர்மையை எடுத்துச் சொன்னால் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள். நமது பர்னாலா அவர்களைப் போல!

இந்த 356 குறித்து, அப்போதே அரசியல் நிர்ணய சபையில் - கடுமையான வாக்குவாதம் நடைபெற்ற போது, சர்தார் பட்டேல் அவர்கள் ஒரு ஜனநாயக அரசியல் சட்டத்தில் இது சரியாகப் பொருந்தவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

பெரும் எதிர்ப்புகளைக் கண்ட அரசியல் மேதை அம்பேத்கார் அவர்கள், 356-வது பிரிவை கடைசி ஆயுதமாகத்தான் பிரயோகிக்க வேண்டும் என்று கூறினார்.

அதுமட்டுமல்ல, இந்த மாதிரியான பிரிவுகள் எந்தக் காலத்திலும் அமல்படுத்தப்பட மாட்டா. அவை செத்துப்போன

எழுத்துக்களாகவே இருக்கும் - என்றும் அண்ணல் அம்பேத்கார் வாக்குறுதி வழங்கினார்.

ஆனால் அவர் கண்ணெதிரிலேயே பண்டித நேரு காலத்தில் பெப்சு மாநிலம் கலைக்கப்பட்டபோது, அதைக் கண்டித்து அவரே சொன்னார், அரசியல் சட்டம் களங்கப்படுத்தப்படுகிறது Rape of the constitution என்பதாக!

உடன்பிறப்பே, ஏறத்தாழ கிரிக்கெட் பந்தயத்தில் சதம் அடிப்பது என்ற சாதனையை எட்டுவது போல - மாநில ஆட்சிக் கலைப்புகளை இந்த 356 என்கிற பேட்ஸ்மேன் எட்டிக் கொண்டிருப்பதிலே ஒரு கட்டம்தான் ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் பாரதிய ஜனதா அரசுகளின் கலைப்பு ஆகும்!

நானோ, கழகமோ பாரதிய ஜனதாவுக்கு வக்காலத்து வாங்கவில்லை! நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற மாநில சுயாட்சி கோரிக்கைக்குக் குரல் கொடுக்கிறோம், என்பதே உண்மை!

சிறுபான்மை மக்கள் விஷயத்தில், அதிலும் குறிப்பாக இஸ்லாமிய பெருமக்கள் விஷயத்தில், பா. ஜ. கட்சி காட்டுகிற வெறுப்பும், அதனால் ஏற்படும் அயோத்தி போன்ற அக்கிரமமான விளைவுகளும் நமது நெஞ்சத்தை நெருப்பாக்கிக் கொண்டே இருக்கின்றன!

ஆனால், இஸ்லாமியருக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியில் பா.ஜ.க.வுக்கு மட்டுமா பங்கு? மத்தியில் ஆண்டு கொண்டிருக்கிற காங்கிரசுக்கு பங்கு இல்லையா?

ஒன்றிரண்டு தவிர, மற்ற எல்லாக் கரங்களும் மத்திய அரசுக்கு ஆதரவாக நீண்டு - பாபர் மசூதியைப் பாதுகாத்திட பிரதமருக்கு துணை நின்றும்கூட, பிரதமர் அவர்கள் பாரதிய ஜனதா மற்றும் அதன் துணை இயக்கங்களின் அபிலாஷை நிறைவேறுகிற அளவுக்கு அயோத்திக் கொடுமையை இராணுவத்தை நிறுத்தி வேடிக்கை பார்த்தவராயிற்றே!

அதனால்தான் கேட்கிறேன்! மாநில அரசுகள் மீது குற்றம்சாட்டி அவற்றைக் கலைத்தாயிற்று! மத்திய அரசு மசூதி விஷயத்தில் காட்டிய அசிரத்தைக்கு, அந்த அரசை யார் கலைப்பது?

எனவே இன்றைக்கு இந்து மத வெறி என்ற தீயைக் கொண்டு, இஸ்லாமிய மக்களின் உள்ளத்தைப் பொசுக்கிய குற்றம், பாரதிய ஜனதா தலைவர்களைச் சார்ந்திடும்போது - அதற்கு ஏதோ ஒரு வகையில் உடந்தையாக இருந்து விட்டு, இன்றைக்கு பதவிபிடிச் சண்டையில் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள கண் துடைப்பு நாடகம் நடத்தும் காங்கிரசையும், அந்தக் குற்றம் கண்டிப்பாகச் சார்ந்திடும் என்பதே மறுக்க முடியாததும், நாம் தொடர்ந்து சொல்லி வருவதும், உள்ளங்கை நெல்லிக்கனி போன்றதுமான உண்மையும் ஆகும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

17-12-1992

1990. அவர் நெஞ்சில் நாம்!
நம் நெஞ்சில் அவர்!

உடன்பிறப்பே,

இன்று நமது கழகத்தின் பொதுச் செயலாளரும், இனமானப் பேராசிரியருமான எனது அருமைச் சகோதரர் அன்பழகனார் அவர்களுக்கு அகவை எழுபது நிறைவுற்று 71-வது வயது தொடங்குகிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவராக இருந்த காலந்தொட்டு இந்நாள் வரையில், கொண்ட கொள்கையில் அணுவளவுக் குழப்பமும் கொள்ளாமல், அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதில் தன் மனதிற்குப்பட்டதைத் தயக்கமின்றி எடுத்துக் கூறி, அதே நேரத்தில் மாற்றுக் கருத்துகளையும் பொறுமையுடன் கேட்டுணர்ந்து செயல்படும் செம்மலாகவே அவர் விளங்கி வருகிறார்.

பொதுவாக திராவிட இயக்க வரலாற்றை எடுத்துக் கொண்டால் தியாகராயர், நாயர், நடேசனார் தொடங்கி நீதிக்கட்சியின் ஆட்சி நடைபெற்று முடிவுற்ற காலம் வரையில் ஒரு கட்டம். பிறகு தந்தை பெரியாரின் தலைமையில் அறிஞர் அண்ணா, தளபதி அழகிரி போன்றவர்களும், அவர்களுக்கடுத்த நிலையில் இயக்க முன்னணியினரும் பணியாற்றி 1949-ல் தி.மு.கழகம் தோன்றியது வரையில் மற்றொரு கட்டம்.

பின்னர் அறிஞர் அண்ணா தலைமையில், ஆட்சி மன்றத்தில் தி.மு. கழகம் எதிர்க்கட்சியாகவும், பின்னர் ஆளுங்கட்சியாகவும், இப்போது ஆட்சி மன்றத்தில் டெல்லியிலும், தமிழகத்திலும் மிகக் குறைவான உறுப்பினர்களையே பெற்றுள்ள வரையில் உள்ள இன்னொரு கட்டம்.

அந்தக் கட்டங்களில் திராவிட இயக்க அடிப்படை உணர்வுகளை தெளிவாகப் புரிந்து கொண்டு - அந்த

உணர்வுகளுக்கு ஊனம் வராமல் தடுத்திடத் தடந்தோள் தட்டிய பெருமைக்குரியவர்களில் பேராசிரியர் ஒருவர்!

அந்தப் பெருமையை நிலைத்திடும் வகையில் பெரியார் தலைமையிலும், பிறகு பேரறிஞர் அண்ணா தலைமையிலும் ஒரு சிறிதும் வழுக்கலின்றி நடைபோட்டவரும் - இன்று, என்னுடன் இணைந்து அவரா? அல்லது அவருடன் இணைந்து நானா? என்ற கேள்விக்கே இடமின்றி, நல்லிணக்கத்துடன் தலைமைக் கழகத்தின் பொறுப்பு மிக்க பொதுச்செயலாளர் பதவியை வகிப்பவரும் நம் பேராசிரியர்தான் என்கிறபோது ஏற்படும் பெருமிதமான இனிய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை!

நமது இயக்கம் 1916ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் சந்தித்துள்ள சோதனைகள் கொஞ்சமல்ல! புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காக, வேண்டுமென்றே கடவுள் பெயரால், மதத்தின் பெயரால், வேத சாத்திர இதிகாசங்களின் பெயரால் வெறுத்து ஒதுக்கப்பட்டு மூலையில் தள்ளப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்கிற இயக்கம் என்பதற்காக வகுப்புவாத இயக்கமென வர்ணிக்கப்பட்டது! தேசத்துரோக இயக்கமெனப் பழிக்கப்பட்டது! அந்த ஏச்சுப் பேச்சுகள், எதிர்ப்புகள் அன்று மட்டுமல்ல! இன்று வரையில் உண்டு! அதுவும் யாரால்?

இன்றைக்கு இந்திய நாட்டு அரசியல் அரங்கில் முரண்பாடுகளின் மொத்தக் குத்தகைதாரர்களாக - தங்களின் சொந்த வாழ்க்கைக்கான சாதக பாதகங்களை மட்டுமே கணக்கிட்டு கொண்டு, தங்கள் பின்னால் சாதியின் அடிப்படையில், மதத்தின் அடிப்படையில் இருக்கின்ற மக்களை ஏமாற்றி, நேற்று ஒரு முடிவு, இன்று ஒரு முடிவு என எடுத்துக் கொண்டிருப்பவர்களால் - அன்று போல் இன்றும் நமது இயக்கத்துக்கு எதிர்ப்பு உண்டு!

யார் எதிர்ப்பினும் சரி, ஏன், புயல் பூகம்பமே ஏற்படினும் சரி? நம் இதயத்தில் பதியவைத்துக் கொண்டுள்ள கொள்கையின் உறுதிப்பாட்டில் நமக்கு நிலை குலையாத நம்பிக்கை இருக்கிற காரணத்தினால்தான் - கிடைத்திட்ட ஆட்சி கைநழுவிவிடுமே என்ற கவலை கிஞ்சிற்றுமின்றி ஜனநாயகத்தை மீட்டிடும் போராட்டத்தில் எமர்ஜன்சியை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்தோம்! மேலும் ஓராண்டுகாலம் நீட்டித்துத் தருகிறோம் ஆட்சியை,

அதற்கு நிபந்தனையாக எமர்ஜன்சியை எதிர்த்து நிறைவேற்றிய தீர்மானத்தைத் திரும்பப்பெறுக - என்று டெல்லி கூறியபோது, சில பதவி வெறியர்களைப் போல அதற்கு இந்த இயக்கம் பணியவில்லை! ஆட்சியைக் கலைத்தனர்! ஆண்டொன்று சிறையில் ஐநூறுக்கு மேற்பட்டோரை மிசாக் கைதிகளாக்கி வதைத்தனர்!

கேடு வரும் போதுதான் நண்பர்களை உணர்ந்து கொள்ள முடியும் என்ற பொய்யாமொழிக்கு ஏற்ப, இந்த இயக்கத்தின் காவலர்கள் எனப்படுவோர் - பதவி சுகம் கண்டோர், இயக்கத்தையே அழித்துவிடும் - தற்கொலைக்குத் தலைமை தயாராக வேண்டுமென்றனர்!

அப்போது அந்த நல்லவர்கள்? நீட்டிய சைனட் புட்டியைத் தட்டிவிட்டு, வாழ்ந்தால் இயக்கத்துடன் இணைந்து வாழ்வோம்! வீழ்ந்தாலும் இயக்கத்துடன் வீழ்வோம்! இடையே இந்தச் சூதுச் சிந்தனை, சூழ்ச்சி மதி வேண்டாம் என்று கழகம் காத்திட என் போன்றோர், உன் போன்றோர் தோளொடு தோள் நின்று சூளுரைத்த சுயமரியாதைச் சுடர்தான் நமது பேராசிரியர் என்பதை இக்கடிதத்தில் குறிப்பிடும்போது - அந்த மலரும் நினைவுகள் என் விழித்திரையை நீரால் மறைக்கின்றன!

பேராசிரியரும், அவரைப் போன்றவர்களும்; தம்மைத் தேடி வரக்கூடிய பதவிகளைத் தமது பாததூசிக்குச் சமமாகவே எண்ணினர்! அதேசமயம் அழைத்தால் அறப்போர்க் களத்திற்கு ஓடிவரும் உன்போன்ற உடன்பிறப்புகளையே உச்சியில் வைத்துப் போற்றினர்! அவர்களில் நானும் ஒருவன் என்பதுதான் உனக்குத் தெரியுமே!

அரசு கட்டில் - அதிகாரம் - அந்தஸ்து - மிகுந்த ஒளியுடையதுதான். ஆனால் மின்னலைப் போன்றது!

கொள்கையில் உறுதி - குறிக்கோளில் இடைவிடாத பற்று - அவற்றுக்கென ஏற்றுக் கொள்ளும் இழப்பு, சோதனை - வேதனை, இவற்றால் ஏற்படும் புகழொளி, இந்தப் புவிக்கே ஒளிதரும் சூரிய வெளிச்சத்தைப் போன்றது!

இதில் இரண்டாவதாகக் குறிப்பிடும் ஒளிச் சுடராகத் திகழ்பவர்தான் நமது பேராசிரியர் அவர்கள்!

அவரது பிறந்த நாளான இன்று, நமது இயக்கத்தின் இலட்சோபலட்சம் உடன்பிறப்புகளின் நெஞ்சத்துடன், என் நெஞ்சத்தையும் இணைத்து, அவர் நெஞ்சில் நாம் - நம் நெஞ்சில் அவர் என்ற உணர்வுடன் வாழ்த்துகளைக் குவிக்கிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

19-12-1992

1991. அநாகரிக, அராஜக ஆட்சிக்கு ஓர் அறிவிப்பு!

உடன்பிறப்பே,

ஒரு மாநிலத்தின் முதலமைச்சர், அவர் பொறுப்பு வகிக்கும் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு அமைதியைப் பாதுகாத்திடப் பெரிதும் கடமைப்பட்டவர். அவரே பிரதமருக்கு எழுதும் ஒரு கடிதத்தில், தனக்கும், பிரதமருக்கும் - அல்லது மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் - அல்லது காங்கிரஸ் ஆட்சிக்கும், அ.தி.மு.க.வுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிணக்குகளைப் பற்றி எழுதுவதிலோ அல்லது தனது உணர்வுகளை வெளிப்படுத்துவதிலோ யாரும் குறை காண முடியாது.

ஆனால் அந்தக் கடிதத்தில் தன் மீது தொடர்ந்து குற்றம் குறைகளைச் சொல்லிக் கொண்டிருப்பார்களேயானால், தன்னுடைய கட்சித் தொண்டர்களைக் கட்டுப்படுத்தி வைக்கத் தன்னால் இயலாது - அது கடினம் - என்று குறிப்பிட்டிருப்பதும், அந்தக் கடிதம் பிரதமர் அலுவலகத்திலிருந்தோ அல்லது மாநில அரசு அலுவலகத்திலிருந்தோ பத்திரிகைகளுக்கும் கொடுக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது என்கிறபோது அதனைப் படிக்கும் நடுநிலையாளர்கள் எவரும் வேதனைப்படாமல் இருக்க முடியாது.

என்னைக் குற்றம் சாட்டுகிறவர்களுக்கு அறிவுரை கூறுங்கள். அப்படியும் அவர்கள் மீறி நடந்தால், அதன் விளைவுகளைச் சந்தித்தே ஆக வேண்டும்.

இதுவும் மாநில முதலமைச்சர், பிரதமருக்கு எழுதியுள்ள மடலில் குறிப்பிட்டிருக்கும் வாசகமேதான்!

ஏற்கெனவே, இங்குள்ள ஆளும் கட்சித் தொண்டர்களைப்பற்றிக் கேட்க வேண்டியதில்லை. இந்த இரண்டு

ஆண்டுக்காலத்தில் அவர்களது திருவிளையாடல்களை மீண்டும் பட்டியல் போட்டுக் காட்ட விரும்பவில்லை. மத்திய அமைச்சர்கள், பத்திரிகை அலுவலக ஊழியர்கள், அரசு அலுவலர்கள், அய்.ஏ.எஸ். அதிகாரிகள், எதிர்க்கட்சியினர் என்று பலர் தாக்கப்பட்டுள்ள அவ்வளவு நீளமான பட்டியல் அது.

ஆனால் இப்பொழுது முதல்வர் ஜெயலலிதா, பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள மிரட்டலுக்கு முன்பே, அவரது கட்சியினர், எந்த அளவுக்கு அநாகரிகம் மிகுந்த அராஜக ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதை நாள்தோறும் கண்கூடாகக் காணும் அவலநிகழ்ச்சிகள் சுட்டிக்காட்டிக் கொண்டுதானிருக்கின்றன.

இந்த அட்சியாளர்களே எதிர்க்கட்சிகள் மீது, குறிப்பாக தி.மு.கழகத்தின் மீது பெரும்பாலான வழக்குகளைத் தொடுத்துள்ளனர். மொத்த எண்ணிக்கை நூறைத் தாண்டுகிறது. அவற்றில் ஒன்றிரண்டு வழக்குகள் திரு. சுப்பிரமணியம் சுவாமி மீது போடப்பட்டுள்ளன.

வழக்குக்கான சம்மன் பெற்று, அவரும், அவரைச் சார்ந்தோரும் நீதிமன்றத்துக்குச் சென்றால் - அவர்மீது கல்வீச்சு, ஆபாசமான ஏச்சுப்பேச்சு - பண்பாட்டுக்கு விரோதமான சில செயல்பாடுகள்; அதுவும் அ.தி.மு.க. மகளிர் அணியினர் சார்பாக என்கிறபோது, அதை எண்ணிப் பார்த்திடவே மனம் கூசுகிறது!

அவரது கூட்டத்துக்கு அனுமதி கிடைக்கவில்லை என்பதைக் கண்டித்து உண்ணாவிரதம் இருக்க முனைகிறார்கள் என்றால், அங்கேயும் அமளிதுமளி! நடுச்சாலையில் கலவரம்! கல்லெறிகள் - கத்தி வீச்சுக்கள்!

திரு. சுப்பிரமணியம் சுவாமி அவர்களுக்கும், தி.மு.கழகத்துக்கும் இடையே எத்தனையோ மாறுபாடான கருத்துகள் உண்டு! விடுதலைப் புலிகள் பெயரைச் சொல்லியும், ஜெயலலிதாவின் வற்புறுத்தலுக்கு இணங்கியும், சந்திரசேகரிடம் கூறிக் கழக ஆட்சியைக் கலைக்கச் சொன்னது நான்தான்! என்று அவர் மார்தட்டிக் கொண்டும், அவ்வாறு கழக ஆட்சியைக் கலைக்கத் தூண்டியதற்காக அ.தி.மு.க. விழா நடத்தி நாவலர் கையினால் வாள் வழங்கியதை அன்றைக்குப் பெருமையாகப் பேசிக் கொண்டுமிருந்தவர்தான் சுப்பிரமணியம் சுவாமி!

அந்த நிகழ்ச்சியை நினைவில் வைத்துக் கொண்டு - அவர்மீது கழகம் கொண்டுள்ள பகைமையினால், அதற்குப் பழி தீர்க்கும் முறையில் அவர் மீது ஆளுங் கட்சிக் குண்டர்கள் ஏவிவிடப்படுவதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தால், நம்மை யாரும் குற்றம் காணப் போவதில்லை.

ஆனால் ஜனநாயகம் மலர்ந்திட தடையாகவும் விளங்கி, பேச்சுரிமை, எழுத்துரிமை, கருத்து வெளியிடும் உரிமை ஆகியவற்றுக்கு அதிகாரபூர்வமாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு ஆளுங் கட்சி எதிர்ப்புக் காட்டி, தன் எதிரிகள் மீது பாய்ந்து தாக்கிடும் செயல்களை ஊக்கப்படுத்தித் தூண்டிவிடும் வகையில் நடந்து கொள்ளுமேயானால், அது எங்கே கொண்டு போய் விடும் என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

அதனால்தான் தி.மு.கழகம் இந்த அரசின் வக்கிரமான நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகிறவர் யார் என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிராமல், பாதிக்கப்படும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்திடக் குரல் எழுப்பிட வேண்டியிருக்கிறது.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு இந்தியா முழுதும் கலவரம் நடைபெற்றாலுங்கூட, திராவிட இயக்கம் பக்குவப்படுத்திய மண் என்ற முறையில் தமிழகத்தில் அமைதி நிலவிக் கொண்டிருக்கிறது.

ஆனால் அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு, என்னையா குற்றம் சொல்வது? அதன் விளைவுகளை அனுபவிப்பாய்! என் தொண்டர்களைக் கட்டுப்படுத்த இயலாது என்று முதல்வரின் குரல் வீறிட்டுக் கிளம்புகிறதே இது நியாயமா? நேர்மையா? அமைதி விரும்புவோர் ஏற்கும் செயல்தானா?

என்னைத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசுகிறார்கள். அரசியல் ரீதியான விமர்சனம் என்றால் தக்க வகையில் பதில் அளித்திருப்பேன்.

என்றும் முதல்வர் ஜெயலலிதா பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

உடன்பிறப்பே, இப்போது மட்டும் திரு. சுவாமி தனிப்பட்ட முறையில் இல்லாதது பொல்லாததைச் சொல்கிறார் என்று ஜெயலலிதாவுக்கு ஆத்திரம் கொப்பளிக்கிறதே! சுவாமி சொன்னாரோ, இல்லையோ அதனை விளக்க வேண்டியது

சுவாமியின் கடமை! ஆனால் இன்று அரசியல் வேதாந்தம் பேசுகிற ஞானோபதேசியாக மாறியிருக்கிற ஜெயலலிதா, எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது பேசியது என்ன?

கருணாநிதி ஆட்சியில் என்னை லாரியை விட்டுக் கொல்லப் பார்த்தார்கள். ஜெயலலிதா இப்படி ஒரு பொய்யை இட்டுக் கட்டிச் சொல்லவில்லையா?

என் பொதுவாழ்க்கைப் பயணத்தில் ஐந்து முறை கார் விபத்தில் சிக்கியிருக்கிறேன். அதில் இரண்டுமுறை உயிர்பிழைத்ததே அரிதாகி விட்டது. அதற்காக அன்றைக்கு இருந்த அரசுகள் மீதோ, எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதோ பழி போட்டிருக்கிறேனா - ஆனால் ஜெயலலிதா? லேசான கார் மோதலைப் பெரிதுபடுத்தி எவ்வளவு பெரிய பழியை - பொய்ப் பழியை சுமத்தினார்!

எனக்கு சிகிச்சை அளிக்க கருணாநிதி ஆட்சியில் டாக்டர்களே வர மறுக்கிறார்கள்.

- என்று ஜெயலலிதா பேட்டி கொடுத்தாரே! அது என்ன அரசியல் ரீதியான விமர்சனமா?

அவரது கூற்றை அப்போதே டாக்டர்கள் அசோசியேஷன் மறுத்து அறிக்கை விட்டதே! ஜானகி அம்மையார் எம்.ஜி.ஆருக்கு மோரில் விஷம் கலந்து கொன்றுவிட்டார் என்பதிலேயிருந்து அந்த அம்மையாரைப் பற்றி எவ்வளவு விரசமான விமர்சனங்கள் - ஜெயலலிதாவினால் செய்யப்பட்டன!

இவர் இன்றைக்கு அரசியலைப் பற்றி அங்கலாய்த்துக் கொள்வது வேடிக்கையாக இல்லையா?

எம்.ஜி.ஆர். எனது வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படுகிறார் என்று ஜெயலலிதா, தனது கைப்பட ஆங்கிலத்தில் எழுதி அது அன்றைக்கு பகிரங்கமாக ஏடுகளில் பிளாக் செய்து வெளிவந்ததே! அது அரசியல் ரீதியான விமர்சனமா?

தன்மீது புகார் கூறுவதையே, அதுவும் ஆதாரங்கள் வைத்துக்கொண்டு புகார் கூறுவதையே பெரிதாக எடுத்து அலட்டிக் கொண்டு - தனது கட்சிக்காரர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்கிறாரே? இன்றில்லா விட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் விழித்துக் கொள்ளும் மக்கள் கேட்க மாட்டார்களா? - தங்கள் தலைவன் சட்ட சபையில் பட்ஜெட் படிக்கும்போது,

சட்டமன்ற விதிமுறைகளுக்கு மாறாக குறுக்கே பேசித் தடுத்து, பட்ஜெட்டையும் பிடுங்கிக் கிழித்து, மூக்குக் கண்ணாடி உடைகிற அளவுக்கு முகத்திலேயும் குத்தியபோது மட்டும் - தனது கட்சியினரை அந்தக் கட்சித் தலைவன் கட்டுப்படுத்திவிட முடியுமா?

எண்ணிப் பார்க்க வேண்டாமா? குற்றச்சாட்டு கூறினால் - கருத்துக்கு கருத்து என்ற வகையில் மறுப்பு கூற முடியாமல், அடிப்பது, உதைப்பது, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைப் போல் ஒருவருக்கு வேடமிட்டு செருப்பு மாலை போடுவது - அந்த வேடதாரியை செருப்பால் அடிப்பது - இவைகளை எல்லாம் தட்டிக்கேட்க தமிழ்நாட்டில் உள்ள பத்திரிகாதர்ம வாதிகளும், சில கட்சியினரும் முன்வரமாட்டார்கள்!

ஆபாச, அநாகரிக, அராஜக அரசியல் நடவடிக்கைகளை அனுமதிக்கக் கூடாது என்பதிலும், ஜனநாயகத்தை மாசுமருவின்றிக் காத்திட வேண்டுமென்பதிலும் தி.மு.கழகத்தைப் போன்ற கட்சிகளுக்கும், அதன் தோழமைக் கட்சிகளுக்கும் கடமையும், பொறுப்பும் உண்டு என்பதால் இதனை இந்த ஆட்சியாளருக்கு எச்சரிக்கையாகக்கூட அல்ல! ஒரு அறிவிப்பாகத் தெரிவிக்கிறேன் இக்கடிதம் மூலம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

22-12-1992

1992. அயோத்தியா? ஆரண்ய வாசமா?

உடன்பிறப்பே,

டிசம்பர் 6- ஆம் நாள் பாபர் மசூதியைக் கரசேவகர்கள் இடித்து நொறுக்கித் தரைமட்டமாக்கிவிட்ட செய்தி வந்தவுடன், அடடா! அநியாயம் நடந்து விட்டது. மதச்சார்பற்றத் தன்மைக்கு வேட்டு வைக்கப்பட்டு விட்டது. இது பச்சையான தேசத்துரோகம். இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கே ஊறு தேடி விட்டார்கள். இந்தியாவுக்கே களங்கம் வந்து சேர்ந்து விட்டது என்று நாம் எதிர்பார்க்காத சில பத்திரிகைகள்கூட கடுமையாகக் கட்டுரைகள் தீட்டின. தலையங்கங்கள் எழுதின. ஆனால், அவை அப்போது வடித்த கண்ணீர் நீலிக் கண்ணீர் - போலிப் புலம்பல் என்பது எட்டு நாளைக்குள்ளே தெரிந்து விட்டதற்கு அடையாளமாக, இப்போது புதிய செய்திகளை ஆர்வத்துடன் வெளியிட்டு புதுக்குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றன.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இடிபாடுகளுக்கு அடியில் இருந்து சில சிலைகள் கிடைத்துள்ளன. அவை இராமர் சிலைகளைப் போல இருக்கின்றன. இராமர் கோயில் அங்கிருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. மொகலாய மன்னர் பாபர் காலத்தில் இராமர் கோயில் இடிக்கப்பட்டு, பாபர் மசூதி கட்டப்பட்டிருப்பதாக இதிலிருந்து தெரிகிறது என்றெல்லாம் எழுதிடத் தொடங்கியுள்ளன.

இந்துக் கோயில்களை இடித்து விட்டு அங்கே மசூதி கட்டும் காரியத்தில் பாபர் ஈடுபட்டாரா என்பதை முதலில் ஆராய வேண்டியிருக்கிறது.

உடன்பிறப்பே, 23.12.92 தேதியிட்ட சாவி வார இதழில் திரு. சாவி அவர்கள் பாபரின் சாசனம் என்ற தலைப்பில் ஒரு பெட்டிச் செய்தி வெளியிட்டுள்ளார். கொய்த மலர்கள் என்ற நூலிலிருந்து திரு. த.கி. இராமசாமி என்பவர் திரட்டித் தந்த செய்தியாகும் அது!

பாபர் சக்கரவர்த்தி, தனது மகன் உமாயூனுக்கு தந்த சாசனம் இதுதான் எனக் குறிப்பிடப்பட்டுள்ள அச்செய்தியில் சில முக்கிய பகுதிகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உன்னுடைய மனத்தில் மத சம்பந்தமான குரோதங்கள் ஏற்பட ஒருபோதும் இடம் கொடுக்காதே.

உன்னுடைய ஆட்சியில் உள்ள ஒவ்வொரு வகுப்பாரின் மத வழக்கங்களையும், கொள்கைகளையும் நன்கு ஆதரித்து, கொஞ்சம் கூடப் பட்சபாதமின்றி எல்லோருக்கும் பொதுவான நீதியை வழங்குவாயாக.

இந்தியர்கள் மிகவும் நல்லவர்கள். நன்றியுணர்வு மிக்கவர்கள். அவர்களது அன்புரிமை கிடைக்க, விரோதத்தை ஒதுக்கிவிட்டு ஆட்சி செய்.

எம்மதத்தினரது கோயில்களையும் நீ அழிக்காதே.

எப்போதும் நீதியைப் பெரிதும் விரும்புகிறவனாய் உன்னை மாற்றிக்கொள்.

எந்த மதத்தினர் வந்து உதவியைக் கேட்டாலும், யாரையும் பாதிக்காமல் இருந்தால் முக மலர்ச்சியுடன் ஒப்புக் கொள்.

அரசாங்கம் என்னும் சரீரம் யாதொரு பிணியும், கவலையுமின்றி வாழ வேண்டுமானால், நான் சொன்ன அறிவுரைகளைக் கேட்டு நடந்து கொள். ஏன் எனில் நான் இப்படித்தான் ஆட்சி செய்தேன். இதுவே எனது சாசனம்.

இந்த சாசனம் பாபரால் தன் மகனுக்கு எழுதப்பட்டதாயினும், அவர் மகன் உமாயூனுக்கு மட்டுமின்றி ஆட்சி நடத்துகின்ற அனைவருக்கும் பொருந்துகின்ற வகையில் பெரும் பகுதி அமைந்துள்ளது.

இப்போது சிலபேர் பாபர் மசூதி இடிபாடுகளை ஆய்ந்து இராமர் கோயில் அங்கு இருந்திருக்கலாம் என்கிறபோது, வேறு சில ஆய்வாளர்கள் இன்னும் ஆழமாகத் தோண்டும் போது புத்தர் காலச் சின்னங்கள் அங்கே கிடைத்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

இந்த ஆய்வுகளை விரிவாக்கிக் கொண்டே போனால் இப்போதுள்ள பல இந்து ஆலயங்கள் ஒரு காலத்தில் சமண, பௌத்த பள்ளிகளாக இருந்தன என்பதற்கானச் சான்றுகளும் தரப்படுகின்றன. அதற்காக அந்த இந்து ஆலயங்களை

இடித்துவிட்டு - அங்கே மீண்டும் சமண, பௌத்த பள்ளிகளைக் கட்டுகிறோம் என்றால் அதை அனுமதிக்க முடியுமா?

அவ்வளவு ஏன்? இந்து மதத்திற்குள்ளேயே தகராறு! திருப்பதியில் முருகன் சிலையும் முருகன் கோயிலும்தான் இருந்தது. அதை மாற்றி பெருமாள் ஆலயமாக்கிவிட்டனர் என்பதற்கு ஆதாரங்கள் கூறப்படுகின்றன. அதற்காக, இப்போதுள்ள திருப்பதி அயோத்திக் கரசேவை போல ஒன்றை அனுமதிக்க முடியுமா? மீண்டும் முருகன் கோயில் உருவாக்க முடியுமா?

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட மாறுதல்களாகவே இருப்பினும், அதற்காக இப்போது ஒருவருக்கொருவர் மண்டையை உடைத்துக் கொள்வானேன்? மத வெறித்தீயை எண்ணெய் ஊற்றி வளர்ப்பானேன்?

இந்த வாரம் ஆனந்த விகடன் இதழில் பாபர் மசூதி இடித்தது குறித்து பல பிரமுகர்களின் கருத்துகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். அவற்றில் ஒருகருத்து என்னை மிகவும் கவர்ந்தது. சித்ரா விசுவேசுவரன் என்ற நடனக் கலைஞர் கூறியுள்ள கருத்து அது!

இந்தியா என்றால் மதவேறுபாடுகளற்ற சகோதரத்துவம், ஒருமைப்பாடு, சகிப்புத்தன்மை என்றுதான் அகராதியில் இத்தனை நாட்களாக அர்த்தம் இருந்து கொண்டிருந்தது. மசூதியை இடித்ததன் மூலம், அந்த அர்த்தத்தையும் சேர்த்தே இடித்து விட்டார்கள். எப்போதோ இந்துக்கோயில்கள் முஸ்லீம்களால் இடிக்கப்பட்டன என்று சரித்திர ஆதரம் காட்டுகிறார்கள். ஆனால், மனிதர்களின் பண்பாடு வளராது இருந்த ஒரு காலத்தில் நடந்த செயல்களுக்காக - நாகரிகமும், பண்பாடும் வளர்ந்த இந்தக் காலத்தில் பழிக்குப் பழிவாங்குவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

இந்தக் கருத்துதான் நாட்டு மக்களின் ஏறத்தாழ எண்பது சதவிகித மக்களின் கருத்தாக இன்றைக்கு இருக்கிறது. இந்தக் கருத்தை இதே பிரச்சினையின் மீதான விவாதத்தின்போது பல ஆண்டுகளுக்கு முன்பு பாராளுமன்றத்தில் டாக்டர் ராம்மனோகர் லோகியா அவர்கள் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்ற தூய

உணர்வுடன் நல்லிணக்கம் காண வழிவகைகளைக் காண வேண்டுமேயல்லாது, அயோத்தியையே பெரிது படுத்திக் கொண்டு அரசியல் ஆதாயம் தேட முனைவதும், அதனை அனுமதிப்பதும், இந்தியாவை எதிர்காலத்தில் ஆரண்யவாசம் செய்வதற்கு அனுப்பி வைத்து விடக்கூடிய அபாயமாகும் என்பதை எச்சரிக்கிறேன்.

பாபர் மசூதியை இடித்து நொறுக்கிப் பழிக்கு ஆளானவர்கள் அதற்குப் பரிகாரம் தேட முனையாமல் - பழையபடி இராமர் கோயில் அந்த இடத்தில்தான் என்று அடம் பிடிப்பதும், ஆர்ப்பாட்டம் செய்வதும் - மீண்டும் ஒரு பெருங்குழப்பத்திற்கு வித்திடும் என்பதை மறந்து விடக் கூடாது.

அந்தக் குழப்பத்திற்கு சாய்காலாகத்தான் மத்திய காங்கிரஸ் அரசு நடந்து கொண்டிருக்கிறது.

ஆம்! இப்படிச் சொல்வது தவறில்லை - இராமர் சிலையை அகற்றி விட்டு கரசேவகர்கள் பாபர் மசூதியை மண் மேடாக்கினர் - 6-ந் தேதி அதைத் தடுக்க விரைந்திடாத இராணுவம், ஏழு கிலோ மீட்டர் தொலைவிலிருந்து வேடிக்கை பார்த்து விட்டு - 8-ந் தேதி அந்த இடத்தில் இராமர் சிலையை மீண்டும் வைத்து, ஒரு சிறிய கொட்டகை கட்டுவதற்கு விசுவ இந்து பரீட்சத், பஜ்ரங்தளம், ஆர்.எஸ்.எஸ். - காரர்களுக்கு பாதுகாப்பாகவும் இருந்திருக்கிறது.

அதனால் பாபர் மசூதியில் மீண்டும் இராமர் சிலை! இராமருக்கு நாட்டில் எத்தனையோ கோயில்கள் உண்டு - இன்னும்கூட கட்டட்டும் - அயோத்தியில் கூட கட்டட்டும் - ஆனால் அதை பாபர் மசூதியில்தான் கட்ட வேண்டும் என்பது பகை வளர்க்கும் செயல்தானே! இதையும் முற்றவிட்டு - பிறகு முட்டவிட்டு வேடிக்கை பார்க்கப் போகிறதா மத்திய அரசு?

அன்புள்ள,

மு. கருணாநிதி

23-12-1992

1993.வீழ்ந்த தமிழகம் வீறுகொண்டு எழுந்தே தீரும்!

உடன்பிறப்பே,

எல்லா வழிகளும் பட்டுக்கோட்டை நோக்கியே! எனக்கூறும் விதத்தில் டிசம்பர் 23-ந் தேதி மேலத்தஞ்சை நோக்கிச் செல்லும் சாலைகள், நடந்தே செல்லும் ஆடவர், பெண்டிர், இளைஞர்கள் - சைக்கிள்கள் - மாட்டு வண்டிகள் - இடையிடையே லாரிகள், வேன்கள் எனப் போக்குவரத்து நெரிசலால் திக்குமுக்காடிக் கொண்டிருந்தன. நானும் எத்தனையோ தடவை பட்டுக்கோட்டை சென்றிருக்கிறேன். இப்படியொரு பெருங்கூட்டத்தை, இத்தகைய விழா ஏற்பாடுகளை, எழிலை, எழுச்சியை இதுவரை நான் அந்த ஊரில் கண்டதில்லை.

பட்டுக்கோட்டை, பேராவூரணி வட்டாரம் என்றாலே இளம் வயது முதற்கொண்டு அங்கிருந்த திராவிட இயக்க மூத்தோர்களுக்கு நான் செல்லப்பிள்ளை! தளபதி அண்ணன் அழகிரியின் இடி முழக்கம் தமிழகம் முழுதும் கேட்டதென்றாலும், அந்த முழக்கம் பட்டுக்கோட்டையில் கேட்கும்போது அதன் ஒலியே தனி! உலகம் இரண்டாகப் பிறந்ததுபோல ஒலிக்கும் அந்த முழக்கம்!

இப்போதும் அந்த ஊரின் பெயரை நினைத்தால், எல்லா பெயர்களுக்கும் முன்னால் வந்து நின்று இமய முகடு என உயர்ந்தோங்கிக் காட்சி தருவது அந்த மாவீரனின் உருவமன்றோ?

பேராவூரணி குழந்தை என்ன - அடைக்கலம் என்ன - வடிவேலு என்ன - பட்டுக்கோட்டைச் சீனி என்ன - டேவீஸ் என்ன - அவர்களைப் போன்றோர் தடந்தோள் கொண்டு தூக்கி நிறுத்திய தூண்களின் மீதன்றோ கழகக் கோட்டையை கட்டி முடிக்கும் உத்திரங்களை அமைத்து, உயர் வான்தொடும் கொடியைப் பறக்கவிட்டுக் களிக்கிறோம் நாம்.

அந்தத் திராவிடத் திருவிளக்குகளின் ஒளி பரவியுள்ள பகுதிக்குச் செல்வதென்றாலே - வீரம் செறிந்த அந்த மண்ணை மிதிப்பதென்றாலே எப்போதும் என் உள்ளத்தில் கட்டுப்படுத்த முடியாத ஒரு பரபரப்பு! உணர்ச்சி! எழுச்சி!

அடடா! அந்த இளம்பிராயத்தில் மாட்டுவண்டிகளிலும், சைக்கிள்களின் பின் இருக்கையில் அமர்ந்து கொண்டும், நடந்து சென்றும் அந்த வட்டாரத்தில் நான் பேசிய கூட்டங்கள் எத்தனை! எத்தனை!

கூட்டங்களுக்குச் செல்லும்போது, ஒரு மாட்டு வண்டி, அது கூண்டு வண்டியாகவும் இருக்கலாம் - கட்டை வண்டியாகவும் இருக்கலாம். அதில் எங்களை உட்கார வைத்துக்கொண்டு, கோடைச் சூரிய வெப்பத்தையும் குளிர்நிலவின் ஒளியைப் போலக் கருதி - பேராவூரணி குழந்தையும், கருப்பையாவும் தலையில் பெரிய முண்டாசு கட்டிக் கொண்டு சுயமரியாதை இயக்கப் பாட்டுகளைப் பாடிக்கொண்டு வருவார்களே - அந்த நாட்கள் எல்லாம், இப்போது ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகும் மறக்கக் கூடிய நாட்களா?

கடந்த 23-ஆம் நாள் தஞ்சையிலிருந்து நான், மன்னை, தம்பி கோ.சி. மணி, தம்பி எல். கணேசன் ஆகியோர் பட்டுக்கோட்டை நோக்கிக் காரில் சென்றபோது வழிநெடுக இடைவெளியே இல்லாமல், இருமருங்கிலும் படல் வைத்தாற் போல மக்கள் நின்று வாழ்த்தியும், கையசைத்தும், அனுப்பி வைத்தபோது ஓ! அந்த இளமைக் காலம் இனி ஒருமுறை திரும்பாதா? வேறு எதற்காகவும் அல்ல! இப்போது இயக்கத்துக்கு ஆற்றுகிற பணியைவிட இன்னும் பல மடங்கு துடிப்புடன் பணியாற்ற முடியுமே - என்ற ஆசையால்! எண்ணியவாறு காரில் அமர்ந்திருந்தேன்.

இரு அரிமாக்கள் - ஒன்றை சூரக்கோட்டையிலும், கோபாலகிருஷ்ணன் மற்றொன்றை பட்டுக்கோட்டையிலும் சீனி. பன்னீர்செல்வம் இழந்த துக்கத்துடன் - ஒளிமழை பொழியும் பட்டுக்கோட்டைக்குள் நுழைந்தபோது குளமாகியிருந்த தங்கள் விழிகளையும் மறைக்க முடியாமல் - அதேசமயம் தங்களையும் தேற்றிக் கொண்டு, எங்களையும் தேற்றி தி.மு.க. கோட்டைக் காவலர்கள் நாங்கள் இருக்கிறோம் என இருவண்ணக் கொடிகளை அசைத்துக் காட்டிய உடன்பிறப்புகளின் ஆர்வம், கடல் புகுந்ததோ

என வியக்கும் வண்ணம் கூடியிருந்த அந்தக் கூட்டத்தில் அலை மோதிய காட்சிதான் என்ன! அதன் மாட்சிதான் என்ன!

அரசு நிர்வாக வசதிக்காக, இரு கூறுகளாக ஆகிவிட்ட தஞ்சைத் தரணியில் மேலத் தஞ்சை மாவட்டம் ஒரு பாதிதான்! அங்கே இருபது இலட்சத்தை வசூலித்துக் கொடுத்துவிட்டு - என்னைப் பார்த்து தலையை நிமிர்த்தி என்ன சேதி? என்று கேட்ட தம்பி கோ.சி. மணியின் பெருமித நோக்கும் - அவருடன் ஒத்துழைத்த நகர, ஒன்றிய, கிளை அமைப்புகளின் நிர்வாகிகளின் கம்பீரப் புன்னகையும் - என்னை மெய்மறக்க வைத்துவிட்டது.

ஏ, அப்பா! கழகத்தோடு இணைந்து வளர்ந்து, வாழ்வு தாழ்வு இரண்டிலும் ஒரே மனநிலை பெற்று உழைத்திடும் மூத்த உடன்பிறப்புகளை என் எதிரே கண்டேன்! நான் அடிக்கடி கூறுவேனே அதுபோல துள்ளி வரும் வேல்களாய், ஆவேசத்தை அள்ளி வரும் வாள்களாய் - பெரியதோர் இளைஞர் பட்டாளம்! அதன் எக்காளச் சத்தமும் அங்கு கேட்டது! அங்கு மட்டுமல்ல, எங்கணும் கேட்கிறது. கேட்டுக் கொண்டே இருக்கிறது!

வெள்ளமும் புயலும் வந்து தன்மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றங்களை அடித்துச் சென்று விட்டது எனப் பெருமூச்சுவிட்ட ஜெயலலிதாவுக்கு - பாபர் மசூதி பிரச்சினை வந்து தனது ஆட்சியின் அலங்கோலத்தையும், அராஜகத்தையும் புரட்டித் தள்ளி விட்டது என ஆறுதல் பெற்ற ஜெயலலிதாவுக்கு - இல்லையம்மா! இதோ பார்த்திடுக! இளைஞர் அணிப் பட்டாளத்தை! உம் ஊழல், உம் அரசின் ஊழலை ஊர் ஊராகச் சென்று, தெருத்தெருவாகப் போய் தமுக்கடித்துச் சொல்லச் செல்கிறோம் சைக்கிள் பேரணியில் என்று ஆங்காங்கு தி.மு.க. இளைஞர் அணியினர் மாநில முழுதும் களம் இறங்கி, களங்கம் நிறைந்த இந்த ஆட்சி குறித்து விரிவாக, விபரமாக, விளக்கம் கூறி வருகின்றனர். அந்த இளைஞர்களுக்கு உதவியாக இருக்கட்டுமென்றுதான் பட்டுக்கோட்டையில் இந்த அரசின் ஊழல்களை மேலும் விரிவாகப் பேசியிருக்கிறேன்.

எனது பட்டுக்கோட்டைப் பேச்சையும், ஒரு படைக்கலனாக ஏந்திக்கொண்டு, இளைஞர் அணியினர் சைக்கிள்களில் பவனி வருகின்றனர்.

உல்லாசப் பயணத்துக்காக அல்ல - ஊழல் சாம்ராஜ்யத்தை ஜனநாயக நெறியில் உடைத்துத் தகர்ப்பதற்காக!

பட்டுக்கோட்டைச் சாதனைக்கு பாராட்டு தெரிவிக்கிறேன்! அதேசமயம், சிட்டுக் குருவிகளாய் - சிங்கக் குட்டிகளாய் - சிற்றூர், பேரூர், நகரங்கள் அனைத்திலும் இளைஞர் அணியினர் சிறந்த முறையில் திட்டம் வகுத்துக் கொண்டு ஜெயலலிதா ஆட்சியின் ஊழல்கள், பெரியார், அண்ணா கொள்கைகளுக்கு மாறான இந்த ஆட்சி நடவடிக்கைகள், மதச்சார்பற்ற நிலைக்கு முரணான பேச்சுக்கள், செயல்பாடுகள் ஆகியவற்றையும், விவசாயிகள், தொழிலாளிகள், ஏழை நடுத்தர மக்களின் வேதனைகளையும் - விலைவாசிக் கொடுமைகளையும் எடுத்தியம்ப சைக்கிள் பேரணி நடத்துகின்றனர். பிரச்சாரம் செய்கின்றனர். அவர்களை நமது கழக முன்னோடிகள், மூத்தோர் ஊக்கமளித்து வாழ்த்துகின்றனர்! அவர்களை நானும் வாழ்த்துகிறேன்!

பட்டுக்கோட்டையில் ஏற்பட்ட மகிழ்ச்சி! அந்த மகிழ்ச்சியிடே பன்னீர் என்ற பருவக் காளையை இழந்து விட்டோமே என்ற வேதனை - அந்த வேதனைக்கு மருந்திடும் செயலாக பன்னீர் செல்வம் போன்ற பல்லாயிரம் இளைஞர்கள் படைதிரண்டு, பேரணி நடத்தி, பிரச்சாரம் செய்கின்றனர் என்ற செவிகுளிரும் செய்திகள்!

பட்டுக்கோட்டையில் நான் கண்ட எழுச்சி தொடரட்டும்! தொடரும்!

பல்வேறு திசைகளிலும் அணிவகுத்து அண்ணாவின் வழியில் அயராது உழைக்கும் இளைய அடலேறுகளின் பணியும் சிறந்தோங்கட்டும்! சிறந்தோங்கும்!

அவர்களுக்கு வாழ்த்துக் கூறி, அறிவுரை வழங்கி பக்கபலமாக இருக்கும் கழகம் காத்திடும் மூத்தோர் தொண்டும், நாளும் பெருகட்டும்! பெருகும்!

"வீழ்ந்த தமிழகம் வீறு கொண்டு எழட்டும்!
எழுந்திடும்! எழுந்தே தீரும்!"

அன்புள்ள,

மு. கருணாநிதி

26-12-1992

1994. மாநில அரசு கலைப்பா?
மக்கள் சக்தி காட்டும் வெறுப்பா?

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. கட்சியைப் போல ஒரு கட்சியையும் பார்க்க முடியாது - அந்தக் கட்சியின் முதலமைச்சரைப் போல இன்னொரு முதலமைச்சரையும் பார்க்க முடியாது!

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், இமாசல பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்கள் கலைக்கப்பட்டபோது அடுத்த நாளே தி.மு.கழக சார்பில் நானும், தொடர்ந்து தெலுங்கு தேசக் கட்சி சார்பில் என்.டி.ஆர். அவர்களும், அதைப் போல அகாலித் தளத் தலைவர்களில் ஒருவரான சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களும் அரசியல் சட்டப் பிரிவு 356 ஐ இப்படி முறைகேடாகப் பயன்படுத்துவது தவறு என்று எதிர்ப்புக் குரல் கொடுத்து கண்டனங்களைத் தெரிவித்துள்ளோம். அந்த மாநில அரசுகள் கலைக்கப்பட்டவுடனேயே எதிர்த்தும், ஆதரித்தும் இந்தியாவில் உள்ள எல்லாக் கட்சிகளும் தங்கள் கருத்துகளை தெரிவித்துள்ளன.

ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிட்சத் போன்ற மதவெறி அமைப்புகள் தடை செய்யப்பட்டதைப் பற்றியோ, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம் ஆகிய மூன்று மாநில அரசுகளைக் கலைத்ததைப் பற்றியோ இந்தியத் திருநாட்டிலேயே, சாதகமாகவோ, பாதகமாகவோ வாய் திறக்காமல் இருந்த ஒரே கட்சி அ.தி.மு.க.தான்! ஒரே முதல்வர் ஜெயலலிதாதான்!

ஆனால், எல்லாம் ஓய்ந்து பனிரெண்டு நாட்கள் கழித்து - இப்போது மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசுக்கும் அ.தி.மு.க.வுக்கும் மனக் கசப்பும், காழ்ப்பும் முற்றி விட்ட நிலையில் சாவகாசமாக அ.தி.மு.க. கட்சிப் பொதுக் குழுவில் 356-வது பிரிவின் மீது

கடுமையான யுத்தம் தொடுத்துள்ளது மட்டுமல்ல. மூன்று மாநில அரசுகளை கடந்த 15-ந் தேதி கலைத்தது தவறு என்றும் கண்டனக் குரல் எழுப்பப்பட்டிருக்கிறது.

356-வது பிரிவைப் பயன்படுத்திக் கழக ஆட்சியைக் கலைக்கச் சொல்லி ராஜீவ் காந்தியை வளைய வளைய வந்து - அவர் சந்திரசேகருக்குக் கட்டளை பிறப்பித்து - அந்த ஜனநாயகக் கொலைக்கு உடந்தையாக இருக்க மாட்டேன் என்று பர்னாலா மறுத்த பிறகும் - அன்றைய குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் அவர்களைக் கையெழுத்துப் போட வைக்கிற வரையில் - ஆடாத ஆட்டமெல்லாம் ஆடித் தீர்த்து, கழக ஆட்சி கலைக்கப்பட்டபிறகே அப்பாடா என்று ஆனந்தப் பெருமூச்சு விட்ட அம்மணிதான் ஜெயலலிதா!

அவர்தான் இன்று 356-ஐ மத்திய அரசு பயன்படுத்தியதைக் கண்டித்துக் காரசாரமாகத் தீர்மானம் போடுகிறார்.

காலங் கடந்த ஞானோதயம் எனினும், எப்போதாவது - தனக்கு வந்தால்தான் தலைவலியின் வேதனை தெரியும் என்ற பழமொழிக்கொப்ப - ஜெயலலிதா 356-ன் மீது கண்டனம் பொழிந்திருப்பதைக் கழகம் வரவேற்கிறது.

எந்தக் காலத்திலும் - எந்த நிலையிலும் யாருடைய ஆட்சியாக இருந்தாலும், தி.மு. கழகத்தைப் பொறுத்தவரையில் மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்க உடன்பட்டதே இல்லை.

ஜனதா ஆட்சி டெல்லியில் நடைபெற்றபோது, அந்த ஜனதாக் கட்சியுடன் தோழமை கொண்டிருந்த தி.மு.கழகச் சார்பில் மாநிலங்களவையில் 356-வது பிரிவை அகற்ற வேண்டுமென்று ஒரு திருத்தம் முன்மொழியப்பட்டது! வேடிக்கை என்னவென்றால் அந்த திருத்தத்தை வேண்டாமென்று எதிர்த்து வாக்களித்ததே அ.தி.மு.க. கட்சி என்பதுதான்!

அவ்வளவு ஏன்? 1974 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முதலாக, தமிழகச் சட்டமன்றத்தில் கழக ஆட்சியில் மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது, தி.மு.க. மாநிலத்தை ஆளும்போது இந்தச் சமயம் மாநில சுயாட்சி தரக் கூடாது என்று ஒரு மூத்த சட்டமன்ற அ.தி.மு.க. உறுப்பினர் பேசினார்.

அப்போது நான் குறுக்கிட்டு பரவாயில்லை - உங்களைப் போல நான் சொல்ல மாட்டேன். எதிர்காலத்தில் தமிழகத்தில்

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்து, அப்போது அந்த ஆட்சியில் மாநில சுயாட்சி கேட்டால், அதை தி.மு.க. ஆதரிக்கும் என்று பதில் அளித்தேன்.

அதைப் போலவே, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது எதிர்க்கட்சித் தலைவனாக இருந்த நான், எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர்., ஹெக்டே, புதுவை டி.ஆர். ஆகிய நான்கு முதல்வர்கள் பெங்களூரில் கூடி மாநில உரிமைகளுக்கானத் தீர்மானம் நிறைவேற்றியதைப் பாராட்டி சட்டமன்றத்தில் பேசினேன். அரசியல் சட்டம் 356-வது பிரிவுக்கு பலியாகாத கட்சிகளே இல்லை -தி.மு.க., அ.தி.மு.க., கம்யூனிஸ்டு, ஜனதா, காங்கிரஸ் ஆகிய எல்லாக் கட்சிகளும் பலியாகியுள்ளன என விளக்கி நான் பேரவையில் ஆற்றிய உரை "**தொடங்கினோம் தொடர்வோம்**" என்று தமிழிலும், நான் ஆற்றிய அந்த உரை நமது நாஞ்சிலார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு "The Need of the Hour" என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும் புத்தகங்களாக வெளி வந்துள்ளன. அப்போது அரசியல் அரங்கிலேயே அடியெடுத்து வைக்காதவர்கள் அதனைப் படித்துப்பார்த்து உண்மை உணரலாம்.

356-வது பிரிவினாலோ, அல்லது மத்திய அரசின் அதிகாரக் குவிப்பினாலோ - எந்தக் கட்சியின் ஆட்சி நடக்கிற மாநிலமானாலும் அதன் உரிமைகள் பறிக்கப்படுவதை தி.மு.க. என்றைக்கும் ஆதரித்ததில்லை.

அப்படியானால், வி.பி.சிங் தலைமையில் தேசிய முன்னணி ஆட்சி நடந்த போது - அந்த 356-ஐ அகற்றியும், மாநில அதிகாரங்களை விரிவுபடுத்தியும் ஏன் அரசியல் சட்ட திருத்தம் செய்யவில்லை - அப்போது ஏன் கருணாநிதி குரல் கொடுக்கவில்லை?

இப்படிச்சிலர், தங்களை அறிவு ஜீவிகள் எனக் கருதிக் கொண்டிருக்கும் நண்பர்கள் கேட்கிறார்கள், பேசுகிறார்கள்.

அரசியல் சட்டத்தில் எந்தவொரு திருத்தம் செய்வதாக இருந்தாலும் - நாடாளுமன்றத்தில் அதற்கெனக் கணிசமான அளவு வாக்குகள் ஆதரவாகக் கிடைத்தாகவேண்டும். ஆனால், தேசிய முன்னணி ஆட்சியில் அதற்கு நாடாளுமன்றத்தில் அந்தப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று அரசியல் சட்டத்தில் அத்தகைய திருத்தம் கொண்டு வரப்போதுமான உறுப்பினர்கள் இல்லை.

அறிஞர் அண்ணா, மறைவதற்கு முன்பு கடைசியாக எழுதிய அண்ணாவின் உயில் எனப் போற்றப்படும் அந்தக் கடிதக் கட்டுரையில் என்ன சொல்லியிருக்கிறார்? மத்தியில் குவிந்திருக்கும் அதிகாரங்களைப் பரவலாக்கி, மாநில உரிமைகளை நிலைநாட்ட, நமது கருத்துகளை மக்களுக்கு விளக்கி, அவர்களின் பெரும்பாலான ஆதரவைப்பெற முயற்சி மேற்கொண்டிடுக தம்பி! என்றுதான் எழுதியிருக்கிறார்.

அந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிதான், மாநில உரிமைகளுக்காக கழக ஆட்சியில் நான் முதல்வர் பொறுப்பு ஏற்றபோது அமைக்கப்பட்ட ராஜமன்னார், லட்சுமணசாமி முதலியார், சந்திராரெட்டி ஆகிய அரசியல் மேதைகளைக் கொண்டகுழு! அந்தக் குழுவின் அறிக்கையை ஆய்ந்து கருத்தறிவிக்க மாறன், செழியன் குழு!

அந்தக் குழுக்களின் கருத்து பற்றி கழக அமைச்சரவையில் ஆலோசனை - மாநில சுயாட்சித் தீர்மான வடிவமைப்பு! பின்னர் 1974-ல் சட்டமன்றத்தில் மாநில சுயாட்சி தீர்மானம்!

ஒரு சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டு விடுவதாலோ - ஒரு மாநிலத்தில் அதற்காகக் குரல் கொடுத்து விடுவதாலோ - குறிக்கோளில் வெற்றி கிடைக்காது என்பதால்தான், அடுத்தடுத்தக் கட்டங்களாக பல மாநில முதல்வர்களுடன் கலந்துரையாடியும், மேலும் ஒரு திருப்பமாக தேசியமுன்னணியிலேயே வலியுறுத்தியும், இன்றைக்கு நாடு முழுதும் மாநில உரிமைகளுக்கான குரல் ஒலித்துக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

தி.மு.க.வில் இருந்தபோது மாநில சுயாட்சிக்காக இராணுவத்தை சந்திப்பேன் என்று மதுரை மாநாட்டில் முழங்கிய எம்.ஜி.ஆர். அவர்கள், அடுத்த மாதமே சில நெருக்கடி களுக்காளாகி புதுக் கட்சி தொடங்கி, மாநில சுயாட்சிக்கு எதிராகக் குரல் கொடுத்தார் என்பது வரலாறு!

பிறகு அவர் 1977-ல் ஆட்சிக்கு வந்தும்கூட, சில ஆண்டுகள் வரையில் மாநில சுயாட்சிக்கு எதிராகவே பேசி வந்தார். அதற்குப் பிறகு 1980 - ஆம் ஆண்டு வாக்கில்தான், மாநில சுயாட்சியை ஓரளவு ஒப்புக் கொண்டார். அவரது ஆட்சியின் இறுதிக் காலங்களில் நிதி அமைச்சர் நாவலர் படித்த நிதிநிலை அறிக்கைகளில் மாநில சுயாட்சி State Autonomy என்ற சொற்றொடர் இடம் பெற்றது.

பேரவையிலேயே அந்தக் கருத்துக்களை வரவேற்று, அ.தி.மு.க. அரசையும், நிதி அமைச்சரையும் பாராட்டிப் பேசியிருக்கிறேன்.

தலைவலியும், காய்ச்சலும் தனக்கு வந்தால் தான் என்றில்லாமல் யாருக்கு வந்தாலும், அதற்காகக் கவலைப்படும் கழகம் என்பதை எல்லா நேரங்களிலும் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம்.

அதேசமயம் 356 இருக்கிற வரையில், அதைப் பயன்படுத்துகிற வாய்ப்புள்ள எந்த மத்திய அரசானாலும் - உத்திர பிரதேச மாநிலம் கலைக்கப்பட்ட போது அது சரிதான்! வேறு வழியில்லை! இருந்தாலும், குதிரை காணாமல் போன பிறகு லாயத்தைப் பூட்டுகிற கதை! என்று பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்களே! அதைப் போல மத்திய அரசுகள் எல்லாச் சமயங்களிலும், எல்லா நேர்வுகளிலும் செயல்பட்டிருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் விடை கிடைக்கிறது.

356-ஐ பயன்படுத்த வேண்டாமென்கிறார். சரி! ஆனால் மாநில அரசுகள், அளவுக்கு மீறி அராஜகத்திலும், ஊழலிலும் திளைத்து, சட்டம் ஒழுங்கு கெடும் வகையில் நடந்து கொண்டால் என்னதான் செய்வது?

இப்படி ஒரு கேள்வி எழும் - நியாயமான கேள்விதான்!

அதற்கு இந்த தமிழ்மாநிலத்தையே உதாரணமாக எடுத்துக் கொள்ளலாமே - நூறு கோடி ரூபாய் ஜெயலலிதா ஊழல் - என்று ஆதாரங்களுடன் பட்டியல் போட்டு, ஜெயலலிதா மீதும் மற்றும் சம்பந்தப்பட்டோர் மீது வழக்கு போட கவர்னரிடம் அனுமதி கேட்டோமே! அனுமதி கொடுத்து அந்த வழக்கு நடை பெறட்டுமே! குற்றம் நிரூபிக்கப்பட்டால் அதற்குப் பொறுப்பேற்று சம்பந்தபட்டவர்கள் பதவி விலகட்டுமே - மறுத்தால், மக்கள்மன்றம் விட்டுவிடுமா?

ஜெயலலிதாமீதும், அமைச்சர்கள் மீதும் கொடுத்த குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமில்லை என்கிறார் வர்மா கமிஷன் புகழ் பீஷ்ம நாராயண்சிங்!

ஜெயா பப்ளிகேஷன்ஸ் பங்குதாரராக நான் இருக்கிறேன் என்று ஜெயலலிதாவே ஒப்புக் கொண்டுள்ளாரே! அது ஆதாரமில்லையா?

முதலமைச்சர் அரசுநிலத்தை வாங்கியிருக்கிறாரே! அது சட்டமீறல் என்பதற்கான ஆதாரமில்லையா?

டெண்டர் விடாமல் பல கோடி ரூபாய் பணிகள் தனியார்களுக்கு தரப்பட்டதை, சட்டமன்றத்தில் அமைச்சர்களே ஒப்புக் கொண்டுள்ளார்களே! அவை ஆதாரங்கள் இல்லையா?

இதோ! இப்போது நடந்த அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் பேசிய முதல்வர் ஜெயலலிதா என்ன பேசியிருக்கிறார்? முரசொலியோ, தினகரனோ வெளியிட்டதல்ல. ஜெயலலிதாவை ஆதரிக்கும் தினமணி ஏட்டில் வந்துள்ளது. அதை அப்படியே தருகிறேன். ஆதாரம் வேண்டும் என்கிற ஆஷாடபூதிகள் படித்துப் பார்க்கட்டும்.

> அரசு காண்ட்ராக்டுகளை மாவட்டச் செயலாளர்கள் பெறும்போது, அவர்களுக்குக் கீழே உள்ள கட்சி நிர்வாகிகளுக்கும்.
>
> ஒன்றிய - நகரச் செயலாளர்கள் காண்ட்ராக்டுகளைப் பெறும் போது, அவர்களுக்குக் கீழே உள்ள நிர்வாகிகளுக்கும் அளித்து பகிர்ந்து கொள்ள வேண்டும் என ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இது 27.12.92 தினமணியில் வெளிவந்துள்ள ஜெயலலிதாவின் பேச்சு! முதல்வர் ஜெயலலிதாவின் பேச்சு! இதுதான் இங்கே முக்கியம்!

கட்சிக்காரர்களுக்கு காண்ட்ராக்டுகள் தரவும், அந்த வருமானத்தைக் கட்சி நிர்வாகிகள் பகிர்ந்து கொள்ளவும் கலெக்டர்கள் கடமை ஆற்றுகிறார்கள் இந்த ஆட்சியில்! இதனை முதலமைச்சரே கூறியிருக்கிறார்.

இப்போது சொல்லட்டும்! கவர்னர் பீஷ்ம நாராயணன் சிங்கும், அவருக்கு பின்பாட்டுப் பாடுவோரும் - ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல முதல்வர் ஜெயலலிதாவின் இந்தப் பேச்சு ஒன்று போதாதா? மக்கள் மன்றம் இந்த ஆட்சியின் ஊழலைப் பற்றி உணர்ந்திட!

ஆட்சி கலைக்கப்பட வேண்டாம் - ஆனால் ஆட்சி களங்கமில்லாதது என்பதை நிரூபித்துக் காட்ட, ஜெயலலிதா முன்வர வேண்டாமா? அதற்கு ஒரே வழி, தி.மு.க. சார்பில் கவர்னரிடம் அளிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் வழக்கு தொடர ஆளுநர் அனுமதி அளித்திடுவது தான்!

ஊழல் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், உடனடியாக பதவி விலகட்டும் - விலக மறுத்தால் பிறகு இருக்கவே இருக்கிறது, ஜனநாயக ரீதியில் எதிரொலிக்கும் மக்களின் சக்தி!

அன்புள்ள,

மு. கருணாநிதி

28-12-1992

1995. இராம பாணத்தை பிரயோகிக்கலாமா?

உடன்பிறப்பே,

பாரதிய ஜனதாவுடன் மத்திய காங்கிரஸ் அரசுக்கு ஏதோ ஒரு மறைமுகமான இரகசிய உறவு இழையோடிக் கொண்டிருக்கிறது என்றும், அதனால்தான், நான் அடிப்பதுபோல் அடிக்கிறேன்! நீ அழுவதுபோல் அழு எனப் பேசி வைத்துக்கொண்டது மாதிரி டிசம்பர் 6-ந் தேதி இந்திய நாட்டுக் கறுப்பு நாள் நிகழ்ச்சி நடந்தேறியிருக்கிறது என்றும் சென்னையில் டிசம்பர் 7-ந் தேதி மாணிக்கம் செட்டித் தெருவில் நடைபெற்ற கூட்டத்தில் நான் குறிப்பிட்டேன்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது ஏழு கிலோ மீட்டர் தூரத்தில் பைசாபாத்தில் இராணுவத்தை நிறுத்திவைத்து வேடிக்கை பார்க்கச் செய்த மத்திய அரசு - குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அவர்கள், மிகுந்த பதற்றத்துடன் மத்திய காங்கிரஸ் அரசுக்கு விரைந்து செயல்பட அறிவுரை கூறியும் கூட, தாமதமாகவே செயல்பட்ட மத்திய அரசு - ஆணைகளை எதிர்பார்த்து அதிகாரிகள் காத்திருந்தும் கூட, அளவுக்கு மீறிய காலதாமதத்துடன் தூங்கி வழிந்த மத்திய அரசு - மதவெறியர்களின் மனம் போல எல்லாம் நடந்து முடிந்த பிறகு, அடடா! ஏமாந்து விட்டோம் என்று புலம்பல்பாட்டு பாடி, கண்துடைப்புக் காரியங்களாகச் சில நடவடிக்கைகளை எடுத்துவிட்டு - நாட்டு மக்களை, குறிப்பாகச் சிறுபான்மை மக்களை மன ஆறுதல் கொள்ளச் செய்து விட்டதாக மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறது.

பாபர் மசூதி தகர்க்கப்பட்டதில் பாரதிய ஜனதாவுக்கும் அதன் துணை அமைப்புகளுக்கும் எவ்வளவு பொறுப்பு உண்டோ, அவ்வளவு பொறுப்பு - பிரதமர் நரசிம்மராவுக்கும் உண்டு என்பதே அன்றுமுதல் நாம் கூறி வருகிற கருத்தாகும்.

ஆனால் தி.மு.க.வுக்கும் மேலாக ஒருபடி உயரப் போய், நரசிம்மராவ் அவர்கள் பதவி விலக வேண்டும் என்று சில கட்சிகளின் தலைவர்கள் - முக்கியமாக சிறுபான்மை சமூகத்தின் ஓரிரு தலைவர்கள் முழங்கினார்கள் எனினும், அடுத்து சில நாட்களில் அந்தக் கோரிக்கையைக் கைவிட்டு மத்திய காங்கிரஸ் அரசுடன் கைகோத்துக்கொண்டு மதச்சார்பற்ற தன்மையை நிலைப்படுத்த முடியும் என்று எண்ணி, அதற்கேற்ப கருத்துகளையும் வெளியிட்டனர்.

அவர்களையும் திகைப்படையச் செய்கிற அளவுக்கு, அயோத்திப் பிரச்சினை தொடர்பான நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்பு அங்கு வைக்கப்பட்டிருந்த இராமர் சிலையை, கரசேவகர்கள் அப்புறப்படுத்தி விட்டு அதன் பிறகே இடித்தனர்.

மசூதியை இடிப்பதற்கு ஒருமாத காலம் கரசேவகர்களுக்கு கோடரி, கடப்பாரை, மண்வெட்டி, ஈட்டி, சூலம் போன்ற கருவிகளைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இடித்து முடிகிற வரையில் வராத இராணுவம், இடித்து முடிந்தபிறகு அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தது.

டிசம்பர் 6-ந் தேதி பாபர் மசூதி தரை மட்டமாக்கப்பட்டதென்றால், முன்னிலையில் ஒரு சிறிய தற்காலிக சுற்றடைப்புக்குள் இராமர் சிலையை மீண்டும் கொண்டு வந்து வைத்து கரசேவகர்கள் களிப்புக் கூத்தாடுகின்றனர்.

இந்த அழகில் 8-ந் தேதியன்று லட்சக்கணக்கான கரசேவகர்களை இராணுவம் ஓரிரு மணி நேரத்தில் அங்கிருந்து அகற்றிவிட்டது என்று பெருமிதமாக வேறு பேசிக் கொள்ளப்படுகிறது.

அத்தகைய திறமை வாய்ந்த இராணுவம் மசூதியை இடிக்காமல், அந்தக் கரசேவகர்களை அப்புறப்படுத்த முடியவில்லை என்பதுதான் ஆச்சரியம்.

இப்போது இங்கே அந்த சிறிய அளவிலான இராமர் கோயில் மண்டபமும், அதற்குள் இராமர் சிலையும் - அதைத்தான்

இராமர்கோயில் என்றும் - இராமருக்கு பூசை என்றும், தரிசனம் என்றும் - பிரச்சாரம் நடத்தப்படுகிறது.

கோயில் என்றால் என்ன? அதற்குள் இருக்கிற விக்ரகம் எவ்வாறு அமைக்கப்படவேண்டும்? அந்த விக்ரகத்திற்கு பூசைகள், அர்ச்சனைகள் நடத்துவதற்கு எப்படியெல்லாம் ஆகம விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற விபரங்களை; ஏற்கெனவே கழக அரசு, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் எனச் சட்டம் செய்து, அதனைச் சிலர் எதிர்த்து நடைபெற்ற வழக்கின்போது உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

அந்த இலக்கணங்கள் எதுவுமின்றியே, பழங்கால முதல் இருந்த பாபர் மசூதியில் இராமர் சிலையைக் கொண்டு போய் வைத்து, இப்போது அந்த மசூதியையும் இடித்துவிட்டு - இடிப்பதற்கு முன்பாக எடுத்துப்போன இராமர் சிலையை மீண்டும் வைத்து, இதுதான் கோயில் என்றால் இதனை அரசியல் ஆகமம் ஒத்துக்கொள்ளலாம். ஆத்திக ஆகமம் ஒத்துக் கொள்வதாக உச்சநீதிமன்றம் ஒப்புதல் தருமா?

திடீரென்று இன்று பத்திரிகைகளில் செய்தி பார்த்தால் -

"அயோத்தியில் பிரச்சினைக்குரிய இடங்கள் எல்லாவற்றையும் மத்திய அரசு கையகப்படுத்திக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்டு, பாபர் மசூதி இருந்த இடத்தில் முன்னொரு காலத்தில் இராமர் கோயில் இருந்ததா என்பது குறித்து சுப்ரீம் கோர்ட்டின் கருத்தை அறிவது எனவும் மத்திய அரசு தீர்மானித்திருக்கிறது. இதற்கென அவசரச் சட்டம் ஒன்றும் பிறப்பிக்கப்படும்."

பரவாயில்லை! இராமன் பிறந்த இடம் இதுதான் என்று சுப்ரீம் கோர்ட்டின் கருத்தைக் கேட்கும் நிலைமை மாறி, இராமர் கோயில் இருந்த இடம் இதுதானா? என்று அறிந்து கொள்ள சுப்ரீம் கோர்ட்டின் துணையை நாடுகிறார்கள்.

அதே நேரத்தில் ஒரு முரண்பாடு - சர்ச்சைக்குரிய பகுதிகளையெல்லாம் மத்திய அரசு வசப்படுத்திக்கொண்டு - இரு அறக்கட்டளைகளை உருவாக்கி, ஒரு அறக்கட்டளை இராமர்கோயிலைக் கட்டும் - மற்றொரு அறக்கட்டளை பாபர் மசூதியைக் கட்டும் என்றும் முடிவு செய்திருப்பதாக அறிவிக்கிறது மத்திய காங்கிரஸ் அரசு!

அதே நேரத்தில் மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் நடைபெறும் உத்திரபிரதேச மாநிலத்தின் பைசாபாத் மாவட்ட நிர்வாகம் பாபர் மசூதி இடிக்கப்பட்டுக் குவிந்துள்ள மண்மேட்டின் மீது அமைந்துள்ள தற்காலிக இராமர் கோயில் எனும் தகரக் கொட்டகையில் பக்தர்கள் சென்று தரிசனம், பூஜைகள் செய்ய அனுமதிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

இது எவ்வளவு பெரிய முரண்பாடு! - அதுமட்டுமல்ல! அந்த இடத்தில் தரிசனம், பூஜைகளுக்கு அனுமதிக்கலாமா என்பது பற்றிய வழக்கு அலகாபாத் உயர்நீதிமன்றத்தை சார்ந்த லக்னோ நீதிமன்றத்தில் நடைபெற்று, அது குறித்த தீர்ப்பு இன்று 28.12.92 வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில்; அந்தத் தீர்ப்பை எதிர்பாராமலே - முன்கூட்டியே, மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தில் உள்ள பைசாபாத் மாவட்ட நிர்வாகம், அந்தக் கோயிலுக்குச் சென்று வழி படலாமென பக்தர்களுக்கு வழிவிட்டது எப்படி சரியாகும்?

ஏதோ, நாட்டில் இராம பக்தர்கள் வழிபடவும், தரிசிக்கவும், வரம் கேட்கவும் இராமர் கோயில்களே இல்லாதது போலவும் - அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட மண்மேட்டின் மீதுதான் ஒரே ஒரு இராமர் கோயில் இருப்பது போலவும் - பைசாபாத் மாவட்டத்தின் அரசு நிர்வாகம் இப்படி ஒரு அவசர முடிவு எடுப்பானேன்?

அப்படியானால், அந்த மாவட்ட நிர்வாகம் மத்திய அரசுக்கு கட்டுப்பட்டதல்லவா?

கட்டுப்பட்டது என்றால், மத்திய அரசு சொல்லித்தானே அப்படி ஒரு அனுமதியை அது வழங்கியிருக்க வேண்டும்?

சர்ச்சைக்குரிய எல்லா பகுதிகளையும் மத்திய அரசு ஏற்கும் - இப்படியொரு அறிவிப்பு!

மசூதி எழுப்ப ஒரு அறக்கட்டளை - கோயில் கட்ட ஒரு அறக்கட்டளை - இப்படியொரு அறிவிப்பு!

இவை அவசரச் சட்டமாக வருமென்று கூறிக் கொண்டே, ஆகமவிதிக்கு மாறாக - அயோத்தியிலே இராமர் கோயில். அதனை அங்கீகாரம் செய்து பக்தர்களுக்கு வழிபட அனுமதி!

இராமருக்கு அயோத்தியிலே கோயில் தகராறு இல்லாத இடத்தில், புதிதாகக் கட்டட்டும் - அவரை வணங்க பக்தர்களை அனுமதிக்கட்டும் - ஆனால் இத்தனை பிரச்சினைக்குப் பிறகு,

புண்பட்டுக் கிடக்கும் ஒரு பகுதி மக்களின் மனத்தில் வெந்த புண்ணிலே வேல் என்பது போல, இப்படியொரு முரண்பாடான செய்கையின் மூலம் இராம பாணத்தை பிரயோகிக்கலாமா என்பதுதான் என் கேள்வி!

இந்தக் கேள்விக்குக் கிடைக்கும் விடைதான், பாரதிய ஜனதாவுக்கும், மத்திய காங்கிரஸ் அரசுக்கும் இடையே உறவு இழையோடிக் கொண்டிருக்கிறது என்பதாகும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

29-12-1992

1996. பழிபோடும் ஜெயலலிதாவுக்கு பத்திரிகைகளின் பதில் என்ன?

உடன்பிறப்பே,

அண்டப்புளுகன் - ஆகாசப்புளுகன் - அசகாயப் புளுகன் என்றெல்லாம் அவரவர் திறமைக்குரிய பட்டங்களுடன் புளுகர்கள் உண்டு, இந்தப் புவி மீது!

இந்த அண்டத்தை உருவாக்கியது நான்தான்! என்றான் அண்டப் புளுகன்!

இதை ஆகாயத்தில் தொங்கவிட்டது நான்தான்! என்றான் ஆகாசப்புளுகன்!

அந்த இருவேலைகளையும் செய்யச் சொல்லி இவர்கள் இருவருக்கும் ஆணையிட்டது நான்தான்! என்றான் அசகாயப் புளுகன்!

இன்று மூன்று எமகாதப் புளுகர்களும் தமிழக முதலமைச்சரின் புளுகுகளுக்கு நேராகத் தூசுகூடப் பெறமாட்டார்கள்! ஏ, அப்பா - அவர் அரசியலில் அடியெடுத்து வைத்து ஏறத்தாழ பத்தாண்டு காலத்தில் என்னென்ன வண்ண வண்ணப் புளுகுகளை யெல்லாம் 35 எம்.எம். திரையிலும், 70 எம்.எம். திரையிலும் வெளியிட்டிருக்கிறார் என்பதை இந்த நாடு நன்றாகவே அறியும்.

அடிப்படையற்ற புளுகுகள்!

அதிபயங்கர புளுகுகள்!

விரசமான புளுகுகள்!

இவற்றை விரிக்கிற் பெருகும் - அவ்வப்போது விளக்கங்கள் தரப்பட்டுள்ள காரணத்தால், இனி எப்போதாவது தேவைப்பட்டால் மட்டுமே அந்தப் புளுகு மூட்டைகளை மக்கள் மன்றத்தில் அவிழ்த்து வைக்கலாம் என்று கருதுவதால், இப்போது - அவர்,

இதுவரையில் புளுகியவை அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல் ஓர் அறிக்கைப் புளுகை உதறி விட்டிருக்கிறார். அதுபற்றி கவனிப்போம்!

அ.தி.மு.க. பொதுக்குழு சென்னை மாநகரில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. இரு நாட்களும் ஜெயலலிதா உட்பட எல்லா அ.தி.மு.க. அமைச்சர்களும், பிரமுகர்களும் காங்கிரசையும், பிரதமரையும் காரசாரமாகத் தாக்கிப் பேசினர். காங்கிரசுடன் கூட்டணி இருக்கும் நிலையிலேயே,

> இனி காங்கிரசுடன் கூட்டணி உண்டா? இல்லையா? என்பதை முடிவு செய்து அறிவிக்கும் அதிகாரம் ஜெயலலிதாவுக்கு வழங்கப்படுகிறது.

என்றும் பொதுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

அந்தக் குழு கூட்டத்தில் காங்கிரசுக்கும், அதன் மேலிடத் தலைவருக்கும் நடந்த அர்ச்சனைகளுக்குப் பிறகும் வாயை மூடிக் கொண்டிருக்க முடியாமல் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடியார், வழக்கத்துக்கு விரோதமாக, சற்றுக் கடுமையாகப் பதில் அளித்து அறிக்கைவிடுத்தார். மற்றொரு குழுவைச் சேர்ந்த நண்பர் திண்டிவனம் இராமமூர்த்தியும், நண்பர் குமரிஅனந்தனும் அ.தி.மு.க. பொதுக்குழுவில் ஜெயலலிதா உள்ளிட்ட அனைவரும் காங்கிரசைக் குறித்துக் கடுமையாக விமர்சித்ததைக் கண்டனம் செய்து அறிக்கை விடுத்தனர்.

அடுத்து, குமரிமுனையில் நடந்த விவேகானந்தர் விழாவில் பிரதமர் செல்லும் வழியில் அ.தி.மு.க.வினர் ஒழிக முழக்கம் செய்தனர் என்றும், பிரதமர் பேசும்போது எதிர்ப்புக் கூச்சல்கள் எழுப்பினர் என்றும், ஏடுகளில் செய்திகள் வந்துள்ளன.

இவற்றினூடே இன்று ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையும் ஏடுகளில் காணப்படுகின்றது.

> அ.தி.மு.க. பொதுக்குழுவில் நடந்த விவாதங்கள் பற்றி பத்திரிகைகளில் வெளியான தகவல்கள் ஆதாரமற்றவை. ஒரு பொதுக்குழு விவாதங்களை ஒட்டுகேட்கும்போது அவை அவர்கள் காதுகளில் தெளிவாக விழுந்திருக்காது. அதனால் அச்செய்திகள் ஆதாரமானதாக இருக்க முடியாது.

இப்படி ஜெயலலிதா இன்று அறிக்கை விட்டுள்ளார்! ஆனால் அ.தி.மு.க. பொதுக்குழுச் செய்திகளை தமிழ் நாட்டில் உள்ள எல்லா ஏடுகளுமே வெளியிட்டுள்ளன. வானொலி, தொலைக்காட்சிகளும் அறிவித்துள்ளன.

எந்த ஏடுகள்?

எந்த வானொலி?

எந்த தொலைக்காட்சி?

எதிர்க்கட்சிகளிடம் வானொலி சாதனமோ, தொலைக்காட்சி சாதனமோ இல்லை! ஒரு வேளை காங்கிரசுடன் அ.தி.மு.க.வின் கசப்பு வளர்வதால், அந்தச் சாதனங்கள் உள்நோக்கத்துடன் ஆதாரமற்ற செய்திகளை வெளியிட்டதாகக் கூறக் கூடும்!

ஆனால், அ.தி.மு.க.வின் அதிகாரபூர்வமான ஏடு போலவே திகழும் மக்கள் குரல், அ.தி.மு.க. பொதுக்குழு விவாதத்திற்கு என்ன தலைப்பு தந்து வெளியிட்டது?

குட்டக் குட்ட குனியமாட்டோம். தோழமை என்று கூறி முதுகில் குத்தினால்... காங்கிரசுக்கு ஜெயலலிதா எச்சரிக்கை!

மக்கள் குரல் - 27.12.92

ஜெயலலிதா அரசுக்கு ஒரு வழுக்கல் ஏற்பட்டு விடக்கூடாது என்று எச்சரிப்பதில் கவனமாக இருக்கிற ஏடுகளில் ஒன்றான தினமலர் எப்படிச் செய்தி வெளியிட்டது அந்தப் பொதுக்குழு குறித்து?

காங்கிரஸ் உறவு தொடருமா? அ.தி.மு.க. பொதுக் குழுவில் அனல் பறக்கிறது.

தினமலர் - 27.12.92

ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வின் ஆபத்பாந்தவனாகத் திகழும் தினத்தந்தி பொதுக்குழுவின் செய்திக்கு எப்படி தலைப்பு தந்தது?

இ. காங்கிரசுக்கு ஜெயலலிதா எச்சரிக்கை! முதுகில் குத்தினால் கூட்டு முறியும்.

தினத்தந்தி - 27.12.92

ஜெயா அரசு செயல்படும் விதம் தவறு எனத் தெரிந்தாலும், விட்டுக் கொடுக்காமல் விட்டதில்

ஏற்றி வைக்கவே வியாசங்களை எழுதும் தினமணி இதழ் எவ்வாறு செய்தி வெளியிட்டது?

காங்கிரசுடன் உறவு முறிந்தால் கவலையில்லை - ஜெயலலிதா பேச்சு.

தினமணி - 27.12.92

ஆயிரம் தவறு நடப்பினும் அம்மா ஆட்சியே சிலாக்கியம் என ஆத்ம திருப்தியடையும் எக்ஸ்பிரஸ் ஏடு அந்தப் பொதுக்குழு பற்றி வெளியிட்ட தலைப்புச் செய்தியும் - உள் செய்தியும் என்ன?

Behave or lose ally Jaya Warns Congress

"In a strongly worded speech Jayalalitha said, If you Congress want to go your own way, you are welcome to do so. We've no objection

India Express - 27.12.92

வாராது மாமணி போல் வந்த ராஜ்ய பரிபாலனத்தை ஆபத்துக்கு பாபமில்லை என்ற நிலையில் தோஷம் பார்க்காமல் வரிந்து கட்டிக்கொண்டு அம்மணியின் ஆட்சியை ஆதரிப்பதே ஜென்ம சாபல்யம் எனக் கருதிடும் இந்து ஏடு, அந்தப் பொதுக்குழு பற்றி வெளியிட்ட தலைப்பு என்ன? பிரசுரித்த செய்தி என்ன?

Cong, welcome to go alone Jayalalitha

"If the Congress I thought that electoral alliance was just one way path, the ADMK did not mind the Congress I chalking out its path, declared the C.M. and ADMK General Secy. Jayalalitha

The Hndu - 27.12.92

உடன்பிறப்பே, இத்தனை ஏடுகளை உதாரணம் காட்டியபோது முரசொலி, தினகரன், மாலைமுரசு ஆகிய ஏடுகளை விட்டு விட்டேன்! ஏனென்றால், தொலைவில் நின்று அ.தி.மு.க. பொதுக்குழு விவாதங்களையும், ஜெயலலிதா பேச்சையும் ஒட்டுக்கேட்ட இந்த ஏடுகளின் நிருபர்கள் வேண்டுமென்றே மிகைப்படுத்தி, இட்டுக்கட்டிச் செய்திகளை வெளியிட்டு

விட்டார்கள் என்று அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீட்டில் அவதரித்த அம்மணி ஜெயலலிதா சொல்லிவிடக் கூடும்.

அதனால்தான் இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி, தினத்தந்தி, தினமலர், மக்கள்குரல் ஆகிய ஏடுகளுடன் நிறுத்திக் கொண்டேன்.

அதாவது ஜெயலலிதா இன்று வெளியிட்டுள்ள அறிக்கையின்படி இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி, தினத்தந்தி, தினமலர், மக்கள்குரல் ஏடுகள் நிருபர்கள் அனைவருக்கும் ஒன்று போலவே காதுகளில் தெளிவாகக் கேட்காத பேச்சுகளை, அந்த அப்பாவி நிருபர்கள் எழுதிக் கொடுக்க அவசரக்கார ஆசிரியர்கள் அவற்றை வெளியிட்டு விட்டார்கள். ஆம்! ஜெயலலிதா கூற்றுப்படி அவை ஆதாரமற்ற செய்திகள்! தெளிவாக விளங்கிக் கொள்ளாமல் வெளியிடப் பட்ட பேச்சுகள்!

தமிழகத்து ஏடுகள்தான் இப்படி என்றால், பெங்களூர், ஐதராபாத், பம்பாய், டெல்லி, கல்கத்தாவிலிருந்தெல்லாம் வெளி வருகிற ஆங்கில நாளேடுகள் அனைத்திலும் அ.தி.மு.க. பொதுக்குழுவில் பேசப்பட்ட கருத்துகளும், ஜெயலலிதாவின் கண்டனப் பேச்சும் தமிழகத்து ஏடுகளில் வெளிவந்துள்ளது போலவே - வரிக்கு வரி அப்படியே வந்துள்ளனவே! அது குறித்து ஜெயலலிதா என்ன சொல்லப் போகிறார்?

சரி! எல்லாம் போகட்டும் - அ.தி.மு.க.வின் அதிகாரபூர்வ ஏடாகவே இருப்பதும், பிரசித்தி பெற்ற, ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தில் அச்சிடப்படுவதுமான நமது எம்.ஜி.ஆர் ஏட்டின் நிருபரும், ஆசிரியரும் கூடவா ஜெயலலிதாவின் உரையை தொலைவில் இருந்து கேட்டு வெளியிட்டு விட்டார்கள்? இதோ அந்த நமது எம்.ஜி.ஆர். 28.12.92 இதழில் வந்துள்ள ஜெயலலிதாவின் பேச்சின் சில பகுதிகள்! ஆம்! அ.தி.மு.க. பொதுக் குழுவில் அவர் ஆற்றிய நிறைவுப் பேருரை :-

> "தோழமைக் கட்சியான நமது ஆட்சி நடக்கும் போது உதவி செய்யாவிட்டாலும், உபத்திரவம் செய்யாமலாவது உள்ளார்களா? இங்கே நடக்கும் பல்வேறு சில்லறைத்தனமான வேலைகள் எல்லாம், மத்தியில் உள்ள பெரிய தலைகளின் ஆசியோடுதான் நடைபெறுகின்றன என்பதற்கு, என்னிடம் ஆதாரங்கள் நிறைய உள்ளன."

நமது எம்.ஜி.ஆர். ஏடு, ஜெயலலிதா பேச்சை அத்துடன் நிறுத்தவில்லை - சுமார் மூன்று பக்கம் அவரது பேச்சை வெளியிட்டுள்ளது. அதில் மற்றொரு திரைத்துளி வருமாறு:-

"காங்கிரஸ் கட்சியின் பலம் என்னவென்பதை தேர்தலுக்கு தேர்தல் நாம் பார்த்து வருகிறோம். சொந்தக் காலில் நிற்போம் என்பவர்கள், தனியாக நின்ற போது, எத்தனை இடத்தில் டெபாசிட்டை பறிகொடுத்தார்கள் என்பது நமக்கு தெரியும். சொகுசு சவாரி என்று நான் சொன்னேனே, திராவிட இயக்கத்தின் மீது சுக சவாரி அரசியல் நடத்துகிறவர்கள் என்று - அப்படிப் பழகிப் போன காரணத்தால், காங்கிரசுக்கு வெறும் ஜம்பம் மட்டும் குறையாமல் அப்படியே உள்ளது. எனவே, காங்கிரஸ் தனியாகப் போய்விட்டால் எதுவும் ஆகிவிடுமென யாரும் கவலை கொள்ள வேண்டாம்."

உடன்பிறப்பே, மற்ற பத்திரிகைகள்தான், ஒட்டுக் கேட்டு தெளிவில்லாமல் ஜெயலலிதா பேச்சை வெளியிட்டு விட்டன! ஜெயலலிதாவின் கட்சிப் பத்திரிகையே அவரது பேச்சை ஒரு எழுத்துகூட மாறாமல் அப்படியே அச்சடித்துள்ளதே! அதுவும் முன்பே தயாரிக்கப்பட்ட பேச்சை! இதற்கு என்ன சமாதானம் அல்ல! அல்ல! மழுப்பல் சொல்லப் போகிறார் ஜெயலலிதா!

ஒரு வாரத்துக்கு முன்பு இப்படித்தான் இரண்டு அமைச்சர்கள், நரசிம்மராவின் தலைமை மாற வேண்டுமென்று கூறியதை எல்லா ஏடுகளும் வெளியிட்டன. இரண்டு நாள் கழித்து ஜெயலலிதா அந்த பத்திரிகைகளில் வந்த செய்தி தவறு என்று கூறிவிட்டார்.

இப்போது அவரது கட்சியின் அதிகாரபூர்வமான பத்திரிகையே வெளியிட்டதைத்தான் மற்ற ஏடுகளும் வெளியிட்டுள்ளன. ஆனால் அவை, ஆதாரமற்றவை என்று அறிக்கை விடுகிறார்!

பாவம்! தமிழ் நாட்டு பத்திரிகைகளில் ஒரே நேரத்தில் - ஒரே மாதிரி - வெளியிடப்பட்ட செய்திகளையே ஆதாரமற்றவை, ஒட்டுக் கேட்கப்பட்டவை என்று கூறி, அந்த பத்திரிகைகளின் நேர்மைக்கே சவால் விட்டிருக்கிறார்! நிருபர்களின் நாணயத்துக்கே அறை கூவல் விட்டிருக்கிறார்!

ஏதோ, எப்போதோ ஓரிரு பத்திரிகைகளில் ஒரு செய்தி அல்லது ஒரு பேச்சின் ஒரு வாக்கியம் தவறாக வெளி வரக்கூடும்.

எல்லா ஏடுகளும் கூடிப் பேசிக் கொண்டு, மக்கள்குரல் - நமது எம்.ஜி.ஆர். - தினமலர் - தினத்தந்தி - இந்து - எக்ஸ்பிரஸ் - அத்தனையிலுமா ஆதாரமற்ற செய்திகளை வெளியிட்டு விட்டனர்?

இந்தச் சண்டையிலோ சர்ச்சையிலோ காங்கிரஸ்காரர்கள் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளட்டும். அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை - அது அவர்களது கட்சிப் பிரச்சினை!

ஆனால்

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

என வள்ளுவன் வகுத்த குறள் நெறி பரவியுள்ள தமிழகத்தில், பத்திரிகை நடத்தும் பண்பாளர்கள், தமது மானத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்ளப் போகிறார்கள் என்பது தான், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பத்திரிகையாளனாகத் தோன்றிய எனது முக்கியமான கேள்வியாகும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

30-12-1992

1997. ஆளுநர் பதவி விலகியே தீர வேண்டும்!

உடன்பிறப்பே,

1988-ல் மீண்டும் பொறுப்பேற்று 1991 ஜனவரி வரையில் நடைபெற்ற தி.மு.க. ஆட்சியின் போது, இந்திய நாட்டின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் சுமார் எட்டு தடவைகளுக்குக் குறையாமல் தமிழ்நாட்டுக்கு வருகை தந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பத்திரமாகத் திரும்பிச் சென்றிருக்கிறார்.

பாதுகாப்பு பலமாக இருக்க வேண்டும் என்பதற்கான உரிய அறிவுரைகள் மத்திய தேசிய முன்னணி அரசின் சார்பாக, மாநிலக் காவல்துறை அதிகாரிகளுக்கும், அரசுக்கும் வழங்கப்பெற்று, அவற்றுக்கேற்ப அவரை எல்லா நிகழ்ச்சிகளிலும் போதிய பாதுகாப்புடன் கலந்துகொள்ளச் செய்து டெல்லிப் பட்டினத்துக்கு அனுப்பி வைத்தது கழக அரசு என்பதை எவரும் மறுத்திடார்.

1990 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் தமிழக அரசு முன்னின்று சென்னை நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடத்தப்பட்ட இந்திய ஒருமைப்பாடு மன்றக் கூட்டத்தில் பிரதமர் வி.பி. சிங், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி, நான் உட்பட பல மாநில முதலமைச்சர்கள், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டபோது, அந்தக் கட்டிடத்துக்கு அருகே குண்டு ஒன்றை வெடிப்பதற்காக நடத்தப்பட்ட முயற்சி கண்டு பிடிக்கப்பட்டு, அந்த முயற்சி, முதல்நாளே கண்டுகொள்ளப்பட்டாலும்கூட, ஒருமைப்பாடு கூட்டம் முடிகிற வரையிலே கழக அரசும், காவல்துறையினரும் மிகுந்த கண்காணிப்புடன் இருந்ததையும் - பெரிய அளவு நாசம் ஏற்படுத்தக்கூடிய ஒரு பயங்கர செயல் தடுத்து நிறுத்தப்பட்டதையும் அன்றைய ஏடுகள் அனைத்தும் வெளியிட்டிருந்தன.

அடுத்து மூன்று மாதங்களுக்குப் பிறகு ஆட்சி கலைக்கப்பட்டது. ஆளுநர் பீஷ்மநாராயண் சிங் அவர்கள் குடியரசுத் தலைவர் ஆட்சியின் மாநிலப் பிதாமகனாக கோலோச்சத் தொடங்கினார்.

அவரது ஆட்சியின் நான்காவது மாதம் - மே 20-ஆம் நாள் பத்திரிகை நிருபர்களின் கூட்டத்தில் அவர் பேசிய பொழுது, இப்போது தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு அதிஅற்புதமாக ஆகிவிட்டது. விடுதலைப் புலிகள் விரட்டப்பட்டு விட்டனர் என்று புன்னகையும், பூரிப்பும் தவழ செய்தி தந்தார்.

தி.மு. கழக ஆட்சியைக் குத்திக்காட்டுவது போலவும் - சட்டம் ஒழுங்கு சரியில்லாததால் தான் அந்த ஆட்சி கலைக்கப்பட்டது என்று நியாயப்படுத்துவது போலவும் ஆளுநரின் பேட்டி இருந்த காரணத்தால் போட்டி போட்டுக் கொண்டு ஏடுகள் அச்செய்திக்கு முதலிடம் அளித்தன!

ஆனால் ஆளுநர் நிருபர்களைச் சந்தித்த மறுநாளே, திருபெரும்புதூரில் ராஜீவ்காந்தி மிகக் கொடுமையான முறையில் படுகொலைக்கு ஆளானார்.

அந்தக் கொலையைக் காட்டி அனுதாப ஓட்டுக்கள் பெற்றால் மட்டும் போதாதென்று - கொலைப்பழியை எதிர்க்கட்சிகள் மீது, குறிப்பாக தி.மு.க. மீது சுமத்தி - எதிர்க்கட்சி வரிசையென்றே பேரவையில் ஒன்று இல்லாமல் செய்துவிட வேண்டுமென்ற தீய நோக்கத்துடன் திட்டம் தீட்டி, பிரச்சார வாய்ப்புகள் அனைத்தையும் தேர்தல் கமிஷனின் தயவோடு பயன்படுத்திக் கொண்டு நினைத்ததை நிறைவேற்றிக் கொண்டனர்.

ஆனால், கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள் என்பது போல் - தி.மு.க. மீது இ.காங்கிரசும், அ.தி.மு.க.வும் ஜோடி சேர்ந்து சுமத்திய பழி, இப்போது சுக்கு நூறாகப் போய்விட்டது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகையிலோ - அல்லது கொலை நடந்தபோது எப்படிப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது என்பதை ஆராய்ந்து அறிவிக்க அமைக்கப்பட்ட வர்மா கமிஷன் அறிக்கையிலோ, அ.தி.மு.க.வும், இ.காங்கிரசும் கூட்டாகச் சேர்ந்து தி.மு.க. மீது சுமத்திய பழி பற்றிய வாசகமோ, வார்த்தையோ, ஏன் - ஓர் எழுத்தோ கூட இல்லை!

மாறாக, வர்மா கமிஷன் என்ன அறிக்கை கொடுத்திருக்கிறது!

மத்தியில் இ. காங்கிரசின் கைப்பாவையாக இருந்த சந்திரசேகர் ஆட்சி, தமிழ்நாட்டில் மத்திய அரசின் பிரதிநிதியாக நிர்வாகம் நடத்திய பீஷ்ம நாராயண்சிங் ஆட்சி, தங்களுக்குள் இருந்த குழு மோதல் காரணமாக பாதுகாப்பு ஏற்பாடுகளைக் குளறுபடி செய்த காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் மீது தான் வர்மாகமிஷன் குற்றம் சாட்டியுள்ளது.

பீஷ்ம நாராயண்சிங்கின் பரிபாலனம், ராஜீவ் கொலையைத் தடுக்கப் பாதுகாப்பு அளிக்கத்தவறிய குற்றத்தை மட்டுமல்ல. அந்தக் கொலையைத் தொடர்ந்து, தமிழ் நாட்டில் எதிர்க்கட்சியினர் மீதும், வணிகர்கள் மீதும் நடத்தப்பட்ட வெறித்தாக்குதல்களால் பல உயிர்கள் போக்கப்படவும், பல கோடிக்கான ரூபாய் மதிப்புள்ள உடைமைகள் அழிந்து போகவும் - விட்டுவிட்டு, அதனை வேடிக்கை பார்த்திருந்த காவல் துறையின் அலட்சியத்துக்கும் உள்ளாகியுள்ள குற்றத்தையும் செய்துள்ளது!

அதனால் தான், அந்த வன்முறைத்தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு தருவதற்கு அரசு கடமைப்பட்டிருக்கிறது என தி.மு.க. சார்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, நீதி மன்றமும் நமது முறையீட்டில் உள்ள நியாயத்தை உணர்ந்து இழப்பீடு தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அரசுக்கு அறிவித்தது.

பீஷ்ம நாராயண்சிங் அவர்கள், ராஜீவ் கொலையைத் தடுக்க பாதுகாப்பு ஏற்பாடுகளில் தக்க கவனம் செலுத்தாததற்கும் - தொடர்ந்து நடந்த வன்முறை வெறியாட்டங்களை அனுமதித்தமைக்கும் - பொறுப்பேற்றுக் கொண்டு பதவியிலிருந்து விலக வேண்டுமென பல்வேறு கட்சித் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி பீஷ்ம நாராயண சிங்கின் பதவி விலகலை வலியுறுத்தி தீர்மானமே நிறைவேற்றியுள்ளது.

இந்த ஆளுநர் பதவி விலகத்தான் வேண்டுமென்பதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது.

ஜெயலலிதா ஊழல்களைப் பட்டியலிட்டு, அவரிடம் அளிக்கப்பட்ட புகார்கள் குறித்து, வழக்குதொடர அனுமதி

கொடுக்காதது மட்டுமல்ல - இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமில்லையென்று ஒரு கடைந்தெடுத்த பொய்யை ஆளுநர் கூறியிருக்கிறார்.

அரசாங்க நிலத்தை அமைச்சர்கள் வாங்கக் கூடாது என்ற சட்டத்தை மீறி, முதலமைச்சர் பங்குதாரராக இருப்பதாக முதலமைச்சரே ஒப்புக்கொண்டு பேசியும், அறிவித்துமுள்ள ஜெயா பப்ளிகேஷன்ஸ் டான்சி நிலத்தை முறைகேடாக வாங்கியுள்ளதே! இது பீஷ்மருக்கு ஆதாரமாகப்படவில்லையா? அதுவும் ஜெயலலிதாவே ஒப்புக் கொண்டுள்ள ஆதாரம்!

மிகச் சிறிய விஷயங்களுக்கெல்லாம் உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்றுள்ள இந்த அரசு, ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி விவகாரத்தில் மட்டும் உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றம் செல்லலாம - நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள அரசு நிலத்தை தனியாருக்கு தாரைவார்த்துக் கொடுத்துள்ளதே; அது இந்த பீஷ்மருக்கு ஆதாரமாகத் தெரியவில்லையா?

விரைவில் திறக்கப் போகிற நேரு ஸ்டேடியம் நாற்பது கோடி ரூபாய் பணியை டெண்டர் விடாமல்தான் கொடுத்திருக்கிறோம் என்று சட்டப் பேரவையில் அரசின் சார்பிலேயே ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளதே! இது ஆதாரமில்லையா?

அரசுடைமையாக இருந்த பீர் தொழிற்சாலை டெண்டர் விடாமல், தனியாருக்கு விற்கப்பட்டுள்ளதே! இதுபற்றி முதல்வர் ஜெயலலிதாவே, பேரவையில் அச்சடித்த வாக்குமூலம் வைத்து ஒப்புக்கொண்டிருக்கிறாரே! அது சாட்சியமில்லையா? ஆதாரமில்லையா?

காண்ட்ராக்டுகள் அனைத்தும் அ.தி.மு.க. வினருக்கே கொடுக்க ஏற்பாடு செய்து, அதில் வரும் லாபத்தை அ.தி.மு.க. நிர்வாகிகள் பங்கிட்டுக் கொள்ளவும் - அதற்கேற்ப கலெக்டர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என முதல்வர் ஜெயலலிதாவே அவரது கட்சிப் பொதுக் குழுவில் பேசி, அது வடக்கு, தெற்கு ஏடுகள் அனைத்திலும் வெளிவந்துள்ளதே - அதனை யாரும் பீஷ்மருக்குப் படித்துக் காட்டவில்லையா?

ஸ்பிக் ஊழல் - எவ்வளவு பயங்கரமானது. அதனால் எத்தனை கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு - முதல்வருக்கு ஆதாயம் - என்று

தி.மு.க. குற்றச்சாட்டு தந்தது மட்டுமல்ல - இதோ! ஜனவரி 15-ந் தேதியிட்டு இன்று வெளிவந்துள்ள பிரண்ட்லைன் ஆங்கிலப் பத்திரிகையில் 97-ஆம் பக்கம் தொடங்கி 105-ஆம் பக்கம் முடிய ஸ்பிக் ஊழல் குறித்து எழுதப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரையை பீஷ்ம நாராயணர் ஒருமுறை படிக்கட்டும். அல்லது படிக்கக் கேட்கட்டும் - தி.மு.க. கொடுத்த குற்றச்சாட்டுக்கு ஆதாரம் போதுமா? இன்னும் வேண்டுமா?

இத்தனை ஆதாரங்களையும் - இன்னும் இருக்கின்றன ஏராளமான ஆதாரங்கள் - என விளக்கியும்கூட, இன்னமும் விளக்கெண்ணெய் வடிக்கிறாரே பீஷ்மர்! ஏன்? எதற்காக?

ஓகோ! இந்த பீஷ்மரும் - மகாபாரதத்து பீஷ்மரைப் போல கௌரவர் பக்கம் இருந்து தீரவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதோ?

அப்படியானால் இவர் நிச்சயம், பதவி விலகல் என்னும் அம்புப்படுக்கையில் படுக்க வேண்டியவரே ஆவார்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

01-01-1993

1998. சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்!

உடன்பிறப்பே,

ஒரு கேள்வி! மிக முக்கியமான கேள்வி! நாம் யார்? இந்திய நாட்டின் குடிமக்களா? அல்லது இந்து ராஜ்யம், இந்து ராஷ்டிரம் எனச் சொல்லப்படுகிற பிரதேசத்தின் குடிமக்களா?

இந்திய நாட்டுக் குடிமக்கள் என்கிறபோது, அப்படிச் சொல்லிக்கொள்ள, ஒருவர், எந்த மொழி பேசுகிற மாநிலத்தில் இருந்தாலும் - அவர் இந்து எனப்படுபவராகவோ, அல்லது இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம், சமணம் என ஏதாவதொரு மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், அவர் இந்தியக் குடிமகனே ஆகிறார்! ஆம்! இந்தியக் குடிமகன் என்பதில் ஒரு மதச்சார்பற்ற நிலை - பண்டித நேரு அவர்களின் கூற்றுப்படி வேற்றுமையிலே ஒற்றுமை - பல்வேறு மொழி பேசும் தேசிய இனங்களின் ஒருமைப்பாடு அனைத்தும் அடங்கியுள்ளதை உணர முடிகிறது.

ஆனால் இந்து ராஜ்யத்தின் குடிமகன் என்கிற நிலை ஏற்படும்போது, காலப்போக்கில் இந்து மதக்காரர்கள், இந்து மதத்துக்காக, ஏற்படுத்திக்கொள்ளும் ஆதிக்கம், மற்ற மதக்காரர்களுக்கு உரிமையும் இடமும் இல்லாத ஒரு நிலையைத் தோற்றுவிப்பதும், வேற்றுமையிலே ஒற்றுமை என்ற தத்துவத்தின் வேரிலே வெந்நீரை ஊற்றி, தேசிய இனங்கள் தாங்கள் ஏற்றுக்கொண்டுள்ள ஒருமைப்பாடு உணர்வை மறுசிந்தனைக்கு உள்ளாக்கக் கூடியதுமான - விரும்பத்தகாத விளைவுகளை உருவாக்கி விடும்!

இப்படியொரு இந்து ராஜ்யம் அமைக்க வேண்டுமென்ற திட்டம், மதவெறியர்களின் மனத்திலே தோன்றி, அதற்கான வழிவகைகளை அவர்கள் வகுத்திடத் தொடங்கிய காலத்திலேயே அதனை நமது திராவிட இயக்கம் சரியாகக் கண்டுபிடித்து எச்சரித்திடத் தவறவில்லை.

இந்து ராஜ்ய வெறியர்கள், தங்களது மதவெறியை மக்களின் கடவுள் நம்பிக்கை எனும் இனிப்புடன் கலந்து பாமர மக்களின் உள்ளத்தையும், உணர்வையும் விஷமாக்கி, பிற மதத்தினரைப் பரமவைரிகளாக எண்ணும் கொடுமையை விதைத்துவிட்டனர்.

இந்தக் கொடுமைச் சாகுபடிக்கு அவர்கள் கடவுளையும், கடவுள் அவதாரங்களையும், வேத சாஸ்திரங்களையும், இதிகாச புராணங்களையும் இடு பொருள்களாகவும், பணிக் கருவிகளாகவும் ஆக்கிக் கொண்டனர்.

நிறத்தால் - தோலின் தன்மையால் - உடலின் அமைப்பால் வேறுபட்ட இனத்தவர்கூட, ஒருவருக்கொருவர் பேதம் காட்டக்கூடாது என்கிற அளவுக்கு சமத்துவ, சகோதர எண்ணங்கள் பூத்திட வேண்டுமென உலகம் உரக்கக் கூவிக் கொண்டிருக்கும்போது - அந்த எண்ணம் வெற்றி முகட்டை எட்டி, நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது - இந்தியாவில் மதங்களுக்கிடையே போராட்டத்தை வளர்த்து, பெரும்பான்மையினர் இந்துக்கள் எனக் கூறிக் கொண்டு இந்து ராஜ்யம் - அல்லது இந்து ராஷ்டிரம் அமைப்போம் என்பதை இந்த நூற்றாண்டில் ஏற்பது எங்ஙனம் இயலும்?

இந்து ராஜ்ய எண்ணம் கருக்கொண்டிருப்பதை உணர்ந்துதான் திராவிட இயக்கத்தின் தளபதியாக, தந்தை பெரியாரின் கொள்கைகளுக்கோர் தீபச் சுடராக நிமிர்தெழுந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் நாற்பத்து எட்டு ஆண்டுகட்கு முன்பே, இந்து ராஜ்யம் எனும் மயக்கம் எப்படியெல்லாம் இந்த நாட்டு மக்களுக்கு, சாஸ்த்ரீய ஊசிகளின் மூலம் ஏற்றப்படுகிறது என்பதை எடுத்துக் காட்டினார் ஒரு நாடகம் மூலமாக!

அந்த நாடகத்தின் பெயர்தான் சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்

அதை எழுதியது மட்டுமல்ல! அந்த நாடகத்தில் காகபட்டர் என்கிற முக்கிய பாத்திரமேற்றும் நடித்தார்.

சென்னையில் அவர் நாடகத்தைக் கண்ட தந்தை பெரியார் அவர்கள், நாலு மாநாடுகள் நடத்திப் பெறக் கூடிய பயனை, இந்த நாடகம் ஒன்றை நடத்துவதின் மூலம் பெற முடியும் என்று புகழ்ந்து பேசினார்.

மராட்டிய மண்டலத்து மாவீரன் சிவாஜி, சூத்திரன் என்பதால் - அவன் ஓர் இந்து ராஜ்யத்தின் மகுடபதியாகப் பட்டாபிஷேகம்

செய்து கொள்ள முடியாது என அந்தக் காலத்து விசுவ இந்து பரிட்சத்துகளின் எதிர்ப்பு கிளம்பியது.

கற்பனையல்ல இது. வரலாறு! இந்த வரலாறு அண்ணா அவர்களின் சிந்தனைத் தேர் ஏறி, அவரது செந்தமிழ்ச் சொற்களால் உணர்ச்சி கொந்தளிக்கும் நாடகமாக உருப்பெற்றது. நாடகத்தின் தொடக்கத்திலேயே ஒரு குரல் ஒலி கேட்கும்.

> "பாரத வர்ஷம், பரத கண்டம், புண்ய பூமி என்று புகழ்ந்தனர் புராணிகர்கள், புலவர்கள், சகலரும். எனினும் புண்ய பூமி அடிமைப்படுத்தப்பட்டது. எங்கும் காரிருள் சூழ்ந்துகொண்டது. எங்கும் திகைப்பு! கலக்கம். ஆனால் ... காரிருளைக் கிழித்துக்கொண்டு கிளம்பிற்று சுதந்திர ஜோதி. மராட்டியத்தில் ஏற்றி வைக்கப்பட்ட விடுதலை விளக்கு புதியதோர் எழுச்சியை உண்டாக்கிற்று. மாவீரன் சிவாஜி கிளம்பினான், சீறிப் போரிட! சிதறி ஓடினர் எதிரிகள்! விடுதலை கிடைத்து விடும் என்ற நம்பிக்கை பிறந்தது. ஆனால் சமூகம், ஜாதிமத பேதமென்னும் சனியனுக்கு ஆளாகி அவதிப்பட்டது. வீரர்கள் விடுதலைப் போரை நடத்தினர். வீணர்கள் ஜாதியையும், மதத்தையும் காட்டிக் கொழுத்தனர். சமூகக் கொடுமை மராட்டியத்தை விட்டு ஒழியவில்லை. அந்த நிலையிலே...."

இந்தக் குரலைத் தொடர்ந்து நாடகக் காட்சிகள்! தொடக்க உரையில், அண்ணா அவர்கள் மராட்டிய மண்டிலத்தின் நிலை குறித்துக் கூறினார் எனினும், அதுவேதான் அண்ணா அவர்கள் இந்த நாடகத்தை எழுதியபோதும் மொத்த இந்தியாவின் நிலை! அத்தீய நிலை தான் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அந்த உண்மை வரலாற்றில் சில கற்பனைப் பாத்திரங்கள்! அவற்றில் ஒன்று சந்திரமோகன் என்ற பாத்திரம்!

இந்துமத வெறிக்கு அடிபணிந்து தோஷம் கழித்து, தனது சூத்திரப் பட்டத்தை நீக்கிக் கொள்வதைத் தவிர, வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்த சிவாஜி, இந்துமதத் தலைவர் காகபட்டரின் காலில் விழும்போது - அந்த சிவாஜியின் மெய்காப்பாளன் தளபதி சந்திரமோகன் ஓடிவந்து தடுப்பான்!

யார் அந்த சந்திரமோகன்? இங்கேதான் அண்ணாவின் அறிவாற்றல் இமயமாக உயர்ந்து நிற்கிறது. சிவாஜியின்

மனச்சாட்சியைத்தான் சந்திரமோகன் என்று மற்றொரு கதாபாத்திரமாகப் படைத்திட்டார் அறிஞர் அண்ணா!

உடன்பிறப்பே! ஒரு காட்சியில் இதோ அண்ணாவின் சந்திரமோகன் பேசுகிறான் கேள்! இல்லை! இல்லை மாவீரன் சிவாஜியின் மனமே சந்திரமோகன் உருக்கொண்டு அவன் எதிர் நின்று பேசுகிறது!

கூண்டிலே சிக்கிய புலி, வலையிலே வீழ்ந்த மான், வர்ணாஸ்ரமத்திலே வீழ்ந்துவிட்ட வீர சிவாஜி! இந்த வேதனை தரும் காட்சியையா நான் காண வேண்டும்?

சந்திரமோகனைத் தட்டிக்கொடுத்தவாறு சிவாஜி பேசுவதாக இதோ அந்த உரையாடல்கள்:-

சிவாஜி : மக்களின் மனப்போக்கை கவனிக்க வேண்டாமா சந்திரமோகன்?

சந்திர மோகன் : மக்களின் மனம்! தாங்கள் வீரமாகக் கிளம்புவதற்கு முன்பு மக்களின் மனம் இனி நாட்டுக்கு விடுதலை கிடையாது, விடுதலை பெற முடியாது என்றுதான் எண்ணிக் கிடந்தது. போரிடக் கிளம்பிய நீர், புதுமையைக் கண்டீர்! கோழையும் வீரனானான்! கோட்டைகள் தூளாயின! கொட்டினோம் வெற்றி முரசு! பறக்கிறது சுதந்திரக் கொடி.

சிவாஜி : சந்திரமோகன்! காகபட்டரின் யோசனையை மறுத்தால் என்ன நேரிடும் என்பதை எண்ணிப் பார்க்காமலே பேசுகிறாய்.

சந்திர மோகன் : என்ன நேரிடும், காகபட்டர், தமது ரத, கஜ, துரக பதாதிகளுடன் மராட்டியத்தின் மீது படையெடுத்து விடுவார் - நாம் அவரது அசகாய சூரர்களால் தோற்கடிக்கப் பட்டு விடுவோம் - அதுவா சத்ரபதி தங்களின் சிந்தை கலங்குவதற்குக் காரணம்?

இந்த வாக்குவாதத்திற்குப் பிறகு சிவாஜி வேறு வழியின்றி, காகபட்டரின் ஆலோசனைக்குப் பணிகிறான். இந்து ராஜ்யம் காகபட்டரின் எண்ணம் போல் அமைகிறது.

அதற்குப் பிறகு சோக உருவமாக நின்று சந்திரமோகனிடம் - ஆம்! தனது மனசாட்சியிடம் சிவாஜி பேசும் கடைசிக் கட்ட காட்சி இது :-

"சந்திரமோகன்! நான் ஏற்படுத்திய ராஜ்யம் நிலைக்கும் என்று நான் நினைக்கவில்லை. சந்தர்! மராட்டிய மண்டலத்திலே ஏரி, குளம், குட்டை, ஆறு, மடு எல்லாம் வறண்டு விட்டன. வயல்கள் வெடித்துக் கிடக்கின்றன. போர் செயலினால் மக்கள் ஏழைகளாயினர். இந்த நிலையிலே - வறுமை தாண்டவமாடும் இந்த நேரத்திலே பதினோராயிரம் பிராமணர் குடும்பங்களுக்கு நான்கு மாதங்கள் சமாராதனை. தங்கள் உயிரை எனக்காக, அரசுக்காக அளித்த மராட்டிய வீரருக்கு என்னால் விருந்திட முடியவில்லை. என் செலவில் வீணர்கள் உண்டு கொழுத்தனர். துலாபாரம், அதனால் வேறு செலவு. சந்திரமோகன்! என் அரசு ஆரம்பமாகும்போதே பொக்கிஷம் சூன்யமாகி விட்டது. ஒரு கோடியே எட்டு லட்சமடா நான் கொட்டி அழுதேன். நம் தரணி இப்பாரத்தைத் தாங்காது. ஆகவே வீரனே! அஞ்சா நெஞ்சு படைத்த நீ, மக்களிடம் பரவி இருக்கும் மயக்கத்தைப் போக்கு. வாளால் அரசுகளை அமைத்து விடலாம். ஆனால் அது நிலைக்க அறிவு தேவை. அந்த ஆயுதத்தை வீசு, நாடு முழுவதும் வீசு, பட்டித் தொட்டிகளெல்லாம் வீசு, மக்களை வீரர்களாக்கு, சந்திரமோகனா! சகலரையும் சந்திரமோகன்களாக்கு, போய்வா! வெற்றி பெறுவாய்."

உடன்பிறப்பே, இந்து மதத் தலைவர்களின் கட்டளைக்கும், நிபந்தனைகளுக்கும் அடிபணிந்து சூத்திரப் பட்டத்தைப் போக்கிக் கொண்ட அந்த மாவீரன் சிவாஜி அமைத்த இந்து ராஜ்யத்தின் கதியைப் பார்த்தாயா?

அந்த இந்து ராஜ்யத்தை அமைத்திடத்தான் இன்று மீண்டும் கிளம்பியுள்ளனர்!

அன்று எழுந்த இந்து ராஜ்யத்தை எதிர்த்து சந்திரமோகன் தோற்றான் - ஆனால் இன்று அவன் வெற்றி பெற்றாக வேண்டும்!

இல்லையேல், இந்தியா இருக்காது - இந்து ராஜ்யம்தான் மிஞ்சும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

02-01-1993

1999. நல்லினக்க நறுமணமலர்த் தோட்டம் காண்போம்!

உடன்பிறப்பே,

1949ஆம் ஆண்டு பண்டித நேரு அவர்கள் பிரதமராகவும் - கோவிந்த வல்லப பந்த் அவர்கள் உத்திரபிரதேச முதலமைச்சராகவும் இருந்த போது, ஒரு நாள் நள்ளிரவில் அயோத்தி பாபர் மசூதிக்குள் நாற்பது அல்லது ஐம்பது பேர் அத்துமீறி நுழைந்து உள்மண்டபம் ஒன்றில் இராமர் சிலையை வைத்து விட்டனர்.

அதை அங்கிருந்து அகற்றுவதற்கு முடியாமல் படாதபாடுபட்டு, பிரச்சினையை நாற்பத்து மூன்று ஆண்டு காலமாக குரங்குப் புண்ணாக்கி - இந்தியாவின் எதிர்காலம் என்ன என்பது மிகப் பெரும் கேள்விக்குறியாக உருவெடுக்கிற அளவுக்கு நிலைமையை முற்றவிட்ட குற்றம் முழுதும் மத்தியில் ஆட்சி புரிந்ததும், இப்போதும் ஆட்சி புரிவதுமான காங்கிரஸ் அரசையே சாரும்!

கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்தவர்களைவிட, இப்போது டெல்லியில் ஆட்சி புரிவோருக்குள்ள சிறப்பு என்னவென்றால், வரலாற்றில் நரசிம்ம பல்லவன் காலத்தில் வாதாபி வீழ்ந்தது என்பது போல - நரசிம்மராவ் அவர்களின் காலத்தில் பழம் பெருமை கொண்ட பாபர் மசூதி வீழ்த்தப்பட்டது என்ற அத்தியாயம் இணைக்கப்பட இருக்கிறது. வாதாபி வீழ்ந்ததில் நரசிம்மவர்மனின் புகழ்க் கொடி உயர்ந்தது. ஆனால் பாபர் மசூதி வீழ்ந்ததில் நரசிம்மராவின் ஆட்சிக்கொடி, கிழிந்த நிலையில் குனிந்து பறந்து கொண்டிருக்கிறது.

படிப்பகங்கள், மன்றங்கள் என்று ஒவ்வொரு கட்சியிலுமுள்ள தொண்டர்கள், தங்கள் பகுதியில் சிறிய அளவில் கட்டிக் கொண்டிருக்கிற கட்டிடங்களில்கூட, ஒரு கட்சித் தலைவர் படத்தை, இன்னொரு கட்சியின் மன்றக் கட்டிடத்துக்குள் கொண்டு போய் வைத்து விட்டாலோ, ஒரு கட்சி மன்றத்தை

இன்னொரு கட்சியினர் ஆக்கிரமிக்க நினைத்தாலோ, சிதைத்திட முயன்றாலோ இரு சாராருக்கிடையே அமளி மூளுகிறது.

நடுநிலையில் இருப்போர், அவர்களை அமைதிப்படுத்தி - உன் கட்சித் தலைவர் படத்தை அந்தக் கட்சி மன்றத்துக்குள் நீ கொண்டுபோய் வைத்தது தவறு என்றுதான் அறிவுரை கூறுவர்! படம் வைத்தது மட்டுமல்ல. அந்த இடமும் எம்மால் இடிக்கப்படும் என்று தோள் தட்டுகிறவர் எவராயினும், அவர்களை அந்தத் தெருவில் இருக்கும் நல்லோர் ஆதரிக்க முன்வர மாட்டார்கள்.

ஊருக்குள், வீதிக்குள், சந்துக்குள் நடக்கிற இந்த சச்சரவுகளையே தேவையில்லாத விஷமத்தனம், சிறுபிள்ளை விளையாட்டு என விமர்சிக்கிற நிலையிருக்கும்போது - இரண்டு பெரிய மதங்கள்! ஆம், எண்ணிக்கையிலே கூட உலக முழுதும் என்று பார்த்தால் பல்வேறு நாடுகளில் பல கோடி மக்களைக் கொண்டு இஸ்லாம் - இந்திய நாட்டைப் பொருத்து, இங்கேயுள்ள எண்பது கோடிக்கு மேற்பட்ட மக்களில் கணிசமான பெரும்பான்மையினரைக் கொண்ட இந்து மதம் - இவையிரண்டும் பகை மூட்டப்பட்டு ஒற்றுமையுணர்வு பட்டுப் போகிற நிலைக்கு உள்ளாக்கப்படுவது என்பது, நான் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல, சந்து பொந்துகளில், தெருவீதிகளில் நடத்தப்படும் மன்றங்களில் மாற்றுக் கட்சித் தலைவர்களின் படங்களைக் கொண்டுபோய் வைத்து மாச்சரியத்தை உருவாக்குவது போன்ற செயலாகவே கருதப்படும்.

நானூறு ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு அயோத்தியில், இப்போதுள்ள தாவாவுக்குள் இருக்கிற இடத்தில் இராமர் கோயில் இருந்தது என்பதற்கான அடையாளங்கள் என்று, இடிபாடுகளில் இருந்து எடுக்கப்படுவதாக கூறப்படும் சின்னங்கள் எதையும் கரசேவகர்கள் சிலர் ஒத்துக்கொள்கிறார்களே தவிர தொல்பொருள் அகழ்வாராய்ச்சியாளர்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்று உறுதிபடச் செய்திகள் வந்துள்ளன.

அப்படியே அவர்கள் வாதம் மெய்யாக இருப்பினும் - நானூறு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்று விட்டதாகச் சொல்லப்படும் ஒரு செயலுக்கு இப்போது பழிவாங்குவது என்பது, எத்தனை தலைமுறைகளைக் கடந்தது என்பதை நியாய உணர்வோடு சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

1949-ல் உ.பி.யில் இருந்த நிர்வாகம், பாபர் மசூதிக்குள் இராமர் சிலையை அத்துமீறி வைத்தது தவறு என்று கூறியதே

தவிர, - அதனை உடனே அப்புறப்படுத்திட நடவடிக்கை எடுத்திட முன்வரவில்லை. முளையிலேயே கிள்ளி எறியாமல், மதப்பூசல் என்னும் விஷ விருட்சம் வானளாவ இன்று வளர விடப்பட்டுள்ளது.

பழங்கால சின்னங்கள் - புனித இடம் எனக் கருதப்படுபவைகள் - அனைத்தையும் ஏதாவது ஒரு காரணம் சொல்லி, ஒரு கூட்டம் இடித்துத் தகர்க்கலாம் - அங்கே தங்கள் விருப்பம் போல் ஒன்றைக் கட்டிக் கொள்ளலாம் என்று முனைந்து, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அப்படி செயல்படத் தொடங்கி விட்டால் நாடு என்னாவது? எண்ணிப் பார்த்திடல் வேண்டாமா?

பாரதிய ஜனதா தலைவர்களின் பேச்சை நம்பினோம் என்கிறார்கள் - அதனால்தான் பாபர் மசூதியை பாதுகாக்க இராணுவத்தைப் பயன்படுத்தவில்லை என்கிறார்கள் - ஏழு கிலோ மீட்டர் தொலைவில் மசூதியை மண்மேடாக்கிட முயன்றவர்களைத் தடுத்திட திறமை கொண்ட இராணுவம் இருந்தும் அதனைச் செயல்பட விடாமல், இந்தியாவின் அபகீர்த்திக்கு அழைப்பு விடுத்து, அதனை எடுத்து முடியிலே சூட்டிக் கொண்டார்கள்!

தும்பை விடுத்து வாலைப்பிடித்த செயல் - குதிரை போன பிறகு லாயத்தைப் பூட்டிய காரியம் - இவைகளால் விளைந்த பயன் என்ன?

சூடுபட்ட பிறகாவது உணர்ந்து கொண்டது என்ன?

மேலும் மேலும் தயக்கம் - குழப்பம் - என்ன செய்கிறோம் என்று செய்பவர்களுக்கே புரியாத ஒரு தத்தளிப்பு - இத்தனையும் இன்றைய மத்திய சர்க்காருக்கு!

ஏன்? என்ன காரணம்? மதச்சார்பற்ற கொள்கையில், மத்தியில் உள்ள காங்கிரஸ் பெருந்தலைவர்களுக்கே இதய பூர்வமான ஈடுபாடு இல்லை!

எங்கே, என்ன கொடுமை நடந்தால் என்ன? சிறுபான்மை மக்களுக்கு எத்தகையச் சீரழிவு ஏற்பட்டால் என்ன? ஊரையே விழுங்கி ஏப்பமிடும் உற்பாதமா? ஊழலா? உன்மத்த நடவடிக்கைகளா? ஏழ்மையிலும், விலைவாசிகளை எட்ட முடியாத நிலையிலும் வாடுகின்ற மக்களின் கண்ணீர் வெள்ளமா? எவையேனும் நடந்து விட்டுப் போகட்டும். எமக்குப் பதவி நிலைத்தால் போதும் என எவர் எண்ணுகிறாரோ, அவர், அரசு முறைக்காக வள்ளுவர் உரைத்த தூங்காமை - துணிவுடைமை என்ற இயல்புகளைப் பெற்றவராக இருக்க முடியாது.

அதனால்தான் டில்லித் தலைநகரிலேயே சாதுக்கள் கூடி சவால் விடுகின்றனர்.

அடுத்தது ஜம்மா மசூதி, வாரணாசி மசூதி - தொடர்ந்து நாடு முழுதும் மூவாயிரம் மசூதிகள் தம்மிடம் சரண் செய்யப்படவேண்டுமென்று!

இதையெல்லாம் பார்க்கும்போதும், கேட்கும் போதும், நாமென்ன இருபதாம் நூற்றாண்டில்தான் வாழ்கிறோமா? - என்ற சந்தேகம் நமக்கே வருகிறது!

இவ்தம் செயல்களால் பீதி அடைந்து கிடக்கும் சிறுபான்மை மக்களான இஸ்லாமியர், கிறித்துவர், மற்றும் பல மதப்பிரிவினர் - அமைதி வழி நாடும் உண்மையான இந்துமதப் பற்றாளர்கள் - இவர்களுக்கு அரணாக இருந்திட அரசு முன்வர வேண்டுமென்பது ஒருபுறமிருந்தாலும் -

அன்பு

அமைதி

நல்லிணக்கம்

நாட்டு ஒற்றுமை

சமத்துவம்

சகோதரத்துவம்

இவற்றை நாடுகிற நம் போன்ற இயக்கத்தினர் அனைவரும், மதவெறியர்களை எதிர்த்து அணி வகுத்து நின்றிடல் வேண்டும். அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் ஜனவரி 20 - தமிழக முழுதும் மனிதச்சங்கிலி அணிவகுப்பு - ஜனவரி 31 சென்னையில் அனைத்திந்திய தலைவர்கள் கலந்துகொள்ளும் நல்லிணக்கப் பொதுக்கூட்டம் - பிப்ரவரி முழுவதும் நல்லிணக்க உறுதிமொழி கையெழுத்து இயக்கம்!

இந்த முயற்சிகள் வெற்றிபெற நமது உடன்பிறப்புகள், ஆங்காங்கு கட்சிச்சார்பற்ற முறையிலேகூட ஆன்றோர்களையும், சான்றோர்களையும் சந்தித்து, அனைவரையும் பங்கு பெறச் செய்து,

நல்லிணக்கம் என்ற நறுமண மலர்த்தோட்டம் கண்டிடப் பாடுபடுவீர்! பணியாற்றுவீர்! என அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

04-01-1993

2000. அயோத் தீ யைத் தொடர்ந்து இந் தீ யா?

உடன்பிறப்பே,

கழக மாணவரணிச் செயலாளர் தம்பி துரைமுருகன், மொழிப்போர் வீரர்களின் நினைவு போற்றுவதற்காக இணைத்துள்ள குறிப்பும் - தொகுத்துள்ள தியாகிகள் நாள் பொதுக்கூட்டங்களின் பட்டியலும் உன் கண்களில் பட்டிருக்கும். கவனத்தை இழுத்திருக்கும். ஆம்! வருகிற 25-ஆம் நாள் நமது கழக முன்னணியினர், கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் தமிழகம் முழுதும்!

1938 முதல் 55 ஆண்டுக் காலமாக மொழிப் போர்க்களத்தில் நிற்பவர்கள் நாம்! சற்றுக் கண்ணயர்ந்தாலும் இந்தி மொழி ஆதிக்கம், தமிழர்களை இரண்டாம்தர, மூன்றாம்தர மக்களாக ஆக்கி - தமிழ் மொழியின் பெருமை, புகழ், வரலாறு, வளமிகு இலக்கியம் அனைத்தையும் சிதைத்துச் சீரழித்து விடுமென உணர்ந்து, இமை மூடாமல் காவல் காத்துக் கொண்டிருக்கும் சிப்பாயாக தி.மு.கழகம் இருக்கிறது - இருக்கும் என்பதிலே நமக்கோர் பெருமிதம். நம் தமிழ் மக்களுக்கோர் ஆறுதல்.

1938-ல் தாளமுத்து, நடராசனைக் களப்பலி கொடுத்து தொடங்கிய இந்தப் போராட்டம் - பெரியாரையும், அண்ணாவையும் மற்றும் இந்தத் திராவிடப் பேரியக்க முன்னோடிகளையும், செயல்வீரர்களையும் தொடர்ந்து பல்லாயிரக் கணக்கில் சிறைக்கு அனுப்பியது மட்டுமல்லாமல் - துப்பாக்கி ரவைகளை ஏந்தியும், தீக்குளித்தும் பல இளந்தளிர்களைக் காவு கொடுக்கும் தியாக வேள்வியாகவே மாற நேரிட்டது என்பது சரித்திரம்.

மொழிப் போராட்டத்தின் உச்சகட்டம் - அதனைப் போராட்டமென்று கூடக் கூற முடியாது! மொழிப் புரட்சி! அந்தப் புரட்சி 1965-ல் நடைபெற்றபோது காங்கிரஸ் ஆட்சியில்

தமிழர்களின் பிணங்கள் தமிழ்நிலமெங்கும் வீழ்ந்தன. அந்த எண்ணிக்கை ஆயிரத்தையும் தாண்டும்.

இந்தி என்ற ஒரு மொழியை எதிர்த்து அல்ல. அந்த மொழி, தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்த முனைவதை எதிர்த்து! தமிழர்களை இந்திய மக்களுடன் பட்டியலிட்டு முதல்தர குடிமக்களாகவே இருப்பதாகப் பாவனை செய்து, இரண்டாம் தரத்துக்கும் கீழான குடிமக்களாக ஆக்குகிற சூழ்ச்சியை எதிர்த்து!

அம்மவோ! 1965-ல் நடைபெற்ற அந்தப் புரட்சியில் தீ நாக்குகளுக்குத் தமது தேக்குமரத் தேகங்களை இரையாக்கியோர் பட்டியலில் எத்தனை இளைஞர்! எத்துணை மாணவமணிகள்!

அந்தப் புரட்சிக்குப் பிறகுதான் 1967-ல் கழக ஆட்சி அறிஞர் அண்ணாவின் தலைமையில்!

இந்தி ஆதிக்கத்தின் மண்டையில் அடிக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டு, இருமொழித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தி ஆதிக்கத்தின் மறைந்திருந்த தலை, இடையிடையே தமிழ்நாட்டுக்குள் நீளப்பார்த்தது. எனினும் கழக ஆட்சி, அந்தத் தலையில் அடித்துத் துரத்திய வண்ணமிருந்தது.

1976-ல் கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு - எம்.ஜி.ஆர். ஆட்சியில், மத்திய அரசின் மூலம் மறைமுகமாகவும் - வெளிப்படையாகவும் நேருவின் வாக்குறுதி மீறப்படுகிற சூழல் உருவானபோது, மீண்டும் களத்தில் இறங்க வேண்டிய கடமை கழகத்திற்கு ஏற்பட்டது! அந்தப் போராட்டத்தில் அண்ணா தேர்ந்தெடுத்த அதே முறையைப் பின்பற்றி ஈடுபட்ட நமது பேராசிரியர் உள்ளிட்ட பத்து சட்டமன்ற உறுப்பினர்கள், அ.தி.மு.க. ஆட்சியில் பதவி நீக்கம் செய்யப்பட்ட நிகழ்ச்சியும் நடைபெற்றது!

இப்படித் தொடர்ந்து எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டிய நிலையில் வந்தே தீருவேன் என்று வம்பளந்து கொண்டிருந்த இந்தி ஆதிக்கம் கொஞ்சநாள் வாலை சுருட்டிக் கொண்டிருந்தது.

இப்போது இங்கு நடக்கும் ஆட்சியில்தான், நவோதயா பள்ளிகளுக்கே நடை பாவாடை விரிக்கிறோம் என்று முன்பே சொல்லிவிட்டார்களே! அதனால் இப்போது, தங்கு தடையின்றி நுழையலாம் எனத் தடந்தோள் தட்டுகிறது இந்தி ஆதிக்கம்.

மத்திய அரசின் மிகப்பெரும் பிரச்சார சாதனமும், சக்திவாய்ந்த பிரச்சார சாதனமுமான தொலைக்காட்சி வாயிலாக - இந்தி ஆதிக்கத் தொற்றுநோய் இப்போது வெகு வேகமாகப் பரவத் தொடங்கியுள்ளது.

தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகளுக்குள்ள நேரம் குறைக்கப்பட்டு, மாற்றப்பட்டு, இந்தி நிகழ்ச்சிகள் - இந்திப்படங்கள் என அவற்றின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளன.

எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி? என அன்று அறப்போர் வாள் சுழற்றிக் கேட்டது தமிழர்சேனை!

இப்பக்கம் வருகிறேன் பார்! என்று, விரும்பிய பக்கமெல்லாம் இந்தி ஆதிக்கம் விஷம்போல் பாயத் தொடங்கியுள்ளது.

ஆயிரம் பிரச்சினைகள் மத்திய அரசுக்கு இருப்பினும் - அதற்கு மக்கள் ஒத்துழைப்பு தேவையெனத் தெரிந்திருந்தும் - அசாம் அமளி, காஷ்மீர் கலவரம், பஞ்சாப் படுகொலை, அயோத்தி சிக்கல் இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தச் சந்து பொந்துகளில் நுழைந்து கொண்டு தமிழகத்தில் இந்தி ஆதிக்கத்தை நிலை நாட்டிவிட வேண்டுமாம்! இப்படியொரு ஆர்வம், இந்தி வெறியர்களுக்கு - இவர்கள் ஒன்றும் மதவெறியர்களுக்கு மட்டமானவர்கள் அல்லர்! அதனால்தான் அயோத் தீயை தொடர்ந்து இந் தீ!

எனவே இப்போதுள்ள ஒரே கேள்வி! இந்தி ஆதிக்கம் தனது பாய்ச்சலை நிறுத்திக்கொள்ளப் போகிறதா? அல்லது அந்த ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த அறப்போருக்கான நாள் குறிக்கப்பட வேண்டுமா? என்பதுதான்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

06-01-1993

2001. வெறிக்கும் பற்றுக்குமுள்ள வித்தியாசம்!

உடன்பிறப்பே,

கேரளத்துப் பிரபல எழுத்தாளர் - செம்மீன் என்ற புதினத்தின் வாயிலாக மாபெரும் சமூகப் புரட்சியை விளைவித்த வித்தகர் அண்மையில் ஞானபீட விருது பெற்ற - தகழி சிவசங்கரன் பிள்ளை, இன்றைய நாட்டு நிலை குறித்து தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளதோடு - சமுதாய முன்னேற்றத்துக்கும், வகுப்புவாத உணர்வும், மதப் பூசலும், ஆதிக்க சக்திகளின் மிரட்டலும் நாட்டின் ஒற்றுமைக்குக் கேடு விளைவித்துவிடும் என்பதை எடுத்துக்காட்டுவதற்கும், எழுத்தாளர்கள் அணி திரள வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

திருவனந்தபுரம் பத்திரிகையாளர்களின் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் அவர் கலந்து கொண்டபோதுதான் இந்தக் கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

அயோத்தியில் பாபர் மசூதி தகர்க்கப்பட்டதையொட்டி, இந்தியாவில் குமுறலும், கொந்தளிப்பும் மிகுந்துள்ள இந்தச் சமயத்தில் புகழ்மிக்க எழுத்தாளர்கள் பலரும், பிரபலமான ஏடுகள் பலவும் மௌனம் கடைப்பிடிப்பது இந்திய மக்களை பிளவுபடுத்தும் தீய சக்திகளுக்கு இடமளித்து; அவற்றுக்கு ஊக்கமும் துணிவும் ஏற்படுத்தி விடக்கூடும் என்ற அச்சத்தையும் அவர் உணர்த்தியுள்ளார்.

அனைத்தும் துறந்தவர்கள் எனக் கூறப்படும் சாது சந்நியாசிகள் சுயநலக்காரர்களின் கைப்பாவைகளாக ஆகி, பாபர் மசூதி இடிப்பில் பங்கு கொண்டதை, திரு. தகழி வன்மையாகக் கண்டித்து அந்த நிகழ்ச்சியில் பேசியிருக்கிறார்.

மக்களை பிளவுபடுத்தும் சக்திகளுக்கு எதிராக, எழுத்தாளர்கள் எழாமல் மௌனமாக இருக்கிறார்கள் என்பது, தகழி

அவர்களின் குற்றச்சாட்டாக வெளிப்படும் அதே நேரத்தில் - சில எழுத்தாளர்கள் அல்லது பத்திரிகை ஆசிரியர்கள், தங்களின் இந்து மதப்பற்றை வெளிக்காட்டிக் கொள்வதோடு மட்டும் நின்றிடாமல், அறிந்தோ அறியாமலோ இந்துமத வெறியாட்டங்களுக்கும் துணை போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அதனால் நாடும், நாட்டு மக்களும் பிளவுபட்டுச் சிதறும் பேராபத்து ஏற்படக் கூடும் என்பதையும் மறைப்பதற்கில்லை.

இந்து மதப்பற்று என்பது வேறு - இந்து மதவெறி என்பது வேறு - பற்று என்பது ஒன்றின் மீது ஆழ்ந்த அன்பு கொள்வது. அதனைக் காத்திட தியாகம் கூட செய்வது! வெறி என்பது அப்படியல்ல. தான் விரும்புகிற அல்லது பற்றுக் கொண்டுள்ள ஒன்றைத் தவிர, அதன் ஆதிக்கத்தைத் தவிர, வேறெதுவும் அதுபோல இருக்கவே கூடாது. இருந்தால் அதனை அழித்தொழிக்க முனைவது தான் வெறி என்பதாகும்!

இந்த வெறி கூடாது என்பது போலப் பாவனையாக எழுதுகிறவர்கள், பேசுகிறவர்கள், குறிப்பாகச் சில பத்திரிகைக்காரர்கள் - அந்த வெறிக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் வெளியிடும் செய்திகள், எழுதிடும் கட்டுரைகள் வாயிலாக நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

இன்றுகூட எக்ஸ்பிரஸ் ஏட்டில் ஒரு தலைப்பு கண்டேன். Ram is Constitutional entity **"இராமர் அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப் பட்டவர்"** என்பதுதான் அந்தத் தலைப்பு!

பாபர்மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் உள்ள தற்காலிக கோயிலில் இருக்கும் இராமர் சிலைக்கு பூஜை செய்யலாம், தரிசனத்துக்கு மக்கள் அனுமதிக்கப்படலாம் என அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் லக்னோ கோர்ட் அளித்துள்ள தீர்ப்பில் - அரசியல் சாசனம் எழுதப்பட்ட மூலப் புத்தகத்தில் இராமர் படம் உள்ளது என்று சான்று காட்டியுள்ளதாம் - அதற்குத்தான் இவ்வளவு பெரிய தலைப்பு!

அந்த லக்னோ நீதிமன்றம் அரசியல் சாசனத்தில் இராமர் படம் மட்டுமா இருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளது?

அரசியல் சாசன ஒரிஜினலில் ஒட்டப்பட்டுள்ள படங்களில் மொகஞ்சொதாராவின் எருதுப் படமும் இருக்கிறது. வேத ஆஸ்ரமப்

படமும் உள்ளது. கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு கீதா உபதேசம் செய்யும் படமும் இருக்கிறது. புத்தர் சித்திரமும், மகாவீரர் சித்திரமும் ஒட்டப்பட்டிருக்கிறது. அசோகன், அக்பர், விக்ரமாதித்தன், சிவபெருமான், நடராசர், குரு கோவிந்த் சிங், காந்தி அடிகள், நேதாஜி, லட்சுமிபாய், இமயமலை, பாலைவனம், கடல் இப்படிப் பல படங்கள் அந்த அரசியல் சாசன மூலப்புத்தகத்தில் உள்ளன என்று லக்னோ நீதிமன்றமே எடுத்துக் காட்டியுள்ளது.

அரசியல் சாசனத்தில், அதுவும் இராமன் சீதையை மீட்கப்போன கட்டம் படமாக ஒட்டப்பட்டிருப்பதால் - இராமர் சிலையை, பிரச்சினைக்குரிய இடத்தில் வைத்து தரிசிக்கலாம் என்றால், அரசியல் சாசன மூலப் புத்தகத்தில் அக்பர் படம் இடம் பெற்றுள்ளதே! அந்த அக்பரின் பாட்டனார் பாபர் கட்டிய பாபர் மசூதியை இடிக்கலாமா எனும் கேள்வி எழாதா?

அரசியல் சட்டம், அரசியல் சாசனம் என்பது எண்களால், எழுத்துக்களால் உருவானது!

அதன் மூலப்புத்தகத்தில் ஒட்டப்பட்டுள்ள படங்கள், சித்திரங்கள் - இந்தியா என்பது பல மதங்கள், பல தேசிய இனங்கள், பல மொழிகள், பல கலாச்சாரங்கள் கொண்ட வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடு என்பதை மட்டுமே விளக்குகின்றன!

அந்த உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டுவதை விடுத்து, அரசியல் சட்டமே அயோத்தி இராமரை அங்கீகரித்துவிட்டது என்ற தலைப்பு வெளியிட்டு இந்து மத வெறியர்களின் கையில் ஒரு கடைக்கலனை எடுத்துக் கொடுப்பது எப்படி நியாயமாகும்?

இதையெல்லாம் எண்ணி ஆதங்கப்பட்டுத்தான் தகழியார், பத்திரிகையாளர் கூட்டத்தில், நாட்டு மக்களிடையே நல்லிணக்கத்துக்கு வழிகாட்ட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இதனை எத்தனை இதழாளர்கள், எழுத்தாளர்கள் கடைப்பிடிக்கிறார்கள் என்பதை எதிர்காலம் கணக்கிடத்தான் போகிறது.

அன்புள்ள,

மு. கருணாநிதி

08-01-1993

2002. கரம் கோத்து நின்றிடுக! கரசேவை விளைத்த கறை போக்கி வென்றிடுக!

உடன்பிறப்பே,

யார் வைத்த கொள்ளியோ வீடு பற்றி எரிகிறது எனக் கூறுவதுண்டு!

ஆனால், யார் தீ வைக்கப் போகிறார்கள் எனத் தெரிந்திருந்தும் - அவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டுமென நாட்டில் உள்ள பொறுப்பு வாய்ந்த கட்சிகள் எல்லாம் எச்சரித்திருந்தும் - மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு, மெத்தனப் போக்கில் நடந்து கொண்டு, அந்தத் தீப்பந்தமேந்திகளின் திருவிளையாடல்களை ரசித்து மகிழ்ந்த காரணத்தால், டிசம்பர் 6-ந் தேதி அயோத்தியில் மூட்டி விடப்பட்ட தீ இன்னமும் அணையாமல் எரிந்து கொண்டிருக்கிறது.

முதல் கட்டமாக நாடு முழுதும் ஆயிரத்துக்கு மேற்பட்ட உயிர்கள் பலி ஆயின. சில வாரங்கள் கூட ஆகவில்லை, அதற்குள் மராட்டிய மாநிலத்திலும், குஜராத்திலும் வன்முறைத்தீ கொழுந்து விட்டெரிவதன் காரணமாக மேலும் பல நூற்றுக்கணக்கான மக்கள் மாண்டு மடிந்துள்ளனர்.

மத ஒற்றுமையிலும், நல்லிணக்கத்திலும் வீசப்பட்ட கோடாரி, சமூக விரோதிகளுக்கு மெத்தவும் பயன்பட்டு - அவர்களும் தங்களின் ஆதிக்க எல்லையை விரிவுபடுத்திக் கொண்டு, இடையூறாக இருப்போரை எல்லாம் வெட்டிச் சாய்க்கின்றனர்.

இப்படி நாடு அமளிக் காடாகும் என்று அஞ்சித்தான், அயோத்தியில் கரசேவையை அனுமதிக்காதீர்கள் என்று எச்சரித்தோம். கரசேவை நடத்துவது மட்டும் அவர்கள் நோக்கமல்ல, அந்தப் பெயரால் பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்க வேண்டுமென்பதே அவர்களின் நோக்கம் - அந்த நோக்கம் வெற்றி பெற இடம் தரக் கூடாது என்று பாரதிய ஜனதா, அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகள் தவிர, நாட்டில் உள்ள மற்ற

எல்லாக் கட்சிகளும் எடுத்துச் சொல்லியும் அது, மத்திய காங்கிரஸ் அரசைப் பொறுத்தவரையில் செவிடன் காதில் ஊதிய சங்காகவே போய் விட்டது.

இன்று நிலை என்ன? நல்லிணக்கத்துடனும், சகோதர உணர்வுடனும் வாழ்ந்த மக்களிடத்திலே விரோதம், வெறுப்பு, வெட்டு, குத்து என ஒவ்வொரு நாளும் செய்திகள்! பம்பாய் நகரில் மக்களை உயிரோடு கொளுத்திச் சாம்பலாக்குகிற அளவுக்கு கொடுமை உச்சகட்டத்திற்குச் சென்றுள்ளது. அங்கு கொல்லப்பட்டோர் எண்ணிக்கை மட்டும் அதுவும் இந்த இரண்டாவது தவணையில், நூற்றிஐம்பதைத் தாண்டுகிறது என்கிறபோது அந்த மாநிலத்திலும் சரி, குஜராத்திலும் சரி - சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறது என்று யாராவது கூற முடியுமா?

ஆனால் காங்கிரஸ்காரர்கள் அப்படித்தான் கூறுவார்கள். அவர்களுக்கு அவர்களின் சொந்தக் கட்சி ஆளுகிற மாநிலத்தில், சூறை - கொள்ளை - கொலை - குருஷேத்திர யுத்தம் போல் இருபுறமும் வன்முறைச் சாவுகளின் பெருக்கம் எவ்வளவு இருப்பினும், அந்த மாநிலம் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கிற மாநிலமாகவே அவர்களின் கண்களுக்குத் தெரியும்.

தி.மு.க. ஆட்சி நடக்கிற தமிழ் மாநிலமாக இருந்தால் மட்டுமே, கவர்னர் அவர்களே சட்டம் ஒழுங்கு நன்றாக இருக்கிறது எனச் சான்று கூறினும், அவரிடம் அறிக்கை பெறாமலேகூட ஒரே நொடியில் கலைத்து விடுவார்கள். என் செய்வது, அப்படியொரு கலாச்சாரத்தில் மூழ்கித் திளைத்து விட்டார்கள்.

மாநிலங்களில் உள்ள காங்கிரஸ்காரர்களுக்காகட்டும், மத்தியில் உள்ள காங்கிரஸ் காரர்களுக்காகட்டும், சட்டம் ஒழுங்கு காக்கப்பட வேண்டுமென்பதில் உள்ள அக்கறையை விட, அவர்கள் அரசியல் ஆதாயத்தை நிலைக்கச் செய்வதிலும் - விரிவாக்குவதிலும் தானே நாட்டம் அதிகம்!

இல்லாவிட்டால், அமைதியாக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் மேற்கு வங்கத்தில் ஒரு மத்திய அமைச்சரே முகாம் அமைத்துக் கொண்டு வன்முறைக் கிளர்ச்சிகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பாரா?

உளவு நிறுவனங்கள், அதிகாரிகள், அனைவருமே அறிவித்திருந்தும்கூட அதனை அலட்சியப்படுத்தியதோடு,

இராணுவத்தினரையும் - போலீசாரையும் செயல்படவிடாமல் மத்திய அரசு மௌனம் சாதித்ததால்தானே, நானூறு ஆண்டுக்காலப் பழம் பெரும் கட்டிடத்தை - விண்ணோக்கி நின்ற வலிமை வாய்ந்த அந்தக் கட்டிடத்தில் வனப்புமிகு விதானங்களை - காலை முதல் மாலை வரையில் கரசேவகர்கள் இடித்து நொறுக்கினார்கள். கல்யாண்சிங் கையிலே சட்டமும் ஒழுங்கும் காப்பாற்றுகிற அதிகாரம் இருந்தது என்று கூறப்படுமேயானால், அவரிடமிருந்து டிசம்பர் 7-ந் தேதி பறித்துக் கொண்ட அதிகாரத்தை டிசம்பர் 5-ந் தேதியே பறித்துக் கொண்டிருந்தால், பாபர் மசூதி பாதுகாக்கப்பட்டிருக்குமல்லவா?

கடமையும் பொறுப்பும் உள்ள இடத்தில் அமர்ந்திருக்கும் பிரதமர் நரசிம்மராவ் அவர்கள், கைகட்டிக்கொண்டிருந்த காரணத்தால் அல்லவா, இன்று இந்திய நாட்டின் நிலை கண்டு மாற்றார் கை கொட்டிச் சிரிக்கக் கூடிய நிலைமை வந்துவிட்டது.

உடன்பிறப்பே, பொறுப்பிலே அமர்ந்துள்ளோர் தமது பொறுப்பினைத் தட்டிக் கழித்து விட்டாலும் கூட - சிறுபான்மை சமுதாயத்து மக்களாகிய இஸ்லாமியரும், கிறிஸ்தவரும் இந்த நாட்டில் கணிசமான மக்கள் தொகையினர் என்பதையும், அவர்களும் ஏனைய சமுதாயத்தினரும் - இந்து என்றோ, இஸ்லாமியர் என்றோ, கிறிஸ்தவர் என்றோ, சமண பௌத்தர் என்றோ, சீக்கியர் என்றோ, எச்சமுதாயத்தினராயினும் அவர்கள் அனைத்து மக்களும் உடன்பிறப்பு உணர்வோடு வாழ்ந்திட வேண்டுமென்ற எண்ணம், இன்று நேற்றல்ல - நமக்கு என்றைக்கும் உண்டு!

என்ன நடக்குமோ என்ற அச்ச உணர்வுடன் சிறுபான்மை மக்கள் வாழ வேண்டிய நிலையின்றி, அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டிய கடமையை எல்லா தரப்பினருக்கும் உணர்த்திடவே தி.மு.க. உள்ளிட்ட தேசிய முன்னணி - இடது சாரிக் கட்சிகளின் கூட்டமைப்பு பெருங்கவலை கொண்டு, அதற்கான சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பெரியாரும், அண்ணாவும் பக்குவப்படுத்திய நிலம் இது! பண்பாடு காத்திடும் மனவளம் கொண்ட மண்! கட்சிகளை, மதங்களைக் கடந்து ஒருவரோடு ஒருவர் தூய அன்பும், தொடரும் உறவும் கொண்டு வாழ்கின்ற மக்கள்!

அதற்கோர் சிறு ஊனமும் விளைந்து விடாமல் இருக்க வேண்டுமென்பதற்காகவே, இத்திங்கள் 20-ஆம் நாள் மனிதச் சங்கிலி - மனித நேயம் காக்கும் சங்கிலி - மாசு மருவற்றுத் துடிக்கும் இதயங்களை இணைக்கும் சங்கிலி -

அந்த பெரு முயற்சி வெற்றி பெற மாநில முழுதும் - எல்லா ஊர்களிலும் - கரம் கோத்து நின்றிடுக! கரசேவை? யால் ஏற்பட்ட கறை போக்கிடும் பணியில் வென்றிடுக!

அன்புள்ள,

மு. கருணாநிதி

12-01-1993

2003. விதியே! விதியே! தமிழச் சாதியை என் செய நினைத்தாய்?

உடன்பிறப்பே,

"விதியே! விதியே! தமிழச் சாதியை
என் செய நினைத்தாய்?"

என்று பாரதியார் பாடினார். விதியின் மீது எனக்கு நம்பிக்கையில்லை. பாரதியாருக்கும் இருந்திருக்க முடியாது. ஊழையும் உப்பக்கம் காண்பர் என்ற குறளை அவர் படித்தவர் மட்டுமல்ல. அந்த ஆவேசத்தை அவர் பாடல்கள் பலவற்றில் காணவும் முடியும். பிறகேன், அவர் விதியிடம் அந்த வினாவை எழுப்பினார்? நல்லவை கெட்டவைகளுக்குக் காரணம் நீதான் என்று சொல்கிறார்களே? அது உண்மையானால் - விதியே! விதியே! தமிழச்சாதியை என் செய நினைத்தாய்? என்றுதான் கேட்கிறார்.

பாடலில் அவர் அழுத்தம் கொடுப்பது விதியின் செயலுக்கு அல்ல. தமிழச் சாதியின் வீழ்ச்சி கண்டு எழும் குமுறலுக்கு! கொந்தளிப்புக்கு!

கவிஞரின் நெஞ்சில் எழுந்த அந்த ஆதங்கம் இன்று, நம் நெஞ்சங்களிலும் கனன்று கொண்டு தானே இருக்கிறது.

ஈழத்தமிழர்கள் இங்கு அகதிகளாக வந்து எத்தனையோ இன்னல்களைச் சுமந்து கொண்டு வாழ்வை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலங்களில் எம்.ஜி.ஆர். அரசும் சரி, கழக அரசும் சரி, அந்த அகதிகளுக்காக, காட்டிய பரிவும், அக்கறையும் இப்போதுள்ள அரசினால் காட்டப்படுவதில்லை. எனவே அங்கும், இங்கும் அந்த ஈழத்தமிழ் மக்களுக்கு அமைதியில்லை!

காவிரிப் பிரச்சினையைச் சாக்கிட்டு கர்நாடகத் தமிழர்கள் வதைக்கப்பட்டார்கள். அவர்கள் உடைமைகளையும்

உயிர்களையும் பறிகொடுக்க வேண்டியதாயிற்று. அவர்களது இழப்பீட்டுக்காக உதவி புரிய கோடிக்கணக்கான ரூபாய்கள் அறிவிப்புடன் நின்றுவிட்டது. இப்போது அந்தக் கர்நாடகத் தமிழர்கள் என்ன கதியானார்கள்? இங்கும் அங்கும் என்று எண்ணிப்பார்த்திடவோ, கவலைப்படவோ இங்குள்ள அரசுக்கு நேரமில்லை. அந்தத் தமிழர்கள் மறக்கப்பட்டவர்களாகவே ஆகி விட்டார்கள்.

இதோ! கரசேவை என்ற பெயரால் கபாலிகர் அயோத்தியில் கலாம் விளைத்ததின் காரணமாக பம்பாய்த் தமிழர்களும், ஆமதாபாத் தமிழகர்களும் நூற்றுக்கணக்கில் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆடவரும், பெண்டிரும், அன்பு மழலைகளும் தீ வைத்துக் கொளுத்தப் பட்டுக் கொல்லப்பட்டுக் கருகிய பிணங்களாக தெரு வீதிகளில் கிடக்கிற காட்சிகளைக் காணும் போது கல்நெஞ்சும் பிளந்துவிடும். அங்கு வாழ்வதற்கு பாதுகாப்பின்றி, தமிழகம் நோக்கி ஓடி வரும் தமிழர் குடும்பங்களின் எண்ணிக்கை நாள் தோறும் பெருகிக் கொண்டிருக்கிறது.

தமிழர்களின் கடைகளுக்குத் தீ! அவர்தம் உடைமைகள் நொறுக்கப் படுகின்றன! இளைஞர்களைக் கட்டி வைத்து அவர்களது விரல்களை வெட்டியெறிவது வெறியர்களுக்கு பொழுது போக்காம் - தமிழ் மக்களின் குரல்வளையில் கத்தி, கட்டாரி கொண்டு குத்திக் கிழித்து கோர நர்த்தனம் ஆடுகிறார்களாம்! தப்பித்துத் தமிழகம் வந்துள்ள அந்த மக்களைக் கேட்டால் அய்யோ! எத்தனை எத்தனை கண்ணீர்க்கதைகள்!

இந்தியா ஒரு நாடுதானே - எங்கே மக்கள் அதை மறந்து விடப் போகிறார்களோ என்றுதானே - அடிக்கடி தொலைக்காட்சியில், காஷ்மீர் உடை அணிந்தோரையும், கன்யாகுமரிக் கடலில் கட்டுமரம் விடுவோரையும் - பஞ்சாபியர், மராட்டி, வங்கத்தார், குஜராத்தியர், அசாமியர், ஆந்திரர், கர்நாடகர், கேரளத்தார் - எனப் பல்வேறு மாநில தேசிய இனத்தவரையும் வண்ண வண்ண காட்சிகளாக்கிக் காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இந்தியாவுக்குள்ளேயே மராட்டியத்தில் தமிழன் விரட்டப்படுகிறான். கொல்லப்படுகிறான். குஜராத்திலும் இதே கொடுமை தொடருகிறது. கர்நாடகத்தில் அவனுக்கு உரிய பாதுகாப்பு இல்லை.

தமிழனுக்கு மட்டுமா இப்படியொரு வேதனையான நிலை?

நாடு சுதந்திரமடைவதற்கு முன்பு ஆடுவோமே! பள்ளு பாடுவோமே! ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே! எனப் பாடிய பாரதி, அப்பொழுதே, விதியே! விதியே! தமிழச் சாதியை என் செய நினைத்தாய்? எனக்குரையாயோ? எனக் கேட்டுவிட்டுத் தொடர்ந்து கண்ணீருடன் பாடுகிறார்.

“ஆப்பிரிகத்துக் காப்பிரி நாட்டிலும்
தென் முனையடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத்துள்ள
பற்பல தீவினும் பரவி இவ்வெளிய
தமிழ்ச் சாதி, தடியடி உண்டும்
காலுதையுண்டும், கயிற்றடி உண்டும்
வருந்திடும் செய்தியும் மாய்ந்திடும் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது
செத்திடும் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலையுள்ளதும்
நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்
இஃதெலாம் கேட்டும் எனதுள்ளம் அழிந்திலேன்”

விதியே! விதியே! தமிழச்சாதியை என் செய நினைத்தாய்? என வெகுண்டு கேட்ட பாரதியார், தமிழர்கள் பல நாடுகளில் படும் துயரை விவரித்து விட்டு, அவர்களைக் காத்திட இயலும் என்ற உள்ள உறுதியைப் பெற்றுக் கவிதை இயற்றினார். இஃதெல்லாம் கேட்டும் எனதுள்ளம் அழிந்திலேன் என்று!

ஆனால் இன்று? பாரதி விவரித்துள்ள வேதனை அனைத்தும் தமிழனுக்குப் பிறநாடுகளில் மட்டுமல்ல. சுதந்திரத் திருநாடாக விளங்கும் சொந்த நாட்டிலேயே இன்றைக்கு!

இன்று பாரதி இருந்தால் ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாட முடியுமா? ஆட முடியுமா?

தமிழன் அகதியாகிறான்;
ஆனாலும் பொறுமையாக இருக்கிறான்!

தமிழன் அடிபடுகிறான்;
அப்போதும் பொறுமை காக்கின்றான்!

தமிழன் இந்தியாவுக்குள்ளேயே இது உன் நாடல்ல எனக் கூறி விரட்டப் படுகிறான். பிறகு வேறு எது என் நாடு? எனக் கேட்கப் பயந்து பொறுமையாகக் கிடக்கிறான்!

புழுப்போல் நெளிகிறான் - பொட்டுப் பூச்சி போல் வாழ்கிறான்-

என் செய்வது! பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு திறந்தது என்ற புரட்சிக் கவிஞரின் பாட்டு தமிழனை என்றைக்குத் தட்டி எழுப்பப் போகிறதோ, அதுவரையில் அவன் விதியே! விதியே! தமிழச் சாதியை என் செய நினைத்தாய்? என்று புலம்பிக் கொண்டிருக்க வேண்டியதுதானா? இந்தக் கேள்வியிலே பதிலும் அடங்கியிருக்கிறதே!

அன்புள்ள,

மு. கருணாநிதி

13-01-1993

2004. ஆப்பசைத்த குரங்கு போல அவர்களே அகப்பட்டுக் கொள்வர்!

உடன்பிறப்பே,

ஓர் அமைச்சரின் உளறல் - இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி போன்ற ஏடுகளில் வெளியிடப்பட்ட செய்திகள் - இவை குறித்து நமது தலைமைக் கழகச் செயலாளர் அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமி வெளியிட்டுள்ள அறிக்கையைப் படித்திருப்பாய்.

கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக மத்திய மாநில உளவுத் துறை அதிகாரிகளும் - அவர்களின் தங்குமிடமாக உள்ள பத்திரிகை அலுவலகங்களும் - தம்பி கோபால்சாமி மீது மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டவர்கள் போல, அவரைக் கழகத்திலிருந்து விலக்கப் போவதாக ஒரு செய்தியை இட்டுக் கட்டி, அதனால் கழகத்திற்குள் ஏதாவது கலகம் விளைவிக்கலாம் என்று திட்டம் போட்டுச் செயல்பட்டனர். அவர்களின் திட்டத்தை நானே பல முறை உன் போன்ற உடன்பிறப்புகளுக்கு வெளிப்படையாக எடுத்துச் சொல்லியும் எழுதியும் எச்சரித்து விட்ட காரணத்தால், கழகத்துக்குள் குழப்பம் ஏற்படுத்த முனைந்த குள்ளநரிகள் ஓய்ந்து போய் உட்கார்ந்து விட்டன.

ஆனால் இப்போது, தம்பி கோபால்சாமி மீது அந்த அதிகாரிகளும் அவர்களுக்குத் துணையாகத் தொண்டாற்றும் செய்தி நிறுவனங்களும், கதையையே மாற்றி - அன்று கோபால்சாமிக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டவர்கள் போல நிழலோடு யுத்தம் நடத்தியவர்கள், இன்று, நாலாண்டுகளுக்கு முன்பு அவர் இலங்கை சென்று வந்த நிகழ்ச்சியை பெரிதுபடுத்தி அவரைக் கழகத்திலிருந்து அந்நியப் படுத்தலாமா என்று சரி செய்து பார்க்கிறார்கள். பாவம்! பலிக்காத முயற்சி!

1983 முதல் இந்திராகாந்தி காலத்திலும் - அதன்பிறகு ராஜீவ்காந்தி காலத்திலும் - மாநிலத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சி

நடைபெற்ற காலத்திலும் இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்காக எத்தனை எத்தனை முகாம்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன - எத்தனை ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் அந்தப் போர்ப்பயிற்சிக்கு அமர்த்தப்பட்டனர் - எத்தனை கோடி ரூபாய் கறுப்புப்பணமாகவும், காசோலையாகவும் அவர்களுக்கு வழங்கப்பட்டது - எத்தனை கோடி ரூபாய்க்கு அவர்களுக்கு ஆயுதங்கள் வாங்கித் தரப்பட்டன - எத்தனை பெரிய நட்சத்திர ஓட்டல்களில் அவர்களை டெல்லியிலும், பெங்களூரிலும் தங்க வைத்து, ராஜீவ் காந்தி, எம்.ஜி.ஆர். ஆகியோர் அழைத்துப் பேசினர் என்பதெல்லாம் மறந்து விட்ட கதைகள் என சில மண்ணாந்தைகள் எண்ணிக் கொண்டு, மறுபடியும் மறுபடியும் தி.மு.க. மீது மண்ணைவாரி இறைத்திட முற்படுகின்றன.

1984-ஆம் ஆண்டு சென்னை விமான நிலையத்தை வெடிகுண்டு வைத்து தகர்த்தது யார்? அந்த நிகழ்ச்சியில் விமான நிலையம் இடிந்து நொறுங்கியதா இல்லையா? நாற்பது பேர் பயணிகள், சிப்பந்திகள் பிணங்களாக ஆனார்களா இல்லையா? அந்தக் கொடுமை செய்தோர் தப்பியது எப்படி? ஓரிருவர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கும் ஒரு காங்கிரஸ் நண்பர் ஜாமீன் கொடுத்து விடுதலை செய்து, அவர்களையும் தப்பவிட்டது உண்டா இல்லையா? இந்தப் பயங்கரப் படுகொலை நிகழ்ச்சி நடந்தபோது இங்கே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தானே!

தி.மு.க. ஆட்சியில் பத்மநாபா படுகொலை 1990-ஆம் ஆண்டு நடைபெற்றது. போராளிகள் ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்றும், சகோதரயுத்தம் கூடாதென்றும் நான் அடிக்கடி வேண்டுகோள் விடுத்தும் அவர்களுக்குள் மோதிக்கொண்டார்கள். நண்பர் பத்மநாபாவும், அவரது கூட்டாளிகளும் கொலைவெறிக்கு ஆளானார்கள்.

அதன்பிறகு கழக ஆட்சியில் இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் பல பிரிவினரும் தனித்தனி முகாம்களில் அடைக்கப்பட்டனர். குறிப்பாக விடுதலைப்புலிகள் முப்பது பேர், பாதுகாப்புக் கைதிகளாக வைக்கப்பட்டனர். ஈழத்தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகவும், உரிமைக்காவும் கழக அரசு அக்கறை கொண்டிருந்த அதே நேரத்தில், போராளிகள் தமிழகத்தை வன்முறைக் களமாக்கிடுவதை ஏற்கவில்லை என்பதற்கு இவை எடுத்துக்காட்டுகளாகும்!

ஆனால் அதே 1990 ஆம் ஆண்டுதான் - பத்மநாபா கொலை நடந்த இரண்டு மூன்று மாதம் கழித்து, இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி ஏடுகளுக்கு அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா பேட்டி கொடுத்தார். அந்தப் பேட்டியில் அவர் சொன்னது என்ன?

* விடுதலைப்புலிகள் இப்போது சரியாகி விட்டார்கள். அவர்கள் பற்றி எந்தப் பிரச்சினையும் இல்லை. அதனால், தமிழ்நாட்டு மக்கள் புலிகளுக்கு ஆதரவு தரவேண்டும்.

* பிரபாகரனுக்கு இலங்கையில் ஒரு தீங்கு என்றால் இங்கே தமிழ்நாடு கொந்தளிக்கும்.

* இலங்கைத் தமிழர் பிரச்சினையை விடுதலைப் புலிகளை நீக்கிவிட்டுப் பேச முடியாது.

* அதற்காக, இந்தியா பங்களாதேஷில் நடந்துகொண்டதுபோல் நடந்துகொண்டாலும், தவறில்லை.

* விடுதலைப் புலிகளுக்கு முதலமைச்சர் கருணாநிதி எந்த உதவியும் செய்யவில்லை. விடுதலைப்புலிகளுக்கு எம்.ஜி.ஆர். உதவி செய்ததுடன் ஒப்பிடும் போது கருணாநிதி எதுவும் செய்ததாகக் கூறவே முடியாது.

இவ்வளவும் ராஜீவ்காந்தி கொல்லப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்பு ஜெயலலிதா பத்திரிகைகளுக்கு - ஆம்! இந்து, எக்ஸ்பிரஸ், தினமணிக்கு சிறப்புப் பேட்டியாகக் கொடுத்ததாகும்.

நாலு ஆண்டுக்கு முன்பே நாட்டுமக்கள் அறிந்த ஒன்றான கோபால்சாமி இலங்கை சென்றுவந்த வீடியோ செய்தியை இப்போது வெளியிட்டு சூழ்ச்சி புரியும் அந்த ஏடுகள் - அன்று ஜெயலலிதா விடுதலைப் புலிகளை ஆதரித்து - அதுவும் 1990-ல் அளித்த பேட்டியை இப்போது மறு பிரசுரம் செய்யலாமே!

ஏன்! அவற்றை மீண்டும் பிரசுரித்திட கை கூசுகிறதா? கண் இருட்டுகிறதா? இல்லை! இல்லை - ஏதோ ஓர் உணர்வு தடுக்கிறது என்பது தானே உண்மை! ஆம் - உதிரத்தோடு கலந்த உணர்வு!

இல்லாவிட்டால் பொதுக்குழுவில் பேசிவிட்டு, பேசியதை மட்டும் வெளியிட்ட பத்திரிகைகளை, ஜெயலலிதா தாக்கி நான் அப்படிப் பேசவில்லை என மறுத்து மழுப்பிய போதும்கூட, இந்தப் பெரிய ஏடுகள் மண்டியிட்டுக் கிடக்குமா? என் செய்வது! விளம்பரக் கொழுக்கட்டையல்லவா, அந்த ஏடுகளின் வாயில் திணிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

ஜெயலலிதா, ஏடுகளுக்கு விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேட்டி கொடுத்தது மட்டுமல்ல - தேர்தலுக்குச் சில வாரங்களுக்கு முன்பு எம்.ஜி.ஆர். சிலையை ராஜீவ்காந்தி திறக்க வந்தபோது அந்த மேடையில் நின்று ஜெயலலிதா, ராஜீவ் முன்னிலையிலேயே - விடுதலைப்புலிகளுக்கு மத்திய மாநில அரசுகள் உதவிட வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினாரா இல்லையா? அப்போது ராஜீவ் காந்தி பிரதமராக இல்லை - ஆனாலும் ஜெயலலிதா அந்த மேடையில் விடுதலைப்புலிகளுக்காகப் பரிந்து பேசினார்.

புலிகளுக்கு அஸ்திவாரம் அமைத்துக் கொடுத்ததே தி.மு.க.தான் என்று சூதுமொழி பேசும் சோணகிரிகளுக்கு - ராஜீவ்காந்தியின் படுகொலைக்கு முன்பு தேர்தல் பிரச்சாரத்தில் அ.தி.மு.க. ஒட்டிய சுவரொட்டிகளில் பெரும் பாலானவை விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் - அவர்களைக் கழக அரசு கைவிட்டு விட்டது என்று குறை கூறியும் ஒட்டப்பட்டவைதான் என்ற உண்மை புரியாமலா இருக்கிறது! புரிகிறது! புரிந்தாலும்கூட தி.மு.க.வை நினைத்தால் அதுகளுக்கு நெஞ்சு எரிகிறது!

இத்தனைக்கும் ஈடு கொடுத்து - பெருந்தோல்வியைத் தாங்கிக்கொண்டு - இன்னமும் தலைதாழாச் சிங்கமாக - தன்மானக் கோட்டமாக இந்த இயக்கம் இருக்கிறதே - என்ற எரிச்சல்!

அதனால்தான், சுப்புலட்சுமி ஜெகதீசனை எப்படி வேட்பாளராக அறிவிக்கலாம் என்கிறார்கள்!

கோபால்சாமி மீது குற்றம் சாட்டுகிறார்கள்!

இந்த இருவரையும், கழகத்துக்குப் பகைவர்களாக்கக் கயவர்கள் போட்ட திட்டம் இருவரிடமும் பலிக்கவில்லை.

இப்போது இருவரையுமே பழிதீர்க்கலாமா என்று எண்ணுகிறார்கள்.

அந்த இழிதகையோர் எண்ணத்தில் மண்தான் விழுமே தவிர, ஏதோ என்றைக்கோ ஒன்றிரண்டு வீடணர்கள் விலைக்குக் கிடைத்தார்கள் என்ற நம்பிக்கையில், எவர் வால் நீட்டினாலும் ஆப்பசைத்த குரங்கு போல, அவர்களே அகப்பட்டுக் கொள்வர் என்பது மட்டும் உறுதி! திண்ணம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

14-01-1993

2005. ஆளுநர் எடுக்கப் போகும் முடிவு என்ன?

உடன்பிறப்பே,

நேரு ஸ்டேடியத்தை திறந்து வைக்க பிரதமர் நரசிம்மராவ் ஒப்புதல் கொடுத்து விட்டார். வாழப்பாடியார், வாசலில் கால் கடுக்கக் காத்திருந்தும் கிடைக்காத வரமாக, ராஜீவ் காந்தி சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்வதாக, பிரதமரின் வேண்டுகோளுக்கு ஜெயலலிதா இணக்கம் தெரிவித்துவிட்டார் - ஜெயலலிதா வீட்டில் பிரதமர் மதிய விருந்து அருந்துகிறார் - இந்தச் செய்தியையும், பிரதமரே நேரடியாகக் கேட்டபிறகே ராஜீவ்காந்தியின் சிலை திறப்பு விழாவுக்கு முதலமைச்சர் ஒப்புதல் தந்தார் என்ற செய்தியையும், தமிழக அரசே ஏடுகளுக்கும், செய்தி நிறுவனங்களுக்கும் கொடுத்துள்ளது. நேரு விளையாட்டு அரங்கம் திறப்பு விழாவையொட்டி, இதுவரை இல்லாத அளவுக்கு பூதாகாரமான கட் அவுட்டுகள் சென்னை மாநகர முழுதும் வைப்பதற்கு கோபுரம் உயரத்துக்குக் கொம்புகள் கட்டப்படுகின்றன. ஒருவேளை விலைவாசி உயர்வை எட்டிப் பிடிக்கும் முயற்சியாக இருக்கலாம்

நேரு ஸ்டேடியத்தையொட்டி, ஜெயலலிதா உருவம் பதித்த ராட்சத பலூன்கள் வானத்தில் விடப்படுகின்றன. பனிரெண்டு லட்ச ரூபாய் செலவழித்து ராஜீவ்காந்தி சிலை திறப்பு விழாவை நடத்துவதாக வாழப்பாடி அவர்களின் அறிக்கை தினமலர் ஏட்டில் இன்று வெளி வந்துள்ளது. அண்ணா அறிவாலயத்தில் சில மாதங்களுக்கு முன்பு நாம் வைத்த அண்ணாவின் முழு உருவ வெண்கலச் சிலையே ஒரு லட்ச ரூபாய்தான் என்பதும், விழாச் செலவும் சுமார் அதே அளவுதான் என்பதும் குறிப்பிடத்தக்கது

எப்படியோ, பிரமாண்ட கட்அவுட்டுகள் - ராட்சத பலூன்கள் - ராஜீவ் சிலை திறப்பு விழாவுக்கு முதல்வர் கலந்துகொள்ள கடைசியாக இசைவு - பிரதமருக்கு முதல்வர் வீட்டில் விருந்து - இப்படியாகப் பரபரப்பான செய்திகளுக்கிடையே,

டெண்டர் விடாமல் கட்டப்பட்ட ரூ. 40 கோடி ஊழல் ஸ்டேடியம் என்ற குற்றச்சாட்டு மறைந்து விட்டதாக அந்த பத்திரிகைகளுக்கு ஓர் ஆறுதல்!

இந்தப் பரபரப்பில், உப்பிலியாபுரம் காவல் நிலையத்தில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. புகுந்து போலீசை உதைத்து, சிறையிலிருந்து 12 கைதிகளை விடுவித்த செய்தியும் ஒரு மூலைக்குப் போய்விட்டது.

அரசியல்வாதி வீட்டுக்குப் போக வேண்டிய - கத்தை கத்தையாக கரன்சி அடுக்கப்பட்ட சூட்கேஸ், பக்கத்திலிருக்கும் கிறிஸ்துதாஸ் என்ற அய்.ஏ.எஸ். அதிகாரி வீட்டுக்கு தவறுதலாகப் போய்விட்ட செய்தியும் முக்கியத்துவம் பெறாமலே முடங்கிவிட்டது.

எல்லாவற்றையும் விட, முக்கியமாக திரு. சுப்பிரமணியம்சுவாமி தாக்கல் செய்த வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்துள்ள உத்தரவு விபரத்தை - ஆங்கில ஏடுகளில் பூதக் கண்ணாடி வைத்துத்தான் தேடிப்படிக்க வேண்டும்.

முதல்வர் ஜெயலலிதாவுக்கு சொந்தமான ஜெயா பப்ளிகேஷன், அரசு மூலம் சட்டவிரோதமாக ஆதாயம் பெற்றது என்றும் - அந்தப் புகாரை தேர்தல் கமிஷனுக்கு முறைப்படி அனுப்பவேண்டிய கவர்னர் அனுப்பாமல் தாமதிக்கிறார் என்றும், செய்யப்பட்ட முறையீட்டை ஒட்டி, உச்சநீதிமன்றம், கவர்னர் தனது முடிவை 25-ந் தேதிக்குள் அறிவிக்க வேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

> கவர்னர் இந்தப் பிரச்சினையில் எடுக்கப் போகும் முடிவு, இந்தியப் பாராளுமன்ற, சட்டமன்ற மற்றும் கவர்னர், தேர்தல் கமிஷன் ஆகிய பொறுப்புகளில் இருப்போரைப் பற்றிய எதிர்கால நடவடிக்கைகளுக்கான சட்டரீதியான முன்மாதிரியாக அமையப் போகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இப்படி ஒரு மிக முக்கியமான பொறுப்பினை கவர்னர் மீது உச்சநீதிமன்றமே சுமத்தியிருக்கும் போது, கவர்னர் எந்த முதலமைச்சரைப் பற்றி வந்துள்ள புகாரில் தனது முடிவை எடுத்திட வேண்டுமோ, அந்த முதலமைச்சர் வீட்டில் பிரதமர் மதிய விருந்து அருந்திட வருகிறார் என்கிற போது - இதையும் மீறி இந்தக் கவர்னர்

செயல்படுவாரா என்ற ஐயப்பாடு, ஜனநாயகத்தின் மீதும், நேர்மை, நாணயம் இவற்றின் மீதும் நம்பிக்கையுள்ளவர்களுக்கு எழுவது இயல்புதானே?

என் செய்வது! ஒரு முதலமைச்சர் தன்மீது சாட்டப்படும் குற்றச்சாட்டுகளுக்குக் காட்டப்படும் ஆதாரங்களை மறுக்காமல், ஆமாம் உண்மைதான்! என்று ஒப்புக்கொண்டு, அவரது கட்சி மாநாட்டில், சட்டப் பேரவையில், அரசு விழாக்களில், பொதுக் குழுவில் இப்படி எல்லா இடங்களிலும் பேசிய பிறகும் நாம் கொடுத்த குற்றச்சாட்டு 18-லும் கவர்னர் ஆதாரமில்லை என்கிறார். - கேவலம்! விளம்பரப் பணத்துக்காக சில ஏடுகள் இந்தத் தமிழ் நாட்டின் எதிர்காலத்தையே இருண்டு போகச் செய்திட; தவறுகளுக்குத் தாளம் போட்டுக் கொண்டே இருக்கின்றன!

பத்திரிகைகள் ஒருபுறம் இருக்கட்டும். பத்து பனிரெண்டு நாடாளுமன்ற ஓட்டுக்களுக்காக, பிரதமர் நரசிம்மராவும் வாய்மூடி மௌனியாக இருந்துகொண்டு, இந்த ஊழலுக்கெல்லாம் ஊக்கமளித்து வருகிறாரே!

எல்லாம் ஆர். வெங்கட்ராமன் செயல் என்கிறார்கள்! இல்லாவிட்டால் சொந்த வீடு இருக்கும் போது, ஓய்வு பெற்றவருக்கு அரசாங்க வீடு அளிக்கப்பட்டிருக்குமா?

நல்லவேலைதான் அவருக்கு! அதை அவர் செய்யட்டும்! பிரதமர் நிகழ்ச்சியை உற்றுக் கவனித்தாயா? என்ன பந்தமும் பாசமும் பிணைந்துள்ள பக்தி பூர்வமான, மதம், சாதி - சார்பற்ற நிகழ்ச்சிகள்!

சங்கராச்சாரியார் சந்திப்பு,

ஜெயலலிதா வீட்டில் விருந்து.

வெங்கட்ராமன் வீட்டில் தேநீர்.

இதற்கு மேலும், நான் என்ன சொல்ல இருக்கிறது - விதைக்காது விளையும் கழனி என்று அண்ணா அவர்கள் சிவாஜி கண்ட இந்துராஜ்யம் நாடகத்தில் காகபட்டர் வேடத்தில் வசனம் பேசுவாரே நினைவிருக்கிறதா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

17-01-1993

2006. நெய்வேலிக்கு ஒரு பேச்சு!
நேரு ஸ்டேடியத்துக்கு மற்றொரு பேச்சா?

உடன்பிறப்பே,

இன்று ஏடுகளில் ஒரு செய்தி கண்டேன். நீயும் பார்த்திருக்கக்கூடும். நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் காண்ட்ராக்ட்கள் விடப்பட்டதில் பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றுள்ளதாகவும், அங்குள்ள அதிகாரிகள் மீது சி.பி.ஐ. விசாரணை மேற்கொள்ள வேண்டுமென்றும் அ.தி.மு.க. தொழிற்சங்கம் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது என்பதுதான் அந்தச் செய்தி.

ஊழல் எங்கு நடைபெற்றாலும், அதனை யார் நடத்தியிருந்தாலும், அது யாரால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தாலும் அந்தக் குற்றச்சாட்டு உண்மையாக இருக்கும்பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமே இல்லை.

அ.தி.மு.க. தொழிற்சங்கம், நெய்வேலி நிலக்கரி நிறுவன அதிகாரிகள் மீது சாட்டியுள்ள ஊழல் குற்றச்சாட்டு என்ன?

நெய்வேலி முதல் அனல் மின் நிலையத்தின் ஆயுட்கால நீட்டிப்பு திட்டப்படி, யூனிட்டுகளை புதுப்பிக்க வேண்டிய பணிக்காக ஓப்பன் டெண்டர் விடாமல், லிமிடெட் டெண்டர்கள் விடப்பட்டு பல கோடி ரூபாய் நஷ்டத்தை நிறுவனத்துக்கு ஏற்படுத்தியுள்ளனர்.

இதுதான் அ.தி.மு.க. தொழிற்சங்கம் குறிப்பிட்டுள்ள விரிவான குற்றச்சாட்டின் பொழிப்புரை.

இது பெரிய ஊழல் என்றும், அ.தி.மு.க. தொழிற்சங்கம் மத்திய அரசுக்கு எடுத்துக்கூறி சி.பி.ஐ. விசாரணையும் கோரியுள்ளது.

உடன்பிறப்பே, நெய்வேலி அ.தி.மு.க. தொழிற்சங்கத்தின் குற்றச்சாட்டு உண்மையெனில், அந்த ஊழலுக்கு யார் காரண கர்த்தர்களோ அவர்கள் மீது கிரிமினல் வழக்கு போடப்படவேண்டும். இதில் மறுபேச்சுக்கே இடமில்லை.

ஆனால் அதேநேரத்தில், தமிழக அரசில் ஒப்பன் டெண்டரோ அல்லது லிமிடெட் டெண்டரோ கூட விடாமல், அரசுக்குச் சொந்தமான பீர் தொழிற்சாலையை தனியாருக்கு விற்பனை செய்துள்ளார்களே - நாற்பது கோடி ரூபாய்க்கான நேரு ஸ்டேடிய பணியை எந்த டெண்டரும் விடாமல் தனியாருக்கு மொத்தப் பணியையும் தந்துள்ளார்களே - இதில் அரசுப் பணம் பல கோடி நஷ்டம் என்பதுடன், அரசு விதிமுறைகளும் மீறப்பட்டுள்ளதே - லஞ்சம் பெறப்பட்டுள்ளதே- ஆமாம்! டெண்டர் விடாமல்தான் தனியாருக்குக் கொடுத்தோம் என்று முதலமைச்சரும், அமைச்சரும் ஒப்புக் கொண்டே பேசியிருக்கிறார்களே - அந்த ஊழல் ஸ்டேடியத்தை நேரு என்று புனிதப் பெயரால் திரைபோட்டு மறைத்துக் கொண்டு - அதற்கு உடந்தையாக நரசிம்மராவும் இருக்கிறார் என்று காட்டிடும் வண்ணம், அவரை அழைத்தே திறப்பு விழா நடத்தப்பட்டுள்ளதே - வெற்றி பெற்றோருக்கு பரிசளிப்பு விழா என்று, அண்ணா நினைவு நாளன்று மாநகர் முழுதும் முதல்வரின் கட்அவுட்டுகளை வைத்து, நேரு ஸ்டேடிய வாசலிலும் மலர்ப்பாதை அமைத்து அதில் முதல்வரின் காரைச் செலுத்தி - விழா நடத்தப்பட்டுள்ளதே - நெய்வேலி அ.தி.மு.க. தொழிற்சங்கத் தினருக்கு அங்குள்ள அதிகாரிகள் ஒப்பன் டெண்டர் விடாதது ஊழலாகத் தெரியும்போது, இங்கு ஒரு டெண்டருமே விடாதது இங்கேயுள்ள அ.தி.மு.க.வினருக்கு ஊழலாகத் தெரியாதது ஏனோ?

உடைந்த ஊழல் சட்டிகள் இரண்டுமே மண் சட்டிகள்தான்!

ஆனால், அதை சென்னையில் உள்ள மாமியார் உடைத்தால் மண் சட்டி என்றும், நெய்வேலி மருமகள் உடைத்தால் மட்டும் பொன்சட்டி என்றும் கூறலாமா?

இரண்டுமே ஊழல்கள்தான் என ஒப்புக் கொள்ள வேண்டாமா? உள்ளத்தில் ஒளி இருந்தால்! அப்போதுதானே வார்த்தையிலும் ஒளி இருக்க முடியும்?

அந்த ஒளியற்றவராக இங்குள்ள கவர்னர் இருப்பதால்தானே? டெண்டர் விடவில்லை என்பதை ஜெயலலிதா அரசே

வெளிப்படையாக ஒப்புக் கொண்ட பிறகும், தி.மு.க. தந்த குற்றசாட்டில் ஆதாரமில்லையென ஒரு அண்டப் புளுகை அவிழ்த்து விட்டார்!

புளுகியதோடு நிற்கவில்லையே அவர். இன்று பிப்ரவரி 4-ஆம் நாள் ஆற்றியுள்ள உரையிலும் அந்த ஸ்டேடியத்தைப் புகழ்ந்து தள்ளியுள்ளாரே!

நெய்வேலிக்கு ஒரு பேச்சு! நேரு ஸ்டேடியத்துக்கு மற்றொரு பேச்சா? அங்கே ஊழலுக்காக உரத்த குரல் எழுப்பியுள்ள அ.தி.மு.க. தொழிற்சங்கம் இதனை எண்ணிப் பார்க்கிறதோ இல்லையோ, இங்கே அ.தி.மு.க.வினர் எண்ணிப் பார்ப்பார்களா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

05-02-1993

2007. உனக்கும் எனக்கும் புரியுது! ஊருக்குப் புரியணுமே!

உடன்பிறப்பே,

பிப்ரவரி 4-ஆம் நாள் சட்டப் பேரவையில் ஆளுநர் உரையில் ஆறாவது பக்கம் 8-ஆம் பகுதியில்,

மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவை அமைத்ததன் மூலம், கள்ளச் சாராய விற்பனை, கள்ள மது ஆகியவற்றிற்கெதிராக எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கை மும்முரப் படுத்தப்பட்டது. முதலமைச்சர் அவர்கள், தவறிழைக்கும் அதிகாரிகளுக்கு எதிராக எடுத்த நடவடிக்கையின் காரணமாகக் கள்ளச் சாராய நிகழ்வுகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்துள்ளது. மக்கள் தொடர்புச் சாதனங்கள் அனைத்தின் வாயிலாகவும், மதுவின் தீமைகளை எதிர்த்துப் பெருமளவிலான பிரச்சார இயக்கம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது. 7 கோடி ரூபாய் செலவில் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவை மேலும் வலுப்படுத்துவதன் மூலம், கள்ளச் சாராயத்தை எதிர்த்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இன்னும் முனைப்பாக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இதன்படி, ஒவ்வொரு காவல் துணைக் கோட்டத்திலும் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவின் ஓர் அலகு ஏற்படுத்தப்படும். இவற்றின் துணை கொண்டு, மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபட்டுள்ள சமூக விரோத சக்திகளுக்கெதிராகப் பயனுள்ள வகையில் செயற்பட முடியும். அரசு, மக்களின் நலனுக்கே மிக உயர்ந்த முக்கியத்துவம் அளிக்கிறது. இந்த வகையில் ஏற்படும் வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாமல், உயர்ந்தபட்ச சமூக நலனையே அரசு பெரிதெனக் கருதி வருகிறது.

ஆளுநர் உரையில் உள்ள இந்த வாசகங்களை நினைவில் வைத்துக்கொண்டு அண்மையில் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. ஒருவர் உப்பிலியாபுரத்து காவல் நிலையத்துக் குள்ளிருந்த கள்ளச் சாராயக் கைதிகள் பனிரெண்டு பேரை பலாத்காரமாக விடுவித்த

நிகழ்ச்சியையும், அவரைக் கைது செய்ய சொன்ன கண்துடைப்பு நாடகம் கூட இன்னமும் நிறைவேறாததையும் எண்ணிப் பார்த்தால், ஆகா! ஆளுநர் உரை எனப்படும் இந்த அரசின் உரை எவ்வளவு இதய சுத்தியுடன்? தயாரிக்கப்பட்டு, படிக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

இதுபோலவே இரண்டு மாதங்களுக்கு முன்பு டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழுவில் பேசிய ஜெயலலிதா - அதாவது முதல்வர் ஜெயலலிதா, கள்ளச்சாராயத் தொழிலில் பெரும்பாலும் அ.தி.மு.க.வினரே ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற உண்மையைப் போட்டு உடைத்து, அது நாடு முழுதுமுள்ள ஏடுகளில் வெளிவந்ததையும் மறந்திருக்க முடியாதல்லவா?

இந்த இரண்டு நிகழ்ச்சிகளே மட்டுமன்றி, இதோ மற்றொரு செய்தி - ஆளுநர் உரையில் கூறப்படும் மதுவிலக்கு மகாத்மியப்பணிகளுக்கு முற்றிலும் மாறான காரியம் நடந்துள்ளதை விளக்கும் செய்தி!

கடந்த திங்கள் 13.1.93 அன்று, தமிழ்நாட்டில் உள்ள ஒரு தனியார் டிஸ்டிலரிக்குச் சொந்தமான வேன் ஒன்றிலிருந்து 300 கேஸ் ஐ.எம்.எப்.எஸ். மது வகைகள் கைப்பற்றப்பட்டன. அந்த 300 கேஸ் மது பாட்டில்களுக்கும் எந்தவிதமான பர்மிட்டும் இல்லாததால் அதன் மீது விசாரணை நடத்தப்பட்டது. அந்த மது பாட்டில்களில் அரசாங்க எக்சைஸ் துறை லேபிள்கள் ஒட்டப்பட்டிருந்தன. ஆனால் அவை, முறைப்படி எக்சைஸ் வரியோ, விற்பனை வரியோ கட்டப்படாமல் போலியான லேபிள்கள் ஒட்டப்பட்டு வெளியே கொண்டு வரப்பட்ட சரக்குகளாகும்.

ஒவ்வொரு டிஸ்டிலரியிலும் அரசின் அதிகாரி ஒருவர் பாண்டு ஆபீசர் ஆர்.டி.ஓ. அளவில் இருப்பார். அவருடைய அனுமதியின்றி, எந்தச் சரக்கும் வெளிவர முடியாது. ஆனால், இந்த வேனிலே இருந்த சரக்குகள் டிஸ்டிலரியிலிருந்து திருட்டுத்தனமான முறையில் வெளியே விற்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சரக்குகளாகும்.

அதன் தொடர்பாக, மீண்டும் இரண்டொரு நாட்களில், 36 எண், பச்சையப்பன் கல்லூரி விடுதிச் சாலையில் உள்ள ஒரு கிடங்கிலிருந்து 2000 கேஸ்கள் மதுவகைகள் ஐ.எம்.எப்.எஸ். வைக்கப்பட்டிருந்ததும் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த இடமும்

நான் முதலில் குறிப்பிட்ட அதே தனியார் டிஸ்டிலரிக்குச் சொந்தமான இடமாகும். வாடகைக்குப் பிடித்துள்ள இடம்.

அதேபோல, சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு அருகே ஒரு வேனில் இருந்து 300 கேஸ் மதுவகைகள் கைப்பற்றப்பட்டன.

இந்த சரக்குகள் அனைத்தும் அரசுக்குக் கட்டவேண்டிய எக்சைஸ் வரி, விற்பனை வரி கட்டப்படாமல் ஏமாற்றப்பட்டு வெளியே கொணர்ந்தவைகளாகும்.

இது சம்பந்தமாக, தனியார் டிஸ்டிலரியின் சொந்தக்காரருடைய பினாமி ஒருவரும், அவர் மகனும், வேன் ஓட்டுனர்களும் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டு விட்டார்கள். மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஒருவேளை அவிநாசியில் நடந்தது போல கைது செய்த போலீஸ் அதிகாரிகள் மீது திடீர் நடவடிக்கை எடுக்கப்படுமோ, என்னவோ?

அரசாங்கத்துக்குக் கட்டவேண்டிய வரித் தொகையை கோடிக்கணக்கில் ஏமாற்றி, அப்படி வெளியே கொண்டு வந்து சரக்குகளை குறைந்த விலைக்கு கடைகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

முறைப்படி அரசுக்கு வரி கட்டி, அவற்றைக் கடைகளுக்கு விற்பனை செய்வதென்றால், ஒரு கேஸ் சுமார் 1200 ரூபாய் என்ற அளவுக்கு விற்க வேண்டி வரும். இதிலே 600 ரூபாய் அரசு வரியை ஏமாற்றி விட்டு, அந்தத் தொகையை சுலபமாக லாபமாக சம்பாதிக்கிறார்கள். கடைக்காரர்கள் 1200 ரூபாய் கொடுத்து வாங்குவதற்குப் பதிலாக - 900 ரூபாய் கொடுத்து அந்தச் சரக்குகளை வாங்கி விற்பதில் அவர்களுக்கு பாதிக்குப் பாதி லாபம் கிடைக்கிறது.

மேலும், அந்தத் தனியார் டிஸ்டிலரிக்கு சென்னையில் பல பெயர்களில் ஏலம் எடுக்கப்பட்ட 25-க்கு மேற்பட்ட மதுபான விற்பனைக்கடைகள் இருப்பதால், அந்தக் கடைகளில் இதுபோன்ற திருட்டு மது வகைகளை எளிதாக விற்றுப் பெரிதாக ஆதாயம் ஈட்ட முடிகிறது.

இந்த ஆண்டு மட்டும் இந்த முறைகேடுகள், மோசடிகள் காரணமாக அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமான ஏய்ப்பு 18 கோடி ரூபாய்!

கொடுக்க வேண்டியவர்களுக்கு, கொடுக்க வேண்டிய முறைப்படி, கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விடுவதால், கொடுக்கில்லாத தேள்களாக அதிகாரவர்க்கமும், அரசும் ஊர்ந்திடும் காட்சியைக் காண முடிகிறது.

பதினெட்டு கோடி ரூபாய் வரி ஏய்ப்பு நடைபெறுவதற்கு வழி வகுத்துக் கொண்டு - அதிலே பங்கு போட்டுக் கொள்ளும் - மக்கள் விரோதச் செயலை, கண்டும் காணாமல் இருக்க முடியாமல் கடமை ஆற்றிய அய்.ஜி.யும், டி.எஸ்.பி.யும் என்ன செய்யப் போகிறார்கள்? எதுவுமே நடக்கவில்லையென அறிக்கை தரப் போகிறார்களா? அல்லது அடுத்த நடவடிக்கை பற்றிய விபரங்களை வெளியிடப் போகிறார்களா?

இப்படி அரசாங்கத்தை ஏமாற்றி, தனிப்பட்ட முறையில் கோடிக்கணக்கில் சம்பாதிக்கத் தான் - அரசு நடத்திய நிறுவனங்களை எல்லாம் தனியாருக்குத்தாரை வார்த்தனர் என்ற உண்மை இப்போது மேலும் வெளிச்சமாகிறதல்லவா?

இந்த அழகில்தான், ஓராயிரம் மோசடிகளில் ஒன்றிரண்டை சாஸ்திரத்துக்காக கண்டுபிடிப்பதுபோல பிடித்து விளம்பரப்படுத்தி விட்டு - பிறகு அதனை மூடி மறைத்து - அறிக்கைகள், உரைகளில் மட்டும் அடடா! இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா? என்பதுபோல எண்ணும் பாமர மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பது இன்னும் எத்தனை காலத்துக்கு?

சமூக விரோத சக்திகளுக்கு எதிராக - கள்ளச்சாரயத் தொழிலுக்கு எதிராக - சமூக நலனையே பெரிதெனக் கருதும் அரசு இது என்று ஆளுநர் உரையில் இந்த அரசு அடிக்கும் டமாரம், எவ்வளவு கிழிந்து போன டமாரம் என்பது உனக்கும் எனக்கு புரிகிறது! ஊருக்கும் புரியவேண்டுமே! புரிய வைக்கும் பணியை நீ ஆற்றிட வேண்டுமே!

அன்புள்ள,

மு. கருணாநிதி

06-02-1993

2008. ஏக்கம் புரிகிறதா? நோக்கம் தெரிகிறதா?

உடன்பிறப்பே,

"காங்கிரசில் இருப்பவர்கள் நியமனத் தலைவர்கள்தானே என்று அ.இ.அ.தி.மு.க. வினர் கேட்கிறார்கள். அதையே நானும் திருப்பிக் கேட்கிறேன். நீங்கள் மட்டும் என்ன தேர்ந்து எடுக்கப்பட்ட தலைவர்களா?

தமிழ்நாட்டில் 2 மாநிலக் கட்சிகள் உள்ளன. அதில் ஒன்றான தி.மு.க.வை பலவீனப்படுத்துவதன் மூலம் காங்கிரஸ் மேலும் வளரும்.

கூட்டணியால் மட்டும் அ.இ.அ.தி.மு.க. வெற்றி பெறவில்லை. ராஜீவ்காந்தி சிந்திய ரத்தம்தான் அவர்களின் வெற்றிக்கு காரணம் என்பதை மறந்து ராஜீவ் காந்தியை வசைபாடினால் உலகம் உங்களை மன்னிக்காது.

காங்கிரஸ் யானை பலம் கொண்டது. ஆனால் அ.இ.அ.தி.மு.க. தோற்றால் எழுந்திருக்க முடியாது. எனவே, வீணாகப் பதுங்காமல் வெளியே வாருங்கள்.

உறவை முறிப்போம் என்று மந்திரிகள் பேசினார்கள். நீங்கள் ஜெயலலிதா வீராங்கனை என்றால் உறவு உண்டு அல்லது இல்லை என்று கூறுங்கள். அப்படி உறுதியாகக் கூறாவிட்டால் நீங்கள் கோழை."

இந்தப் பேச்சு நண்பர் வாழப்பாடியாருடையது! புதுக்கோட்டையில் இப்படி அவர் பேசியதாக தினத்தந்தி 11.2.93 இதழில் வெளிவந்துள்ளது!

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரின் இந்தப் பேச்சைப் படிக்கும்போது, அடே, அப்பா! இவருக்கும் வீரம் வந்துவிட்டதே!

என்று நீ வியந்து போனால் மட்டும் போதாது - அந்தப் பேச்சில் மறைந்து கிடக்கும் உண்மைகளை நீ கூர்ந்து கவனிக்க வேண்டும்.

இ. காங்கிரஸ் - அ.தி.மு.க. கூட்டணி பலத்தினால் 1991 தேர்தலில் அவர்கள் வெற்றி பெறவில்லை - ராஜீவ்காந்தி கொலையை வைத்து பிரச்சாரம் செய்து, நம்மீது வீண்பழி சுமத்தி வெற்றி பெற்றார்கள் - என்று நாம் சொன்னபோது மறுத்துப் பேசியவர்களுக்கு விளக்கமளிக்கும் விதத்தில் வாழப்பாடியாரே உண்மையைப்போட்டு உடைத்துவிட்டார்.

> ராஜீவ் சிந்திய ரத்தம்தான் அவர்களின் வெற்றிக்கு காரணம் என்பதை மறந்து வசை பாடினால் உலகம் உங்களை மன்னிக்காது.

என்று நண்பர் ராமமூர்த்தி அவர்கள் அ.தி.மு.க.வைப் பார்த்து, திட்டவட்டமாகக் கூறியிருப்பது, அந்தக் கொலையை அவர்களும் அ.தி.மு.க.வினரும் எப்படியெல்லாம் திசை திருப்பினார்கள் என்பதற்கு மிகச் சரியான எடுத்துக்காட்டாகும்.

அதுமட்டுமல்ல, தி.மு.க.வைப் பலவீனப்படுத்துவதற்காக மத்திய - மாநில அரசுகளின் உளவு நிறுவனங்கள் நமது கழகத்தினரிடையே சில இடங்களில் ஊடுறுவல் செய்து பார்க்கிறார்கள்! அது பலிக்கவில்லை! எனினும், எச்சரிக்கையாக நமது உடன்பிறப்புகள் இருக்க வேண்டும் எனப் பலமுறை கூறியிருக்கிறேன் - எழுதியிருக்கிறேன் அல்லவா?

நான் அவ்வாறு அறிவித்ததையும் உறுதிப்படுத்துவதுபோல இதோ நண்பர் வாழப்பாடியாரின் பேச்சில் ஒரு முக்கியமான வாசகம்:-

> தமிழ்நாட்டில் இரண்டு மாநிலக் கட்சிகள் உள்ளன. அதில் ஒன்றான தி.மு.க.வை பலவீனப்படுத்துவதின் மூலம் காங்கிரஸ் மேலும் வளரும்.

புரிகிறதா! உடன்பிறப்பே - பொல்லாதாரின் திட்டம் புரிகிறதா?

பல மாநிலங்களில் உள்ள மாநிலக்கட்சிகளைத் திட்டமிட்டுப் பலவீனப்படுத்தி சதி செய்தவர்கள் அல்லவா?

பஞ்சாபில் பிந்த்ரன் வாலேயைத் தூண்டி விட்டு, அகாலிதளத்தைப் பிளந்தனர். பின்னர் அந்தப் பிந்த்ரன் வாலேயையே அழித்தனர்.

காஷ்மீரில் ஷேக்அப்துல்லாவின் கட்சியைப் பிளந்து, பரூக் அப்துல்லாவை வளைத்தனர். பிறகு அவரையே வீழ்த்தினர்.

ஆந்திராவில் தெலுங்கு தேசத்தையும் விட்டு வைக்கவில்லை.

1971-ல் இ. காங்கிரசுடன் கூட்டணியாக தி.மு.க. இருந்ததையும் மறந்து, 1972-ல் தி.மு.க.வை பிளந்திட உளவுத் துறையை பயன்படுத்தினர்.

அதேபோலத்தான் இப்போது மலையென வளர்ந்து நிற்கும் கழகத்தைப் பார்த்து மலைத்துப் போயுள்ள காங்கிரசார், இதனைப் பலவீனப்படுத்த - யாராவது கட்சிக்குள் பலவீனர்கள் கிடைக்க மாட்டார்களா என்று பட்டினித் தவமே கிடக்கின்றனர். அந்த ரகசியத்தையும் புதுக்கோட்டையில் அம்பலமாக்கி விட்ட நண்பர் ராமமூர்த்தி அவர்களுக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும்.

ஒருமுறைக்கு இருமுறை அவரது பேச்சைப் படித்துப் பார்!

எச்சரிக்கையாக இருக்கச் சொல்லி நான் பலமுறை உனக்கு நினைவுப்படுத்தியதன் பொருள் இப்போதாவது விளங்குகிறதல்லவா?

வாழப்பாடியார் அவரது பேச்சில் ஜெயலலிதாவைப் பார்த்து வீராங்கனையா? கோழையா? எனக்கேட்டு விட்டிருக்கும் அறைகூவல் பற்றி நமக்குக் கவலையில்லை!

நாளைக்கே சாமியே சரணம் அய்யப்பா! என்ற குரல், அந்த முகாம்களில் கேட்கக் கூடும். அதனால், அந்த சவாலைப் பொருட்படுத்தத் தேவையில்லை!

நம்மை பலவீனப்படுத்த நடைபெறும் சதியை உணர்ந்து கொண்டால் போதும்! அதனை உடைத்தெறிய, நீ முன் வந்தால் போதும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

12-02-1993

2009. என் கண்ணீர் அருவியில் சில துளிகள்

உடன்பிறப்பே,

அன்பில் என்பது திருச்சி மாவட்டத்திலே உள்ள ஒரு சிற்றூர், மைனர் பஞ்சாயத்து. அங்கே ஓர் உயர்நிலைப் பள்ளியும் உண்டு. அன்பில் என்று சொன்னால் நமது இயக்கத்தினருக்கு அந்த ஊரின் பெயர் ஞாபகம் வராது. தர்மலிங்கத்தின் பெயர் தான் எதிர் வந்து நிற்கும். அன்பில் வந்தார் - போனார் - என்றே எல்லோரும் பேசுவார்கள். வந்தார் - போனார் என்கிறேனே! அதிலே கூட அர்த்தம் இருக்கிறது. ஒரு இடத்தில் சில மணி நேரங்கள் அவர் இருப்பது கஷ்டமான காரியம். அவ்வளவு வேலை அவருக்கு. அதனால், வந்தார் - போனார் என்றே எல்லோரும் பேசுவர். நான் அவரைத் தேடிக் கொண்டிருப்பேன். என்னிடத்தில் வந்தே அவரைக் கண்டீர்களா எனக்கேட்பார்கள் - இயக்கக் காரியங்கள் மட்டுமல்ல, மற்றவர்களுக்கு நலம் பயக்கும் ஒத்தாசைகள் புரிய வேண்டுமென்பதிலும் - அதற்காக அலைவதிலும் - முயற்சி எடுப்பதிலும் அலாதியான சுவை அவருக்கு! யாராவது தேர்தலிலே ஜெயிக்க வேண்டுமா? அங்கே அன்பில் இருப்பார் - ஊதியமில்லாமல், கொள்கைக்கு முரண் ஏற்படாமல்! யாரையும் எளிதில் நம்பி விடுவார் - அதன் காரணமாக நம்பிக்கை மோசத்திற்கு ஆளாகி, பிறகு தன்னையே நொந்து கொள்கிற காட்சி நமக்கே பரிதாபமாக இருக்கும். இலால்குடி மாநாட்டில் ஏறத்தாழ ஏழாயிரம் ரூபாய் மிச்சப்படுத்தி - அந்த மாநாடு ஓர் எழுச்சி ஏடு - என்ற மதிப்புரையை மாவட்டத்திற்குப் பெற்றுத் தந்த பெருமை தோழர் அன்பிலைத் தலைவராகக் கொண்ட வரவேற்புக் குழுவுக்குத்தான் சேரும். என்னைப் பொருத்தவரையில் அன்பில் எனக்கு ஒரு விளையாட்டுக்கருவி - விபரீதம்

புரிவோரை வீழ்த்தும் வேல் - கழகத்துக்கோர் படை!
திருச்சி மாவட்டத்திற்கோர் பாசறை! குள்ளமான உருவம்
- குமிழ்க்கண்கள் - கள்ளமில்லா நெஞ்சம் - அவர்தான்
அன்பின்-இல்-அன்பில்!

இது, நான் இன்று எழுதியதல்ல! 1953 ஆம் ஆண்டு கல்லக்குடி போராட்டத்தில் ஈடுபட்டு திருச்சி சிறையில் இருந்தபோது ஆறுமாதக் கடுங்காவல் என்ற தலைப்பில் நான் எழுதிய புத்தகத்தில் அன்பிலைப் பற்றிக் குறிப்பிட்டிருந்த வாசகங்கள்!

அன்பிலைப் போன்ற கழகத்தின் மூத்த தலைமுறையினருடன் இணைந்து பணியாற்றிய எனது 55 ஆண்டு காலப் பொது வாழ்க்கையில், 45 ஆண்டுகளுக்கு மேலாக அவரும் நானும் உயிருக்கு உயிராகப் பழகியிருக்கிறோம்.

கோபதாபங்கள் கூட இடையிடையே எழும் - ஆனால் அவை, கொள்கைப்பற்று எனும் உரமிட்டு வளர்ந்து, நட்பு எனும் நீருண்டு தழைத்து - உறுதியாக ஓங்கி உயர்ந்து நின்ற எங்கள் உறவை மேலும் பலப்படுத்தினவே தவிர, எள் முனையளவு ஊனமும் விளைவிக்கவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் 1949-ல் தொடங்கப்பட்ட போது பேரறிஞர் அண்ணாவின் பக்கத்திலே தான் அன்பில் இருந்தார் என்றாலும், எங்களில் ஒருவராக இருந்தது இந்த இயக்கம் வளர்த்தார் என்றாலும் - இங்கிருந்து கொண்டே தந்தை பெரியாரை அடிக்கடி சந்தித்து அளவளாவிடும் செல்லப்பிள்ளையாக அய்யாவுக்கும் அண்ணாவுக்கும் அவர் விளங்கினார்.

அதனால்தான் 18 ஆண்டுக்காலம் பெரியார் அவர்களின் கடுமையான தாக்குதலுக்கு ஈடுகொடுத்து, 1967 ஆம் ஆண்டு தேர்தலிலும் பெரியார் அவர்களின் தீவிரமான எதிர்ப்புப் பிரச்சாரத்தைச் சந்திக்கும் நிலைபெற்று - அந்தப் பொதுத் தேர்தலில் தி.மு.கழகம் வெற்றி பெற்றவுடன் பெரியாரின் வாழ்த்துகளைப் பெற முடிந்தது. அதற்குப் பாலமாக இருந்தவர் அன்பில்!

ஆம்! தேர்தல் முடிவுகள் வரப்பெற்று அண்ணா தலைமையில் கழக அமைச்சரவை அமைவதற்கு முன்பாக - வேறு கட்சிகளின் மூத்த தலைவர்களிடம் வாழ்த்துப் பெற்றிட, அவர்களின் இல்லம்

தேடிச் செல்லும் ஓர் அரசியல் பண்பாட்டினை அப்போது அண்ணா உருவாக்கினார். அதன்படி மூதறிஞர் இராஜாஜி இல்லத்திற்குச் சென்று விட்டு அண்ணா, நான், நாவலர் மூவரும் என் இல்லத்தில் தேநீர் அருந்திக்கொண்டிருந்தபோதுதான், தந்தை பெரியாரிடம் வாழ்த்துப் பெறச் சென்றிடவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

பெரியார் சென்னையில் இல்லை. திருச்சியில் இருக்கிறார். அன்பிலுக்கு போன் போட்டுப் பேசு என்றார் அண்ணா. உடனே தொலைபேசியில் அன்பிலைத் தொடர்புகொள்ள முடிந்தது. இதோ இப்பொழுதே நான் பெரியார் இருக்குமிடம் சென்று தகவலைத் தெரிவித்து விடுகிறேன். அண்ணாவும் நீங்களும் என் பதிலுக்குக் காத்திராமல் உடனே புறப்பட்டு விடுங்கள் என்று அவருக்கேயுரிய உறுதியும், நம்பிக்கையும் கொண்ட தொனியில் பேசினார்.

என் இல்லத்திலிருந்தவாறே அண்ணா, நான், நாவலர் மூவரும் திருச்சி புறப்பட்டுவிட்டோம் - அன்றிரவே திருச்சியில் பெரியாரைச் சந்தித்து, அவரது இனிய வாழ்த்துகளைப் பெற்றோம். பெரியார் அவர்களைச் சுற்றியிருந்தோர் சிலருக்கு அந்தச் சந்திப்பு வெறுப்பேற்றியிருந்தது என்பதை எங்களால் உணர்ந்துகொள்ள முடிந்தது. ஆனாலும், பெரியாரால் ஆளாக்கப் பெற்ற பிள்ளைகள் அல்லவா நாங்கள் - அதிலும் அன்பில் எனும் செல்லப்பிள்ளை அருகிருக்க, வெறுப்பாளர் எவரும் வெற்றியடைய முடியவில்லை.

கழகச் சரித்திரத்தில் 18 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு 1967-ல் திருச்சி பெரியார் மாளிகை சந்திப்பு நிகழ்ச்சி என்பது ஒரு முக்கியமான கட்டம். அந்த முக்கியமான கட்டத்தை உருவாக்கும் முன்னோடும் பிள்ளையாக, அன்பில் இருந்தார் என்பதை விட்டுவிட்டு அந்த வரலாறு தொடரமுடியுமா?

திருச்சியில் 1956 கழக மாநில மாநாட்டின் போது, அன்பில் அழைக்கிறார் என்பது அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய கடிதத்தின் தலைப்பு. அது அண்ணா வழங்கியுள்ள பொருள் பொதிந்த சொற்றொடர்களில் ஒன்றாக ஆகிவிட்டிருப்பதை எப்படி மறக்க இயலும்!

அந்த அன்பில் இன்று இல்லை - படமாகி விட்டார்! இந்த முடிவு இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு எனினும், இன்னும் அவர் பழமாக, கிழமாக மாறி - அப்போதும்

இந்த இயக்கத்தின் பாதுகாப்பு அரணாகத் திகழ்வார் என்றுதான் நம்பியிருந்தேன்.

ஓரிரு ஆண்டுகளாக தொண்டையில் ஏற்பட்ட கோளாறு காரணமாகச் சரளமாகப் பேச இயலவில்லையே தவிர, அந்தக் கட்டுடல் கரைந்து போகாமல்தானே இருந்தது! அய்யோ! எப்படி இவ்வளவு விரைவில் நம்மைப் பிரிந்து விட்டார்!

நானிருந்தாலும் இல்லாவிட்டாலும், இல்லத்தில் எம் அஞ்சுகத் தாயின் கையினால் குறைந்தது பத்து இட்லிகளாவது பரிமாறச் செய்து உண்டு செல்லும் அந்தக் காலம் முதல் எங்கள் குடும்பத்தில் ஒருவரானவர்தானே அவர்!

மாவட்டத்திலும் சரி, மாநில முழுமையும் சரி - எத்தனை செல்வாக்கு அவருக்கு! அமைச்சராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவரைச்சுற்றி ஒரு கூட்டமே இருக்குமே!

ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்து உழைப்பால் உயர்ந்து, பெரியார், அண்ணா, இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், காயிதேமில்லத் போன்றவர்களின் அன்பைப் பெற்ற என் நண்பர் - என் உயிர்த் தோழர் - கழக ஆட்சியில் வேளாண்மைத்துறை அமைச்சராகவும் இருந்ததையும், அத்துறையினைத் திறம்பட வளர்த்ததையும் எண்ணித்தான் திருச்சி மாவட்டத்தில் 1989-ஆம் ஆண்டு, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி ஒன்றினைத் தொடங்கினேன் கழக அரசின் சார்பில்!

அன்பிலுக்கும், அருமை நண்பர் எம்.ஜி.ஆருக்குமுள்ள நட்பைப் பத்திரிகைகள் எல்லாம் படம் போட்டு எழுதியுள்ளனவே இப்போது! அந்த எம்.ஜி.ஆர். அவர்களின் நண்பர் அன்பிலின் பெயரை நான் வைத்ததைத்தான், இந்த ஆட்சி வந்ததும் வராததுமாகத் தூக்கி எறிந்து விட்டது!

ஆனால் புகழ்வானின் உச்சியிலே கொடி போட்டு, இலட்சோபலட்சம் கழகத் தொண்டர்களின் உள்ளத்தில் குடி கொண்டுள்ள, அந்த விவசாயக் குடும்பத்து வீரன் - கொள்கைத் தங்கம் - அன்பில் தர்மலிங்கத்தின் பெயர் என்றைக்கும், யாராலும் அழிக்க முடியாதது!

நண்பனே! அன்பில்! இப்போதும் நீ எங்கள் வீட்டுக்குள் நுழைந்து தாழ்வாரம், கூடம், இங்கெல்லாம் நடந்து கொண்டிருப்பது

போலவே இருக்கிறது! அண்ணா அறிவாலயத்தில் என்னருகிலும், பேராசிரியர் அருகிலும் அமர்ந்திருப்பது போலவே உணருகிறேன்! நீ எங்கும் போய்விடவில்லை. எங்களுக்குள்தான் இருக்கிறாய்!

உடன்பிறப்பே, கடந்த இரண்டு நாட்களாக நான் வடித்துக் கொண்டிருக்கும் கண்ணீர் அருவியில், கோடிடப்பட்ட இந்தச் சொற்கள் சில துளிகள் மட்டுமே!

அன்புள்ள,

மு. கருணாநிதி

08-03-1993

2010. கண்டு வந்தேன் - கண்டு உவந்தேன்!

உடன்பிறப்பே,

கடந்த சில மாதங்களுக்குள், இருபத்தி ரெண்டு மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து, நிதியளிப்புவிழா நிகழ்ச்சிப் பொதுக் கூட்டங்களில், மாவட்ட மாநாடுகள் போன்ற மக்கட் பெருங்கடலினைக் கண்டு மகிழ்ந்து - இன்னும் ஆறேழு மாவட்டங்களில் கலந்து கொள்ள நாட்கள் குறிப்பிட்டுள்ள நிலையில், எல்லா மாவட்டங்களிலுமுள்ள உடன்பிறப்புகள் அனைவரையும் ஒரு சேரக் காணும் வாய்ப்பு எனக்கும் உனக்கும், வரும் 26, 27, 28 வெள்ளி, சனி, ஞாயிறு கிழமைகளில் கோவையில் கிட்ட இருக்கிறது.

கழகத்தின் ஏழாவது மாநில மாநாடும், இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடும் எழுச்சி மிக்கதாக இணைந்து நடைபெற்றிட கோவை மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சரும், களம்பல கண்ட கழகத் தளகர்த்தர்களில் ஒருவருமான கண்ணப்பன் தலைமையில் அமைந்துள்ள வரவேற்புக் குழுவினர் அயராப்பணி ஆற்றி வருகின்றனர். அவர்கள் ஆற்றிடும் பணியினைச் சில நாட்களுக்கு முன்பு கோவைக்குச் சென்று நேரிலேயே கண்டு வந்தேன். கண்டு உவந்தேன் என்றாலும் பொருந்தும்.

1949-ல் கழகம் தொடங்கிய பிறகு 1951-ல் நமது அண்ணா அவர்களின் தலைமையில் சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் முதல் மாநில மாநாடு நடைபெற்ற கால கட்டத்தை எண்ணிப் பார்க்கிறேன். அந்த மாநாட்டுக்குச் செலவுகளுக்காக, ஊர் ஊராகச் சென்று விடிய விடியக் கூட்டங்கள் பேசி, ஒவ்வொரு கூட்டத்திலும் நூறு, இருநூறு என்று தந்த நிதியினைப் பெற்று விடியற்காலை நாலு அல்லது ஐந்து மணி அளவில் மாநாட்டு அலுவலக மணற்பரப்பில், பணிகளைக் கவனித்தவாறு நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் அண்ணா அவர்களிடம் கொண்டுவந்து சேர்த்திடுவேன்.

இப்பொழுது அந்த எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் சென்னையில் உள்ள ஒரு பகுதிக் கழக மாநாடு கூட நடத்த முடியுமா என்பது சந்தேகம்தான். ஆயிரக்கணக்கானோர் குழுமிய அந்த மாநாட்டில் அண்ணா ஆற்றிய தலைமையுரையும், அதன் எதிரொலியும் நாட்டில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியதுமட்டுமல்ல. அடுத்து நடைபெற்ற மாவட்ட மாநாடுகளில் பல்லாயிரவர் திரண்டிடவும் - மாநில மாநாடுகளில் இலட்சக்கணக்கானோர் திரண்டிடவும் - அண்ணா தலைமையில் 1967-ல் - விருகம்பாக்கத்தில் நடைபெற்ற 4-வது மாநில மாநாட்டில் இலட்சோப இலட்சமென மக்கள், வெள்ளம்போல் பெருகிடவுமான அளவுக்குக் கழகம் வளர்ந்தது, அமைப்பு ரீதியாக!

அந்த அமைப்பு அடிமட்டம் முதல் மேல் மட்டம் வரையில் வலுப்பெற்று, எத்தனை இடர்பாடுகள் குறுக்கிடினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், பொருதடக்கை வாளேந்திய வீரனைப்போல், நெஞ்சு நிமிர்த்தி நிற்கிறது நமது கழகம்!

நடந்து முடிந்துள்ள நிதியளிப்பு விழா நிகழ்ச்சிகளில், இலட்சக்கணக்கில் நிதி சேர்த்து வழங்கியது கண்டு நான் பூரிப்பு கொண்டதைக் காட்டிலும் சிற்றூர், பேரூர், பட்டி தொட்டிகளில் இருந்தெல்லாம் பொங்கி வரும் புதுப்புனலென தமிழ்ப்பெருங்குடி மக்களும், உன் போன்ற என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளும் பல இலட்சக்கணக்கில் கூடியதை நினைத்துத்தான் எல்லையில்லா இன்ப உணர்வில் திளைத்துக் கொண்டிருக்கிறேன்.

இந்த இன்ப உணர்வு ரோஜா மலர் போன்றது. செடியில் முள்ளும் உண்டு - அது கையைக் கீறிடினும் உடனடியாக மருந்து தடவிட, ஒவ்வொரு உடன்பிறப்பும் ஒருவருக்கொருவர் உதவிடும் பாங்குதானே இந்தக் கழகத்தின் குடும்ப பாசம் எனப்படுவதாகும்.

அரும்பெரும் அண்ணனால் கட்டிக்காக்கப்பட்டு, இன்று நாமனைவரும் சேர்ந்து செழுமை குன்றாமல் வளர்த்திடும் இந்தக் குடும்ப பாசமெனும் மணமிக்க எழில் மலரில் கண்ணுக்குத் தெரியாத பூநாகங்கள் நெளிவதைப் பூதக்கண்ணாடி கொண்டு அறிந்து, அந்த நச்சரவங்களை உதறியெறிந்து நசுக்கித் தீர்த்து விட்டு - பாசமலர் குலுங்கும் இந்த நந்தவனத்தில் நச்சுப் பிராணிகள் எதுவுமே நுழையாமல் பாதுகாக்கும் பொறுப்பை, தனியாக ஒருவர் இருவரல்ல - நாம் எல்லோருமே ஏற்றுக்

கொண்டிருக்கிறோம் என்பதைக் கலகம் விளைத்துக் கழகத்தைச் சிதைக்கலாமா எனக் கருதி கண்கட்டி வித்தை நடத்தும் கயவர்க்கு உணர்த்தும் நாட்களாக 26, 27, 28 ஆகிய நாட்கள் கோவையில் அமையப் போகின்றன!

அந்த நெஞ்சினிக்கும் நிகழ்ச்சியைத்தான் என்றைக்கும் நான் காண விரும்புவன் என்பது உனக்குத் தெரியும்.

அதற்கு முன்னோட்டமாகத்தான் மாநாட்டுப் பணிகள் நடைபெறுகின்றன, நமது கழக மாமணிகளின் அயரா உழைப்புடன்!

மார்ச் 15-ல் தலைமைச் செயற்குழுவும் அந்த மகிழ்ச்சிகரமான முன்னோட்டத்தின் மற்றொரு அங்கமாகத்தான் நடந்து முடிந்துள்ளது!

அதனால்தான் கண்டுவந்தேன் - கண்டு உவந்தேன் - என்று கடிதத்தில் குறிப்பிட்டேன். இன்னும் நீயும் நானும் உவந்திடும் நிகழ்ச்சிகள் இனிய அலைகளாக ஒன்றன்பின் ஒன்றாக வருவதற்கு வழிகாட்டும் மாநாடுதான், கோவையில் நடைபெற இருக்கிறது.

தொடர்ந்து உனக்கு அழைப்பு விடுத்துக் கடிதம் எழுதுவேன். நான் மாநாட்டுக்குப் புறப்பட்டு விட்டேன் என்று நீ எனக்குத் தெரிவிக்கின்ற வரையில் விடுவேனா உன்னை!

அன்புள்ள,

மு. கருணாநிதி

17-03-1993

2011. மங்கையின் எழிற்கோலமும் மாவீரனின் போர்க்கோலமும் கண்டிட!

உடன்பிறப்பே,

குளித்து முழுகிக் கூறைச் சீலை உடுத்தித் தலைவாரிக் கொண்டையிட்டுப் பூச்சூடி, குங்குமப் பொட்டு வைத்து செந்தாமரைக் கரங்களின் செங்காந்தள் விரல்கள் அரவணைக்கச் சுடர் விளக்கேந்தி நிற்கும் எழிற்கோலமுடன் என் மனக்கண் முன்னே கோவை மாநகரம் அழகு மங்கையாக அலங்கரித்துக் கொண்டு நிற்பதைக் காண்கிறேன். கச்சை கட்டிக் கட்கமேந்தி, வீரத்திலகமிட்டு, உதட்டுக்கு மேல் படுத்திருக்கும் மீசையையும் முறுக்கி எழுப்பி விட்டு, தோளுக்கு மேலே உயர்த்திய கொடியுடன் இனி தொலைந்தது பகை என முழங்கிடும் அடலேறு, கண் எதிரே பீடுநடை போடுவது போல் அகத்திலொரு புறக்காட்சி எழுதிக் களிக்கின்றேன் கோவை மாநகரம் குன்றென நிமிர்ந்திடுவது கண்டு.

ஏறத்தாழ நாற்பத்தி ஐந்து ஏக்கரா விவசாய நிலப்பரப்பில் மாநில மாநாட்டுக்காகத் தற்காலிகமாகப் பேரறிஞர் அண்ணா நகரைப் பெருநகராக உருவாக்கிடக் கழகத்தின் கண்மணிகளாய், பொன்மணிகளாய் விளங்கிடும் புகழ்மணிகள், பொழுதெல்லாம் பணியாற்றிடும் பாங்கு கண்டு பூரித்துப் போகின்றேன்.

செயல்கள் செம்மையாகத் தொடர்கின்றனவா என்றறிய எப்போதுமே துடிப்பவன் நான் - அதனால் கோவையில் மாநாட்டுப் பந்தலில் உள்ள தொலைபேசி வாயிலாக வரவேற்புக் குழுவினர் யாரையாவது தொடர்பு கொள்ள நேற்று 16-ந் தேதி முழுதும் முயற்சி எடுத்தேன். அவரவர்களும் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணி முடிக்க ஓடியாடிக் கொண்டிருக்கிறார்கள். பந்தலில் உள்ள அலுவலகத்தில் அமர்ந்திருப்பார்களேயானால், என்னய்யா? வேலை பார்க்கவில்லையா? என்று கேட்டிருப்பேன். விதவிதமான

வேலைகள் - அவற்றில் விறுவிறுப்புடன் ஈடுபட்டுள்ளனர் அந்த செயல்மாமணிகள் எனக் கேள்வியுற்று என் இதயமே தேன் குடமாயிற்று! இந்த முக்கியமான நேரத்தில் வரவேற்புக் குழுத்தலைவர் கண்ணப்பன் அவர்களுக்கு அம்மை நோய்! அந்த நோய் நீங்கிற்று எனினும் நலிவு, முற்றாகத் தீரவில்லை! தொலைபேசியில் அவருடன் தொடர்பு கொண்டு, மாநாட்டுப் பணிகள் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறேன். இன்னும் நாலைந்து நாட்களுக்குப் பிறகே அவர் வெளிவர முடியும். வெளிவர வேண்டும் என்று நானும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

15-ந் தேதி செயற்குழு கூட்டத்திற்கு வந்திருந்த தம்பி கோவை இராமநாதனும், திருப்பூர் துரைசாமியும், தம்பி மோகனும், தம்பி க.ரா. சுப்பையனும் - அதற்குமுன்பு வந்துபோன நமது சி.டி. தண்டபாணியும் மாநாடு குறித்து என்னிடமும், பொதுச் செயலாளரிடமும் விரிவாகப் பேசிச் சென்றுள்ளனர்.

இடையிலே இன்னும் எட்டு நாட்கள்கூட இல்லை - தலைமைக் கழகத்திலிருந்து மாநில மாநாட்டுச் சுவரொட்டிகள் எல்லா மாவட்டங்களுக்கும், அளவோடு சற்று சிக்கனமாகத்தான் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றை மக்கள் கண்களில் படும்படியாக, நேர்த்தியான தட்டிகளில் ஒட்டி விளம்பரப்படுத்தும் பணியை அமைப்புகள் ஏற்பதுடன், மறுப்புக்கு இடமில்லாத மதில்சுவர்களில் எல்லாம் கோவை மாநாடு பற்றி விபரமும் - அழைப்பும் வண்ண வண்ண எழுத்துகளில் மின்னிட வேண்டும். நமக்கு வானொலி, தொலைக்காட்சி, பளபளப்பான நாளேடுகள் இல்லை! நாமேதான்! ஆம் - கழகத்தின் ஒவ்வொரு உடன்பிறப்பும்தான் செய்தி நிறுவனமாகவும் - செய்தித் துறையாகவும் செயல்பட்டாக வேண்டுமென்பது புதிய செய்தி அல்லவே!

எத்துணை இருட்டடிப்பு செய்யப்பட்டாலும் - கயிறு திரித்தல், கலக மூட்டுதல் எனும் கயமைத்தனங்கள், தமது கை வரிசைகளைக் காட்டிடினும், கட்டாணிமுத்தாம் கழகக் கொள்கையினை நெஞ்சுக்குள் பதியவைத்துப் பட்டாளத்து நடைபயில இலட்சோப இலட்சம் உடன்பிறப்புகள் உன்னைப்போல், என்னைப்போல் கோவையிலே கூடத்தான் போகிறோம்.

தமிழ்நாட்டில் மௌனப் புரட்சியொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! இந்தப் புரட்சி வேட்டுமுறையில் நம்பிக்கை

வைக்காதது - அண்ணா சொன்னதுபோல் ஓட்டு முறையில் நம்பிக்கை வைத்துள்ள புரட்சி! அந்தப் புரட்சிக்காக மட்டும் பிறப்பெடுத்தவர்கள் அல்லர் இந்தக் கழகத்தினர்! மொழி, இனம், நாடு, நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு காத்திடவும் தேவைப்படுகிற அறவழிப்புரட்சிக்கு ஆயத்தமாக இருக்கக் கூடியவர்கள்!

இந்த இருவகைப் புரட்சிகளையும்தான் கடிதத்தின் தொடக்கத்தில் - மங்கை நல்லாள் எனவும், மாவீரன் எனவும் உருவகப்படுத்தி கோவை மாநில மாநாட்டைக் காட்சியாக்கியுள்ளேன். நீ, பயணத்துக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும் மும்முரத்தில் இருப்பாய்! என் கடிதத்தைப் படிக்க நேரமுளதோ இல்லையோ - எனினும், என் கடமை உனை அழைப்பது அல்லவா? அதனால்தான் அளவில் சிறிதான, ஆனால் அன்பில் பெரிதான இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

18-03-1993

2012. நாடு உள்ள நிலையில், நாள்தோறும் தோன்றிடும் நிலைகுலைவில்!

உடன்பிறப்பே,

குந்தி பிள்ளை பெற்றாள் என்றதும், அம்மிக் குழவியை எடுத்து அடி வயிற்றில் குத்திக்கொண்டாள் காந்தாரி எனப் புராணத்தைக் கொச்சை மொழியில் கூறுவர் பாமரர்!

ஒற்றுமையாக ஒரு குடும்பம் வாழ்கிறது என்றால், உடம்பெல்லாம் எரியுமாம் கலகமூட்டிக் காலந்தள்ளும் காசாசைப் பைசாசங்களுக்கு!

அதுபோல சில பத்திரிகைகள் கழகம் வலிவோடு வளர்வது காணச் சகிக்காமல் கண்கள் எரிந்திட - கருத்து எரிந்திட - இல்லாததையும் பொல்லாததையும் இட்டுக்கட்டி, நடக்காததை நடந்ததாகப் பிதற்றிப் புலம்பி, பொய்களைப் பணமாக்கிடும் பிழைப்பைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றன.

தன்னைக் கழகத்தினன் எனக் கூறிக்கொண்டு அந்த ஏடுகளிடம் கமிஷன் பெற்றுத் தின்பதற்காகச் சில கற்பனைகளை அவற்றுக்குக் கூறி - அவற்றை ஏமாற்றிடும் தந்திரக்காரர்களை நம்பி அந்த ஏடுகளும் கதைகளை ஜோடிக்கின்றன! அச்செய்திகளைப் படிக்கும்போது அய்யோ பாவம்! அந்த இதழாளர் நன்றாக ஏமாந்திருக்கிறாரே என்ற அனுதாபமே நமக்கு ஏற்படுகிறது.

கவலையொன்றுமில்லை! கழகத்துக்கு இவர்களால் பெரும் ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சமும் இல்லை! எனினும், கலகமூட்டும் பத்திரிகைகளிடம் எச்சரிக்கையும் - அவை இட்டுக்கட்டும் செய்திகளால் குழப்பமடையாத நிலையும் - நமது உடன்பிறப்புகளுக்கு மிகமிகத் தேவை என்பதை வலியுறுத்துவது என் கடமை அல்லவா?

நீ என்ன வலியுறுத்துவது - எங்களுக்குத் தெரியாதா அந்த விஷமிகளைப்பற்றி? ஏதோ பொறுப்பு, பதவி, நிர்வாகம் அது இது என்று இருக்கிற உங்களைப்போல் இருக்கிறவர்கள் தான் வீணாகக் குழம்பிப் போகிறீர்கள் - அடி மட்டத்திலே இந்தக் கழகத்தின் அடித்தளக் கற்களாக - அசையாத வேர்களாக இருக்கிற தொண்டர்களான உன் உடன்பிறப்புகள் எல்லாம், அனைத்தையும் அறிந்துதான் வைத்திருக்கிறோம் - நாங்கள் என்ன அமைச்சர், எம்.பி., எம்.எல்.ஏ., என்றெல்லாம் பதவிகளைப் பற்றியா எண்ணிக்கொண்டிருக்கிறோம். இந்த இனம் காத்திடப் பெரியார், அண்ணா வழியில் உண்மையாகப் பாடுபடும் ஒரு படை வரிசையில் சிப்பாயாக இருக்கிறோம் என்ற பெருமையைத்தானே வாழ்வின் பேறாக எண்ணிக் கொண்டிருக்கிறோம் என்று, அதோ கொடியேந்திச் செல்லும் பட்டாளம் கூறுவது என் காதில் கேட்கிறது! அதோ லாரிகளில் ஏறிக்கொண்டு முழங்கிடும் இயக்கத்தின் இரத்த நாளங்களான செயல் வீரர்களின் அடங்காத ஆர்வம் என் கண்களைப் பனிக்க வைக்கிறது! இயக்கத்தில் சேர்ந்து வளர்ந்த முதியோர் - இடையில் இணைந்து இயங்கிடும் பெரியோர் - இளைய தலைமுறையினர் - இவர்களில் எவருமே, எதைப்பற்றியும் - யாரைப்பற்றியும் கவலைப்படாமல் இயக்கத்தின் வெற்றியே இந்த இனத்தின் வெற்றி என்றுரைத்து பீடுநடை போடுவது கண்டு பெருமிதம் கொள்கிறேன்!

ஆம்! இந்த அரிமாக்களைத்தான் கோவை மாநாட்டில் கூட்டம் கூட்டமாகப் பார்த்துப் பரவச முற்றிடும் வாய்ப்பு கிட்டப்போகிறது!

கொடிய வெயிலில் பயணம் செய்தவனுக்கு குளிர்தருவின் நிழலும் - அந்த நிழலில் வீசும் இனிய தென்றலும் - தென்றலுடன் நறுமணமும் - அதற்கும் மேலாகத் தாகம் தணித்திட ஒரு செவ்விளநீரும் கிடைத்தால் எப்படியிருக்குமோ! அப்படித்தானே இருக்கும் எனக்கு உன்னைக் காணும்போது!

எத்தனை மன உளைச்சல்களுக்கு நீ மருந்தாக இருந்திருக்கிறாய் - இருக்கிறாய் - இருக்கப் போகிறாய் என்பதை உணராத உன்மத்தனல்லவே நான்!

அதனால்தான், நம்மைச் சுற்றிப் பின்னப்படும் சூதுவலைகளைப்பற்றி நான் உனக்குக் கவனப்படுத்தினாலும், அதே நேரத்தில் அந்த வலைகளை சுக்கல் சுக்கல்களாக

அறுத்தெறியச் சுடர் முகம் தூக்கிடும் தம்பியாக நீயும், உன்னைப் போன்ற இலட்சோப இலட்சம் செயல்வீர உடன்பிறப்புகளும் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கை கொண்டவனாக இருக்கிறேன்.

நம்பிக்கை மட்டுமா? எனக்கு ஆறுதல் அளிப்பது மட்டுமா? இந்தக் கழகத்துக்குத் துணை நிற்பது மட்டுமா? இல்லை - இல்லை - இந்த இயக்கத்தின் உயிரோட்டமாகவே இருக்கிற உன்னை அடிக்கடி பார்ப்பதிலே ஒரு புத்துணர்வு! தொடர்ந்து பார்த்துக் கொண்டுதான் வருகிறேன் - இருப்பினும், மத நம்பிக்கையாளர்களின் மொழியிலே கூறவேண்டுமேயானால், நமக்கு நமது மாநில மாநாடுதானே புனித யாத்திரை ஸ்தலம்! மக்கா! மதினா! ஜெருசலம்!

அங்கே நாமனைவரும் குழுமிடுவது - கொள்கை வெற்றிக்கான திட்டங்கள் தீட்டுவது - இயக்கமெனும் ஈட்டிமுனையைக் கூர் ஏற்றிக் கொள்வது - இயல்பான ஒன்று எனினும்,

இன்று இந்த நாடு உள்ள நிலையில் - நாள்தோறும் தோன்றும் நிலைகுலைவில் - நமது தலையாய கடமைகளைச் சிந்திக்க, செயல்படுத்த - பாதையில் நமது காலில் மிதிபடும் நெருஞ்சில் முள்களை அப்புறம் வீசி எறிந்து விட்டு பயணத்தைச் சீராகத் தொடர்ந்திட, கோவை மாநில மாநாடு உன்னையும் என்னையும் கூவி அழைக்கிறது! மறந்து விடாதே! நீயா மறந்திடுவாய்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

19-03-1993

2013. அலைமோதும் காற்றில் உருமாறும் மேகங்கள்!

உடன்பிறப்பே,

கோவையில் கூடிடுவோம் - கொள்கை ரீதியான முடிவுகள் எடுப்போம் - கோணல் ஆட்சியின் கொடுமைகளை எதிர்த்திட அறவழித் திட்டங்களை வகுப்போம் - இனமானம், தமிழ்மானம் காத்திடத் தோள் உயர்த்தி நிற்போம் - பெரியாரும், அண்ணாவும் பக்குவப்படுத்தியுள்ள இந்த மண்ணில் மதவெறியாளர் நுழையாமல் தடுப்போம் - இந்தி ஆதிக்கத்தை வீழ்த்த எதுவரினும், ஏற்போம்! வா! வா! என உன்னை அழைத்துக்கொண்டே இருக்கிறேன்.

அலைமோதும் காற்றில் உருமாறும் மேகங்களைப் போல அரசியல் நிலவரங்கள் நாள்தோறும் புதுப்புது வடிவங்கள் எடுத்துக் கொண்டிருக்கின்றன!

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, ராஜீவ் காந்தியின் கொலையை ஒட்டி வீண் பழியைத் தி.மு.க. மீது சுமத்திட ஜோடி சேர்ந்து சுற்றியவர்கள், இன்றைக்குக் கூட்டணியை முறித்துக்கொண்டு இப்போது சொல்வதுதான் உண்மையென ஊருக்குத் தெரிவிக்கிறார்கள்.

> “மகாத்மாகாந்தியைக் கொன்றவன் காங்கிரஸ்காரனல்ல!
> இந்திராவைக் கொன்றவன் காங்கிரஸ்காரனல்ல!
> ஆனால் ராஜீவ்காந்தியைக் கொல்ல வைத்தது
> காங்கிரஸ்காரன்தான்!”

என்று வெறும் மேடைப் பேச்சிலே கூட அல்ல. எழுதப்பட்ட அறிக்கையாகவே ஜெயலலிதாவின் வலதுகரமான அமைச்சர் செங்கோட்டையன் ஏடுகளுக்கு செய்தி தருகிறார். அதனை ஏடுகளும் பெரிய அளவில் வெளியிட்டுள்ளன.

கடந்த நவம்பர் திங்களில் இந்திய ஒருமைப்பாடு மன்றக் கூட்டத்தில் கரசேவையை ஆதரித்துப் பேசிவிட்டு - வெளியே வந்து பாரதிய ஜனதாவின் பாராட்டுக் கரகோஷத்தையும் பெற்றுக்கொண்டு வந்த ஜெயலலிதா, திடீரெனக் கடந்த சில நாட்களாக நான் பாரதிய ஜனதாவுக்கு ஆதரவாக - கரசேவையை அனுமதிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. பாபர் மசூதி இடிப்புக்கு நரசிம்மராவ்தான் காரணம் என்று முழங்கத் தொடங்கியிருக்கிறார்.

ஆனால் கெட்டிக்காரர் புளுகு எட்டுநாள் என்பார்களே! அந்த எட்டு நாள் கூடத் தாங்காமல் இதோ சென்னைக்கு வந்த பா.ஜ.க. தலைவர் அத்வானி, அந்த உண்மையையும் போட்டு உடைத்து விட்டார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் அத்வானி அவர்கள் பேசியபோது;

"தேசிய ஒருமைப்பாட்டுக் கூட்டத்தில் பாரதிய ஜனதாவை ஆதரித்துப் பேசிய ஒரே முதல்வர் ஜெயலலிதாதான். கரசேவை நிகழ்ச்சியையும் அவர் வரவேற்றுப் பேசினார். அயோத்திப் பிரச்சினையில் பாரதிய ஜனதாவின் நிலையை நாடு முழுவதும் தெரியப்படுத்துகிற வகையில், ஜெயலலிதாவின் தேசிய ஒருமைப்பாடு கூட்டத்தின் பேச்சு அமைந்தது. தற்போது நாடாளுமன்றத்திலும், அரசியல் ரீதியாகவும் அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையே பெருமளவில் நல்லெண்ணம் ஏற்பட்டுள்ளது."

- எனக் குறிப்பிட்டுள்ளார்.

கரசேவையை நான் ஆதரிக்கவில்லை என்று இன்று பசப்புகிறவர்களுக்கு அத்வானி அவர்களின் இந்த மனந்திறந்த பேட்டியை விட வேறு புதிதாக மறுப்பு எதுவும் தேவையா?

சங்க காலத்தில் மடலேறி வருபவனைப் போல, அத்வானி இப்போது நடு வீதிக்கே விஷயத்தைக் கொண்டு வந்துவிட்டாரே!

அதுமட்டுமா? அவர்களிடையே உறவு மலர்ந்து ஆயிற்று ஐந்து மாதம் என்ற பரம ரகசியத்தையும், பகிரங்கப்படுத்தி விட்டாரே!

"முதல்வர் ஜெயலலிதா கடந்த நவம்பர் மாதம் தேசிய ஒருமைப்பாடு கூட்டத்தில் கலந்துகொள்ள டெல்லி வந்தபோதே என்னைச் சந்தித்தார். இருவரும் அரசியல் நிலை குறித்து நீண்ட நேரம் பேசினோம். இ. காங்கிரசுடன் அ.தி.மு.க. உறவை முறித்துக் கொள்ளுமென்று அந்த பேச்சின் போதே எனக்குத் தெரியும்."

இதுவும் சென்னைக்கு வந்த அத்வானி செய்தியாளர் கூட்டத்தில் கூறியுள்ளதுதான்!

உடன்பிறப்பே, இன்றைய சூழலில் பா.ஜ.க.வின் உணர்வுகள் என்பது தமிழக ஆளுங்கட்சித் தலைவியின் இரத்தத்துடன் கலந்துவிட்ட ஒன்றாகும். இதில் எள்ளளவு சந்தேகமும் இல்லை.

இடஒதுக்கீடு - மண்டல் என்றெல்லாம் பேசுவார், தீர்மானம் போடுவார்! ஆனால் பொருளாதார அடிப்படை இடஒதுக்கீட்டில் அவரது குறிக்கோள் என்ன என்பதை 1990-லேயே ஏடுகளுக்கு அறிவித்தவர்தான் ஜெயலலிதா!

இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதாக இன்று முழங்குவார் - ஆனால் சென்ற ஆண்டு கூட நவோதயா பள்ளிக்கு ஆதரவு அளித்து பேசியவர்தான் இவர்!

இப்போது ஒருவாரமாக அயோத்தி விவகாரத்தில் வேறு ராகம் பாடுகிறார் எனினும், சாகித்தியம் அதேதான் என்பதை இப்போது அத்வானி வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டார்!

நான் மன்னார்குடி நிதியளிப்பு விழாக் கூட்டத்தில் குறிப்பிட்டது போல, ஏ.டி.எம்.கே வேறு! பி.ஜே.பி. என்பது வேறு அல்ல!

பி.ஜே.பி. + ஏ.டி.எம்.கே. = பி.ஜே.பி. என்பதை விட, பி.ஜே.பி. + பி.ஜே.பி. = பி.ஜே.பி. என்பதுதான் இன்றைய தமிழ்நாட்டு ஆளுங்கட்சி பி.ஜே.பி.க்குத் தரும் ஆதரவின் உண்மையான அடிப்படையாகும்.

தனது சாதியின் உயர்வைக் குறித்து ஆணவத்தோடு நான் பாப்பாத்திதான் என்று ஜெயலலிதா கூறியது நியாயமா? முறையா? என நாம் கொதித்துப் போய்க் கேட்கிறோம்.

ஆனால், அப்படி அவர் சொல்லிக் கொண்டதில் அவருக்கு எவ்வளவு ஆதாயம்!

இந்து போன்ற ஏடுகள் இன்று அவரைத் தாங்கிப் பிடிப்பதற்கு இதுதானே காரணம்!

இதுபோன்ற ஊழல் சாம்ராஜ்யம் வேறு எந்த மாநிலத்திலும் - மேல்மட்டம் முதல் கீழ்மட்டம் வரையில் இப்படிப் புழுபுழுத்துப் போய் நாறியதில்லை என்று தெரிந்தும், அந்த அம்மையாரை உச்சிக் கோபுரத்தில் வைத்துப் போற்றுகின்ற ஆதிக்க வர்க்கமும் - அந்த வர்க்கத்தை நத்திக் கிடக்கின்ற வீடணர்களும், இன்னும் இருப்பதைக் காண முடிகிறதல்லவா!

இந்த மாநிலத்தில் நடைபெறும் ஊழல்கள், முறைகேடுகள், அராஜகங்களில் ஒரு மாகாணி அளவு மற்ற மாநிலத்தில் நடைபெற்றால் இங்குள்ளோரும் - இந்து போன்ற ஏடுகளும் இப்படி இதழ்களைத் தையல் போட்டுக் கொண்டு மூடிக் கிடப்பதைப் பார்க்க இயலுமா?

எனவே ஜெயலலிதா அன்று சொன்னது, சாதி ஆணவச் சொல் அல்ல!

பாரதிய ஜனதாவின் பரிணாம வளர்ச்சிக்கு, இதோ நானிருக்கிறேன் கருப்பொருளாக! என்று காட்டப்பட்ட ஜாடைதான் அது!

உடன்பிறப்பே, இப்படி நாட்டில் ஏற்பட்டுள்ள மாய்மாலங்களை எல்லாம் பற்றி விவாதிக்க - விளக்க - விறுவிறுப்பான முடிவுகள் எடுக்க - வெற்றி முகட்டினை எட்ட - 26, 27, 28 கோவைக்கு வருக என நான் அழைத்தவுடன் ஒவ்வொரு சிற்றூர், பேரூர், நகரம், எல்லா இடங்களிலிருந்தும் பயண ஏற்பாடுகளுக்கு நீ தயாராகி விட்ட செய்தி எனக்குக் கிடைத்த வண்ணமிருக்கிறது.

கோவையில் ஏற்கெனவே நமது மாநில மாநாட்டு வரவேற்புக் குழுவினர் - கோவை மாநகரை எழுச்சிக் கோலம் கொள்ளச் செய்து வருகின்றனர்.

அருகிருந்து மேலும் பணிகளை கவனிக்க கழகப் பொருளாளர் சாதிக்கும், தலைமைக் கழகச் செயலாளர் ஆற்காடு வீராசாமியும் கோவை சென்றுள்ளனர்.

இன்னும் இடையே மூன்று நாட்கள்தானே - 26-ஆம் நாள் பொதுக்குழு - அன்று மாலை மகத்தான பேரணி - 27, 28 மாநாட்டு நிகழ்ச்சிகள், தீர்மானங்கள், கருத்துரைகள், கலை நாடக நிகழ்ச்சிகள், அனைத்தையும் உன்னோடு கலந்து காண்பதில், களிப்பதில் நான் பெறும் இன்பம் தனி இன்பமன்றோ!

அன்புள்ள,

மு. கருணாநிதி

23-03-1993

2014. புதிய புற நானூறு படைத்திடுவோம் வா!

உடன்பிறப்பே,

உன் கையில் இந்தக் கடிதம் கிடைக்கும்போது கோவை மாநில மாநாட்டுப் பயணத்துக்கு ஆயத்தங்கள் செய்துகொண்டிருப்பாய்! ஏடுகளில் செய்திகள் வருகின்றன - காண்கிறேன். ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்தும் பேருந்துகள் கிடைத்தாலும், கிடைக்காவிடினும் வேன்கள், லாரிகள் என வசதிப்பட்ட வாகனங்களில் ஏறிக்கொண்டு கோவைக்கு உன் போன்றோர் வரப்போகிற செய்திகளைப் படித்துப் படித்து பரவசமடைகிறேன்.

எங்கே அந்தக் கரங்கள்? என்பக்கம் கொஞ்சம் நீட்டு! கண்களிலே ஒற்றிக்கொள்ள வேண்டும் போல் இருக்கிறது! ஏன் தெரியுமா? தமிழகம் முழுதும் பட்டி தொட்டி முதல் பட்டினக் கரைகள் வரையில் உன் கரங்கள்தானே வண்ண வண்ணச் சுவரெழுத்து விளம்பரங்களை எழுதித் தள்ளியுள்ளன! அந்தக் கரங்களைக் கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டாமா?

கோவை மட்டுமல்ல! கோவையை நோக்கி வருகின்ற வழிகளில் எல்லாம் கொடி மயமாம்!

என் உடன்பிறப்பின் தியாகமணிக் கரத்தால் ஒரு கொடிக் கம்பம் நட்டுவைத்தாலே, அது கோடி பெறுமே எனக்கு! ஏனெனில், என் உடன்பிறப்பின் என்பும் குருதியும், இலட்சியத்தின்பால் உள்ள அன்பும் கலந்தன்றோ அந்தக் கொடி உருவாகி - அந்த உடன்பிறப்பின் சுவாசக் காற்றில் அசைந்தாடிக்கொண்டிருக்கிறது!

அதனால்தான், ஆடம்பரமான உப்பரிகை அலங்காரங்கள் - மனத்தைச் சுண்டி இழுக்கும் மாளிகைச் சிங்காரங்கள் - முத்தார முகப்புகள் - மோகன மின் விளக்குத் தோரணங்கள் - இவையனைத்தும் என் உடன்பிறப்புகளின் ஆசைக்காக அவர்கள் அமைத்துக் கொண்டாலும், என்னைப் பெரிதும் கவருவது,

ஏன், என் உள்ளத்தைக் கொள்ளை கொள்வது இருவண்ணக் கொடிகளின் அணி வகுப்புத்தான் என்று எப்போதுமே சொல்லி வருகிறேனே!

அந்தக் கொடிக்காடு நகர்வது போல 26-ந் தேதி மாலையில் மாநில மாநாட்டுப் பேரணி நடக்க இருக்கிறது! - கொடிக்காலில் வெற்றிலை படர்ந்திருப்பது போல, கோவை மாநகர் வரும் பல ஊர்ப்பாதைகளிலும் கொடிகள் அசைந்தாடத் தொடங்கிவிட்டன.

சாதனைபுரிய சோதனைகளை இடறி விட்டவாறு - மாநாட்டு வெற்றிக்கு உழைத்திடும் மாவீரர்களாம் வரவேற்புக் குழுவினரின் அளப்பரிய பணியினை, சாதிக்கும், வீராசாமியும் எனக்குத் தெரிவித்த வண்ணமிருக்கிறார்கள்.

ஏறத்தாழ இருபத்தி மூன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் உன் திருமுகம் கண்டேன், நிதியளிப்புவிழா நிகழ்ச்சிகளுக்கு வந்தபோது! அத்தனை திருமுகங்களையும் மொத்தமாகக் கோவை மாநில மாநாட்டில் காணப்போகிறோம் என நினைக்கும் போதே, நினைப்பு மொண்டது அவள் கலகல எனும் சிரிப்பு என்று பாவேந்தர் காதலிக்காக வரைந்தாரே கவிதை! அந்தக் கவிதை வடிவில் அல்லவா என் கண்ணின் பாவை போன்ற உடன்பிறப்பே, நீ என் எதிரே புன்னகைத்து நிற்கிறாய்! எங்கெங்கோ தமிழகத்து மூலை முடுக்குகளில் சிற்றூர், பேரூர், குக்கிராமம், நகரங்களில் பிறந்தோம். வான் பரப்பில் திக்கெட்டும் சூழ்ந்த முகில்கள் பிரசவித்த மழைத் துளிகளைத் தாங்கிடும் மண், அந்தத் துளிகளையெல்லாம் பேராறாக மாற்றிடுவதுபோல, பெரியாரும், அண்ணாவும் நம்மை இந்தப்பெரும் இயக்கமெனும் நதிப் பெருக்காக ஆக்கினார்கள்.

நதி, நஞ்சையையும், புஞ்சையையும் முறையே, நேரடியாகவும், மறைமுகமாகவும் வாழ வைக்கும் ஆற்றலும் கொண்டது! புயலால், சூறாவளியால் சீறத் தொடங்கினால் குறுக்கிடும் கோட்டை கொத்தளங்களைக்கூட மூழ்க அடிக்கும் ஆவேசமும் கொண்டது! தமிழுக்கு, தமிழர்க்கு, மனிதநேயக் கொள்கைக்கு, நல்லிணக்கம் நாட்டில் பரவுவதற்கு - உடன்பிறப்பே, நீ தென்றலாகவும் வீசுவாய்! அநியாயம், அராஜகம், இன உணர்வுக்கும், மொழிக்கும், ஒற்றுமைக்கும் எதிரான வெறிச் செயல் குறுக்கிட்டாலோ, நீ புயலாகவும் மோதுவாய்! இவை இரண்டுக்கும் கடந்த கால வரலாற்றுச் சான்றுகள் உண்டு!

எனவே நமது கண்ணான தலைவன் அண்ணாவின் வழியில், புதிய புறநானூற்று வரலாறு படைத்திட, அழைக்கிறேன் உன்னை அன்பே வா! ஆருயிரே வா! அடலேறு என முழங்கிடுவோம் வா! கெடல் இனி இல்லை தமிழகம்! எனச் சூளுரை மேற்கொண்டு சுடர் முகம் தூக்கிட வா! உடன்பிறப்பே, பயணத்தில் ஆர்வம் இருக்கட்டும் - அவசரம் வேண்டாம்! வேகம், கழகத்தைக் காப்பதிலே, கயமைத்தனத்தை எதிர்ப்பதிலே இருக்கட்டும்! நீ ஏறிவரும் வாகனங்களுக்கு அந்தத் தேவையற்ற வேகம் வேண்டாம்! நீ பத்திரமாக வந்தாய், பத்திரமாகத் திரும்பி போனாய் என்ற செய்தி கேட்டால்தான், உன் அன்னையின் வயிற்றில் பால் வார்த்ததுபோல, என் மனம் குளிரும் என்பதை நீ அறியமாட்டாயா என்ன?

அன்புள்ள,

மு. கருணாநிதி

24-03-1993

2015. கட்டுப்பாட்டைக் கண்
எனக் காத்திடுவோம்!

உடன்பிறப்பே,

கொடிக்காடு நகர்வது போல் கோவையில் நமது மாநில மாநாட்டுப் பேரணி நடைபெற வேண்டுமென நேற்றைய கடிதத்தில் என் விருப்பத்தை வேண்டுகோளாக்கியிருந்தேன். ஊர்வலத்தில் உன் போன்ற உடன்பிறப்புக் களுடன் அணிவகுத்து வரவேண்டுமென்றுதான் எனக்கும் ஆசை! ஆனால் இயலாதே என்னால்! தளர்ச்சியல்ல! கழகத்தின் வளர்ச்சி! அந்த அளவுக்குப் பெருகி என்னை உன் போன்றோரின் கரை கடந்த வெள்ளத்தில் அலை மோதலில் இருந்து அழைத்துச் செல்லவே, பத்து பேர் பலசாலிகளாகத் தேவைப்படுகிறார்களே!

அதனால் தான் நானும், பேராசிரியரும், சாதிக் பாட்சாவும், நாஞ்சிலாரும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ள மேடையிலிருந்து பேரணியின் முழு வடிவத்தைக் காண்பதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஊர்வலத்துடனேயே இணைந்து நாங்கள் வந்தால் ஊர்வலத்தின் பூரணப் பொலிவையும் கண்டு மகிழ முடியாதல்லவா?

நாங்கள் தனி மேடையில் அமர்ந்து நீயும், இலட்சக்கணக்கான உடன்பிறப்புகளும் கட்டுப்பாடு குலையாமல் அணி வகுத்துக் கரங்களில் கொடிகளும், பதாகைகளும் ஏந்திச் சீருடை அணிந்து செல்லும் காட்சியைக் காணும் போது, அடடா! எப்படி இருக்கும் தெரியுமா? இசை நிகழ்ச்சியோ, கலை நிகழ்ச்சியோ எதிரேயுள்ள அரங்கில் நடக்கும் போது, கீழே பார்வையாளர் வரிசையில் அமர்ந்துள்ள பரமரசிகனின் பாதங்களில் - கைவிரல்களில் தாளம் கொஞ்சுவதைப் பார்த்திருப்பாயே! அவனாவது வெறும் ரசிகன் - நாங்கள் அப்படியல்லவே! ஒரு காலத்தில் கொடிதூக்கி உன்னைப்போலவே பேரணிகளில் கொள்கை

முழக்கத்தை உரத்த குரலில் எழுப்பியவர்களாயிற்றே! அதனால் தமிழினப்படை அணிவகுப்பின், தாளம் பிசகாமலிருக்கிறதா என்று அதிலே ஒரு கண் வைத்தவாறே - உன் பவனியின் கலை அழகையும், கட்டுப்பாட்டு அழகையும், கடமை உணர்வையும், கண்ணியத்தின் சிறப்பையும் - நேர் கொண்டு பார்வையுடன் நெஞ்சுயர்த்தி நீ நடக்கும் எழிலையும் ரசித்து வாழ்த்திக் கொண்டே இருப்போமே!

ஏராளமான வாகனங்களில், உன் போன்ற உயிரினும் மேலான உடன்பிறப்புகள் வருவதாகச் செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன. பத்திரமாக, பாதுகாப்பாக, பதற்றமில்லாமல் வா - என்று பல்லாயிரம் தடவை உன்னை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இமயமெனக் கழகம் உயர்ந்து எழுந்து நிற்பதைக் கண்டும் - முக்கடலும் சங்கமித்துக் குமணன் ஆண்ட பூமியில், பொன்னர் சங்கர் உலவிய தரணியில், தீரன் சின்னமலை வாழ்ந்த மண்ணில் ஒரு பெருங்கடலாய்ப் புகுந்ததோ என நீ நடத்தும் பேரணியின் எழுச்சி கண்டும் - சிங்கத்தை எதிர்கொள்ளும் திறமில்லாச் சிறு நரிகள் சில்லுண்டிச் செயல்கள் மூலம் - மாநில மாநாட்டின் சீரையும் சிறப்பையும் சிதைத்திட, பேரணிப் புகழுக்கு மாசு விளைத்திட எண்ணிடுவார் எனின், அதற்கு எள் முனையளவும் இடம் தராமல் அண்ணா வழியில் அமைதி காத்திட அணுவளவும் தவறக்கூடாது!

பேரணி வரும் வழியில் வேறு கட்சித் தலைவர்களின் படங்கள் இருக்கக்கூடும் - வேறு கட்சிகளின் மன்றங்கள், கொடிக் கம்பங்கள் இருக்கக்கூடும். எவரேனும் சமூக விரோதிகள் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றிடின், அவர்களை அடையாளம் கண்டு - காவல் துறையினரிடம் ஒப்படைத்திடல் வேண்டும். மாற்றுக் கட்சியினரின் சின்னங்கள், கொடிகள், இடங்கள் எதற்கும் கடுகளவு சேதாரமும் வராமல் காத்திடுவதும், அந்த அளவுக்குக் கட்டுப்பாடு மிக்கதாகப் பேரணி நடைபெறுவதும், மிக மிக முக்கியம்!

இந்தி ஆதிக்க எதிர்ப்பு - மண்டல் கமிஷன் பரிந்துரை நடைமுறைப்படுத்தல் - சமூக நீதிப் பாதுகாப்பு - இந்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையின் ஆபத்து - தமிழக அரசின் அராஜக தர்பார் - நிர்வாக அலங்கோலம் - பொதுமக்களை வாட்டி

வதைக்கும் கட்டண உயர்வுகள் - வேதனையில் தள்ளிடும் விலைவாசி உயர்வுகள் - மதவெறியர்களின் சேட்டைகள்,

இவைகளையொட்டிய முழக்கங்களே, பேரணியில் ஒலித்திட வேண்டும்! ஆபாசச் சித்திரங்கள், அசிங்கமான கோஷங்கள் அறவே தவிர்க்கப்பட்டாக வேண்டும் - அவை என்றைக்கும் கழகம் அனுமதிக்கக் கூடியவைகள் அல்லவே அல்ல!

படைக்கலன் ஏந்தாத பட்டாளத்து வீரனைப்போல ஒவ்வொரு உடன்பிறப்பும் நடைபோட்டு வரவேண்டும் - நாங்கள் அமர்ந்திருக்கும் மேடைக்கு எதிரே மட்டுமல்ல! பேரணி தொடக்கத்திலிருந்து நிறைவுபெறும் வரையில்!

* அண்ணா வழியில் அயராது உழைப்போம்.
* ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்.
* இந்தித்திணிப்பை என்றும் எதிர்ப்போம்
* வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்.
* மாநிலத்தில் சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி.

கழகத்தின் இந்த ஐம்பெரும் முழக்கங்களை - ஒரு பகுதியை ஒருவர் சொல்ல;

உதாரணமாக :-

"அண்ணா வழியில்"

என ஒருவர்

"அயராது உழைப்போம்"

எனப்பலரும் ஒலித்திட, ஐந்து முழக்கங்களும் வான்முட்ட ஒலித்திட வேண்டும்.

"பேரணியிலும் சரி -
மாநாட்டுப் பந்தலிலும் சரி -
கோவையில் உன்போன்ற
உடன்பிறப்புகள் கூடுமிடங்களிலும் சரி -
கட்டுப்பாடு - கட்டுப்பாடு - கட்டுப்பாடு"

இதனைக் கண்ணெனக் காத்திடுக!

இன்னும் எழுதிக்கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது - என் செய்வது! அதற்குள் மாநாட்டுத் தேதிகள் விரைந்து வந்து விட்டனவே!

"எஞ்சியதை நேரில் பேசுவோம் -
பைந்தமிழ் மொழியால்!
பாசமிகு விழியால்!"

அன்புள்ள,

மு. கருணாநிதி

25-03-1993

2016. கொள்ளுப்பாட்டிகளும், பாட்டன்களும் தூக்கிய கொடி!

உடன்பிறப்பே,

ஓடிவா மாநாட்டுக்கு! என்பதற்கு மட்டும் அத்தனை கடிதங்கள் எழுதினாய். வந்து திரும்பிய பிறகு ஒரு நன்றிக் கடிதம் கூட எழுதவில்லையே என்று நீ கோபித்துக் கொள்வதற்கு முன்பே, இதோ இந்த நன்றிக் கடிதத்தை உனக்கு எழுதுகிறேன். நீயும் உன்போன்ற உடன்பிறப்புகளும் 29-ந் தேதியே ஊர் போய்ச் சேர்ந்திருப்பீர்கள். ஆனால் நானும், பேராசிரியரும், சாதிக்கும், வீராசாமியும் மறுநாளும் கோவையில் தங்கி மாநாடு சிறப்புற ஒத்துழைத்த மாநகர, நகர, ஒன்றிய, கிளைக் கழகச் செயலாளர்களுக்கெல்லாம் ஊக்கப் பரிசுகளை வழங்க வேண்டிய கடமையை நிறைவேற்ற வேண்டியவர்களானோம். வரவேற்புக் குழுத் தலைவர் கண்ணப்பன் அவர்களின் வேண்டுகோளைத் தட்டக் கூடாது என்பது மட்டுமல்ல. மாற்றாரின் மன எரிச்சலின் விளைவாக மாநாட்டுப் பந்தலே கொளுத்தப்பட்டு, மாநாடு நடைபெறுமா என எழுந்த கேள்விக்குறிக்கு; விடையாகிச் சிலிர்த்தெழுந்து வீறுகொண்டு பணியாற்றிய கழக மாமணிகளையெல்லாம், அருகழைத்துப் பேசி, அளவளாவி மகிழ்ந்திடக் கிடைத்திட்ட அந்த வாய்ப்பு ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்தது.

முக்கடல்தானே உண்டு. அவைதானே கோவையில் வந்து சங்கமித்திருக்கக் கூடும் - வேறு எக்கடல் புதிதாக வந்து இணைந்தது! என வியப்புறும் வண்ணம் குழுமிய அந்தக் கூட்டத்தை பார் சிறுத்தலால் படை பெறுத்ததோ? - படைபெருத்தலால் பார் சிறுத்ததோ? எனப் பாடிய ஜெயங்கொண்டாரே திரும்ப வந்து உவமை கூறிக் கவிதை புனைய முடியுமோ என்ற ஐயப்பாடு எனக்கு அழுத்தமாக உண்டு.

திருச்சியில் இருந்த என் காதில் பந்தலுக்குத் தீயிடப்பட்டு விட்டது என்ற செய்தி இடியென விழுந்து, அது இதயத்தில் இறங்கி - என்னை ஒருக்கணம் நிலைகுலையச் செய்தது எனினும், நீயிருக்கிறாய் என்ற நம்பிக்கையில் முழுப் பந்தலும் எரிந்து, வெறும் பொட்டல்வெளியே மிச்சமிருப்பினும் மாநாட்டை நடத்தியே தீருவது என்று கூறிவிட்டுப் புறப்பட்டேன் கோவைக்கு!

இரவு 10 மணி அளவில் கோவையில் மாநாட்டுப் பந்தலுக்குள் நுழைந்த என்னை கண்ணீர்த் துளிகள்தான் வரவேற்றன. நமது கழகம் தொடங்கியபோது நமக்கு இப்படி ஒரு பெயர் உண்டே!

என் முகத்தைப் பார்த்து, வரவேற்புக் குழுவின் செயல்வீரர்களுக்கும் - அவர்களின் முகத்தைப் பார்த்து எனக்கும் ஏற்பட்ட அந்த நம்பிக்கையின் வலிவும், கொள்கைப் பிடிப்பின் உறுதியும் முப்பத்தி ஆறே மணி நேரத்தில், மீண்டும் பத்து இலட்சம் பேர் உள்ளேயும் - பந்தல் கொள்ளாத பல இலட்சம் பேரின் கூட்டம் வெளியேயும் அமர்ந்தும், நின்றும் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிற அளவுக்கு முழுப் பந்தலையும் உருவாக்கிக் காட்டிய மாட்சியை என்னென்று சொல்வேன்! எப்படிப் புகழ்ந்துரைப்பேன்!

மார்ச் 25-ஆம் நாள் பிற்பகல் பந்தல் எரிகிறது - 26-ஆம் நாள் காலையில் பொதுக்குழு கூடுகிறது - காலை 10 மணிக்கு பந்தல் முகப்பில் 70 அடி உயரத்தில் கழகக் கொடியேற்றுகிறேன் - தொண்டர் படையின் அணிவகுப்பு மரியாதை - அதற்கடுத்து மூன்றுமணி நேரம் பொதுக்குழு நடக்கிறது. தலைமைக் கழகத் தணிக்கைக் குழு அறிக்கை, செயற்குழுவினரும், தீர்மானக் குழுவினரும் விவாதித்து எழுதிய தீர்மானங்கள், இவற்றைப் பொதுக்குழு ஏற்கிறது. பிற்பகல் 1 மணி அளவில் செய்தியாளர்களின் சந்திப்பு. பல கேள்விகளுக்கு விடையளிக்கிறேன் விளக்கமாக.

மாலை 4 மணிக்கு குறிப்பிட்ட இடத்திலிருந்து பேரணி ஊர்வலம் புறப்பட்டு விடுகிறது. நானும், பேராசிரியரும், சாதிக்கும், நாஞ்சிலாரும் மற்றும் கழக முன்னணியினரும் பேரணியைப் பார்வையிட அமைக்கப்பட்டிருந்த மேடைக்கருகே அப்போதே பேரணியின் நுனி முகப்பு வந்து விடுகிறது. இரவு ஒரு மணிக்கு மேல்தான் அந்த மேடையை விட்டு நகருகிறோம். அதாவது, ஊர்வலம் ஓர் குறிப்பிட்ட இடத்தைக் கடக்க ஒன்பது மணி நேரத்துக்கு மேலாகியிருக்கிறது.

கட்டுப்பாடு குலையாமல் கழகத் தளகர்த்தர்களாம் மாவட்டக் கழகச் செயலாளர்களும், தலைமைக் கழகத்தின் பல்வேறு அணிகளின் செயலாளர்களும் பேரணியில் கலந்து கொண்டு வந்ததும், ஒரு துளி அசம்பாவித நிகழ்ச்சிக்கும் இடமின்றிப் பேரணி நடந்ததும் - பேரணியில் பெரும் பகுதியினர் இளைய தலைமுறையினராக எழுச்சியுடன் நடைபோட்டதும், அப்பப்பா - ஆனந்தக் கண்ணீரையல்லவா என் விழிகளில் அருவியென வழியவிட்டு விட்டது!

பேரணி வரும்போது சற்று நேரம் மழைத்துளிகளால் நீ ஈரமானாய் என்று எண்ணிக் கொண்டிருப்பாய் - இல்லை, உடன்பிறப்பே, இல்லை! அது என் ஆனந்தக் கண்ணீரின் திவலைகள்! ஆம், உன்னைத் தொட்டு அபிஷேகித்தன! அந்தத் துளிகள் பேறு பெற்றன!

இப்படியொரு தொண்டர் சேனை - அறவழிபட்டாளத்துச் சிப்பாய்கள் - ஆயிரம் ஆயிரமாய், இலட்சம் இலட்சமாய் அண்ணாவின் இந்த அறிவுப்பாசறையைத் தவிர, வேறு எங்கே உண்டு சொல்வாய்! அதனால்தானே சுடச்சுட ஒளிரும் பொன்னாக - சோதனை நெருப்பில் கருகிப் போகாமல், கதிரவனைக் கொளுத்தவும் ஒரு தீயுண்டோ எனக் கேட்டுப் பீடு நடையும், பெருமித நோக்கும் கொண்டு பேரணி நடத்திக் காட்டியுள்ளோம் கோவை குலுங்கிட! கோட்டைக் கோணங்கிகள் நடுங்கிட!

மாநாட்டில் பல்வேறு தலைப்புகளில் பேசியோர், எப்படியெல்லாம் கருத்து மழை பொழிந்து என்னைக் களிப்பில் ஆழ்த்தினர் தெரியுமா?

தலைப்புகளில் பேசியோர் இருக்கட்டும். அவர்களில் ஏற்கனவே சொல்லேருழவர்கள்! தமிழகத்தின் திக்கெட்டும் முழங்குகிற கொள்கை விளக்க முரசங்கள்! வேல்கள், ஈட்டிகள், போர் வாட்கள் என உரை வீச்சு படைத்த முன்னணி உடன்பிறப்புகள்!

மாநாட்டுத் தலைவரை வழிமொழிந்த மாவட்டச் செயலாளர்கள் ஓரிரு வாக்கியங்களை மட்டுமே கூறி, என் மீதுள்ள வாஞ்சையையும் - கழகம் காத்திடும் அந்தச் சேனா நாயகர்களின் மீது நான் கொண்டுள்ள பாசத்தையும் - அந்த மாநாட்டுப் பந்தலில் மலர்களாக்கித் தூவினார்களே! அந்த மலர்க் குவியல் முழுமைக்கும்

சொந்தக்காரர்கள் என் ஆசான் பெரியாரும், என்னை ஆளாக்கிய அண்ணாவும் என்பதை மறந்து விடக்கூடிய மமதையாளனல்லவே நான்!

வழிமொழிந்த மாவட்டச் செயலாளர்கள் பொழிந்த அந்த உரிமை கொண்டாடும் வாசகங்கள் ஏடுகளில் வராத காரணத்தால் இதோ - என் நெஞ்சம் இனிக்க இனிக்க உனக்கு மீண்டும் ஒரு முறை நினைவூட்டுகிறேன்.

முதலில் முன்மொழிந்த கண்ணப்பன், சி.டி. தண்டபாணி, கோவை. இராமநாதன், க.ரா. சுப்பையன் ஆகியோர் இவர் எங்கள் கோவை மாவட்டத்திலே 1945ஆம் ஆண்டு வாக்கிலே வாழ்ந்தவர். பல ஊர்களுக்கு நடந்து சென்றே கழகப் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்து கொண்டவர் என்றனர்.

தொடர்ந்து வழிமொழிந்திட வந்த செங்கை அண்ணா தெற்கு மாவட்டச் செயலாளர் மதுராந்தகம் ஆறுமுகம் இவர் அண்ணாவின் தம்பி - கழகத்தின் இரண்டாம் அத்தியாயத்தை இவர் எழுதுவார் என்று அண்ணா அவர்களால் அடையாளம் காட்டப்பட்டவர் எனக்குறிப்பிட, அவரோடு சேர்ந்து செங்கை அண்ணா வடக்கு மாவட்டச் செயலாளர் வேணுவும் - எனவே இவருக்கு, எங்கள் மாவட்டம்தான் சொந்தம் என்றார்.

பெரியார் மாவட்டச் செயலாளர் கணேச மூர்த்தியோ, இவர் ஈரோட்டில் பெரியார் வீட்டிலும், குடியரசு அலுவலகத்திலும் தங்கி - பெரியாருக்கு மாணவராக விளங்கியவர். எனவே எமக்கே அதிக சொந்தம் என்றார்.

சேலம் வடக்கு மாவட்டச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகமோ, இவர் சேலத்திலே நீண்ட காலம் தங்கி, கழகப் பணியாற்றியதோடு - திரையுலகில் திருப்புமுனை ஏற்படுத்திய மந்திரி குமாரியை எழுதி கலைப்பணி ஆற்றியவர். எனவே, எமக்கே அதிக உரிமை என்றார்.

நாமக்கல் கவிஞருக்கு மாளிகை அமைத்தவர் - எனவே சேலம் தெற்கு மாவட்டமும், உரிமை கொண்டாடுகிறது என்றார் அந்த மாவட்டச் செயலாளர் வீரப்பன்.

கல்லக்குடியில் தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்துப் போராடியதும் - ஆறுமாதம் திருச்சி சிறையில் இருந்ததும் - முதன் முதலாக தேர்தலில் 1957-ல் குளித்தலைத் தொகுதியில் நின்றதும்

எங்கள் திருச்சி மாவட்டத்தில்தான் என்றார் அந்த மாவட்டச் செயலாளர் செல்வராசு!

கல்லக்குடி போராட்டத்தின் போது, இவருக்கு ஆறுமாத கடுங்காவல் தண்டனை அளித்து - சப்ஜெயிலிலும் பூட்டி வைத்தது எங்கள் அரியலூரில்தான் என்று உரிமைக்குரல் கொடுத்தார், அரியலூர் மாவட்டச் செயலாளர் சிவசுப்ரமணியம்.

இந்தி எதிர்ப்புப் போர்க்களத்தில் சிறைப்பட்டு எங்கள் மதுரைச்சிறையில் இவர் இருந்தார் - இவரது களம்புகு காதைகளுக்கு, மதுரையே வழி அனுப்பும் பாடி வீடு என்றார் அந்த மாவட்டச் செயலாளர் பொன் முத்து இராமலிங்கம்!

புதுக்கோட்டை என்ற புதிய மாவட்டத்தை உருவாக்கித்தந்தவர் இவர் என்பதால், எமக்கும் உரிமையுடையவர் என்றார் அந்த மாவட்டச் செயலாளர் பெரியண்ணன்!

தென் ஆர்க்காடு வடக்கு தெற்கு மாவட்டச் செயலாளர்களான செஞ்சி இராமச்சந்திரனும், பன்னீர்செல்வமும் எங்கள் மாவட்டத்தில்தான் இவர் பெண் எடுத்தவர் எனக்கூறி மற்ற மாவட்டங்களுடன் போட்டி போட்டனர்!

காமராசருக்கு நினைவிடம் அமைத்து, காமராசர் பிறந்த வீட்டை நினைவகமாகவும் ஆக்கியவர்! காமராசரின் அன்பைப் பெற்ற இவர் விருதுநகரைத் தலைநகராகக் கொண்ட காமராஜர் மாவட்டத்துக்கு உறவுடையவர் என்றார் தங்கபாண்டியன்!

பசும்பொன் மாவட்டத்துப் பெருவீரன் வாளுக்கு வேலி கதையை தென்பாண்டிச் சிங்கம் என்ற புதினமாக எழுதிய இவர், எங்கள் மாவட்டத்துக்குச் சொந்தக்காரர் என்றார் தா. கிருட்டிணன்!

முகவை மாவட்டத்துக்குப் பல சிறப்புகள் உண்டு. அதில் ஒரு சிறப்பு அந்தப் பெயரில் மு.க. என்று இரு எழுத்துகள் இருப்பதே - அதனால் எங்கள் மாவட்டம் அவரை உள்ளடக்கியது என்றார் சுப. தங்கவேலன்!

மொழிப் புரட்சியின்போது தனிமைச் சிறையில் இவர் அடைக்கப்பட்டு, அண்ணா அவர்களால் யாத்திரை ஸ்தலம் என வர்ணிக்கப்பட்ட பாளையங்கோட்டை எங்கள் நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில்தானிருக்கிறது எனத் தோள் உயர்த்தினார் டி.ஏ.கே. இலக்குமணன்!

கட்டபொம்மனுக்கு பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டை கட்டி, சிதம்பரனார் இழுத்த செக்கை சென்னையில் காட்சிக்கு வைத்தவர் இவர் என்பதால், இவர் எனக்கே உரியவர் என்று அறை கூவல் விடுத்தார் என். பெரியசாமி!

குமரி முனையில் வள்ளுவர் சிலை வைத்திடத் திட்டமிட்டுப் பணி தொடங்கியவர் இவர் என்பதால், எமக்கே உரியவர் என்றார் அந்த மாவட்டச் செயலாளர் இரத்தினராஜ்!

இந்தியாவிலேயே அம்பேத்கார் பெயரை ஒரு மாவட்டத்துக்குச் சூட்டியவர் இவரே. அதனால் இவர், எமக்குத்தான் உரியவர் என்றார் அந்த மாவட்டச் செயலாளர் முகமது சகி!

தமிழக அரசியலில் திருப்புமுனை ஏற்படுத்திய திருவண்ணாமலை இடைத் தேர்தல் 1962-ல் நடந்த போது, ப.உ.ச. வெற்றிக்காக ஒருமாதம் திருவண்ணாமலையில் இருந்து பணியாற்றியவர் இவர் என்பதால், எமக்கே உரியவர் என்றார் அந்த மாவட்டச் செயலாளர் கு. பிச்சாண்டி!

முல்லை வேந்தன், தர்மபுரியெனும் தகடூரின் அதியமானையும், ஔவையையும் நினைவுபடுத்தி - அந்த மாவட்டம் தங்க நெல்லிக்கனி பரிசளித்ததைச் சுட்டிக்காட்டி சொந்தம் கொண்டாடினார்!

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம் அமைந்ததை இ.பெரியசாமி எடுத்துக்காட்டி, அதனால் ஏற்படும் நெருக்கத்தை உணர்த்தினார்!

கரூர் சிறையில் ஒரு நாள் - இந்தி எதிர்ப்பு போரின் மற்றொரு கட்டத்தில் இவர் அடைபட்டிருந்தார் எனக்கூறி, அந்த மாவட்டச் செயலாளர் பரமத்தி சண்முகம் உறவுக்கு வலிவேற்றினார்.

அண்ணா அறிவாலயம் இவர் அமைத்திட்ட தென் சென்னையில்தான் இவர் குடியிருக்கிறார். அங்குள்ள சைதாப்பேட்டையில் வென்றுதான் அமைச்சரானார் என்று வரலாற்றை எடுத்துரைத்தார் சைதை கிட்டு!.

பலராமன் நன்கொடை சீட்டு விற்கும் இடத்தில் பணியாற்றியதால் அவருக்கு பதிலாக என்.வி.என். சோமு வழிமொழிந்து, இவர் இப்போது புதுப்பித்துள்ள அறிவகம் இருப்பதும், இவர் நின்று வென்ற துறைமுகத் தொகுதியும் வட சென்னையில்தான் என்று உறவை விவரித்தார்.

1962 தேர்தலில் 15-ல் 14 எம்.எல்.ஏ.க்களும் வெற்றியடையாதபோது, தஞ்சையில் வென்றவர் இவர் என்றும் - விலைவாசி உயர்வு எதிர்ப்பு அறப்போரில் ஈடுபட்டு - தஞ்சைச் சிறையில் இருந்தவர் என்றும் - கலைஞரையும், பேராசிரியரையும் தந்தது எங்கள் மாவட்டமே என்றும் மேலத்தஞ்சை மாவட்டச் செயலாளர் கோ.சி. மணி உரிமையும் உறவும் பற்றி விளக்கினார்.

கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர் மீனாட்சி சுந்தரமோ, இவர் பிறந்த திருக்குவளை கிராமமே எமது மாவட்டம்தான் என்றும் - இந்தியை எதிர்த்து இளம்வயதில் கொடி பிடித்தது அந்த மாவட்டத்தில் உள்ள திருவாரூரில்தான் என்றும் குறிப்பிட்டு மகிழ்ந்தார்.

புதுவை மாநில அமைப்பாளர் டி. இராமச்சந்திரன் இவர் 1944-ல் எங்கள் பாண்டிச்சேரியில் உயிருக்கே ஆபத்தான நிலையில் எதிரிகளால் தாக்கப்பட்டு, தந்தை பெரியாரின் கரத்தினால் மருந்து போடப்பட்டது என்று பெருமை பொங்கக் கூறினார்.

பம்பாய் பொற்கோ, பம்பாயில் அடிபட்ட தமிழர்களுக்காகக் குரல் எழுப்பிய கழகத்தின் தலைவர் எனக் கூறிக் கண் கலங்கினார்.

அம்மையார் சத்தியவாணிமுத்து இவர் எங்களுக்கு சம்பந்தி என்று சொல்லிப் பூரிப்படைந்தார்!

நீலகிரி மாவட்டச் செயலாளர் முபாரக் என்ன சொன்னார் தெரியுமா? நான் இயற்கை வளம் கொஞ்சும் நீலகிரியிலிருந்து வந்துள்ளேன். மற்ற மாவட்டச் செயலாளர்கள் உறவு கொண்டாடியதெல்லாம் செயற்கையானது - இவர் இயற்கையிலேயே தலைவர் என்பதால் இயற்கை வளம் கொழிக்கும் எனது மாவட்டத்தின் சார்பில் வழி மொழிகிறேன் என்றார்!

உடன்பிறப்பே! முபாரக் சொன்னது உண்மையா? அல்ல! அல்ல! நான் இயற்கையிலேயே தலைவனல்ல - ஆம், தலைவனாகப் பிறந்தவனல்ல! அன்றும் இன்றும் என்றும் தொண்டன்தான்! உன் போன்ற உடன்பிறப்புகள் என்னை தலைவனாக்கித் தொண்டு செய்திட ஆணையிட்டுள்ளீர்கள்! அதுதான் உண்மை! உண்மை!

கோவை மாநாடு, இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடல்லவா? அதனால் ஒன்று சொல்கிறேன். 14-வது வயதில் நான் இந்தி

ஆதிக்க எதிர்ப்புக் கொடி ஏந்தியவன்! இன்று நீ ஏந்துகிறாய்! என் மகன் அந்தக் கொடி ஏந்துகிறான்! எல்.ஜி. நடத்தும் இலட்சியப்பாதை இதழில் ஒரு பெட்டிச் செய்தி இந்த வாரம் வந்துள்ளது. படித்திருப்பாய். துரைமுருகனும், இரகுமான்கானும் மாநாட்டில் பேசியதையும் கேட்டிருப்பாய்!

அது என்ன தெரியுமா? ஸ்டாலினுடைய தாயாருக்குத் தாயாரின் தாயார் - அதாவது கொள்ளுப்பாட்டி இந்தி எதிர்ப்புப் போரில் 13.3.1939 அன்று சென்னையில் சிறைப்பட்டு மூன்றுமாதம் வேலூர் சிறையில் இருந்தவர்! பெயர் மாயவரம் இராஜாமணி அம்மாள்!

32 குழந்தைகளுடன் 73 தாய்மார்கள் 1938-ல் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போரில் சிறை சென்றனர். அவர்களில் இந்தக் கொள்ளுப்பாட்டி இராஜாமணி அம்மையாரும் ஒருவர்!

அன்று மா. இளஞ்செழியன் எழுதிய தமிழன் தொடுத்த போர் - வை. கோபால்சாமி எழுதியுள்ள போர்க்களத்தில் - ஆலடி அருணா எழுதியுள்ள இந்தி ஏகாதிபத்தியம் ஆகிய நூல்களைப் படித்தால் இதுபோன்ற பல விபரங்கள் கிடைக்கும் உனக்கு!

முரசொலி மாறன் தீட்டியுள்ள திராவிட இயக்க வரலாறு நமது இனப்போரின் கட்டங்களை விளக்குவதுபோல, இவை மொழிப்போரின் கட்டங்களை விளக்கும்!

விளக்கம் பெற்றால் மட்டும் போதுமா? - ஏப்ரல் 20 - அறப்போருக்கு வரிந்து கட்டிக் கொண்டு, நமது கொள்ளுப்பாட்டிகளும், கொள்ளுப்பாட்டன்களும் பிடித்த இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கொடியைத் தூக்கிக்கொண்டு களம் புக வேண்டாமா? தயார்தானா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

01-04-1993

2017. புறப்படட்டும்!
புறநானூற்று மகளிர் பட்டாளம்!

உடன்பிறப்பே,

மலர்முகத்தம்மை - மங்கையர்க்கரசி - நச்சினார்க்கினியன் - ஞானம் அம்மையார் - தமிழரசி - கலைமகளம்மை - அங்கயற்கண்ணி - இளங்கோ - கண்ணம்மா - முத்தம்மா - ஆலங்காட்டான் - சிறையஞ்சான் - மருதம்மாள் - மலர்க்கொடி அம்மையார் - மறைக்காடன் - தமிழன்னை -

இந்தப் பதினாறு பெயர்களையும் படித்தாயா? ஐம்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, 73 மகளிரும், 32 மழலைகளும் சிறைசென்று மூன்று மாதம் ஆறுமாதமெனத் தண்டனை அனுபவித்தார்களே! அவர்களிலே சில தாய்மார்களுக்கும், அவர்கள் பெற்றெடுத்த தங்கங்களுக்கும் அப்போதே சூட்டப்பட்டிருந்த தமிழ்ப் பெயர்கள்தான் இவைகள்!

கோவை இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநில மாநாட்டிலே தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று டாக்டர் காளிமுத்து உரையாற்றி உருக்கிட, டாக்டர் தமிழ்க்குடிமகனும், டாக்டர் நன்னனும் தமிழர்க்குப் பெயர்களும் - கடைவீதிப் பலகைகளின் பெயர்களும் கூட வடமொழி எழுத்தில், ஆங்கில எழுத்தில், இந்தி எழுத்தில் தானே இருக்கின்றன என ஏங்கி, என்று வரும்? அந்தப் பொற்காலம்? என எண்ணினோமே - அந்தக் காலம் 1938-க்கு முன்பே விரிகதிர் பரப்பி வீறுகொண்டு நின்றிருக்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டே நான் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பதினாறு பெயர்களும், இன்னும் சிலவும்!

ஆம்! மொழிப் போரில் சிறை சென்ற மகளிர் படை வரிசையில் மலர் மணமாய்க் கமழும் தமிழ்ப் பெயர்கள்! ஒருவேளை இவைதான் பதினாறு பேறுகளோ? உண்மைதான் தமிழர்க்கு இவை தானே பேறுகள்!

காஞ்சி மணிமொழியாரின் செல்வன், இளஞ்செழியன் எழுதிய தமிழன் தொடுத்த போர் எனும் நூலினை வாலிப வயதில் படித்துள்ளேன். இப்போது நமது அண்ணா அறிவாலயத்து நூல் நிலையத்திலிருந்து எடுத்துச் சென்று கோவை மாநாட்டிலிருந்து திரும்பும்போது ரயிலிலேயே படித்துக் கொண்டு வந்தேன். அதன் விளைவுதான், நேற்றைக்கு நான் எழுதிய கொள்ளுப் பாட்டியும் பாட்டனும் தூக்கிய கொடி என்ற கடிதம்!

அந்தப் பட்டியலைப் பார்த்தால் எத்தனை புலவர்கள் - எத்தனை ஆன்றோர், அறிஞர் பெருமக்களின் வீட்டுப் பெண்கள் மொழிப்போரில் ஈடுபட்டு சிறையேகினர் என்ற செய்தி, நம் சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்த்திடவன்றோ வைக்கின்றது!

காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட தலை சிறந்த சமூக சேவகியாக விளங்கிய மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையாரை திராவிட இயக்கம் கவர்ந்தது! இந்தியை வீழ்த்த எழுந்த தமிழியக்கத்தின் படை வரிசைக்குத் தலைவியானார்! அவரும் மகளிர் குல திலகம் டாக்டர் தர்மாம்பாள் அமமையாரும் -

"கருணையினு மிலையோ காங்கிரசாரே! கதறும்
பலன் தொல்லையோ? செந்தமிழ்த் தாயவள்
சிந்திடும் கண்ணீரால் தேசமே பாழாகுமன்றோ!"

எனக் கவிதையிலே முழங்கிய பாவலரின் துணைவியார் பட்டம்மாள் பாலசுந்தரமும் - புலவர் அருணகிரி நாதரின் துணைவியாரும் - காங்கிரசிலிருந்து வெளியேறி மொழிப் போரில் கலந்து கொண்ட என்.வி.என். அவர்களின் துணைவியார் புவனேசுவரியும் - பிரபல டாக்டர் சிற்சபையின் துணைவியார் கலைமகளம்மையும் - பெல்லாரி திவான்பகதூர் கோபாலசாமி முதலியாரின் சகோதரி ராசம்மாளும் - வேலூர் துளசிபாய் என்ற பார்ப்பன அம்மையாரும் - தமிழ்க் கடல் மறைமலை அடிகளாரின் இளைய மருமகள் ஞானம் அம்மையாரும் - அடிகளாரின் மூத்த மருமகள் சரோசினி அம்மையாரும் - புரட்சிக் கவிஞருக்குப் பொற்கிழி அளித்திடப் பெரு முயற்சி எடுத்திட்ட திருவாரூர் டி.என். இராமன் எனும் சுயமரியாதை வீரரின் தாயார் இராசம்மாளும் - திருவாரூர் சுயமரியாதைச் சங்கத்தலைவர் நாத்திக முத்துக்குமரனின் தாயார் நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்ட

ஸ்டாலினின் கொள்ளுப் பாட்டி இராஜாமணி அம்மாளும் - சிறையில் உயிர்நீத்த தியாகச் சுடர் தாளமுத்துவின் துணைவியார் குருவம்மாளும் - நெல்லைத் தமிழ்ப் புலவர் இராமநாதனின் துணைவியார் பொன்னம்மாளும் - மொழிப் போரில் முதன் முதலாகச் சிறையேகிய பல்லடம் பொன்னுசாமியின் துணைவியார் நாச்சியம்மாளும் - சிறைத் தண்டனை பெற்ற 73 மகளிர் அணியில் அடங்குவர்.

பெரிய குடும்பத்தினர், நடுத்தரக் குடும்பத்தினர், அறிஞர்கள், புலவர்கள், டாக்டர்களின் குடும்பத்தினர் - மற்றும் தமிழ்ப்பற்று மிக்க தாய்க்குலத்தினர், தாங்கள் தங்கள் தோளிலும், மடியிலும் குழந்தைகளையும் சுமந்தவாறு சிறை சென்றபோது - அந்தக்காலத்து இந்தி ஆதரவாளர்கள் என்ன கேவலமாகக் கேலி பேசினர் தெரியுமா? பெற்ற குழந்தைகளுக்குப் பால் வாங்கிக்கொடுக்க வக்கில்லை, வகையில்லை. ஆகவே சிறைக்குச் சென்றுள்ளனர் என, நாக்கில் நாராசத்தை நடமாடவிட்டனர்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அப்போது ஓர் ஆங்கிலோ இந்தியரை ஆசிரியராகக் கொண்ட தமிழ்மணி என ஒரு காங்கிரஸ் ஏடு நடந்தது.

ஆயிரத்து ஒன்று ஹம்பக் எனத் தலைப்பிட்டு, 1001 பேர் இந்தியை எதிர்த்துச் சிறை சென்றதைக் கிண்டல் புரிந்து, முதல் பக்கத்தில் கட்டுரை தீட்டி - தமிழர் இயக்கத்தை நையாண்டி செய்தது!

அந்தக் கால கட்டத்தில், இந்தியா முழுவதும் விடுதலைப் போருக்காக தனி நபர் சத்தியாக் கிரகத்தில் பங்கேற்றுச்சிறை சென்ற காங்கிரசார் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது 1001 பேர் தமிழ்மொழி காத்திட மறியல் நடத்தி சிறை புகுந்த எண்ணிக்கை ஒன்றும் குறைவானதல்ல!

1938-க்குப் பிறகு அடுத்தடுத்து நடைபெற்ற போராட்டங்களில் அந்த எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்து உயர்ந்து - 1965-ல் மொழிப் புரட்சியே நடைபெற்று ஆயிரக்கணக் கானோர் மாண்டு மடிந்து - சிறையில் பல்லாயிரவர் அடைக்கப்பட்டு - 1986-ல் இந்தியை எதிர்த்து அரசியல் சட்டம் கொளுத்திச் சிறை சென்றோர் மட்டும் இருபதாயிரத்தை எட்டுகிற அளவுக்கு ஆயிற்று!

இப்போது மீண்டும் மொழிப்போர்க்களம் அமைகிறது! தமிழகமெங்கும் இந்தி எழுத்துகள் அழிக்கப்படும் தொடர் போராட்டம் தொடங்கி விட்டது!

ஏப்ரல் 20 - ஆம் நாள் இரயில் நிறுத்தப் போராட்டம் - தமிழ் காக்க - இந்தி ஆதிக்கத் தருக்கு அடக்கிட - கழகம் களத்தில் குதிக்கும் நாள்! இந்த நேரத்தில் இளைஞர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, இலக்கிய அணி, விவசாய அணியினர்க்கு அழைப்பு விடுப்பது போலவே, மகளிர் அணியினர்க்கும் 1938 ஆம் ஆண்டு அறப்போர் பட்டியலையும் அந்த படை வரிசையையும் நினைவூட்டி அழைப்பு விடுக்கிறேன். புறப்படட்டும்! புறநானூற்று மகளிர் பட்டாளம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

02-04-1993

2018. தொடரட்டும் அறப்போராட்டம்!
தோள்கள் உயரட்டும் தமிழைக் காத்திட!

உடன்பிறப்பே,

கோவை மாநில மாநாடு இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடு நிறைவேற்றியுள்ள போராட்டத் தீர்மானத்தையும், மாநாட்டுத் தலைவர் என்ற முறையில் எனது வேண்டுகோளையும் நடை முறைப்படுத்திட களத்தில் குதித்துவிட்டார்கள் எனது உடன்பிறப்புகள் என்ற செய்தி தமிழகத்தின் திக்கெட்டிலுமிருந்து என் சிந்தை இனிக்க வந்து கொண்டிருக்கிறது.

இந்தி ஆதிக்க எதிர்ப்பு அறப்போரட்டத்திற்கான தீர்மானத்தின் அடிப்படையில், மாநாட்டில் நான் ஆற்றிய தலைமை உரையும், பேராசிரியர் நிகழ்த்திய திறப்பு விழா உரையும் முரசொலியில் முழுமையாக வந்துள்ளன. எனினும், அவற்றை இளைஞர் அணியினர் நூல்களாக வெளியிட்டு, நமது கழகச் சொற்பொழிவாளர்களுக்கு பயன்படும் வண்ணம் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் மாநாட்டுத் தலைமையுரையின் இறுதிக் கட்டத்தில், இந்தி ஆதிக்கம் எப்படியெல்லாம் தமிழகத்தின் சந்து பொந்துகளில் நுழையத் தலைப்பட்டுள்ளது என்பதற்கான எடுத்துக்காட்டுகள் பலவற்றைத் தொகுத்தளித்துள்ளேன். மாநாட்டில் நீ அதனைக் கேட்டிருக்கிறாய். எனினும், தலைமைக் கழகத்தின் சார்பில் தலைவர் போர் முரசம் எனும் தலைப்பிட்டு இலட்சக்கணக்கில் துண்டு அறிக்கை அச்சியற்றப்பட்டு மாவட்டக் கழகச் செயலாளர்கள் மூலம் நகரங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நகரக் கழகச் செயலாளர்களும், ஒன்றியக் கழகச் செயலாளர்களும் அந்தத் துண்டு அறிக்கைகளை மாவட்டக் கழகச் செயலாளர்களிடம் தொடர்பு கொண்டு உடனடியாகப் பெற்று அந்த விளக்கங்களைப்

பட்டிதொட்டிகளில்கூடப் பரப்பிட முனைந்திடுமாறு வேண்டுகிறேன்.

அந்தத் துண்டு அறிக்கையில் இடம்பெற்றுள்ள கோவை மாநாட்டுத் தலைமையுரையின் அறப்போர்ப் பிரகடனப் பகுதியை இந்தக் கடிதத்தில் இணைத்திடுவதால் அது முரசொலி, தினகரன் இதழ்கள் வாயிலாக மீண்டும் உன் உள்ளத்தில் பதிந்து, நீ அதனை ஏனையோர்க்கும் எடுத்தியம்ப இயலுமென்ற எண்ணத்துடன், இதோ இணைத்திடுகின்றேன்.

1938 முதல் 1965 வரை மொழிப்புரட்சி முடிந்து அண்ணா ஆட்சிக்கு வந்த பிறகு இரு மொழித் திட்டம் - தமிழ், ஆங்கிலம் இரண்டுக்குத்தான் இடம் என்று ஆக்கப்பட்டு, அதன் பிறகு 77-ல் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்த பிறகு, மீண்டும் இந்தி தலைநீட்டத் தொடங்கி, அதை எதிர்த்து 86-ம் ஆண்டு நாம் அறப்போர் நடத்தி அரசியல் சட்ட நகலையே கொளுத்துகிற அளவிற்கு தீவிரப்போராட்டம் நடத்தி, பேராசிரியர் உள்ளிட்ட பத்து சட்டமன்ற உறுப்பினர்களின் பதவி பறிக்கப்பட்டு, பல்லாயிரவர் சிறைபுகுந்தும் கூட, இன்னமும் இன்று ஜெயலலிதா ஆட்சியில் - எம்.ஜி.ஆர். ஆட்சியைவிட வேகமாக, விரைவாக இந்தி தமிழகத்திலே திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதற்கு நடைபாவாடை விரிப்பதைப் போல, கடந்த ஆண்டு நவோதயா இந்திப் பள்ளிக்கூடங்களை நாங்கள் வரவேற்கிறோம் என்று, இன்றுள்ள அ.தி.மு.க. ஆட்சியால் வரவேற்பு அளிக்கப்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இன்றைக்கு நிலைமை என்ன? தொலைக்காட்சியில் தமிழுக்கு உள்ள நேரம் குறைக்கப்பட்டுவிட்டது.

அதுமாத்திரமல்ல, தொலைக்காட்சியிலே முப்பது நிமிடம் சமையல் கலை என்கிற பெயரால் - அதற்கு மாதாஜிக்கி என்கிற இந்திப்பெயர் - சமையல்கலைப் பயிற்சி நடைபெறுகிறது.

வானொலியில் பகல் 2 மணிக்கு செய்திக்குப் பிறகு 2.15 மணிக்கு மேல் நாள் தோறும் 15 நிமிடம் இந்திப் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது.

எட்டாவது வகுப்பு படித்து விட்டு பார்க்கக் கூடிய அட்டெண்டர் attender வேலைக்குக் கூட இந்தி தெரிந்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறது.

மாநிலத்தில் தமிழ் ஆட்சிமொழி என்று ஏற்றுக்கொண்ட போதிலும், தமிழகத்தில் இயங்குகிற மத்திய அரசு அலுவலகங்களுக்கு இந்திப் பெயரிலேயே பெயர் சூட்டப்பட்டு விளம்பரப்பலகைகள் எழுதப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன.

உதாரணமாக, Department of Overseas Communications அயல் நாட்டுச் செய்தித் தொடர்பு அலுவலகம் என்றுதான் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதவேண்டும்.

ஆனால் எப்படி எழுதி இருக்கிறார்கள் தெரியுமா? இந்தி எழுத்தில் விதேஷ் சஞ்சார் பவன் என்று எழுதி இருக்கிறார்கள்.

ஆனால் ஆங்கிலத்தில் எப்படி எழுதி இருக்கிறார்கள்? மொழி பெயர்த்தா எழுதி இருக்கிறார்கள்? அல்ல. ஆங்கிலத்திலும் Videsh Sanchar Bhavan என்றும், தமிழில் விதேஷ் சஞ்சார் பவன் என்றும் எழுதி இருக்கிறார்கள்.

எனவே இந்தி மொழியின் ஓசையிலே எழுதப்பட்டுள்ளது. பிராவிடெண்டு பண்ட் அலுவலகத்திற்கு இப்போது பெயர் என்ன தெரியுமா? பவிஷய நிதி பவன் என்பதாகும்.

மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களின் விழா அழைப்பிதழ்கள் இந்தி, ஆங்கிலத்தில்தான் உள்ளன. மாநிலத்தில் ஆட்சி மொழியாக தமிழை வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் தமிழ்மொழிக்கு இடமில்லை. ஆலைகளுக்கு அனுப்புகிற நூல் கட்டுகளில் இந்தியிலே அச்சடித்துத்தான் அனுப்ப வேண்டும் என்கிற உத்திரவு - அதுவும் இந்தியிலேயே உள்ளது.

பொதுத்துறை நிறுவனமான ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பல துறைகள் இருக்கின்றன. குழந்தை நலத் திட்டம், குழந்தைகள் கல்வித் திட்டம், வீட்டு வசதித் திட்டம், வீட்டு வசதி உதவித் திட்டம், குடும்ப நலத் திட்டம் என்று பல பெயர்கள் இருக்கின்றன.

இவைகளை எல்லாம் தமிழில் எழுதினால் புரியும். ஆனால், பெயர்களை படிக்கிறேன் பாருங்கள். புரிகிறதா பாருங்கள். மயக்கம்தான் வரும்.

ஜீவன் மித்ரா, நியூ ஜனரட்சகா, ஜீவன் சாத்தி, ஜீவன் பால்யா, பவிஷ்ய ஜீவன், ஜீவன் கிஷோர், ஜீவன் குபேர், ஜீவன் சரிதா, ஜீவன் சகாய, ஜீவன் கிருஹா, ஜீவன் அட்சய, ஜீவன் தாரா, ஜீவன் சுகன்யா, பீம நிவாஸ்... என்ன புரிகிறது? எதைப் புரிந்து கொண்டு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தை அணுக முடியும்?

அடுத்து ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் Housing Finance Limited - உரிய அலுவலகங்களுக்கு என்ன பெயர் தெரியுமா? ஜீவன் பிரகாஷ் என்று பெயர்.

அந்த அலுவலகத்தின் தந்தி முகவரி என்ன தெரியுமா? பீம மண்டல்.

இன்றைக்கு புது ஆணை ஒன்று வந்திருக்கிறது. இந்தப் புது ஆணை என்ன தெரியுமா?

ஆகஸ்டு 15-ஆம் தேதியிலிருந்து அந்த உத்தரவு அமலுக்கு வர இருக்கிறது. செய்தித்துறை பிரிவின் இயக்குநர் பதவிக்கு வருகிறவர்கள் இந்தியில் தேர்ச்சி இல்லாவிட்டால், வானொலி நிலையங்களில் அந்தப் பதவிக்கு வர முடியாது.

இப்போது ஆங்கிலத்தில் டெல்லி நிகழ்ச்சியில் ஒலிபரப்ப அனுப்பப்படுகிற செய்திகள் இனி இந்தியில்தான் அனுப்பப்பட வேண்டும்.

அகில இந்திய வானொலியின் செய்திச் சேவைப்பிரிவுப் பணிகளில் இந்தியைத் திணிக்கும் நடவடிக்கைகளில் மத்திய அரசின் செய்தி ஒலிபரப்புத்துறை தீவிரமாக மேற்கொள்ளத் தொடங்கிவிட்டது என்றும், இந்தி பேசாத மாநிலங்களில் இந்தித் திணிப்பு கிடையாது என்ற நேருவின் உறுதிமொழி காற்றில் பறக்கும் என்பதையும் இது உணர்த்துகிறது. இனிமேல் அகில இந்திய வானொலியின் செய்திச் சேவை பிரிவுப் பணிகளில் இந்தியைத் திணிக்கும் நடவடிக்கையை மத்திய அரசின் செய்தி ஒலிபரப்புத்துறை தீவிரமாக மேற்கொள்ளத் தொடங்கிவிட்டது என நான்கூட சொல்லவில்லை. தினமணி சொல்கிறது.

அதே தினமணி கட்டுரையை எப்படி முடிக்கிறது தெரியுமா?

இந்தி பேசாத மாநில மக்கள் இந்த நாட்டின் இரண்டாம் தர குடிமக்களே என்பதை உணர்த்த இந்த ஆண்டு சுதந்திரதினம் தோ்வு செய்யப்பட்டு, அன்று முதல் இந்த ஆணை அமலாகும் என முடிக்கிறது.

எனவே, நான் இந்த மாநாட்டில் பொதுக்குழு, நிர்வாகக்குழு இவைகளின் ஆணைக்கு இணங்க, உங்களுடைய எதிர்பார்ப்புக்கு இணங்க இந்த அறிவிப்பைச் செய்ய வேண்டியவனாக இருக்கிறேன். இதைத் தீர்மானமாகவும் எடுத்துக்கொள்ளலாம். அந்தத் தீர்மானமாவது :-

மொழி அடிப்படையில் பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட இந்திய நாட்டில் வேற்றுமையில் ஒற்றுமை காண்போம் என்பதற்கு மாறாக, ஆட்சி மொழி என்ற பெயரால் இந்தி மொழி ஆதிக்கம் நேரடியாகவும், மறைமுகமாகவும் திணிக்கப்பட்டு, இந்தி பேசாத மாநில மக்கள், அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கப்படும் நிலையைத் தவிர்த்திட - எட்டாவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட எல்லா மொழிகளும் ஆட்சிமொழி ஆக வேண்டும், அதுவரை ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்ற கருத்தை எடுத்துக்காட்டி நீண்ட காலமாக நாம் வலியுறுத்திவரும் கோரிக்கையை அலட்சியம் செய்து, மத்திய அரசு பல்வேறு வழிகளில், குறிப்பாக, தொலைக்காட்சி, வானொலி, மாநிலத்திலுள்ள மத்திய அரசு அலுவலகங்கள், மத்திய அரசின் சார்பில் நடத்தப்படுகிற கல்விக் கூடங்கள் என அனைத்து அமைப்புகளையும் பயன்படுத்தி - இந்தியைத் தமிழ் மக்கள் மீது திணிக்கும் செயலை இந்த மாநில மாநாடு மிக வன்மையாக கண்டிக்கிறது.

இந்தத் தீர்மானத்தை தொடர்ந்து இந்த அறிவிப்பை வெளியிடுகின்றேன்.

எங்கள் மாநில ஆட்சிமொழி தமிழாக இருக்கும் பொழுது, ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்கும் பொழுது ஆங்கிலம் - தமிழ் இரண்டும்தான் தமிழ் நாட்டில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் இருக்க வேண்டும். இந்தி தேவையில்லை. அதைத் திணிக்கக் கூடாது. ஆனால், மத்திய அரசு தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசுத்துறைகளான, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், இரயில்வே, தொலைக்காட்சி, வானொலி மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டு தமிழுக்கு இடமே அளிக்காமல் இந்தியில் பெயர்களை வைத்தல், இந்தியில் அறிவிப்புகள் செய்தல், இந்தியில் கடிதத் தொடர்பு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இந்தப் போக்கைக் கண்டிக்கின்ற வகையிலும், தமிழனின் உரிமைகளை நிலைநாட்டக்கூடிய வகையிலும் - தமிழகத்தைப் பொறுத்த மட்டில் மத்திய அரசுத் துறையோ, அல்லது மத்திய

பொதுத்துறையோ, எதுவாக இருந்தாலும் தமிழ், ஆங்கிலம் என்னும் இரு மொழிகள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி, வருகிற ஏப்ரல் 20-ந் தேதி தி.மு.கழகம் போராட்டத்தில் இறங்குகிறது.

அந்தப் போராட்டம் தமிழகம் முழுவதும் இரயில் நிறுத்தப் போராட்டமாக இருக்கும். அன்று இரயில்கள் போகக் கூடாது. போக விடக் கூடாது.

மாவட்டக் கழகங்களைக் கலந்து கொண்டு யார், யார், யாருடைய தலைமையில், எந்ததெந்த ஊர்களில் இரயில் மறியல் போராட்டம் என தலைமைக் கழகம் ஏப்ரல் முதல் வாரத்தில் பட்டியல் வெளியிடும். மீண்டும் சொல்கிறேன் -

ஏப்ரல் 20 மீண்டும் நமது மொழிப் போர்! இரயில் நிறுத்தப் போராட்டம்!! அன்று இரயில்கள் போகக் கூடாது. போக விடவும் கூடாது. பயணிகளும் அன்று ஒருநாள் இரயில் பயணத்தை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இஃதன்னியில், தமிழகம் முழுவதும் பொது இடங்களில் எங்கெங்கே இந்தி எழுத்துகள் இருக்கிறதோ, அந்த எழுத்துகளையெல்லாம் தமிழ் உணர்வு படைத்தவர்கள் தொடர்ந்து அழித்துக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு நேரம், காலம், நாள், தலைமை இதெல்லாம் கிடையாது - அழித்துக் கொண்டே இருக்க வேண்டும். அதுதான் தொடர் போராட்டம்.

இதில் தி.மு.கழகத்தினர் மாத்திரம் அல்ல. தமிழ் உணர்வு படைத்த கட்சியினர் அனைவரையும் அழைக்கிறேன். எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் அனைவரையும் அழைக்கிறேன். இரயில் நிறுத்தப் போராட்டத்தை தி.மு.கழகம் செய்யும் என்றாலும்கூட, இந்தி எழுத்துகளை அழிக்கின்ற போராட்டத்திற்கு தமிழ் உணர்வு படைத்த அத்தனை பேரும் - தன்மானத் தமிழர்கள் அத்தனை பேரும் அணி அணியாக வாருங்கள்! என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஐம்பத்தைந்து ஆண்டு காலமாக ஈடுபட்டிருக்கின்ற போராட்டம், என்னுடைய 14-வது வயதில் ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்! நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதுவல்லவே! என்று புலி - வில் - கயல் பொறித்த கொடியைத் தூக்கிக் கொண்டு திருவாரூர் வீதியிலே நான் நடைபோட்ட போராட்டம். நேற்று

பேராசிரியர் குறிப்பிட்டதைப்போல கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம்! கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை!

- என்று புரட்சிக் கவிஞன் பாடினானே அந்தக் காலத்தில் தொடங்கிய போராட்டம் - மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும், நம்முடைய தளபதி அழகிரிசாமியும், தமிழர் படை நடத்திய போராட்டம் - தாளமுத்து, நடராஜனை பலிகொடுத்த போராட்டம்- சின்னச்சாமியை - சிவலிங்கத்தை - மாணவர் சாரங்கபாணியை - விராலிமலை சண்முகத்தை - அரங்கநாதனை பலி கொடுத்த போராட்டம் - அண்ணாமலை நகரில் இராசேந்திரனை பலி கொடுத்த போராட்டம் - ஆயிரமாயிரம் வீரர்களை பலிகொடுத்த போராட்டம் - அந்தப் போராட்டம்தான் மீண்டும் வேண்டும் என்றால், அது தவிர்க்க முடியாது என்றால், நாங்களும் அந்தப் போராட்டத்தில் இருந்து விடுபடுவது முடியாது - முடியாது - முடியாது.

உடன்பிறப்பே, மாநாட்டில் நான் தந்துள்ள இந்த விதமான இந்தி ஆதிக்கப் படையெடுப்புப் பட்டியலுக்குப் பிறகும், இப்போது நடப்பதென்ன?

தொலைக்காட்சியில் தமிழ்மொழிக்குரிய நேரம் குறைக்கப்பட்டது குறித்து மாநிலங்களவைக் கழகக் குழுத்தலைவர் முரசொலி மாறன் மாநிலங்களவையில் பிரச்சினை எழுப்பியபோது, அந்தத் துறையின் அமைச்சர் அது குறித்துக் கவனிக்கப்படும் என்றார். பின்னர் அந்த அமைச்சரிடம் மாறன் நேரிலும் எடுத்துரைத்திருக்கிறார். தமிழக நாடாளுமன்றக் குழு உறுப்பினர்களின் குழுக் கூட்டத்திலும் அந்தத் துறையின் அமைச்சர் விவாதித்திருக்கிறார். ஆனால், முடிவாக எந்தப் பயனும் விளைந்திடவில்லை.

மத்திய அரசின் கவனத்துக்கு இந்தப் பிரச்சினை நமது செயற்குழு, பொதுக்குழு தீர்மானங்களின் மூலமும் - மாநிலங்களவையிலும், மற்றும் நேரடியாகவும் எடுத்துச் சென்ற பிறகுதான் இதோ தொலைக்காட்சியின் இன்னொரு வகையில் இந்தித்திணிப்பு!

தமிழும், பிற மாநில மொழிகளும் இடம் பெற்று வந்த இரண்டாவது அலைவரிசையில் மெட்ரோ ஒளிபரப்பு என்ற தலைப்பில் டெல்லியிலிருந்து இந்தி மொழி நிகழ்ச்சிகள் இடம்

பெறத் தொடங்கின. முதல் அலைவரிசையில் இந்தி ஆதிக்கம் செலுத்துவது போதாதென்று, இரண்டாவது அலைவரிசையிலும் ஒன்றரை மணி நேரம் இந்தி நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்டாகி விட்டது. எதிர்பார்த்ததற்கு மாறாக, இரண்டாவது அலைவரிசையில் பிறமொழிகளைவிடத் தமிழுக்கு நேரம் குறைக்கப்பட்டு விட்டது.

இப்படி வானொலி, தொலைக்காட்சிகளில் மட்டுமின்றி, இந்தி ஆதிக்கம், வட்டமிடும் வல்லூறாக - வாய் பிளந்திடும் ஓநாயாக - வளைத்து விடும் மலைப்பாம்பாக எல்லாத் துறைகளிலும் தமிழ்மொழிக்கும், தமிழர் உரிமைக்கும் கேடு விளைக்கக் கிளம்பியுள்ள இந்த வேளையிலும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் - தமிழன், பிறகு தலையெடுக்கவே முடியாத அடிமையினும் அடிமையாகக் கொத்தடிமை ஆகிவிடுவான்.

எனவே, தொடரட்டும் நமது அறப்போராட்டம்! தோள்கள் உயரட்டும் தமிழைக் காத்திட!

அன்புள்ள,

மு. கருணாநிதி

04-04-1993

2019. கைவிடப்பட்டது தீர்மானமா? ஜனநாயகமா?

உடன்பிறப்பே,

தமிழக சட்டப் பேரவைத் தலைவர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஏற்பட்ட கதியை எண்ணிப் பார்க்கிறேன். ஜனநாயகம் என்ற சொல்லை, கடந்த காலத்தில் தங்கள் விருப்பத்திற்கேற்ப வளைத்துக்கொண்ட வரலாறுகளைப் படைத்த காங்கிரஸ் கட்சியினருக்காக நான் வாதாட முன்வரவில்லை.

ஏனெனில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், எந்த விதிக்கும் கட்டுப்படாமல், சட்டமன்ற மரபுக்கும் கட்டுப்படாமல் - சட்டப் பேரவைக்கான விதிகளையும் பின்பற்றாமல் தி.மு.க. ஆட்சியின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் என ஒன்றைக் கொண்டுவந்து, 1972 ஆம் ஆண்டு முதன் முதலாக சட்டப்பேரவையில் அமளிக்கு வித்திட்டபோது இந்த காங்கிரசார் பேரவையின் ஜனநாயக மரபுகளைப் பற்றிக் கண்டு கொள்ளாமலே இருந்தனர். பத்து பனிரெண்டு அ.தி.மு.க. உறுப்பினர்கள் மட்டுமே இருந்த அவையில், அவர்களோடு சேர்ந்துகொண்டு அன்றைய பேரவைத் தலைவர் 1972 ஆம் ஆண்டு தி.மு.க.வினர் அவைக்குள் எவ்வளவு பெரும்பான்மையினராக இருந்தாலும் கூட, தி.மு.க. ஆட்சி பதவி விலக வேண்டுமென தீர்ப்பு அளித்தபோதும் காங்கிரசார் அந்த சட்டமன்ற ஜனநாயக விரோதச் செயலைக் கண்டிக்கவில்லை. மாறாக, ஆதரவு காட்டி நடந்துகொண்டனர்.

பழைய கதைகளைக்கூட விட்டுவிடலாம். 1989 மார்ச் 25-ஆம் நாள் பேரவையில் நடந்தது என்ன?

ஜெயலலிதாவின் குடும்ப நண்பரான ஒரு அரசு அலுவலர் வீட்டில் பண சம்பந்தமான புகாரையொட்டி போலீஸ் சோதனை

- ஜெயலலிதா தனது எம்.எல்.ஏ. பதவியை இராஜினாமா செய்துவிட்டதற்கான கடித நகல்கள் எதிர்பாராமல் அந்த வீட்டில் போலீசாருக்குக் கிடைத்தன - அதற்கிடையே ஜெயலலிதாவின் இராஜினாமா கடிதமொன்று சபாநாயகர் தமிழ்க்குடிமகன் அவர்களுக்குக் கிடைக்கிறது. அவர் அவசரப்பட்டு இராஜினாமாவை ஏற்றுக் கொள்ளாமல், ஜெயலலிதாவுக்கே எழுதிக்கேட்டு விளக்கம் பெற்று - அவரைத் தொடர்ந்து எம்.எல்.ஏ. பதவி வகிக்கும் நிலையை அறிவிக்கிறார்.

இதற்குப் பிறகு 1989 மார்ச் 25 ஆம் நாள் அரசின் வரவு-செலவுத் திட்டம் அவையில் வைக்கும் நாள்! அதனை முதலமைச்சராகிய நான் படிக்க வொட்டாமல் - மரபுகளை மீறி, அவையின் விதிகளுக்கு முரணாக - ஜெயலலிதாவும், காங்கிரஸ் உறுப்பினர்களும் பேசினர். அவர்கள் பேச அனுமதித்தது மட்டுமல்ல - அடுத்த நாள் அது குறித்து விவாதிக்கலாம் என்று பேரவைத் தலைவர் உறுதியளித்துவிட்டு - வரவு-செலவு திட்ட அறிக்கையைப் படிக்க வழிவிடுமாறு கோருகிறார்! வழிவிடப்பட்டதா? இல்லை! என் கையிலிருந்த அறிக்கை பிடுங்கப்பட்டது! என் முகத்தில் குத்தி மூக்குக் கண்ணாடி உடைக்கப்பட்டது! அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தலையில் ரத்தக்காயம் ஏற்படுத்தப்பட்டது! அன்றைக்கு அமளிக்கு ஆரம்பம் செய்த அ.தி.மு.க.வுக்கு ஆதரவு காட்டி ஜனநாயக மரபுகளைக் குழிதோண்டிப் புதைக்க ஒத்தாசை புரிந்தது காங்கிரஸ் அல்லவா?

இன்றைக்கு அந்தக் காங்கிரஸ்காரர்களால் வளர்க்கப்பட்ட ஜனநாயக விரோதப் போக்கு என்ற கடா அவர்கள் மார்பிலே பாய்கிறது!

காங்கிரஸ்காரர்கள் மீதுதானே அந்தக் கடா பாய்கிறது. நமக்கென்ன? என்றுகூட நாம் மௌனமாக இருந்துவிடலாம்!

ஆனால், பொதுவாக சட்டப்பேரவை விதிமுறைகளும் - மரபுகளும் குப்பைக் கூடையிலே கொட்டப்படுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாதல்லவா?

ஏப்ரல் 19 -ஆம் நாள் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா மீது காங்கிரஸ் உறுப்பினர்கள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் - கைவிடப்பட்டதாக ஏடுகளில் வந்துள்ள தலைப்புச் செய்திகளைப் படித்தால், தீர்மானம் கொண்டு வந்த காங்கிரசாரே

அதனை வலியுறுத்தாமல் கைவிட்டுவிட்டனரோ என்று நினைக்கத் தோன்றும். ஆனால், உண்மை அது அல்ல. துணை சபாநாயகர் அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டு விட்டதாக அறிவித்துள்ளார். ஏன்? எதற்காக?

தீர்மானத்தை எதிர்க்கட்சித் தலைவர் முன் மொழிந்தார். அதனை யாரும் வழிமொழியாத காரணத்தால் கைவிடப்பட்டது எனத் துணை சபாநாயகர் தெரிவித்துள்ளார். தீர்மானத்தை முன்மொழியுமாறு திரு. பாலசுப்பிரமணியத்தை அழைத்த துணை சபாநாயகர், அவர் முன் மொழிந்தவுடன் இதனை வழிமொழிபவர் யார்? என்று கேட்டிருக்கலாம். வழிமொழிந்திட யாரும் முன்வராதபட்சத்தில் தீர்மானத்தைப் புறக்கணித்திருக்கலாம்.

முதலில் முக்கியமாக கவனிக்க வேண்டியது ஒன்று இருக்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் என்று அச்சியற்றப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புத்தகத்தில் - சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பதற்கே, அத்தியாயம் 10 என்ற எண் குறிக்கப்பட்டு பேரவைத் தலைவர் அல்லது துணைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான தனித் தீர்மானம் என்ற தலைப்பில் 68, 69, 701, 702, 71 என விதிகள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றை அப்படியே தருகிறேன்.

68. பேரவைத்தலைவர் அல்லது துணைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்காக அரசியலமைப்புச் சட்டத்தின் 179-வது பிரிவு சி உட்பிரிவின்படி தனித்தீர்மானம் கொடுக்க விரும்பும் உறுப்பினர் எழுத்து மூலமாக தீர்மான வரைவுடன், செயலாளருக்கு பதினான்கு நாட்கள் முன்னறிவிப்புடனும், அதன் பிரதி ஒன்றை பேரவைத் தலைவருக்கும் கொடுக்க வேண்டும்.

எனினும், அவ்வாறு தனித் தீர்மானம் மொழிய இருக்கும் எண்ணம் பற்றி, செயலாளருக்கு குறைந்தது 14 நாட்கள் முன்னறிவிப்புக் கொடுக்கப் பெற்றாலன்றி அதற்கான தனி தீர்மானம் எதுவும் மொழியப் பெறுதல் கூடாது.

69. மேற்கண்ட 68-வது விதியின்படி முன்னறிவிப்பு வரப்பெற்றவுடன், அத்தனித் தீர்மானத்தை மொழிய பேரவையின் அனுமதி கோரும் தீர்மானம் ஒன்று உரிய

உறுப்பினர் பெயரில், அரசியலமைப்புச் சட்டத்தின் 179-வது பிரிவின்படி தேவைப்படும் 14 நாட்கள் முன்னறிவிப்பு காலம் முடிவடைந்தவுடன் கூட்டப்பெறும் முதல் கூட்ட நாளின் அலுவல் பட்டியலில் சேர்க்கப் பெற வேண்டும்.

இம்மாதிரியான தீர்மானம் வினா நேரம் முடிவுற்றதும் உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

70. 1. நிர்ணயிக்கப் பெற்ற நாளன்று, பேரவைக் கூட்டத்திற்கு தலைமை வகிப்பவர், அத்தனித் தீர்மானத்தைப் படித்துக் காட்டி, அதைக் கொண்டு வர ஆதரவளிக்கும் உறுப்பினர்களை அவரவர்கள் இடங்களில் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்ள வேண்டும். 35-க்குக் குறையாத உறுப்பினர்கள் எழுந்து நின்று இசைவு அளிப்பின், பேரவைக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர் பேரவையின் அனுமதி கிடைத்துள்ளது என அறிவிக்க வேண்டும். 35-க்குக் குறைவான உறுப்பினர்கள் எழுந்து நிற்பின் அத்தீர்மானத்திற்கான முன்னறிவிப்புக் கொடுத்த உறுப்பினருக்கு பேரவை அனுமதியை மறுத்துவிட்டது எனத் தலைமை வகிப்பவர் தெரிவிக்க வேண்டும்.

2. பேரவை அனுமதி அளித்து விட்டால் அத்தனித் தீர்மானத்தின் மீதான விவாதம் உடனடியாகவோ அல்லது அனுமதித்த நாளிலிருந்து 7 நாட்களுக்கு மேல் போகாத ஒரு நாளிலோ நடைபெறுமாறு பேரவை, நாள் நிர்ணயிக்கலாம்.

71. விதிகள் 69, 71 ஆகியவற்றில் குறிப்பிடப் பெற்றுள்ளவை கடை பிடிக்கப் பெறவில்லையெனில், பேரவை உறுப்பினர் ஒருவரால் கொண்டு வரப்பெறும் தீர்மானத்தின் மீது, 70-வது விதியின் கீழ் பேரவையின் நடவடிக்கைகளை நடத்தி வைப்பதற்காக பேரவைக்குத் தலைமை தாங்க ஒருவரை பேரவை தேர்ந்தெடுக்கலாம்.

இதில் எந்த விதியிலாவது சபாநாயகர் மீது நம்பிக்கையில்லை என்ற Resolution தீர்மானத்திற்கு வழிமொழியப்படவேண்டும் என்ற குறிப்பு இருக்கிறதா? இல்லை - இல்லவே இல்லை!

கடந்த காலத்தில் சில நேர்வுகளில் இத்தகைய Resolution தீர்மானங்கள் முன்மொழியப் பெற்று, வழிமொழியப்பட்டிருந்தால் - அது வீட்டுக்கு ஒரு பூட்டு மாட்டி விட்டு மேலும் ஒரு பூட்டு மாட்டியது போன்றதே! தேன் கலந்த பாலில் சர்க்கரையும் போடுவது போன்றதே! ஆனால் முறைப்படி, பேரவை விதிகள் அத்தியாயம் 10-ல் கண்டுள்ள விதிகளைப் பின்பற்றினாலே போதுமானது!

ஆனால் அதற்கு மாறாக, வல்லடி வழக்காக, வழிமொழியவில்லை - எனவே தீர்மானம் கைவிடப்படுகிறது என்று தீர்ப்பளிக்கப்பட்டிருப்பது, ஜனநாயகத்தில் பற்றுள்ளவர்களை திகைத்திடவே செய்துள்ளது.

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் முன்மொழியப்பட்டு, யாரும் வழிமொழியத் தாமதித்துவிட்டால் - அதற்காக, அந்தத் தீர்மானத்தைத் தள்ளி விடுவார்களா? அப்போது பேரவைத் தலைவர், அவராகவே வழிமொழிபவர் யார் என்று கேட்பது வழக்கமில்லையா? அப்படி நடந்தது இல்லையா?

பேரவையில் இப்போது எல்லா விதிகளும் மிக்க கண்டிப்புடன்தான் கடைப் பிடிக்கப்படுகிறதா?

அவை விதி 110-ன் கீழ் முதல்வரோ, அமைச்சர்களோ அறிக்கை படிக்கும்போது எந்த உறுப்பினரும் எழுந்து பேசக்கூடாது என்றிருக்கிறது. அப்படிப் பல உறுப்பினர்கள் பேச முயன்று தடுக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அதே விதி 110-ன் கீழ் திரு. எஸ்.எஸ். ராமசாமி படையாட்சியார் பெயரில் மாவட்டபெயரை முதல்வர் அறிக்கையாக படித்தபோது மட்டும் எதிர்க்கட்சித் தலைவரும், வேறு ஒரு காங்கிரஸ் உறுப்பினரும் அந்த அறிக்கையின் மீது பேச எப்படி அனுமதிக்கப்பட்டார்கள் என்று கேட்கலாமல்லவா?

எனவே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானப் பிரச்சினையில் எந்த விதியும் மீறப்படவில்லை. சட்டமன்றப் பேரவை விதிகளின்படியே அனைத்தும் கடைப்பிடிக்கப் பட்டிருந்தும், தீர்மானத்தை முன்மொழிந்து அளித்தவர்கள் 36 பேர் - வழிமொழிந்து ஆதரித்து எழுந்து நின்றவர்கள் அறுபதுக்கு மேற்பட்டவர்கள் என்கிறபோது - இல்லாத விதியைச் சுட்டிக்காட்டி,

அந்தத் தீர்மானத்தை ஆளுங்கட்சியினர் தமது காலில் போட்டு மிதித்தது - காலில் விழுந்தமைக்காகக் காட்டிய கருணைபோலும் என்றுதான் கருத வேண்டியிருக்கிறது.

காங்கிரஸ்காரர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு இதுவும் வேண்டும்! இன்னமும் வேண்டும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

21-04-1993

2020. துள்ளி வரும் வேலாக! ஆவேசத்தை அள்ளி வரும் வாளாக!

உடன்பிறப்பே,

தள்ளாடும் - தத்தி நடக்கும் - தணலை மிதிக்கும் - விழும்! எழும்! ஆனாலும் எந்த நிலையிலும், கொண்ட கொள்கையை மண்டியிட வைத்ததில்லை. முன் வைத்த காலைப் பின் வைக்க நினைத்ததுமில்லை!

முரசொலி, நான் பெற்ற முதல் குழந்தை! ஆம்! அந்த முதற்பிள்ளைதான் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனைப்போல, கிண்கிணி அணிந்த கால்களுடன் பகைவர்கள் பலரைக் களத்தில் சந்திக்கச் சென்று வா மகனே! செருமுனை நோக்கி! என அனுப்பி வைக்கப்பட்ட அன்புப்பிள்ளை!

இப்படி ஒருமுறை முரசொலியைப் பற்றி நான் எழுதியிருந்ததை மறந்திருக்கமாட்டாய்!

அதன் தொடர்ச்சியாகக் கடந்த ஆண்டு முரசொலிக்கு பொன்விழா கொண்டாடியபோது, நண்பர் க. திருநாவுக்கரசு அவர்களைக்கொண்டு தயாரிக்கப்பட்ட பொன்விழா மலரில், நான் தீட்டியிருந்த அன்று அகல் விளக்கு! இன்று ஆகாயத்துக் கதிர் விளக்கு! என்ற தலைப்பிட்ட முன்னுரையில் சில பகுதிகளை மீண்டும் இந்தக் கடிதத்தில் நினைவூட்டுகிறேன்.

திரும்பிப் பார் என்ற சொற்றொடரில்தான் எத்துணைத் தித்திப்பு! அந்த இரு சொற்கள் இணைந்து வழங்கும் அறிவுரையும் - நினைவலைகளின் நேர்த்தியும் நமது தொடர் பயணத்துக்கு நாம் தூக்கிச் செல்லும் தீப்பந்தச் சுடர்கள் அல்லவா! அதனால்தான், முரசொலி பொன்விழா மலரில் நான் எழுதியதை இப்போதும் நினைவு கூர்கிறேன்.

இந்தியாவில், தென் கோடியில், தஞ்சைத் தரணியில் எங்கோ ஓர் மூலையில், திருக்குவளை எனும் சிற்றூரில், தெருமணற் புழுதியில் விளையாடி மகிழ்ந்தபோதும் - தொடக்கப்பள்ளியில் அரிநமோத்து சிந்தம் எழுதி விரல் தேய்ந்தபோதும் - உயர் வகுப்பினரைக் காணும் பொழுதெல்லாம் என் ஊரார், உற்றார் உறவினர், பெற்ற தந்தை ஆகியோர், தோளில் கிடக்கும் துண்டையெடுத்து இடுப்பில் சுற்றிக் கொள்ளும் போக்கினைக் கண்டு உள்ளத்தில் வினாக்குறியாக எழுந்த சுயமரியாதை உணர்வு, அன்றைக்கு அளவில் அணுவையொத்திருந்தாலும், அது அணுவின் சக்தியையே பெற்று எழுவதற்குப் பெரியாரும், அண்ணாவும், அழகிரியும் இளமைப்பருவத்திலேயே தூண்டிவிடும் விசையாயினர்.

என்னைப் பெற்றது திருக்குவளையாயினும், நான் உலகத்தைக் கற்றது திருவாரூரில்தான்!

பனிரெண்டாம் வயதிலேயே, பள்ளி ஐந்தாம் வகுப்பில் பனகல் அரசர் பற்றிய சிறிய வரலாற்றுப் புத்தகம். பாடத்திட்டத்தில்! திராவிட இயக்க வரலாற்றின் உணர்வு எல்லைக்குள் அன்றைக்கே நுழைந்தாகிவிட்டது! சுமார் முப்பது பக்கங்கள் கொண்ட அந்த நூலை மனப்பாடமே செய்து வகுப்பில் மளமளவென ஒப்புவித்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் மலைத்திட வைப்பேன். இது 1936-இல்!

அடுத்த ஆண்டு பொதுத் தேர்தலில், நீதிக்கட்சி படுதோல்வி அடைந்துவிட்டது - அதைக் கொண்டாட வீதி வழியே காங்கிரசார் நடத்திய ஊர்வலத்தைக் கண்டேன். பொப்பிலியின் ஆட்சி! அப்பளமாப் போச்சு! இதுதான் அவர்களின் வெற்றி முழக்கம்.

அந்த இளமைப் பருவத்திலேகூட, வெற்றி பெற்ற கட்சிக்கு வாழ்த்து முழக்கிடும் உறுதிக் குலைவு ஏற்படவில்லை எனக்கு!

தியாகராயர், நடேசனார், நாயர், பனகல் அரசர், பொப்பிலி ராஜா - படித்தும், கேட்டும் தெரிந்துகொண்டிருந்த இந்தப் பெயர்களுக்குரியோர் கட்டிக்காத்த இயக்கம் எப்படித் தோற்றது? ஏன் தோற்றது? இந்த வினாக்கள் நெஞ்சில் வெடித் தெழுந்தனவே தவிர, வீதியில் சென்ற வெற்றி ஊர்வலத்தின் கவர்ச்சி என்னை மயக்கவில்லை!

இராமயணக் கதையில் வரும் அணிலைப் போல், பாதிக்கப் பட்ட கட்சிக்கே என் தொண்டு தொடங்கியது! தொடர்ந்தது!

இல்லாவிட்டால் வெற்றியடைந்த கட்சியான காங்கிரஸ், அடுத்து 1938-இல் கொண்டுவந்த கட்டாய இந்தியை எதிர்த்து களம் அமைத்த தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தளபதி அழகிரி ஆகிய மாமனிதர்களின் போர்ப்படையில் நானும் ஒரு பொடியனாக ஓடியாடி உழைத்திட்ட அரும் பேற்றினைப் பெற்றிருக்க முடியுமா?

அந்த உணர்வின் கொந்தளிப்புத்தான் மாணவநேசன் எனும் கையெழுத்து ஏடு! உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கிடையே மட்டும் அது உலவி வந்தது!

சகோதரராக விளங்கிய அண்ணன் டி.எஸ். இராசகோபால், நண்பன் தென்னன், தோழன் வி.எஸ்.பி. யாகூப் ஆகியோர் தொடர்பும் நட்பும் விரிவானது! ஆழமானது! மாணவன் என்பதால் சேரன் என்ற புனைப் பெயரில் மறைந்துகொண்டு, முரசொலி துண்டு வெளியீட்டின் ஆசிரியராக ஆனேன்!

ஆகஸ்டு 10-1942! அந்த ஆண்டு சுதந்திரத்திற்காகப் போர் முரசு ஓங்கி ஒலித்த முக்கியமான ஆண்டு - அதே ஆண்டில்தான் தமிழினத்தின் சுயமரியாதைக்காகப் படை கூட்டும் பாசறையில் எனது முரசின் ஒலியும் கிளம்பிற்று. முரசொலியாக!

துண்டு வெளியீடு -

வார இதழ் -

நாளேடு -

இப்படி ஐம்பது ஆண்டு கால வளர்ச்சியில் இடையிடையே தொய்வுகள் உண்டு! ஆனால், என் தலை தொங்கியதில்லை! நிமிர்ந்து நின்று நான் முரசு கொட்டியதற்கு மட்டுமல்லாமல், நேர்த்தியான முறையில் இன்று முரசு கொட்டப்படுவதற்கும் தம்பி முரசொலி மாறன் உழைப்பு காரணம்! திறன் காரணம்!

எனக்கு ஈடுகொடுத்து அலுவலகத்தில் பணியாற்றியவர்கள் - பணியாற்றுகிறவர்கள் காரணம்! நண்பர்கள் காரணம்! நல்லோர்கள் காரணம்!

முரசொலியைப் போர்வாளாகவும், கேடயமாகவும் ஏந்திக்கொண்டு கழகம் நடத்துகிற என் உயிரினும் மேலான உடன்பிறப்புகள் காரணம்!

இதோ! முரசொலியின் ஐம்பது ஆண்டு காலத்தொண்டு! மலராகத் தொகுக்கப்பெற்று உங்கள் கரங்களில் மணம் வீசிக்கொண்டிருக்கிறது!

அரை நூற்றாண்டுக் காலத்திற்கு மேற்பட்ட முரசொலியின் நிறுவனர் என்ற முறையில், எனக்கு அகவை எழுபது நெருங்கிக் கொண்டிருக்கும் போது என் ஐம்பது வயதுச் செல்வத்தை உச்சி மோந்து வாழ்த்தி மகிழ்வது பெரும் இன்பமன்றோ!

இது கல்லிலும் முள்ளிலும் பயணம் செய்த முரசொலி! காட்டாறுகள் கடந்து வந்த முரசொலி! கடும் விலங்குக் கூட்டத்தை வென்று வந்த முரசொலி! என்றென்றும் களத்தில் ஒலிக்கும் முரசொலி!

உடன்பிறப்பே! ஐம்பதாம் ஆண்டுப் பொன்விழா முரசொலிக்கு எடுத்தபோது இனி முரசொலியை வார இதழாகக் கொண்டு வரலாம் என்ற முடிவை நோக்கி முரசொலி நிர்வாகம் சென்று கொண்டிருக்கிறது. காரணம் என்ன? மாதந்தோறும் பெரும் இழப்பை ஈடுகட்ட முடியாத நிலை! பத்திரிகைக் காகிதத்தின் விலை - அலுவலகத்தினர்க்கு ஊதியம் - இயந்திரங்கள் பராமரிப்பு - இவற்றுக்கிடையே விற்பனை எண்ணிக்கையில் ஏற்பட்ட சரிவு - மாவட்டத்துக்கு மாவட்டம் பல ஏடுகள் வியாபார ரீதியில் பரபரப்புடன் பரவியுள்ள காரணத்தால், முரசொலியை வாங்குவது கடமை என உணர்ந்தோர் மட்டுமே வாங்கி, அதைப் பலருக்கும் படிக்கக் கொடுத்திடும் பரந்த மனப்பான்மை - இதனால் படிப்போர் தொகை பெருகிடவும், வாங்குவோர் தொகை குறைந்திடவுமான ஒரு சுகமான சங்கடம் - எனவேதான் நாளிதழாகத் தொடர்வதால், மேலும் பேரிழப்புக்கு ஆளாக நேரிடும் எனக்கருதி வார இதழாகக் கொணர முடிவு எடுக்கப்பட்டது 1992-ல்! பொன் விழா ஆண்டில்!

எந்த முரசொலிக்கு இப்படி ஒரு இன்னல் வந்துற்றது! நெருக்கடி நெருப்பு சுற்றிச் சூழ்ந்தது கனன்று எரிந்த 1976 ஆம் ஆண்டு தொடங்கி, அந்த ஆண்டு முடிய ஓராண்டு காலம் - ஆம்! 1977-ல் நெருக்கடி நிலை திரும்பப் பெறப்பட்டு, பொதுத் தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்ட காலம் வரையில் தன்னந்தனியாக நின்று, பிறிதோர் ஏட்டின் துணையில்லாதது மட்டுமல்ல! நாலாபுறமும் மாற்றார் ஏடுகள் எனும் நாகஸ்திரங்கள் தொடுக்கப்பட்ட வேளையில் - இராமாயணப் போர்க்களத்து

இந்திரஜித்தனைப்போல, பாரதக் களத்து அபிமன்யுவைப் போல, இவைகளுக்கு மேலாக நான் முதலில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று தலையாலங் கானத்துப் போர்களத்துப் பாண்டிய இளவல் நெடுஞ்செழியனைப்போல ஒவ்வொரு நாளும் எண்பதாயிரம் பிரதிகள் விற்பனை என்ற அளவுக்குத் தனித்து நின்று முழங்கியதே! அந்த முரசொலிக்குத்தான் இப்படி ஒரு சோதனை! ஆம்! ஒவ்வொரு நாளும் தணிக்கை அதிகாரிகளின் தர்பாரைச் சந்தித்துத் தீரவேண்டியிருந்த முரசொலிக்கு - தொடர்ந்து இருநாட்கள், இரவு பகல் என்றில்லாமல், அதிகாரிகளால் சூழப்பட்டு Raid சோதனையிடப்பட்ட முரசொலிக்கு - மொழிப் புரட்சியில் முரசொலி அலுவலகம் பாசறை ஆக இருந்தது எனக் குற்றம்சாட்டி, எனக்குப் பாளையங்கோட்டை! தம்பி மாறனுக்கு சென்னைச் சிறை! ஏன் சில திங்களுக்கு முன்புகூட ஆசிரியர் செல்வத்துக்குச் சட்டசபையில் கூண்டு! எனப்பெருமை மிகு விழுப்புண்களைப் பெற்ற முரசொலிக்குத்தான், இனியும் நாளேடாகத் தொடர்வதா? வார இதழாக மாற்றுவதா? என்ற சிக்கல்!

பொதுச்செயலாளர் பேராசிரியரும், நண்பர் ஆர்க்காடு வீராசாமியும் நாளிதழை நிறுத்தக் கூடாது என வாதிட்டனர். வழியொன்றும் கண்டு கூறினர். அந்த வழிதான் முரசொலி அறக்கட்டளை!

இதுவரை சுமங்கலி பப்ளிகேஷன்ஸ் சார்பில் தனியொரு நிறுவனத்தாரால் வெளியிடப்பட்ட முரசொலி - ஆம்! தனியார் நிர்வாகத்தில் இருந்த முரசொலி, கடந்த ஏப்ரல் 15-ஆம் நாள் முதல் முரசொலி அறக்கட்டளை சார்பில் வெளியிடப்படுகிறது. இந்த முரசொலி அறக்கட்டளையில் நான், பேராசிரியர், சாதிக்பாட்சா, முரசொலி மாறன், ஆர்க்காடு வீராசாமி ஆகிய ஐவரும் அறக்கட்டளை உறுப்பினர்கள். இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று முடிவுற்ற பிறகே, ஒவ்வொரு மாவட்டக் கழகத்திலும் வழங்கப்பட்ட முரசொலி அறக்கட்டளை நிதியைக் கொண்டு அறக்கட்டளையை உருவாக்கி ஏப்ரல் 15 முதல் தனி நிர்வாகத்திலிருந்து, முரசொலி அறக்கட்டளை நிர்வாகத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

நிர்வாகம் மாறிவிட்டால் மட்டும் போதாது! இந்த மாற்றத்தினால், மாதந்தோறும் இதுவரை ஏற்பட்டு வரும் இழப்பை ஓரளவு சரிக்கட்ட முயற்சிக்கலாம் - ஆனால் நீயும், மற்ற

உடன்பிறப்புகளும் முரசொலியை வாங்குவது தலையாய கடமை எனக் கொண்டு, செயல்பட வேண்டும்.

கழகச் சட்ட திட்டத் திருத்தக் குழுவினர், சில புதிய திருத்தங்களை இணைத்தபோது ஒவ்வொரு கிளைக்கழகமும், ஒரு முரசொலி இதழை நேரடியாகக் கடைகளிலோ அல்லது சந்தா மூலமாகவோ வாங்க வேண்டுமென்றும் - அப்பொழுதுதான் அந்தக் கிளைக் கழகம் அங்கீகாரம் பெற்றதாக இருக்க முடியுமென்றும் திருத்தம் செய்தனர். முரசொலி தனியார் நிறுவன ஏடாக இருப்பதால் இப்படியொரு நிபந்தனை கூடாது என வாதிட்டேன். இப்போது அந்தத் தடையில்லை. முரசொலி தனியார் நிறுவன ஏடல்ல இன்று! அறக்கட்டளையின் சார்பில் வெளிடப்படும் ஏடு! எனவே, ஒவ்வொரு கிளைக் கழகமும் ஒரு முரசொலி வாங்கிட வேண்டும் என கழகச் சட்டதிட்டத்தில் திருத்தம் செய்வதை இனி நான் வரவேற்பேன்!

அப்படியொரு திருத்தம் கழகச் சட்டதிட்டத்தில் வந்த பிறகுதான் முரசொலியை வாங்க வேண்டுமென்றில்லாமல், இப்பொழுதே கிளைக் கழகச் செயலாளர்கள் முரசொலியைத் தமது கிளைக்கு வாங்கிட முனைதல் வேண்டும். அவர்களுக்கு ஒன்றியக் கழகச் செயலாளர்கள் தூண்டுகோலாக இருக்க வேண்டும். மாவட்டக் கழகச் செயலாளர்களும், மற்றும் கழக முன்னணியினரும் - இளைஞர் அணி, மாணவர் அணி, தொழிலாளர் அணி, தொண்டர் அணி, மகளிர் அணி, இலக்கிய அணி, விவசாய அணி போன்ற அணிகளில் செயலாற்றும் கழகக் கண்மணிகளும் - முரசொலி பரப்பிடும் பணியில் ஈடுபட வேண்டும். சிற்றூர் பேரூர்களில் - நகரங்களின் வார்டுகளில், மாநகர வட்டங்களில் வீதிக்கு வீதி, தெருவுக்குத் தெரு படிப்பகங்களை அமைத்திடவும், அந்தப் படிப்பகங்களில் முரசொலி வாசகர்களை உருவாக்கிடவும், வளர்த்திடவும் இப்பொழுதே தொண்டு தொடங்கிட வேண்டும். கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவர் கையிலும் முரசொலியைக் காணும் நாள் விரைவில் வந்திடல் வேண்டும். அந்த நாளை நோக்கி முரசொலி வீரநடை போடுமேயானால் - உன் போன்ற கழக உடன்பிறப்புகள் எதிர்பார்க்கிற எல்லாச் சுவைகளும் கொண்ட, அனைத்துச் செய்திகளும் தருகிற - அவற்றில் பெருமளவு கழகச் செய்திகளை உடனுக்குடன் உனக்கு வழங்குகிற விருந்துச் சாப்பாடாகவே முரசொலி, நாள்தோறும் வெளிவரக்கூடிய வெற்றி

இலக்கை விரைவிலே எட்ட முடியும்! ஐம்பதாண்டுகளுக்கு முன் உன் கையில் துண்டு வெளியீடாக முரசொலி! எதிர்காலத்தில் கற்கண்டு வெளியீடாக! அதுவும் களத்தில் நிற்கும் கழகத்தினர்க்கு களைப்பு நீக்குவதற்காக! அதே நேரத்தில் துள்ளி வரும் வேலாக! ஆவேசத்தை அள்ளி வரும் வாளாக!

இந்த அறக்கட்டளை அதற்கானப் பணிகளை மேற்கொள்ளும்போது, உன் ஆதரவு குவிந்தால்தானே நான் குறிப்பிட்டுள்ள அந்த வெற்றிக்கனியைப் பறிக்க முடியும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

06-05-1993

2021. ஒரு மனைவியின் போராட்டம்!

உடன்பிறப்பே,

மாநிலத்தில் நடைபெறும் அ.தி.மு.க. அரசு, மனித நேயத்துடன் அணுகியிருக்க வேண்டிய ஒரு பிரச்சினையை எந்த அளவுக்கு அலட்சியப் படுத்தியுள்ளது என்பது குறித்து இந்தக் கடிதம் எழுதியுள்ளேன். குங்குமம் வார இதழ் மே 14-20 தேதியிட்டு வெளிவந்துள்ளதில் அதன் சிறப்பு நிருபர் சுகுமாரன், மாநில அரசு அலுவலர் ரவீந்திர குமார் என்பவரின் துணைவியார் திருமதி ரத்னா அவர்களை பேட்டி கண்டு, அவரது கண்ணீர்க் கதையை எழுதியுள்ளார். அவர் அந்த அம்மையாரை சந்தித்ததையும், அவர்களுக்கு விளைந்துள்ள சோகத்தையும் குங்குமத்தில் நான் படித்துப் பார்த்த பிறகு அதை உன் கவனத்திற்கும் கொண்டுவரவேண்டியது கடமை என்பதை உணர்ந்தேன்.

இதோ குங்குமத்தில் வந்துள்ள அந்தப் பரிதாபகரமான கட்டுரை :-

இரண்டு வருடங்களாக அவர் கோமா நிலையிலேயே இருக்கிறார். உடல் நிலையில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. தினசரி மருத்துவச் செலவு இருநூறு ரூபாய் ஆகிறது. கணவரின் ஊதியம் இல்லாத சிக்கலான பொருளாதார நிலையில், உறவினர்களும், நண்பர்களும் உதவி செய்து நாங்கள் நொறுங்கி விடாமல் காப்பாற்றி வருகிறார்கள். இவ்வளவுக்கும் அவர் மாநில அரசின் ஊழியர். இருபத்தி ஏழு ஆண்டுகளாகப் பொறுப்பான பதவி வகித்தவர். சக ஊழியர்களாலும், பொதுமக்களாலும் மிகவும் நேசிக்கப்பட்டவர். அவருக்குத் தான் இந்த அவல நிலை.

ரத்னா ரவீந்திரகுமார் மிகுந்த மன வேதனையுடன் இதைச் சொன்னார். அவர் குறிப்பிட்டது சென்னை தண்டையார் பேட்டையிலுள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில்

பணிபுரிந்த தன் கணவர் டாக்டர் ரவீந்திரகுமாரைப் பற்றித்தான்.

1991 மே மாதம் 21-ஆம் தேதி ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து நாடெங்கும் பதற்றமான நிலைமை கவிந்திருந்தது. போக்குவரத்து முற்றாக முடங்கியிருந்தது. அதற்கு மறுநாளும் - அதாவது 22-ஆம் தேதியும் கலவரச் சூழ்நிலை. அப்போதுதான் டாக்டர் ரவீந்திரகுமாருக்கு அந்த விபத்து ஏற்பட்டது.

அன்றைக்கு காலை எங்கள் வீட்டிலிருந்து அவர் மருத்துவமனைக்குப் புறப்பட்டார். போக்குவரத்து எதுவும் இல்லையே, போக வேண்டாம் என்று சொல்லிப்பார்த்தேன்.

நான்தான் மருத்துவமனை இன்சார்ஜ். நானே போகாவிட்டால் எப்படி? என்று கேட்டுவிட்டு மகன் மணிகண்டனுடன் புறப்பட்டுப் போனார். அண்ணா மேம்பாலத்தில் நடந்து வரும்போது திடீரென்று ஒரு ஆட்டோ, அவரை இடித்துத் தள்ளிவிட்டு மறைந்துவிட்டது. தலையில் சின்னதாக அடிபட்டது. திரும்ப வீட்டுக்கு வந்தார். அப்போது அது பெரிய பிரச்சினையாக மாறும் என்று நினைக்கவில்லை.

நாங்களும் சாதாரணமாகத்தான் எடுத்துக்கொண்டோம். மத்தியானமாக தலை வலிக்கிறது, களைப்பாக இருக்கிறது என்றார். வேறு மருத்துவமனைக்குக் கொண்டு போகலாம் என்றாலும் போக்குவரத்து கிடையாது. ரொம்பச் சிரமத்துக்குப் பிறகு தனியார் மருத்துவமனையில் சேர்த்தோம். ஸ்கேன் பண்ணி பார்த்ததில், மூளையில் ரத்தம் உறைந்திருந்தது தெரிந்தது. உடனே ஆபரேஷன் நடந்தது.

ஆபரேஷன் முடிந்து நான்கைந்து நாட்கள் நன்றாகத்தான் இருந்தார். அதற்கப்புறம் திடீரென்று செஸ்ட் இன்ஃபெக்ஷன் ஏற்பட்டது. அதிலிருந்து கோமா நிலைதான். கைகால் அசைவில்லை. பேச முடியாது. யாரையும் அடையாளம் தெரியாமல் நினைவிழந்த நிலையில் இருந்தார்.

முதலில் ஆஸ்பத்திரியில் வைத்திருந்தோம். கொஞ்ச நாளில் சரியாகிவிடும் என்று டாக்டர்கள் சொன்னதால், வீட்டுக்கு அழைத்து வந்தோம். இப்போது இரண்டு வருடங்களாகி விட்டன.

அவருடைய நிலையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்றார் ரத்னா.

இந்தச் சம்பவத்தில் டாக்டர் ரவீந்திரகுமாருக்கும், அவர் குடும்பத்துக்கும் ஏற்பட்ட வேதனை கொடியது. ஆனால் அதைவிடக் கொடுமையானது, கடமையுணர்வுள்ள அந்த அரசு மருத்துவரின் பிரச்சினை கையாளப்பட்ட விதம்.

விபத்து நடந்து, பிறகு இரண்டு மாதங்கள் ஜூன், ஜூலை மட்டுமே அவருடைய சம்பளம் தரப்பட்டது. அதற்குப்பிறகு அவருடைய மெடிக்கல் லீவை நீடிக்கச் செய்ய, நான் அனுபவித்த கஷ்டம் ரொம்பக் கொடுமையானது. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஆம்புலன்சில் அவரை அள்ளிப் போட்டுக்கொண்டு மருத்துவ போர்டுக்குப் போக வேண்டியிருந்தது. அங்கே அவருடைய கட்டை விரல் ரேகையைப் பதிப்பார்கள். கொஞ்சம் கூட மனிதாபிமான மில்லாத நடைமுறையாக இருந்தது. கேட்டால், நாங்கள் என்ன செய்ய? விதிகள் அப்படி இருக்கின்றன என்று பதில் வருகிறது என்று வருந்துகிறார் ரத்னா.

அரசு ஊழியராக இருந்தும், டாக்டர் ரவீந்திரகுமாரின் விஷயத்தில் அரசுக்குக் கருணை எதுவும் பிறக்கவில்லை. மாறாக, மருத்துவ போர்டும் அங்கீகரித்தும் அவருடைய சம்பளம் ஏழு மாதங்களாகக் கொடுக்கப்படவில்லை.

அரசின் கெடுபிடிகளால் தளர்ந்து போன ரத்னா, டாக்டர் ரவீந்திர குமாருக்கு விருப்ப ஓய்வு Voluntary Retirement அளிக்கும்படி மன்றாடியிருக்கிறார். அதற்கும் இதுவரை பதில் கிடைக்கவில்லை.

இதற்கிடையில் ரத்னா இன்னொரு முயற்சியில் இறங்கினார். அவர் படித்தது சென்னை சர்ச்பார்க் கான்வென்டில்தான். அப்போது அவருடன் படித்தவர் இன்றைய முதல்வர் ஜெயலலிதா.

அவர்களுக்கு என்னைத் தெரியும் என்கிறார் ரத்னா.

எனவே, முதல்வரை நேரடியாக அணுக முற்பட்டார். 1991 ஆகஸ்டு மாதம் தாங்கள் படித்த பள்ளியின்

விளையாட்டு விழாவுக்கு வருகை தந்த முதல்வரிடம் ரத்னா தனது துயரத்தைப் பற்றி மனு கொடுத்திருக்கிறார். மூன்று நாட்களுக்குப் பிறகு புலனாய்வுப் பிரிவிலிருந்து அதிகாரிகள் வந்தனர்.

பரவாயில்லையே. பிரச்சினை சீக்கிரம் தீர்ந்துவிடும் என்று நம்பிக் கொண்டிருக்கும் போது நடவடிக்கைகள் அறுந்து போயின. அதற்குப் பிறகு எந்த அதிகாரியும் எட்டிப் பார்க்கவில்லை.

டாக்டர் ரவீந்திரகுமார் பல்லவன் மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாக 12 வருடங்கள் பணி புரிந்தவர். எனவே அந்தத் தொழிலாளர்கள் மூலமாக, முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு மனு அனுப்பினார்.

அதற்கும் எதிர்வினை எதுவுமில்லை. டாக்டர் ரவீந்திரகுமார் கடந்த இரண்டு வருடங்களாக சுயநினைவு திரும்பாமலேயே இருக்கிறார். லேசான உடல் அசைவுகள் தவிர நடமாட்டமில்லை. மூக்கு வழியாக உணவு செலுத்தப்படுகிறது.

டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள்?

நம்பிக்கை தருகிற மாதிரி எதுவும் சொல்வதில்லை. அதே சமயம் ஒரேடியாகச் சாகவிட்டு விடவும் இல்லை. இப்படி ஒரு நிலை மருத்துவத் திறமைக்கே கேள்விக்குறியாக இருக்கிறது.

விபத்து நடந்தபோது எங்கள் மகன் ஒன்பதாவது படித்துக் கொண்டிருந்தான். இப்போது பிளஸ் டூ படித்துக் கொண்டிருக்கிறான், இது எதுவும் அவருக்குத் தெரியாது.

தியாகராயநகர் பி.என். ரெட்டி சாலையிலுள்ள மூன்றாம் எண் வீட்டின் ஓர் அறையில் டாக்டர் ரவீந்திர குமார் முடங்கிக் கிடக்கிறார். அவரைக் கவனித்துக் கொள்வதற்காக உதவியாளர் ஒருவர் அமர்த்தப்பட்டிருக்கிறார்.

பட்டம் பெற்றபோது எடுத்த புகைப்படத்தில் தெரியும் ரவீந்திர குமாருக்கும், பழைய துணியைச் சுருட்டி ஒடுங்கிக் கிடக்கும் ரவீந்திரகுமாருக்கும் எவ்வளவு வித்தியாசம். படுத்தே கிடப்பதால் உடலில் புண் ஏற்படாமலிருக்க அவ்வப்போது நாற்காலியில் உட்கார வைக்கிறார்கள்.

இதுவரை நிறைய கடன் வாங்கி விட்டேன். இவருடைய சம்பளம் கடனைத் திருப்பவே சரியாகிவிடும். அதிலும் வருமான வரி கட்டு என்ற பிரச்சினை என்று குறிப்பிட்டார் ரத்னா.

> கடமை உணர்வும், நன்மதிப்பும் மிகுந்த ஓர் அரசு ஊழியரின் கடந்தகால சேவை, புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. எதிர்கால நம்பிக்கை கேள்விக்குறி ஆக்கப்பட்டிருக்கிறது. அன்புக் கணவரின் உயிரை மீட்க அந்த மனைவி போராடிக் கொண்டிருக்கிறார்.
>
> இவ்வளவு துயரங்கள் தன்னைச் சுற்றி அலை மோதுவதை உணர முடியாமல், அந்த டாக்டர் நினைவிழந்து கோமாவில் கிடக்கிறார். ஊழியரின் அவல நிலையை மாற்ற வேண்டிய அரசும் கோமா நிலையில் இருக்கிறது.

உடன்பிறப்பே, இப்படி சுகுமாரன் தனது கட்டுரையைக் கண்ணீர் மல்க முடித்திருக்கிறார். நான் இதனை உன் கவனத்திற்கு மட்டுமல்ல, இதயமுள்ளோர் யாராவது இருந்தால் - இந்த நெடுங்கால தாமதத்திற்குப் பிறகாவது நெஞ்சிரக்கம் கொண்டு - குமுறிக் கொண்டிருக்கிற அந்தக் குடும்பத்தின் பக்கம் கருணைக் கரம் நீட்ட மாட்டார்களா என்ற ஆவலுடன், அவர்களின் கவனத்திற்காகவும்தான் நினைவூட்டியிருக்கிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

12-05-1993

2022. போக்குவரத்துத் தொழிலாளர் போர்க்கொடி!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் அரசுப் பேருந்துப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் அடுத்த திங்கள் ஜூன் 5- ஆம் நாள் ஒருநாள் வேலை நிறுத்தம் செய்வதென்றும், தொடர்ந்து போராடுவதென்றும் முடிவெடுத்து அறிவித்துள்ளனர். தொழிலாளர்களைத் திட்டமிட்டு வேண்டுமென்றே பழிவாங்குவது - அரசுக்குப் பிடித்தமில்லாத தொழிற்சங்கங்களை இயங்கவிடாமல் தடுப்பது - போன்ற பிரச்சினைகளை முன் வைத்தது மாத்திரமல்லாமல், அரசுப் போக்குவரத்துப் பேருந்து வழித்தடங்களைத் தனியாருக்கு வழங்குவதற்கானச் சூழ்ச்சிகளையும் கடுமையாக எதிர்த்து மே திங்கள் 25 மற்றும் 27, 28, 29 ஆகிய நாட்களில் பேருந்துப் பணிமனைகளின் முன்னால் ஆர்ப்பாட்டமும், ஜூன் 5- இல் அடையாள வேலை நிறுத்தமும் என, தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவைத் தலைவர் குப்புசாமி, சி.ஐ.டி.யு. மாநில பொதுச் செயலாளர் டி.கே. ரங்கராஜன், ஏ.ஐ.டி.யு.சி. பொதுச் செயலாளர் ஏ.எம். கோபு ஆகியோர் விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

1972 ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில், டி.வி.எஸ்., ஏ.பி.டி., இராமன் அண்டு இராமன், எஸ்.ஆர்.வி.எஸ். போன்ற பெரிய பேருந்து நிறுவனங்களை அரசுடைமையாக்கி போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்பட்டன. பொது மக்கள் பயன்படுத்தும் நிறுவனங்கள் இயன்ற வரையில், அரசுடைமையாக்கப்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் அரசுடைமைக் கொள்கையில் தி.மு.கழக அரசு தீவிரம் காட்டியதின் காரணமாக, குறிப்பாகப் பேருந்துப் போக்குவரத்துகள் எல்லா கிராமங்களுக்கும்,

எல்லா மக்களுக்கும் இடையூறின்றி மலிவாகக் கிடைப்பதற்கு வழி கோலப்பட்டது.

அப்படித் தொடங்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களின் எண்ணிக்கை, கட்டம் கட்டமாக விரிவடைந்து, இப்போது பதினாறு போக்குவரத்துக் கழகங்களாகப் பெருகியுள்ளன.

தனியார் நடத்தும் பேருந்துகள் இலாப நட்டக் கணக்கின் அடிப்படையில்தான் வழித்தடங்களில் விடப்படும். ஆனால், அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் வழித்தடங்கள் மக்களின் தேவையை நிறைவு செய்யும் அடிப்படையில் விடப்படவேண்டும் என்ற கருத்துடன் தொடக்கத்தில் அமைக்கப்பட்டன என்றாலும், அந்தக் கருத்து இன்றைக்குப் பாழ்படுகிற அளவுக்குத்தான் காரியங்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

Timing நேரக்கணிப்பு என்ற முறையில் தி.மு.க. ஆட்சிக் காலங்களில், ஒரு வழித் தடத்தில் அரசு பேருந்து புறப்பட்ட சில நிமிடங்களுக்குப் பிறகே, தனியார் பேருந்துகள் புறப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டதற்கு மாறாக, இப்போது தனியார் பேருந்தை முதலிலே புறப்பட அனுமதித்துவிட்டு, அதன் பிறகே அரசுப் போக்குவரத்துக் கழகப்பேருந்து அனுமதிக்கப்படுவதற்கான பேரத்தை முடித்துக் கொண்டு, அதற்கேற்ப நேரத்தைக் கணித்து, தனியார் பேருந்துகள் கொள்ளை லாபம் அடிக்கவும் - அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இழப்பில் சிக்கித் தவிக்கவுமான நிலை உருவாகி - ஆகா! பார்த்தீர்களா? நட்டத்தில் இயங்கும் இந்த வழித்தடத்தை! எனவே இதனைத் தனியாருக்கே வழங்கி விடுகிறோம் என்று நரியை நனையாமல் குளிப்பாட்டும் வேலையில் இந்த ஆட்சியாளர்கள் கண்ணும் கருத்துமாகச் செயல்படுகிறார்கள்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கோடை கால விடுமுறையில் சென்னையிலிருந்து மதுரை போன்ற இடங்களுக்கு, முன்னூறு சிறப்புப் பேருந்துகள் விடப்பட்டன.

அந்தப் பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் விடுவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு கோடைகால விடுமுறையை முன்னிட்டு அவ்வாறு ஒரு பேருந்து கூட விடப்படவில்லை.

அது குறித்துத் தொழிலாளர்கள் பெரும் பிரச்சினை எழுப்பிய பிறகு, இப்போது நாற்பது சிறப்புப் பேருந்துகளைவிட திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளதாம். தி.மு.க. ஆட்சியில் விடப் பட்ட முன்னூறு பஸ்கள் எங்கே? இப்போது விடப்படும் நாற்பது பஸ்கள் எங்கே?

ஏன் இந்தக் கூத்து? காரியமில்லாமல் வேடம் கட்டி ஆடுகிற கூத்து அல்ல! ஆம்னி பஸ் உரிமையாளர்களுக்கு பெரும் லாபம் திரட்டுவதற்காக நடத்துக்கிற கூத்துத்தான்! திருவள்ளுவரில் போனால் சென்னையிலிருந்து மதுரைக்கு 52 ரூபாய் மட்டுமே! ஆம்னியில் போனால் 120 ரூபாய் கட்டணம்! அதனால் வள்ளுவர் பஸ்களை குறள் வரிகளாகச் சுருக்கிக்கொண்டு, ஆம்னி பஸ்களை வால்மீகி இராமாயணமாக, வியாச பாரதமாக விரிவடையச்செய்து - கொள்ளை லாபத்தில் பங்கு பேரம் நடத்திக் கொள்கிறார்கள்!

ஆயிரம் பேருந்துகள் கொண்டிருந்தால்தான் ஒரு போக்குவரத்துக் கழகம் சீராக நடத்த முடியும் என்ற நிலையிருக்கும்போது, மிகக் குறைந்த எண்ணிக்கை கொண்ட போக்குவரத்துக் கழகங்களை விருப்பம்போல பெயர்களை வைத்துப் பிரிப்பதால், ஒவ்வொரு புதிய போக்குவரத்துக் கழகத்திற்கும் ஆண்டொன்றுக்கு மூன்று கோடி ரூபாய் நிர்வாகச் செலவாகும் நிலைமை உருவாகிறது.

சென்னை மாநகரில் தற்சமயம் ஒரு வழித்தடத்தில் 15 பேருந்துகள் ஓடிக் கொண்டிருந்ததை 12 பேருந்துகளாகக் குறைத்து, பயணிகளைப் பெரும் சங்கடத்துக்கு ஆளாக்கியிருக்கிறார்கள்.

பஸ்களின் பராமரிப்போ, மிக மிகச் சீர்கேடு!

இந்த அக்கறையற்ற தன்மையாலும், நிர்வாகச் சீர்கேட்டினாலும், ஒவ்வொரு முடிவு எடுக்கும் போதும் பஸ் முதலாளிகளிடமிருந்து எத்தனை பெட்டிகள் கிடைக்கும் என்று கணக்கிடும் லஞ்ச லாவண்யக் கொடுமையாலும் - பாதிக்கப்படுவது லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களும், பஸ்களில் பயணம் செய்யும் ஏழை, எளிய, நடுத்தரப் பொதுமக்களும் தான்!

எனவே, தங்களின் குறைகளை மட்டுமே கோரிக்கை ஆக்கிடாமல் - அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் சீர்குலையாமல்

செம்மையாக நடக்க வேண்டுமென்பதிலும் அக்கறை செலுத்தி, பொதுமக்களின் நலனும் கருதி போக்குவரத்துத் தொழிலாளர்கள் நடத்த இருக்கும் போராட்டத்தின் நியாயமான உணர்வுகளை ஜெயலலிதா அரசு மதித்து நடக்க போகிறதா? இல்லையா? என்பதே இப்போது எழுந்து நிற்கும் கேள்வியாகும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

13-05-1993

2023. வகுப்புவாத விஷம் எங்கே ஊற்றெடுக்கிறது!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் நீதிபதியாக இருந்து பின்னர், பஞ்சாப் அரியானா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்ற இராமசாமி அவர்கள்மீது சில குற்றச்சாட்டுகள். அங்கே அவருக்கென்று ஒதுக்கப்பட்ட இல்லத்திற்கு மேசை, நாற்காலிகள், சோபாக்கள் வாங்க - சமக்கால விரிப்பு - குளிர்சாதனக் கருவி அமைத்திட - தொலைபேசியைப் பயன்படுத்த, அனுமதிக்கப்பட்டிருந்த தொகையைவிட அதிகமாகச் செலவு செய்துவிட்டார் என்பதே அந்தக் குற்றச்சாட்டுகளின் முக்கிய பகுதியாகும். அஃதன்னியில், அவர் லஞ்சம் வாங்கிக்கொண்டு யாருக்கேனும் சாதகமாக தீர்ப்பு வழங்கினார் என்றோ - அல்லது தமிழ்நாட்டில் முன்பொரு நீதிபதி, பதவியில் நெடிது நீடிப்பதற்காக தனது வயதை மாற்றிக்கொடுத்தது போன்ற செயலில் ஈடுபட்டார் என்றோ - அல்லது சபலங்களின் காரணமாக நீதித்தராசை சாய்த்துப் பிடித்தார் என்றோ - அல்லது ஒரே மாதிரியான இரு வழக்குகளில் இரு வேறு வகையான தீர்ப்புகளை அளித்தார் என்றோ எந்தக் குற்றச்சாட்டும் அவர்மீது கூறப்படவில்லை.

அனுமதிக்கப்பட்டதற்கு மேலாக அதிகத் தொகை செலவழித்தார் என்றால், அதை அவரிடமிருந்து வசூலிக்க அரசுக்கு உரிமை உள்ளது. அதற்காக இந்திய நாட்டின் நீதித்துறையை அனைத்து நாடுகளின் பார்வையில் ஒரு களங்கம் படிந்த உருவமாக ஆக்கிக் காட்டுகிற முயற்சியில் ஈடுபட்டு, நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டுவருவது தேவையற்றது, அதிகப்படியானது என்பதே தி.மு.கழகத்தின் கருத்தாக எடுத்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் யாரும் இல்லாத நிலையிருந்த போதிலும், ஒருவேளை அந்தக் கண்டனத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, முறைப்படி மாநிலங்களவைக்கு வந்திருந்தால் - அந்தத் தீர்மானத்தை எதிர்த்து மாநிலங்களவை கழக உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள் என்றே தி.மு.க. தலைமையின் சார்பிலும் அறிவிக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்திலேயே கண்டனத் தீர்மானம் தோற்றுப் போனதால், அத்தீர்மானம் மாநிலங்களவைக்கு வரவில்லை.

நீதிபதி இராமசாமி பிரச்சினையில் தி.மு.க. வாதிட்டதும், இப்போதுங்கூட வாதிடுவதும் அனுமதிக்கப்பட்ட செலவினங்களை விட அதிகமாகச் செலவழித்துள்ளவர்கள் சிலர் முக்கியமான பொறுப்புகளில் அமர்ந்திருந்த பிரமுகர்களாக விளங்கியவர்கள் என்பதை மட்டும் ஏன் வசதியாக மறந்துவிடவேண்டும் என்பதுதான்!

நான்கு மாத காலம் மட்டுமே பிரதமராக இருந்த சந்திரசேகர் அவர்கள் விமானப் பயணம் மேற்கொண்ட வகையில் அதிகமாகச் செலவழித்து அந்த அடிப்படையில் அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை ஆறு கோடி ரூபாய் என்கிறபோது - அதற்கு எழாத கண்டனம், நீதிபதி இராமசாமியின் சில லட்ச ரூபாய்கள் அதிகச் செலவுக்காக எழுவானேன்?

ஆறுகோடியை சந்திரசேகரிடமிருந்து வசூலித்துவிடலாம் என்று கொண்டுள்ள நம்பிக்கை, நீதிபதி இராமசாமி விஷயத்தில் மட்டும் நலிந்து போவானேன்?

எப்படியோ இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாக எழுதப்பட்டு, பேசப்பட்டு, நாடு முழுதும் பரப்பப்பட்ட இந்தப் பிரச்சினை நாடாளுமன்றக் கண்டனத் தீர்மானத் தோல்வியுடன் முடிந்து விட்டது என்றாலும், இன்னமும் சில ஏடுகள் அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் உள்ள இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி போன்ற ஏடுகள் பிரச்சினையை மேலும் பூதாகாரமாக்கி அவர் உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டுமெனத் தலையங்கங்கள் தீட்டியுள்ளன.

மூன்று நீதிபதிகள் கொண்ட குழுவின் அறிக்கைக்குத் தலைவணங்கி அவர் ராஜினாமா செய்திட வேண்டும் என்று அந்த ஏடுகள் எழுதுகின்றன. மூன்று நீதிபதிகள் வழங்கியது

தீர்ப்பு அல்ல. அறிக்கைதான். தீர்ப்பு வழங்கும் தோரணையில்தான் நாடாளுமன்றக் கண்டனத் தீர்மானம் என்று இந்த இதழாளர்கள் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் ஏமாற்றம்!

மூன்று **நீதிபதிகளின் அறிக்கைக்கே** வி. இராமசாமி அவர்களைப் பதவி விலகிட வேண்டுமென வற்புறுத்துகிற இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி ஏடுகள் - அண்மையில் தமிழ்நாட்டில் உயர்நீதிமன்றத்தில் நீதிபதிப் பதவியில் இருக்கிற இரண்டு மாண்புமிகு நீதிபதிகள் சீனிவாசன், தங்கமணி ஆகியோர் ஜெயலலிதா அரசு பற்றி வழங்கியுள்ள தீர்ப்பு பற்றி இத்தனை நாட்களுக்குப் பிறகும் வாய்திறக்கவில்லையே ஏன்? இந்தக் கேள்வி எழுவது வகுப்புவாத உணர்வுடனா? இல்லையே! இந்தத் தீர்ப்பைக் கண்டுகொள்ளாமல் இருக்கிற தினமணி, இந்து, எக்ஸ்பிரஸ் ஏடுகளின் செய்கை அல்லவா! அசல் கடைந்தெடுத்த வகுப்புவாதம்!

175 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அனுமதி விவகாரத்தில் சென்னை உயர்நீதிமன்றம் இந்த அரசைப் பற்றி என்ன குறிப்பிட்டுள்ளது?

1. இந்த நீதிமன்றம் தனக்கேயுரிய, தனிப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தச் சட்ட விரோத அங்கீகார உத்திரவுகளை ரத்து செய்யாவிட்டால், தமிழகத்தில் கல்வியின் எதிர்காலமே தண்டிக்கப்பட்டதாகி விடும்.

2. இந்த அரசு, கடமையாற்றிடத் தவறியது மாத்திரமல்ல. அதிகாரத்தை ஒட்டுமொத்தமாகத் துஷ்பிரயோகம் செய்த குற்றத்துக்கும் ஆளாகியிருக்கிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பையொட்டி ஜெயலலிதா அரசு பதவி விலக வேண்டுமென்று எல்லாக் கட்சிகளும் சொல்லியும் கூட, இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி ஏடுகள் தங்கள் காதுகளில் பஞ்சை உருட்டி வைத்து அடைத்துக் கொண்ட காரணம் என்ன?

ஒருவர் மீது புகார் கூறும்போது, அந்தப் புகார்களை மறுக்க முடியாவிட்டால் அந்தப் புகார்களை தெரிவித்தவர் மீதே பழி சுமத்துதல் உலக வழக்கம். அதே யுக்தியில் இராமசாமி

பிரச்சினையை ஆய்வு செய்த கமிட்டி உறுப்பினர்கள் மீதே புகார் கூறப்பட்டது.

இவ்வாறு எக்ஸ்பிரஸ் தலையங்கம் எழுதி, அதையே தினமணி மொழி பெயர்த்துள்ளது. இந்த வாசகம் இரு ஏடுகளின் ஆசிரியர்களாலும் மறதியின் காரணமாக எழுதப்பட்டதாகவே தோன்றுகிறது.

ஏனெனில், ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அனுமதி வழங்கியதில் இந்த அரசின்மீது குற்றம் சாட்டி உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதை சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியபோது, முதலமைச்சர் ஜெயலலிதா என்ன சொன்னார்?

> நேற்று ஐகோர்ட்டு டிவிசன் பெஞ்ச் 175 ஆசிரியர் பயிற்சி பள்ளி அனுமதியை ரத்து செய்து இருக்கிறது. இதில் 98 பள்ளிகளுக்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்று கூறியது ஐகோர்ட்டுதான். மேலும் 53 பள்ளிகளுக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று டைரக்ஷன் கொடுத்ததும் ஐகோர்ட்டுதான்.
>
> எனவே ஐகோர்ட்டு உத்தரவின்படி தான், 151 பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. மீதி உள்ள 24 பள்ளிகளுக்கு மட்டுமே அரசு தானாக அனுமதி வழங்கி உள்ளது. எந்த ஐகோர்ட்டு அனுமதி வழங்கியதோ, அதே ஐகோர்ட்டுதான் இப்போது அனுமதியை ரத்து செய்கிறது. எனவே, ஐகோர்ட்டு தீர்ப்பின் முரண்பாடுகளுக்கு நாங்கள் எப்படி பொறுப்பு ஏற்க முடியும்? நாங்கள் ஏன் ராஜினாமா செய்யவேண்டும்?

குற்றம் சாட்டியவர்கள் மீதே குற்றம் சாட்டுவது என்று எக்ஸ்பிரசும், தினமணியும் தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பது, ஜெயலலிதாவின் மேற்கண்ட சட்டப் பேரவைப் பேச்சுக்கும் பொருந்த வேண்டாமா? - ஓகோ! இதற்கு மட்டும் மனு நீதியோ!

அப்படி ஜெயலலிதா, பேரவையில் அளித்த பதிலும் தவறானது - உண்மைக்கு மாறானது - என்பது மறுநாளே அம்பலத்துக்கு வந்து விட்டதையும், ஜெயலலிதா நீதி மன்றத்தின் மீது சுமத்திய புகார் பொய் என்று நிரூபிக்கப்பட்டதையும்கூட இந்த ஏடுகள் கண்டு கொள்ளவில்லையே!

என் செய்வது! சட்டமன்ற உறுப்பினர்களான பரிதி இளம்வழுதியும், ஞானசேகரனும் நீதிமன்றத்தில் ஜாமீன் கொடுத்துவிட்டு விடுதலையானார்கள் என்று அவை முனைவர் நாவலர் சொன்னதை இந்து ஏடே வெளியிட்டிருந்தது. நாவலர் சொன்னது பொய் என்று பரிதி இளம்வழுதி உரிமைப்பிரச்சினை கொண்டு போன போது நாணயமிக்க நாவலர் அவர்கள், பேரவையில் அப்படிச் சொல்லவே இல்லை எனக் கூறியதோடு, அதற்கான ஆவணங்களும் திருத்தப்பட்டன. அந்த உண்மையைக்கூட வெளியிடாமல், யாரோ உப்புக் கண்டம் பறி கொடுத்த கதைபோல இந்தும், எக்ஸ்பிரசும், தினமணியும் வாயை மூடிக் கொண்டது நாடறிந்த நிகழ்ச்சிதானே!

பங்காரப்பா ஊழல் என்றதும் பாய்ந்து பிராண்டிய இந்த ஏடுகள் - ஜனார்த்தனரெட்டி மீது உயர்நீதிமன்றம் குறை சொன்னபோது சல்லடம் கட்டிக் கொண்டு எழுதிய இந்த ஏடுகள், ஜெயலலிதா பிரச்சினை என்றால் மட்டும் - அந்தக் கோடானு கோடி ஊழல் குறித்து பேனாமுனையை அசைப்பதில்லையே ஏன்? ஏன்? ஏன்? புரிகிறதா உடன்பிறப்பே! வகுப்புவாத விஷம் எங்கே ஊற்றெடுத்துப் பெருகுகிறது என்ற இரகசியம்!

அதனால்தான் நீதிபதி இராமசாமியைப் பதவி விலக வேண்டுமென்று ஒரு சாதாரணக் குற்றச்சாட்டுக்குக் கடுங்கணை தொடுக்கும் இந்த ஏடுகள், ஐந்து கோடி ரூபாய் ஊழல், ஆசிரியர் பயிற்சி பள்ளி விவகாரத்தில் மட்டும் செய்துள்ள ஜெயலலிதா மீது புஷ்ப பாணங்களை வருஷித்துக் கொண்டுள்ளன!

அன்புள்ள,

மு. கருணாநிதி

14-05-1993

2024. இவர்களில் யார் குற்றவாளி? மக்களுக்கு உண்மை தெரியவேண்டும்!

உடன்பிறப்பே,

மத்திய உள்துறை அமைச்சர் சவானும், மாநில முதலமைச்சர் ஜெயலலிதாவும் நாட்டு மக்களின் கவனத்தை மட்டுமல்ல, வெளிநாட்டு அரசியல் வட்டாரங்களின் கவனத்தையும் ஈர்க்கக்கூடிய ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து, வெளிப்படையாகப் பத்திரிகைகளில் அறிக்கைகளை மாறி மாறி விடுவதின் மூலம் பெருந்தர்க்கமொன்றைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழகச் சிறைகளில் இருந்தும், கட்டுப்பாட்டு முகாம்களிலிருந்தும் ஏராளமானவர்கள் தீவிரவாதிகள், இலங்கைப் போராளிகள் தப்பித்துச் செல்கிற செய்திகள் நாள்தோறும் வந்து கொண்டிருக்கின்றன. நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும் வழியில் ஒரு போலீஸ்காரரைச் சுட்டுக்கொன்றுவிட்டு, கிருபன் உள்ளிட்ட மூன்று போராளிகளைச் சில தீவிரவாதிகள் மீட்டுக்கொண்டு போய்விட்டார்கள். அதில் அவர்களுடன் தப்பிச் செல்லாத விக்டர் என்ற போராளி, ஏற்கெனவே போராளிகளின் துரோகிப் பட்டியலில் இருப்பதால் - தனது உயிருக்குப் பயந்து அவர்களுடன் போகவில்லை என்று வாரப்பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால், அதே விக்டர் நீதிமன்றத்தில் கொடுத்த ஒரு புதிய வாக்குமூலத்தில், கிருபன் உட்பட மூன்று போராளிகளையும் விடுதலைப்புலிகள் விடுவிக்கவில்லையென்றும், அது மத்திய உளவுத்துறை அதிகாரிகளின் கைவரிசை என்றும் கூறினார். அந்த வாக்கு மூலத்தை நீதிமன்றம் ஏற்கவில்லை. ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா, இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் நீதிமன்றம் விக்டரின் வாக்குமூலத்தைத் தள்ளுபடி செய்தாலும்கூட, நான் அந்த வாக்குமூலத்தை நம்புகிறேன் என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

மேலும், சைதாப்பேட்டை சிறப்பு முகாமிலிருந்து தப்பியோடிய சார்லஸ் என்பவர், ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தொடர்புடைய முக்கியமான சாட்சி என்று கூறப்படுபவர். மாவட்ட ஆட்சித் தலைவரின் கண்காணிப்பில் மாநில அரசுக் காவல்துறையின் பொறுப்பில் அடைபட்டிருந்த அந்த சார்லஸ் தப்பியது எப்படி என்று மத்திய உளவுத்துறை கேள்வி எழுப்பியதும், அதை மறுத்து தமிழக காவல்துறை இயக்குநர் திரு. ஸ்ரீபால் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முக்கியமான தகவலும் அலட்சியப் படுத்தப்படக் கூடியவை அல்ல!

> சார்லஸ் தப்பியோடுவதற்கு முதல் நாள், மத்திய உளவுத்துறை சி.பி.ஐ. பிரிவு தலைமைக் காவலர் ருத்ரப்பன், சார்லசுடன் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்ததாகத் தகவல் வந்துள்ளது

- என்று ஸ்ரீபால் ஓர் அதிரடிச் செய்தியை அவரது அறிக்கையில் கோடிட்டுக் காட்டியுள்ளார். தமிழக டி.ஜி.பி.யின் இந்தக்குற்றச்சாட்டுக்கு மத்திய புலனாய்வுத் துறையினரின் பதில் என்ன? அறிந்து கொள்வதற்கு நாடு மிகவும் ஆவலாக இருக்கிறது! டி.ஜி.பி. ஸ்ரீபால் சொல்வது உண்மையானால் - ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் என்ன காரணத்திற்காவோ ஒரு முக்கியமான சாட்சியைக் கடத்தியிருக்கிறார்கள் என்ற சந்தேகம் மலையென எழத்தானே செய்யும்!

ருத்ரப்பனோ அல்லது யாரோ சார்லசுடன் பேசியிருந்தாலும் - அதனை கவனித்துள்ள மாநிலக் காவல்துறை, உடனடியாக அதன் தொடர்பாக எடுத்த பாதுகாப்பு நடவடிக்கை என்ன? சார்லஸ் தப்பித்துச் செல்ல முடியாமல் செய்யப்பட்ட தடுப்புக் காரியங்கள் என்ன? தப்பியோடிய தீவிரவாதிகளுக்கு பொறுப்பேற்க வேண்டியது மாநிலக் காவல் துறைதானே! இந்தக் கேள்விகளுக்கும் மாநிலப் போலீஸ் பெரிய அதிகாரிகளிடமிருந்து மக்கள் பதிலை எதிர்பார்ப்பது இயல்புதானே! எனவே, மத்திய புலனாய்வுத்துறையும் - மாநிலப் போலீஸ் துறையும் விளக்கமளிக்கக் கடமைப்பட்டுள்ளன என்பதை மறுக்க முடியாது.

ஓராண்டில் தப்பியோடியவர்கள், அதாவது சிறையிலிருந்து தப்பியவர்களின் எண்ணிக்கை அறுபத்தி ஐந்து என்று முதலமைச்சர் ஜெயலலிதாவே புள்ளி விபரம் கொடுத்திருக்கும் போது - இவ்வளவு பேர் தப்பிச் சென்றதற்கும் மத்திய உளவுத்துறைதான்

காரணம் என்றும், மாநிலக் காவல்துறையினர் அதனைக் கண்டு கொள்ளவில்லையென்றும் தானே கருத வேண்டியிருக்கிறது.

அதனால்தான் இப்படிப் போராளிகள் சிறையிலிருந்தும், சிறப்பு முகாமிலிருந்தும், போகும் வழியில் போலீசாரைச் சுட்டுக் கொன்று விட்டும் தப்பியோடியதற்குக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட வேண்டியது மாநிலக் காவல்துறையா? அல்லது ஜெயலலிதா கூற்றுப்படி மத்திய புலனாய்வுத் துறையா?

இவற்றைக் காட்டிலும் பெரும் புதிராக, நேற்றைய தினம் முதலமைச்சர் விடுத்த அறிக்கையில், மத்திய உள்துறை அமைச்சர் திரு. சவான் முதலமைச்சராகிய தன்னிடம் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ந் தேதியின்று விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவது சாத்தியமா? என்று கேட்டார் என்றும், இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்து தடை செய்யப்பட்ட இயக்கத்துடன் எப்படிப் பேச்சு நடத்த முடியும் - அதுவும் குறிப்பாக ராஜீவ் காந்தியைக் கொலை செய்ததாக சி.பி.ஐ. நிரூபித்து வரும் அந்த இயக்கத்துடனா? என்று கேட்டேன் என்றும் ஒரு புதிய செய்தியைக் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தகவல் உண்மையானால், உள்துறை அமைச்சர் இரகசியமாகச் சொன்னதை வெளியிடுவது என்பது - முதலமைச்சர் எடுத்துக் கொண்ட இரகசியக் காப்பு உறுதிமொழிக்கு மாறுபட்டதா இல்லையா என்பது தெளிவாக வேண்டும்.

முதலமைச்சர் சொன்னது பொய் என்றும், தான் அப்படி விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதுபற்றிக் கேட்கவே இல்லையென்றும் - உள்துறை அமைச்சர் சவான் உடனடியாக மறுப்பறிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் மறுப்புக்கு மறுப்பாக, மீண்டும் ஜெயலலிதா; உள்துறை அமைச்சர் சவான் அப்படிக் கேட்டது உண்மைதான் என்று திட்டவட்டமாக அறிக்கை விடுத்துள்ளார்.

இருவரும் மத்தியிலும் மாநிலத்திலும் இரண்டு பொறுப்பான பதவியிலே இருப்பவர்கள். நான் கேட்கவில்லை என்று உள்துறை அமைச்சரும் - கேட்டார் என்று முதலமைச்சரும் திரும்பத் திரும்பச் சொல்லும்போது, இருவரில் பாரம்பர்யமாகப் பொய் சொல்லக் கூடியவர் யார் என்று கணித்துத் தெளிவு பெற்றுள்ளவர்கள்

மட்டுமே உண்மையை உணர்ந்து கொள்ள முடியும். உடன்பிறப்பே! ஒன்று மட்டும் உலகத்துக்குப் புரிந்தால் சரி!

"விடுதலைப் புலிகள் விஷயத்தில்
ஜெயலலிதாவுக்கு ஊசலாட்டம்"

என்று காங்கிரஸ் மத்திய அமைச்சர் சவானும்,

"விடுதலைப் புலிகளிடம் பேச்சுவார்த்தைக்கு
சவான் என்னிடம் கேட்டார்"

என்று அ.தி.மு.க. முதலமைச்சர் ஜெயலலிதாவும் - ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக் கொண்டு மக்கள் மன்றத்தில் மோதுகிறார்கள். இவர்கள் இருவரும் சேர்ந்து கொண்டுதான் 1991-ல் தேர்தலின்போது, தி.மு.க.வுக்கு எதிராக விடுதலைப்புலிகளின் பிரச்சினையை வீதிக்குக் கொண்டுவந்து நம்மை வீழ்த்துவதற்கு பயன்படுத்தினார்கள் - தேர்தலில் மட்டுந்தான்! இதை மக்கள் மறந்திடுவரோ?

அன்புள்ள,

மு. கருணாநிதி

25-05-1993

2025. நன்னிலத்தார் தீட்டிய மடலும்! நமதியக்க மலரும் நினைவுகளும்!

உடன்பிறப்பே,

இன்றைய என் கடிதத்துடன் 86 வயது இளைஞர் ஒருவரின் கடிதத்தையும் இணைத்திருக்கிறேன். முதலில் அதைப்படி! நான் அவரை இளைஞர் என்று குறிப்பிட்டிருப்பது சரியா அல்லவா என்பதை நீயே முடிவு செய்துகொள்வாய்!

இதோ! அந்தக் கடிதம் :-

பேரன்பும், பெருமையும், அருமையுமிக்க டாக்டர் கலைஞர் அவர்கட்கு, இரு கரம் கூப்பி வணக்கம். 3.6.93 தங்களின் பொன்னான பிறந்த நாள். இந்த உங்கள் நல்ல 70-வது பிறந்த நாள் குறித்து, 86 வயதை எட்டிப்பிடிக்கும் நானும் - 78 வயதுடைய எனது மனைவியும், உங்களை உளமார - வாய் மணக்க வாழ்த்துகிறோம். மகிழ்ந்து போற்றுகிறோம்.

தாங்களும், தங்களின் அன்புக் குடும்பமும், செல்வ மக்களும், குன்றா நலமும், குறையா வளமும் பெற்று, சிறப்பு அனைத்தும் எய்தி, பல்லாண்டு - பல்லாண்டு நீடூழி - வாழ்க - வாழ்க - வாழ்க - வாழ்க என்று இதய பூர்வமாக வாழ்த்துகிறோம்.

இளமையில் தாங்கள் என்பால் கொண்டிருந்த அன்பையும் - நட்புத் தொடர்பையும் மறந்திருக்க மாட்டீர்கள் எனவே நம்புகிறேன்.

நன்னிலம் என்றால் என்னைப் பற்றித்தான் முதல் நினைவு தங்கட்கு வரும் என்பதை நான் அறிவேன்.

எனது 61-வது பிறந்தநாள் மணி விழாவிற்கு வாழ்த்து அனுப்ப வேண்டிக் கொண்டு தங்கட்கு எழுதினேன்.

தாங்கள் வாழ்த்து அனுப்பவில்லை. தந்தை பெரியார் முதல் அனைத்து இயக்க அன்பர்களும் வாழ்த்து அனுப்பினார்கள்.

ஆயினும் தாங்கள் தமிழக முதல் அமைச்சராக இருந்த காலத்தில், 20.5.1974 நன்னிலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசும்போது எனது இயக்க - கழக - பற்று பற்றியும் பொதுநலத் தொண்டு பற்றியும் கூறி, நான் தங்களின் பழனியப்பன் நாடகத்தில் வைதீகத் தந்தை பாத்திரம் ஏற்று மணியப்ப முதலியாராக வேடம் பூண்டு நடித்ததைப் பற்றியும் பேசினீர்கள். இவைகளை எல்லாம் எனது வைரவிழா வாழ்த்து மலர் மாலை புத்தகத்தில் விழாக்குழுவினர் வெளியிட்டுள்ளார்கள். மற்றொன்றையும், இது சமயம் உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

7.6.1931-ல் நன்னிலத்தில் எனது முயற்சியிலும், என் செலவிலும் நன்னிலம் தாலூகா சுயமரியாதை மாநாடு நடத்தி அம்மாநாட்டில் தந்தை பெரியார், எஸ். ராமநாதன் எம்.ஏ.பி.எல், சாமி. சிதம்பரனார், காரைக்குடி முருகப்பா, மரகதவல்லி, மாயூரம் நடராஜன், நாகை மணி, திருவாரூர் யாகூப், குடியேற்றம் அண்ணல் தங்கோ - மற்றும் தமிழக சுயமரியாதை இயக்கத்தலைவர்கள் முன்னிலையில் ராகுகாலம் என்று சொல்லப்படும் நேரத்தில் திருமணம் செய்துகொண்டேன். அதுமட்டுமல்ல இந்த மாநாட்டில்தான் எனது வேண்டுகோளுக்கு இணங்க - தந்தை பெரியார் அவர்கள் சொல்ல, அதாவது DICTATE பண்ண, என்னால் எழுதப்பட்டு முன்னாள் மந்திரி எஸ். ராமநாதன் முன்மொழிய, சாமி சிதம்பரனார் வழி மொழிய - இந்திமொழி பொது மொழியாக இருக்கத் தகுதி இல்லையென்றும் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதை சுயமரியாதை உலகம் நன்கு அறியும். தந்தை பெரியார் அவர்களும் - கோர்ட்டின் வாக்கு மூலத்தில் கூட - 1931-ம் வருடத்திலேயே நன்னிலத்தில் இந்தி எதிர்ப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறித்து தெரிவித்துள்ளார். இந்த நிகழ்ச்சி தந்தை பெரியார்

பற்றிய தமிழர் வரலாறு என்ற புத்தகத்திலும், பெரியார் பற்றிய பிறந்தநாள் மலர்களிலும் வெளிவந்துள்ளன.

எனது 86-வது பிறந்தநாள் 28.7.93-ல் வருகிறது. இயற்கையின் ஒத்துழைப்பு கிட்டினால் - நான் தங்களை ஜூன் மாதக் கடைசி வாரத்திலோ ஜூலை முதல் வாரத்திலோ சந்திக்கப் பேராவல் கொண்டுள்ளேன். சிறு வேண்டுகோள்! மாயூரத்தில் 1926-ம் வருடம் முதல் மிக மிக நெருங்கிப் பழகிய அருமை நண்பர் திருமிகு மணவழகனார் அவர்கள் கதர்க்கடை ஆவார்கள். அவரது அருமை மகன் உயர்திரு. க. அன்பழகன் பேராசிரியர் அவர்கட்கு எனது நீங்கா நன்றியையும், நல்விசாரணையையும், வணக்கத்தையும் தெரிவிக்கும்படி பணிந்து வேண்டுகிறேன். இவர்கள் எனக்கு செய்த உதவி உயிர் உள்ளளவும் மறக்கற்பாலதன்று. தமிழக அடுத்த முதல் அமைச்சர் நீங்கள்தான் என்பதை அறுதியிட்டு கூறுகிறேன். வணக்கம்! நன்றி! வாழ்க! வாழ்க!

அன்புள்ள,

கோ. சௌரிராஜன்

38, வடக்குத் தெரு, நன்னிலம்

உடன்பிறப்பே, இந்தக் கடிதம் திராவிட இயக்க வரலாற்றின் சில பக்கங்களை எவ்வளவு உத்வேகமாகவும், உணர்ச்சிபூர்வமாகவும் நமக்கு நினைவூட்டுகிறது பார்த்தாயா!

50 ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சைத் தரணியில் நன்னிலம் சௌரிராசன் போன்ற இயக்கக் காவலர்களுடன் இணைந்து, நான் எழுதி நடித்த சாந்தா அல்லது பழனியப்பன் நாடகம்தான் பிறகு, நச்சுக்கோப்பை என்ற பெயரில் நூல் வடிவில் வெளி வந்துள்ளதாகும். அந்த நாடகத்தின் முதல் காட்சியே இருவர் எதிரும் புதிருமாக சாலையில் தேங்காய் பழத்தட்டுடன் வருவார்கள். இடையில் ஒரு சுயமரியாதைக்கார இளைஞன் அவர்களை இவ்வளவு அவசரமாக எங்கே போகிறீர்கள் என்று கேட்பான். ஒருவர் சொல்லுவார், என்மகன் திருமணம் நாளைக்கு - அதனால், இரண்டு நாளைக்கு மழை பெய்யக்கூடாது என்று பிள்ளையாரிடம் பிரார்த்தனை செய்து கொள்ளப்போகிறேன்

என்பார். இன்னொருவர், தனது வயல் மழையின்றி வறண்டு கிடப்பதாகவும், அதனால் மழை பொழியப் பிள்ளையார் அருள் வேண்டிச்செல்வதாகவும் கூறுவார். உடனே இளைஞன் கேட்பான் பிள்ளையார் உங்களில் யாருக்கு உதவினாலும் ஒருவருக்கு பாதகம்தானே என்று! இருவரும் விழிப்பார்கள்!

விதவைத் திருமணத்தை வலியுறுத்தி நடத்தப்பட்ட பகுத்தறிவுப்பிரச்சார நாடகம் தான் அது! அந்த நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்தவர் தான் இந்தப் பெரியவர் சௌரிராஜன். அவரது கடிதம், அந்தக் காலத்தில் பகுத்தறிவுப் பிரச்சாரம் எப்படியெல்லாம் நடைபெற்றது என்பதை மட்டுமா விளக்குகிறது!

நாள், நட்சத்திரம் என்ற பஞ்சாங்கக் குப்பைகளை எல்லாம் உதறிவிட்டு, இராகு காலம் என்று சொல்லப்படும் நேரத்தில் 1931-ஆம் ஆண்டிலேயே திருமணம் செய்துகொண்ட நன்னிலம் சௌரிராஜனும், அவரது துணைவியார் மாரிமுத்தம்மாளும் அதாவது மணமகனுக்கு இப்போது வயது 86 - மணமகளுக்கு இப்போது வயது 78 இத்தனை ஆண்டு காலம் நலமுடன்தான் வாழ்கிறார்கள் என்ற நற்செய்தியையும் அல்லவா பகுத்தறிவுடன் இணைத்து வழங்குகிறது!

அதுமட்டுமா? 1938-இல் தொடங்கிய இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்திற்கு 1931 லேயே முரசு கொட்டப்பட்டுவிட்டது என்பதையுமல்லவா அவரது கடிதம் ஒரு வரலாற்றுக் குறிப்பாக சுட்டிக் காட்டுகிறது.

இந்த இயக்கம் வளர்க்க அக்காலத்தில் எதிர்நீச்சல் போட்டவர்கள், கல்லிலும் முள்ளிலும் நடந்தவர்கள், காட்டாறுகளைக் கடந்தவர்கள் - அவர்களில் சிலரது பெயர்களையும் நன்னிலத்தாரின் கடிதம் நினைவூட்டும்பொழுது அவர்கள் காலத்தில் மிக இளைஞனாக இருந்து அவர்களுடன் பழகியும், அவர்களுடன் இணைந்து பணியாற்றும் பேறு பெற்றும் - இன்றைக்கும் அவர்களில் சிலரது வாழ்த்துகளைப் பெறுகிற வாய்ப்பு பெற்றுமுள்ள நான் எவ்வளவு பெருமையுறுகிறேன்! புளகாங்கிதமடைகிறேன்!

இன்று எவ்வளவோ செப்பனிடப்பட்ட சாலையில் நமது இயக்கத்தின் பயணம்! ஆனால் இந்த சாலை அமைத்திட அந்தக் காலத்தில் வியர்வை கொட்டியோர், இரத்தம் சிந்தியோர்,

ஓய்வின்றி உழைத்துக்கொண்டே இருந்தோர் அவர்களை எல்லாம் எண்ணினால், கண்ணின் இமைகளை உடைத்துக்கொண்டு உணர்ச்சிப் பிரவாகமன்றோ வெளிப்படுகிறது! அந்த முதியவர்களுக்குள்ள ஆர்வமும், இயக்கப் பற்றும் இன்றுள்ள இளைஞர்களுக்கு ஏற்பட வேண்டுமே என்ற ஆவல்அன்றோ பீறிட்டுக் கிளம்புகிறது!

நன்னிலத்தாரின் கடிதம் என்னுள்ளத்தில் கடந்த கால நிகழ்வுகளையும் - இக்கால நிலைமைகளையும் - திரைக்காட்சிபோல ஒளிவிட்டு உற்சாகப்படுத்தியது! அந்த உற்சாகத்தை நீயும் பெறவேண்டுமென்று உன் அண்ணன் நினைப்பதில் தவறு இல்லையே!

அன்புள்ள,

மு. கருணாநிதி

31-05-1993

குறிப்பு : கடிதத்தில் நன்னிலம் சௌரி அவர்கள் கையொப்பமுடன், அவரது துணைவியார் கையொப்பமும் இடப்பட்டுள்ளது

2026. இரு கடிதங்கள்!
அல்ல! அல்ல - இதயங்கள்!

உடன்பிறப்பே,

பிறந்த நாளுக்குப் பிறகு, ஏறத்தாழ பத்து நாட்களுக்கு மேலாக, உன்னையும் என்னையும் இணைத்திடும் கடிதங்கள் எழுத இயலாதவாறு உடல் நலிவு! காரணமறிந்ததால் நீ என்னைக் கடிந்துகொள்ள மாட்டாய் என்பதும் எனக்குத் தெரியும். எவ்வளவோ எழுதவேண்டுமென ஆசைதான்! அதற்கேற்ப நாட்டு நடப்புகளுக்கும் பஞ்சமில்லை.

எனினும், எனக்கு வந்த இரண்டு கடிதங்களைப்பற்றி முதலில் குறிப்பிட்டுவிட்டு, அதன் பின்னர் நாட்டு நடப்புக்கு வருகிறேன்.

தென்னார்க்காடு மாவட்டம் தெற்குப் பகுதி நல்லூர் ஒன்றியத்தில் உள்ள நிராமணி கிராமத்திலிருந்து மொழிப்போர் வீரன் பாவாடை கோவிந்தசாமி பி.காம்., பி.ஜி.எல். என்ற உடன்பிறப்பு எழுதிய கடிதம் என் பிறந்த நாளன்று கிடைத்தது.

“நீ பிறந்த நாளில் நான் பிறந்தேனே
நன்றி யாருக்கு நான் சொல்வது!
என்னை ஈன்றவளுக்கா? இல்லை
என் தலைவனின் அன்புத்தாய்
அஞ்சுகத்திற்கா?
தமிழர், தன்மானத்துடன்
வாழவேண்டுமே; அதற்காகத்
திராவிடத்தைக் காக்கும்
திருவாரூர் தேரே!
பல்லாயிரம் ஆண்டு
பவனி வா!”

இன்னும் ஏராளமான வர்ணனைகளுடன் அந்த வாழ்த்துக் கடிதம்! ஒரு பகுதி மட்டுமே இது! புகழுரைகளை, போற்றுதல்களை விட்டு விடுவோம் - அந்த உடன்பிறப்பும், நானும் ஒரே நாளில் ஜூன் மூன்றில் பிறந்தமைக்காக எங்களைப் பெற்ற இரு தாய்களில் நன்றிக்குரியவர் யார் எனக் கேட்கிறார் தம்பி! அவரை அவர் தாய் பெற்றபோது, என்னை என் தாய் பெற்றதற்காக அந்த அஞ்சுகத் தாய்க்கு நன்றி சொல்ல விழைகிறது அந்த நல்ல தம்பியின் உள்ளம்!

ஆனால் நானோ, அவர் தனது தாயின் பெயரைக் குறிப்பிடாவிட்டாலும்கூட - அந்த அம்மையாரையும் அஞ்சுகம் அன்னையாகவே கருதி, நன்றி செலுத்துகிறேன்.

நேரில் வந்து வாழ்த்துக் கூறிய உடன்பிறப்புகளில் பலரும்கூட; தாங்கள் ஜூன் 3-ந் தேதி பிறந்ததைக்கூறி மகிழ்வு பூத்தனர். மறக்கவில்லை நான்!

ஒரே தேதியில் - ஒரே மாதத்தில் - ஏன், ஒரே ஆண்டில் பிறக்காவிட்டால்தான் என்ன? அன்பும் பாசமும் பின்னிப் பிணைந்துள்ள உடன்பிறப்புகளை லட்சோப லட்சமெனக் கொண்ட இந்த குடும்பத்தைப்பற்றி அறிஞர் அண்ணா சொன்னதை கோவிந்தசாமியின் கடிதத்தைப் படித்திடும்போது நினைவிற் கொள்ளாமல் இருக்க முடியுமா?

> “நம்மையெல்லாம் ஒருதாயின் வயிறு தாங்காது என்ற காரணத்தால் - தனித்தனி தாய்களின் வயிற்றில் பிறந்த அண்ணன் தம்பிகள், அக்காள் தங்கைகள் நாம்!”

என்ற கருத்தை கடற்கரைப் பெருவெளிக் கூட்டத்தில் அண்ணா வெளியிட்ட போது அன்று இந்த இதயத்தில் ஏற்பட்ட சிலிர்ப்பு இன்னும் அடங்கியபாடில்லையே!

இதோ மற்றொரு உடன்பிறப்பு அனுப்பியுள்ள கடிதத்தைப் பார்!

நானும், பேராசிரியர் அவர்களும் அண்ணா அறிவாலயத்தில் அமர்ந்து உரையாடிக்கொண்டிருக்கிறோம். அமைப்புச் செயலாளர் நீலநாராயணன் கையில் ஒரு பொட்டலமுடனும், ஒரு கடிதத்துடனும் அருகில் வருகிறார் சிரித்துக் கொண்டே!

என்னவென்று நானும், பேராசிரியரும் ஒரே நேரத்தில் கேட்கிறோம்.

ஒரு தோழர் கைத்தறித்துண்டு பார்சல் அனுப்பி, அத்துடன் கடிதமும் வைத்துள்ளார் உங்கள் பிறந்த நாளுக்காக என்கிறார்.

பூரிப்புடன் அவற்றை வாங்கி, கடிதத்தைப் படித்தேன். பூரிப்பு மறைந்தது. பொங்கிற்று விழி நீர். மனத்துக்குள் படித்த மடலை, பேராசிரியருக்கு வாய்விட்டு படித்துக் காட்டினேன். அவரும் உணர்ச்சிப் பிழம்பானார்! எந்தக் கவலை வந்தாலும் இவர்களை நினைத்து மறந்துவிட வேண்டும் என்றார்.

அப்படியென்ன? அந்தக் கடிதத்தில்!

அன்புத் தலைவர் அவர்களுக்கு திருச்சி மாவட்டம் மணப்பாறை மதுரை ரோடு கல்லாத்து க. தமிழ்மணியின் வணக்கம். இத்துடன் அனுப்பியுள்ள துண்டை தாங்கள் கோவை மாநாட்டுக்கு வரும்போது அணிவிக்க வாங்கினேன். ஆனால், திடீரென எனக்கு ஒரு கால், ஒரு கை வராமல் போய்விட்டது. அன்று முதல் நம் கொள்கையைப் பாதுகாப்பதுபோல், இந்தத் துண்டைப் பாதுகாத்து நேரில் அணிவிக்க வேண்டுமென்று எண்ணி இருந்தேன். முடியவில்லை. அதனால் அஞ்சல் மூலம் அனுப்பியுள்ளேன். சந்தர்ப்பம் கிடைக்கும் போது என் தலைவரைக் காண வருகிறேன். என் இடது கையால் இக்கடிதம் எழுதினேன். தவறுக்கு மன்னிக்கவும். க. தமிழ் மணி

உடன்பிறப்பே, கைத்தறித்துண்டு வாங்கி விட்டார் - கை, கால் விளங்காமல் போயிற்று - எனினும், அந்தத் துண்டைப் பாதுகாத்தார் - எப்படி? கொள்கையைப் பாதுகாப்பது போல! சிலபேர் நாட்டில் துண்டைப்போலக் கருதிக் கொள்கையை விட்டு விடுவர் - ஆனால் தமிழ்மணியோ! கொள்கையைப் போலக் கருதித் துண்டைப் பாதுகாத்தார் - அதனை எனக்கும் அனுப்பி வைத்து மகிழ்ந்துள்ளார். கடிதம் எழுதக் கூட வலது கை பயன்படவில்லை, வாதத்தின் தாக்குதலால்! இடது கையால் எழுதியதால் மடலில் சில பிழைகள், எழுத்துகள், எண்களில்கூட!

ஆனால் அவை எதுவும் என் கண்ணில் படவுமில்லை. கருத்தைக் குடையவுமில்லை - அனைத்தையும் கடந்து அந்த அண்ணன் தம்பிப் பாசம்தான் விஞ்சி நின்றது! நிற்கிறது!

அண்ணா அறிவாலயத்தில் உள்ள கருவூலக் காட்சிப் பகுதியில், அந்த உடன்பிறப்பு அனுப்பிய துண்டையும் கடிதத்தையும் அப்படியே வைத்து விடுமாறு சொன்னேன்.

கைத்தறித் துண்டா அது? ஓர் உடன்பிறப்பு அன்புச் சாறு நிரப்பி அனுப்பிய கரும்புத்துண்டல்லவா?

அந்த இரு உடன்பிறப்புகளும் எங்கோ ஒரு மூலையிலிருந்து தங்கள் இதயங்களை என்னை நோக்கித் திறந்து இனிய பாசமழை பொழிந்துள்ளார்களே - அவர்கள் என்ன இந்த இயக்கத்தில் பெரும்பதவிகளை அனுபவித்தவர்களா? அமைச்சர்களாக இருந்தவர்களா? நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாய் உலவினவர்களா? உலவுகிறவர்களா? நகராட்சி ஊராட்சிகளில் தலைவர்களாகத் திகழ்ந்தவர்களா? சொல்லப் போனால், நான் குறிப்பிட்டுள்ள நான் உள்ளிட்ட பலரும் ஏற்றிட்ட இத்தனை பொறுப்புகளிலும், நம்மில் பலரை அமர வைத்திட அயராது உழைத்திட்ட உடன்பிறப்புகளில் இருவர்! இவர் போல இன்னும் எத்தனையோ உடன்பிறப்புகள்!

இவர்களின் பணி, உள்ளத்தைத்தொடும் கடிதங்கள் எழுதுவதுடன் நின்றுவிடாது! நின்றுவிடக்கூடாது!

இன்றைய நாட்டு நடப்பு நமது கழக உடன்பிறப்புகளின் ஓய்வறியா உழைப்புக்கு மேலும் மேலும் அழைப்பு விடுத்துக்கொண்டே இருக்கிறது!

எல்லா முனைகளிலும் நமது சேவை தேவைப்படுகிறது! நமது போர்க்குரல் கேட்டுத் தீர வேண்டியிருக்கிறது!

குடிக்கத் தண்ணீர் இன்றிக் குமுறும் மக்கள் ஒரு புறம் - வீராணம், கிருஷ்ணா என்று வேடிக்கை காட்டும் ஆட்சியாளர்களின் மாய்மாலம் ஒருபுறம்!

கோரிக்கை வைக்கும் விவசாயிகளை, ஆளுங்கட்சியான அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களே காக்கை குருவிகளைப்போல சுட்டுத்தள்ளும் கொடுமை ஒருபுறம்! கைது, ரிமாண்டு, மருத்துவமனை ஓய்வு, என கண்துடைப்பு நாடகம் மற்றொரு புறம்!

எதிர்க்கட்சிக் கருத்துகளைச் சொன்னால் அமளி, கலவரம், அமிலம் ஊற்றுதல் என்று அ.தி.மு.க. குண்டர்கள் அட்டகாசம் ஒருபுறம் - ஆட்சியை விமர்சித்தால் இப்படித்தான் நடக்கும் என்று அமைச்சரே அறிக்கைவிடும் அராஜகச் செயல், பொறுப்பற்ற போக்கு மற்றொரு புறம்!

மத்திய அரசு அமைச்சர்களை, எதிர்க்கட்சி தலைவர்களைப் பற்றி பொது மேடையில் மயிர் மட்டை என்று எழுதவொண்ணா இழி சொற்களால் அமைச்சர்களே பேசுவது ஒருபுறம் - அவர்களால் அப்படிப் பேசுவதற்காகவே அமைச்சர்களாக்கப்பட்டனர் என்ற நிலை மறுபுறம்.

புட்டபர்த்தி சாயி பாபா ஆண்டவனின் தூதர் - அருள் பாலிக்கும் மகான் - என்ற புகழ் மொழி ஒருபுறம்! அவர் மடலாயத்திலேயே கொலைகள் - இரத்த வெள்ளத்தில் பிணங்கள் - இதைப் பெரிது படுத்தவேண்டாம் என்று பாபாவே அதனை மூடிமறைக்கும் பயங்கர மர்மம் ஒரு புறம்! ஆந்திராவில் அவர் வாழும் திக்குநோக்கித் தண்டனிடும் தமிழ்நாட்டு ஏமாளிகளின் அறியாமை இன்னொரு புறம்!

குவிந்து கிடக்கும் கோப்புகள் ஆயிரக்கணக்கில் என்ற நிர்வாகப் பொத்தல் ஒருபுறம் - அவைகளைத் தீர்வு செய்ய தீர்த்த யாத்திரைபோல கொடை மலை முகாம் மற்றொரு புறம்!

மலையிலிருந்து உருட்டிவிடும் திட்டங்கள், அறிவிப்புகள் ஒருபுறம்! அவை காற்றோடு காற்றாய் கலந்து கரைந்து போவது மறுபுறம்!

மாநில அரசு, விவசாயிகளின் மானத்தைப் பறிக்கும் வகையில் - எந்த ஆட்சியிலும் நடக்காத வகையில், விவசாயிகளின் அசையா சொத்தான நிலங்களையே ஏலம் விடும் நிகழ்ச்சி ஒருபுறம் - அந்த அநியாயம் கண்டு மானம் தாங்காமல் சம்புவராயர் மாவட்டத்தில் சாமிநாதன் என்ற விவசாயி, பாலிடால் அருந்தி கடந்த 11-ந் தேதியன்று தன்னையே மாய்த்துக் கொண்ட கொடுமையினும் கொடுமை மறுபுறம் -

ஏடு கொள்ளாத அளவுக்கு எண்ணற்ற கொடுமைகள், லஞ்ச லாவண்ய ஊழல்கள், சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிற நிலைமைகள், ஏன் என்று கேட்போரை எள்ளி நகையாடும் ஆளவந்தாரின் ஆணவப் போக்கு -

இத்தனையும்
எதிர்த்திட,
எதிர்த்துத் தகர்த்திட
இதயத்தைக் கடிதமாக்கி

எனக்கு அனுப்பிய

என் உடன் பிறப்புகள் இருவர் மட்டுமல்ல! இலட்சக்கணக்கானோர் இருக்கின்றார் என்ற துணிவுடனும், நம்பிக்கையுடனும்தான் நலிவு நீங்கி நலம் பெற்றுள்ளேன்!

என் நலம் கிடக்கட்டும். நாடும் மக்களும் நலிவு நீங்கி நலம் பெற வேண்டாமா?

தம்பி தமிழ்மணி மட்டுமல்ல! தமிழ் மண்ணும் நலன் பல பெற வேண்டாமா?

அதற்கு உழைத்திடுவதற்கான உற்சாக மூட்டும் மருந்தாகத்தான் இரு உடன்பிறப்புகளும் - இலட்சக்கணக்கான உடன்பிறப்புகளின் எண்ணத்தை எதிரொலித்திருக்கிறார்கள்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

16-06-1993

2027. ஆண்டவர் மடாலயத்தில் ஆறு கொலைகள்!

உடன்பிறப்பே,

மனச்சாட்சி உறங்கும்போது மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்பிவிடுகிறது என்று ஓர் உரையாடல் பூம்புகார் திரைப்படத்தில் கவுந்தியடிகள் வாயிலாக கேட்டது நினைவிருக்கும் உனக்கு! ஆனால் இப்போது நாட்டில் சிலர், மனச்சாட்சியை உறங்கச் செய்துவிட்டுக்கூட அல்ல. மனச்சாட்சியைக் கொன்றுவிட்டுக்கூட ஊர், உலகமெல்லாம் சுற்றக் கிளம்பி விடுகிறார்கள். ஊரோ, உலகமோ எங்கோ சுற்றித் திரியட்டும் - அதுபற்றி நமக்குக் கவலையில்லை. ஊராளும் சிம்மாசனத்திலும் ஏறி அமர்ந்துகொண்டு மக்களை உன்மத்தர்களாக்கி, ஊமையராக்கி, தங்களின் உல்லாசத்தைப் பெருக்கிக்கொண்டு - இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்பதுபோல பக்தி வேடம் கட்டி ஆடுகிறார்களே! அதைக் கண்டால்தான் இவர்களை நம்பி இந்த நாடு நலிந்து நலிந்து, மெலிந்து மெலிந்து, மடிந்து போகப் போகிறதே எனும் ஆழ்ந்த கவலை இதயத்தின் அடித்தளத்திலிருந்து பெருமூச்சாக வெளிப்படுகிறது. போபர்ஸ் ஊழலா? அர்ஷத் மேத்தாவைக் கதாநாயகனாகக் கொண்ட பங்குச் சந்தை ஊழலா? ரயில்வே ஊழலா? டான்சியா? ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஊழலா? ஸ்பிக் ஷேர் ஊழலா?

இப்படி எத்தனை வகை ஊழல்! எத்தனை ரக ஊழல்! அனைத்தும் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்றல்ல. ஆதாரங்களுடன் விளக்கப்பட்ட ஊழல்கள்! ஆனால் அந்த ஊழல்களின் பிதாமகர்களோ - அல்லது ஊழல் ராணிகளோ - திருப்பதி என்றும், காஞ்சி மடம் என்றும், புட்டபர்த்தி தரிசனம் என்றும், கும்பகோணம் மகாமகம் என்றும், யாத்திரைகள் புறப்பட்டு விடுகிறார்கள். இவர்களின் மனச்சாட்சிதான் உறங்குவதில்லையே! உயிர் இருந்தால் அல்லவா மனச்சாட்சி

உறங்குவதற்கு? அதுதான் அவற்றின் மண்டையில் ஒரே அடியாக அடித்து மரணக் குழியில் தள்ளி ஆயிற்றே - அதனால் மனக்குரங்கு எல்லா க்ஷேத்திரங்களுக்கும், ஸ்தலங்களுக்கும், தீர்த்தங்களுக்கும் யாத்திரை மேற்கொள்ளத் தங்கு தடை கிடையாதே! மனச்சாட்சி உயிரோடிருந்து, அதுவும் விழித்துக்கொண்டிருந்தால் அல்லவா? இத்தனை அக்கிரமங்களை, ஊழல்களைச் செய்துவிட்டு ஆண்டவன் வழிபாடு - ஆலயச் சுற்றுலா என்று போர்வை போட்டு மூடிக் கொள்கிறாயே! நியாயமா? என்று கேட்டிருக்கும்!

ஊரைக்கூட்டி தர்மம் அதர்மங்களைப்பற்றி வாய் கிழியப் பேசி, அற்புதங்களைச் செய்து காட்டி, அனைத்தும் ஆண்டவனின் சித்து விளையாட்டுகள் என்று உபதேசிக்கும் காவியாடைச் சாமிகள், காஷ்மீர் முகடு முதல் கன்னியாகுமரி முனை வரையில் அவ்வப்போது, காலத்துக்கேற்ப கோலம் கொள்கிறார்கள். ஆஸ்ரமம் என்ற பெயரால் அரண்மனைகள்! குருநாதரின் குடில்கள் என்ற பெயரால் கூட கோபுர மாடமாளிகைகள்! பக்தர் கூட்டம், பலாச்சுளையில் ஈ மொய்ப்பதுபோல! திடீரென ஒருநாள் அந்தத் திருத்தலம் கொலைக்கள மாகும்! திருடர் குகை என்ற உண்மை வெளியாகும்! பணம் நிரம்பிய பெட்டிகள் - தங்கப்பாளங்கள் புதைந்து கிடந்தன - பிணங்கள் தோண்டியெடுக்கப்பட்டன - பெரிய சாது மாயமாய் மறைந்தார் - சின்ன சீடர்கள் ஓட்டம் பிடித்தனர் - இப்படிச் செய்திகள் வரும்.

அவற்றை மடமென நம்பியதே மடத்தனம் என்பர் மக்கள்! ஆனால் - சில நாட்கள் இடைவெளியில் இன்னொரு சித்தர் தோன்றுவார் - அவரது சிங்கார ஒய்யாரங்கள் சில காலம்! மீண்டும் மக்கள், மந்தைகளாவர்! மடத்திலோ மொந்தைகள் வழியும்! பகலில் சாமிகள் - இரவில் காலிகள் - இந்த ரகசியம், ரசபான விருந்து வேடிக்கை - கொஞ்ச நாள் தாக்குப் பிடிக்கும்! பிறகு சிக்குவர், குடியன், கூத்திக் கள்வன் எனத் தூற்றப்படுவர் - மீண்டும் புதிய சாமியார் வருவார் - மீண்டும் மக்கள் தங்களை மறப்பர் - இப்படி மாறி மாறி வந்த பரிணாம வளர்ச்சிதான் புட்டபர்த்தி சாயிபாபா என்பதை யாரறிவார்? அவர் வாழும் ஊருக்கு அருகிலே பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும், பகுத்தறிவுவாதியுமான நரசிம்மய்யா, புட்டபர்த்தியாரின் வேடத்தையும், அவர் நடத்தும் அற்புதக் கூத்துகளையும் ஏற்றுக்கொண்டதில்லை. எழுபத்தி இரண்டு வயது நிரம்பிய நரசிம்மய்யா, தன்னை நாத்திகர் என்று

கூறிக் கொள்ளவில்லை. அண்மையில் சண்டே அப்சர்வர் ஆங்கில ஏட்டுக்கு நரசிம்மய்யா அளித்துள்ள பேட்டியில் கடவுளை நான் எதிர்க்கவில்லை. கடவுளையும், மதத்தையும் புட்டபர்த்தி சாயிபாபா தவறாகப் பயன்படுத்துவதைத்தான் எதிர்க்கிறேன் என்று தெளிவாகக் கூறியிருக்கிறார். ஜூன் 13-19 எனத் தேதியிட்ட சண்டே அப்சர்வர் ஏட்டுக்கு நரசிம்மய்யா அவர்கள் அளித்த பேட்டியில் - கேள்வியும் பதிலும் வருமாறு :-

செய்தியாளர் : புட்டபர்த்தியில் நடைபெற்ற சம்பவம் பற்றி தங்கள் கருத்து என்ன?

நரசிம்மய்யா : சத்ய சாய்பாபாவை கொலை செய்ய நடந்ததாகக் கூறப்படும் முயற்சியை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். காரணம் எதுவாக இருந்தாலும், வன்முறையை நியாயப்படுத்த முடியாது. ஆனால், இதில் சில சதியாலோசனை அம்சங்கள் உள்ளன. அவை ஆராயப்பட வேண்டும்.

செய்தியாளர் : எதைப்பற்றி கூறுகிறீர்கள்?

நரசிம்மய்யா : கொலை செய்ய முயற்சித்தவர்கள் என்று கூறப்படுபவர்களைச் சுட்டுக் கொன்றதன் மூலம் போலீசார் ஆதாரங்களை அழித்துவிட்டனர். இது மிகவும் சதியாலோசனைத் திட்டமாகும். அவர்கள் யாருடைய உத்தரவின் பேரிலாவது அந்தக் கொலையைச் செய்தார்களா? அவர்கள் ஏ.கே. 47 ரகத் துப்பாக்கிகளையோ, எந்திரத் துப்பாக்கிகளையோ வைத்திருக்கவில்லை. வெறும் கத்திகளைத்தான் வைத்திருந்தார்கள். அவர்களுடைய ஆயுதங்களை போலீசார் எளிதாக பறித்திருக்க முடியும்.

இது சந்தேகத்தை எழுப்பியுள்ளது. புதிதாக அங்கே ஏன் ஒரு மூடி மறைக்கும் செயல் நடைபெற வேண்டும்? இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்துள்ளது. ஆனால், 12 மணி நேரம் கழித்துத்தான் அது பற்றிய செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

செய்தியாளர் : பாபாவின் அற்புதங்கள் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

நரசிம்மய்யா : சமீபத்தில் நான் பி.சி. சர்க்காரின் மேஜிக் காட்சியைப் பார்த்தேன். அவர் சிறப்பாகச் செய்தார். சர்க்காருக்கு முன்னால் பாபாவின் தந்திரங்கள் ஒன்றுமில்லாதவை

களாகிவிட்டன. பாபா ஒரு சமூக சேவகர்தான், ஒரு மதவாதி அல்ல என்று நான் கூறி வந்திருக்கிறேன். இந்தச் சம்பவம் அவரை அம்பலப்படுத்திவிட்டது. அவர் ஒரு சாதாரண மனிதன்தான் என்று இப்போது மக்கள் தெரிந்து கொண்டுவிட்டனர். அவர் தெய்வீக சக்தியைப் பெற்றிருந்தால், ரத்தம் சிந்தாமலே கொலை செய்ய வந்தவர்களின் ஆயுதங்களைப் பறித்திருப்பாரே!

செய்தியாளர் : அவருடைய செல்வாக்கு உயர்ந்து வருவதற்கு என்ன காரணம் கூறுகிறீர்கள்?

நரசிம்மய்யா : அதற்கான காரணங்களில் ஒன்று மூட குருட்டு நம்பிக்கை, அவருடைய மேஜிக் மூலம் அவர் உணர்வுகளை ஏற்படுத்துகிறார். அரசியல்வாதிகள் அவரை தங்களுடைய ஆதாயத்துக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

செய்தியாளர் : அவர் அரசியல் தொடர்பு கொண்டுள்ளாரா?

நரசிம்மய்யா : அரசியலில் பாபா விளையாடுகிறார். புட்டபர்த்தியில் பல அரசு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அங்கு ஊழல் நடைபெறுகிறது. தன்னுடைய சாமராஜ்யத்தை உருவாக்க அவர் தவறான முறைகளைக் கையாண்டிருக்கிறார். இது எல்லோருக்கும் தெரியும்.

செய்தியாளர் : அவருடைய செல்வாக்கால் நீங்கள் பாதிக்கப்படவில்லையா?

நரசிம்மய்யா : அடிக்கடி எனக்கு தொலைபேசிகள் மூலம் மிரட்டல்கள் வருகின்றன. அவற்றை நான் பொருட்படுத்துவதில்லை. அவருடைய கருத்துகள் விஞ்ஞானச் சட்டத்தை மீறியவை. அவருடைய அற்புதங்கள் என்று கூறப்படுபவை பற்றி மட்டும்தான் நான் கேள்வி எழுப்புகின்றேன். கடவுளையோ, மதத்தையோ நான் எதிர்க்கவில்லை கடவுளையும் மதத்தையும் தவறாகப் பயன்படுத்துவதைத்தான் நான் வன்மையாக எதிர்க்கிறேன்.

செய்தியாளர் : இந்தக் கொலை முயற்சி சம்பவத்தின் உண்மை வெளிவரும் என்று நினைக்கிறீர்களா?

நரசிம்மய்யா : அவர் எப்படிச் செயல்படுவார் என்பது எனக்குத் தெரியும். நேர்மையான விசாரணை நடைபெறுமா என்பது சந்தேகமே!

உடன்பிறப்பே, இந்த நரசிம்மய்யாவையும் நாடு பார்க்கிறது - நரசிம்மராவ் தலைமையில் உள்ள ஆட்சியையும் நாடு பார்க்கிறது! அந்த ஆட்சியின் அமைச்சர் பெருமக்களையும் நாடு கவனிக்கிறது! மக்களைப் பற்றிக் கவலைப்படுவதை விடுத்து, தங்களின் மகுடங்கள் நிலைத்திட மகேஸ்வரன்களையும், மகான்களையும் வலம் வந்து மண்டியிட்டுதொழுது கிடக்கின்றனரே. இதுதான் ராஜ்ய பரிபாலனம் எனில், மீண்டும் முடியரசுப்பிரகடனம் ஒன்றைச் செய்துவிட்டு, டெல்லி தர்பாரின் ஒரு ராஜகுரு - ஆங்காங்கு மாநிலங்கள் தோறும் துணை குருக்கள் என்று நியமனம் செய்து கொண்டு,

> மந்திரி நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி பொழிகிறதா? என்று கேட்டுக் கொண்டிருக்கலாமே!

ஆண்டவன் பெயர் சொல்லி ஆயிரம், இலட்சம், கோடி என்று வருமானம் பெருக்கும் ஒரு சாமியார் இருப்பிடத்தில் ஆறு கொலைகள் விழுகின்றன! சாமியார், சௌக்கியமா என அறிந்து செல்ல, சவான் பறந்து வருகிறார்! தன்னிடம் விசாரணை நடத்திய போலீஸ் அதிகாரிகளிடம் இதைப் பெரிதுபடுத்தாதீர்கள் என்கிறார் மகான்!

ஆறுகொலைகள்! ஏன் நடந்தன? எப்படி நடந்தன? யாரால் நடத்தப்பட்டன? நரசிம்மய்யாவுக்கு ஏற்பட்டுள்ள ஐயம் நாடு முழுதும் ஏற்பட்டுள்ளது - ஆனால் நரசிம்மராவுக்கு மட்டும் ஏற்படவில்லையே! ஏன்?

பக்தர்களைக்கூட விழிப்புறச் செய்து விடலாம் - ஆனால் பக்தர்களைப்போல நடிப்பவர்களை விழிக்கச் செய்ய முடியாது என்பதுதான் இதற்குக் காரணமா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

17-06-1993

2028. காட்டு தர்பாரைத் தடுத்திட - உழவர் கண்ணீரைத் துடைத்திட!

உடன்பிறப்பே,

ஜப்திக் கொடுமையினால் புழுக்களாகத் துடிக்கும் உழவர் பெருமக்களின் வேதனையைத் தீர்க்க எல்லா மாவட்டங்களிலும் கழக அமைப்புகளும், கழக விவசாய அணியினரும் ஆட்சியாளர்களின் அலுவலகங்களின் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம், ஊர்வலம், பொதுக்கூட்டங்கள் மற்றும் நிலைமைக்கேற்ப அறவழிப் போராட்டங்களை நடத்த வேண்டுமென்று அறிக்கையும் விடுத்திருந்தேன். மாவட்டக் கழகச் செயலாளர்களுக்குத் தனித்தனியாக மடலும் எழுதியிருந்தேன். என் வேண்டுகோளை ஏற்று மாவட்டக் கழகச் செயலாளர் பலரும் ஆர்வமுடன் அறப்போர்க்கான ஆயத்தங்களைச் செய்து வருகின்றனர்.

ஜப்திக் கொடுமையின் உச்சகட்டமாகத் திருவண்ணாமலை சம்புவரையர் மாவட்டத்தில்தான் பல நிகழ்வுகள் நடைபெற்று, நார்த்தம் பூண்டியில் நமது கழக உடன்பிறப்பு எளிய விவசாயி சாமிநாதன் என்பார், தனது நிலமே ஏலம் போகிறதே என்ற ஏக்கத்தில் தற்கொலை செய்துகொண்டார் என்ற செய்தியும் வந்தது. இத்தகவலை அந்த மாவட்டச் செயலாளர் பிச்சாண்டி எனக்கு அறிவித்ததையொட்டி, ஜப்திக் கொடுமையின் முழுவிபரங்களுடன் சட்டப்போரவை முன்னாள் உறுப்பினர் பெ. சு. திருவேங்கடம் தலைமைக் கழகத்திற்கே வந்து என்னை சந்தித்தார். இந்த ஜப்திக் கொடுமைகள் மாநில முழுதும் பரவலாக நடைபெறுவதைக் கண்டித்து தலைமைக் கழக விவசாய அணிச் செயலாளரும் தொடக்கத்தில் ஓர் அறிக்கை கொடுத்துள்ளார். அதனைத் தொடர்ந்து நான் வெளியிட்ட அறிக்கையில்,

> நிலவள வங்கி, மற்றும் மத்திய வங்கிகள் கடன்களுக்காக, இதுவரையில் இருந்த மாநில அரசுகள் கடன் வசூல்

செய்யும்போது விவசாயம் பாதிக்காமல் அசையும் சொத்துக்களை மட்டுமே ஜப்தி செய்தன. அதுகூட ஒவ்வொரு வங்கிச் சரகத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் குறைவாக அதுவும் அச்சுறுத்தலுக்காக மட்டுமே நடத்தப்பட்டன என்பதையும்,

விவசாயிகள் கடனை தவணை கடந்தவைகள் ஒரு தவணையை ஒரு பகுதியை கட்டி விடுவார்களேயானால், அந்த விவசாயிகளைக் கடந்த கால அரசுகள் தொந்தரவு செய்ததில்லை என்பதையும்,

தற்சமயம் ஜெயலலிதா அரசு, தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலவும் நிலையில் - நிலவரி, உரவிலை ஏற்றத்தால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் - நெல் பயிர்களை வைரஸ் நோய் தாக்கியதால் பெரிதும் நஷ்டம் அடைந்துள்ள நிலையில் - இது வரை எந்த அரசும் செய்யாத கொடுமையாக அசையா சொத்துக்களைக்கூட, குறிப்பாக நிலங்களையும் மாவட்ட அளவில் பட்டியல் தயாரித்து, மாவட்ட ஆட்சித்தலைவரின் அனுமதி பெற்று மாவட்ட கெஸட் நோட்டிபிகேஷன் மூலம் ஏலத்தேதி நிர்ணயம் செய்து பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தியும், கிராமங்களில் டாம்டாம் போட்டும், விவசாயிகளை அவமானப்படுத்தி ஏலம் விடும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்பதையும்,

கடனில் ஒரு தவணை கட்டினாலும் கூட ஏலத்தை ரத்து செய்யாமல் முழுக்கடனையும், வட்டியையும், கூட்டு வட்டியையும், அபராத வட்டியையும் சேர்த்துக் கட்டும்படி வற்புறுத்தப்படுகிறார்கள் என்பதையும்,

சில மாவட்டங்களில் கடனைக் கட்டாதவர்களின் வீடுகளுக்குக் காவல்துறையை அனுப்பி வீட்டிலுள்ள சாமான்களையும், மோட்டார் பம்ப் செட்டுகளையும் தயை தாட்சண்யம் பார்க்காமல் தூக்கி வருகின்றனர் என்பதையும்,

விவசாயம் பாதி செய்யப்பட்டுள்ள நிலையில் - நெல் பயிர் போன்றவைகளுக்கு நீரிறைக்க இயலாத நிலையில்

மோட்டார்கள் ஜப்தி செய்யப்படுகின்றன என்பதையும், சுட்டிக் காட்டியிருந்தேன்.

எனது அறிக்கை, அத்துடன் நான் மாவட்டச் செயலாளர்களுக்கு எழுதிய கடிதம் - ஆகியவற்றையொட்டி இதோ திருவண்ணாமலை சம்புவரையர் மாவட்டக் கழகம் செயல்பட்டுள்ளதை அந்த மாவட்டச் செயலாளர் எழுதியுள்ள கடிதம், அனுப்பியுள்ள புகைப்படம் வாயிலாக அறிந்து ஆறுதல் பெறுகிறேன். மற்ற மாவட்டங்களிலும் விவசாயிகளுக்கு ஆதரவான அறப்போர் ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன - நடந்துள்ளன - நடக்க இருக்கின்றன. எனினும், முதன் முதலாக வேதனைக்குரல் எழுப்பிய மாவட்டம் சம்புவரையர் மாவட்டம் என்பதால், அந்தச் செயலாளர் அனுப்பியுள்ள தகவலை இக்கடிதத்தில் இணைத்துள்ளேன்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு பணிவான வணக்கங்கள்.

தங்களுடைய ஆணையின்படி 18.6.93 இன்று காலை திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத் தலை நகரமான திருவண்ணாமலையில், வரலாறு காணாத ஜப்தி கொடுமையினால் அல்லல்படும் விவசாயிகளின் துயர் நீக்கவும், ஜெயலலிதா அரசின் கொடுமைகளைக் கண்டித்தும் கழக விவசாய அணி மற்றும் கழக அமைப்புகளின் சார்பில் மாபெரும் கருப்புக்கொடி கண்டன ஊர்வலம் - காலை 11.00 மணி அளவில் ஆரம்பித்து முக்கிய தெருக்களின் வழியாகச் சென்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பாக, சுமார் ஒரு மணி நேரம் கண்டன முழக்கங்களை முழக்கி ஆர்ப்பாட்டம் நடத்தி பின், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் ஜப்தி கொடுமையினைக் கண்டித்து மனு கொடுக்கப்பட்டது.

இதே போல் மாவட்ட முழுவதுமுள்ள அனைத்து தாலுக்கா தலைநகரங்களிலும் ஆர்ப்பாட்டமும், கருப்புக் கொடி கண்டன ஊர்வலங்களும் நடத்திட வேண்டி அனைத்து ஒன்றிய, நகர அமைப்புகளுக்கு கடிதம் அனுப்பி, அதற்குண்டான ஏற்பாடுகளும் நடை பெற்று வருகிறது.

இந்த கருப்புக் கொடி கண்டன ஊர்வலத்தில் கழகத் தொண்டர்களுடன், பொதுமக்களும், விவசாயிகளும் - கட்சி சார்பற்ற விவசாயிகளும்கூட திரளாக கலந்து கொண்டதுடன் ... கீழ் பெண்ணாத்தூர் ஒன்றியம் ஜமீன் கூடலூர் கிராமத்தைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவி அண்ணா தி.மு.க.வைச் சார்ந்தவர் ஜப்தியினால் பாதிக்கப்பட்டவர் - அந்தப் பெண்மணி ஜெயலலிதா கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும்கூட, ஜப்தி கொடுமையைக் கண்டித்து நமது ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டு, மிக ஆவேசமாக முழக்கமிட்டு வந்தார் என்பதையும், இந்த ஆர்ப்பாட்ட கண்டன ஊர்வலம் விவசாயிகள், பொதுமக்கள் மத்தியில் மிகப் பெரிய எழுச்சியை உண்டாக்கி உள்ளது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

கு. பிச்சாண்டி

உடன்பிறப்பே, நம் கழகத்தின் செயல்வீரர் சாமிநாதன் இந்த ஜப்திக் கொடுமைக்குப் பலியான செய்தி ஏடுகளில் வெளிவந்துள்ளதையும் படிக்கும்போது மனம் பதைக்கிறது.

அந்தச் செய்தி வருமாறு :-

சம்புவரையர் மாவட்டம் நார்த்தம் பூண்டி கிராமத்தைச் சேர்ந்த மா.சாமிநாதன் என்ற விவசாயி ஜப்தி நடவடிக்கையால் அவமானம் தாங்காமல் மரணம் அடைந்தார்.

இவருக்கு 5 ஏக்கர் நிலம் உள்ளதாகவும், அதில் பயிரிட ஏறத்தாழ ரூ. 18 ஆயிரம் கடன் பெற்று இருந்ததாகவும் கூறப்படுகிறது.

கடனை திருப்பிக் கட்ட அவர் பணம் திரட்டிக்கொண்டு இருந்தார். அப்போது அவரது நிலம் ஏலம் விடுவதாக டாம்டாம் போட்டதைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்தார்.

அவமானத்தால் உள்ளமும், உடலும் கூனி குறுகிப்போன அவர் விஷம் குடித்ததாக கூறப்படுகிறது. ஏலம் விடுவதற்கு அதிகாரிகள் வருவதற்குள் அவர் பிணமாகிவிட்டார்.

தற்கொலை செய்துகொண்ட சாமிநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு. திருவேங்கடத்துக்கு கடிதம் எழுதி உள்ளார் என்ற தகவல் கிடைத்து உள்ளது.

அதில் அவர் கூறியிருப்பதாவது :-

எனது நிலம் ஏலத்தில் போகும் நிலையில், அவமானத்தால் நான் சாகிறேன். என் குடும்பத்திற்கு உதவியாக இருங்கள்.

நமது கழகம் தி.மு.க. ஆட்சிக்கு வருகிற காலத்தில் என் மகனுக்கு வேலை வாங்கி கொடுங்கள்.

மேற்கண்டவாறு கடிதத்தில் கூறியுள்ளார்.

கழக உடன் பிறப்பு ஒருவர் இப்படி ஆகிவிட்டார் என்பதுமட்டுமல்ல. உழவுத் தொழிலால் உலகை உய்விக்கும் எண்ணற்ற உடன்பிறப்புகளின் குடும்பங்களில், வெவ்வேறு உருவங்களில் இதே போன்ற கொடுமைகள், ஜெயலலிதா அரசின் ஜப்தி அராஜகத்தினால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தக் காட்டு தர்பாரை தடுத்து நிறுத்தி உழவர் பெருங்குடிமக்களின் கண்ணீரைத் துடைத்திட, கழக அமைப்புகள் ஆங்காங்கு தமது கடமையை ஒருக்கணம் கூட காலம் தாழ்த்தாமல் ஆற்றிட வேண்டுமென்பதற்காக இக் கடிதம்.

அன்புள்ள,

மு. க.

20-06-1993

2029. அ.தி.மு.க.வுக்கு இந்து ஏட்டின் அவசர எச்சரிக்கையா?

உடன்பிறப்பே,

ஜூன் 20 இந்துவின் கட்டுரையொன்று பின்வருமாறு முடிவடைகிறது.

> Eyebrows are Raised over the 'soft' Reaction from the D.M.K. Leader Mr. M. Karunanidhi, Whether he is making a deft move to come closer to the Congress I is a matter of conjecture.

அதாவது, தி.மு.க. தலைவர் இந்தப் பிரச்சினையில் அர்ஷத்மேத்தா நரசிம்மராவ் ஒரு கோடி என்ற பிரச்சினையில் மென்மையானக் கருத்து ரியாக்ஷன் வெளியிட்டது ஆச்சரியத்தால் புருவங்களை உயர்த்தச் செய்கிறது. ஒருவேளை அவர் இந்திரா காங்கிரசுடன் நெருங்கிட ஒரு பக்குவமான அணுகுமுறையைக் கைக் கொள்ளுகிறார் போலும் - என்று இந்து கட்டுரையாளர் கற்பனை செய்து பார்த்திருக்கிறார்.

நரசிம்மராவ் அர்ஷத்மேத்தா பிரச்சினை மட்டுமல்ல. அரசியலில் எதிர்வரிசையில் இருந்தோர், இருப்போர் பற்றிய இதுபோன்ற பிரச்சினைகளில் கழகச் சார்பில் நமது அணுகுமுறை எப்போதுமே தடாலடி என்ற முறையில் இருந்ததில்லை.

ஆனால், நமது மென்மையான அணுகுமுறை மதிக்கப்படாமல் எதிர்தரப்பில் தவறுக்குமேல் தவறு என்று அடுக்கிக் கொண்டே போவதுமட்டுமன்றி, நம்மீதும் எதிர்தரப்பினர் சீறிப் பாய்வார்களானால், எதையும் தாங்கும் இதயத்துடன் அதனைத் தாங்கியும் - நிமிர்ந்து நின்று எதிர்த்தும் கழகத்திற்கேயுரிய தனி முத்திரையை அரசியல் வரலாற்றில் பொறித்திருக்கிறோம்.

இந்திராகாந்தி அம்மையாரின் தேர்தல் செல்லாது - நிறைய ஊழல்கள், சட்டவிரோதச் செயல்கள் நடைபெற்றுள்ளன - என

அலகாபாத் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியபோது, தமிழகத்தில் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. தீர்ப்பு வந்த நாளன்று நான் தஞ்சைத் தரணியில் முத்துப்பேட்டை நிகழ்ச்சியொன்றுக்குச் சென்றிருந்தேன்.

செய்தியாளர் என்னைச் சூழ்ந்து கொண்டனர். அலகாபாத் தீர்ப்பையொட்டி, பிரதமர் இந்திரா காந்தி தனது பதவியைத் துறக்கவேண்டுமென எல்லாக் கட்சிகளும் கூறியுள்ளன - உங்கள் கருத்து என்ன? என்று கேட்டனர்.

இந்தத் தீர்ப்பையொட்டி இந்திரா காந்தி என்ன முடிவு எடுக்கிறாரோ? அது தான் இனி இந்திய நாட்டின் முன் மாதிரியாக இருக்கும் என்று பதில் அளித்தேன்.

இந்துவின் மொழிப்படி Soft Reaction மென்மையான கருத்துதான்!

எனினும், அந்தமென்மைக்குள் அடங்கியுள்ள உண்மையை உணரவேண்டாமா?

அதனை உணராமல்தான் இந்திரா காந்தி ஆட்சியின் அவசரக்கோலம் ஆரம்பமாயிற்று - அலகாபாத் தீர்ப்பு மறைக்கப்பட்டு - நாட்டுக்கு ஆபத்து என்று ஜோடனை செய்யப்பட்டு, நெருக்கடி காலப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

அப்போதும் கழகம், தனது கருத்தை - மென்மையாக, நாகரிகமாக, நளினமான முறையில் செயற்குழு தீர்மானத்தின் மூலம் - இந்தியாவிலேயே முதன் முதலாகத் தெரிவித்தது. வாசகம் மென்மையாக இருக்கலாம் - மனதில் உறுதிதான் மலை போல் இருக்கவேண்டும். இதனை நடைமுறைப்படுத்திக் காட்டியது கழகம் என்பதால்தான் 1976-ல் ஜனநாயகம் காத்திடும் போராட்டத்தில் ஆட்சியையே இழந்தது.

வாசகம் மென்மையெனினும், நெஞ்சம் வைரம் - என்பதற்கு அஃதோர் எடுத்துக்காட்டு!

1972-திண்டுக்கல் இடைத் தேர்தலில் கழகம், அ.தி.மு.க.விடம் தோல்வியுற்றது. இடைத் தேர்தல் தோல்விக்காக கழக ஆட்சி பதவி விலக வேண்டுமென்று அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், வேறு சில கட்சித் தலைவர்களும் வீராவேசமாக முழக்கமிட்டனர். அது அவர்கள் முறையாக இருந்தது.

ஆனால் 1980-ல் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியிடம் அ.தி.மு.க. அணியினர் படு தோல்வியடைந்து, புதுவை உள்ளிட்ட 40 நாடாளுமன்ற இடங்களில் இரண்டு இடங்கள் மட்டுமே பெற்றனர்.

அப்போது சட்டப் பேரவையில் எதிர்க்கட்சியிலிருந்து நான் பேசியபோது, இதற்காக எம்.ஜி.ஆர். பதவி விலக வேண்டுமென்று சொல்ல மாட்டேன். ஆனால் 1972 இடைத்தேர்தலில் திண்டுக்கல் ஒரு இடத்தில் தி.மு.க. தோற்றபோது எம்.ஜி.ஆர். அவர்கள் என்ன சொன்னார் என்பதை மட்டும் நினைத்துப் பார்த்திட கேட்டுக் கொள்கிறேன் என்ற கருத்தைத்தான் மென்மையாக இந்து மொழிப்படி Soft Reaction எடுத்துரைத்தேன்.

நரசிம்மராவுக்கு அர்ஷத் மேத்தா ஒரு கோடி கொடுத்ததாக கூறப்படும் விவகாரத்தில் உங்கள் ரியாக்ஷன் என்னவென்று செய்தியாளர்களும், செய்தி நிறுவனங்களும் தொலைபேசிகள் வாயிலாகத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

> இதில் என் "ரியாக்ஷன்'' என்ன என்பதை விட, பிரதமர் நரசிம்மராவின் ரியாக்ஷன் தான் முக்கியமானது என்று சொன்னேன். இந்துவின் கூற்றுப்படி இந்த ரியாக்ஷன் மென்மையானது தான்!

அதற்காக? இது காங்கிரசோடு நெருங்குவதற்கு மூடுபக்குவமான அணுகுமுறை என்று இந்து கதை கட்டுவதற்கு என்ன முகாந்தரமிருக்கிறது!

தி.மு.கழகம், நரசிம்மராவ் மீது அகில இந்திய காங்கிரஸ் கட்சியைப் போல நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதா?

விவகாரம் எந்த திசையில் போகிறது - உண்மையில் நடந்தது என்ன - மனச்சாட்சிக்கு எப்படி பதில் தரப்பட இருக்கிறது - என்பனவற்றையெல்லாம் உள்ளடக்கிய கருத்தைத்தான் எனது முதல் ரியாக்ஷனாக வெளிப்படுத்தியிருக்கிறேன். மனச்சாட்சிக்கு ஏற்ப முடிவு எடுக்க வேண்டியவரும் - அதற்கான தொடர்புடைய கருத்தை முதலில் வெளிப்படுத்த வேண்டியவரும் பிரதமரே என்பதும், அவருக்கே அந்த மிக முக்கிய பொறுப்பு உள்ளது என்பதும் தான் நான் கூறிய கருத்தின் உண்மைப் பொருளாகும்.

இந்தக் கருத்தின் அடிப்படையில் தான் முரசொலியில் 18.6.93 அன்று தலையங்கமும் தீட்டப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாண்டுக் காலமாக - இந்த வங்கி ஊழல் - பங்குச் சந்தை மோசடி பற்றிய விவகாரத்தை விசாரித்து - உண்மைக் குற்றவாளிகளை அம்பலப்படுத்துவதில் நரசிம்மராவ் அரசு தயங்குகிறது. குற்றவாளிகளின் பெயர்கள் வெளிவராமல் தடுத்து, மூடிமறைக்க - விசாரணை என்ற பேரால் கண்துடைப்பு நாடகம் நடத்துகிறது என்று எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, இந்திய மக்கள் அனைவருமே உறுதியாக நம்புகிறார்கள். பங்குச் சந்தை ஊழலில் ஈடுபட்ட உண்மையான குற்றவாளிகளை வெளியே கொண்டு வர நரசிம்மராவ் அரசு அந்தரங்க சுத்தியுடன் செயல்பட்டிருந்தால், இன்று அர்ஷத் மேத்தாவின் வாக்கு மூலத்தை பொதுமக்கள் உண்மையென்று நம்பும் நிலை ஏற்பட்டிருக்காது.

முரசொலியில் வந்த இந்தத் தலையங்கக் கருத்துதான் கழகத்தின் கருத்தாகும். சொல்லப்படும் முறை, மென்மையானது எனினும், உண்மையை மூடிமறைக்கும் முயற்சி அல்ல என்பது இந்து கட்டுரையாளருக்கு தெரியாமற் போனது ஏனோ?

ஒருவேளை இந்துவுக்கு காங்கிரசுடன் உறவு இல்லை என்ற நமது நிலை நன்றாகத் தெரிந்திருந்தும் - வேண்டுமென்றே, ஒரு கதையைக் கட்டி கழகமும் காங்கிரசும் நெருங்குகின்றன, அதற்கு இடம் கொடுக்காமல் - அ.தி.மு.க. உடனடியாக காங்கிரசுடன் உறவைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும் என்று ஜெயலலிதாவை எச்சரிக்கை செய்கிறதோ என்னவோ!

அன்புள்ள,

மு. க.

21-06-1993

2030. உன்னால் முடியும்!
உன் அணி வகுப்பால் முடியும்!

உடன்பிறப்பே,

வலிவும் பொலிவும் கொண்டு கழகம் வளர்ந்தோங்கி வருவதும், தமிழக மக்களின் பேராதரவு நாள்தோறும் பெருகி வருவதும், நானும், நமது கழகத்தின் கொள்கை விளக்க முன்னணியினரும் கலந்து கொள்ளும் கூட்டங்களில் பல்லாயிரவர் ஆடவரும், பெண்டிரும், இளைஞர் பட்டாளமும் திரளுவதும் எதிர்முனையில் இருப்போரின் இதயத்தில் நெருப்பை அள்ளிக் கொட்டியிருப்பதால் - ஒவ்வொரு நாளும் என்ன கட்டுக்கதையை இட்டுக் கட்டி, கழகமெனும் இந்த எஃகுக் கோட்டையைக் கலகலக்கச் செய்யலாம் என்று காந்தாரி எரிச்சல் கொண்டு ஏதேதோ பேசுகின்றனர். ஏதேதோ எழுதுகின்றனர். எதுவும் பலிக்காமல் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு விம்மி விம்மிப் புலம்பி அழுகின்றனர்.

உடனிருந்து பார்த்த உத்தமர்களைப்போல, நிகழ்வுகள் நடைபெற்ற இடத்தில் இருந்த நேர்மையான சாட்சிகளைப் போல, கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டமா? அப்போது என்ன என்ன நடந்தது? யார் யார் என்ன பேசினார்கள்? நிர்வாகக் குழுக் கூட்டமா? அதில் யார் எப்படிப் பேசினர்? செயற்குழுவா? அதில் அவர் அப்படி - இவர் இப்படி - இவ்வாறு பத்திரிகை அலுவலகத்து அறையில் உள்ள மேஜைக்கு முன் அமர்ந்தே கழகத்திற்கு எதிராக கழகச் செயல் வீரர்கள் உள்ளத்தில் கலக்கத்தை விதைக்கவும் - பொது மக்களைக் குழப்பவும் கதைகளைப் புனைந்து எழுதி, எவராவது காசுக்குச் செய்திகளை விற்கிற கருங்காலிகள் ஓரிருவர் கிடைத்தால், அவர்கள் சொல்லும் ஒன்றை ஒன்பதாக்கி, பத்தாக்கி, நூறாக்கி அன்றைய பத்திரிகை விற்பனையைப் பெருக்கிக் கொள்கிறவர்கள் அதிகரித்து வரும் காலகட்டத்தில், கழகத்தின் கண்மணிகளான என்னுயிரினும் மேலான உடன் பிறப்புகள்,

எத்துணை எச்சரிக்கையுடன், கழகத்தைக் கட்டுப்பாட்டுடன் நடத்த வேண்டியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்துச் செயல்பட வேண்டுமல்லவா?

அண்ணா சொன்னதை நான் அடிக்கடி சுட்டிக் காட்டியிருக்கிறேன். புயல் காற்றுக்கிடையே, சரளைக் கற்கள் நிரம்பிய பாதையில் நடந்து, குன்றின் உச்சியில் வைக்க வேண்டிய அகல் விளக்கைக் கரத்தில் ஏந்தி அதனைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்ல ஏற்கும் சிரமத்தைப் போல, இந்தக் கழக தீபத்தை சோதனைகளுக்கும், சூறாவளிக்குமிடையே ஏந்தி நடந்திட நாம் சிரமத்தை ஏற்றுள்ளோம்.

நாம் என்று சொல்கிறேனே! அதைக் கவனித்தாயா உடன்பிறப்பே!

நானும், பேராசிரியரும் மற்றும் கழகத் தலைமையிலே உள்ளவர்களும் என்று சொல்லவில்லை! இன்றல்ல! என்றுமே அப்படி இறுமாப்புடன் சொன்னதில்லை! நாம் என்பதில் நானும் உள்ளிட்ட நாற்பது லட்சம் பேரல்லவா இருக்கிறோம். எந்தவொரு இயக்கத்திலும் தலைவர்களின் வரிசை - முன்னணியினர் வரிசை - செயல்வீரர்களின் வரிசையென உண்டெனினும், எல்லா வரிசைகளுமே உழைக்கும் வரிசைகளாக இருந்தால்தான் அந்த இயக்கம் இயங்கும். இல்லையேல் ஏங்கும் அல்லது தூங்கும்!

நமதியக்கமோ உழைக்கும் தலைமையை - முன்னணியை - செயல்வீரர் சேனையைப் பெற்றிருப்பது மட்டுமல்ல, அன்பால் பாசத்தால் பிணைப்புற்றிருக்கிற குடும்ப பாச இயக்கமாகும். அதனால்தான் ஆயிரம் யானைகள், இலட்சம் புரவிகள், அக்ரோணிக் கணக்கில் காலாட் படையினர் என நமது கோட்டையைச் சூழ்ந்து மாற்றார் முற்றுகையிட்டு முட்டி முட்டிப் பார்த்தாலும், அவர்களின் முடிநொறுங்கிப் போயிருக்கிறதே தவிர, அண்ணாவின் அடி தொடரும் நம்மை அசைத்துக் கூடப் பார்க்க முடிய வில்லை. இருந்தாலும் அவர்கள் முயற்சியைக் கைவிடவில்லை. நான் இன்று நேற்றல்ல, நீண்ட காலமாகக் கூறி வருகிறேன், உயர்ஜாதி ஏடுகளும், உளவுத் துறைகளும் கழகத்திற்குள் உட்பூசலை வளர்த்து - ஏமாந்தோரை வளைத்து நம்மை வலிவிழக்கச் செய்ய வேண்டுமென்று சூதுவலை பின்னிவரும் செயலில் சிக்காமலிருக்க வேண்டுமென்று!

உடன்பிறப்பே, நீயும் - உன்னைப் போன்ற கழகத்தின் இதய நாளங்களாய், நாடி நரம்புகளாய், மூச்சுக்குழாய்களாய், ஜீவசத்துக்களாய் இருக்கின்ற தொண்டுள்ளம் கொண்ட என் கண்ணின் பாவையென விளங்கும் லட்சோப லட்சம் உடன்பிறப்புகளும், இணைந்து நின்று இரும்பு அரணாய், நெருப்புக் குழம்பு அலைமோதும் அகழியாய் திகழ்ந்திடும்போது உயர்ஜாதி ஏடுகளும், உளவுத் துறையும் என்ன செய்திட முடியும் என்ற துணிவான நம்பிக்கை, பெரியாரிடம் பயின்ற எனக்கு - அண்ணாவின் தம்பியாக - பேராசிரியரின் தோழனாக இருக்கிற எனக்கு விசுவாச குணமும், வீர நெஞ்சமும், உறுதி குலையாக் கொள்கைப் பற்றும், தியாக மனப்பான்மையும் பெற்றுள்ள தளகர்த்தர்களுக்கு மத்தியிலே இருக்கிற எனக்கு - என்றைக்குமே குறைந்ததில்லை!

என்ன இருந்தாலும், எப்படி பாதுகாப்பாக வலைபோட்டு வைத்திருந்தாலும், தூய்மையான இனிப்புப் பண்டத்தின் மீது ஒரு ஈ வந்து உட்கார்ந்து, அது உடனே பறந்துவிட்டாலும் - அய்யோ! பண்டம் கெட்டுவிடாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை, குழந்தைகளுக்காகப் பண்டம் தயாரித்த தாய்க்கு இருப்பதுபோல - எனக்கு இருப்பது இயல்புதானே என் தங்கமே! இந்தக் கழகத்தின் அங்கமே! அந்தக் கவலையுடன்தான் இக்கடிதம் எழுதுகிறேன்.

செயற்குழு இனிது முடிவுற்றது - சிந்தை அணு ஒவ்வொன்றிலும் மகிழ்ச்சியின் நர்த்தனம் - ஆனாலும் இதோ தினமணி ஏடு எழுதுகிறது பார்!

> அரசியல் பார்வையாளர்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த தி.மு.க.வின் செயற்குழுவை, தனக்கே உரித்தான சாதுர்யத்துடன், அமைதியாக நடத்திக் காட்டிவிட்டார் கருணாநிதி. செயற்குழு முடிந்த பின் நடந்த நிருபர்கள் கூட்டத்தில், செய்திகள் பரப்பி வந்த பத்திரிகைகளுக்கு ஏமாற்றம் தரும்வகையில், செயற்குழுக் கூட்டம் அமைதியான முறையில் நடந்தது என்று வெளிப்படையாகவே தெரிவித்தார் அவர்.
>
> ஆனால் இந்த அமைதி, புயலுக்கு முன்னால் ஏற்பட்டிருக்கும் தற்காலிக அமைதி என்பது கட்சியிலுள்ள பலரின் கருத்து.
>
> தினமணி - 4.7.93

உடன்பிறப்பே, கட்சியில் உள்ள எந்தப் பலரை தினமணியார் சந்தித்தார்? யாரையும் சந்தித்திருக்க மாட்டார். அதனால் புயல் வரும் என்பது, கழகத்தில் உள்ளோர் பலரின் கருத்து அல்ல! புயல் வரவேண்டுமென்பது தினமணியாரின் ஆசை! தினமணியார் போன்ற இதழாளர்களின் ஆசை! ஆவல்! பிரார்த்தனை! ஆண்டவனிடம் கேட்கும் வரம்!

இந்த விஷயத்தில், அதாவது, தமிழர்களின் உரிமைக்காகப் போர்க்கொடி தூக்கியிருக்கும் பேரியக்கமாம் தி.மு.கழகத்தைப் பலவீனப்படுத்துவதில், அவாளைப் போலவே நம்மவாள் ஏடுகள் சிலவற்றுக்கும் ஆசை!

அந்த நச்சு நிறைந்த ஆசையில் மண்ணைப் போட, இந்த இயக்கத்தை வியர்வையால், வளர்த்த - வளர்த்துக் கொண்டிருக்கிற - வளர்க்கப் போகிற - என் உயிர் உடன்பிறப்பே! சிங்கமெனச் செம்மாந்து நிற்கும் செயல்வீரனே! உன்னால் முடியும்! உன் அணிவகுப்பால் முடியும்! அப்போதுதான் நமை வீழ்த்த முனையும் வஞ்சம் மடியும்! அப்போதுதான் வாழ முடியும் நம் தமிழ்க் குடியும்!

அன்புள்ள,

மு. க.

05-07-1993

2031. என்றென்றும் எச்சரிக்கையாக இருப்போம்!

உடன்பிறப்பே

சர்க்கரைப் பொங்கல் சாப்பிடலாம் என்று இலைகளை விரித்துப் போட்டுக் கொண்டு பந்தியில் அமர்ந்திருந்தனர் - பாயசம் பருகுவதற்காகக் கிண்ணங்களைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு பரிமாறுகிறவருக்காக வழிமேல் விழி வைத்திருந்தனர் - விருந்து மண்டபத்துக்கு வெளியே பட்டாசுகளைச் சரம்சரமாகப் போட்டுக் கொளுத்தி வெடிக்கச் செய்வதற்குத் தீக்குச்சியைத் தயாராக வைத்திருந்தது ஒரு கும்பல் - இவ்வளவும் எதற்காக?

தாங்கள் விதைத்த நச்சுவிதைகள், நாற்றாகிப் பயிராகி, விஷக்கதிர்கள் விளைந்து கழகமெனும் கழனியே நாசமாகிவிடுமென நம்பியிருந்த கூட்டம், ஓரிரு ஆண்டுக் காலமாகவே அந்தச் சதி முயற்சியிலே ஈடுபட்டு, செய்திகளைப் பரப்பி - வதந்திகளை உலவவிட்டு - கோள்மூட்டி, குறுக்குச் சால் ஓட்டி, எந்தவொரு ஜனநாயக இயக்கத்திலும் இருக்கக் கூடிய சிறு சிறு பிரச்சினைகளைப் பூதாகாரமாக்கி, எள்மூக்கினை இமயமெனக் காட்டி, ஜூலை மூன்றாம் தேதி செயற்குழுவுடன் முடிந்தது தி.மு.க. என்று தத்தோம் எனத் தாண்டவமாடி மகிழ்ந்து ஆர்ப்பரிக்க வாய் பிளந்து, பல்லெல்லாம் தெரிய, நாவில் நீர்சொட்ட, இதயம் இன்பத்துடிப்பால் படபடக்கக் காத்திருந்தது!

ஆனால் உடன்பிறப்பே, நீ உன்னுடைய உறுதிமிக்க உள்ளத்தின் நிலைப்பாட்டினை உன்மத்தர்கள் உணரட்டும் என்று, அண்ணா வழி நின்று அவர்களுக்கு உச்சி மீது நின்று தெளிவுபடுத்திவிட்டாய்.

இறைத்ததில் ஏதாவது சிதறாதா - பொறுக்கலாமே என்று இன்னமும் எழுதுகோலால் தாள்களில் உழுது கொண்டிருக்கிறார்கள் - அல்ல, அல்ல! அழுது கொண்டிருக்கிறார்கள்!

எந்த இயக்கத்தைப் பிளக்கலாம், உடைக்கலாம், எனும் நினைப்பு உயர்சாதி ஏடுகளுக்கும், உளவுத் துறைக்கும் ஏற்பட்டிருக்கிறது பார்த்தாயா?

செந்தமிழுக்கொரு தீமை வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு லாபம் உண்டோ?

என்றுரைத்துத் தேக்கு மரத் தேகங்களை, தீயிக்கு அர்ப்பணித்து மாண்ட சிங்கத் தமிழன் சின்னச்சாமியில் தொடங்கி, ஈழத்தில் அவதியுறும் தமிழர்களுக்காகக் குரல்கொடுத்த எம் தலைவர்களையா சிறையிலிடுவது - இதுவா நியாயம்? எனக்கேட்டு நெருப்புக்குத் தமது மேனிகளைத் தின்னக் கொடுத்த கழகக் கண்மணிகள் முப்பது பேருக்கு மேற்பட்டோர் உயிர்கொடுத்து வளர்த்த இந்த இயக்கத்தை அழிக்க - இந்தத் தியாக தீபத்தை அணைக்கத்தான் வரிந்து கட்டினர் வஞ்ச நெஞ்சினர் - அணிவகுத்தனர் ஆதிக்க புரியினர்!

ஆம்! ஒடுக்கப்பட்ட மக்களின் ஒரே பெருங்காவல் அரணை உடைத்தெறியத் தொடை தட்டி, தோள் உயர்த்தியவர்களின் தொப்பையைக் கிழித்துப் போட்டு வைரம் பாய்ந்த நெஞ்சினன் நீ என்பதை இந்த வையம் அறிய விளங்க வைத்து விட்டாய்!

இருநூறுக்கும் மேற்பட்டோர் செயற்குழு கூடும் இடத்துக்குச் செல்கின்றனர் - இருநூறும் இரு கூறாகத்தான் வெளிவரும் என பகற்கனவு கண்ட நரிகளைப் பல கூறாக்கிப் போட்ட வரலாற்றை - என் தம்பிமார்கள்! ஆம், இந்த இயக்கத்தின் தளகர்த்தர்கள் - இதோ உருவாக்கிக் காட்டிவிட்டார்கள்.

இதை எதிர்பார்க்காமல், விதையொன்று போடச் சுரையொன்று முளைத்ததே என விழிகள் சோர - முகங்கள் வாட - மொழிகள் குழற - வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு புலம்புகிறார்கள். பொல்லாங்கு சொல்லிப் பொய்யாகவே கரைந்துவிட்ட புனிதர்கள்!

வலை வீசப்பட்டது - உண்மை! தொடர்ந்து வீசப்படும் அதுவும் உண்மை! ஆனால்,

பகுத்தறிவு பரப்பிட,
பாவப்பட்ட மக்களைக் கைதூக்கிவிட,
மொழி காக்க,
இனம் காக்க,

உலகில் வாழும் தமிழர்தம்
உரிமைக்குக் குரல் கொடுக்க,
மக்களாட்சியின் மாண்பினை
மறந்தோர்க்குப் பாடம் புகட்ட,
மக்கள் மத்தியில் இருந்து,
மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

என அணி அணியாய்ப் பணிபுரிய,

பெரியார் காட்டிய வழியில் - அண்ணா வகுத்த நெறியில், பயணம் நடத்தும் இந்தப்படை வீரர்களை, படையில் பல்வேறு பிரிவுத் தளபதிகளை அந்த வலை எதுவும் செய்யாது! அறுபடும் - மிதிபடும் - அணுஅணுவாகக் கிழிபடும் - என்பதை ஜூலை மூன்றாம் நாளைய செயற்குழு முரசறைந்து பிரகடனப்படுத்தியிருக்கிறது என்றால், உடன்பிறப்பே - உன் வியர்வைக்கு, உன் தியாகத்திற்கு, உன் உழைப்புக்குக் கிடைத்த வெற்றியிது!

தனக்கு வெற்றி கைதவறிப்போய் விட்டதே என மயங்கி நிற்கும் மாற்றார், இன்றல்ல, இனி என்றுமே தமது கைவரிசையைக் காட்டாமலிருக்க என் கண்ணின் மணியே - கடமையின் திருவுருவே - கட்டுப்பாட்டின் வடிவமே - கண்ணியத்தின் காவல் அரணே! என்றென்றும் எச்சரிக்கையாக இருந்திடுக! இது உன் அண்ணனின் ஆணையல்ல - பாசமுள்ள இதயத்திலிருந்து வெளிப்படும் பரிவுமிக்க வேண்டுகோள்!

அன்புள்ள,

மு. க.

06-07-1993

2032. பாவம்! பாலில் விழும் ஈயாக மாறுகிறார்!

உடன்பிறப்பே,

எந்தத் திருச்சியிலே தம்பீ வா! தலைமையேற்க வா! உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம், வா! என்று இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் அண்ணா அவர்கள் அழைத்து தி.மு.கழகத்தின் பொதுச் செயலாளரை மாநாட்டுக்குத் தலைமையேற்றிட வழிமொழிந்தாரோ, அந்தப் பொதுச்செயலாளர் அதே திருச்சியில் ஆயிரம் பேருக்கும் குறைவாகக் கூடியிருந்த வெல்லமண்டிக் கூட்டத்தில் நின்று கொண்டு தி.மு.க. முடிந்து போன கதை என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார் இரண்டு நாட்களுக்கு முன்பு!

எந்தத் திருச்சி மாநாட்டையொட்டி, தம்பிக்கு எழுதிய கடிதத்தில் அன்று தலையாலங்கானத்து நெடுஞ்செழியன் - இன்று இந்த நெடுஞ்செழியன் என்று குறிப்பிட்டு அண்ணா அவர்கள் அகமகிழ்ந்தாரோ, அந்த நெடுஞ்செழியன் தான்; அதே திருச்சியில் மேடை போட்டு அண்ணா உருவாக்கிய தி.மு.கழகத்தை முடிந்துபோன கதை என்று மிக அலட்சியமாகக் கேலி செய்துள்ளார். நாவலர் அவர்கள் மேடையேறி விட்டால், எந்தக் கட்சியினாலும் அல்லது எந்தக்கட்சித் தலைவராயினும் எடுத்தெறிந்து பேசுவதும், அவருக்கேயுரிய நீட்டி முழக்கும் பாணியில் ஏகடியம் செய்வதும், சில நேரங்களில் நாராச நடைப்பேச்சாளராக மாறிடுவதும் அவரது பேச்சுகளைத் தொடர்ந்து கேட்டோர் மறந்திட இயலாது.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் புதுக்கட்சி தொடங்கி நடத்தியபோது, கழக அமைச்சரவையில் இருந்த நாவலர் அவர்கள், வீக்லி என்ற ஆங்கில ஏடு ஒன்றில் வெளி வந்த எம்.ஜி.ஆருடன் நடித்த கதாநாயகிகளின் படத்தொகுப்பைக் கையிலே வைத்துக் கொண்டு, அதைப் பொதுமக்களுக்கும் காட்டி, ஒலி பெருக்கியின் முன்னால் இருந்தவாறு வழங்கிய விரசமிகு விளக்கங்கள்தான்

எத்தனை வகை! அதில் அவருக்குத்தான் எவ்வளவு சுவை! 1976-ல் ஆட்சி கலையும் வரையில் கழகத்தில் இருந்து, பதவித்தேனின் கடைசிச் சொட்டு வரையில் ருசித்து மகிழ்ந்து - மக்கள் தி.மு.க. எனும் புதுக்கட்சி கண்டாரே! அப்போது நமக்கு அர்ச்சனை! நாலாந்தர நடையில்! நன்றியுணர்வின் எல்லையில் நின்று!

பின்னர் மக்கள் தி.மு.க. பேரணியாகவில்லை என்றதும், எந்த எம்.ஜி.ஆர் அவர்களைக் கழகத்திலிருந்து நீக்கி அறிக்கை விட்டாரோ, அதே எம்.ஜி.ஆர். அவர்களிடம் சென்று, வளைந்து - வணங்கி - எப்படியோ அந்தக் கட்சியிலும் ஒரு மந்திரிப் பதவி!

மீண்டும் நம்மீது வசைமாரி! அதுவும் புழுதி மாரியாக! மீண்டும், மீண்டும், நன்றி தெரிவித்த மாண்பு! எம்.ஜி.ஆர். மறைவுக்குப்பின்னர் ஜெயலலிதாவின் ஆதரவுடன் முதல்வராகலாம் என்று நப்பாசை! அதற்காக எம்.ஜி.ஆர். அவர்களின் துணைவியார் ஜானகி அம்மையாரைப் பற்றி தனிப்பட்ட முறையில் - தரக்குறைவாக நாவலரின் அறிக்கைகள் நாளேடுகளில்! நாவலரின் நடுங்கா நாக்கழகு உரைகள் மேடைகளில்! எழுதக் கை கூசுகிறது! அதனால் அவற்றை எழுதிடவில்லை!

அதற்குப் பிறகு ஜெயலலிதாவுடன் பகைத்துக் கொண்டு நால்வர் அணியை உருவாக்கிய நாவலர், குழாயடிப் பெண்களைவிடக் கேவலமானவர் ஜெயலலிதா என்று ஊருக்கு ஊர் விமர்சனம் செய்த செய்தி, இன்றைக்கும் பழைய ஏடுகளில் ஆதாரங்களாக ஜொலித்துக் கொண்டுதானிருக்கின்றன! பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ஜெயலலிதாவும் - நாவலரைப் பார்த்து உதிர்ந்த ரோமம்! தெருநாய்! எனும் பட்டங்களை வழங்கிப் பரவசமுற்றார்.

இப்படி அரசியல் வீதிகளில் லோ லோ என்றலைந்த நாவலர்தான், இன்றைக்கு ஜெயலலிதா அமைச்சரவையில் அடங்கி, ஒடுங்கி, பணிந்து, குனிந்து ஏதோ, பிறவியெடுத்த பயன் பதவியில் இருப்பதுதான் எனும் தனது இலட்சியத்தைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறார். போனால் போகிறார் - நம்மவர் ஆயிற்றே, நமது இயக்கத்தில் இருந்தவராயிற்றே, போன இடத்தில் பதவிக்காக எதையாவது செய்து தொலைத்துவிட்டுப்

போகிறார் எனத் தொலைவிலிருந்து, அந்தக் காலத்தில் பழகிய தோஷத்திற்காக நாம் பொறுத்துக் கொண்டிருந்தால் - சென்ற இடத்தில் சீமாட்டிக்குப் புன்னகையை வரவழைத்து, புண்ணியத்தைப் பெறுவதற்காக நம்மிடமல்லவா சீண்டிப் பார்க்கிறார்!

தி.மு.க. முடிந்துபோன கதையாம் - அடடா! என்னே நாவலரின் அரசியல் தீர்க்க தரிசனம்! நால்வர் அணி வேட்பாளராக மைலாப்பூர் தொகுதியில் நின்று, எழுநூறு வாக்குகள் பெற்று - அதாவது நகைச்சுவை நடிகர் எஸ்.வி. சேகருக்கும் குறைவான வாக்குகளைப் பெற்று - அவ்வளவு ஏன்? அந்தத் தொகுதியில் விழுந்த மொத்தச் செல்லாத வாக்குகளை விடவும் மிகவும் குறைவான வாக்குகளைப் பெற்று - ஜாமீன் தொகையையும் பறிகொடுத்த நாவலர் பெருமான் அவர்கள் நம்மீது பாய்ந்து குதறிட ஜல்லடம் கட்டிப் பார்க்கிறார். சோதனைகள் ஆயிரம் - சூறாவளிகள் பல்லாயிரம் - புயல், பூகம்பங்கள் கோடானு கோடி என எதிர்ப்பட்டாலும், எதற்கும் கலங்காத எஃகு உள்ளத்துடன் இலட்சியப் பயணத்தை ஏற்றிருக்கும் உடன்பிறப்பே! உன்போன்று என் உயிரினுமேலானோர் உருவாக்கிக் காட்டியுள்ள இந்த அணி வகுப்பு, என்ன காரணத்தாலோ நாவலரின் கண்ணுக்குத் தெரியவில்லை! பாவம்! அவர் கண்களை பதவித்திரை மறைத்துக் கொண்டிருக்கிறது!

அதனால்தான் முடியாத தொடர்கதையாக இந்தக் கழகம் பல வரலாற்று அத்தியாயங்களை என்றும்போல், இன்றும் நாளையும், எப்போதும் வழங்கிக் கொண்டேயிருக்கும் என்பதையும் - அந்த வரலாற்றைக் கண்ணீராலோ, செந்நீராலோ எழுதக்கூடிய ஆற்றல், என் உடன்பிறப்புகளுக்கு உண்டு என்பதையும் - அறிந்தும் அறியாதவர் போல திருச்சி வெல்லமண்டிக் கூட்டத்திலே நாவலர் நாத் தடுமாறியிருக்கிறார்!

உடன்பிறப்பே, 1962-ல் அண்ணா தம்பிக்கு எழுதிய மடல்களின் 10வது தொகுப்பை நேற்றிரவுப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் 1.4.62-ல் எழுதப்பட்ட கடிதத்தில் ஒரு உவமை! ஆம், அண்ணா காட்டும் அற்புதமான உவமை! அந்தத் தேதியிட்ட மடலில் எத்தனையோ விஷயங்கள் - நமது மன ஆறுதலுக்காக! எனினும், அந்த உவமையை மட்டும் சொல்லுகிறேன். கேள்!

"நல்ல பாலிலே விழுகிறதே ஈ, இரண்டு சொட்டுகளாவது குடித்து மகிழ்கிறதா? இல்லை! செத்து மிதக்கிறது! பால் கெட்டுச் சாக்கடையில் ஊற்றப்படுகிறது! இதனால் ஈக்கு என்ன லாபம்? பால் சாப்பிட எண்ணியவன் சாப்பிடவில்லை அல்லவா? அதுதான்!"

உடன்பிறப்பே, அதுபோல - தி.மு.க.வின் கதை முடிந்து விட்டது என்பதால் நாவலருக்கு என்ன லாபம்? அவருக்கு லாபம் இல்லாவிடினும், திராவிட இயக்கம் எனும் இந்த நல்ல பால் கெட்டுவிடுமல்லவா? அதனால் இயக்க எதிரிகள் களிக்கின்றனர்! எனவேதான், பாவம் - நாவலர் பாலில் விழும் ஈயாக மாறப்பார்க்கிறார்!

பாலைக் கெடாமல் பாதுகாக்கும் பொறுப்புடைய நாம், ஈ விழாதபடிக்கு பால் கிண்ணத்தை இறுக மூடி வைத்திருப்போம்!

இந்தப்பால், நமது இன உணர்வை ஊட்டி வளர்க்கப் பயன்படும் பால்! நாவலர் போன்றோரின் நச்சு நினைப்புகள் ஈக்களாக மாறி பாலை கெடுத்து விடாமல் பத்திரமாகப் பருகிடத் தருவோம், தமிழ் இனம் வாழ்ந்திட, வளர்ந்திட, வலிமை பெற்றுத் திகழ்ந்திட!

அன்புள்ள,

மு. க.

15-07-1993

2033. என்ன செய்யப் போகிறது மத்திய அரசு?

உடன்பிறப்பே,

காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் கர்நாடக மாநில அரசினாலும், மத்திய காங்கிரஸ் அரசினாலும் தொடர்ந்து அலட்சியப் படுத்தப் பட்டு வருகிறது.

கடந்த ஓரிரு ஆண்டுகளில், வானம் பொய்க்காமல் மழை பொழிந்த காரணத்தால் என்றைக்குமே தமிழ்நாட்டில் ஓடுகிற காவிரியை கர்நாடக மாநிலத்துக்கான ஒரு வடிகால் போலவே அந்த அரசு கருதி, வேறு வழியில்லாமல் மேட்டூருக்கு தண்ணீரை அனுப்பித் தீர வேண்டிய நிலையில் தமிழ்நாட்டு விவசாயிகள் ஓரளவு தப்பிப் பிழைத்தார்கள்.

ஆனால் இந்த ஆண்டு, நிலைமை மோசமாகிக்கொண்டு வருகிறது. இப்போது மேட்டூரில் உள்ள தண்ணீரின் அளவு அறுபது அடிதான் - அணைக்கு வரத்து அளவும் பத்தாயிர கனஅடிதான்!

இது இருபது நாள் மட்டுமே விவசாயத்திற்கு உதவும் என்று, காவிரி நதி தீரத்துத் தமிழ் நாட்டு விவசாயிகள் கைபிசைந்து, கண்கலங்கி நிற்கிறார்கள்.

1892 ஆம் ஆண்டு தொடங்கி, காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைக்காக இரு மாநில அரசுகளுக்கும் கடிதப் போக்குவரத்தும் - அதற்குப்பிறகு கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளில் இருபத்தேழு முறை இரு மாநில முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர் முன்னிலையில் பேச்சு வார்த்தைகளும் நடைபெற்று, எந்த ஒரு நல்ல முடிவும் காண முடியாத நிலையில்தான் தமிழக அரசு ஏற்கெனவே பல ஆண்டுகளாக வலியுறுத்தி வந்த நடுவர் மன்றம் - 1989-ல் தி.மு.க. ஆட்சியில் தொடர்ந்து வலியுறுத்தப்பெற்று, தஞ்சை விவசாயிகள் தொடர்ந்த வழக்கினை யொட்டி, தி.மு.க. அரசும் - தேசிய முன்னணி அரசும், முறையே

மாநிலத்திலும் மத்தியிலும் நடைபெற்றபோது நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

தமிழக விவசாயிகளுக்கு அச்செய்தி நறுந் தேனாக இனித்தது. ஆனால் அமைந்த நடுவர் மன்றம், காவிரி நீரை தமிழகத்திற்கு இடைக்கால நிவாரணமாக அளிப்பது பற்றிய உத்தரவிடும் அதிகாரம் தனக்கில்லை என்று கைவிரித்தபோது, மீண்டும் விவசாயிகளை வேதனை கௌவிக்கொண்டது. ஆனால் அந்த விசாரம் நீடிக்காமல், தி.மு.க. ஆட்சியில் உச்சநீதிமன்றத்தில் வாதாடி, நடுவர்மன்றத்துக்கு இடைக்கால நிவாரணம் அளிக்கும் அதிகாரம் உண்டு என்று தீர்ப்பும் பெறப்பட்டது.

அதன்பிறகு நடுவர் மன்றம், பிரச்சினையைத் தீர ஆராய்ந்து, இடைக்கால நிவாரணமாகக் கர்நாடகம், தமிழகத்துக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் தரவேண்டுமென்று உத்தரவிட்டது.

இப்போதுள்ள பிரச்சினையே அந்த 205 டி.எம்.சி. தண்ணீர் என்ற நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவைக் கர்நாடக அரசு ஏற்றுக்கொண்டு அமல்படுத்த மத்தியிலே உள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தான்.

இடைக்கால ஆணையில் காணப்படும் 205 டி.எம்.சி. என்ற அந்த அளவே, தமிழகத்துக்குப் போதுமானதல்ல! ஆனால் அதையும் தருவதற்குக் கர்நாடகம் தயாராக இல்லை என்பதுதான் வேதனை!

இந்த வேதனையைப் போக்கி, தமிழக விவசாயிகளின் உரிமையை நிலைநாட்டி, தமிழ்நாடு பாலைவனமாக ஆகிவிடாமல் காத்திட வேண்டிய பொறுப்பிலிருந்து மத்திய அரசு நழுவி, நழுவிப்போவது ஏன்?

மாநிலத்தில் உள்ள அ.தி.மு.க. அரசும், இதில் வெற்றி காண ஜெயலலிதாவினால் தான் முடியும் என்று மந்திரிகளைவிட்டு எதிர்க்கட்சிகளிடம் மார்தட்டிச் சவால்விட்டுக் கொண்டிருக்கிறதே தவிர, அதனை விடுத்து தனது கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து செயல்பட்டு, தமிழக விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்திட முன் வரவேண்டாமா?

இதற்கிடையே தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் நண்பர் வாழப்பாடியார் அவர்கள் இம்மாதம் 21-ந் தேதி பிரதமரைச் சந்திப்பதற்கு நாள் குறித்து, தன்னுடன் தமிழக நாடாளுமன்ற

உறுப்பினர்கள் அனைவரும் வரவேண்டுமென அறிக்கை விடுத்துள்ளார். இன்று கடிதமும் அனுப்பியுள்ளார். இது நல்ல முயற்சிதான். ஆனால் முறையாக எடுக்கப்பட்ட முயற்சி அல்ல. மற்ற கட்சிகளிடமும் தலைவர்களிடமும் கலந்து பேசி, விவாதித்து அதற்குப்பிறகு, பிரதமரைச் சந்திக்க நாளும் நேரமும் குறித்திருந்தால் அதைப்பற்றி சிந்தித்துச் செயல்பட்டிருக்க முடியும்.

கடந்த காலங்களில் அரசின் சார்பில் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்போது எல்லாக் கட்சிகளையும் அழைத்துப்பேசி பிரதமரைச் சந்திக்க முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவைத் தமிழகத்தில் ஏற்றுக்கொண்டு, டெல்லி விமான நிலையம் சென்றவுடன் தனி முடிவு எடுத்தவர்கள் யார் யார் என்பதெல்லாம் பழைய செய்திகள்! அதனை இப்போது பெரிதுபடுத்த விரும்பவில்லை!

பிரதமரைப் போய் சந்தித்துதான் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை அமல் படுத்துங்கள் என்று சொல்ல வேண்டுமா? -

தமிழகத்து விவசாயிகளிடம் இன்று எழுந்துள்ள குமுறலும், கொந்தளிப்பும் பெரியதோர் போராட்டமாக வெடித்தால், அந்த விவசாயிகளின் பக்கம் தமிழகத்தில் உள்ள அரசியல், சமுதாய இயக்கங்கள் அனைத்தும் அணிவகுத்தால், பிரதமரே தமிழ்நாட்டுக்கு ஓடிவந்து, பிரச்சினையை முடித்து வைக்க வேண்டிய சூழல் உருவாகியே தீரும்.

அந்தப் போராட்டத்திற்கான அறிகுறிகள், கொடியேற்றங்கள், முரசு முழக்கங்கள் காவிரி நதி தீரத்தில் - சோழ மண்டலத்தில் ஆரம்பமாகி விட்டன.

என்ன செய்யப்போகிறது மத்திய அரசு? என்பதே இப்போதுள்ள கேள்வி!

அன்புள்ள,

மு. க.

18-07-1993

2034. நடந்து முடிந்ததம்மா!
நகைச்சுவை நாடகம்!

“அதிர்வேட்டுகள் ஆயிரம் முழங்கிட, முழங்கிட - அட
அணிவகுப்புகள் முரசறைந்து நடந்திட, நடந்திட

வரவேற்பு வளைவுகள் முதுகொடிந்த கூனன்போல் - நகரின்
வழியெங்கும் வணக்கமும் வாழ்த்தும் கூறிட, கூறிட

கொடிகள், தோரணங்கள் முகில்களை மறைத்து - மேலே
குடை பிடிப்பது போல் மெல்ல அசைந்திட, அசைந்திட

ஒன்பது யானைகள் மாலைகள் தூக்கி நின்றிட,
நின்றிட - பாகன்
உத்தரவை ஏற்றுக் கழுத்தில் அணிந்திட, அணிந்திட

புதிய மண்டபம் மேலும் பல பொலிவுகள் கண்டிட,
கண்டிட - விண்
மதியொத்த ஒளிவெள்ளம் எங்கணும் பரவிட, பரவிட

வாலிபர்க்கென தயாரித்த உரையை ராணி படித்திட,
படித்திட - அங்கு
வந்திருந்த கூட்டமோ விழுந்து விழுந்து
சிரித்திட, சிரித்திட

இளைஞர்காள்! இளைய தலைமுறையின் ஈட்டிகாள்!
இன்றே நீவிர் சூளுரைத்துப் புறப்படுவீர்!
வாழ்க்கை எனும் வசந்தத்தை அனுபவிப்பீர் - உம்
வாலிபத்தை நாட்டுப் பணிக்கும் சிறிது அர்ப்பணிப்பீர்!

இக்கட்டுரையைக் கேட்டவுடன் மண்டபம் அதிர்ந்திட,
அதிர்ந்திட - பெரும்

கெக்கலியும் கேலியும் செய்து கூட்டம்;
எழுந்திட, எழுந்திட

அதிர்ந்து போன ராணியார் என்னவென்று
கேட்டிட, கேட்டிட - ஆங்கொருவர்
அம்மணீ; தாங்கள் படித்த உரை தவறு என
நவின்றிட, நவின்றிட - ராணியோ,

ஏன் என்றும் எப்படி என்றும் சீறி வினவிட,
வினவிட - அவரோ
மான் மருண்டாற்போல் அஞ்சி நடுங்கிட, நடுங்கிட

வருந்துகிறேன் தாயே! தங்கள் உரையோ
வாலிபர்க்கு வாழ்த்துரைக்கத் தயாரித்தது!
வரச்சொல்லி தர்பாருக்கு வந்திருப்போரோ;
வயதேறி நரைவிழுந்த கூட்டத்தார்!

அவரை நோக்கி
இளைஞர் ஏறுகளே! இந்திரஜித்துக்களே!
என்று நீங்கள் அழைத்துரையாற்றியதாலே
ஏளனமும் ஏகடியமும் மிஞ்சியது - இதில்
எவர்க்கும் சிரிப்புத்தானே வரும் தாயே!

எனப் பதிலுரைத்த பிரமுகரும் நழுவிட, நழுவிட - பாவம்
சினங்கொண்ட சீமாட்டி சோகத்தைத் தழுவிட, தழுவிட
நடந்து முடிந்ததம்மா - ஒரு
நகைச்சுவை நாடகம்!

அன்புள்ள,

மு. க.

19-07-1993

2035. தவம் கலைந்தது!
வீரம் கரைந்தது! ஓரங்க நாடகம்

காட்சி - 1

நாடக அரங்கின் முன்பகுதியில் தொங்கிக் கொண்டிருக்கும் வெண்திரை மெல்ல அசைந்தாடுகிறது. நாடகம் தொடங்கப் போகிறது என அறிவிக்க மணியோசை எழுகிறது. அரங்கத்தின் விளக்குகள் அணைக்கப்படுகின்றன. வெண்திரையின் பின்னாலிருந்து திரையில் வீசும் வெளிச்சத்தின் உதவியோடு திரையில் இரண்டு நிழல் உருவங்கள், ஓர் உருவம் உயரமாக! மற்றோர் உருவம் சிறிது குள்ளமாக! உயரமான உருவம் ஜடா முடிகளுடன் காட்சி தருகிறது. குள்ளமான உருவம் மொட்டைத் தலையுடன் காட்டப்படுகிறது. அந்த உருவங்கள் பேசுகின்றன.

உயர்ந்த உருவம் :-

சிஷ்யா! வேடப் பொருத்தம் எப்படி இருக்கிறது எனக்கு?

குள்ள உருவம் :-

சுவாமீ! வாரிவிட்ட கிராப்புத் தலையுடனும், வெண்பட்டுச் சட்டையுடனும், பளபளக்கும் அங்க வஸ்திரத்துடனும், எந்நேரமும் கிங் ஆப்தி கிங் சிகரெட் புகையும் வாயுடனும் காட்சியளிக்கும் தாங்களா திடீரென்று இப்படி மாறிவிட்டீர்கள்! என்று எனக்கே அதிசயமாக இருக்கிறது. சுவாமீ! தாங்கள் இந்த ஜடாமுடியுடனும் காவி அங்கியுடனும், தண்டு கமண்டலத்துடனும் தோன்றி, என்னையும் தலையை மொட்டையடிக்கச் செய்து, ருத்ராட்ச மாலையையும் மண்டையைச் சுற்றி அணிவித்து விட்டீர்கள் - இந்த விளையாட்டெல்லாம் எதற்கென்று எனக்குப் புரியவில்லையே சுவாமீ!

உயர்ந்த உருவம் :-

சீடா! உன் தலையை மட்டுமல்ல! நான் எத்தனை பேர் தலையை மொட்டை அடித்திருக்கிறேன் என்பது நீ அறியாததா அப்பனே!

குள்ள உருவம் :-

அறிவேன் ஆண்டவனே! இருப்பினும் இப்போது என் தலையை மொட்டையடித்தது போல், இனியும் எத்தனை பேர் தலையை மொட்டையடிக்க, இந்தத் திருக்கோலம் பூண்டு திருவிளையாடலில் இறங்கியிருக்கிறீர்கள் என்பதை அடியேன் அறிந்து கொள்ளலாமா?

உயர்ந்த உருவம் :-

அய்ந்து கோடி மக்களில் இன்னும் பாதிக்கு மேற்பட்டவர்களை மொட்டையடிக்க முடியாததால், இதுவரை நாம் ஏற்கெனவே மொட்டையடித்தவர்களின் தலையையே திரும்பத் திரும்ப மொட்டையடிக்க வேண்டியிருக்கிறது. மொத்தமாக அய்ந்து கோடிப்பேரும் மொட்டையடிக்கிற காட்சியை நான் காணவேண்டும்.

குள்ள உருவம் :-

அதற்கு என்ன சுவாமி செய்ய வேண்டும்?

உயர்ந்த உருவம் :-

தவம்! தவமடா தவம்!

குள்ள உருவம் :-

தவமா? அதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்!

உயர்ந்த உருவம் :-

ஆச்சரியப்படாதே! நம்பவும் மறுக்காதே! நாம் செய்யப் போகிற தவம், பழங்கால தவசிகள் செய்த தவங்களைவிட மேலானது - உயர்ந்தது! அதாவது இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தவம்! சிஷ்யா! உன் காதை என் வாயருகே கொண்டு வா! ரகசியம் சொல்லுகிறேன் கேள்!

சிஷ்யனின் காதில் குருநாதர் ரகசியம் கூறுகிறார் - நாடக அரங்கிலும், பார்வையாளர் அரங்கிலும் இருள் சூழ்கிறது, ஒரு வெடிச்சத்தத்துடன் வெண்திரை விலகுகிறது. மீண்டும் அரங்கிலும் - பார்வையாளர் மத்தியிலும் ஒளிபரவுகிறது

தண்டு கமண்டலமுடன், தாடி மீசையுடன், தஞ்சைக் கோபுரம் போல் கூம்பி உயர்ந்த ஜடா முடியுடன் ஜகப்புரட்டன் எனும்

அந்த ஊர்த் தலைவர் அரகர மகாதேவா! நமப் பார்வதி பதே! என ஓங்காரமாக ஒலித்திடுகிறார்.

அவரது முழக்கம் கேட்டு, அதிர்ச்சியுற்ற ஊர் மக்கள் அங்கே வந்து அவரைச் சூழ்ந்து கொள்கிறார்கள்...

ஊரார் :-

தலைவரே! இது என்ன கோலம்?

ஜகப்புரட்டன் வாய் திறக்காமல், தன்னருகே நிற்கும் சிஷ்யனைக் கை காட்டுகிறார்.

சிஷ்யன் :-

தலைவர் பேச மாட்டார்! அவர் திடீரென தவக் கோலம் பூண்டு விட்டார் - விசுவாமித்திர முனிவனையே வெற்றி கொள்கிற தவம்! வசிஷ்டரை வீழ்த்தி வாகை சூடுகிற தவம்! இனி அவர் உதடுகள் கைலயங்கரியிலே இருக்கும் காடுடைய சுடலை சாம்பலைப் பூசிய பரமசிவனின் பெயரையும், பக்கத்திலே அமர்ந்து பாம்புகளின் வளைவு நெளிவுகளை ரசித்துக் கொண்டிருக்கும் பார்வதி தேவியின் பெயரையும் மட்டுமே உச்சரிக்கும். இன்னும் சில விநாடிகளில் விழிகளை மூடுவார், திறக்க மாட்டார். உதடுகள் அசையா! நாக்கும் அவ்வாறே! இனி உணவுமில்லை! உரையுமில்லை!

ஊரார் :-

இப்படிப்பட்ட கடுந்தவம் எத்தனை நாளைக்கு? எதற்காக?

சிஷ்யன் :-

கடுந்தவத்துக்கு காலவறையறையே கிடையாது! எதற்காக என்று கேட்கிறீர்களே - எல்லாம் உங்களுக்காகத்தான்! இதோ எதிரில் உள்ள கடல் முழுதும் வற்ற வேண்டும்! அப்படி வற்றிவிட்டால் கடல் மீன்கள் எல்லாம் கருவாடாக ஆகிவிடும் - அதை இந்த ஊராராகிய நீங்கள் ஆசை தீருமளவுக்கு எப்போதும் சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம்.

ஊராரில் ஒரு குறும்பன் :-

ஓகோ! கடல்வற்றிக் கருவாடு தின்னலாமென்று குடல்வற்றிச் செத்ததாம் கொக்கு என்கிற கதையாக இருக்கிறதே! ஏனய்யா, சிஷ்யரே! நமது தலைவர் ஜகப்புரட்டரிடம்தான் மீன்பிடி படகு, வலைகள் எல்லாம் இருக்கின்றனவே. யந்திரப் படகு வேறு

உண்டு. இவைகளைப் பயன்படுத்தி கடலில் மீன்பிடித்து ஊருக்கு வழங்கலாமே... அதை விட்டுவிட்டு...

சிஷ்யன் :-

வாயை மூடுமய்யா வக்கிரகம்!

குறும்பன் :-

கோபிக்காதே அப்பனே! கடலும் வற்றக்கூடாது. கடற்கரையில் உள்ள நம்மைப் போன்ற குப்பங்களில் வாழ்கிற எல்லோருக்கும் பிழைப்புக்கும், உணவுக்கும் மீன் கிடைக்க வேண்டும் - அதற்கு வழி என்னவென்று பார்ப்பதை விடுத்து...

சிஷ்யன் :-

குறும்புத்தனமா மட்டுமில்லே, குருட்டுத்தனமாகவும் பேசக்கூடாது! எல்லா குப்பத்துக்கும்தான் கடல் சொந்தம் - ஆனா பக்கத்து குப்பத்துக்காரன், நம்ம குப்பத்துக்காரங்க மீன் பிடிக்கப் போனா ரகளை பண்றான். அமளி நடத்துறான்.

குறும்பன் :-

அதைச் சமாளித்து இந்தக் குப்பத்து மக்களின் உரிமையை நிலைநாட்ட முடியாத ஜகப்புரட்டருக்குத் தலைவர் பதவி ஏன்? இப்போது தலையிலே ஜடா முடிதான் ஏன்? எங்களையெல்லாம் விட்டுவிட்டு இவர் மட்டும் என்ன தவம் செய்து என்ன வரம் வாங்கிக் கிழிக்கப் போகிறார்?

ஜகப்புரட்டன் :-

அரகர மகாதேவா! நமப் பார்வதி பதே!

என்று கூறிக்கொண்டே ஒரு காகிதத்தில் நீளமாக எழுதி, சீடனின் கையில் கொடுக்கிறார்.

சிஷ்யன் :-

படித்தல் ஊர் மக்களே! என்னை நம்புங்கள். இத்தனை காலம் உங்களைப் பரிபாலித்து உங்கள் வாழ்க்கையை மேம்படுத்தியது போல் இனியும் பரிபாலிப்பேன்.

கூட்டத்தில் முணுமுணுப்பு

இப்போது நாம் பூண்டுள்ள இந்தத் தவக் கோலம், என் கண் முன்னே சாட்சாத் எம்பெருமான் ரிடப வாகன ரூடராய்

பார்வதி சமேதராகக் காட்சி யளித்து நான் கோரும் வரத்தைத் தர வேண்டும் என்பதற்காகவே! கடல் முழுதும் வற்றிக் காய்ந்த மீன்களைக் கருவாடாக்கித் தின்ன வேண்டுமென்பது நமது ஆசையல்ல! நமது குப்பத்து மக்களின் மீன்பிடி உரிமையை பக்கத்துக் குப்பத்தார் பறித்துக் கொள்வதைத் தடுப்பதற்காக - அவர்களை எதிர்ப்பதற்காக- பரமசிவனிடம் வரம் கேட்டு, அவரது சூலாயுதத்தையும் நெற்றிக் கண்ணையும் கடனாகப் பெறப்போகிறேன் - கடலே வற்றிப் போக வேண்டுமென்று நமது சீடன் சொன்னது போலச் சொன்னால்தான், கடலில் பள்ளி கொண்டிருக்கும் மகா விஷ்ணு பயந்து நடுங்கி பரமசிவனிடம் முறையிட ஓடுவார்.

பரமசிவன் மகாவிஷ்ணுவுக்கு அபயம் கொடுத்து அவரிடமுள்ள சங்கு சக்கரத்தையும் வாங்கி இரவலாக எனக்குக் கொடுப்பார். எனவே என் தவத்துக்கு இடையூறு இல்லாமல் எல்லோரும் ஆதரவு தாரீர்!

கடிதத்தை படித்ததும் ஊர்மக்கள் கையொலி செய்து ஜகப்புரட்ட சுவாமிகள் வாழ்க! என கோஷமிடுகிறார்கள். குறும்பாகப் பேசியவன் மட்டும் அந்தக் கூட்டத்தை விட்டுப் போய் விடுகிறான்.

காட்சி - 2 :-

ஒரு மேடையில் ஜகப்புரட்டுச் சாமியார் கண்களை மூடிக் கொண்டு, மௌனமாக தியானத்தில் ஆழ்ந்திருக்கிறார். ஊர் மக்கள் அவரைச் சூழ அமர்ந்திருக்கிறார்கள். நாட்காட்டியின் தாள்கள் ஒன்று இரண்டு எனப் புரண்டு கொண்டேயிருக்கின்றன. ஊரார் சிலர் அவரது காலைத் தொட்டு வணங்குகிறார்கள். சிலர் சூடம் கொளுத்திக் காட்டுகிறார்கள். சிலர் கரன்சி நோட்டுகளை காலடியில் குவிக்கிறார்கள். சிலர் பூக்களைக் கொண்டு அர்ச்சிக்கிறார்கள்.

ஊர் **மக்களில் ஒரு பெண்மணி :-**

சுவாமி சாப்பிட்டுக்கூட பத்து நாள் ஆகிறதே! எத்தனை நாள் இப்படிப் பட்டினி கிடக்கும்? அய்யோ, பாவமே!

சிஷ்யன் :-

ஜகப்புரட்டரிடம் காதில் ரகசியமாக சுவாமி; இந்த ஏமாளிகள் இரவில் தூங்கும்போதும், தங்களுக்கு இயற்கை உபாதை என்று

சொல்லி புதர்களுக்குப் பக்கத்தில் செல்லும்போதும், தங்களுக்கு நான் உணவு கொடுத்ததை இவர்கள் பார்க்கவில்லை போலும்! பார்க்காத வரையில் க்ஷேமம்!

ஜகப்புரட்ட சாமியார், சீடனைப் பார்த்து உஸ்! என எச்சரித்து விட்டு, அவனுக்கு மட்டும் ஒருதாளில் ஏதோ எழுதிக் காட்டுகிறார்.

சிஷ்யன் :-

தன்னை மறந்து உரக்க இடையிடையே ரகசியமாக சாப்பிட்டாலும், பசி அடங்கவில்லை. அதிகமாகி விட்டது.

என்று படித்து விடுகிறான்

ஊர் மக்கள் கெக்கெலி கொட்டிச் சிரிக்கிறார்கள். ஜகப்புரட்டர், சிஷ்யரைத் தலையில் ஓங்கி அடித்துவிட்டு - அரகர மகாதேவா! என்று கத்துகிறார். அப்போது கழுத்தில் பாம்பு நெளிய, கையில் சூலாயுதம், இடுப்பில் புலித்தோல் ஆடை, மேனியில் சாம்பல் இவற்றுடன் சிவபெருமான் அங்கே தோன்றுகிறார்.

ஜகப்புரட்டன் :-

வாய் திறந்து சிவமே! வந்தீரா? வரம் தாரீர்! தாரீர்!

சிவபெருமான் :-

தந்தேன் வரம்! உனது தவத்தைக் களைந்திடு!

ஜகப்புரட்டன் :-

சூலாயுதம், சங்கு சக்கரம், நெற்றிக் கண்...

சிவபெருமான் :-

எல்லாமே தரப்படும் பக்தா! தவத்தைக் களை!

ஜகப்புரட்டன் :- நன்றி சிவனே; நன்றி! இதோ என் தவத்தைக் களைக்கிறேன்!

என்றவாறு ஜகப்புரட்டன் ஜடா முடிகளையும், காவி உடைகளையும் களைகிறான்.

காட்சி - 3 :-

திரை விழுகிறது - விழுந்த திரைக்குமுன்னே சிவபெருமான் வந்து நின்று, கலகலவெனப் பெருஞ் சிரிப்பு சிரிக்கிறார் - திடீரென அவர் தனது வேடத்தைக் கலைக்கிறார். கூட்டத்திலிருந்து

வெளியேறிய குறும்பன்தான் அந்த வேடத்தில் வந்தவன் என்பதை அறிந்து, அந்த அரங்கமே சிரிப்பு அலைகளால் அதிர்கிறது.

குறும்பன் :-

அரங்கில் உள்ள பார்வையாளர்களை நோக்கி மகா ஜனங்களே! ஜகப்புரட்டரிடம் மேலும் குப்பத்து மக்கள் ஏமாறாமல் இருக்க நான்தான் சிவனாக வந்து புரட்டரின் வேடத்தைக் கலைத்து மக்களை விழிப்புறச் செய்தேன். ஊரை ஏமாற்றும் ஜகப்புரட்டரை நான் ஏமாற்றிவிட்டேன். வருகிறேன்! வணக்கம்!

குறும்பன் மேடையிலிருந்து உள்ளே போனதும், ஜகப்புரட்டனும், சிஷ்யனும் தவத்தில் காணிக்கையாகக் கிடைத்த கரன்சிகளை எண்ணிக்கொண்டே மேடைக்கு வந்து - ஒருவர் முதுகில் ஒருவர் தட்டிக் கொடுத்துக் கொண்டு மீண்டும் அரங்கிற்குள் சென்று விடுகிறார்கள்.

அன்புள்ள,

மு. க.

23-07-1993

2036. மூத்த தலைவர்களின் காலடிகளுக்கு...

உடன்பிறப்பே,

ஜூலை 30-ந் தேதி காலையில் தஞ்சையிலிருந்து தொலைபேசி வாயிலாக ஒரு குரல்! என்னுடன் அவசரமாகப் பேச வேண்டுமென்று! யார் என்று கேட்டேன். மன்னை அண்ணன் பேச வேண்டுமென்கிறார். அடுத்த முனையிலிருந்து வந்த பதில் இது. அதற்கு ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டேன். காரணம், கடுமையான இதய நோயினால் பாதிக்கப்பட்டு தஞ்சை மருத்துவமனையிலிருந்து சில நாட்களுக்கு முன்புதான் வீடு திரும்பி, தஞ்சையிலேயே ஓய்வு பெற்று வரும் மன்னையின் பெயர் தொலைபேசியில் உச்சரிக்கப்படத் தொடங்கியது ஆடிப் போனேன். அவரே பேசுகிறார் என்றவுடன்தான் ஆறுதலாகப் பெருமூச்சு விட்டேன். எனினும், என் இதயத் துடிப்பு வேகமாகவே அடித்துக் கொண்டிருந்தது. உணர்ச்சி அலைமோதிட மன்னை பேசினார்.

இங்கு தஞ்சை ராமனாதன் செட்டியார் ஹாலில் கழகப் பட்டிமன்றம் ஒன்று நடத்த ஒரு திங்களுக்கு முன்பே உரிமையாளர்களிடம் அனுமதி வாங்கப்பட்டிருக்கிறது. யாரோ இரண்டு மூன்று மந்திரிகள், தஞ்சாவூரில் ஊர்வலம் போகிறார்களாம். அதற்காக ராமனாதன் செட்டியார் ஹாலுக்கு மாத்திரம் 144 தடை போட்டுவிட்டார்கள். அதை மீறுவதாக முடிவு செய்து விட்டேன் என்றார்.

அந்தக் குரல் மெல்லிதாகத்தான் ஒலித்தது. ஆம்! குரலில் வலுவில்லாவிடினும், நெஞ்சின் வலிவை அந்தக் குரல் உணர்த்திடத் தவறவில்லை.

மன்னை! நீங்கள் தடையை மீறிட வேண்டாம். மாவட்டச் செயலாளர் தம்பி கோ.சி.மணியோ அல்லது நகரக் கழக நண்பர்களோ தடையை மீறட்டும். நீங்கள் உடம்பை கவனித்துக் கொள்ளுங்கள்.

என்று எவ்வளவோ கேட்டுக் கொண்டேன். அவர், தலைவர்தான் சொல்லிவிட்டாரே யென்று பின் வாங்கி விடவில்லை.

சிறுபிள்ளையாயிற்றே என்று அலட்சியப்படுத்தாமல், அந்தக் காலத்தில் மன்னார்குடி வட்டாரம் முழுதும் என்னைக் கூட்டத்துக்கு அழைத்து, அவரும் ஒரு தாயைப்போல கூடவே இருந்து கூட்டங்களை நடத்தினாரே! அப்போது எந்த அளவுக்கு நெஞ்சுரமும், கொள்கை உறுதியும், இயக்கத்தினர்பால் வாஞ்சையும் கொண்டு திகழ்ந்தாரோ! அதே மன்னனையைத்தான் இந்தத் தள்ளாத வயதில் - அதுவும் நெஞ்சுவலித் தொல்லையுடன் - போராடும் நிலையிலும் கண்டேன். காண்கிறேன். தெம்பு பெறுகிறேன்!

உடன்பிறப்பே, என்ன வேதனையான வேடிக்கை பார்!

ஜெயலலிதா ஆட்சியில், தஞ்சாவூரில் 144 தடை உத்தரவாம்!

ஆனால் அமைச்சர்கள் நடத்திய உண்ணாவிரத வெற்றிவிழா ஊர்வலத்தின் மீது அந்தத் தடை பாயாதாம்! பதுங்கிவிடுமாம் பூனைபோல! அடங்கிவிடுமாம், பெட்டிப் பாம்பு போல!

அந்த அதிசயமான தடை இராமனாதன் செட்டியார் ஹால் எனப்படும் அந்தச் சிறிய அரங்கத்திற்குள் மட்டும்தான் பேயாட்டம் போடுமாம்! வாலாட்டம் காட்டுமாம்!

அரங்கில் நடைபெறுவதாக இருந்தது பிறந்த நாள் விழாவையொட்டிய பட்டிமன்றம்தான்!

சட்டப்பேரவை முன்னாள் தலைவரும், கழக இலக்கியஅணித் தலைவருமான டாக்டர் தமிழ்க்குடிமகனார் தலைமையில் நடைபெற இருந்த அந்தப் பட்டிமன்றத்தில் - வெடிகுண்டுகள் தயாரிக்கும் முயற்சி எதுவுமில்லை! அந்த வெடிகுண்டுகளை எங்கே, எப்படிப் பயன்படுத்துவது என்ற சதித்திட்டம் எதுவுமில்லை! பெரியார், அண்ணா, புரட்சிக்கவிஞர், கழகம் எனும் வழியில் கொள்கை முரசின் ஓசைதான் கிளம்பும்! தமிழ் முழக்கம்தான் கேட்கும்! அதுவும் ஓர் அரங்கத்திற்குள்ளே!

அதற்குத் தடைவிதித்துவிட்டு, தஞ்சை வீதியிலே அதே தடையுத்தரவை அமைச்சர்களும், அதிகாரிகளும் கால்களில் போட்டு மிதித்து விட்டு ஊர்வலம் போயிருக்கிறார்கள்.

இப்படிச் சட்டமும் ஒழுங்கும் இந்த சர்க்காரில் கெட்டுத் தொலைந்து கிடக்கிறது.

இது அநீதி எனக் குரல் கொடுத்த மன்னையும், மணியும் மற்றும் கழகக் கண்மணிகளும் கைது செய்யப்படுகிறார்கள்.

கைதாவது - சிறை புகுவது - தண்டனை அனுபவிப்பது - இவை கழக வரலாற்றில் புதுமையான நிகழ்வுகள் அல்ல!

ஆனால் என்னை வியப்பில் ஆழ்த்துவதும், எனக்கு நம்பிக்கையூட்டுவதும் - இந்த இயக்கத்தைக் காத்திட உயிர்த் தித்திப்பை எண்ணிடப்போவதில்லை என்று தோள்தட்டி, போர்க்களம் புகுந்தாரே உடல் நலிவு மிகக் கொண்ட என் உயிரினும் மேலான மன்னை! அந்த நிகழ்ச்சிதான்!

காலம் காலமாக, எத்தனையோ காட்டாற்று வெள்ளங்களினால் கரைந்து போகாமல், இந்த இயக்கம் காப்பாற்றப்படுவதற்கு, மன்னை போன்ற மூத்த தலைவர்களின் வைர நெஞ்சங்களன்றோ காரணமாக இருந்து வருகின்றன!

இந்தப் பேரியக்கத்தை வீழ்த்தத்தான், திசை திருப்பிடப் பேராசை கொண்டு திரிகின்றனர் பித்தர்கள்! எத்தர்கள்!

கழகத்தின் முதிர்ந்த தலைவர்களின் போர்க்குணமே இத்தகையது எனக்கண்ட பிறகும், காளையராய் எழுந்து துள்ளும் இளைய தலைமுறையினரின் எழுச்சிக்கு முன்னே, எரிச்சல்காரர்களின் சூழ்ச்சிவலைகள் சுக்கு நூறாக ஆகிவிடாதா?

“அந்த நம்பிக்கை
வயதான காலத்திலும்
தளர்ந்த உடல்நிலையிலும்
தளராத வீரத்துடன்
வைர நெஞ்சின் வாயிலாக
மெய்ப்பிக்கும் மூத்த
தலைவர்களின் காலடிகளுக்கு
என் முத்தங்கள்!

அன்புள்ள,

மு. க.

02-08-1993

2037. தேர்தல் ஆணையமும் - தேவைப்படும் தெளிவும்!

உடன்பிறப்பே,

தேர்தல் ஆணையம் என்பது, சுதந்திரமாகவும் - ஜனநாயக நெறி முறைகளைக் காத்திட வேண்டிய சுத்தமான பளிங்கு உள்ளத்துடனும் இயங்கிட வேண்டிய ஒன்று என்பதில் யாருக்கும் இரு வேறு கருத்து இருக்க முடியாது.ஆனால் திடீரென்று தேர்தல் ஆணையம், சுதந்திரம், ஜனநாயகம் என்று பேசிக்கொண்டு மின்னல் வேகத்தில் அடாவடித்தனமானதும், சிறு பிள்ளைத்தனமானதுமான வேலைகளில் இறங்கியதை எல்லாக் கட்சிகளும் இன்றைக்குக் கண்டிப்பதில் எந்தவொரு குறையும் காண முடியாது.

எல்லா நேரங்களிலும் - எந்தச் சூழலிலும் நீதி, நேர்மை ஜனநாயக மாண்பு ஆகியவற்றைக் காத்திடும் அக்கறையுடன் பேசியவர்களோ, அவ்வாறு செயல்பட்டவர்களோ தொடர்ந்து அவை குறித்துப் பேசினால் அர்த்தமிருக்க முடியும். அதாவது அகிம்சையைப் பற்றிக் காந்தியடிகளும், உயிர்களைக் கொல்லாமை குறித்து இராமலிங்க அடிகளாரும் பேசலாம் - மனிதக்கழுத்துகளையே அறுத்துத்தள்ளி இரத்தம் குடித்து மாமிச மலை வளர்க்கும் கொலைகாரக் கொடியோர் அந்த உன்னத தத்துவங்களைப் பற்றிப்பேச உரிமை கொண்டாட முடியுமா?

இன்றைய தேர்தல் ஆணையத் தலைவர் அவர்களின் பேச்சும், செயலும் அப்படித்தான் இருக்கிறது. வானளாவ மக்களாட்சி மகிமை பற்றி உபதேசிக்கிறார். ஆணையத்துக்குள்ள அதிகாரத்தை அறநெறி வென்றிடவே பயன்படுத்துவதாக ஆர்ப்பரிக்கிறார். ஆனால், கடந்த காலத்தில் சுதந்திரம், ஜனநாயகம், நீதி, நேர்மை எல்லாவற்றையும் இந்தத் தேர்தல் ஆணையம் எத்தனை முறை காற்றிலே பறக்க விட்டிருக்கிறது என்பதை மறந்திட முடியுமா?

இப்போது தான்என்னண? இந்தியா முழுமையும் நடைபெற இருக்கும் இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி தோற்றுவிடக்கூடுமென்றும், அதைத் தவிர்ப்பதற்காகவே சேஷனும், காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து இப்படியொரு நாடகத்தை அரங்கேற்றினர் என்றும் அரசியல் அரங்கில் உள்ள அற்பசொற்ப புத்திசாலிகள்கூட உணர்ந்தே இருக்கின்றனர்.

ராணிப்பேட்டை, பழனி தொகுதிகளில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட பாதுகாப்புப் படை அனுப்புமாறு மத்திய அரசுக்குத் தேர்தல் ஆணையம் கட்டளையிட்டது. மாநில அரசின் முறையீடு அல்லது ஒப்புதல் இல்லாமல் மத்திய பாதுகாப்பு படையை அனுப்புவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று! இதில் தி.மு.கழகம், சந்தர்ப்பத்துக்காக அல்ல - எப்போதுமே தெளிவாக இருக்கிறது. அப்படி அனுப்பக் கூடாது என்று நாம் உறுதியான நிலையெடுப்பதற்கான காரணம், இங்குள்ள ஜெயலலிதா அரசு தனது காவல்துறையை வைத்துக் கொண்டு நேர்மையான தேர்தலை நடத்திவிடும் என்ற நம்பிக்கையால் அல்ல என்பதையும் தெளிவு படுத்திவிடுகிறேன்.

அளவுக்கு மீறிய அராஜகங்களில் ஆளுங்கட்சி ஈடுபட்டு தேர்தல்களை நடத்தினாலோ அல்லது வேறு நிகழ்வுகளில் வன்முறையில் ஈடுபட்டாலோ, அவற்றைக் காவல்துறை வேண்டுமானால் சில காலம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அராஜகத்தை ஆணிவேருடன் பிடுங்கி எறியக்கூடிய மக்கள் சக்தியானது, மகாசமுத்திரத்துப் பிரமாண்ட கொந்தளிப்பாக உருவெடுக்கும், உருவெடுத்தே தீரும். அம்ஃதோர் ஊழி போலக் காட்சியளிக்கும் என்பதை வரலாறு படித்தோர் மறந்துவிட இயலாது!

பழனிக்கும் ராணிப்பேட்டைக்கும் பாதுகாப்புப்படை வருகிறது என்றதும் - இங்குள்ள அமைச்சர் நாவலர் அவர்கள் சுண்டைக்காய் பழனிக்கும், நெல்லிக்காய் ராணிப்பேட்டைக்கும் எதற்காக மத்திய பாதுகாப்புப்படை? என்று பொதுக் கூட்டங்களில் காரசாரமாகக் கேலி செய்தார். பிறகு அதே நாவலர், நாங்கள்தான் மத்திய பாதுகாப்புப்படை வேண்டுமென்று கேட்டு வரவழைத்துள்ளோம் என்றும் வேறொரு கூட்டத்தில் பேசியிருக்கிறார். இது என்ன சூட்சமமோ? அதுதான் புரியவில்லை!

மத்திய பாதுகாப்புப் படையை மாநில அரசே, மத்திய அரசிடம் கேட்டுப் பெற்றிருக்கிறது என்றால், பிறகேன் பாதுகாப்புப் படை வருவதைக் கண்டித்து ஒரு அ.தி.மு.க. தோழர் தீக்குளித்திருக்க வேண்டும் என்ற கேள்வியும், தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சரியாக இருக்கிறதென்று கூறும் ஜெயலலிதா அவர்கள், பிறகு எதற்காக மத்திய பாதுகாப்புப் படையை அனுப்புமாறு கேட்டிருக்க வேண்டும் என்ற கேள்வியும் எழுவது இயற்கையல்லவா? இந்தக் கேள்விகளுக்கு முதல்வரோ நாவலரோ பதில் சொல்ல மாட்டார்கள். பதில் சொல்லவும் முடியாது.

இதற்கிடையே, தேர்தல் ஆணையத்தின் அதிகார வரம்புதான் என்னவென்று அறிந்து கொள்ள, நாடாளுமன்றத்துக்கே அட்டர்னி ஜெனரல் வரவழைக்கப்பட்டார். மாநிலங்களுக்கு பாதுகாப்புப்படையை அனுப்புமாறு மத்திய அரசுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட முடியாது என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டிருக்கிறார். சேஷன் உரிமை கொண்டாடிய வேறு சில அதிகாரங்களுக்கும் இடமில்லையென அட்டர்னி ஜெனரல் தெளிவுப்படுத்தியிருக்கிறார்.

இப்படிச் சில அதிகாரங்கள் இல்லை என்பதற்காக நியாயமான முறையில் நடத்தப்பட வேண்டிய சில செயல்களை, உரிய முறைப்படி அணுகி ஆற்றிடக் கூடாது என்று தேர்தல் ஆணையத்தை நடுநிலையாளர் யாரும் வற்புறுத்தவில்லை. வற்புறுத்தவும் கூடாது. ஆனால் கடந்த காலத்தில், நியாயத்துக்கு அப்பாற்பட்டு காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சியான அ.தி.மு.க. ஆகிய இரண்டின் வெற்றிக்காக இதே தேர்தல் ஆணையம் எத்தனையோ அகடுபகடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

எடுத்துக்காட்டுகளைப் பட்டியல் போட்டுக் காட்டினால், ஏடு கொள்ளாது! எனவே ஒன்றை மட்டும் - உடன்பிறப்பே! நீயும் நானும் நினைவு படுத்திப் பார்த்துக் கொள்வோம்!

1991 பொதுத் தேர்தல் நடந்தபோது ராஜீவ் காந்தியின் கொலைக்கு தி.மு.க.தான் காரணமென்று காங்கிரசாரும், அ.தி.மு.க.வினரும் பொய்ப்பிரச்சாரம் செய்து, தேர்தல் பிரச்சார சுவரொட்டிகளில் என்னையும் வி.பி.சிங் அவர்களையும், என்.டி. இராமராவ் அவர்களையும் துப்பாக்கி ஏந்திய நிலையில்

கொலைகாரர்களைப் போல உருவகப்படுத்தி அந்தச் சுவரொட்டிகளைப் பல்லாயிரக்கணக்கில் பட்டி தொட்டியெல்லாம் ஒட்டினார்களே! அப்படியொரு தவறான முறையில் தேர்தல் பிரச்சாரம் செய்யப்படுவதை இந்தத் தேர்தல் ஆணையத்துக்குப் பலமுறை எடுத்துக்கூறி விண்ணப்பித்தோமே! அப்போது இந்தத் தேர்தல் ஆணையம் எங்கே போயிற்று!

இன்று நீதி நேர்மை என உச்சரித்துக் கொண்டு, அந்த நிழலில் காங்கிரசைக் காப்பாற்ற மத்திய அரசுடன் நிழல் சண்டை நடத்தும் தேர்தல் ஆணையம் 1991 பொதுத் தேர்தலின்போது அ.தி.மு.க. - காங்கிரஸ் பொய்ப்பிரச்சாரத்தை நிறுத்த மத்திய படையை அனுப்பச் சொல்லியிருக்க வேண்டும், நாம் கூறவில்லை. இப்படிப் பிரச்சாரம் செய்வது விதிமுறைகளுக்கு விரோதம் என்று அறிவிப்பாவது அந்த ஆணையத்தினரிடமிருந்து வந்திருக்க வேண்டாமா என்றுதான் கேட்டோம் - கேட்கிறோம்! எதுவும் ஒரு குலுங்கு குலுங்கித்தான் இறுதியில் நிலைப்பட்டு வரும் என்பதற்கேற்ப, இப்போது புறப்பட்டுள்ள தேர்தல் ஆணையத்தின் விவகாரமும் விரைவில் ஒரு நல்ல நிலைக்கு வருமென எதிர்பார்ப்போமாக!

அன்புள்ள,

மு. க.

06-08-1993

2038. தூசு தெரிகிறது!
தூண் தெரியவில்லையே!

உடன்பிறப்பே,

தேர்தல் என்பது ஜனநாயகத்திலே ஓர் இன்றியமையாத கடமை என்பதையும், அது உரிய நேரங்களில் நடைபெற வேண்டுமென்பதையும் திடீரென அ.தி.மு.க.வின் தலைவியார் ஜெயலலிதா உணர்ந்து, பழனி, ராணிப்பேட்டை இடைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதைக் கண்டித்து, அவரது கட்சியின் சார்பாகப் பொதுக்கூட்டங்களை நடத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அவரது கட்சிக்காரர்களைப் பொறுத்த வரையில், அந்த வேண்டுகோளை வேதமாக ஏற்றுக்கொண்டு அமைச்சர்களிலே இருந்து அத்தனை பேச்சாளர்களும் ஊர் ஊருக்கு ஊர்வலங்களும், கண்டனக் கூட்டங்களும் நடத்திடக் கிளம்பிடுவர். ஆனால் அவர்களில் யாராவது ஒருவர், ஜெயலலிதாவின் இந்த அறிக்கை பற்றி சிந்திப்பாரா என்றால் நிச்சயமாகச் சிந்திக்க மாட்டார்.

முதலில் அந்த அம்மையார் தனது கட்சி தேர்தலை முறைப்படி நடத்தியிருக்கிறாரா? 1972-ல் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கிய அந்தக் கட்சிக்கு, இந்த இருபதாண்டு காலத்தில் ஒரே ஒருமுறை மாவட்ட அமைப்புகளின் அளவு வரையில் தேர்தல் அறிவிக்கப்பட்டு, நடந்து - அதிலே பல மாவட்டத் தேர்தல்களின் முடிவு அறிவிக்கப்படாமலே வாக்குப் பெட்டிகள் இராமாவரம் தோட்டத்துக்குக் கொண்டு வரப்பட்டன. வாக்குகள் எண்ணப்படவில்லை - எண்ணிய சில பகுதிகளில் முடிவு வெளியிடப்படவுமில்லை. இத்தகைய ஒரு ஜனநாயக பண்பாட்டை வளர்க்கும் அந்தக் கட்சியில் பொதுக்குழு கூட்டப்படும்பொழுது யார் யாருக்குத் தந்தி மூலம் அழைப்பு அனுப்பப்படுகிறதோ, அப்படி அனுப்பப்பட்டவர்கள்தான் அந்தப் பொதுக்குழுவுக்கு அனுமதிக்கப்படும் உறுப்பினர்கள். அது

அடுத்த பொதுக்குழுவில் மாறவும் கூடும். தந்தியில் இடம் பெறும் பெயர்களைப் பொருத்து!

எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில், பொதுக்குழு உறுப்பினர்கள் தந்திக்காரர்கள் தங்கள் கட்சியின் பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால் அவரது அடியொற்றிக் கட்சி நடத்துவதாகக் கூறிக் கொள்ளும் அம்மையார், பொதுச் செயலாளரைக் கட்சியில் உள்ள லட்சக்கணக்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பார்கள் எனக் கூறி, அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பாணியில் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுச்செயலாளர் என்று நாவலரை விட்டு அறிவிக்கச் சொல்லிப் பொதுச்செயலாளராக ஆகிவிட்டார். பாவம்! அவர்களுக்கு விஷயமே புரியவில்லை. புரிந்தாலும் போட்டியிட்டிருக்க மாட்டார்கள். ஒருவேளை யாராவது ஒரு உறுப்பினர் போட்டியிருந்தால் பலலட்சம் பேர் வாக்களித்திருக்க வேண்டுமல்லவா?

பொதுச்செயலாளர் தேர்தலுக்குப் பிறகு இனிமேல்தான் கட்சியின் பொதுத் தேர்தல், அடிமட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் நடக்கப் போகிறது என்று அ.தி.மு.க. தலைமை அறிவித்துள்ளது.

உடன்பிறப்பே, இவையெல்லாம் அவர்களது கட்சியின் விவகாரம். நாம் இவற்றை விமர்சிப்பது வீண்வேலை - தேவையற்றதும்கூட!

கட்சித் தேர்தல் பக்கமே போகாமல் இத்தனை ஆண்டுக் காலம் வண்டி ஓட்டிக் கொண்டிருக்கிறார்களே என்பதற்காக, அவர்களைப் பாராட்டக் கூடச் செய்யலாம்.

ஆனால், இந்த இடைத் தேர்தல்களில் மட்டும் பழனி, ராணிப்பேட்டை தொகுதிகளில் ஜெயலலிதா இவ்வளவு பரபரப்புக் காட்ட வேண்டிய அவசியமென்ன? தள்ளி வைக்கப்பட்டதைக் கண்டித்துப் போர்க்கோலம் பூண வேண்டிய காரணம் என்ன?

திட்டமிட்டு முடிவு செய்துவிட்டு, திடீரென உணர்ச்சி மேலிட்டு திடுமெனக் குதித்தது போல் உண்ணாநோன்பு எனும் தியாகவேள்வியில் குதித்துவிட்டார் முதலமைச்சர் என்று செய்யப்பட்ட ஆரவார விளம்பரங்களும் - நாலு நாளுக்கு அரைநாள் குறைவாக நடத்தப்பட்ட நாடகமும், பழனி,

இராணிப்பேட்டை வாக்காளர்களைக் கவருவதற்கு எவ்வளவோ பயன்பட்டிருக்குமே! அதைக் கெடுத்துவிட்டாரே இந்த சேஷன் என்ற கோபம் இருக்குமா இருக்காதா? நியாயமான கோபம்தானே!

பத்திரிகைகள் எல்லாம் வரிந்து கட்டிக் கொண்டு, பாரதமே வெடித்துச் சிதறிவிடப் போகிறது என்பதைப் போல அல்லவா படங்களும், செய்திகளும் போட்டன!

காந்தியடிகளின் உண்ணாநோன்பைவிட ஒருபடி மேல் - சங்கரலிங்கனார் - பொட்டி சீராமுலு ஆகியோர் உண்ணாநோன்புகளையே இது புறங்கண்டுவிட்டது என்ற பெருமிதத்துடன் அல்லவா எட்டு பத்திக் கொட்டை எழுத்துச் செய்திகள், ஏடுகளின் முகப்பாக வெளிவந்தன!

காவல்துறை அதிகாரிகள் சிலரது கண்ணசைவின் பொருள் புரிந்து கொண்டு கலைத்துறையினர், தொழில் துறையினர், அரசுத்துறையினர், அரசியல் கட்சியினர் என எத்தனை பேர் அணி வகுத்தனர்!

தோல்விக்குச் சமமான வெற்றி என்பார்களே! அந்த வெற்றியைக்கூடப் பெற முடியாமல் - ஆனால் அதேசமயம், உண்ணாநோன்பு வெற்றி! வெற்றி!! என மாநில முழுதும் பவனிகள்! திருவிழாக்கள்! யார், மக்களா முன்வந்து நடத்தினார்கள்? இல்லை - முறிந்த வாளும், முதுகிலே காயமும் கொண்டவர்கள்தான் நடத்தினார்கள்.

இந்தப் பெயரளவு வெற்றியைப் பெரிதுபடுத்தி, ராணிப்பேட்டையிலும், பழனியிலும் தேர்தல் வெற்றியைப் பெற்றுவிடத் திட்டம் தீட்டியோர் கனவு சிதைந்துவிட்டது. அதனால் தான் கண்டனக் கூட்டமே தவிர, ஆகா! அந்த தொகுதி மக்கள், மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் தவிக்கிறார்களே! என்ற கவலையினாலே இந்தக் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை!

மக்கள் பிரதிநிதிகள் பழனி, இராணிப்பேட்டை, பெருந்துறை ஆகிய தொகுதிகளில் மட்டும்தானா இல்லை! சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகளில் கூடத்தான் மக்கள் பிரதிநிதிகள் இல்லை! சுமார் 12000 ஊர்களில், ஊராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகள் இல்லை! சுமார் 380-க்கு மேற்பட்ட ஊராட்சி

ஒன்றியங்களில், மக்கள் பிரதிநிதிகள் இல்லை! சுமார் 600க்கு மேற்பட்ட பேரூராட்சிகளில், மக்கள் பிரதிநிதிகள் இல்லை! ஆயிரக்கணக்கான கூட்டுறவு சங்க அமைப்புகளில், மக்கள் பிரதிநிதிகள் இல்லை!

இங்கெல்லாம் மக்கள் பிரதிநிதிகள் அமர்வதற்கான தேர்தல்களை நடத்தத் தொடங்கியும் - நடத்துவதற்கான நாட்கள் அறிவித்தும் - தி.மு.க. ஆட்சி, தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற முன்வந்தபோதுதான் ஜனநாயகக் காவலர்கள்? சதித்திட்டம் வகுத்து ஆட்சியைக் கலைத்தார்கள்!

பரிதாபம், இப்போது இடைத்தேர்தல் தொகுதிகளில் மக்கள் பிரதிநிதிகள் மூன்றே மூன்று இடங்களில் இல்லையாம்; அதற்காக மிகவும் கவலைப்படுகிறார்கள்! கண்டனம் முழங்குகிறார்கள்!

இது எப்படியிருக்கிறதென்றால் - தனது கண்ணில் விழுந்து கிடக்கும் தூணை மறந்து விட்டு, எதிரில் உள்ளவனின் கண்ணில் தூசு! தூசு! என்று கூவி அலறுவதுபோல் இருக்கிறது! இல்லையா, உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

07-08-1993

2039. உற்சாகம் தரவேண்டியது, உன் கையில்தான் இருக்கிறது!

உடன்பிறப்பே,

1942 ஆகஸ்டு திங்கள் 10-ஆம் நாள் நினைவிருக்கிறதா? நினைவு இல்லாவிட்டால்; உன் கையில் முரசொலி இதழ் இருந்தால் - ஒருவேளை நீ வாங்காவிடின், யாராவது வாங்கியிருப்பின் அந்த இதழின் முகப்பில் தொடக்கம் 10.8.1942 என்று அச்சிடப்பட்டிருக்கிறதே அதை ஒருக்கணம் உற்றுப்பார்.

அப்படிப்பார்க்கும் அந்தக் கணப்பொழுதில், உன் மனக்கண்ணில் நான் பெற்றெடுத்த இந்த முரசொலிப் பிள்ளையை திருவாரூர் விஜயபுரம் அச்சகத்திலேயிருந்து தோளிலும், தலையிலும் அடுக்கிக் கட்டித் தூக்கிக் கொண்டு, ஓடம் போக்கி ஆற்று மூங்கில் பாலத்தில் நடந்து வந்து, ஆரூர் தெற்கு வீதி அலுவலகத்தில் அமர்ந்து இரயிலுக்கும், பஸ்ஸுக்கும், தபாலுக்கும் என் கைகளாலேயே பார்சல் கட்டி, ஸ்டாம்பு ஒட்டி அனுப்பி வைத்ததும், இதன் முதலாண்டு விழாவைக் கொண்டாட அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து மாணவர்களான பேராசிரியரையும், நாவலரையும் அழைத்து, அவர்களின் வழிசெலவுக்கு இரண்டு ரூபாய் நாற்பது காசு கொடுத்து அனுப்பியதும், சில நேரங்களில் அச்சகக்கூலி தர இயலாமல் வீட்டில் இருந்த நகை நட்டுகளை அடமானம் வைத்தும், விற்றும் ஈடுகட்டியதும் - முரசொலியின் எழுத்துகளால் மாற்றார்பகையை, ஆம் - வன்முறை வடிவெடுத்து வந்த பகையைப் பலமுறை எதிர் கொண்டதும், எப்போதும் நிழலாடிக் கொண்டுதான் இருக்கின்றன.

சேரன் என்ற எனது புனைப்பெயரில் துண்டு அறிக்கையாக வெளிவந்த முரசொலி வளர்ந்து, வலிமை பெற்று, தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்த்துகளைப் பெற்றபோது - அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல் அண்ணா அவர்கள் முரசொலியை சேரன்

செங்குட்டுவன் தீட்டிய சிலப்பதிகாரம் என்ற வாழ்த்தும் பாராட்டும் எழுதி என் உச்சிமோந்து சிறப்பித்தார்.

இந்த முரசொலி கண்ட களங்கள் எத்தனை எத்தனையோ! மொழிப் புரட்சியின்போது முரசொலி அலுவலகம் வீரர்களின் முகாமாக இருந்தது என்பதால் பலமுறை சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது! முரசொலி மாறன் சிறைப்பட்டார் முரசொலியில் எழுதிய கட்டுரைக்காக என்ற செய்தியை பாளையங்கோட்டை சிறையில் இருந்த என்னைக் காண வந்த அண்ணா கண் கலங்கிடச் சொன்னார்.

1967-ல் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற போது காங்கிரசார் ஆகஸ்டு 15 சுதந்திரநாள் ஊர்வலம் என்ற பெயரால் முரசொலி அலுவலகத்தில் நுழைந்து பெரும் சேதம் விளைவித்தனர்.

ஏன்? 1991 ராஜீவ் படுகொலையைத் தொடர்ந்து நடைபெற்ற கலவரத்தில் முரசொலி பல லட்ச ரூபாய் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டது.

இன்று நடக்கும் ஆட்சியிலே முரசொலிக்கு சட்டப்பேரவையிலேயே கூண்டு! புதிய வரலாறு! அந்தக் கூண்டில் ஆசிரியர் செல்வம்!

இப்படி முழு உடலிலும் முதுகைத் தவிர, எல்லா இடங்களிலும் விழுப்புண்கள்! அதற்காக முரசொலி ஓய்ந்திடவில்லை!

“களம்பிற்றுக்காண் தமிழச்சிங்கக் கூட்டம்
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை”

என்ற புரட்சிக்கவிஞரின் கவிதை வரிகளுக்கு இலக்கணமாகத் திகழ்வதன்றோ முரசொலி!

கடந்த ஆகஸ்டு 10-ஆம் நாள் ஐம்பது ஆண்டுகளை முடித்துக் கொண்டு, இப்போது 51-ஆம் ஆண்டும் நிறைவு பெற்று 52 - ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் முரசொலி 1942-ல் தொடங்கப்படும்போது - இந்த ஒலி முழங்கும் பாசறையில் உள்ளவர்கள் ஒருநாள் அமைச்சர்களாவார்கள், ஆட்சி அமைப்பார்கள், சட்டமன்றம், மேலவை, நாடாளுமன்றம், மாநிலங்களவை என்றெல்லாம் பதவி பொறுப்பேற்கும் இடங்களுக்குச் சென்று அமர்வார்கள் என்றோ, அமர வேண்டும் என்றோ எண்ணிப் பார்த்ததும் இல்லை!

அதனால்தான் இப்போதும் அத்தகைய பதவிப் பொறுப்புகள் வந்தாலும், வராவிடினும் இருநிலையையும், ஒரு நிலையாகக் கருதி தனது இலட்சியப் பயணத்தை முரசொலி நடத்திக் கொண்டிருக்கிறது.

பத்திரிகைத் தொழிலே நெருக்கடிக்கு உள்ளானபோது, கடந்த ஆண்டு முரசொலி, நாளிதழ் என்ற நிலையிலிருந்து வார இதழ் என்னும் நிலைக்குத் தன்னை மாற்றிக்கொண்டு தீர வேண்டிய கட்டாயம் வந்தபோது, பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும், இன்றைய துணைப் பொதுச்செயலாளர் வீராசாமி அவர்களும் கூறிய யோசனையை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வரவேற்று ஏற்றுக்கொண்டு நிதிவழங்கிட, இதுவரையில் தனியார் நிறுவனத்தில் இயங்கிய முரசொலியை கழகத்தின் பொறுப்பில் ஒரு அறக்கட்டளை உருவாக்கி அதன் பொறுப்பில் இயங்குமாறு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் திங்கள் வரையில் தனி உடைமை எனினும், முரசொலி கழக உடைமையாகத்தான் பணியாற்றியது. இப்போதோ இது தனி உடைமையிலிருந்து விடுபட்டு, முழுக்க முழுக்க அறக்கட்டளையின் பொறுப்பில் வந்து கொள்கைப் பிரச்சாரப் பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறது.

இன்னும்கூட எனக்கு சற்று மனக்கிலேசம் தான்! ஏ, அப்பா! முரசொலியைப் பிரித்துப் படித்தால் வெறும் நாளேடு படிப்பதாக மட்டுமில்லை - கட்சிச்செய்திகள் ஊனமின்றி வருவது மாத்திரமில்லை - ஒவ்வொரு பக்கத்திலும் வரும் கார்ட்டூன் - வள்ளுவர் வாக்கு - அந்துமணி - ஆண்டியும் போண்டியும் இவைகளைக் காணும் போது ஒரு வார இதழைச் சுவைப்பது போலவும் இருக்கிறது என்று பழம் பெரும் பத்திரிகையாளர் திரு. சாவி அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார் ஒரு நாள்! அந்தப் பாராட்டு கேட்டுப் பரவசமுற்றேன்! எனினும் - முரசொலி எத்தனை படிகள் விற்பனையாகின்றன எனக் கணக்கிட்டுப் பார்க்கும்போது அந்தப் பரவசம் நீடிக்க முடியவில்லை.

மனம் விட்டு வேதனையோடு சொல்ல வேண்டுமானால் - சில ஊர்களில், ஏன் - ஒரு சில மாவட்டத் தலைநகரங்களிலேகூட முரசொலியின் விற்பனை மகிழத்தக்கதாக இல்லை!

முரசொலியைப் பெற்றெடுத்த தாய் என்ற முறையில் வருந்துகிறேன் எனினும், இந்தப் பிள்ளையை ஆரோக்கியத்துடன்

வளர்த்து மேலும் வலிமையூட்டிட நான் கழகத்தினரின் துணையுடன் எடுக்கும் முயற்சிகளில் இருந்து பின்வாங்கப் போவதில்லை!

ஒரு இயக்கப் பிரச்சாரத்துக்கு பத்திரிகைகளின் பலம் அவசியம் என்பது புறக்கணிக்க முடியாத கருத்துத்தான்!

அதற்காகப் பத்திரிகைகள் சில நமது இயக்கத்தை, நமது இயக்கச் செய்திகளைப் புறக்கணித்தால் - இருட்டடிப்பு செய்தால் - திரித்து வெளியிட்டால் - குறும்புத்தனம் செய்தால் - அப்பொழுதும் அந்தப் பத்திரிகைகளின் தயவில்தான் இந்த இயக்கத்தினை நடத்திட வேண்டும் என்று மண்டியிடும் நிலைக்கு நம்மை மாற்றிக் கொள்ள முடியுமா?

Annadurai also spoke - அண்ணாதுரையும் பேசினார் என்று ஒருவரிச் செய்திகளை மட்டும் ஏடுகள் வெளியிட்டுக் கொண்டிருந்த போதுதான், காஞ்சி வார இதழும், முரசொலி நாளிதழும் மட்டுமே அண்ணா தலைமையில் கழக ஆட்சி அமைந்திடத் துணை நின்றன!

முரசொலியின் ஒவ்வொரு எழுத்தும் தணிக்கை அதிகாரியால் சென்சார் செய்யப்பட்டு, அவர் அனுமதிப்பதை மட்டும்தான் வெளியிட வேண்டும் என்ற நிலையிருந்த, 1975-1976 ஆண்டு முடிய எமர்ஜென்சி காலத்திலும், தனித்து ஒரு ஏடாக நின்று முரசொலி தான் இந்தக் கழகத்தின் வலிமையைக் கட்டிக் காத்தது!

எந்த நேரத்திலும் சோதனைகளில் சுடர் முகம் தூக்கிநின்று, சுழன்று சுழன்று பகை மாய்க்கும் படைத்திறன் முரசொலியின் சரித்திரம்!

அண்ணா காலத்தில் கழகத்திற்குள் 1960-களில் ஒரு குழப்பம் தலையெடுத்த போது, அந்தக் குழப்பவாதிகளுக்கு ஆதரவாக ஏடுகள் பலவும் எக்காளக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தன! அப்போது இயந்திரக் கோளாறு காரணமாக முரசொலியை சில நாள் நிறுத்தி வைக்க நேரிட்டது. அண்ணா என்னையும், தம்பி மாறனையும் அழைத்து இந்த நேரத்திலா முரசொலி இல்லாமல் இருப்பது? என்ன சிரமம் இருந்தாலும் பரவாயில்லை. உடனே முரசொலியைத் தொடர்க! என ஆணையிட்டவுடன் பெரும் செலவையும் பொருட்படுத்தாமல் உடனடியாக முரசொலி கிளம்பிற்று! சதியும் பகையும் மூலையில் போய் ஒடுங்கின!

இவ்வாறு கழகத்தின் ஓர் அங்கமாக - கழகச் சிங்கங்களின் இதய நாதமாக இருந்திடும் முரசொலியின் பணியை, உன்போன்ற உடன்பிறப்புகள் மேலும் அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டாமா?

சென்னையிலிருந்து வெளிவரும் முரசொலி, வேறுசில மாவட்டத் தலைநகர்களில் இருந்து வெளிவருவதற்கான முயற்சிகளை முரசொலி அறக்கட்டளை மேற்கொள்ள வேண்டுமென கழக அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

சென்னையிலிருந்து வரும் முரசொலி இன்னும் நிறைய செய்திகளைத் தாங்கி வெளி வரவும் - அத்துடன் கழக அமைப்புகளின் வேண்டுகோளை நிறைவேற்றிடவும், விரைவில் முயற்சிகள் முகிழ்த்திடும் என்று முரசொலி 52-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நாளில் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான உற்சாகம் தரவேண்டியது, உடன்பிறப்பே உன் கையில்தான் இருக்கிறது!

அன்புள்ள,

மு. க.

11-08-1993

2040. தமிழகம் கண்ட தவப்பயன் இதுதானோ?

உடன்பிறப்பே,

இப்போது ஒரு சிக்கல்! விடை காண முடியாத சிக்கல்! குழப்பமே உன் பெயர்தான் ஜெயலலிதாவா? அல்லது முரண்பாடே உன் பெயர்தான் ஜெயலலிதாவா? இந்த இரண்டு கேள்விகளில் எந்தக் கேள்விக்குப் பொருத்தமானவர் முதலமைச்சர் ஜெயலலிதா என்பதுதான் இப்போது ஏற்பட்டுள்ள சிக்கல்!

ஒருபுறத்தில் போபர்ஸ் கதாநாயகர்களின் பெயர்கள் திரைப்படத்தில் டைட்டிலில் காட்டப்பட்டு அதிலே ஒரு குழப்பம்!

மற்றொரு ஒருபுறத்தில் பங்குச்சந்தை ஊழலில் பிரதான வில்லன்கள், குட்டி வில்லன்கள் அவர்களுக்குள் நடைபெறும் சண்டைக் காட்சியில் யாரை யார் சுடுகிறார்கள் என்று புரிந்து கொள்ள முடியாத ஒரு குழப்பம்!

கிடப்பதெல்லாம் கிடக்கட்டும்! கிழவியைத் தூக்கி மனையில் வையடி! என்பதுபோல இந்தியா முழுதும் இடைத்தேர்தல்களை நிறுத்தி வைத்துப் பாலக்காட்டுப் பாகவதர் சேஷன் அவர்கள் பின்னணி இசையை உச்சஸ்தாயிக்குக் கொண்டுபோய்ப் படம் பார்ப்பவர்களை பயந்து நடுங்கச்செய்த ஒரு குழப்பம்!

இத்தனை குழப்பங்களும் - இன்னும் பல துணைக் குழப்பங்களும் நாட்டையே ஒரு கலக்கு கலக்கிக் கொண்டிருக்கும்போது இதோ என் பங்குக்குச் சில குழப்பமான காரியங்களையும், முரண்பாடான செயல்களையும் நடித்துக் காட்டுகிறேன் என்று ஸ்பெஷல் காட்சிகள் சிலவற்றை இணைத்து, முதலமைச்சர் எனும் முக்கிய பாத்திரத்தை ஏற்பதற்குச் சிறிதும் தகுதியற்றவர் என்பதை, ஜெயலலிதா உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவுபடுத்திவிட்டார்.

எளிதில் ஏமாறக்கூடிய தமிழ் மக்களின் அனுதாபத்தைப் பெற்று அதனை அரசியல் ஆதாயமாக்கிக் கொள்ள, தன்னை வருத்திக்கொண்டல்ல - வருத்திக்கொள்வதுபோல நடித்து அன்றொரு நாள் லாரி விபத்து போலிக்காட்சியையும், பிறிதொரு நாள் தலைவிரிகோல சட்டமன்றக் காட்சியையும் உருவாக்கிக்கொண்டு, தமிழ் மக்களை வென்று காட்டியதைத் தொடர்ந்து உண்ணாவிரதம் எனும் கிளைமாக்ஸ் காட்சியையும் அரும்பாடுபட்டுப் பெரும் பொருட்செலவில் தயாரித்து எத்தனையோ வகை விளம்பரம் செய்தும்கூட, அது டூப் போட்டு எடுத்த டிரிக் சீன் என்பது அப்பட்டமாகவே தெரிந்துபோய் பெருந்தோல்வியில் முடிந்து, படம் வந்ததும் வராததுமாக டப்பாவுக்குள் புகுந்து கொண்டது.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு அனுமதி கொடுத்ததில் அரசு ஊழல் புரிந்திருக்கிறது எனும் கருத்து சுட்டிக்காட்டப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புக்குத் தலைவணங்காத ஜெயலலிதா, அந்த ஊழலில் கிடைத்த தொகையில் ஒரு பகுதியைக்கொண்டே விளம்பரக் கொழுக்கட்டைகள் தயாரித்துச் சில முக்கிய பத்திரிகையாளர்களின் வாயை அடைத்துவிட்டு, தனது பதவி பறிப்பு விவகாரம் குறித்து சேஷன் விசாரிக்கக் கூடாது என்று தொடர்ந்த வழக்கில், மாண்புமிகு பக்தவத்சலம் கோர்ட்டு தீர்ப்புத் தனக்குச் சாதகமாக அமைந்ததும் மாநில முழுதும் வெற்றி விழா எடுக்கச்சொன்னார்!

அதற்கு மட்டுமா விழா? உண்ணாவிரதம் எதற்காக மேற்கொள்வதாகச் சொன்னாரோ, அந்தக் கோரிக்கை நிறைவேறவில்லை என்பது பட்டவர்த்தனமாகத் தெளிவான பிறகும், கோரிக்கை வெற்றி என விழாக் கொண்டாடச் சொன்னார்.

கோட்டையில் மந்திரிமார்களுக்கு வேலையே இல்லை! கோர்ட்டு தீர்ப்புக்காக ஊர் ஊராக விழாக்கள்! அதன்பிறகு தோல்வியுற்ற உண்ணாவிரத வேடிக்கையை தமிழக முழுதும் கொண்டாட விழாக்கள்! இத்தனை விழாக்களிலும் அமைச்சர்கள் குவிந்தனர்! கோட்டையில் கோப்புகள் குவிந்தன!

பழனி, ராணிப்பேட்டை இடைத் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டதும், அமைச்சர் பட்டாளம் அங்குமிங்கும் டோரா அடித்துத் தங்குமாறு பணிக்கப்பட்டது!

அம்மையார் தேர்தல் பிரச்சாரத்துக்குப் புறப்பட்டு ராணிப்பேட்டை போய்ச் சேர்ந்தார். அவரை வரவேற்றிட தொகுதி முழுதும் மந்திரிகள் தமது பரிவாரங்களுடன் பரவிக் கிடந்தனர். காவல்துறையின் தலைமை அதிகாரி உட்பட, எல்லா அதிகாரிகளும் அங்கேதான்!

பாவம்! பட்டம் வாங்கும் நிகழ்ச்சிக்கே, மதுரையில் முன்னேழு நாட்கள், பின்னேழு நாட்கள் என்று கெடுபிடிகள் நடத்தியவர்களாயிற்றே - தேர்தல் பிரச்சாரம் என்றால் அணிவகுத்துப் போலீஸ் படை நடத்தாமல் இருப்பார்களா!

ராணிப்பேட்டையை அடைந்ததும் சேஷன் சீறிவிட்டார்! ஆகஸ்டு 19-இல் தேர்தல் இல்லையென்று!

பாவம்! அதற்குள் ஹெலிகாப்டர் சென்னைக்குத் திரும்பிவிட்ட காரணத்தால் முதல்வர் காரிலேயே பயணம் செய்து சென்னை வந்தடைந்தார்.

அப்போதே அந்தக் காரிலேயே ராணிப்பேட்டைக்கு சென்றிருக்கலாம் அல்லவா? இதை நாம் கேட்கக் கூடாது. அந்த வட்டாரத்துக்குக் கோபம் வரும்.

மத்திய பாதுகாப்புப் படையை வைத்துக் கொண்டு தேர்தல் நடத்த வேண்டும் என்று சேஷன் சொன்னவுடன், நாவலர் போன்ற தனது அமைச்சர்களை விட்டு எதற்காக சுண்டைக்காய் தேர்தலுக்கு மத்திய பாதுகாப்புப் படை? என்று ஆத்திரமாகப் பேசவைத்தார் முதலமைச்சர்! பிறகு இரண்டு நாள் கழித்து, இடைத் தேர்தலுக்காக மாநில அரசே மத்திய அரசிடம் மத்திய பாதுகாப்புப்படை கேட்டிருக்கிறது என்று அதே வாய்களால் அதே அமைச்சர்கள் பேசினார்கள்! பரிதாபம்! இப்போது மத்திய புலனாய்வுத்துறையே வரவேண்டுமென்று கோரிக்கை வைக்கிற முதலமைச்சரின் போக்கினை குழப்பம் என்பதா? முரண்பாடு என்பதா? அதுதானே பெரும் சிக்கலாயிருக்கிறது.

மத்திய பாதுகாப்புப்படை குறித்து சேஷனின் உத்தரவை எதிர்த்து ஜெயலலிதா ஒரு வழக்கு! அதன்பிறகு, வேறு சில மாநிலங்களை பார்த்து தாமதமாக மற்றொரு வழக்கு!

அதாவது, தேர்தல் தள்ளி வைப்புக்கூடாது - எனவே சேஷனின் ஒத்திவைப்பு ஆணைக்குத் தடைகோரி நீதிபதி பக்தவத்சலம் கோர்ட்டில் வழக்கு. அவரும் ஆகஸ்டு 11

வரையில் தடை கொடுத்தார். ஆகஸ்டு 11 வரை இடைக்காலத் தடை வழங்கினாரே தவிர; ஆகஸ்டு 19 தேர்தல் நடைபெறுமா என்பது பற்றி ஆகஸ்டு 11ந் தேதிதான் விசாரணை தொடங்கும் என்றார். ஆனால் ஜெயலலிதா என்ன செய்தார்? ஆகஸ்டு 11-ந் தேதியன்று உயர்நீதிமன்றம் ஆகஸ்டு 19-ல் தேர்தல் நடைபெற வழிவகுக்கும் என்று எண்ணிக் கொண்டு, அந்தத் தீர்ப்பு முன்கூட்டியே தனக்குத் தெரிந்ததைப் போல பாவலா செய்து கொண்டு ஆரம்பமாகட்டும் பழனி இராணிப்பேட்டையில் தேர்தல் பணிகள் என்று அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஆணை பிறப்பித்தார். அவரும் தேர்தல் பிரச்சாரத் தேதிகளை ஏடுகளில் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டு விட்டு சென்னையிலிருந்து ஆகஸ்டு 8-ந் தேதி ஹெலிகேப்டரில் பயணம் புறப்பட்டுவிட்டார்.

அதற்கிடையேதான் சென்னையில், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் கட்டிடம் குண்டு வெடிப்பால் தகர்ந்து பதினோரு பேர் பரிதாபமாக மாண்ட நிகழ்ச்சி நாட்டையே அதிர்ச்சியுறச் செய்தது.

பிற்பகல் 1.45 மணியளவில் நடைபெற்ற அந்தச் சம்பவம் சென்னை முழுதும் பரவியது உடனடியாக! செய்தி அலுவலகங்களுக்கு, ஏடுகளின் நிருபர்களுக்கு அடுத்த 15-வது நிமிடமே தெரிந்துவிட்டது. ஆனால் முதலமைச்சருக்கு மட்டும் அந்தச் செய்தி, அவர் திண்டுக்கல் சென்றிட ஹெலிகேப்டரில் ஏறும்பொழுது சரியாக 3 மணி 5 நிமிட அளவில் சொல்லப்படுகிறதாம். ஏதோ வீடு இடிந்து விட்டது என்பதைச் சொல்கிறார்கள் எனக் கருதிக்கொண்டு, முதலமைச்சர் ஹெலிகாப்டரில் திண்டுக்கல் போய்ச்சேருகிறார்.

அவரது வருகைக்காகவும், வந்தபின் நடைபெறவேண்டிய தேர்தல் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளுக்காகவும் அமைச்சர்கள் ஒவ்வொரு ஊரிலும் ரத, கஜ, துரக, பதாதிகளுடன் காத்திருக்கின்றனர். காவல்துறையின் தலைமை அதிகாரியும் அங்கேதான். காவலர்கள் ஆயிரக்கணக்கில் ஊர்தோறும் உலா வந்து கொண்டிருக்கிறார்கள்.

சில நாட்களுக்கு முன்பு வெளி மாநிலப் பத்திரிகை நிருபர் ஒருவர் என்னைப் பேட்டி கண்டபோது கேட்டார். தமிழ்நாட்டில் இந்த ஆட்சியின் Adminstration நிர்வாகம் எப்படியிருக்கிறது என்று!

அட்மினிஸ்ட்ரேஷன் என்பதில் முதல் இரண்டு எழுத்துகளுடன் B பி என்ற எழுத்தையும் இணைத்துக் கொள்ளுங்கள் என்றேன்!

அமைச்சர்களும், அதிகாரவர்க்கத்தினர் அனைவரும் டாக்டர் பட்டமளிப்பு விழாக்களுக்கும் - உண்ணாவிரத வைபவங்களுக்கும் - தேர்தல் திருவிழாக்களுக்கும் - முதல்வர் போகும் பாதையெல்லாம் தங்களை மலர்களாகத் தாங்களே தூவிக்கொண்டிருந்தால், நிர்வாகமாவது! பெரியார் மொழியில் சொன்னால் வெங்காயமாவது!

ஆகஸ்டு 8 திண்டுக்கல் போன முதல்வர், ஆர்.எஸ்.எஸ். கட்டிடம் இடிந்து பலர் இறந்த பிரச்சினையில் டெல்லி நிர்வாகம் காட்டிய பரபரப்பிலும், பா.ஜ.க. கட்சித் தலைவர்களின் அவசர வருகைகளிலும் - தன்னைச் சுதாரித்துக் கொண்டு மறுநாள் சென்னை திரும்பினார். இறந்தோர்க்கு இலட்சரூபாய் என்றார். இடிந்த கட்டிடத்தை புதிதாகக் கட்டித்தரப்படும் என்றார்.

தேர்தல் பிரச்சாரம் தொடருமா என நிருபர்கள் கேட்டனர். தேர்தல் களத்தில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றார். அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட தேர்தல் பணிக்காக அழைக்கப்பட்டுவிட்டனர் என்று செய்தி.

இதற்குள் ஆகஸ்டு 11-ல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த தமிழக அரசின் தேர்தல் வழக்கு விசாரணை நடைபெறாமல், அதற்கு முதல்நாள் ஆகஸ்டு 10-ந் தேதியே நீதிபதி பக்தவத்சலம் அவர்கள், இந்த வழக்கை ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் கொண்ட பெஞ்சு விசாரணை செய்யட்டுமென்று பரிந்துரை செய்து, இந்த வழக்கில் ஆர்க்காடு வீராசாமியும், சுப்புலட்சுமி ஜெகதீசனும் தங்களையும் வழக்காட இணைத்துக் கொள்ள வேண்டுமென்ற மனுவையும் சேர்த்துக் கொள்ள அனுமதி அளித்திருக்கிறார். இப்போது உச்ச நீதிமன்ற முடிவின்படி அந்த பெஞ்சு விசாரணை கூட நடைபெறப் போவதில்லை.

வேட்புமனுக்கள் திரும்பப் பெறப்பட்டு இறுதியாக்கப்பட்ட நாளில் இருந்து, வாக்குப்பதிவு நாள் வரையில் இடையில் இருபது முழுமையான நாட்கள் தேர்தல் பிரச்சாரத்துக்கும், பணிகளுக்கும் இருக்க வேண்டுமென்ற தேர்தல் விதிமுறைகளைப் பற்றிக் கூடத் தெரிந்து கொள்ளாமல் - அல்லது தெரிந்திருந்தும்

அதனைப் பொருட்படுத்தாமல், காசு கைக்குள் இருப்பதால் - இந்தக் காசினியே கைக்குள் இருப்பதாக எண்ணிக் கொண்டு தேர்தல் நடைபெறும் என்று அறிவித்துப் பிரச்சார வேலைகளை முடுக்கிவிட்ட ஜெயலலிதாவின் இச்செயலைக் குழப்பம் என்பதா? முரண்பாடு என்பதா? இரண்டுமில்லை! முதிர்ச்சியற்ற அனுபவம் என்று கூறத் தோன்றுகிறதா?

கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில், இப்படித் தான் முன்னுக்குபின் முரணான காரியங்கள் - பேச்சுக்கள் - குழப்பமான செயல்கள் - இவையே இந்தத் தமிழகம் கண்ட தவப்பயன் என இருந்து வருகின்றன.

இதற்கோர் விடிவு ஏற்பட்டு, தமிழ் மக்கள் - கொடுமையும், குழப்பமும், முரண்பாடும் மலிந்த நிலையின் பிடியிலிருந்து விடுபடும் காலம் எப்போதோ? விரைவில் என்று விடை கிடைக்கிறது! ஆம்! மக்கள் அப்படியொரு மாற்றத்துக்குத் தயாராகி விட்டார்கள் என்பதை செல்லுமிடமெங்கணும் காணமுடிகிறது.

அன்புள்ள,

மு. க.

12-08-1993



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

ISBN 978-93-5422-[illegible]